
கலைஞரின்
கடிதங்கள்



14

25.07.1984 - முதல்
15.08.1985 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 14

25.07.1984 - 15.08.1985

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
தமிழினக் காவல் அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகு நூல் நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1241. இந்தச் சகுனி வேலை எத்தனை நாள்?	25-07-1984	23
1242. வாழ்க தம்பி! வளமெல்லாம் பெற்று!	26-07-1984	27
1243. அண்ணா மாவட்ட மாநாடு!	27-07-1984	31
1244. மரபும், மரியாதையும் மண்ணாகும்!	02-08-1984	35
1245. தாழ்த்தப்பட்ட மக்கள் கவனத்திற்கு!	03-08-1984	40
1246. இந்தச் சகுனி வேலை எத்தனை நாள்? மீனம்பாக்கம் மீண்டும் நிகழாதிருக்க!	05-08-1984	44
1247. வெற்றிகள் குவியும் விண் தொடும் குன்றாய்!	06-08-1984	47
1248. அது புழுதிக் காற்று! இது புயல் காற்று!	07-08-1984	49
1249. ஆகஸ்டு 25 - ஆயத்தமாகுக!	08-08-1984	55
1250. முட்டாளே! நீ ஏன் தமிழனாகப் பிறந்தாய்?	10-08-1984	59
1251. அன்று தண்டலம்! இன்று திருத்தணி!	11-08-1984	63
1252. திருத்தப் போகிறார்களா? தீட்டப் போகிறார்களா?	12-08-1984	67

1253. குறிபார்க்கிறார்கள் - எச்சரிக்கையாக இரு!	13-08-1984	70
1254. வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்!	14-08-1984	76
1255. துக்கநாள் முந்திக்கொண்டதே!	15-08-1984	82
1256. கறுப்புக்கொடி ஏற்றியது குற்றமா?	17-08-1984	83
1257. கவர்னர் தேவையில்லை! கம்ப்யூட்டர் போதும்!	18-08-1984	86
1258. மாநில பிரக்ஞை இழக்க இயலாது!	20-08-1984	91
1259. ஆகஸ்டு 25 - அறப்போர் மறியல் அழைப்பு!	22-08-1984	96
1260. காலம் கடந்த ஞானோதயம்!	23-08-1984	102
1261. ஜி.கே. ரெட்டியின் திசை திருப்பும் முயற்சி!	24-08-1984	105
1262. எழுக நீ! எழுக எழுகவே!	25-08-1984	108
1263. அறப்போர் வெற்றி! ஆனாலும் ஓர் அதிர்ச்சி!	27-08-1984	113
1264. இந்திரா காங்கிரசார் சிந்தனைக்கு!	28-08-1984	117
1265. காயம்பட்ட ஒரு காலகட்டம்!	29-08-1984	120
1266. முதுகில் குத்தியவர் யார்? யார்? யார்?	01-09-1984	122
1267. கொள்கையற்றோர் கூடாரத்திலே!	03-09-1984	128
1268. அழைக்கின்றார்! அழைக்கின்றார் அண்ணா!	04-09-1984	134
1269. புதிய உற்சாகம்! புதிய நம்பிக்கை!	09-09-1984	138

1270. உண்மை உழைப்பாளியே! ஒன்றுபடுக!	10-09-1984	143
1271. பொய்யெனும் யானைத்தந்தம் பொடியாகும்!	11-09-1984	147
1272. வாஞ்சைமிகு சோதரன் அழைக்கிறேன்; வா! வா!	14-09-1984	151
1273. அவர்களுக்கு அப்படியொரு அலர்ஜி!	02-10-1984	154
1274. ஒன்றா? இரண்டா? எடுத்துச்சொல்ல!	06-10-1984	159
1275. இந்தி எதிர்ப்பு - நீறுபூத்த நெருப்பு!	08-10-1984	163
1276. எதிர்க்கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?	10-10-1984	168
1277. இலங்கைத் தமிழ் அகதிகளின் அவதி!	12-10-1984	171
1278. நானும் பிரார்த்தனை செய்கிறேன்!	22-10-1984	174
1279. அ.தி.மு.க. உடன்பிறப்புகளுக்கு!	27-10-1984	178
1280. ஜவ்வாது மலையும் - சந்தோஷ அலையும்!	01-11-1984	183
1281. வாழ்க இந்திரா! வீழ்க வன்முறை!	04-11-1984	188
1282. பிரித்துப் பார்க்கவில்லை!	07-11-1984	193
1283. நெஞ்சில் இருந்ததைக் கொட்டிவிட்டேன்!	11-11-1984	196
1284. ''கலகமூட்டிகள்'' - எச்சரிக்கை!	12-11-1984	200
1285. உள்ளத்தில் உள்ளதை ஒளிக்காமல்...!	18-11-1984	205

1286. நேரில் கண்டிட... நிலைமையை விளக்கிட...!	21-11-1984	211
1287. ராஜீவைப் பற்றி ஒரு வார்த்தை!	22-11-1984	215
1288. வீரத்தின் உருவே! விரைந்து பணியாற்று!	01-12-1984	219
1289. அந்தோ! அப்பாவித் தமிழர்கள்!	03-12-1984	223
1290. இடையில் மூன்றே வாரங்கள்! எழுக இன்றே!	04-12-1984	226
1291. இதோ - என் அன்பு முத்தங்கள்!	14-12-1984	230
1292. களத்தில் நின்ற கண்மணியே!	30-12-1984	234
1293. வாழ்க உன் திறம்! வெல்க உன் உறுதி!	14-01-1985	235
1294. பொதுக்குழு - போராட்ட அறிவிப்பு மாநாடு!	15-03-1985	240
1295. கண்ணீர்த் துளிகள் - கண்டனக் கணைகள்!	16-03-1985	245
1296. விழிகளை அருவிகளாக்கும் விகடன் கட்டுரைகள்!	17-03-1985	249
1297. மலிவாகிப் போனதய்யோ! தமிழன் உயிர்!	21-03-1985	254
1298. வெற்றித்தோள் எங்கே? வீரஞ்செய்கின்ற தமிழ் மூச்சு எங்கே?	22-03-1985	257
1299. அமையட்டும், அறப்போர் பாசறைகள்!	30-03-1985	261
1300. தமிழ் இனச் சிங்கமே! தயாராகுக!	07-04-1985	265
1301. நாட்கள் அதிகமில்லை! நடக்கட்டும் உனது பணி!	19-04-1985	269

1302. வாழ்வா? சாவா? என்கிற போராட்டம்!	26-04-1985	273
1303. கல்லைப்போடு! அல்லது கமிட்டியைப் போடு!	27-04-1985	277
1304. புகட்டிடுவோம் ஒரு பாடம்! புறப்படுக தமிழர் கூட்டம்!	28-04-1985	280
1305. கண்ணீருக்குக் காலம் பதில் சொல்லும்!	08-05-1985	282
1306. அமைச்சர்கள் அங்கலாய்க்கிறார்கள்!	09-05-1985	287
1307. வரலாற்றுப் பொன்னேட்டின் வைர எழுத்துகள்!	10-05-1985	292
1308. காஞ்சியில் அமைகிறது களம்!	14-05-1985	295
1309. இந்த மே திங்கள் பதினான்காம் நாள்!	15-05-1985	300
1310. ஜூன் மூன்றாம் நாள்! ஈழத்தமிழர் உரிமை நாள்!	01-06-1985	305
1311. உயிருள்ளவரையில் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருப்பேன்!	03-06-1985	308
1312. அறிவகம், அன்பகம் பற்றி அறிஞர் அண்ணா!	07-06-1985	310
1313. நற்பணி - ஓர் அருந்திருப்பணி!	10-06-1985	316
1314. விஷ வியாபாரம்!	29-06-1985	320
1315. இதைவிட வேறென்ன எழுத முடியும்?	02-07-1985	326
1316. பூடான் பேச்சு வார்த்தையும், பொறுப்புள்ளோர் செயலும்!	03-07-1985	330
1317. தூங்கம்மா தூங்கு!	06-07-1985	335

1318. பத்திரிகையாளர் கூட்டத்தில் பிரதமர்!	09-07-1985	337
1319. பட்டிமன்றமல்ல; உண்மையின் படப்பிடிப்பு!	12-07-1985	341
1320. தேரா மன்னா! செப்புவது உடையேன்!	18-07-1985	347
1321. இந்த நாள்; நம் இதயத்தைப் பிழியும் நாள்	24-07-1985	350
1322. தும்பை விட்டது ஏன்? வாலைப் பிடிப்பது ஏன்?	25-07-1985	351
1323. மந்திரி, மிஸ்டர் மானஸ்தருக்கு ஒரு எச்சரிக்கை!	30-07-1985	357
1324. கழகக்காளை தாழை கருணாநிதி மறைவு தலைவர் கலைஞர் கண்ணீர் மலர்கள்!	1-8-1985	364
1325. காஷ்மீரில் தொடங்கி ..... வரையில்!	04-08-1985	367
1326. டோஸ் நம்பர் ஒன்!	06-08-1985	371
1327. குமாஸ்தா, கோபிக்கக் கூடாது!	08-08-1985	376
1328. உன்னை நம்பித்தான் கூறியுள்ளேன்!	09-08-1985	382
1329. சட்டம், ஒழுங்கு, நீதி, நியாயம் எங்கே?	10-08-1985	386
1330. ஒழுகிடும் குடிசை! ஓட்டை ஜமக்காளம்!	11-08-1985	391
1331. செப்டம்பர் 15 - சென்னைக்கு அழைக்கிறேன்!	13-08-1985	396

1241. இந்தச் சகுனி வேலை எத்தனை நாள்?

உடன்பிறப்பே,

தொழிலாளர் வர்க்கத்தைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் வல்லவர்களாக விளங்குபவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள். அதுவும் அந்தக் கலையில் கைதேர்ந்து சரியான சகுனிப் பாத்திரமேற்றுத் திறம்படப் பணியாற்றுபவர் தொழிலாளர் அமைச்சர் இராகவானந்தம்!

ஒரு காலத்தில் தொழிற்சங்கத் தலைவராக இருந்தவர் - இப்போது தொழிலாளர்களின் துரோகத் தலைவராகக் கொலுவீற்றிருக்கிறார்!

முதல்தரமான பூர்ஷ்வா குணத்துடன் - பாதுஷாக்களைப் போல வாழ்க்கையை அமைத்துக் கொண்டு தொழிற்சங்க இயக்கங்களில் கருங்காலிகள் கிடைப்பார்களேயானால் அவர்களைக் கையில் போட்டுக்கொண்டு, தொழிற்சங்கப் போராட்டங்களைக் கொச்சைப் படுத்தி வருவதே அவருக்கும் அவரது எஜமானர் எம்.ஜி.ஆருக்கும் வாடிக்கையாகி விட்டது!

சரணடைவோர் - சலாம் போடுவோர் - சபாஷ் கூறுவோர் - பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டு தர வேண்டிய ஆதரவைத் தருவோர் - இத்யாதி குணங்கொண்ட குடிலர்களின் ஆலவட்டங்கள் சுழலுகிற அத்தாணி மண்டபமாக இன்றைய எம்.ஜி.ஆரின் அரசவை விளங்குகிறதல்லவா! அதில் விவஸ்தையற்ற விலாங்கு மனிதர்களுக்குத் தானே விருந்தும், வரவேற்பும் வைபோகமும் நடைபெறும்!

தொழிலாளர் வர்க்கத்திற்காகத் தன்னலம் கருதாமல் போர்க்குரல் கொடுத்துக் களப்பலிக்குத் தயாராக இருக்கிற எத்தனையோ தொழிற்சங்கத் தலைவர்களைக் கட்சி வேறுபாடின்றி என் பொது வாழ்க்கையிலே கண்டிருக்கிறேன் - அறிந்திருக்கிறேன் - கேள்விப்பட்டுமிருக்கிறேன்!

ஐம்பதாயிரத்துக்கும் அறுபதாயிரத்துக்கும் விலை போகக் கூடிய வீராதிவீரர்கள் ? - பண மதிப்புக் குறைந்துவிட்ட காலகட்டத்தில் இலட்சக்கணக்கில் பெற்றுக்கொண்டு ஏற்றமிகு ? எட்டப்பன் வாழ்வு நடாத்தக் கிளம்பிய உண்மைக் கதைகளையும், ஊரார் உரக்கப் படிக்கக் காது கொடுத்து கேட்டிருக்கிறேன்!

இத்தகைய முரண்பாடு மலிந்த ஒரு சூழ்நிலைப் பின்னணியுடன் இயங்குகின்ற தொழிற்சங்கத் தலைவர்களிடையே ஒரு சிலரை அடையாளம் கண்டு எச்சரிக்கையாக இருக்க இதோ ஒரேஒரு நிகழ்ச்சியை மட்டும் உன் சிந்தனைக்கு வைக்கிறேன்.

ஒரு வருட காலமாக கோவை ஜனார்த்தனா மில், பத்மா மில், திருப்பூர் மில், ராமலிங்க சூடாம்பிகா மில், புதுக்கோட்டை காவேரி மில், ஆகிய ஆலைகளும் - சுமார் ஆறு மாத காலமாக சென்னை பக்கிங்காம் கர்னாடிக் ஆலையும் மூடிக் கிடக்கின்றன.

மூடப்பட்ட ஆலைகளில் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து நடுத்தெருவில் நிற்கிறார்கள்!

மத்திய மாநில அரசுகள் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லிக் காலங்கடத்துகிற கைங்கர்யத்தைச் செய்து வருகின்றன!

புதுவை மாநிலத்தில் ரோடியர் மில் மூடப்பட்டுக் கிடப்பதால், ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளிகள் பட்டினி கிடக்கிறார்கள்!

ஒரு தொழிலாளி வேலையிழந்து நிற்கிறான் என்றால், அவனை நம்பியுள்ள குடும்ப உறுப்பினர்கள் சராசரி மூன்று நபர்களாவது வயிறு காய்ந்து வாடுகிறார்கள் என்பதுதானே உண்மையான நிலைமை!

பாட்டாளிகள் படுந்துயர் கண்டு பதைக்கவோ - பரிவு காட்டவோ - நிலைமைக்குப் பரிகாரம் தேடவோ - பரபரப்புடன் செயலாற்றி அவர்களது பட்டினிப் பிணி நீக்கவோ மத்தியில் இருக்கிற அரசும் நினைப்பதாகத் தெரியவில்லை. தமிழகத்திலும், புதுவையிலுமுள்ள அரசுகளும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இருபது தடவைக்கு மேல் பக்கிங்காம் கர்னாடிக் மில் தொழிலாளர்கள் சென்னை நகர் வீதிகளில் பட்டினி ஊர்வலம் நடத்தி, கோட்டை வரையில் சென்று, அவர்களுடைய பிரதிநிதிகள்

அமைச்சர்களைச் சந்தித்துக் கோரிக்கை மனுக்களைக் கொடுத்திருக்கின்றனர்.

அதேபோல அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஆதரவு தருவது என்ற திட்டத்துடன் ஜூலை 22-ஆம் நாள் பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள் ஒரு அமைதியான ஊர்வலத்தை எடுத்தனர். தொ.மு.ச. பேரவை, ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு.சி., எச்.எம்.சி., ஐ.என்.டி.யு.சி. ஆகிய தொழிற்சங்க அமைப்புகள் அந்த ஊர்வலத்தில் ஆதரவாகக் கலந்து கொண்டன!

இப்படிப் பெரும்பான்மையான தொழிற்சங்க அமைப்புகள் கலந்து கொண்டு பல்லாயிரவர் ஊர்வலமாகக் கோட்டை நோக்கி வருவதை ஆளுங்கட்சியினரால் சகித்துக் கொள்ள முடியவில்லை!

ஊர்வலத்தின் இறுதிப் பகுதியில் கலவரத்தை உருவாக்கினர்! ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில குண்டர்களும் - வேண்டா வெறுப்பாக அந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டிய நிலைமைக்குத் தவிர்க்க முடியாமல் ஆளான ஆளுங்கட்சிக்குக் குடை பிடிக்கும் ஒரு சில தொழிற்சங்கக் கூட்டத்தினரும் அந்தக் கலவரத்தை வேண்டுமென்றே திட்டமிட்டு நடத்தினர். விரும்பத்தகாத வன்முறைகளை விளைவித்தனர். போலீசாரும் முன்னேற்பாட்டின்படி அவர்களுடன் இணைந்து கொண்டு தடியடி நடத்தி, ஏதுமறியாத தொழிலாளிகளையும் - பொது மக்களையும் வதைத்தனர். ஊர்வலத்தைச் சிதைத்தனர்.

ஊர்வலத்தினர் மீது பழி போட்டு, தொழிலாளர்களைக் குற்றவாளியெனக் கூறி - அந்த ஊர்வலத்தில் முன்னணியில் வந்த அந்தோணிப் பிள்ளை ஊர்வலத்திலிருந்து திரும்பிச் சென்று விட்டார் - மற்ற தொழிற்சங்கத் தலைவர்களுடன் அமைச்சரிடம் கோரிக்கை கொடுக்க அவர் செல்லவில்லை!

அவர் தவிர்த்து மற்ற தொழிற்சங்கத் தலைவர்கள், அமைச்சர் இராகவானந்தத்தைச் சந்தித்துக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றனர்.

கே.டி.கே. தங்கமணி, வி.பி. சிந்தன், செ. குப்புசாமி, திருப்பூர் துரைசாமி, ஏ.எம்.கோபு, ரத்தினசபாபதி, சி.கே. நாராயணன் ஆகியோரிடம் அமைச்சர் பேசியிருக்கிறார்.

அதற்குப் பிறகு அமைச்சர், தினத்தந்தி நிருபரைச் சந்தித்து பின்வருமாறு கூறுகிறார்!

எதற்காக ஊர்வலம் நடத்த வேண்டும்? அரசாங்கம்தான் நடவடிக்கை எடுத்து வருகிறதே! இப்போது எல்லாக் கட்சியும் சேர்ந்து ஊர்வலம் என்பதால் பிரச்சினை வருகிறது. இப்படி எல்லாக் கட்சியும் ஊர்வலம் வந்திருக்க வேண்டியதில்லை.

இது இராகவானந்தத்தின் கருத்து! எல்லாக் கட்சியும் இணைந்து ஊர்வலம் எடுத்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாமல்தான் இப்படி நடந்தது என்பதை அமைச்சர் சொல்லாமல் சொல்லுகிறார் அல்லவா?

அத்துடன் நிறுத்தவில்லை அவர்! இங்கேதான் பூனைக்குட்டி வெளியே வந்து விட்ட கதை நடக்கிறது!

அமைதியான முறையில் பிரச்சினையை அரசு அணுகி வருவதால்தான் இன்று திங்கள் மாலை 22-7-84 நாலு மணிக்கு இந்திரா காங்கிரஸ் தலைவர் பழனியாண்டியும், அந்தோணி பிள்ளையும் என்னைச் சந்தித்துப் பேச இருக்கிறார்கள்.

இதுவும் தினத்தந்தி நிருபர் வாயிலாக இராகவானந்தம் நாட்டுக்கு அறிவிக்கும் செய்திதான்!

இதிலிருந்து என்ன புரிகிறது? எல்லாக் கட்சிகளும் இணைந்து நடத்திய ஊர்வலம் - அவற்றின் தொழிற்சங்கத் தலைவர்கள் தரும் கோரிக்கை - அதற்கு முக்கியத்துவம் வழங்கக்கூடாது என்று திட்டமிட்டுக் காரியம் நடத்தி முடித்துவிட்டு -

அதற்கு உடந்தையாகச் செயல்பட்ட இந்திரா காங்கிரஸ் தலைவர்களைத் தனியாகச் சந்தித்துப் பேசி அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதுதானே எம்.ஜி.ஆர். கட்சி அரசாங்கத்தின் திட்டம்!

இந்தச் சகுனி வேலை இன்னும் எத்தனை நாளைக்கு?

இந்தக் கேள்விதான் இன்றைய தொழிலாளர் வர்க்கத்தின் அடிவயிற்றிலிருந்து ஓங்கி எழுந்து உரக்க ஒலிக்கிறது!

அன்புள்ள,

மு. க.

25-07-1984

1242. வாழ்க தம்பி! வளமெல்லாம் பெற்று!

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இருக்கும் தம்பி காளிமுத்துவைப் பற்றி நான் அதிகம் எழுதுவதில்லை - பேசுவதில்லை - ஏதோ உள்ளூர்த் தகராறுகளின் காரணமாக நம்மைவிட்டுப் பிரிந்து சென்றவர். அப்படிப் பிரிந்து போன போதுகூட இறைவா! இதய தெய்வமே! என்றெல்லாம் சொற்களை வாரி இறைத்து எனக்குக் கடிதங்கள் எழுதிவிட்டுச் சென்றவர்தான்!

எம்.ஜி.ஆர். கட்சிக்குச் சென்ற பிறகு அங்குள்ள மரபுப்படி, என்னைக் கடுமையாக விமர்சித்தால்தான் அந்த இடத்தில் தங்க முடியும் என்ற காரணத்தால், அவரைப் போன்ற சிலர் என்மீது சுடுமொழிகளைத் தொடுத்தபோதும் நான் அதற்காக அதிகமாக அலட்டிக் கொண்டதில்லை.

அதுமட்டுமின்றி, இலங்கைத் தமிழர் பிரச்சினை போன்ற தமிழர்களின் உணர்வோடு ஒன்றிவிட்ட பிரச்சினைகளில் தம்பி காளிமுத்து அடங்காத ஆர்வம் கொண்டிருப்பவரைப் போலக் காட்டிக்கொண்டதால் பலே தம்பி! பரவாயில்லையே! என எண்ணிப் பரவசமடைந்து கொண்டிருந்தேன்.

அவர் பேசுகிற கூட்டங்களுக்கு உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் சென்று கேட்டுவிட்டு வந்து பேச்சின் சாரம் முழுவதையும் என்னிடம் கூறும்போது - என்னைத் தாக்கிப் பேசிய பகுதிகளை மறந்துவிட்டு அல்லது அலட்சியப்படுத்தி விட்டு - அந்த அமைச்சர் தம்பி இலங்கைக் கொடுமைக்கு எதிராக முழக்கிய போர்ப் பரணிகளைப் பாராட்டி மகிழ்ந்திருக்கிறேன்.

ஆனால் கொஞ்ச நாளாகத் தம்பி, வேறு பிரச்சினைகளில் நாட்டம் அதிகம் செலுத்துவதை விட்டு விட்டு நமது கழகத்தையும், என்னையும் நாராச நடையிலே அர்ச்சனை செய்வதிலே பெரும்பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறார்.

தஞ்சை விவசாயிகளுக்குத் தரப்படும் விதைகள் முளைக்கவில்லை என்ற புகார் பரவலாக வந்தபோதும் சரி, காவிரி ஆற்று நீர், பாசன வாய்க்கால்களின் மூலம் சரளமாக ஓடவில்லை என்ற கவலை தோய்ந்த கோரிக்கைகள் குவிந்தபோதும் சரி, விவசாய மந்திரியான தம்பிக்கு மதுரையில் உள்ள வேலைகளே சரியாக இருந்ததே தவிர - தஞ்சையின் தவிப்பை ஏறெடுத்தும் பார்க்க நேரமில்லை! எதிர்க்கட்சித் தலைவர்களை விமர்சிக்கவே பொழுது போதவில்லை என்கிற போது இலாகாப் பணிகளைக் கவனிப்பது எப்படி இயலும்?

அதுவும், தம்பி இப்போது அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்களின் அணியோ? என்ற ஐயம் எழுப்பப்பட்டவுடன், தலைதப்பினால் போதுமென்று தாண்டிக் குதித்து தனது புதிய இறைவன் எம்.ஜி.ஆருக்குத் தூப தீப நைவேத்தியங்கள் காட்டுவது மாத்திரமின்றி - கழகத்தையும், என்னையும் வாய்க்கு வந்தவாறு வசைபாடத் தொடங்கியிருக்கிறார்! வாழத் தெரிந்த தம்பி! வாழ்க தம்பியின் ஆற்றல்! ?

தலை கொடுப்பேன் தமிழுக்கு! என்றும் - இலங்கைத் தமிழர்க்காக இன்னுயிர் தருவேன் என்றும், கொம்பு, தும்பு என்று பேசியும் உன்னைப் போன்ற சில உடன்பிறப்புகளைக் கூடக் கவர்ந்துவிட்ட தம்பி காளிமுத்து, தனது உண்மை உருவம் என்ன என்பதைப் புதுவையில் பேசிய ஒரு பொதுக்கூட்டத்தின் மூலம் காட்டிக் கொண்டிருக்கிறார்.

அவருக்குப் பதில் சொல்லத் தேவையில்லை! அது வீண் வேலை! எனக்கும் தெரிகிறது! இருந்தாலும் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

புதுவையில் தம்பி காளிமுத்து சிந்திய முத்துக்கள் இதோ:-

- கருணாநிதியின் அரிப்பு!
- அண்ணாவைப் பற்றி எம்.ஜி.ஆருக்குக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகக் கருணாநிதி எப்போது மாறினார்?
- கோட்டான் கருணாநிதி - குயில் எம்.ஜி.ஆர்.!
- வான்கோழி கருணாநிதி - மயில் எம்.ஜி.ஆர்.!

- கருணாநிதி பழைய ஞாபகத்தில் மஞ்சள் குளிக்கிறார்.
- கருணாநிதியின் புத்தி எங்கே புல் மேயப் போனது?
- அரசியல் பேடி கருணாநிதி!

இத்தனையும் தம்பி காளிமுத்து என்மீது பாண்டிச்சேரி கூட்டத்தில் நடத்திய பாய்ச்சல்! சென்னை மாலைமுரசு இதழில் வெளிவந்தது!

இந்த இழிமொழிகளைக் கேட்டு நான் கவலைப்படவில்லை! தம்பியின் மீது கோபமுமில்லை! இறைவனே! என்று அன்றைக்கு எழுதியதையும், பேசியதையும் நினைத்துப் பார்த்து, இன்றைக்குப் பேசுவதை அலட்சியப்படுத்தி விடுகிறேன். இருந்தாலும் உன்னிடம் பச்சைச் சிரிப்பு காட்டிப் பம்மாத்து செய்கிறவர்களை நீ அடையாளம் புரிந்து கொள்ளாமல் ஏமாந்து விடக்கூடாதே என்பதற்காக, தம்பி வாரி இறைத்துள்ள தகுதி மிக்க ? தரங்குறையாத ? வசைமொழிகளைத் தொகுத்து வழங்கியுள்ளேன்.

வசைமாரி கிடக்கட்டும் - அவர் எடுத்து வைத்துள்ள ஒரு முக்கியமான இலட்சிய முழக்கத்தையும் படித்துப் பார்த்தேன். விலா நோகச் சிரிப்புத்தான் வந்தது!

அ.தி.மு.க.வின் கருத்து மாநில ஆட்சிகளை கலைக்கிற 356-வது பிரிவு என்கிற தேள் கொடுக்கு, நச்சுப்பல் அரசியல் சட்டத்தில் இருக்கக்கூடாது என்பதுதான்!

இது தம்பி கொட்டியுள்ள முரசு! அய்யோ பாவம்! தம்பியும், அவரது தோழர்களும் 1974-ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றத்தில் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேறியபோது ராஜமன்னார் குழுவின் அறிக்கையைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டுமென கர்ஜித்ததை நாடு மறந்துவிடவில்லை!

மத்தியில் ஜனதா ஆட்சி நடந்தபோது மாநிலங்களவையில் முரசொலி மாறன் ஒரு மசோதாவைத் தாக்கல் செய்தார். அதனை இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் ஆதரித்துப் பேசின. என்ன மசோதா தெரியுமா? மாநில ஆட்சிகளைக் கலைக்கும் அதிகாரம் பெற்ற 356-வது பிரிவை ரத்து செய்ய வேண்டும் என்ற மசோதா! அந்த மசோதாவை ஆதரித்து தி.மு.க.வும், இரு கம்யூனிஸ்டுக்

கட்சிகளும், வேறு சில கட்சிகளும் வாக்களித்தபோது - அதனை எதிர்த்து வாக்களித்த கட்சிதான் அ.தி.மு.க. கட்சி என்பதைத் தம்பி மறந்து விட்டு ஏனோ இப்படித் தடுமாறுகிறாரோ தெரியவில்லை!

பரவாயில்லை! எம்.ஜி.ஆர். முகாமில் தன் கரத்தைப் பலப்படுத்திக்கொள்ளத் தம்பி காளிமுத்து யாரையாவதுக் காட்டிக் கொடுக்கட்டும்! என்னைக் கோட்டான் என்றும், பேடி என்றும் கொக்கரிக்கட்டும்! எதிர்பார்க்கும் ஆதாயம் தம்பிக்கு கிடைத்தால் சரி! அதற்காக நாம் அந்த அர்ச்சனைகளைத் தாங்கிக் கொள்வோம்! வாழ்க தம்பி, வளமெல்லாம் பெற்று!

அன்புள்ள,

மு. க.

26-07-1984

1243. அண்ணா மாவட்ட மாநாடு!

உடன்பிறப்பே,

அண்ணா மாவட்டக் கழகக் கூட்டம் நடைபெற்று எடுக்கப்பட்டுள்ள முடிவுகளை ஏடுகளில் படித்திருப்பாய்! மாவட்டக் கழகத்தின் செயல்வீரர்கள் இன்றே களம் புகுந்திட ஆணை பிறப்பித்திடுக! என நெஞ்சு நிமிர்த்தித் தோள் உயர்த்தி நின்றனர். அறப்போர் நாட்களை நானும், பேராசிரியரும் உரிய நேரத்தில் குறித்து அறிவிப்போம் என உறுதியளித்த பின்னரே அமைதி கொண்டனர் அந்த அடலேறுகள்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைப்பதற்கு மறுப்பு தெரிவிக்கும் மாண்புகள் - செங்கற்பட்டு மாவட்டம் மிகச் சிறிய மாவட்டமாம்! அதனால் அதனை இரண்டாகப் பிரிக்கக்கூடாது என்றும், தேவையில்லையென்றும் காரணம் கூறித் தங்கள் மனச்சாட்சியின் கண்களையே தங்கள் விரல்கள் கொண்டு குத்திக் கொள்கின்றனர்.

தஞ்சையை இரண்டாகப் பிரித்துத் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாகும் என்று எம்.ஜி.ஆர். அறிவித்தார்.

உடனே நாகப்பட்டினத்தில் உள்ளவர்கள் திருவாரூருக்குப் பதிலாக, நாகையைத்தான் தலைநகரமாக்க வேண்டுமென்று கடையடைப்பு முதலிய போராட்டங்களில் இறங்கினார்கள்.

எம்.ஜி.ஆர். என்ன செய்தார் என்பது தெரியுமா?

திருவாரூரும் புதிய மாவட்டத்திற்குத் தலைநகராக இருக்கட்டும் - பக்கத்தில் பதினான்காவது மைலில் உள்ள நாகையும், இன்னொரு புதிய மாவட்டத்துக்கு தலைநகராக இருக்கட்டும் என்று கூறித் தஞ்சையை மூன்று மாவட்டங்களாகப் பிரித்து அறிவித்து விட்டார்.

கிழக்கு ராமநாதபுரம், மேற்கு ராமனாதபுரம் இரண்டும் சேர்ந்து ஒரே ராமநாதபுரம் மாவட்டமாக இருந்தது!

இப்போது மேற்கு ராமநாதபுரம், காமராஜர் மாவட்டம் என்ற பெயருடன் பிரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பகுதியில் ஒரு பகுதியாகி விட்ட கிழக்கு ராமநாதபுரத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதிக்குப் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டமெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

மாவட்டங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிப்பது என்பதில் ஏதாவது ஒரு வரையறுக்கப்பட்ட அளவுகோல் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் மாவட்டப் பிரிவினை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

நான் முன்பே தெரிவித்ததைப் போல மூத்த அரசியல் தலைவர்கள், தமிழறிஞர்கள் கொண்ட ஒரு கூட்டத்தில் கலந்துரையாடித் தொடக்கத்திலேயே முடிவுகளை மேற்கொண்டு - பிரச்சினையைச் சிக்கலாக்காமல் கவர்னர் உரையிலோ அல்லது முதல்வர் அறிவிப்பிலோ ஒட்டுமொத்தமாகப் புதிய மாவட்ட எல்லைகளையும், பெயர்களையும் தெரிவித்திருக்கலாம்.

இவற்றில் எதையும் பின்பற்றாமல் கொண்டதே கோலம் என்ற பிடிவாதப் போக்குடன் முதலமைச்சர் துக்ளக் தர்பார் நடத்துவதை எப்படி விமர்சிக்காமலோ - எதிர்க்காமலோ இருக்க முடியும்?

அண்ணாவைப் பற்றி எம்.ஜி.ஆருக்குக் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆசிரியராகக் கருணாநிதி எப்போது மாறினார்? கருணாநிதிக்கு அதற்கென்ன தகுதி?

எனக் கேட்கும் சில அன்புத் தம்பிகள் என் மீது சேறு வாரி வீசுகிறார்கள்! நான் வருந்தவில்லை! அய்யோ, அவர்களது கைகளைச் சேறாக்கிக் கொள்கிறார்களே! என்றுதான் கவலைப்படுகிறேன்.

இதோ பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொம்மை என்ற பிரபலமான கலையுலக இதழில் நண்பர் எம்.ஜி.ஆர். எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி :-

விமானக்கூடத்தில் அண்ணாவைத் தேடினேன். அண்ணா இல்லை - காலமாகி விட்டார் என்பது எனக்குத் தெரியாதா? நன்கு தெரியும். ஆனாலும் அண்ணா வந்து என்னை வாழ்த்தி வழியனுப்ப

வேண்டும் வெளிநாட்டுக்கு என்ற பேராசையுடன் சுற்றிலும் பார்த்தேன். என் கண்களுக்கு முன் அதோ வருகிறார். அருகில் வந்து விட்டார். ஆமாம் - கலைஞர் கருணாநிதியின் உருவில் அண்ணா என்னைத் தேடி வந்தார். அண்ணாவுக்குரிய தகுதியைப் பெற்ற கலைஞர் என் கழுத்தில் மாலை அணிவித்தார்.

இது நண்பர் எம்.ஜி.ஆர். எழுதி அச்சேறி வெளிவந்தது!

இதோ எம்.ஜி.ஆர். 1971 ஜூன் மாதம் பரங்கிமலைத் தொகுதியில் கருணாநிதிபுரம் என்று ஒரு பகுதிக்குப் பெயர் சூட்டிப் பேசியபோது குறிப்பிட்டதையும் அந்தச் சின்னத்தம்பிகள் படிப்பது நல்லது.

கலைஞர் அவர்களுக்கும் எனக்கும் இருபதாண்டு காலத் தொடர்பு உண்டு. அப்போது நான் கோவையில் இருந்தேன். கோவையில் பிளேக் நோய் பரவியிருந்ததால் கலைஞர் தனது குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு என் வீட்டில் தங்கியிருந்தார். என் வீடு என்றால் 12 ரூபாய் வாடகை வீடுதான். இரண்டு பேரும் ஒன்றாக இருந்தோம். அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவராகவும், நான் காங்கிரஸ்காரனாகவும் இருந்தேன். அப்போது அவரை என் பக்கம் இழுக்க முயற்சித்தேன். ஆனால் நிலைமை எப்படி ஆயிற்று? நான்தான் அவர் பக்கம் ஈர்க்கப்பட்டேன்.

உடன்பிறப்பே, எம்.ஜி.ஆர். அவர்களின் எழுத்தும் பேச்சும் நினைவூட்டும் பழைய நிகழ்ச்சிகளை மறந்துவிட்டு - அல்லது மறைத்துவிட்டு - அண்ணாவைப் பற்றி எம்.ஜி.ஆருக்குக் கருணாநிதி கற்றுக் கொடுப்பதா? என்று கேட்பது வேடிக்கையாகத் தானே இருக்கிறது!

எம்.ஜி.ஆரே எனக்கு அண்ணாவைப் பற்றிக் கற்றுக் கொடுத்ததாக இருக்கட்டும் - அல்லது அமைச்சரவையிலே இருக்கிற சில தம்பிகளே எனக்கு அண்ணாவை அறிமுகப் படுத்தியதாக இருக்கட்டும் - அதற்காக அண்ணன் பிறந்த காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைக்க முடியாது என மறுக்கிற உரிமை பெற்றவர்களாகி விடுகிறார்களா?

1978-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ஆம் நாள் செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டம் மாவட்ட கலெக்டர்

தலைமையில் நடைபெற்றபோது, காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைப்பது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியிருப்பதை நண்பர் பூவிருந்தவல்லி ராஜரத்தினம் எம்.எல்.ஏ. அவர்கள், ஆதாரங்களுடன் மாவட்டக் கழகக் கூட்டத்தில் என்னிடமும், பேராசிரியரிடமும் மாவட்டப் பிரதிநிதிகளிடமும் எடுத்துக்காட்டிப் பேசினார்.

ஆதாரங்கள் ஆயிரம் தரினும், அசைக்க முடியாத வாதங்களை அடுக்கினும், ஏதோ ஒரு காரணத்தால் - அண்ணா மாவட்டம், காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அமைவதற்கு ஒப்புக்கொள்ளவே முடியாது என முதலமைச்சர் ஒற்றைக்காலில் நிற்பதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும்?

அந்த உணர்ச்சியின் வடிவமாகத்தான் மாவட்டக் கழகக் கூட்டம் திகழ்ந்தது!

பெரியார், அண்ணா, கழகம் - பிறந்த முப்பெரும் விழாவை, நாம் தொடர்ந்து கொண்டாடி வருகிற செப்டம்பர் திங்கள் பதினைந்து, பதினாறு ஆகிய நாட்கள் சனி, ஞாயிறு கிழமைகளில் அண்ணா மாவட்ட மாநாடு!

ஆம், அண்ணன் பிறந்த காஞ்சியில்!

தமிழக முழுவதுமுள்ள உடன்பிறப்புகள், இந்த ஆண்டு முப்பெரும் விழாவைக் காஞ்சியில் அண்ணா மாவட்ட மாநாடாக நடாத்திட - அணி வகுத்திட - பணி குவித்திட - இன்று முதலே பயணம் தயாராகிக் கொள்க!

அன்புள்ள,

மு. க.

27-07-1984

1244. மரபும், மரியாதையும் மண்ணாகும்!

உடன்பிறப்பே,

மேலவைத் தலைவர்களாக இருப்பவர்கள் அரசியல் சர்ச்சைகளில் ஈடுபடுவதில்லை யென்பது ஒரு மரபு!

பெரியார் வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், மரபாவது, வெங்காயமாவது! எல்லாமே மீறப்படுகிற ஆட்சியல்லவா தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

மக்களின் வரிப்பணம் என்கிற போது, அதில் எல்லாக் கட்சிக்காரர்களும் தருகிற வரியும் அடங்கியிருக்கிறது என்ற சாதாரண உண்மைகூடத் தெரியாமல் அரசு விழாக்களில் அரசியல் சர்ச்சைகளில் இறங்கும் மதோன்மத்தர்களாகவன்றோ மந்திரிகள் உலா வந்து கொண்டிருக்கிறார்கள்!

சேலத்தில் ஒரு விழா நடந்திருக்கிறது! அரசு விழா அல்ல என்றாலும் சிலை திறப்பு விழா!

அந்த விழா அரசு விழாவல்ல என்ற நிலையில் அமைச்சர்கள் அரசியல் பேசினாலோ - அல்லது பேசியிருந்தாலோ - தவறு என்று கூற முடியாது!

ஆனால், அந்த விழாவில் பேசிய மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் அண்ணா மாவட்டப் பிரச்சினையை எழுப்பி,

இறந்து போன தலைவர்களின் பெயரை விவாதத்துக்குப் பயன்படுத்துகிறவர்கள் அந்தத் தலைவர்களின் புகழை அழிப்பவர்கள் - அது அண்ணா பெயராக இருந்தாலும் சரி! காமராஜர் பெயராக இருந்தாலும் சரி!

என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்!

இந்தக் கருத்தைப் பொறுத்த மட்டில் சிலம்புச் செல்வர் செப்பியுள்ளதை எழுத்துக்கு எழுத்து அப்படியே வரவேற்கலாம்.

அதுமட்டுமல்ல, ஒரு மேலவைத் தலைவர் என்ற முறையில் இப்படியொரு கருத்தைச் சொல்வது அவரது பதவிக்குரிய மரபை மீறிய செயலுமாகாது.

ஆனால், காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு, அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்ட வேண்டுமென நாம் வலியுறுத்துவதைக் கண்டிக்கும் தொடரில் ம.பொ.சி. அவர்கள், இப்படியொரு தீர்ப்பை அளித்து தனது பதவிக்குரிய மரபைக் குழிதோண்டிப் புதைத்திருப்பது பெரிதும் வேதனைப்படக்கூடிய ஒன்றாகும்.

ஆட்சியில் இருப்பவர்களைப் பாராட்டும் நன்றிக்கடனை அவர் செலுத்துவது பற்றி யாருக்கும் அக்கறையில்லை! அவரது அழகு தமிழால் அடியேன் எத்தனைமுறை வானளாவப் புகழப்பட்டிருக்கிறேன் என்பதெல்லாம் கனவுகள் அல்ல! கல் மேல் செதுக்கிய வாசகங்கள்!

அண்ணா மாவட்டம் என்ற பெயரை வலியுறுத்தி உரிமைப்போர் தொடுப்பதாலேயே, மறைந்த தலைவரின் புகழை அழிப்போர்! என்ற பட்டத்தை நமக்கு ம.பொ.சி. அவர்கள் வழங்குவாரேயானால் அவர், நம்மைத் தாக்குகிறாரே என்ற கவலையை விட மேலவைத் தலைவர் பதவிக்குரிய மரபைத் தாக்கித் தகர்க்கிறாரே என்பதில்தான் அதிகக் கவலை ஏற்படுகிறது.

மறைந்த தலைவர் அண்ணாவின் புகழை நாம் அழிக்கிறோமாம்! ம.பொ.சி. அவர்கள் நமது நெஞ்சில் குத்துகிறார் கூரிய ஈட்டிகொண்டு!

அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி என்ற சொல்லையே பயன்படுத்தவில்லை யெனக் கூறிவிட்டுச் சட்டப் பேரவையில் கொண்டு வந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அண்ணாவின் புகழை வளர்க்கிறாராம் - அண்ணாவின் கொள்கையைத் தீர்மானமாக்கிய நாம் அண்ணாவின் புகழை அழிக்கிறோமாம்!

கேப்டலிசம் - சோஷலிசம் - கம்யூனிசம் மூன்றும் சேர்ந்ததே அண்ணாயிசம் - என்று தத்துவ விளக்கம் சொன்ன எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணாவின் புகழை வளர்ப்பவராம்! நாம் அண்ணாவின்

புகழை அழிப்பவர்களாம்! சிலம்புச் செல்வரின் சீரிய கண்டுபிடிப்பு இது!

அண்ணா பிறந்து, வளர்ந்து, கல்வி பயின்று, வாழ்ந்த நகரான காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்ற பெயர் வைக்கப்பட வேண்டுமென்பதே நமது அறப்போராட்டத்தின் நோக்கம்!

சேலத்தில் பேசிய ம.பொ.சி. அவர்கள், ஒரு தலைவர் பிறந்த இடத்தின் முக்கியத்துவம் குறித்தும் குறிப்பிட்டிருக்கிறார்! ஆம், அதே விழாவில்! நமக்கு அர்ச்சனை நடத்திய விழாவில்! முதல்வரின் முறுவலைப் பரிசாகப் பெற்ற அந்த விழாவில்!

விஜயராகவாச்சாரியார் மாபெரும் தேசியத் தலைவர். அவர் வாழ்ந்த நகரில் அவர் வசித்த தெருவில் அவருக்குச் சிலை வைக்கத் தமிழக அரசு விரும்பியது. இந்த விஷயத்தில் காமராஜர் அன்பர்கள் போட்டியிட்டிருக்க வேண்டியதில்லை.

இது சிலம்புச் செல்வர், அந்தச் சிலை திறப்பு விழாவில் சிந்திய சொற்கள்!

மாபெரும் தேசியத் தலைவர் என ம.பொ.சி. அவர்களால் புகழப்படும் விஜயராகவாச்சாரியாருக்கு அவர் வாழ்ந்த ஊரில் சிலை வைக்க வேண்டும் என ம.பொ.சி. அவர்கள் வாதாடுவதில் உள்ள நியாயம், அண்ணா பிறந்த காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு அண்ணா மாவட்டம் அமைய வேண்டுமெனச் சொல்வதில் மட்டும் எப்படி இல்லாமற் போய் விடும்!

அண்ணா பெயரைச் செங்கல்பட்டு மாவட்டத்துக்கு வைக்க வேண்டுமென்கிறார்கள். மாவட்டங்களைப் பிரிப்பது நிர்வாக வசதிக்காக! அப்படிப் பிரிக்கப்படும் போது சரித்திரம் மாறி விடக்கூடாது. மறந்து விடக்கூடாது என்பதற்காகப் பழைய மாவட்டத்தின் பெயரை அப்படியே வைத்து விட்டுப் பிரிக்கப்படும். அண்ணா பெயர் வைக்க வேண்டுமென்பதற்காகச் செங்கற்பட்டு மாவட்டச் சரித்திரம் மறைக்கப்பட வேண்டுமா?

மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் எழுப்பியுள்ள வினா இது! சேலம் சிலைத் திறப்பு விழாவில்! முதல்வரின் முன்னிலையில்!

இந்த வினா எழுப்பி, முதல்வரின் முகத்தை ஒருமுறை பார்த்து, அந்த முகத்திலாடும் மகிழ்ச்சி கண்டு, அதனையே பெறற்கரிய பேறாகக் கருதிக் களிப்பதற்கு முன்பு, சிலம்புச் செல்வர் அவர்கள், சற்று அவசரப்படாமல் நாம் என்ன கோரிக்கை வைக்கிறோம் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முயற்சி செய்திருக்கலாம்.

செங்கற்பட்டு மாவட்டம் முழுமைக்கும், அண்ணா மாவட்டம் என்று பெயர் வைக்குமாறு நாம் கேட்கவில்லை!

தஞ்சை மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப் படுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

தஞ்சையென்ற பெயர் ஒரு பகுதிக்கு அப்படியே இருக்கிறது. திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டம் என அறிவிக்கப்பட்டது. நாகையில் உள்ளோர் கிளர்ச்சி செய்ததும் நாகையைத் தலைநகராகக் கொண்டு மற்றொரு மாவட்டம் அறிவிக்கப்பட்டு விட்டது. நாகைக்கும், திருவாரூருக்கும் இடையே உள்ள தூரம் பதினான்கே மைல்கள்தான்!

இராமநாதபுரம் மாவட்டம் பதினாறு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய மாவட்டம்! அதனை மூன்று மாவட்டங்களாகப் பிரித்து ஏட்டளவில் அறிவிக்கப்பட்டாகி விட்டது. விழாக்களும் விமரிசையாக நடந்துவிட்டன!

பதினேழு சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய செங்கற்பட்டு மாவட்டத்தை மூன்றாக அல்ல - இரண்டாகப் பிரித்து ஒரு பகுதி அண்ணா மாவட்டமென்றும், இன்னொரு பகுதி செங்கற்பட்டு மாவட்டம் என்றும் அறிவிக்கப்படக்கூடாதா?

பெயர்கள் வைக்கும் போதும், எல்லைகள் பிரிக்கும் போதும் இப்படியெல்லாம் பிரச்சினைகள் வரத்தான் செய்யும்! அதிலும் திடீரென பத்து அல்லது பதினைந்து புதிய மாவட்டங்களைப் பிரிப்பது என அறிவிக்கும் போது - சிறந்த தமிழ் அறிஞர்கள், மூத்த அரசியல் தலைவர்கள், வரலாற்று மேதைகள் மற்றும் நிபுணர்கள் அடங்கிய கூட்டத்தில் விரிவான விவாதம் நடத்தி மாவட்ட எல்லைகளையும், பெயர்களையும் முடிவு செய்திருக்க வேண்டுமென அப்போதிருந்தே நான் சொல்லி வருகிறேனே, அதையாவது காதில் போட்டுக் கொண்டார்களா?

நில ஆர்ஜிதங்கள் கூட செய்யாமல் தனி அதிகாரிகள் இன்னமும் மதுரையிலேயே உட்கார்ந்து கொண்டு மூன்று புதிய மாவட்டங்களின் ஆரம்ப விழாக்களைப் பல லட்ச ரூபாய் செலவில் நடத்தி, தேர்தல் ஸ்டண்ட் அடித்துக்கொண்டிருக்கிற கோணங்கித்தனத்திற்கு, புகழாரம் - பூவாரம் - ஏன்! புதிய தேவாரம் வேண்டுமானாலும் சிலம்புச் செல்வர் பாடிக் கொண்டிருக்கட்டும்!

அதை விட்டு நம் மீது பாய்ந்தால்தான் அவரது புரட்சித் தலைவர் புளகாங்கிதம் அடைவார் என்று கருதிச் செயல்பட்டால், ஏற்றுள்ள பதவிக்குரிய மரபும், மரியாதையும் மண்ணாகி விடும்.

அன்புள்ள,

மு. க.

02-08-1984

1245. தாழ்த்தப்பட்ட மக்கள் கவனத்திற்கு!

உடன்பிறப்பே,

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸ் தனது வேட்பாளர் பெயரை அறிவித்து விட்டது. கட்சி சார்பற்ற ஒருவரைத் துணைத் தலைவராக்க வேண்டுமென்று ஒரு கருத்து வெளியிடப்பட்டது என்றாலும், இந்திரா காங்கிரஸ் கட்சி அந்தக் கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லையென்பது வெளித்தோற்றமாக இருந்தாலும்கூட, உண்மையை ஆழ்ந்து நோக்குமிடத்து அறிவிக்கப்பட்டுள்ள வேட்பாளர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் எந்தக் கட்சியென்று தன்னைக் கூறிக்கொண்டாலும், அந்தக் கட்சியில் அழுத்தமான பற்றும் பிடிப்பும் உள்ளவர் என்று யாராலும் கூறிவிட முடியாது. எனவே அவரைக் கட்சி சார்பற்ற வேட்பாளர் என்றே கூடக் கூறிவிடலாம்.

அண்மையில் கா.கா.தே.கா. கட்சியின் சார்பில் சென்னை மாங்கொல்லையில் நடைபெற்ற காமராசர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனதா கட்சிப் பொதுச்செயலாளர் நண்பர் கலிவரதன் அவர்கள் ஒரு நிகழ்ச்சியை நினைவூட்டினார்.

இந்திரா காந்தியின் நெருக்கடி நிலைப் பிரகடனத்தைக் கண்டித்து சென்னையில் ஸ்தாபன காங்கிரஸ் கட்சி காமராஜர் முன்னிலையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியபோது அந்தத் தமிழ் தீர்மானத்தை ஆங்கிலத்தில் எழுதியவர் இதே சாட்சாத் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தானாம்!

இராஜாஜி அவர்களின் ஆதிக்கத்தில் இருந்த ஸ்வராஜ்யா ஆங்கில ஏட்டிலும் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கட்டுரைகள் தீட்டியதுண்டு! ஆசிரியர் பொறுப்பும் சிறிதுகாலம் ஏற்றிருந்ததுண்டு!

இந்திராவை எதிர்த்துத் தீர்மானம் எழுதியவர், பிறகு இந்திரா காங்கிரசிலேயே சேர்ந்து கொண்டு ஸ்தாபன காங்கிரசைக் கைகழுவிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர்!

பின்னர் இந்திரா காந்தி அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இல்லாதபோது நாடாளுமன்றத்தில் சுயேட்சை உறுப்பினராகச் செயல்படுகிறேன் என அறிவித்தவர்!

1980-ஆம் ஆண்டுவாக்கில் மீண்டும் இந்திரா காந்தி ஆட்சிக்கு வரும் வாய்ப்பு உருவாகிறது எனத் தெரிந்து கொண்டு இந்திரா காங்கிரஸ் எனத் தன்னைக் கூறிக் கொண்டவர்!

இத்யாதி செயல்களின் மூலம் அவர், உறுதியாக ஒரு கட்சிப் பிடிப்புள்ளவர் என்ற நிலைக்கு ஆளாகாமலே பதவிப் பிடிப்பில் மட்டும் மிகக் கெட்டியாக இருந்து வருகிறார் என்பது தெளிவு!

எனவேதான் அவரைக் கட்சிச் சார்பற்ற வேட்பாளர் என்று கருதி, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தேர்ந் தெடுத்துள்ளார்கள் போலும்!

குடியரசுத் தலைவர் பதவி என்பது மிகவும் பொறுப்புள்ள ஒரு பதவி! அடக்கமான பண்பும், அமைதி காக்கும் தன்மையும் அந்தப் பதவிக்கு மிகமிக தேவை!

அண்மைக்காலத்தில் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் பொறுமை, நிதானம் இவற்றை இழந்த நிலையில் பேசிய பேச்சுக்கள் மறந்துவிடக்கூடியவை அல்ல!

இந்திய ராணுவத்தை இலங்கைக்கு அனுப்பித் தமிழர்களைக் காத்திட வேண்டும் என்று தமிழகத்தில் கூறப்பட்ட கருத்து பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஆர்.வி. அவர்களுக்கு ஏற்காதக் கருத்தாகக் கூட இருக்கலாம். அதனை எடுத்து விளக்க வேண்டிய முறையில் விளக்கிடாமல் அந்தக் கருத்துக் கூறுவது முட்டாள்தனமானது என்று முற்றிலும் அநாகரிகமான அர்ச்சனையில் ஈடுபட்டதைத் தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை.

அவர் குடியரசுத் துணைத் தலைவராக ஆகப் போகிறார்!

நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாநிலங்களவை உறுப்பினர்களும் மட்டுமே வாக்களிக்கக் கூடிய தேர்தல்!

அதனால் ஆளுங்கட்சி வேட்பாளரான ஆர்.வி. அவர்கள் வெற்றி பெறுவது உறுதி!

இந்தப் பதவிக்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தி.மு.க. சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

பாபு ஜெகஜீவன்ராம் போன்றவர்களும் அந்தக் கருத்தையே வெளியிட்டனர்.

ஏற்கனவே ஒருமுறை துணை ஜனாதிபதித் தேர்தல் குறித்து, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த என்னிடம் டெல்லியில் இருந்து கருத்து கேட்டபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அந்தப் பதவி தரப்பட வேண்டுமென்றும், தமிழகத்திற்கு அந்தப் பதவி தருவதாக இருந்தால் மகிழ்ச்சி என்றும், திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்களுக்கு அந்த நல்வாய்ப்பை வழங்கலாமென்றும் தெரிவித்தேன்.

எனது கருத்து அப்போது ஏற்கப்படவில்லை.

இப்போதும் தாழ்த்தப்பட்ட ஒருவருக்கு அந்தப் பதவி அளிக்கப்பட வேண்டுமென்று இந்தியா முழுதுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்புகள், கோரிக்கை எழுப்பி இந்திரா காந்தி அவர்களுக்குத் தந்திகள் அனுப்பின. அறிக்கைகள் விடுத்தன. ஆளும்கட்சி நிறுத்தும் வேட்பாளர் வெற்றி பெறும் நிலை இருப்பதால் அந்த வேட்பாளர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கட்டுமென்று நமது கழகமும், எதிர்க்கட்சிகளும் விருப்பம் தெரிவித்தன. திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீரமணி அவர்களும், பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

எல்லாமே பயனற்றுப் போயின!

ஒரு தமிழ்நாட்டுக்காரருக்கு அந்தப் பதவி கிடைக்கிறது என்பதிலே மகிழ்ச்சி அடையக்கூடாதா என்று யாராவது கேட்கக்கூடும்!

அந்தத் தமிழ்நாட்டுக்காரர்தான் இந்தியாவுக்கே பாதுகாப்பு அமைச்சராகப் பெரும் பதவியில் இருக்கிறாரே!

அவரை அப்படியே இருக்கவிட்டு விட்டு - தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருக்குத் துணை ஜனாதிபதி பதவியை வழங்கியிருக்கக் கூடாதா?

தமிழ்நாட்டவர் இல்லையென்றாலும், எந்தவொரு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினராயினும் துணை ஜனாதிபதியாக வருகிறார் எனில், எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும்!

எதிர்ப்பே இன்றி எதிர்க்கட்சியினர் அனைவரும் அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க முன்வந்திருப்பார்களே!

அனைவரும் ஒரே குரலில் எழுப்பிய கோரிக்கையை இந்திரா காங்கிரஸ் அலட்சியப்படுத்திவிட்ட பிறகாவது - அந்தக் கட்சியைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டாமா?

அன்புள்ள,

மு. க.

03-08-1984

1246. இந்தச் சகுனி வேலை எத்தனை நாள்? மீனம்பாக்கம் மீண்டும் நிகழாதிருக்க!

உடன்பிறப்பே,

யார் வைத்த கொள்ளியோ, வீடு பற்றி எரிந்தது என்னும் முதுமொழிக்கொப்ப - எந்த வஞ்ச நெஞ்சத்தினர் ஒன்றுகூடிச் செய்த சதியோ தெரியவில்லை! சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் சுடுகாடாகக் காட்சியளிக்கக்கூடிய கொடுமை நிகழ்ந்துவிட்டது.

அதிகாரிகளும், அலுவலர்களும், இந்தியப் பயணிகள், இலங்கைப் பயணிகள், மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் உள்ளிட்டோர், இதுவரை வந்துள்ள கணக்குப்படி நாற்பது பேர் பிணமாயினர்.

எரிமலைக் குமுறலிலோ - பூகம்ப அதிர்ச்சியிலோ கூட ஓடிப்போய்த் தப்பலாம் என்ற முயற்சியில் சிலர் ஈடுபட முடியுமென்பர்! அய்யோ! அதற்கும் கூட இடமின்றி, உயிரோடு உலவிக் கொண்டிருந்த மனிதர்கள் தூள்தூளாகச் சிதறிக் கைவேறு, கால்வேறு, தலைவேறு, முண்டம்வேறு என நிலைகுலைந்து மடிந்து போயிருக்கிறார்கள்.

இடிபாடுகளுக்கிடையே இருந்து தேடியெடுக்கப்பட்ட சவங்களின் எண்ணிக்கை இதுவரையில் நாற்பது!

இன்னும் எத்தனையோ! நினைக்கவே நெஞ்சு பதறுகிற சம்பவம்!

எத்துணை எதிர்பார்ப்புகளுடன் பயணம் மேற்கொண்டனரோ - விமான நிலையத்தில் காத்திருந்தோர்!

நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அதிகாரிகளும் அலுவலர்களும் கண்இமைக்கும் நேரத்திற்கு முன்புகூட இப்படியொரு முடிவு தங்களைத் தழுவித் தகிக்கப் போகிறது என எண்ணியிருக்க மாட்டார்கள்!

நாற்பது உயிர்களுடன் முடிந்து விட்ட துன்ப நிகழ்வா இது? அவர்களைச் சார்ந்துள்ள குடும்பங்கள், குழந்தைகுட்டிகள், உற்றார், நண்பர் என எத்தனை பேரைச் சூழ்ந்து கொண்டுள்ள சோகப் புயல்!

யாருக்கும் எந்தக் கெடுதியும் விளைத்திடத் துளி எண்ணமும் இல்லாமல் தங்கள் பணியினை ஆற்றிக் கொண்டிருந்தவர்கள் மீது, சாவுக் கணைகளை சடசடவென ஏவி விட்ட சண்டாளத்தனத்தை என்னென்று கூறுவது!

மிருக உள்ளம் படைத்தவர்களே செய்திடத் துணியாத இந்தக் கோரச் செயலை, மனித இதயத்துக்குரியோர் எனப் பறை சாற்றிக்கொள்வோர் எப்படித்தான் நினைத்துப் பார்த்தனரோ?

உள்ளம் இருக்க வேண்டிய இடத்தில் பெரும் பள்ளம் உடையோர் மட்டுமே இந்த அநியாயத்தை - அக்கிரமத்தை - அழிவு வேலையைச் செய்திடத் திட்டமிட்டிருக்க முடியும்!

இலங்கையில் வெடிப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அது இந்தியாவிலேயே வெடித்து விட்டது என இலங்கைத் துணைத் தூதுவரகம் கூறுகிறது!

இந்த ஈனச்செயலின் விளைவு, இலங்கை விமான நிலையத்தில் மக்களைப் பாதித்திருந்தாலும் - இந்தியாவில் பாதித்திருந்தாலும், மனிதாபிமான அடிப்படையில் இரண்டுமே வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதுதான்!

நோக்கம் எதுவானாலும் - எந்தக் குற்றமும் அறியாத உயிர்களைப் பலி கொள்ளுகிற இந்தப் பயங்கரவாத முறையை இதயமுள்ளோர் எவரும் ஏற்றிடமாட்டார்!

மாண்டோர் குடும்பங்களுக்கு இரங்கலைத் தெரிவிப்பதோடு - காயமுற்றோர் விரைவில் குணம் பெற்றிட வேண்டுமென்ற விழைவையும் வெளிப்படுத்துகிறேன்.

வெடிகுண்டு, விமானக் கடத்தல் போன்ற எத்தனையோ சம்பவங்கள் விமான நிலையங்களில் நடைபெற்றுங்கூட - இன்னமும் இதுபோன்ற சதிச் செயல்களை முன்கூட்டியே தடுத்து நிறுத்தி, உயிர்களைப் பாதுகாக்கும் உரிய நடவடிக்கைகளை

மேற்கொள்ள அக்கறை காட்டாத நிலையே - மீனம்பாக்கம் விமான நிலையத்து வெடிகுண்டு நிகழ்ச்சிக்குக் காரணம் என்பதைக் கூறாமல் இருக்க முடியாது.

மீனம்பாக்கங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க - விமான நிலையங்கள் மற்றும் போக்குவரத்து நிலையங்கள் முழுமையான பாதுகாப்புடன் விளங்கிட அரசு ஆவன செய்ய உடனடியாக முன்வர வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

05-08-1984

1247. வெற்றிகள் குவியும்
விண் தொடும் குன்றாய்!

உடன்பிறப்பே,

மதுரைச் சீமையில்
மூன்று நாட்கள்
மக்கள் கடலில்
தெப்பமாய் மிதந்தேன்.
திருவிழா அல்ல –
திக்கெட்டும் குழுமித்
தெருவிழா எடுத்தனர்.
திண்தோள் மறவர்
தெளிவுறு மங்கையர்
வெல்க தி.மு.க. என்று
வெல்லத் தமிழில் முழங்கி வழிந்தனர்.
கலப்பை சுமந்து
காய்ப்பேறிய தோளினர்
உவப்பை உளத்தில் தேக்கி
ஓங்குக கழகம் என்றே ஒலித்தனர்.
கதிரொளி தோன்றும்
காரிருள் தொலையும்
களிப்பு பிறக்கும் என்ற
கணிப்பில் வாழ்த்தினர்.
தறிகெட்டுப் போன
தர்பார் நடத்தும்
நெறிகெட்ட ஆட்சி முடிவை நோக்கி
நெருங்கி விரைந்திட
நெஞ்சால் சபித்தனர்.
இளைய தம்பிகள்

ஈட்டியின் முனைகளாய்
எழுந்து பாய்ந்தனர்.
புதிய எழுச்சி
புதிய உணர்ச்சி
மக்கள் மத்தியில்
மாற்றம் கண்டேன்.
மதுரை வீரர்கள் வாழ்க நன்றாய்!
மனமொத்து நின்றால்
வெற்றிகள் குவியும்
விண்தொடும் குன்றாய்!

அன்புள்ள,

மு. க.

06-08-1984

1248. அது புழுதிக் காற்று! இது புயல் காற்று!

உடன்பிறப்பே,

1972-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எட்டாம் தேதிக்கு - உன்னைக் கொஞ்சம் பின்னோக்கி அழைத்துப் போகிறேன்.

கோவையில் கலைஞர் குடும்பத்துடன் வசித்து வந்தார். அந்த வட்டாரத்தில் கொடிய பிளேக் நோய் பரவிய காரணத்தால் குடும்பத்தினரை ஊருக்கு அனுப்பி வைத்து விட்டு என்னுடன் நான் குடியிருந்த வீட்டில் கலைஞர் தங்கியிருந்தார். அவர் சுயமரியாதை இயக்கத்தவர். நான் காங்கிரஸ்காரன். இருவருக்கும் விவாதம் நடக்கும். அவரை நான் என் பக்கம் இழுக்க நினைத்தேன். ஆனால் அவர் என்னை அவரது கொள்கையின் பக்கம் ஈர்த்து விட்டார்.

இப்படிப் பலமுறைப் பல நிகழ்ச்சிகளில் பேசும்போது குறிப்பிட்ட எம்.ஜி.ஆர். அவர்கள்-

கலைஞர் உருவில் அண்ணாவைக் காண்கிறேன் என்று கலையுலகப் பிரபல ஏடு ஒன்றில் கட்டுரை தீட்டிய எம்.ஜி.ஆர். அவர்கள்,

1972 ஆகஸ்டு மாதம் மதுரையில் நடைபெற்ற கழக மாநாட்டில் தி.மு.க. ஆட்சியைக் காங்கிரசார் ஊழல் ஆட்சி என்கிறார்களே, இது ஊழல் ஆட்சியா எனக் கேட்டு இல்லை! இல்லை! என மக்கள் முழங்கியவுடன் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு! இது ஊழல் ஆட்சி அல்ல! என்று உரத்த குரலில் உரையாற்றிய எம்.ஜி.ஆர். அவர்கள்,

திடீரென அதே ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டே மாத இடைவெளியில் - திருக்கழுக்குன்றத்திலும், சென்னையிலும்

பொதுக்கூட்டங்களில் என்ன பேசினார் என்பதை நினைவூட்டத்தான் 1972 அக்டோபருக்கு உன்னை அழைத்தேன்.

திருக்கழுக்குன்றத்தில் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்து வைத்துவிட்டு வந்திருக்கிறேன். அதனால் அண்ணாவின் அனுமதியோடுதான் இங்கு பேசுகிறேன். மதுரை முத்து இந்திரா காங்கிரசில் சேர்ந்து விடுவதாகச் சொன்னார்கள். என்னமோ தெரியவில்லை. வியாபாரம் இங்கே நடக்கவில்லை. அதனால்தான் போய்விட்டதாகச் சொன்னார்கள். விபரம் 15-ஆம் தேதிக்குப் பிறகு தெரியும். முன்பொருமுறை காமராஜரைத் தலைவர் என்று சொன்னேன். அண்ணாவை வழிகாட்டி என்று சொன்னேன். அப்போது இதே மதுரை முத்து என்னைத் தூக்கி எறிவதாகச் சொன்னார். தூக்கி எறிந்தே பழக்கம். ஆனால் யாரை என்று தெரியவில்லை. வழிகாட்டி ஒருவர்தான் இருக்க முடியும். தலைவர்கள் பலர் இருப்பார்கள். இந்தக் கூட்டத்துக்கு அரங்கநாதன் தலைமை வகிக்கிறார். இன்னொரு கூட்டத்திற்கு இன்னொருவர் தலைமை வகிப்பார். அந்தக் கருத்தில்தான் காமராஜரைத் தலைவர் என்று சொன்னேன். கவிஞர் கண்ணதாசன் சொல்கிறார்! என்னைக் கருணாநிதிதான் கட்சிக்கு அழைத்து வந்தாராம். பாவம்! நான் யாருக்கும் பயந்து கொள்கையை மாற்றிக்கொண்டவன் அல்ல! அப்படிப்பட்ட தேவையும் இல்லை.

மந்திரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கணக்குகளைச் சட்டமன்றத்தில் காட்டுகிறோம். ஆனால் அவர்களின் சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்ற கணக்கை ஏன் கேட்கக்கூடாது? இந்த ராமச்சந்திரனுக்கு ஒரு பங்களா இருந்தால் அது ஆட்சிக்கு வந்த பிறகு வந்ததா? அதற்கு முன்னால் வந்ததா? இதைக் கேட்கக்கூடாதா? என் மனைவி மற்றும் உறவினர்கள் மீது சொத்து வந்திருக்குமானால் அது எப்படி வந்தது? மாவட்ட, வட்ட, கிளைக்கழகச் செயலாளர்களுக்கு எப்படி வந்தது? இதை எதிர்க்கட்சிகள் கேட்க வேண்டியதில்லை. நாமே கேட்டுக் கொள்வோம். மாவட்டச் செயலாளர்கள், கிளைக்கழகச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் பதவிகளில் இருப்போர் தங்களின் சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டும். அவைகள் வந்த விபரத்துக்கு விளக்கம் சொல்ல வேண்டும். அதற்காக

ஒரு குழு அமைத்து அந்தக் குழுவிடம் ஒவ்வொருவரும் தங்கள் கை சுத்தமானது என்பதை நிரூபிக்க வேண்டும். நிரூபிக்க முடியாதவர்களை மக்கள் முன்னால் நிறுத்தித் தூக்கி எறியவேண்டும்.

உடன்பிறப்பே, இப்போது நினைவுக்கு வருகிறதா? 1972 அக்டோபர் எட்டாம் நாள் சென்னை லாயிட்ஸ் காலனியில் எம்.ஜி.ஆர். ஒரு பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையின் சில பகுதிகளைத்தான் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், சட்டமன்றத்தில் கணக்கு காட்ட வேண்டுமென்ற முடிவுப்படி பதின்மூன்று தடவை நோட்டீஸ் அனுப்பியும், தனது கணக்கைக் காட்ட முன்வராத எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்தைப் பிளக்க வேண்டுமென்ற டெல்லியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தன்னைத் திடீரென மாற்றிக்கொண்டு, மதுரை மாநாட்டில் ஆகஸ்டில் பேசியதற்கு முற்றிலும் மாறாக, அக்டோபரில் கழகத்தைப் பற்றிக் குறை கூறக் குதித்து விட்டார்.

இந்த நிகழ்ச்சிகளை மிகவும் விரிவாக - ஆதாரங்களுடன் குங்குமம் இதழில் நெஞ்சுக்கு நீதி இரண்டாம் பாகத்தில் எழுதியிருக்கிறேன். தொடர்ந்து எழுதியும் வருகிறேன்.

பதினெட்டாயிரம் கிளைக்கழகச் செயலாளர்கள் மற்றும் பல்லாயிரம் கழக நிர்வாகிகளின் கணக்குகளையெல்லாம் பார்க்க வேண்டுமென்றும் அவற்றை ஆடிட் செய்யக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் - பொதுக்குழுக் கூட்டத்தில் அல்ல, பொதுக் கூட்டங்களில் பேசினார்!

இளமை முதல் காங்கிரசின் எதிரியாகவே வளர்ந்து விட்ட மதுரை முத்து அவர்கள், இங்கே வியாபாரம் நடக்க வில்லையென்பதற்காக இந்திரா காங்கிரசுக்குப் போகிறார் என்று அதே பொதுக்கூட்டத்தில் ஒரு அபாண்டத்தை அள்ளி வீசினார்!

ஆகஸ்டு வரையில் என்னைப் புகழ்ந்துரைத்து - என்னால்தான் அவர் கழகத்துக்கு ஈர்க்கப்பட்டதாகச் சொன்னதையெல்லாம் மறந்து, அக்டோபரில் என்னைக் குறித்துப் பொதுக்கூட்டங்களில் கேலி பேசத் தொடங்கினார்!

மத்திய அரசில் தனக்கிருந்த சங்கடங்களை - பயங்கர மிரட்டல்களைச் சமாளிப்பதற்காகக் கழகத்தைக் காட்டிக் கொடுக்கும் பணியில் மும்முரமாக இறங்கினார்! இல்லாததைச் சொன்னார்!

அந்த அக்டோபர் எட்டாம் தேதி அவர் உதிர்த்த கருத்துகளை யெல்லாம் அவரே ஒருமுறை படித்துப் பார்க்கட்டும்!

அவரது அமைச்சர்களின் சொத்துக் கணக்கு என்ன?

அந்த அமைச்சர்களின் உற்றார், உறவினர், அப்பா, அம்மா, மச்சான், மாமன் போன்ற சொந்தக்காரர்களின் பூர்வீகச் சொத்து என்ன? ஆட்சிக்கு எம்.ஜி.ஆர். வந்த பிறகு அவர்களுக்குப் பெருகிய சொத்து விபரம் என்ன? விளக்கம் என்ன?

அவைகளை விசாரித்தறிய எம்.ஜி.ஆர். எப்போது குழு அமைக்கப் போகிறார்?

அந்தக் குழுவின் முன்னால் சரியாக எதையும் நிரூபிக் காதவர்களை மக்கள் முன்னால் நிறுத்தித் தூக்கி எறியப்போகும் நாள், எந்நாள்?

அவரது கட்சியின் மாவட்ட, வட்ட, ஒன்றிய அமைப்பாளர்கள் - ரசிகர் மன்றத்தின் அனைத்துலக அமைப்புகளின் நிர்வாகிகள் - இவர்களின் சொத்துக் கணக்குகளை, இந்தப் பனிரெண்டு ஆண்டு காலத்தில் எம்.ஜி.ஆர். குழு அமைத்து ஆடிட் செய்ததாக வரலாறு உண்டா?

மாவட்டத்துக்கு ஒரு சினிமா தியேட்டர் கட்டியுள்ள மந்திரியை ஏன் இன்னும் தூக்கி எறியவில்லை?

வீட்டுவசதி வாரியத்தில் கொள்ளையடித்த மந்திரியை விசாரித்து இன்னும் ஏன் வீட்டுக்கு அனுப்பவில்லை?

உண்டியல்களை உடைத்துக் காடுகளை அழித்து சந்தனக் கட்டைகளைக் கொள்ளையிடும் அமைச்சருக்கு எப்போது எம்.ஜி.ஆர். ராஜ்யத்தில் தண்டனை தரப்பட இருக்கிறது?

கடற்கரையோர நிலமெல்லாம் வளைத்துப் போட்டுக்கொண்டு கோடிக்கணக்கான முதலீட்டில் தொழிற்சாலைகளை உருவாக்கியுள்ள குட்டிக் குபேர மந்திரியை எம்.ஜி.ஆர்., தட்டிக் கேட்பது எப்போது?

பினாமி பெயரில் பஸ் கம்பெனிகளை நடத்திக் கொண்டிருக்கும் மந்திரி, வெள்ளிப் பணத்தில் துள்ளி ஆடுகிறாரே, அவரை மக்கள் முன்னால் நிறுத்தி எம்.ஜி.ஆர்., தூக்கி எறிவது எப்போது?

மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வில் லட்சோப லட்சம் லஞ்சம் பெற்று மாளிகை கட்டும் மந்திரியின் கணக்கு ஆடிட் செய்யப்பட்டு விட்டதா, எம்.ஜி.ஆர். குழுவினரால்?

எம்.ஜி.ஆர். மற்றவர்களை விசாரித்து தூக்கி எறியக் குழு அமைப்பது பிறகு இருக்கட்டும் -

சாராய சாம்ராஜ்யத்தின் லஞ்சச் சக்கரவர்த்தியாக இவரே விளங்குகிறாரே! இவரை விசாரிப்பது யார்?

மக்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்! விளக்கம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்! விரைவில் அவர்களே தீர்ப்பும் அளிப்பார்கள்!

உடன்பிறப்பே! ஒன்றை மட்டும் மறந்து விடாதே!

அன்று எம்.ஜி.ஆர். அவர்கள் - தனது சுயநலத்திற்காகக் கட்சியின் கட்டுக்கோப்பைக் குலைத்திடத் திட்டமிட்டுச் சதி நடத்தினார்!

இல்லாததைச் சொன்னார்! பொல்லாத சொற்களைப் பொழிந்தார்!

இன்று அவரது கோட்டைக்குள்ளே குத்து வெட்டு நடக்கிறது!

ஆனால் இது, மத்திய அரசின் தூண்டுதலால் அல்ல!

அன்று 1972 அக்டோபரில் உதிர்த்த உபதேசங்கள் இன்று என்ன ஆயின? என்று எம்.ஜி.ஆரின் கோட்டைக்குள்ளேயே குரல் கிளம்பியுள்ளது!

கண்டன முழக்கங்கள்!
கறுப்புக் கொடிகள்!

அண்ணாவின் பெயரையும், பெரியாரின் பெயரையும் விளம்பரத்துக்குப் பயன்படுத்தி திராவிடர் இயக்கத்தை வேரோடு அழிக்க முனைந்துவிட்ட எம்.ஜி.ஆருக்கு எதிராக இன்று அவர்

கூடாரத்தில் எழுந்துள்ள எதிர்ப்பு - 1972 அக்டோபரில் எம்.ஜி.ஆர். வாரியிறைத்தப் புழுதிக்கு முற்றிலும் வேறுபட்டது!

அது புழுதிக் காற்று!
இது புயல் காற்று!

அன்புள்ள,

மு. க.

07-08-1984

1249. ஆகஸ்டு 25 - ஆயத்தமாகுக!

உடன்பிறப்பே,

மத்தியில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி! மாநிலத்திலோ அதற்கு எடுபிடித் திருப்பணியாற்றும் எம்.ஜி.ஆர். ஆட்சி!

நம் தலை மீது ஏறிக்கொண்டு நமது வரிப் பணத்தால் ஆடம்பர - ஊதாரிச் செலவுகளை அனுதினமும் நடத்திக் கொண்டிருக்கும் இந்த இரு ஆட்சிகளிலும் கண்ட பலன் ஒன்றுமில்லை என்றாலும், அப்பாடா என்று பெருமூச்சு விட்டுத் தொலைக்கலாம்!

முன்னறிவிப்புகள் - எச்சரிக்கைகள் பலமுறை வந்த பிறகும், நாற்பது உயிர்களுக்கு நமது தலைநகரத்து விமான நிலையத்தில் பாதுகாப்பு இல்லாமற் போய் விட்டதே, இதனை யாரிடம் சொல்லி அழுவது! எந்தவொரு அறிகுறியும் இல்லாமல் மின்னல் வேகத்தில் நடந்து விடுகிற நிகழ்ச்சிகள் உண்டு! மறுக்கவில்லை! ஆனால், வெடிக்கப் போகிற குண்டு உள்ள இரண்டு பெட்டிகள் இருக்கின்றன - உஷார்! எனச் செய்தி வந்த பிறகும், அந்தக் குண்டுகள் உள்ள பெட்டிகளைச் சோதிக்கக் கூடிய நவீனக் கருவிகள் எங்கு போயின? ஒருவேளை அந்த நுட்பமான சோதனைக் கருவிகள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வாங்கப்படவே இல்லையா? வாங்கியிருந்தால் அவை பயன்படுத்தப்பட்டு முன்கூட்டியே ஆபத்தைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லையா? இரண்டாவது குண்டு இல்லை என்று புனாவிலிருந்து வந்த நிபுணர்கள் சோதனைக் கருவிகள் மூலம் கண்டறிந்து சொன்னார்களாமே! அங்ஙனமாயின், முதல் குண்டு இருப்பதைக் கண்டுபிடிக்கச் சோதனைக் கருவிக்குப் பஞ்சம் ஏற்பட்டது ஏன்?

உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பில்லை என்பதற்கு இது ஒரு உதாரணமான நிகழ்ச்சி!

ஒவ்வொரு நாளும் எத்தனையோ சோக நிகழ்ச்சிகள்! பயங்கர நிகழ்ச்சிகள்!

முகமூடித் திருடர்களின் கை வரிசையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடிகிறதா இங்குள்ள ஆட்சியாளரால்!

எத்தனை வீடுகளில் கொள்ளை! கொலை! கழுத்து மணி அறுத்தல்!

இந்த ஆட்சியில் பாதுகாப்பற்ற நிலை, தொடர்கதையாகி விட்டதே!

ஆலயங்களில், ஆண்டவனின் சந்நிதானங்களில் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்ட அதிகாரிகளை மறந்துவிட முடியுமா?

அவர்களைக் கொன்றவர்கள் கூண்டிலே ஏற்றப்படாமல், கோட்டைத் தாழ்வாரங்களில் உலா நடத்திக் கொண்டிருப் பதைத்தான் இந்த அரசு மறைத்து விட முடியுமா?

எனவே, உயிருக்கும் உடைமைக்கும் இந்த ஆட்சியில் பாதுகாப்பில்லை என்பதை உணர்த்திடவும் - கண்டித்திடவும்,

காஷ்மீரில் ஜனநாயகத்தை இந்திரா காந்தி காயப்படுத்தியதை எதிர்க்கட்சிகள் அனைத்தும் கண்டித்திடும் நேரத்தில் - கரகோஷம் செய்து சபாஷ் முழக்கமிட்டு இந்திரா காங்கிரசுக்குச் சலாம் போடுவதுடன் நில்லாமல் - ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்து வெளிநடப்பு செய்த ஆந்திர, கர்நாடக, மேற்கு வங்க, திரிபுரா முதல்வர்கள் மீது கண்டனத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய எம்.ஜி.ஆர். அரசின் மாநில உரிமை விரோதப் போக்கை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திடவும் -

எட்டாவது நிதிக் கமிஷன் தமிழகத்திற்குச் செய்துள்ள துரோகத்தை எதிர்த்துக் குரல் கொடுக்க, முதுகிலே எலும்பின்றிக் கூனிக் குறுகிக் கிடக்கும் தமிழக முதலமைச்சரின் பயந்தாங்கொள்ளித்தனத்தை நாட்டுக்குப் பறை சாற்றிடவும் -

இந்துக்கள் - முஸ்லிம்கள் - கிறிஸ்துவர்கள் - சீக்கியர்கள் - ஒற்றுமையுடன் வாழும் பூங்காவாக இந்தப் பூமி இருந்திடல் வேண்டும் என்ற உணர்வுக்கு மாறாக, இடையிடையே நச்சரவுப் புற்றுக்களை உருவாக்கிக் குருதி வழிப் பொட்டலாக நாட்டை மாற்றிட முனையும் ஒரு சில விஷமிகளுக்கு இந்திய

நாட்டு குடிமக்களில் யாரும் துணை போகக்கூடாதென்றும் - குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் அந்தக் குள்ளநரிச் செயல் புரியும் கூட்டத்துக்குத் துளியளவும் இடம் தரலாகாதென்றும் தொடர்ந்து எடுத்தியம்புவதோடு - அத்தகையக் கலவர நிலைகளுக்கு வித்தூன்றும் முயற்சிக்கு மறைமுக ஆதரவு தரும் இந்திரா அரசையும், எம்.ஜி.ஆர். அரசையும் கண்டித்துக் குரல் எழுப்பிடவும்,

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தகுதிமிக்க ஒருவர் துணை ஜனாதிபதியாக வேண்டுமென்ற எதிர்க்கட்சிகளின் முயற்சியை முறியடித்த - இந்திரா காங்கிரசின் சுயவடிவத்தை ஊரறியச் செய்திடவும்,

உபரியாக அரிசி இருப்பதாகக் கூறிவிட்டு, உடனடியாக இருபது கிலோ அரிசி வழங்கிடத் தயங்குவதை எடுத்து விளக்கிடவும்,

ஒரு சில அத்தியாவசியப் பண்டங்களை - உதாரணமாக, புளி, மிளகாய், எண்ணெய் இவைகளையாவது நியாய விலைக் கடைகளில் கொடுத்திடுக என வலியுறுத்திடவும்,

இலவச மின்சாரம், விவசாயிக்கு வழங்குவது பிறகு இருக்கட்டும். இப்போது அவர்களது பழைய மின் கட்டணப் பாக்கிகளை ரத்து செய்து - பறிமுதல் செய்யப்பட்ட பம்ப் செட்டுகளைத் திரும்பத் தந்திடுக என வற்புறுத்தவும்,

நெல், கரும்பு போன்ற விளைபொருள்களுக்கு கட்டுப்படியான விலை நிர்ணயிக்காத மத்திய அரசின் போக்கையும் - அதனை நிர்ப்பந்திக்காத மாநில அரசின் மந்த நிலையையும் சுட்டிக்காட்டவும்,

பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தாமல் நடைபெறும் ஊழல் - பாலிடெக்னிக்குகளில் ஊழல் - தொழிலாளர் பட்டினி - மாணவர் மீது தாக்குதல் - வழக்கறிஞர்கள் மீது பழி வாங்கும் நடவடிக்கை - மாவட்டப் பிரிவினைகள் என்ற பெயரால் உருவாக்கப்பட்டுள்ள பீம்சிங் இது என்ன புதுக் குழப்பம்? என்ற கோமாளிக்கூத்துகள் - வங்கிக் கடன் என்ற பெயரால் இந்திய நாட்டுத் தேசிய வங்கிகளை இந்திரா காங்கிரஸ் தேர்தல் வங்கிகளாக மாற்றிக் கொண்டுள்ள ஜனநாயக விரோதச் செயல் - இன்னபிற அநியாயங்களை மக்கள் மன்றத்துக்குக் கொண்டு வர -

மதோன்மத்த ஆட்சியாளரை,
மமதை பிடித்த அரசினரை

ஒருமுகமாக எதிர்த்தொழிக்க மக்கள் சக்தியை ஜனநாயக ரீதியில் திரட்டி அணிவகுக்கும் நாள்தான் ஆகஸ்டு 25!

அன்றைய அறப்போர் மறியலுக்கான ஆயத்தங்களை அனைத்துக் கட்சி முற்போக்கு அணியினர் தொடங்கி விட்டனர்!

அந்த அணியில் அங்கம் வகிக்கும் நமது கழகப் பாசறைகள் அந்த அறப்போர் மறியலுக்குத் தயாராகட்டும்!

உன் போன்ற உடன்பிறப்புகள் சிறைச்சாலை விருந்தினை எண்ணி இப்போதே சிறகடித்துக் கிளம்பட்டும்!

அன்புள்ள,

மு. க.

08-08-1984

1250. முட்டாளே! நீ ஏன் தமிழனாகப் பிறந்தாய்?

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத்தில் இலங்கைத் தமிழர்கள் மீண்டும் இனப் படுகொலைக்கு ஆளாகிற கொடுமை குறித்துக் குரல்கள் எழுந்தபோது பதில் அளித்துப் பேசிய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்,

இலங்கையில் தமிழர்களைப் பாதிக்கக்கூடிய பல சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பது உண்மைதான் என்றாலும், இலங்கையில் உள்ள பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு எரிச்சல் உண்டாக்கக் கூடிய எதையும் நாம் இங்குச் செய்யவோ, சொல்லவோ கூடாது என்பதை உறுப்பினர்கள் உணர வேண்டும் என்று அறிவுரை கூறியிருக்கிறார்.

பதினைந்து ஓநாய்கள் சூழ்ந்துள்ள ஒரு பயங்கரநிலை! அந்தக் கொடிய மிருகங்களின் கூட்டத்துக்கு மத்தியில் பச்சிளங்குழந்தையுடன் ஒரு தாய் சிக்கிக் கொண்டிருக்கிறாள். ஓநாய்கள் அந்தத் தாயின் மீதும், அவள் பெற்றெடுத்த அந்தத் தளிர்கொடி மீதும் தாவிப் பாய்ந்து தங்கள் ரத்த தாகத்தைத் தணித்துக் கொள்ளப் போகின்றன!

இன்னும் ஓரிரு நொடிகள்தான்! தாயின் தங்க நிற மேனி தசைப்பொதியாக்கப் பட்டுக் கிழித்து நார்களாகப் பிய்த்தெறியப்படும்! குழந்தையின் குருதி ஓநாய்களால் உறிஞ்சப்படும்! பின்னர் ஓநாய்களின் குதியாட்டம்தான்! கொண்டாட்டக் கோலாகலந்தான்!

அம்மவோ! அந்த வெறியாட்டம் இதோ நடந்து விடப்போகிறது!

ஓநாய்கள் அந்தத் தாயை நெருங்கிவிட்டன!

அய்யோ! அவள் சந்தன உடல், சல்லடைக் கண்களாகப் போகின்றன! அந்த மழலையை அப்படியே உயிரோடு விழுங்குவதில் ஓநாய்களுக்குள் ஒரு போட்டியே நடைபெறப் போகிறது!

ஆம் - இதோ! எதிர்பார்த்தது நடந்தே விட்டது! ஓநாய்கள் அந்த அனாதைத் தாயின் மீதும் - அழகுருவான குழந்தை மீதும் பாய்ந்தே விட்டன!

இனி அடுத்து என்ன?

இதுவரையில் இந்தக் கொடிய காட்சியைச் சற்று தொலைவிலிருந்து கையில் துப்பாக்கியுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனை நோக்கி அந்தத் தாய் அலறுகிறாள்!

அய்யோ! ஓநாய்களைச் சுட்டு எங்களைக் காப்பாற்றேன்!

துப்பாக்கிக்காரன் சொல்கிறான், அம்மா! நீயும் குழந்தையும் சாகப்போவது தெரிகிறது! பாவம், கவலையாகத்தானிருக்கிறது! இருந்தாலும், இந்தக் கூட்டத்தில் சிறுபான்மையாக இருக்கிற உங்கள் இரண்டு பேருக்காகப் பெரும்பான்மையாக இருக்கிற பதினைந்து ஓநாய்களுக்கு எரிச்சலூட்டக் கூடிய எதையும் செய்யவோ சொல்லவோ என்னால் இயலாது! என்று!

உடன்பிறப்பே, அந்தத் துப்பாக்கிக்காரன் பதிலுக்கும் - பாராளுமன்றத்தில் நமது பிரதமர் அளித்த பதிலுக்கும் எந்த வேறுபாடும் இருப்பதாகத் தெரியவில்லையே!

பங்களாதேஷ் பிரச்சினை - பாலஸ்தீன பிரச்சினை - இவற்றில் அம்மையார் கொண்ட பரிவு! கேவலம் தமிழர்களின் பிரச்சினையில் ஏற்படுமா என்ன?

இலங்கை - இந்தியா நட்புறவு குறித்து இன்றைக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் எவ்வளவு அக்கறை கொண்டு பேசுகிறார் பார்த்தாயா?

அம்மையார் அவர்கள் பிரதமர் பதவியில் இல்லாதபோது 1979-ஆம் ஆண்டு எழுதிய ஒரு கடிதத்தில் என்ன குறிப்பிட்டிருந்தார் தெரியுமா?

இந்தியாவில் உள்ள ஜனதா அரசு இலங்கை அரசுடன் எப்படியாவது நட்புறவுடன் இருக்க விரும்புகிறது. அதனால்

இங்குள்ள ஜனதா அரசு, இலங்கையில் தொல்லைப்படும் தமிழர்களுக்கானப் பிரச்சினையைக் கவனிக்குமா என்பது எனக்குச் சந்தேகமே!

இது அன்றைய இந்திரா அம்மையார் ஜனதா ஆட்சியைக் குறைகூறி, இலங்கைத் தமிழர்களுக்காக வடித்த கண்ணீர்க் கடிதம்!

1976 - பிப்ரவரி 15-ஆம் நாள் இந்திரா அம்மையார், பிரதமராக பவனி வந்து சென்னைக் கடற்கரையில் உரையாற்றியது உனக்கு நினைவிருக்கிறதா?

அந்தக் கூட்டத்தில் தி.மு.க. ஆட்சியைக் கலைத்ததற்கான காரணங்களை அடுக்கிக் காட்டினார். அந்தக் காரணங்களில் ஒன்று, இலங்கையுடன் இந்தியாவுக்குள்ள நட்புறவைத் தமிழகத்தில் இருந்த முதலமைச்சர் கருணாநிதி, அங்குள்ள தமிழர் பிரச்சினையில் தலையிட்டுக் கெடுக்க முனைந்தார் என்பதாகும்!

1976-இல் ஈழத் தமிழர்களுக்காக இலங்கை இந்திய நட்புறவைக் குலைக்க முயன்றதாகக் குற்றச்சாட்டு என் மீது!

1979-இல் இலங்கையுடன் கொண்ட தவறான நட்புக்காக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கவனம் செலுத்த முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு மத்திய ஜனதா ஆட்சி மீது!

இன்று இலங்கைக்கும், இந்தியாவுக்குமுள்ள நட்புறவை எள்முனையளவும் இழக்க மனமின்றி அதே இந்திரா அம்மையாரின் அறிவுரைகள்! அறவுரைகள்!

அமெரிக்காவின் கைப்பாவையாக ஆடுகிறது இலங்கை!

இஸ்ரேலின் உளவு நிறுவன உதவியைப் பெறுகிறது இலங்கை!

இந்தச் செயல்களால் இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல, எதிர்காலத்தில் இந்தியாவுக்கும் ஆபத்து விளையக்கூடும் என்பதைக் கூடவா எண்ணிப் பார்த்திட மறுப்பது?

தமிழா! நீ தமிழனாகப் பிறந்துவிட்ட காரணத்தினாலேயே - நீ எங்கே அடிபட்டாலும், அழிவுற்றாலும், உன்னை நோக்கி இதோபதேசங்கள் மட்டுமே வரும்!

முட்டாளே! உன்னை யார் தமிழனாகப் பிறக்கச் சொன்னது?

சிறுபான்மையாக உள்ள உன்னைக் காப்பாற்ற பெரும்பான்மையான ஓநாய்களின் எரிச்சலுக்கு ஆளாக எங்கள் பிரதமர் தயாராக இல்லை!

நீ எக்கேடாவது கெட்டுத் தொலை! செத்துப் போ! அழிந்து போ! அதுதான் உன் தலைவிதியப்பா தலைவிதி!

அன்புள்ள,

மு. க.

10-08-1984

1251. அன்று தண்டலம்! இன்று திருத்தணி!

உடன்பிறப்பே,

பசி பட்டினியால், வறுமைக் கொடுமையால் தனது ஆட்சியில் யாரையும் சாகவிட மாட்டேன் என்றும், அவர்களைப் பற்றியெல்லாம் விபரமறிந்து அவர்களுக்கு நூறு ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படுமென்றும் தேர்தல் நேரத்தில் எம்.ஜி.ஆர். அறிவித்தது மட்டுமல்ல, முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகும்கூட சட்டப் பேரவையில் தெரிவிக்கப்பட்டு, ஆளும்கட்சி உறுப்பினர்கள் அந்த அறிவிப்புக்குத் தேனாபிஷேகம் செய்து தெண்டனிட்டு பூஜை நடத்திப் புகழோ புகழ் என்று புகழ்ந்தார்கள்!

எத்தனையோ அறிவிப்புகள், அலைகடல் நுரை, கரையிலே மோதிக் கரைந்து விடுவது போலத்தான் நாள்தோறும் ஆகிக் கொண்டிருக்கின்றன!

ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு பொங்கல் விழாவில் முதலமைச்சர் கலந்து கொண்ட ஒரு ஆடம்பரமான நிகழ்ச்சி! ஏராள விளம்பரம்! எக்கச்சக்கமான வரவேற்பு வளைவுகள்! ஏடுகளில் எல்லாம் முதலமைச்சர் அவர்களின் விதவிதமான கோணங்களில் படங்கள்! இத்யாதி! இத்யாதி!

படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாதிருக்கும் பட்டதாரி மாணவர்களுக்குக் காய்கறி வண்டிகள் வழங்கும் விழா அது!

நான்கு சக்கர வண்டிகள்! ஐந்து வண்டிகளைப் பட்டதாரிகளுக்கு முதலமைச்சர் வழங்கினார்!

இப்போது ஐந்து வண்டிகள் வழங்கப்படுகின்றன! இன்னும் சில மாதங்களில் சென்னையில் ஒரு டிவிஷனுக்கு ஒரு வண்டி வீதம் நூற்று ஐம்பது வண்டிகள் வழங்கப்படும். சைக்கிள் போன்ற இந்த வண்டிகளில் காய்கறிகளைக் கொண்டு சென்று வீடுகளில் பட்டதாரிகள் விற்கலாம்! தாய்க்குலம் இனிமேல்

மார்க்கெட்டுகளுக்குப்போய் காய்கறிவாங்க வேண்டியதில்லை! வீட்டிலிருந்தபடியே மலிவாகக் காய்கறிகளை வாங்கிச் சமைக்கலாம்! இந்த சைக்கிள்களை உற்பத்தி செய்யும்போது, கிராமத் தொழில்களும் வளரும். அதாவது இந்த வண்டிகளுக்குத் தேவையான ஆணிகள், நட்டுகள் போன்ற உபகரணங்களைக் கிராமப்புறத்தில் செய்யுமாறு ஆர்டர் கொடுக்கப் போகிறோம். எனவே, பட்டணத்தில் பட்டதாரிகளுக்கு வேலை - சைக்கிள் வண்டி செய்பவர்களுக்கு வேலை - கிராமங்களில் சிறு தொழில் வளர்ச்சி!

அந்த விழாவில் முதலமைச்சர் இப்படிப் பேசியதை ஏடுகள் வானளாவப் புகழ்ந்து வரிந்து கட்டிக் கொண்டு பிரசுரம் செய்து மகிழ்ந்தன!

ஐந்து வண்டி, நூற்று ஐம்பது வண்டிகள் ஆகும்! தாய்க்குலம் வீட்டிலிருந்தே மலிவான விலையில் காய்கறி வாங்கும்! 150 டிவிஷன்களிலும் பட்டதாரி மாணவர்கள், தங்களுக்கு வேலை கிடைத்த உற்சாகத்தில் எம்.ஜி.ஆரை வாழ்த்திப் பாடிக்கொண்டே காய்கறி வண்டிகளை வேகமாக மிதித்து வீடுவீடாகச் சென்று வியாபாரம் நடத்துவர்!

இப்படியெல்லாம் கண்ட கனவு, சில நாட்களிலேயே சினிமாக் கனவை விட விரைவாக மறைந்து போய் விட்டது! காரணம், முதலமைச்சர் தொடங்கி வைத்த விழாவில் அளிக்கப்பட்ட அந்த ஐந்து சைக்கிள் வண்டிகள் போன இடமே தெரியவில்லை!

இப்படியொரு வேலை வாய்ப்புக்கான இமாலயத் திட்டம், சிறுபிள்ளை கட்டிய மணல்வீட்டில் மழை பொழிந்தது போல வெற்றிகரமாக ? இருந்த இடம் தெரியாமல் போயிற்று!

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை! வேலை இல்லாத நாட்களில் வீடு தேடி ஒரு ரூபாய் ஓடி வரும்!

பசியினால் ஒருவர் செத்ததாகச் செய்தி வந்தால் அடுத்த நிமிடம் ஆட்சியில் இருக்க மாட்டேன் என்று சபதம்!

சபதமாவது மண்ணாங்கட்டியாவது! சத்தியத் தாயின் மீது சத்தியம் செய்யவில்லையா, சாராயக் கடைகளைத் திறக்க மாட்டேன் என்று! அப்படித்தான் பசியால் யாரையும் சாகவிடமாட்டேன் என்ற சபதமும் - இப்போது சப்தமின்றிக் கிடக்கிறது!

இதோ ஒரு செய்தி! முரசொலியிலோ, தினகரனிலோ, எதிரொலியிலோ வெளி வந்ததல்ல! இந்த ஏடுகளில் வெளி வந்திருந்தால் எம்.ஜி.ஆரின் அரசின் மீது வீண்பழி சுமத்துவதாகக் கட்டிவிட்ட கற்பனையெனக் கதைப்பார்கள்!

ஆகஸ்டு 10 வெள்ளியன்று சென்னைப் பதிப்பு தினமணியில் முதல் பக்கத்தில் எடுப்பாக வெளியிடப்பட்டுள்ள இதயத்தைப் பிழிந்தெடுக்கும் செய்தி!

வறுமை காரணமாக ஒரே குடும்பத்தில் நாலு பேர் விஷம் குடித்துச் சாவு!

இது தினமணி தந்துள்ள தலைப்புச் செய்தி! முழுச் செய்தியும் இதோ, படித்துப் பார்!

திருத்தணியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டனர்.

ரத்னசபாபதி வயது 40, ரூபவதி வயது 30, சீதாலட்சுமி வயது 16, சங்கரி வயது 13, உமா மகேஸ்வரி வயது 7, ராஜகுமாரி வயது 5 ஆகியோர் திருத்தணியில் ஒரு குடிலில் தங்கியதாகவும், கடந்த புதனன்று பஞ்சாமிர்தத்தில் விஷம் கலந்து சாப்பிட்டதாகவும் கூறப்படுகிறது.

ரத்னசபாபதியும் அவரது மனைவி ரூபவதியும், உமாமகேஸ்வரி மற்றும் ராஜகுமாரி ஆகிய மகள்களும் இறந்தனர். ரத்னசபாபதியின் வேறு 2 மகள்களான சீதாலட்சுமி மற்றும் சங்கரியும் திருத்தணி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அக்குடும்பத்தினரின் சோக முடிவுக்கு வறுமையே காரணம் என்று போலீசார் கூறினர்.

ரத்ன சபாபதி முன்னதாகப் பல்லவன் போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்தவர் என்றும், கடந்த வருடம் அவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்றும் போலீசார் கூறினர்.

ரத்னசபாபதி சென்னை முத்தியாலுபேட்டையை சேர்ந்தவர் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

பத்திரிகையின் கணிப்பு மட்டுமல்ல, போலீசாரே கூறியிருக்கின்றனர் - அந்தக் குடும்பத்தின் சோக முடிவுக்கு வறுமையே காரணம் என்று!

பசி - பட்டினி - வறுமை - அதனால் நஞ்சுண்டு மாண்டனர். நாடோடி மன்னன் படத்தில் அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்துவதாகக் கூறும் வள்ளல் ஆட்சியிலே!

உடன்பிறப்பே, உனக்கு நினைவிருக்கிறதா? அன்று காங்கிரஸ் ஆட்சியிலே வறுமைத் தீயை அணைக்க முடியாமல் வாடிய புண்யகோடியின் குடும்பம், தண்டலம் கிணற்றிலே விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டு அமைதி அடைந்ததே - அந்த நிகழ்ச்சியல்லவா இப்போது எம்.ஜி.ஆர். ஆட்சியிலே திருத்தணியில் நடைபெற்றிருக்கிறது!

பஞ்சாமிர்தம் வாங்கியிருக்கிறார்கள், பக்தகோடிகளாக நின்று! பின்னர் அதில் விஷத்தைக் கலந்து நஞ்சாமிர்தமாக்கி அருந்தியிருக்கிறார்கள்!

பஞ்சாமிர்தமென நம்பித்தான் தமிழகத்துப் பாமரர்கள் எம்.ஜி.ஆர். ஆட்சியை அமைத்திடப் பாய்ந்தோடி வந்தனர்!

அது நஞ்சாமிர்தமெனும் உண்மை நாள் ஆக ஆகத்தானே நாட்டினர்க்குப் புரிகிறது!

அன்று தண்டலம்!
இன்று திருத்தணி!

அன்புள்ள,

மு. க.

11-08-1984

1252. திருத்தப் போகிறார்களா? தீட்டப் போகிறார்களா?

உடன்பிறப்பே,

அரசியல் சாசனத்தின் 356-வது பிரிவைத் திருத்துவதென மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அந்தத் திருத்தம் இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படுமாம்!

ஏனெனில், இதுதான் நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டத் தொடராக இருக்குமென்று அரசியல் ஆரூடங்கள் கணிக்கப்படுகின்றன!

356-வது பிரிவு என்பது புராணக் கதைகளில் வரும் எமதர்மனின் கையில் உள்ள பாசக் கயிறு போன்றது என்பதை உனக்கு விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை!

பாசக் கயிறு - அழகான பெயர்தான்! பாசம் - நேசம் - என்றெல்லாம் கூறுகிற போது எவ்வளவு இனிமையாக இருக்கிறது!

ஆனால் இந்தப் பாசக் கயிறு, நல்ல பாம்பு என்று கூறுகிறோமல்லவா - அதைப் போன்ற கயிறு!

மத்தியில் உள்ளவர்களின் இஷ்டத்துக்கு மாநில ஆட்சிகளைக் கலைக்க அரசியல் சாசனம் வழங்கியுள்ள எந்தப் பிரிவும் இருக்கக்கூடாது. அவை தூக்கி எறியப்பட வேண்டுமென்பது தி.மு.கழகம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிற கருத்து!

இப்போது அந்த அபாயகரமான 356-வது ஷரத்தைத் திருத்தப் போகிறார்கள் என்ற தலைப்புச் செய்தியை ஏடுகளில் படித்தவுடன் மின்னல் போல ஒரு மகிழ்ச்சி உனக்கு ஏற்பட்டதல்லவா?

356-ஐ திருத்தப் போகிறார்கள் என்றதும், கையிலிருக்கும் கத்தியைத் தூக்கி எறியப் போகிறார்கள் என எண்ணினால் ஏமாற்றம்தான் மிஞ்சும்!

கத்தியை இன்னும் கூராகத் தீட்டி கழுத்துகளை அறுக்கத் தயாராகப் போகிறார்கள்!

அதற்கு ஒரு நொண்டிச் சாக்காகப் பஞ்சாப் மாநிலப் பிரச்சினை அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

ஒரு மாநில ஆட்சியைக் கலைத்தால் அந்த மாநிலத்தில் ஆறு மாத காலம்தான் ஜனாதிபதி ஆட்சி இருக்க முடியும் - தேவைப்பட்டால் மேலும் ஆறு மாத காலம் நீட்டித்துக் கொள்ளலாம் என இப்போது அரசியல் சாசனத்தில் வரிவகுத்து விதிமுறையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பஞ்சாப்பில் ஆட்சி கலைக்கப்பட்டு, வருகிற அக்டோபர்த் திங்களுடன் ஒரு ஆண்டு முடியப் போகிறது!

இந்த நிலையில் ஒரு ஆண்டுக்கு மேலும் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீடிப்பது என்றால், நாடு முழுதும் நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்திருக்க வேண்டும். அல்லது அந்தக் குறிப்பிட்ட ஒரு மாநிலத்தில் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியிலோ நெருக்கடி நிலைப் பிரகடனம் செய்யப்பட்டிருக்க வேண்டும். இவையிரண்டும் இல்லாவிடில், அந்தக் குறிப்பிட்ட மாநிலத்தில் உள்ள கலவர நிலைகளையோ அல்லது பிரச்சினைகளையோ காரணம் காட்டித் தேர்தல் நடத்த வேண்டாமென்றும், குடியரசுத் தலைவர் ஆட்சி நீடிக்கலாமென்றும் தேர்தல் கமிஷன் சிபாரிசு செய்து அந்தப் பரிந்துரையைப் பாராளுமன்றம் ஏற்றிட வேண்டும்.

பஞ்சாப் நிலவரம் குறித்து தேர்தல் கமிஷன் ஆராய்ந்து, தனது பரிந்துரையைச் செய்வதற்கு இடமிருந்தபோதிலும் - அதனை விவாதித்து ஏற்றுக் கொள்ளப் பாராளுமன்றத்திற்கு உரிமை இருந்தபோதிலும் - அதைக் கணக்கிலேயே எடுத்துக் கொள்ளாமல் 356-வது ஷரத்தையே திருத்தி, குடியரசுத் தலைவர் ஆட்சியை மேலும் நீட்டித்துக் கொள்ள மத்திய அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது!

இவ்வாறு அரசியல் சாசனப் பிரிவே திருத்தப்படும்போது, அது பஞ்சாப் மாநிலத்துக்கு மட்டுமல்லாமல் - எதிர்காலத்தில் எல்லா மாநில விவகாரத்திலும் தேர்தல் கதவுகளை அடைத்துப்போட்டு ஜனநாயகத்தைப் புழுக்கத்தில் தள்ளி மூச்சடைத்துப் போகச் செய்ய டெல்லி ஆதிக்கத்திற்குத் துணைபுரியுமல்லவா - அதனால்தான்

அரசியல் சாசனத்தையே தங்களுக்குச் சாதகமாகக் கூர்தீட்டிக் கொள்ள முடிவு செய்து விட்டார்கள்.

356-வது பிரிவில் - குடியரசுத் தலைவர் ஆட்சியை மேலும் நீட்டிக்கும் வகையில் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றிக் கொண்டு அதனை முதலில் பஞ்சாபில் நடைமுறைப் படுத்துவார்கள்!

கேட்டால், அங்குக் காங்கிரஸ் ஆட்சியைக் கலைத்துத் தானே ஜனாதிபதி ஆட்சி கொண்டு வந்தோம். அதை நீட்டிக்கிறோம் என்பார்கள்!

ஆம், தீட்டப்பட்ட கத்தியால் முதலில் மாம்பழத்தை அறுப்பார்கள்!

அடுத்து - எதிர்க்கட்சி அரசு நடக்கும் மாநிலங்களின் மார்பில் குத்துவார்கள்!

மத்தியில் இருப்பவர்களின் இந்த ஆதிக்க மனப்போக்கு, நமது மாநில சுயாட்சி முழக்கத்தை மேலும் நியாயப்படுத்துகிறது என்பதையும் - அந்த முழக்கத்தின் வெற்றிக்காக முழு மூச்சுடன் பாடுபடத் தயாராக வேண்டுமென்பதையும் மீண்டும் ஒருமுறை உனக்கும், நாட்டுக்கும் சுட்டிக்காட்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

12-08-1984

1253. குறிபார்க்கிறார்கள் - எச்சரிக்கையாக இரு!

உடன்பிறப்பே,

ஆடுகளை, மான்களை, ஆவினங்களைக் கொன்று தின்னும் வேங்கைப் புலி, ரத்தம் சொட்டும் நாக்குடன் வேதாந்தம் பேசிய காட்சியைக் கண்டிருக்கிறாயா?

பிணம் தின்னும் கழுகு, பித்தா பிறைசூடி பெம்மானே எனப் பாடிக்கொண்டு, திருநீற்றுப் பூச்சுடன் நின்றவாறு, புலால் உண்ணல் தீது என உபதேசித்த கதையைக் கேள்விப் பட்டிருக்கிறாயா?

இளங்குழந்தைகளை உயிரோடு விழுங்கி வயிற்றைப் புடைக்க வைத்துக்கொண்டு மண்மீது புரளும் மலைப்பாம்பு, மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் எனும் குறளுக்குப் பதவுரை கூறிய நிகழ்ச்சி பற்றிச் சொல்லக் கேட்டிருக்கிறாயா?

முடியாது! கண்டிருக்கவும் மாட்டாய் - கேள்விப்பட்டிருக்கவும் மாட்டாய்!

ஆனால் நான் குறிப்பிட்ட மூன்று அதிசயங்களையும் வெல்லுகின்ற பெரும் அதிசயம் ஒன்று, சென்னை சத்தியா ஸ்டூடியோவில் நடைபெற்றிருக்கிறது!

தி.மு.க.வுக்கு ஓட்டு முறையில் நம்பிக்கையில்லையென்றும், வேட்டு முறையில்தான் நம்பிக்கையென்றும், அதனால்தான் அ.தி.மு.க. செயல்வீரர்களை ஆங்காங்குப் படுகொலை செய்வதின் மூலமும், முதலமைச்சர் உள்ளிட்ட கழக முன்னணியினரைக் கொலை மிரட்டல் செய்யும் சூழ்நிலையை உருவாக்கியும் வருகிறது என்றும் சத்தியா ஸ்டூடியோவில் எம்.ஜி.ஆர். தலைமையில் கூடிய அ.இ.அ.தி.மு.க. அமைச்சர்களும், சட்டமன்ற - நாடாளுமன்ற

உறுப்பினர்களும் ஒரு கண்டனத் தீர்மானத்தை உருவாக்கி நிறைவேற்றியிருக்கிறார்கள்.

இந்தத் தீர்மானத்தைப் படித்தபோதுதான் - முதலில் குறிப்பிட்ட, கொடும்புலி - கோரக்கழுகு - மலைப்பாம்பு ஆகியவற்றின் அதிசய உபதேசங்கள் நினைவுக்கு வந்தன.

இதோ இங்கிருக்கிற இந்தக் கூட்டத்துடன் கோபாலபுரம் செல்வேன். அங்கு சாட்சி சொல்லக்கூட யாரும் இருக்கமாட்டார்கள். கருணாநிதியைக் குடும்பத்தோடு அழிப்பேன்.

இப்படியொருகாலத்தில் வெறி பிடித்து முழக்கமிட்டவர் யார் என்பது அதற்குள் மறந்தா போய் விட்டது?

புரட்சித் தலைவர் ஆணையிட்டால், கருணாநிதியின் தலையை வெட்டிக்கொண்டு வந்து அவரது காலடியில் வைப்பேன்.

என்று ஒருவர் பேசி, அதற்கு அந்த மேடையில் அமர்ந்தவாறு சபாஷ் போட்டவர் யார் என்பது இன்னமும் நினைவில் நிற்கிற செய்திதானே!

மதுரைப் பாலகன் இளஞ்செழியன் திருவில்லிபுத்தூரில் பேசி விட்டுத் திரும்பும்போது, காரை மறித்துக் கனத்த கல்கொண்டு மண்டையைப் பிளந்து கல்லறைக்கு அனுப்பி வைத்த கனம் உறுப்பினர் இப்போது யாருக்கு வலதுகரமாகத் திகழ்கிறார் என்பது அந்த வட்டாரமே அறிந்த உண்மை ஆயிற்றே!

அதே திருவில்லிபுத்தூரில் வெற்றிச்செல்வன் என்ற கழகக் காளையைக் கழகம் அமைத்த அண்ணா சிலைக்கு மாலை போடச் சென்ற காரணத்துக்காக வெட்டிக் குவித்து, முதுகு எலும்பை நொறுக்கி, உயிர் நரம்பை அறுத்து அவன் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் அளித்த மரண வாக்குமூலத்தில் தன்னைத் தாக்கிடத் தூண்டிய பேர்வழியைப் பெயர் குறிப்பிட்டுச் சொல்லியும்கூட - அந்தக் கொலைகாரனைத் தப்பவிட்டதுமன்றி, அவனிடம் கூடிக் குலவித் தோளில் கை போட்டு மகிழ்ந்து பாராட்டியது யார்? யார்? யார்?

காண்ட்ராக்டர் புட்லூர் தண்டபாணியைக் கொலை செய்து குளத்தில் பிணமாக மிதக்க விட்டது யார் என்பதை - கொல்லப்பட்ட தண்டபாணி எழுதி வைத்திருந்த கடிதங்கள் அடையாளம் காட்டினவே! அந்தக் கொலைச் செயலில் ஈடுபட்டோர் மீது -

துரும்பு கூடப் படாமல் பார்த்துக் கொண்ட துரைத்தனமாயிற்றே இது!

மதுராந்தகம் ஞானசௌந்தரிக்குக் கருவையும் கொடுத்து, அவள் உருவையும் சிதைத்துக் கொன்று எம்.எல்.ஏ. அலுவலகத்திலேயே தூக்குமாட்டிக் கொண்டு செத்தாள் என்று கதை கட்டினரே! அந்தக் கயவர்கள் உலவும் இடம் எது?

உண்டியலை உடைத்துக் கொள்ளையா? நீங்கள் உருப்படுவீர்களா? அட முருகா! என அலறிய அதிகாரி சுப்பிரமணியப் பிள்ளையை ஆலய வளாகத்திலேயே கொன்று குவித்த கொடுமையை மறைக்க முயன்று - அதனை நீதிபதி பால் தடுத்து நிறுத்தி, நடந்தது கொலைதான் என்றும், நடத்தியவர்கள் இவர்களாகத்தானிருக்க வேண்டுமென்றும் குறிப்பாக உணர்த்திய பிறகும் - ஆலயக் கொலைகாரர்கள் ஆனந்தமாய்க் கூத்தடிக்கும் சல்லாப மண்டபமன்றோ இன்றைய ஆளுங்கட்சிக் கூடாரம்!

திருவரங்கத்துக் கோயில் அதிகாரி வெங்கடாசலத்தின் கொலையை மறைத்த விவகாரத்தில் மந்திரிக்கும் தொடர்பு உண்டு என ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவரே அறிக்கை கொடுத்தாரே! அந்த அறிக்கையைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்த கோலேந்திகள் இருக்குமிடம் எது? எது? எது?

வரதட்சணைக் கொடுமையால் தீயிட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கப்பட்டாள் திண்டுக்கல் மாலா! அந்த விபரம் ஆதாரக் கடிதங்களுடன் சட்டமன்றத்தில் தரப்பட்டதே! அந்த இளமங்கையை நெருப்பில் கருக்கியவர்கள் இப்போது இருக்குமிடம் எது?

நெல்லை மாவட்டத்தில் உடன்குடி ஆப்ரகாமைக் கொலை செய்த சண்டாளர்களின் பாதுகாப்புக் குகையாக விளங்குவது எது?

எலும்படி கிராமக் கழகச் செயலாளர் சுயம்புவின் உயிரைக் குடித்த உன்மத்தர்கள் உலவிக் கொண்டிருக்கும் பூங்கா எது?

உடன்பிறப்பே! கொலை, கொள்ளை, போலீஸ் நிலையங்களைத் தாக்குதல், அதிகாரிகளை மிரட்டிக் கைதிகளைப் பலாத்காரமாக விடுவித்தல், கலெக்டர் அலுவலகங்களில் நுழைந்து இழிமொழி பேசுதல், அலுவலர்களை இழுத்துப் போட்டு அடித்தல், எதிர்க்கட்சிக் கூட்டங்களில் கலவரம் செய்தல் - இத்தனைக்கும்

மொத்தக் குத்தகைக்காரர்களாக விளங்கும் அ.இ.அ.தி.மு.க.வினர், நமது கழகம் வன்முறையைத் தூண்டுகிறது எனவும், கொலை முயற்சிகள், மிரட்டல்களில் ஈடுபடுகிறது எனவும் திட்டமிட்டே பொய் கூறி ஒரு தீர்மானத்தை வேண்டுமென்றே நிறைவேற்றி வெளியிட்டிருக்கிறார்கள்.

தமிழக அரசியலில் அண்ணா நகர், மயிலாடுதுறை இடைத்தேர்தல் முடிவுகள் ஒரு மாபெரும் திருப்புமுனையாக அமைந்துவிட்டது கண்ட எம்.ஜி.ஆரின் திருக்கூட்டம், இப்படித் திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது! அதற்குச் சரியான எடுத்துக்காட்டுத்தான் அந்தத் தீர்மான வாசகம்!

அரசியல் கருத்து வேறுபாடுகளை வன்முறை நடவடிக்கைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள முனைபவர் யாராயிருப்பினும் அவர்களது செயலைத் தி.மு.கழகம் என்றுமே ஏற்றுக் கொண்டதுமில்லை - ஊக்குவிப்பதுமில்லை என்பதைத் தமிழக மக்கள் தெளிவாக உணர்ந்தே இருக்கிறார்கள்.

ஆனால், எதிர்காலத் தேர்தல் வெற்றியில் சந்தேகம் வந்து திகைத்து நிற்கும் எம்.ஜி.ஆர்., இதுபோன்ற பழிகளைப் போட்டுத் தி.மு.க.வைத் தீர்த்துக் கட்டலாமா எனத் திட்டம் தீட்டுகிறார் எனப் புரிகிறது!

மாநில அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது.

என்பதாகக் குற்றப் புலனாய்வுத்துறை போலீஸ் டைரக்டர் ஜெனரல் திரு.மோகன்தாஸ் அவர்கள், சனிக்கிழமையன்று கூறியிருப்பதாக ஏடுகளில் வந்துள்ள செய்தி, சத்தியா ஸ்டூடியோவில் நிறைவேற்றப்பட்டுள்ள தி.மு.க. குறித்த கண்டனத் தீர்மானத்தை ஒட்டியதேயாகும்!

முதலமைச்சருக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்படுவதிலோ - அவர் உயிர் காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலோ - கருத்து மாறுபாடு கொண்ட கயவனல்ல நான்!

பொதுவாக நாட்டில், சட்டம் - ஒழுங்கு - அமைதி கெட்டு வருகிற சூழ்நிலையைச் சுட்டிக் காட்டி எதிர்க்கட்சிகள் குறைபட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் - தி.மு.க. மீது வேண்டுமென்றே ஒரு பெரும் பழியைச் சுமத்தி - அந்தப் பழிதூற்றல் பிரச்சாரத்

திரைமறைவில் இருந்து கொண்டே, தி.மு.க செயல்வீரர்களை, முன்னோடிகளை, முன்னணித் தலைவர்களை ஒழித்துக் கட்டும் திட்டம் ஒளிந்து கிடக்கிறதோ என சந்தேகப்பட வேண்டியுள்ளது!

எனவே, அருமை உடன்பிறப்பே! எதற்கும் நீ எச்சரிக்கையாக இரு! நாலு நண்பர்கள் துணையுடனேயே எங்கும் போய் வா! கூட்டங்களில் உரையாற்ற வருகிற உடன்பிறப்புகளைப் பாதுகாப்பாகவும், தக்க துணையுடனும் பார்த்துக் கொள்!

அ.தி.மு.க. தீர்மான வாசகத்தையும் - போலீஸ் அதிகாரியின் வாசகத்தையும் உற்றுக் கவனித்தால் நம் மீது வன்முறை வெறியாட்டங்களை மேலும் மேலும் தொடர்ந்து வேகப்படுத்தவும் - அதே நேரத்தில் நம் மீதே பொய் வழக்குகளைப் போடவும் ஆட்சியாளர்கள் தயாராகிறார்கள் என்றுதான் திட்டவட்டமாகத் தெரிகிறது!

உடன்பிறப்பே, உன் உயிரும், உன் போன்ற என் உடன் பிறப்புகளின் உயிரும் பாதுகாக்கப்பட வேண்டிய எதிர்காலத் தமிழகத்தின் விலைமதிப்பற்ற சொத்துகள்! எனவே, எச்சரிக்கை! எச்சரிக்கை! வஞ்சகவலை விரிக்கப்படுகிறது! சூழ்ச்சிக் கண்ணிகள் வைக்கப்படுகின்றன! சிக்கிக் கொள்ளாதே!

இதோ எனக்குக் கூட ஆகஸ்டு 10-ஆம் தேதி கைக்குக் கிடைத்த அஞ்சலட்டை ஒன்று! ஆம், என்னை அச்சுறுத்தும் அட்டை!

இதனை வெளிப்படுத்த வேண்டாமென்றுதான் முதலில் எண்ணி இருந்தேன். ஆனால் சத்யா ஸ்டூடியோ தீர்மானம் வெளிவந்த பிறகு இதனை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதால் இதோ, இதனை வெளியிடுகிறேன்!

மிஸ்டர் கருணாநிதி அவர்களே! முஸ்லீம்களுக்கு ஆதரவாகப் பேசுவதை நிறுத்தாவிட்டால் 11-8-84 அன்று டைம்பாம் வைத்துக் கொல்லப்படுவாய்.

- இந்து முன்னணி

என்பதாக அதில் எச்சரிக்கப்பட்டிருந்தது! ஆனால் நான் அதே 11-ஆம் தேதிதான் மயிலாப்பூர் தொகுதியில் பதினெட்டு கொடியேற்று விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்! ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்தேன்!

நான் முஸ்லீம்களுக்கு ஆதரவாகப் பேசுவதாக எழுதி - அல்லது பிரச்சாரம் செய்து - முஸ்லீம் அல்லாதவர்களை எனக்கும், கழகத்துக்கும் எதிராகத் திருப்ப முனைகிறது ஒரு கூட்டம்!

முஸ்லீம்களும் - கிறிஸ்துவர்களும் - இந்து சமுதாயத்தினரும் - ஒற்றுமையாக இருக்க வேண்டும் - மதக் கலவரங்கள் தோன்றிட யாரும் வித்திடக்கூடாது - அப்படி வித்திடுவோர் விஷமிகள் - என்பதுதான் கழகத்தின் கருத்து! அதுவே எனது கருத்து!

இதைத்தான் நான் தொடர்ந்து எழுதியும், பேசியும் வருகிறேன்!

இதற்காக என்னைக் கொல்ல டைம் பாம் வைப்பார்களாம்!

இந்து முன்னணி என இறுதியில் எழுதப்பட்டிருந்தாலும் - அவர்கள் பெயரால் வேறு யாரும் எழுதியிருக்கவும் கூடுமல்லவா?

தி.மு.க. மீது பயங்கரமான பழி சுமத்தி சத்யா ஸ்டூடியோவில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள்!

போலீஸ் அதிகாரி மோகன்தாஸ் அறிக்கையும் அதனையொட்டி வெளி வருகிறது!

எனக்கு இப்படியொரு கொலை மிரட்டல் கடிதமும் வருகிறது!

அனைத்தையும் இணைத்துப் பார்த்தால் - பரவாயில்லை, என்னை விடு! அறுபது ஆகிவிட்டது! ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான், ஆனது ஆகட்டுமே - என்ற பழைய பாவலர் பாட்டை மறக்காதவன் நான்!

உடன்பிறப்பே, நீதான் எதிர்காலத் தமிழகத்தின் நம்பிக்கையொளி எனக்கு!

குறி பார்க்கிறார்கள் உன்னையும், உன்னால் கட்டிக் காக்கப்படும் கழகத்தையும்!

எச்சரிக்கையாக இரு!

அன்புள்ள,

மு. க.

13-08-1984

1254. வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்!

உடன்பிறப்பே,

இன்றைய கடிதம், ஒரு கதையுடன் தொடங்குகிறது! முதலில் கதையைப் படி!

தலையில் இரும்புத் தொப்பி! மார்பில் எஃகுக் கவசம்! கையில் பளபளக்கும் வாள்! அவன் நடந்து வரும் பாணியே அலாதியாக இருந்தது! ஒரு கையால் மீசையைத் தடவும் போதும் - மிரட்டி உருட்டி விழித்துப் பார்க்கும் போதும் எதிரே நிற்பவர்களுக்கு ஒரே பயம்!

கொண்டு வா ஐந்தாறு மெழுகுவத்திகளை என்றான்! பணியாளன் ஓடிச் சென்று மெழுகுவத்திகளை எடுத்து வந்து அவன் கையில் கொடுத்தான்!

அவற்றை ஒவ்வொன்றாக எதிரேயுள்ள மேஜையில் நிறுத்தி வைத்தான்! ஒவ்வொன்றின் மீதும் வாளை வீசினான்! மெழுகுவத்திகள் இரு துண்டுகளாக வீழ்ந்தன!

எங்கே ஒரு தார் வாழைப்பழம், எடுத்து வா - என ஆணையிட்டான்! பணியாளன் பறந்து போய் ஒரு வாழைப்பழக் குலையைக் கொண்டு வந்து நீட்டினான்! அதனை வாங்கி வாளால் வெட்டினான்! வாழைப்பழங்கள் துண்டம் துண்டமாக உதிர்ந்தன!

கால்பந்து அளவுக்கு உருட்டி வைக்கப்பட்ட காராம்பசுவின் வெண்ணெய் உருண்டை எங்கே? அதையும் கொணர்க, என உத்திரவு பிறப்பித்தான்! பணியாளன் அந்த வெண்ணெய் உருண்டையைக் கொண்டு வந்து ஒரு முக்காலி மீது வைத்ததுதான் தாமதம், ஓங்கினான் வாளை! வெட்டினான் வெண்ணெய் உருண்டையை!

இத்தனை வீரசாகச நிகழ்ச்சிகளும் ஒரு அடர்ந்த காட்டுக்குள் அமைக்கப்பட்டிருந்த ஒரு மாளிகையின் கூடத்தில் நடைபெற்றன!

இந்த வீரதீரப் பராக்கிரமச் செயல்களை உடனிருந்து பார்த்துக் கொண்டிருந்த அவனது நண்பன் அவனைப் பார்த்து,

என்னப்பா இது? பளபளப்பான வாளேந்தி - பாதுகாப்புக் கவசம் பூண்டு - மெழுகுவத்தி, வாழைப்பழம், வெண்ணெய் உருண்டை இவைகளையெல்லாம் வெட்டித் தள்ளுகிறாய்! உன்போக்கு எனக்கொன்றும் புரியவில்லையே!

எனக் கேட்டான் ஆச்சரியத்துடன்!

நண்பனே! இந்தக் காட்டில் நான் நடத்தப் போகும் வேட்டைக்கு இவையெல்லாம் ஒத்திகைகள்! வா, என்னுடன்! என் வீரச் செயல்களைக் கண்ணால் கண்டிடு! காட்டில் உள்ள மிருகங்கள் என்னைக் கண்டவுடன் கலங்கி ஓடுவதைப் பார்த்து ரசித்திடு!

என்றவாறு நண்பனை அழைத்துக் கொண்டு அந்த வீரன் வெளியே கிளம்பினான். மாளிகையை விட்டுக் காட்டுப் பகுதியில் சிறிது தூரம் சென்றதும் நாலைந்து முயல்கள் குறுக்கிலும், நெடுக்கிலும் ஓடிக் கொண்டிருந்தன!

பளபளப்பு வாள் வீரன் பாய்ந்தான் அந்த முயல்களின் மீது! நான்கில் இரண்டு முயல்கள் ரத்த வெள்ளத்தில் மிதந்து துடித்துச் செத்துப் போயின! மற்றவை எகிறிக் குதித்து ஓடிவிட்டன! வாள் வீரன் வாய் விட்டுச் சிரித்தான்! அந்த வெற்றிச் சிரிப்பில் அந்த வனாந்தரமே அதிர்ந்தது!

மேலும் சிறிது தொலைவு நடந்ததும் சின்னஞ்சிறு மான்குட்டியொன்று! ஒரு பாறையின் மீது படுத்துக் கிடந்தது! நமது வாள்வீரன் அதன் கழுத்தைக் குறி பார்த்து வீசினான் வாளை! ஒரு பயங்கர துடிப்பு! மான்குட்டியின் தலை மட்டும் பாறையிலிருந்து உருண்டது! உடனே படபடத்து அடங்கியது!

மீண்டும் சிரித்தான்! அந்தக் காடு முழுதும் கேட்கிற அளவுக்குச் சிரித்தான்!

நண்பன் வியப்புடனும், சற்று வெறுப்புடனும் அவனைத் தொடர்ந்தான்!

என்னப்பா! போயும் போயும் முயலையும் - மான்குட்டியையும் வெட்டிச் சாய்க்கிறாய்?

நண்பா! என் வீரம் உனக்குத் தெரியாதா? முதலில் வாழைப்பழம் - மெழுகுவத்தி - வெண்ணெய் - அடுத்த கட்டம்

முயல், மான் - இப்படிப் படிப்படியாகத்தான் எனது பளபளப்பான வாளுக்கு வேலை கொடுப்பேன்! நான் வருவது தெரிந்து வலிமை மிக்க புலிகளும், சிங்கங்களும் இந்த வனத்தை விட்டே ஓடிவிட்டன பார்த்தாயா?

இப்படிச் சொல்லி விட்டு அந்த வீரன் வாய் மூடுவதற்குள் - அடுத்தவொரு பாறையின் பக்கமிருந்து சிங்கத்தின் கர்ச்சனையொலியொன்று கேட்டது!

அந்த ஒலி கேட்டவுடன் நடுங்கியவாறு, வாள் வீரன் - நண்பனைப் பார்த்து வா! வா! ஓடிவிடலாம்! என்றுகூறி அவனைப் பரபரவென இழுத்தான்!

என்னப்பா இது? நீ வேட்டையாடத் தேடியலைந்த சிங்கமல்லவா வந்து சிக்கியிருக்கிறது! அதனுடன் நீ போரிட்டு வென்றிடும் காட்சியை அல்லவா நான் காண விரும்பினேன்! நீ ஓடி விடலாம் என்கிறாயே, இதுதானா உன் வீரம்?

என்று கேலி பேசினான் நண்பன்!

என் வீரத்தைச் சந்தேகப்படாதே! ஒரே பாய்ச்சல்! அந்தச் சிங்கம் வீழ்ந்துவிடும்! வெண்ணெயும் - வாழைக்கனியும் - மெழுகுவத்தியும் - முயலும் - மானும் பட்ட பாட்டில் இந்தச் சிங்கம் எனக்கு எந்த மூலை? ஒரே வெட்டில் அதனைக் கொன்று, அதன் பிடரி மயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு வரக்கூடிய தெம்பும் திறமையும் எனக்கு உண்டு! ஆனால் ஒன்று! அது கொஞ்சம் வயதான சிங்கம் - அதைக் கொல்லுவதில்லையென்று அதற்கு மட்டும் விதிவிலக்குக் கொடுத்திருக்கிறேன்.

வாள்வீரன் இந்தப் பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அந்தக் கிழச் சிங்கம், மீண்டும் ஒரு கர்ச்சனையுடன் பாறைக்கருகில் உள்ள புதரில் இருந்து வெளிப்பட்டு - பாறையின் மீது வந்து கம்பீரமாக நின்று கொண்டு - தன் எதிரேயுள்ள வாள் வீரன் மீதும், அவனது நண்பனின் மீதும் பார்வையைச் செலுத்தியது!

வாள்வீரன் வாளைக் கீழே போட்டுவிட்டு அய்யோ! என அலறிக்கொண்டு பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடினான்! ஓடினான்! ஓடிக்கொண்டேயிருந்தான்!

அவனைத் தொடர்ந்து ஓடி வந்த நண்பன், அந்த வாள் வீரனை, ஆரண்ய மாளிகைக்குள்ளே வந்துதான் பிடித்தான்!

நண்பனைப் பார்த்து அந்த வீரன் கேட்டான், நண்பா! என்னால் விதிவிலக்கு அளிக்கப்பட்டு தப்பித்துக்கொண்ட சிங்கம் உன்னிடம் ஏதாவது சொன்னதா? என்று!

ஓ! சொன்னது! சொன்னது! உனக்கு வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்! என்று விருது வழங்குமாறு என்னிடம் சொன்னது! என்றான் அந்த நண்பன்!

அப்படியா சொன்னது? அதனால்தான் அந்த சிங்கத்தை நான் எதுவும் செய்யாமல் - அதனைத் தப்புமாறு விட்டுவிட்டேன்! அந்த நன்றியை மறக்காமல் அந்தச் சிங்கம் எனக்கு எப்படிப்பட்ட வீர விருது வழங்கியிருக்கிறது பார்த்தாயா!

என்று தனது நெஞ்சைப் புடைத்துக்கொண்டு நின்றான் வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்!

உடன்பிறப்பே! கதை முடிந்துவிட்டது! உன் கவனத்திற்கு சில விபரங்களை மட்டும் நினைவுபடுத்துகிறேன்.

- திண்டுக்கல்லுக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைப்பது கூடாது! அண்ணா பிறந்த காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட செங்கற்பட்டு மாவட்டத்தின் ஒரு பகுதிக்கே அண்ணா மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டும்.
- ஒரு சிலர் யார் யாரையோ பார்த்து மரியாதை செய்கிறார்கள். என்னப்பா இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டால், நாங்கள் கோபுரத்தைப் பார்த்துக் கும்பிடுகிறோம். கோபுரத்தில் அந்த எச்சில் இலையும் ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதனால் அதையும் கும்பிடுகிறோம். இல்லாவிட்டால் எங்களைக் கட்டம் கட்டி விரட்டி விடுவார்கள் என்கிறார்கள்.
- அ.தி.மு.க.வினர் 84-ஆம் ஆண்டு தேர்தலில் நிறைய செலவு செய்ய இருக்கிறார்கள். கிராமங்களில் இருப்பவர்கள் அரசியல் தெளிவானவர்கள். பணத்தைக் கண்டு மயங்க மாட்டார்கள்.
- ஆர். வெங்கட்ராமன் இலங்கையில் தமிழன் செத்தால் சாகட்டும் என்றாரே! அவருக்குத் துணை

ஜனாதிபதி பதவி வந்தால் தமிழனுக்கு என்ன லாபம்?

ஃ காஷ்மீரில் பரூக் அப்துல்லா ஆட்சியைக் கலைத்த இந்திராவை எதிர்த்துக் கண்டித்து வெளியேறினார் என்.டி. ராமராவ்! ஆனால் எங்கள் கட்சியோ ராமராவைக் கண்டிக்கும் தீர்மானத்தை ஆதரித்திருக்கிறது. இந்திரா காந்தி கோபித்துக் கொள்வார் என்பதால் இப்படியொரு கோமாளித்தனம் நாட்டிலே நடக்கிறது.

ஃ சென்னையில் தினமும் கற்பழிப்பு, கொள்ளை நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை. ஆனால் திறமையான ஆட்சி நடக்கிறதாம்.

உடன்பிறப்பே, இந்த முத்தான கருத்துகளையெல்லாம் உதிர்த்திருப்பவர் மதுரை முத்து அவர்கள் என்பது உனக்கும் தெரியும் - ஊருக்கும் தெரியும்! ஏடுகளில் வெளிவந்தவைகளைத்தான் தொகுத்தளித்துள்ளேன்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நிருபர்களிடம் நேற்று கூறியுள்ளதையும் படித்துப் பார்!

கட்சியில் உள்ள யாராக இருந்தாலும், இலங்கைத் தமிழர் பிரச்சினை - இந்திரா காங்கிரஸ் உடன்பாட்டுப் பிரச்சினை - அ.தி.மு.க. கொள்கைப் பிரச்சினை குறித்து, பொதுவாகத் தலைமையின் அறிவிப்பு வராமல் சொந்தக் கருத்து என்று இனிமேல் பேச மாட்டார்கள் - பேசக்கூடாது.

இதனை எம்.ஜி.ஆர். சொன்னதும் நிருபர்கள் விடவில்லை!

நிருபர் : இது மதுரை முத்து அவர்களையும் கட்டுப்படுத்துமா?

எம்.ஜி.ஆர். : இது அவருக்குப் பொருந்தாது - இந்தக் கட்டுப்பாட்டிலிருந்து அவர் விதிவிலக்கு அளிக்கப்பட்டவர்.

உடன்பிறப்பே! இப்போது கடிதத்தின் தொடக்கத்தில் எழுதியுள்ள கதையின் உட்பொருள் உனக்கு புரிகிறதல்லவா?

வெண்ணெய் வெட்டிச் சிப்பாய் சிங்கத்துக்கு, விதி விலக்கு அளிக்கிறாராம்!

வெண்ணெய்

வாழைப்பழம்

மெழுகுவத்தி

முயல்

மான்குட்டி

இவைகளை மட்டும் விதிவிலக்கின்கீழ் கொண்டு வராமல் கட்டம் கட்டி வெட்டித் தள்ளுவாராம்!

வெண்ணெய் வெட்டிச் சிப்பாயின்
வீரத்தைப் புகழ்ந்து
விண்ணும் மண்ணும் எட்டவே
கும்மியடியுங்க பெண்டுகளா!
கும்மியடியுங்க!

அன்புள்ள,

மு. க.

14-08-1984

1255. துக்கநாள் முந்திக்கொண்டதே!

உடன்பிறப்பே,

பொதி பொதியாக எத்தனை சோகச் சுமையைத்தான் தாங்குவது!

அடுக்கடுக்காக வந்து குவியும் அவலச் செய்திகளோடு இதோ ஒன்று!

அய்யகோ! என் உள்ளம் துளைக்கப்பட்டே விட்டது!

சென்னகேசவன் - தர்மபுரி மாவட்டத்தின் தளநாயகன் - சில நாட்களுக்கு முன்புதான் விபத்தொன்றில் சிக்கி, ஆபத்து ஒன்றுமில்லை என்ற நிலையில் வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றான் - நலம் பெற்று வருகிற செய்தியை நாள்தோறும் அறிந்து ஆறுதல் பெற்று வந்தேன்.

ஆனால்... ஆனால்.... இன்று.... இதோ... என் இதயத்தைச் சம்மட்டியால் நொறுக்கும் செய்தி வந்துவிட்டதே!

அந்த மலைத்தோள் மாவீரன் மாண்டு விட்டானாமே!

கடந்த திங்கள்தான் என்னை வந்து சந்தித்து அளவளாவி - தர்மபுரி மாவட்டத்தில் தேர்தல் நிதி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு சுற்றுப்பயணத்திற்கான ஒப்புதலை வாங்கிச் சென்றான். அந்த உயிரனைய உடன்பிறப்பு! இன்று உயிரற்றுப் போய்விட்ட கொடுமையை என்னவென்று சொல்வேன்?

தர்மபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்கக் குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான் -

அவனைப் பறிகொடுத்து விட்டோமே! இந்த வயதில் இப்படியொரு முடிவா? -

உடன்பிறப்பே, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அறிவிக்கப்பட்ட துக்கநாள் இன்றைக்கே முந்திக்கொண்டு என்னைத் தொத்திக் கொண்டதே!

அன்புள்ள,
மு. க.
15-08-1984

1256. கறுப்புக்கொடி ஏற்றியது குற்றமா?

உடன்பிறப்பே,

சிங்கள இராணுவத்தின் காண்டாமிருகத் தாக்குதலால் நாள்தோறும் உயிரிழந்தும், கற்பிழந்தும் அழிந்து கொண்டிருக்கிற இலங்கைத் தமிழ் இன மக்களைக் காப்பாற்றத் துடித்தெழுமாறு இந்திய அரசை வலியுறுத்தும் வகையில் ஆகஸ்டு 15-ஆம் நாளன்று சுதந்திர நாளைத் துக்க நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தி.மு.கழகம், திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளும், மதுரை நண்பர் முத்து அவர்களும் அறிவித்து - அதன்படி தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கானோர் கறுப்புடை தரித்தும், லட்சக்கணக்கானோர் கறுப்புச் சின்னங்களை உடைகளில் அணிந்தும், ஆயிரக்கணக்கானோர் கறுப்புக் கொடிகளை ஏற்றியுமுள்ளனர்.

கறுப்புக்கொடி ஏற்றியமைக்காக தளபதி வீரமணி அவர்களும், மதுரை நண்பர் முத்து அவர்களும் கழகத்தின் தலைமை இலக்கிய அணிச் செயலாளர் அமுதன் அவர்களும் கைது செய்யப்பட்டனர். ஒரு சில தமிழ் ஏடுகளில் தினமலர் உட்பட வந்துள்ள செய்திகளின்படி, ஐயாயிரம் பேர் கறுப்புக்கொடி ஏற்றியமைக்காகக் கைதாகியுள்ளனர். இந்து ஏட்டில் வந்துள்ள செய்திக் குறிப்பின்படி, தி.மு.க., தி.க., காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானோர் மாலையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

அவரவர்க்குச் சொந்தமான வீடுகளில் - அல்லது அவர்தம் கட்சி அலுவலகங்களில் அவர்களுடைய உணர்வினை

வெளிப்படுத்தி இந்திய அரசின் கவனத்தை ஈர்த்திட கறுப்புக்கொடி ஏற்றுவது என்பது அப்படியென்ன மகாப்பெரிய பாதகம் என்று தெரியவில்லை!

கோட்டையில் அமர்ந்துள்ள கோமாளிகளுக்கு தான் அது புரியவில்லை என்றால், காக்கி சட்டை அணிந்து திரியும் காவல்துறை புத்திசாலிகளுக்குக்கூடவா அது புரியவில்லை?

சுதந்திர நாளையும், குடியரசு நாளையும் காப்பாற்று வதற்கென்றே அவதாரம் எடுத்தவர்களைப் போல தங்களைத் தேசபக்தியின் சிகரமெனத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் பதவிதேடிகள் சிலருக்கு, பழைய வரலாறுகள் எல்லாம் ஏனோ மறந்து போய் விட்டன!

மேற்கு வங்கத்தின் முதலமைச்சராக இருந்த டாக்டர் பி.சி. ராய் என்ற புகழ்பெற்ற காங்கிரஸ் தலைவர் - ஆளுகிற கட்சிகளுக்கெல்லாம் ஆலவட்டம் பிடிக்கிற ஆமாம் சாமி அல்ல - பழம்பெரும் தேசபக்தர் - அவர் தனது மாநிலத்தைப் பாதிக்கும் ஒரு பிரச்சினையை முன்வைத்து, மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கக் குடியரசு நாளைத் துக்கநாள் என அறிவித்தார். அறிவித்ததோடு மட்டுமல்ல, அவரது அறிவிப்பை மீறி ஆளுநர் மாளிகைக்கு அலங்கார விளக்குகள் போடப்பட்டிருந்ததை அறிந்து - அதற்கான மின் இணைப்பைத் துண்டிக்கவும் செய்து ராஜபவனத்தையே இருளில் மூழ்கடித்தார்.

அங்கும் இதேபோலத்தான் பிரச்சினை! அஸ்ஸாமில் கச்சார் மாவட்டத்தில் உள்ள வங்காளிகளைப் படுகொலை செய்கிறார்கள் என்பதையும், அவர்களது உடைமைகளைச் சூறையாடுகிறார்கள் - தீ வைக்கிறார்கள் என்பதையும் கண்டித்து, மத்திய அரசின் கவனத்தைத் திருப்பவே மேற்கு வங்க முதலமைச்சர் பி.சி. ராய் அந்தத் துக்கநாளை அறிவித்தார்.

இங்கென்னவோ முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., இலங்கைத் தமிழர் பற்றிப் பேசும்போது கண்கலங்குகிறாராம்! உணர்ச்சி வசப்படுகிறாராம்!

ஆனால் கண்ணீர் சிந்துவதைத் தவிர வழியற்ற தமிழ்க்குல மக்கள், இங்கே கறுப்புக்கொடி ஏற்றித் தங்கள் உணர்வை வெளிப்படுத்தினால் அவர்களைக் கைது செய்து மிரட்டிப் பார்க்கிறார்!

மாணவர் ஆர்த்தெழுந்தாலோ அடி! உதை! என தடியடித் தர்பார் நடத்துகிறார்!

கறுப்புக்கொடி ஏற்றினால் கைது செய்வோம் என்று முதலமைச்சர் முன்கூட்டியே முண்டா தட்டியிருப்பாரேயானால், திராவிட முன்னேற்றக் கழகம் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் பறக்கட்டும் கறுப்புக் கொடி! என அறைகூவல் விடுத்து அறிக்கை கொடுத்திருக்கும். சிறைக்கோட்டடங்கள் நிரம்பி வழிந்திருக்கும்!

இலங்கையில் நமது இனம் நாள்தோறும் அழிந்து கொண்டிருக்கிறது!

இந்திய அரசோ, இங்கும் குமுறியழும் நமக்கு இதோபதேசம் புரிந்து கொண்டிருக்கிறது.

இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசோ அழுவதற்கும் உரிமையில்லையென, கண்ணிமைகளை ஊசி கொண்டு தைப்பதுபோல, கறுப்புக்கொடி ஏற்றக்கூட உரிமை யில்லையென அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது.

தமிழர்களை இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்யும் பெரிய ஜெயவர்த்தனேக்கு - இங்கு நீலிக்கண்ணீர் வடிக்கும் சின்ன ஜெயவர்த்தனே எத்துணை மறைமுகமாகப் பக்கபலமாக இருக்கிறார் என்பது இந்தச் செயல்களில் இருந்தே புரியவில்லையா?

அன்புள்ள,

மு. க.

17-08-1984

1257. கவர்னர் தேவையில்லை!
கம்ப்யூட்டர் போதும்!

உடன்பிறப்பே,

கத்தியினால் நெஞ்சாங்குழியில் குத்தி, ஜனநாயகத்தைக் கொலை செய்தது எமர்ஜன்சி முறை!

கழுத்தை நெரித்துக் கொலை செய்து விட்டு ஒரு கயிற்றில் தொங்க விட்டுத் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக ஜனநாயகத்தைப் பாடையில் ஏற்றி பள்ளத்தில் புதைப்பது இந்திரா காங்கிரஸ் கடைப்பிடிக்கும் இப்போதைய மாற்றுமுறை! அதாவது எமர்ஜன்சி என்று தெரியாமல், நடைமுறையில் எமர்ஜன்சியை மறைமுகமாகப் பயன்படுத்துவது!

பாண்டிச்சேரியில் தி.மு.க. ஆட்சிக்குப் பெரும்பான்மை இல்லை - அதனால் சட்டசபைக் கலைக்கப்படுகிறது எனப் பொய் கூறிக் கவர்னர் ஆட்சியைப் பிரகடனப்படுத்திய சர்வாதிகாரக் குருதி தோய்ந்த கைகள்தான், காஷ்மீரில் பரூக் அப்துல்லாவின் ஆட்சிக்குப் பெரும்பான்மை இல்லை எனக்கூறி, அங்கே கிடைத்த எட்டப்பன் ஷா என்பவருக்கு இருபத்துஆறு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை முட்டுக் கொடுக்கச் செய்து பரூக்கின் ஆட்சியைக் கவிழ்த்தன என்ற ஜனநாயகப் படுகொலை வரலாற்றின் வரிகள், நமது கண்களுக்கு முன்னால் மின்னிக் கொண்டிருக்கும்போதே, குலு என்ற குளுகுளுப் பிரதேசத்தில் எதிர்க்கட்சி ஆட்சி நடக்கும் மாநில அரசுகளைக் கவிழ்க்கமாட்டோம் என்று பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் அறிவித்தார்கள்.

பிரதமர் அவ்வாறு அறிவித்தபோது இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா? என்ற சொற்றொடர்தான் என் நினைவுக்கு வருகிறது என நான் குறிப்பிட்டிருந்தேன்.

இதோ, ஆந்திரத்தில் பத்திரமாக உறியிலிருந்த பாலைக் கீழே தள்ளி - கிண்ணத்தைக் கவிழ்த்து - தரையிலோடும் பாலைத் தணியாத தாகத்துடன் பூனை குடிக்கிற காட்சியைக் காண முடிகிறது!

அந்தந்த மாநில அரசுகளில் எழும் பிரச்சினைகளால் அவைகள், தாங்களாகவே கவிழ்ந்து விடுவதற்கு நாங்கள் பொறுப்பல்ல!

இப்படியும் குலு நிகழ்ச்சியில் பிரதமர் பேசியிருந்தார்!

திருச்செந்தூர் முருகன் கோயிலில் சுப்பிமணிய பிள்ளையைக் கொன்று குவித்து விட்டு - அவர் தற்கொலை செய்து கொண்டார் என இங்குள்ள எம்.ஜி.ஆர். அரசு சாதிக்கவில்லையா - அதுபோல!

திருவரங்கம் கோயில் அதிகாரி வெங்கடாசலத்தைத் தீர்த்துக்கட்டி விட்டு, அதையும் தற்கொலை எனக் கூறி மந்திரிகள் தப்பித்து விடவில்லையா - அதுபோல!

மதுராந்தகம் ஞானசௌந்தரியைக் கொன்று ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. அலுவலகத்தில் தூக்கு மாட்டிக் கொண்டார் எனக் கதை கட்டவில்லையா - அதுபோல!

புட்லூர் தண்டபாணியை ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் கொன்றுவிட்டு குளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறவில்லையா - அதுபோல!

மதுரை இளஞ்செழியனை மண்டையில் கல் போட்டுக் கொலை செய்துவிட்டு கார் விபத்தில் மாண்டுவிட்டான் என்று கயிறு திரிக்கவில்லையா - அதுபோல!

அண்மைக் காலத்தில் புதுவை, காஷ்மீர், ஆந்திரா என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் மத்திய ஆட்சி - ஜனநாயகப் படுகொலைகளைச் செய்துவிட்டு, அந்த மாநில ஆட்சிகள் தங்களைத் தாங்களே கவிழ்த்துக் கொண்டன என்று பச்சைப் பொய்யைப் பகிரங்கமாகக் கூறுகிறார் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்!

மீண்டும் வந்தால் மறுபிறவி என்பது போல ஆபத்து நிறைந்த அறுவை சிகிச்சை யொன்றுக்கு ஆந்திர முதல்வர் ராமராவ்

அமெரிக்க நாடு சென்றிருந்தபோது, அவரது ஆட்சியைக் கவிழ்க்க பாஸ்கர ராவ் என்ற துரோகியைப் பிடிக்கிறார்கள் டெல்லிக்காரர்கள்!

டெல்லியின் சரித்திரத்தில் இது சர்வசாதாரணம்!

திராவிட இயக்கத்தைப் பிளக்க 1972-இல் தமிழகத்தில் ஒரு துரோகியைப் பிடிக்கவில்லையா?

அந்தத் துரோகிக்குப் பட்டம் சூட்ட ஐந்து ஆண்டுக்காலம் காத்திருக்க வேண்டியிருந்தது!

ஆனால், ஆந்திரத்தில் பாஸ்கர ராவுக்கோ - ஐந்தாறு வாரங்களில் அந்தப் பட்டாபிஷேகத்தை நடத்தி முடித்து விட்டார்கள்!

ஒரு கட்சியைக் கட்டிக் காத்து, வெற்றிகளை ஈட்டித் தந்து, பதவிகளை வழங்கியவருக்கு - பாஸ்கர ராவ் போன்ற துரோகிகள் காட்டும் நன்றி இதுதானா?

உடன்பிறப்பே! இப்படிக் கேட்டுத் துடிக்கிறதல்லவா இதயம்?

இது ஒன்றும் நமக்குப் புதிய சம்பவமல்லவே! திடுக்கிடும் நிகழ்ச்சியல்லவே!

இந்திராவின் எமர்ஜன்சியை எதிர்த்த காரணத்திற்காக நமது கழக ஆட்சி கலைக்கப்பட்டு, நம்மனோர் பலர் மிசாக் கைதிகளாகி, நான், நாள்தோறும், நிமிடந்தோறும் வேதனை நெருப்பில் வீழ்த்தப்பட்டு - சோதனைப் பாறையில் மோதப்பட்ட போது, அதுவரையில் நமது ஆட்சியில் பதவி, பவிசு என்ற சுகங்களை இறுதி வரையில் அனுபவித்தவர்கள் எத்தனை பேர் துரோகிகளாக மாறி எதிர் வரிசையில் குதித்தனர் - ஏ! அப்பா! தூங்கும் போது தலையில் கல்லைத் தூக்கிப் போடக்கூடியவர்களைப் பற்றியெல்லாம் அறியாமல், அவர்களின் தோள் மீது கை போட்டுப் பழகினோமே என்பது அவர்களின் துரோகம் வெளிப்பட்ட பிறகுதானே தெரிந்தது!

அதனால், ஆந்திரத்தில் பாஸ்கர ராவ்களும் - அவரைச் சுற்றி ஒரு துரோக அணியும் உருவாகியிருப்பதும், அதனை இந்திரா காங்கிரஸ் உருவாக்கியிருப்பதும் ஆச்சரியத்துக்குரியதல்ல!

சில லட்சியங்களுக்காகவோ - கொண்ட கொள்கைகளுக் காகவோ வாழ்வது அல்லது அதற்காகவே போராடிச் சாவது என்ற உறுதி இல்லாத ஒதியமிலார் மனிதர்கள் - சீழ் வடியும் சிரங்குகளில் எல்லாம் சென்று அமரும் ஈக்களைப் போலத்தான், பதவி! பதவி!! என்று பறந்து கொண்டிருப்பார்கள்!

கொள்கையையும், தன்மானத்தையும் விற்றுவிட்டு - ஏன்? தன்னையே கூட விற்றுவிட்டுப் பதவி தேடியலையும் பிறவிகளை, நேரிலே விமர்சிக்காத சிலர் கூட, மறைவிலே நின்று மக்கட் பதர் என்றுதான் அர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய மக்கட் பதர் ஒன்றைப் பிடித்து ராமராவ் ஆட்சியை - முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமாகக் கவிழ்த்திருப்பது மக்களாட்சி மாண்புக்கே மாசு தேடும் மகத்தான பாதகச் செயலாகும்!

பெரும்பான்மையான எம்.எல்.ஏ.க்கள் என் பக்கம் இருக்கிறார்கள்! சட்டசபையில் வேண்டுமானாலும் இந்த உண்மையை நிரூபிக்கிறேன் அல்லது இப்போதே நேரில் ராஜ்பவனுக்கு வந்து கவர்னர் முன்னிலையிலேயே எனக்குள்ள பெரும்பான்மையை எண்ணிக் காட்டுகிறேன்.

எனக்கூறி கவர்னர் மாளிகைக்கு வந்த முதலமைச்சர் ராமராவ் அவர்களையும், அவருடன் வந்த எம்.எல்.ஏ.க்களையும் கைது செய்து விட்டு - புதிய முதல்வராகத் துரோகி பாஸ்கராராவை அறிவித்து, உடனடியாகப் பதவிப் பிரமாணமும் செய்து வைக்கிறார் ஒரு கவர்னர் என்றால், இனிமேல் கவர்னர்கள் இருக்க வேண்டிய இடத்தில் மனித ஜீவன்களுக்குப் பதிலாக - மத்திய அரசு அனுப்புகிற உத்தரவை வெளியிடுகிற கம்ப்யூட்டர் மெஷின்கள் இருந்தாலே போதுமே!

ஜனநாயகத்தின் மீது பற்றுள்ள எல்லாக் கட்சிகளுமே ஆந்திராவில் நடந்துள்ள ஜனநாயகப் படுகொலையையும், கவர்னர் இராம்லாலின் அரசியல் அநாகரிகச் செயலையும் கண்டித்துள்ளன! அநேகமாக எல்லா ஏடுகளுமே இது ஏற்கத்தக்க முறையல்ல! என்று தலையங்கங்கள் தீட்டியுள்ளன!

தென்னகத்தில் புதுவையைத் தொடர்ந்து, ஆந்திரத்தில் ஜனநாயகம் சவக் குழிக்கு அனுப்பப்பட்டுள்ளது!

தமிழகத்தை ஒட்டியுள்ள ஆந்திர மாநிலத்தில் இப்படியொரு கொடுஞ்செயல்! தம்பி ராமராவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது குறித்து அண்ணன் எம்.ஜி.ஆர்., கவலைப்படுகிறாரோ, இல்லையோ - கண்டனம் தெரிவிக்கிறாரோ, இல்லையோ - தமிழகத்தில் ஜனநாயகத்தின்பால் மதிப்பு வைத்திருப்போர் அனைவரும் மனக்கொதிப்பு கொண்டே இருக்கின்றனர்.

அன்புள்ள,

மு. க.

18-08-1984

1258. மாநில பிரக்ஞை இழக்க இயலாது!

உடன்பிறப்பே,

ஆந்திரச்சீமை எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கிறது! ஆத்திரமடைந்த மக்களின் நெஞ்சக் கனல் நெருப்புக் குழம்பாக தெலுங்கு பூமியின் தெருக்களில் ஓடிக் கொண்டிருக்கிறது!

கடைகள் அடைக்கப்பட்டுள்ளன! போக்குவரத்து ஸ்தம்பித்து போய் விட்டது! ரயில் நிலையங்களுக்குத் தீ! இதுவரையில் துப்பாக்கிச் சூட்டில் பதினேழு பேர் பலியாகி யிருக்கிறார்கள்!

இவ்வாறு உளம் பதைக்கும் செய்திகள் வந்து கொண்டிருக்கும் போதே, இன்று 19-8-84 காலை வானொலியில் அரிய பெரிய கண்டுபிடிப்புக் கருத்து ஒன்றும் வெளியிடப்பட்டதைக் கேட்டு சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல் திகைத்துப் போனேன்.

அகில இந்திய காங்கிரசின் பொதுச்செயலாளர்களில் ஒருவரான அருமை நண்பர் கருப்பையா மூப்பனார் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துதான் அது!

காஷ்மீர், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்த ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டதற்கு இந்திரா காங்கிரஸ் காரணமல்ல என்பது கருப்பையா மூப்பனார் அவர்களின் வாதம்!

இந்த வாதம் - வாய்மையின் அடிப்படையை எள்முனை அளவாவது தொட்டுப் பார்க்கக்கூடிய தகுதி படைத்ததா என்பதை, அவரது மனச்சாட்சியின் தீர்ப்புக்கே விட்டுவிடலாம்!

அவரது இந்த வேடிக்கையான வாதத்தைத் தொடர்ந்து மற்றொரு கருத்தையும் மெத்தவும் சிரமப்பட்டுக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளார்.

காஷ்மீர், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் பரூக் ஆட்சியும், ராமராவ் ஆட்சியும் கவிழ்ந்ததானது - மாநிலக் கட்சிகள் எனப்படும்

பிராந்தியக் கட்சிகளுக்கு மக்களிடம் செல்வாக்கு இல்லை என்பதையே காட்டுகிறது.

திருவாளர் கருப்பையா மூப்பனாரின் கண்டுபிடிப்போ - அல்லது அவர் நாவில் எழுதி நாட்டுக்கு அறிவிக்கச் சொன்ன கட்டளையோ, அதைப் பற்றிய ஆராய்ச்சி இப்போது தேவையில்லை!

ஆனால், அவர் திருவாய் மலர்ந்தருளியுள்ள அந்தக் கருத்து உண்மையானது தானா? ஒப்புக்கொள்ளக்கூடியதுதானா?

பரூக் ஆட்சியைக் கலைத்துவிட்டு அங்கே இன்னமும் ராணுவத்தை நம்பிக் கொண்டுதான் ஆட்சி நடத்த வேண்டியிருக்கிறது!

ராமராவ் ஆட்சியைக் கலைத்து விட்டு, அந்தக் காரியம் இந்திரா காந்திக்குத் தெரியாதது போல் நடந்துவிட்டதாகப் பிரபல பத்திரிகைகளில் பிரபல கட்டுரையாளர்களை விட்டு எழுதச் செய்தும் பலனில்லாமல் - ஆந்திரம் கொந்தளிப்பு மிகுந்த கடலாகக் காட்சி தருகிறது!

மக்களின் வெறுப்பும், கோபமும் எந்த அளவுக்கு மத்தியில் உள்ள இந்திரா காங்கிரஸ் அரசின் மீது திரும்பியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் நண்பர் மூப்பனார் அவர்கள், மாநிலக் கட்சிகளுக்குச் செல்வாக்கு மக்களிடமில்லை என்பதையே காஷ்மீர் முடிவும் ஆந்திரா முடிவும் காட்டுகிறது எனக் கதைத்திருப்பது, காதறுந்த ஊசியினும் கீழான கருத்தாகும்!

நண்பர் கருப்பையா மூப்பனார், காங்கிரஸ் எனும் தேசியப் பேரியக்கத்தின் பொதுச் செயலாளர்களில் ஒருவர்!

காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு மக்களிடம் ஆதரவில்லை - அதனால் பரூக் அப்துல்லா கவிழ்ந்து விட்டார் என்கிறார் திருவாளர் மூப்பனார்!

அப்படியானால் பரூக்கிடமிருந்து விலகி வந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பனிரெண்டு பேரும் ஷாவுடன் இணைந்து - தங்களது கட்சிதான் காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி என்று பழைய பிராந்தியக் கட்சியின் பெயரையே சூட்டிக் கொள்கிறார்களே, அதற்கு என்ன காரணம்? மாநிலக் கட்சி என்ற

நிலையில் இருந்து மாறாமலே இருப்பதாகக் காட்டிக் கொண்டால் தான் மக்களை ஏமாற்ற முடியும் என்பதுதானே முக்கியமான காரணம்!

இல்லையேல் அந்தப் பன்னிருவரும், ஷாவும் காங்கிரசில் சேர்ந்து பிராந்திய உணர்வே இல்லாத ஒரு தேசியக் கட்சியின் அமைச்சரவையை இந்திரா காங்கிரஸ் தலைமையில் அமைத்திருக்கலாமே!

காஷ்மீரில், துரோகிகள் மந்திரி சபை எப்படி இப்போது பிராந்தியக் கட்சி எனக் கூறிக் கொண்டு இயங்குகிறதோ, அதைப் போலத்தான் - ஆந்திராவிலும் பாஸ்கர ராவ் தலைமையில் அமைந்துள்ள துரோகிகள் மந்திரி சபையும் தன்னைத் தெலுங்கு தேசக் கட்சியின் மந்திரிசபை எனக் கூறிக் கொள்கிறது!

பரூக் அப்துல்லாவை வீழ்த்தி விட்டதால் காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி என்ற பெயரையும் வீழ்த்திவிட முடியவில்லை, பிராந்தியக் கட்சி என்ற காரணத்தைக் காட்டி!

ராமராவை வீழ்த்தி விட்டதால் அவர் உருவாக்கிய தெலுங்கு தேசக் கட்சி என்ற பெயரையும் வீழ்த்திவிட முடியவில்லை, பிராந்தியக் கட்சி என்ற காரணத்தைக் காட்டி!

அந்தப் பெயர்களை வைத்துக் கொண்டுதான் துரோகிகளின் ஆட்சிகளைத் தற்காலிகமாகவாவது முட்டுக் கொடுத்துக் காப்பாற்ற முடியுமென இந்திரா காங்கிரஸ் நம்புகிறது!

தமிழ்நாட்டில் தி.மு.கழகம் அல்லது அ.தி.மு.க. என்ற இரண்டில் ஒரு பிராந்தியக் கட்சியுடன் உடன்பாடு கொண்டால்தான் இந்திரா காங்கிரஸ் கட்சி, தேர்தல்களையே எதிர்கொள்ள முடிகிறது!

திருச்செந்தூர் இடைத் தேர்தலிலும் - பெரியகுளம் இடைத்தேர்தலிலும் தனித்து நின்ற இந்திரா காங்கிரஸ் கட்சி அடைந்த கதி என்ன? பெற்ற வாக்குகள் எத்தனை?

உடன்பிறப்பே, திருவாளர் மூப்பனார் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்தை ஆழமாக நோக்குமிடத்து ஒன்று தெளிவாகப் புரிகிறது!

மாநிலக் கட்சிகளின் பெயர்களைச் சொல்லிக் கொண்டும் - அவற்றின் ஆதரவைப் பெற்றுக் கொண்டும் - இறுதியாக

அந்த மாநிலக் கட்சிகளை அழித்து, ஒழித்து விடுவதே இந்திரா காங்கிரசின் குறிக்கோளாகவும், உள்நோக்கமாகவும் இருக்கிறது என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாகும்!

ஆனால் ஒன்று! உறுதியாகச் சொல்லுகிறேன்!

அரசியல் சட்டம் உருவான பிறகு மொழிவாரி மாநிலங்கள் தேவையென்ற குரல் எழுப்பப் பெற்று, அது மதிக்கப்பட்டு, மொழிவாரியாக நிலப்பரப்புகள் பிரிக்கப்பட்டு - அந்தந்த நிலப்பரப்புகளுக்குள்ளும் குறிப்பிட்ட தாய்மொழியைக் கொண்டவர்கள், அவர்களுடைய தாய்மொழிக்கு செல்வாக்கு இருக்க வேண்டும், அந்தத் தாய்மொழிதான் தமது மாநிலங்களில் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்ற அவசியம் உணரப்பட்டு - இப்பொழுது 35 ஆண்டு காலமாக ஒரு மாநிலப் பிரக்ஞை - அதாவது உணர்வு - ஆங்கிலத்தில் கூற வேண்டுமானால் State Consciousness - ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறந்து விட இயலாது.

என 1983 மார்ச் 29-ஆம் நாள் நான் தமிழகச் சட்டப் பேரவையில் குறிப்பிட்டதை மீண்டும் இப்போது நினைவூட்டுகிறேன்.

பெங்களூரில் ஜனதா கட்சி முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் கூட்டிய தென்மாநில முதல்வர்கள் மாநாட்டுக்கு தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரும், ஆந்திர முதலமைச்சர் ராமராவும், புதுவை முதலமைச்சர் டி. ராமச்சந்திரனும் சென்று கலந்து கொண்டு மாநில உரிமைகள் - அதிகாரங்கள் பற்றி ராஜமன்னார் குழு அறிக்கையின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிட்டு அறிக்கை விடுத்தனரே! அந்த மாநாட்டை வரவேற்றுச் சட்டப் பேரவையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் துணைத் தலைவர் தோழர் உமாநாத் அவர்கள் கொண்டு வந்த பாராட்டுத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசியபோதுதான் மாநிலப் பிரக்ஞை அல்லது மாநில உணர்வு குறித்து விளக்கமளித்து அதில் தி.மு.கழகம் - அன்றும், இன்றும், என்றும் நிலை மாறாமல் இருக்குமென அறிவித்தேன்!

யார் என்ன சொன்னபோதிலும் - எத்தனை எதிர்ப்புகள் சோதனைகள் வந்த போதிலும் -

மாநிலத்தில் சுயாட்சி

மத்தியிலே கூட்டாட்சி

என்ற நமது கழகத்தின் குறிக்கோள் நிறைவேற - அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்ற சூளுரையை இதயத்தில் பதித்து ஏறுநடைப் பயணத்தைத் தொடருவோம்!

மாநில உணர்வுகளுக்கு மதிப்பு தராமல் தேசிய உணர்வுக்கு மட்டும் மதிப்பு தருவேன் என்பதற்கும், மாதா வயிற்றை எரியவிட்டு - மகேஸ்வரன் பூசை செய்வேன் என்பதற்கும் எந்தவொரு வேறுபாடும் இல்லை என்பதைத்தான் மாநில உணர்வை மறுக்கும் மூப்பனார் போன்றவர்களுக்கும், அவருக்கு மேலிடத்தில் இருப்பவர்களுக்கும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

20-08-1984

1259. ஆகஸ்டு 25 - அறப்போர் மறியல் அழைப்பு!

உடன்பிறப்பே,

இந்திரா காங்கிரஸ் அல்லாத எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், முதலமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாடுகள் அல்லது கூட்டங்களில் நமது கழகத்திற்கு அழைப்பு அனுப்பப்பட்ட போதெல்லாம் நாம் அவற்றில் கலந்து கொண்டு நமது கருத்துகளைத் தெரிவித்துத் தேவையான ஒத்துழைப்பும் வழங்கி வருகிறோம்.

1983-ஆம் ஆண்டு பெங்களூரில் ஜனதா கட்சியின் முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் தென் மாநில முதல்வர்கள் மாநாட்டைக் கூட்டினார். புதுவை மாநிலத்தில் நமது கழக முதல்வர் டி.ஆர். அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. புதுவையில் இந்திரா காங்கிரசுடன் கூட்டணி ஆட்சியிருக்கிற நிலையில் பெங்களூரில் ஹெக்டே கூட்டியுள்ள மாநாட்டுக்குப் போவது குறித்து நண்பர் டி.ஆர். அவர்கள் தலைமைக்கழகத்தின் கருத்தைக் கோரினார். உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற நமது நிலையான முடிவிலிருந்து அணுவளவும் மாற்றமில்லை என்பதைத் தெளிவுபடுத்தி, மாநில உரிமைகள் கோரும் ஒரு மாநாட்டுக்குச் செல்வது மாநில சுயாட்சிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நமது கழகத்திற்குப் பெரிதும் உடன்பாடானதும் விரும்பத்தக்கதுமான காரியமாகும் எனக் கூறிப் புதுவை முதல்வரை, பெங்களூர் தென்மாநில முதல்வர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தலைமைக் கழகம் பணித்தது!

இந்திரா காங்கிரசுடன் கூட்டணி ஆட்சி நடத்திக் கொண்டிருந்த நிலையிலேயே - விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் கொள்கைக்காகத் தனது பங்கினைச் செலுத்த அந்த மாநாட்டில் நமது கழகத்தின் புதுவை முதல்வர் கலந்து கொண்டார்.

அடுத்து, ஐதராபாத்தில் தெலுங்கு தேசக் கட்சியின் முதல்வர் என்.டி.ராமராவ் அவர்கள் நடத்திய எதிர்க்கட்சித் தலைவர்கள் முதலமைச்சர்கள் கொண்ட மாநாட்டுக்குக் கழகத்திற்கு அழைப்பு அனுப்பவில்லை. அதனால் கழகச் சார்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை. அழைக்கப்பட்டு அந்த மாநாட்டில் கலந்துகொண்ட தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்திரா காங்கிரசின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சத்தின் காரணமாக அங்கு எது குறித்தும் அபிப்பிராயம் கூறவில்லையென்று வெளிப்படையாக அறிவித்த கதையெல்லாம் நாடறிந்த செய்திதான்!

அதன் பிறகு காஷ்மீரத்தில் ஸ்ரீநகரில் முதலமைச்சர் பரூக் அப்துல்லா அவர்கள் கூட்டிய மாநாட்டுக்குக் கழகத்திற்கு அழைப்பு அனுப்பப்பட்டது. கழகச் சார்பில் பொருளாளர் சாதிக் அவர்களும், நாடாளுமன்றக் கழகக் குழுவின் தலைவர் சி.டி. தண்டபாணி அவர்களும் கலந்து கொண்டார்கள். மாநில சுயாட்சி குறித்து விரிவாக விவாதிக்கப்பட்ட அந்த மாநாட்டில் 1974-ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் கழக ஆட்சி நிறைவேற்றிய மாநில சுயாட்சித் தீர்மானம், தலையான இடத்தைப் பெற்றது! காஷ்மீர் மாநாடு குறித்து பரூக் அப்துல்லா வெளியிட்ட மிக முக்கியமான தொகுப்பு நூலில் மாநில சுயாட்சி குறித்துத் தி.மு.க.வின் கருத்துகள், பல பக்கங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன!

அதன் பின்னர் கல்கத்தாவில் முதல்வர் ஜோதிபாசு அவர்கள் நடத்திய எதிர்க்கட்சித் தலைவர்கள், முதலமைச்சர்கள் மாநாட்டுக்கும் கழகத்திற்கு அழைப்பு அனுப்பப்பட்டது! அந்த மாநாட்டில் நான் கலந்துகொண்டு, கழகத்தின் சார்பில் கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறேன்.

அண்மையில் காஷ்மீரில் பரூக் அப்துல்லா அமைச்சரவை கவிழ்க்கப்பட்டதை யொட்டி டெல்லியில் இந்திரா காங்கிரசல்லாத முதல்வர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் கொண்ட கூட்டத்தை ஆந்திர முதல்வர் என்.டி.ராமராவ் கூட்டினார். எனக்கும் அழைப்பு வந்தது. தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் அழைப்பு வந்தது. நான் பயணத்திற்குத் தயாராக இருந்தபோது எம்.ஜி.ஆரின் ஒரு பேட்டி ஏடுகளில் வந்தது! கருணாநிதி கலந்து கொள்ளும் மாநாட்டில் நான் கலந்து கொள்ள மாட்டேன் என்று எம்.ஜி.ஆர். கூறியிருந்தார்!

இதுபோன்ற முக்கியமான நேரத்தில் கூட்டப்படும் அவசியமான ஒரு கூட்டத்தில் ஒரு கட்சித் தலைவரான நான் கலந்து கொள்வதை விட, ஒரு மாநிலத்தின் முதல்வர் கலந்து கொள்வதே சிறப்புடையதாகும் எனக் கூறி, எம்.ஜி.ஆருக்கு வழிவிட்டு அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதை நான் தவிர்த்துக் கொள்வதாக அறிவித்தேன். அப்படிச் சொன்ன பிறகும் எம்.ஜி.ஆர்., அந்தக் கூட்டத்திற்குச் செல்லவில்லை! எனவே கழகச் சார்பில் அந்தக் கூட்டத்தில் சி.டி. தண்டபாணி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு கூட்டறிக்கையிலும் கையெழுத்திட்டார்.

இப்போது ஆந்திரத்தில் நடைபெற்ற ஜனநாயகப் படுகொலையைக் குறித்து விவாதித்து முடிவெடுக்க சௌத்ரி சரண்சிங் அவர்கள், விடுத்த அழைப்பினையேற்று டெல்லிக் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பினேன். கழகச் சார்பில் அந்தக் கூட்டத்தில் எடுத்து வைத்துள்ள கருத்துகளை நீ, ஏடுகளில் படித்திருப்பாய் என நம்புகிறேன்.

1983 முதல் இதுவரை நடந்துள்ள அகில இந்திய எதிர்க் கட்சிக் கூட்டங்களையும், அவற்றில் நாம் கலந்து கொண்ட விபரங்களையும் பட்டியல் போட்டுக் காட்டுவதற்குக் காரணமில்லாமல் போகவில்லை!

சில ஏடுகளில் வேண்டுமென்றே - இந்திரா காங்கிரசல்லாத எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கருணாநிதி இப்போதுதான் முதல் தடவையாகக் கலந்து கொண்டிருக்கிறார் என்று ஒரு தவறான செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

அழைக்கப்பட்ட எல்லா கூட்டங்களிலும் நானோ அல்லது நமது கழகப் பிரதிநிதிகளோ கலந்து கொண்டிருக்கிறோம் என்பதற்குச் சான்று பகரத்தான் இந்த விளக்கமே தவிர, வேறல்ல!

இந்திரா காங்கிரசின் ஆளுகையில் உள்ள மத்திய அரசின் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்து நாடு முழுதும் ஆகஸ்டு 25-ஆம் நாள் கண்டனப் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென டெல்லிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்டு 25 அன்று தமிழ்நாட்டில் நமது அனைத்துக்கட்சி முற்போக்கு அணியின் சார்பில் மத்திய, மாநில அரசு அலுவலகங்களின் முன்னால் நடைபெற இருக்கிற அறப்போர்

மறியலையொட்டியே, டெல்லிக் கூட்டத்திலும் ஆகஸ்டு 25 என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆந்திரா, காஷ்மீர், அதற்கு முன்பு சிக்கிம், பாண்டிச்சேரி என ஜனநாயகப் படுகொலைகள் நடத்தப்பட்டுள்ளதைக் கண்டித்தும்,

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு கடைப்பிடிக்கும் கால தாமதப் போக்கைக் கண்டித்தும், உரிய நடவடிக்கையினை உடனடியாக எடுத்திடக் கோரியும்,

இந்துக்கள் - முஸ்லிம்கள் - கிறிஸ்துவர்கள் - சீக்கியர்கள் போன்ற மக்களிடையே ஒற்றுமையைக் குலைத்துக் கலவரங்களுக்கு வித்திடும் ஒரு சில விஷமிகளுக்கு அரசியல் ஆதாயம் கருதி மறைமுகமாக ஆதரவு தரும் இந்திரா அரசையும், எம்.ஜி.ஆர். அரசையும் கண்டித்தும்,

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தகுதி படைத்த ஒருவரை இந்திய துணை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்க மறுத்துவிட்ட பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் செயலைக் கண்டித்தும்,

எட்டாவது நிதிக் கமிஷனில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டுள்ளதையும் - அதனைத் தட்டிக் கேட்க முன்வராத முதல்வர் எம்.ஜி.ஆரின் போக்கைக் கண்டித்தும்,

குடும்பக் கார்டுக்கு இருபது கிலோ அரிசியை வலியுறுத்தியும், அத்யாவசியப் பண்டங்களை நியாய விலைக் கடைகளில் மலிவாக வழங்க வேண்டுமென வற்புறுத்தியும்,

விவசாயிகளின் மின் கட்டணப் பாக்கியை உடனடியாக ரத்து செய்வதோடு - கட்டணப் பாக்கிக்காக துண்டிக்கப்பட்டுள்ள மின்இணைப்புகளை மீண்டும் வழங்கிட வலியுறுத்தியும்,

நெல், கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கட்டுபடியான விலை நிர்ணயிக்க முன்வராததைக் கண்டித்தும்,

உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்திட வலியுறுத்தியும்,

தொழிற்கல்வி நிலையங்கள் எம்.ஜி.ஆர். ஆட்சியின் லஞ்ச லாவண்ய வியாபார கேந்திரங்கள் ஆகிவிட்டதைக் கண்டித்தும்,

வழக்கறிஞர்கள், மாணவர்கள் மீது ஆளும்கட்சியினரும், காவல்துறையினரும் நடத்தும் அராஜக அடக்குமுறைகளைக் கண்டித்தும்,

மூடிக்கிடக்கும் ஆலைகளைத் திறக்க வழிசெய்யாது, வாடிக்கிடக்கும் தொழிலாளர்களுக்கு விரோதமாகச் செயல்படும் அரசின் போக்கை எதிர்த்தும்,

நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரிப்பது வரவேற்கப்படக்கூடியது எனினும், அப்படிப் பிரிப்பதிலும் - பெயரிடுவதிலும் தன்னிச்சையாகச் செயல்பட்டு வீண்குழப்பங்களை உருவாக்கும் அரசின் நிலையைக் கண்டித்தும்,

பஸ் கட்டணங்களை உயர்த்தப் போவதாகக் கூறி அதற்காகத் திட்டமிடுவதை எதிர்த்தும்,

வங்கிகளில் உண்மையான ஏழைகள் பயன்பெற முடியாமல் இந்திரா காங்கிரசாரின் ஆதிக்கம் பெருக்கெடுத்துப் பெரும் மோசடிகள் நடைபெறுவதைக் கண்டித்தும்,

ஆகிய பதினைந்து அம்சங்கள் அடங்கிய - நமது அறப்போர் மறியல் விளக்கத்தைப் பரவலாக மக்களுக்கு எடுத்துக்கூறிக் கொண்டிருப்பாய் என நம்புகிறேன்.

அனைத்துக்கட்சி முற்போக்கு அணியின் மாநிலக் கூட்டுக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையைத் துண்டுப் பிரசுரங்களாக அச்சடித்து வழங்குவதின் மூலமும் -

பொதுக்கூட்டங்கள் நடத்துவதின் மூலமும் -

நமது அணியின் அறப்போர் மறியலின் நோக்கத்தை அறியாதார் யாருமிலர் என்ற நிலையை உருவாக்கிட வேண்டுகிறேன்!

ஒவ்வொரு கட்சித் தலைமை நிலையத்தின் சார்பிலும், எந்தெந்த இடத்தில், யார் யார், அறப்போர் மறியலில் கலந்து கொண்டு முன்னிலையேற்கிறார்கள் என்ற அறிவிப்புகள் வெளிவரும்!


அதேபோல் நமது கழகச் சார்பில் கலந்து கொண்டு முன்னிலை யேற்போர் பட்டியலை நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் விரைவில் வெளியிடுவார்!

அனைத்துக்கட்சி முற்போக்கு அணியினர் தமிழகத்தில் நடத்தும் அறப்போர் மறியல் - இந்திரா காங்கிரஸ் அரசையும், எம்.ஜி.ஆர். அரசையும் எதிர்த்து, மக்கள் சக்தி, அமைதி வழியில் அணி திரண்டுவிட்டது என்பதை நாட்டுக்கு உணர்த்தட்டும்!

அன்புள்ள,

மு. க.

22-08-1984



A2221

K 894.8116

அருள்நா. 14

1260. காலம் கடந்த ஞானோதயம்!

உடன்பிறப்பே,

என்.டி. ராமராவ் ஆட்சியை டிஸ்மிஸ் செய்தது குறித்து பி.டி.ஐ. அல்லது யு.என்.ஐ. செய்தி நிறுவனத்தின் மூலம் வந்த தகவலுக்குப் பிறகுதான் அப்படியொரு நிகழ்ச்சி ஆந்திர மாநிலத்தில் நடந்திருப்பதாகவே பிரதமர் இந்திரா காந்திக்குத் தெரியுமாம்!

இதனைப் பிரதமரே நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார்! சொல்வது பிரதமராயிற்றே! நம்பத்தானே வேண்டும்!

கவர்னர் ராம்லால் என்ற பழுதடைந்து போன கம்ப்யூட்டருக்கு டெல்லியில் இருந்து எந்தக் கட்டளையும் திணிக்கப்பட வில்லையாம் - மேலிடத்துக்குத் தெரியாமலே ராமராவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளதாம் - இப்படிச் சொல்லியுள்ள பிரதமர் அவர்கள், பாஸ்கர ராவுக்கு ஆந்திராவில் உள்ள இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

பிரதமரின் கூற்றுப்படி, ஆந்திர கவர்னர் ராம்லால் என்பவர் இந்திரா அம்மையாருக்கு, அதாவது பிரதமருக்குத் தெரிவிக்காமலே ராமராவ் அவர்களுக்குப் பெரும்பான்மை பலம் இருந்தும்கூட அவரை டிஸ்மிஸ் செய்திருக்கிறார் -

அதை விட வேடிக்கை! ஆந்திராவில் உள்ள இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள், தங்களின் கட்சித் தலைவியான திருமதி இந்திரா காந்திக்குத் தெரியாமலே பாஸ்கர ராவ் என்ற ஒரு நன்றியுள்ள ? மனிதனை ஆதரித்து வாழ்த்துக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இவைகளை விடப் பெரிய வேடிக்கை அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர்களான மூப்பனார்

போன்ற இரண்டு மூன்று பேர் ஆந்திராவுக்கு விமானத்தில் பறந்து சென்று புதிய முதலமைச்சர் பாஸ்கர ராவுக்கு பாராட்டு தெரிவித்ததும் - ராமராவ் கட்சிக்குப் பெரும்பான்மை இல்லை என்று அறிவித்ததும் - அதனால் என்.டி.ஆர். ஆட்சி கவிழ்ந்தது இயற்கையே என நியாயப்படுத்திப் பேசியதும் - இத்யாதி காரியங்கள் அனைத்தும் கட்சித் தலைவியின் அனுமதியில்லாமலே அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர்களால் நடத்தப்பட்டுள்ளன.

தனக்கு ஆதரவான சில எம்.எல்.ஏ.க்களையும், அந்த எம்.எல்.ஏ.க்களின் நிழல்களையும் இரட்டிப்பு மடங்காக எண்ணிக் காட்டி நாடகமாடிய துரோகி பாஸ்கர ராவ், கவர்னர் ராம்லால் என்ற ஜனநாயகக் கொலைகாரரால் முதலமைச்சர் என்று அறிவிக்கப்பட்ட போது சட்டசபையில்தான் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டும் என்று அவசரச் செய்தியொன்றை ஆந்திர கவர்னரின் மாளிகைக்கு அனுப்பாமல் இருந்துவிட்ட பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் - இப்போது நூற்றி அறுபத்தேழு சட்டமன்ற உறுப்பினர்களை ராமராவ் அவர்கள் டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் முன்னிலையில் நிறுத்துகிறபோது மட்டும், சட்டசபையில்தான் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டும் என்று கூறுவதன் உள்நோக்கம் என்ன என்பதை உலகம் புரிந்து கொள்ளாமலா இருக்கிறது!

பாஸ்கர ராவ் என்ற துரோகி, தன்னிடம் தொண்ணூறு சட்டமன்ற உறுப்பினர் இருப்பதாகவும், இந்திரா காங்கிரசும் தனக்கு ஆதரவு தருவதாகவும் - எனவே, தன்னை முதலமைச்சராக அறிவிக்க வேண்டுமென்றும் கூறியபோது சட்டசபையில் யாருக்குப் பெரும்பான்மை என்பதை சோதித்துப் பாருங்கள் என்று முறையிட்ட என்.டி. ராமராவ் அவர்களை, அவர் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு வந்தவர் என்றும் பாராமல், போலீஸ் லாரியில் தூக்கிப் போட்டுக் கைது செய்து அழைத்துச் செல்ல ஆணையிட்ட கவர்னர் ராம்லால், தன்னிச்சையாகத்தான் செயல்பட்டார் என்று யாராவது சொன்னால் அப்படிச் சொல்கிறவர்களின் மனச்சாட்சியைச் சந்தேகப்படத்தானே வேண்டும்!

ஆந்திராவில் மக்கள் எழுச்சியை எதிர்கொள்ள முடியாமல் மத்திய, மாநில அரசுகள் தடுமாறுகின்றன!

அநீதியை எதிர்த்து ஆந்திரம் அக்கினிக் காடாகக் காட்சி தருகிறது!

இந்திரா காங்கிரஸ் கட்சி நடத்தும் ஜனநாயகப் படுகொலைக்கு முடிவே கிடையாதா என்று நெருப்புக் கேள்விகள் நெஞ்சைப் பிளந்துகொண்டு கிளம்புகின்றன!

யார் தலையில் பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்று, கல்லைத் தூக்கிக் கையில் வைத்துக்கொண்டு, ஆளைத் தேடி அலைகிறார்கள்!

ஆந்திர மாநிலம் மட்டுமல்ல! இந்திய நாடே கொதித்தெழுந்து குமுறுகிறது என்ற நிலைபிறந்தவுடன் - ஆறு நாட்களாக மௌனமாக இருந்த நண்பர் எம்.ஜி.ஆர். கூட! முதலில் ஒரு கண்டனத் தந்தி அனுப்பிவிட்டு - பிறகு அந்தத் தந்தியைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக அறிவித்து விட்டு! இப்போது வேற வழியில்லாமல் எல்லாம் சுபமாக முடியும் என்று கூறியிருக்கிறார் பார்த்தாயா!

ஆந்திராவில் தொடர்ந்து நடக்கும் கிளர்ச்சி!

இந்தியா முழுமையும் போர்க்கோலம் பூண்டிடும் என்பதற்கு அடையாளமாக டெல்லியில் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம்!

சர்வதேச பத்திரிகையாளர்கள் உண்மையை நேரில் கண்டு நடத்த இருக்கிற விமர்சனம்!

இவற்றின் கிடுக்கிப் பிடியில் சிக்கித் தவிப்பவர்கள், செய்வதறியாது விழிக்கிறார்கள்!

என்னதான் வாய்ஜாலம் செய்து தங்களின் நடவடிக்கைகளுக்குச் சமாதானம் தேட முயன்றாலும், உலகம் அவர்களைச் சரியாக அடையாளம் கண்டு கொண்டிருக்கிறது என்பதை மட்டும் மறைத்துவிட இயலாது! காலம் கடந்த ஞானோதயத்தினால் களங்கத்தைக் கழுவிக்கொள்ள முடியாது!

அன்புள்ள,

மு. க.

23-08-1984

1261. ஜி.கே. ரெட்டியின்
திசை திருப்பும் முயற்சி!

உடன்பிறப்பே,

ஆங்கில ஏடுகளில் - குறிப்பாகவும், சிறப்பாகவும் இந்து ஏட்டில் எழுதும் அரசியல் ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் புகழ் பெற்றவர் திரு. ஜி.கே. ரெட்டி என்பதை நீ அறிவாய்!

குறிப்பிடத்தக்க அரசியல் விமர்சகர்களில் ஜி.கே. ரெட்டியும் ஒருவர் என்ற முறையில் அவரது எழுத்துகளை ஆர்வமுடன் நான் படிப்பதுண்டு!

நாம் சில பிரச்சினைகளில் கொண்டுள்ள கருத்துகளுக்கு மாறுபாடாக அவரது கட்டுரைகள் அமைந்திருந்தாலும் - உள்ளார்ந்த வட்டாரங்களில் உருவாகிற நிலைமைகளை அவரது எழுத்துகள் ஆரூடம் போல எடுத்துக்காட்டக்கூடியவை என்பது அனுபவ ரீதியான உண்மையாகும்.

ஆந்திர மாநிலத்தில் நூற்றுஅறுபத்தெட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் என்.டி. ராமராவ் அவர்களின் பக்கம் இருக்கிறார்கள் என்றும் - அதனை நிரூபிக்கத் தயார் என்றும் - உடனடியாக சட்டசபையைக் கூட்டினால் தனது பெரும்பான்மையை உணர்ந்து கொள்ள முடியுமென்றும் - முதலமைச்சர் ராமராவ், ஆந்திர கவர்னர் ராம்லாலிடம் எடுத்துக் கூறியும்கூட - அதனைக் காதிலே போட்டுக் கொள்ளாமல், துரோகி பாஸ்கர ராவைத் தூக்கி முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைத்துவிட்ட நிகழ்ச்சியை திரு.ஜி.கே. ரெட்டி ஆதரிப்பதாகத் தெரியவில்லை.

இப்படியொரு நிலையை ஆந்திராவில் உருவாக்கியதன் காரணமாக, இந்திரா காங்கிரஸ் கட்சி செல்வாக்கிழந்து விடும் என்று கோடிட்டுக் காட்டவும் திரு.ஜி.கே. ரெட்டி தவறவில்லை!

ஆனால் அதே நேரத்தில் - ஆந்திராவில் நடந்த இந்த திட்டமிட்ட சதிச் செயல்கள் எதுவும் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு முன்கூட்டியே தெரியாது என்று எடுத்து வைக்கப்படுகிற வாதத்திற்கு வலுவூட்டும் வகையில் திரு.ஜி.கே. ரெட்டி, கட்டுரைத் தொடர்கள் எழுதி வருவது - அவர், தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறாரா - அல்லது வாசகர்களை ஏமாற்ற எண்ணுகிறாரா என்றுதான் விளங்கவில்லை!

நியாயத்தை அவரால் புறக்கணிக்க முடியவில்லை - நடந்து விட்ட தவறுகளுக்கு அவரால் வக்காலத்து வாங்க முடியவில்லை - இமயம் முதல் குமரி வரையில் உள்ள மக்கள் சக்தி, இந்திரா காங்கிரசின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்து ஆர்த்தெழுந்திருப்பதை அவரால் அலட்சியப்படுத்த முடியவில்லை! எனவே, ஆந்திராவில் நடைபெற்றுள்ள ஜனநாயகப் படுகொலையைக் கண்டிக்கும் தோரணையில் அவரது பேனாமுனை கனல் கக்குகிறது!

ஆனால், அந்த ஜனநாயகப் படுகொலையை நடத்தியதாக இ.பி.கோ. 302-வது பிரிவை கவர்னர் ராம்லால் மீது பிரயோகிக்க வேண்டுமெனக் குறிப்பிடுவது போலப் பொருள் வழங்கும் அவரது கட்டுரை, அந்த கொலை முயற்சிக்குத் தூண்டுதலாக இருந்து ஊக்கமளித்தவர்கள் மீது இ.பி.கோ. 307-வது பிரிவைப் பிரயோகிக்க வேண்டுமென, நாடு முழுதும் குரல் கிளம்பும்போது - அந்தப் பிரிவு, நெருங்க முடியாத இடத்திலே கொண்டு போய், பிரதமர் இந்திரா காந்தி அவர்களை நிறுத்திக் காப்பாற்ற முனைகிறார்!

இந்திராகாந்தி அவர்களுக்கு ராமராவ் முதலமைச்சராக வருவதிலோ அல்லது நீடிப்பதிலோ தனிப்பட்ட முறையில் எந்த வெறுப்பும் இல்லை.

என்ற ஒரு வாசகத்தைத் தனது கட்டுரையின் இடையில் புகுத்துவதன் மூலம் ஆந்திராவில் நடைபெற்ற ஜனநாயகப் படுகொலையில் 307-வது செக்ஷன், பிரதமர் மீது பாய்ந்து விடாமல் பாதுகாப்பு வழங்குகிறார் திரு.ஜி.கே. ரெட்டி!

ஆனால் அதே நேரத்தில், டெல்லியில் உள்ள மேலிடத்தின் செல்வாக்குமிகுந்த சில பிரமுகர்களின் பேச்சுக்கிணங்க ஆந்திர கவர்னர் மூர்க்கத்தனமாக நடந்து கொண்டதைக் கண்டு,

ஆந்திர மக்கள் கொந்தளிப்பைப் பார்த்து பிரதமரும் அவரது ஆலோசகர்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர் - என்றும் ஜி.கே. ரெட்டி எழுதியுள்ளார்.

ஆந்திர மக்களின் கொந்தளிப்பு கண்டு பிரதமருக்கு அதிர்ச்சியா?

தனக்குத் தெரியாமல் தன்னைச் சுற்றியுள்ளச் செல்வாக்கு மிக்க பிரமுகர்கள் ஆந்திர கவர்னருக்கு ஆணையிட்டு ராமராவ் ஆட்சியைக் கவிழ்த்ததால் பிரதமருக்கு அதிர்ச்சியா?

இந்த இரு நிலைகளாலும் அதிர்ச்சி என்றால் - ஆந்திர மக்கள் கொந்தளிக்காமல் இருந்திருந்தால் பிரதமருக்கு அதிர்ச்சியோ, கவலையோ ஏற்பட்டிருக்காது என்று கருதிட இடமிருக்கிறது அல்லவா?

பிரதமரையும் மீறி ஒரு மாநில ஆட்சியைச் சட்டவிரோதமாக - ஜனநாயக விரோதமாக - மிருகத்தனமாகக் கலைத்து விடக்கூடிய வலிமை வாய்ந்த அந்த மேலிடத்துச் சக்தி எது? அந்த சக்தியைப் பெற்ற செல்வாக்கு தேவதைகள் யார்?

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்பார்கள்!

தண்ணீர் பொங்கியிருந்தால் நான்தான் வெட்டினேன் என்பது!

பூதம் புறப்பட்டால் எனக்குத் தெரியாமல் யாரோ கிணறு வெட்டி விட்டார்கள் என்பதா?

பூதம் புறப்படக் காரணமாக இருந்தவர் பிரதமர் அல்ல, வேறு யாரோ சில பொல்லாதவர்கள் என்று அவர்கள் மீது 307-வது செக்ஷனை பிரயோகிக்கத் திசை திருப்பும் முயற்சியாகத்தான் ஜி.கே. ரெட்டி அவர்களின் கட்டுரைகள் தென்படுகின்றன!

ஆனால் தெளிவடைந்துள்ள மக்கள், வீட்டுக்கு நெருப்பு வைத்தவர்கள் யார் என்பதை விபரமாகப் புரிந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

அன்புள்ள,

மு. க.

24-08-1984

1262. எழுக நீ! எழுக எழுகவே!

உடன்பிறப்பே,

டெல்லியில் ஒரு அரசும், தமிழ்நாட்டில் ஒரு அரசும் ..... மக்களுக்கு நீதி போதனை செய்திடத் தங்களைவிட்டால் ஆள் இல்லை எனக் கருதிக் கொண்டு மனம்போன போக்கில் பேசிக் கொண்டிருக்கின்றன! அவ்வாறே செயல்பட்டுக் கொண்டுமிருக்கின்றன!

இந்தப் போக்கினை எதிர்த்துக் கண்டனக்குரல் எழுப்பிட - எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு அறப்போராட்டத்தில் ஈடுபட்டால், உடனே அந்தக் கட்சிகளைத் தேச விரோத சக்திகள் என்று பிரதமர் இந்திரா காந்தி வர்ணித்து விடுகிறார்! இங்குள்ள எம்.ஜி.ஆர். அவர்களோ, சமூகவிரோத சக்திகள் எனக் கூறி அடக்குமுறையை ஏவி விடுகிறார்.

இதோ - இன்றைக்கு ஆகஸ்டு 25 தமிழக முழுதும் நமது முற்போக்கு அணியின் சார்பில் நடைபெறுகிற அறப்போர் மறியலையொட்டி, முன்கூட்டியே ஆயிரக்கணக்கான தொண்டர்களும் - முன்னணி வீரர்களும் பல்வேறு மாவட்டங்களில் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திராவில் நடைபெற்ற ஜனநாயகப் படுகொலையைக் கண்டிக்கிறோம் என்று அணி திரண்டால் அதனை இந்திரா காந்தி அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை!

நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளான தேசஒற்றுமை - ஒருமைப்பாட்டு உணர்வு ஆகியவற்றிலிருந்து திசை திருப்புவதற்காகத்தான் எதிர்க்கட்சிகள் ஜனநாயகப் படுகொலை என்ற முழக்கத்தை எழுப்புகின்றன என்பதாகப் பிரதமர் அவர்கள், அவர்களதுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் குற்றம் சாட்டியிருக்கிறார்.

உயிரோடு தெருவில் நடமாடிக் கொண்டிருந்த மனிதன் மீது ஒரு மூர்க்கன் பாய்கிறான். கையிலிருந்த கொடுவாளால் கழுத்தை வெட்டுகிறான். ஒரு விநாடிக்கு முன் சிரித்துப் பேசிக்கொண்டு தெருவில் சென்ற அந்த மனிதன் இரத்த வெள்ளத்தில் மிதக்கிறான். துடிதுடித்துச் சாகிறான். அந்தக் கோர நிகழ்ச்சியைக் கண்ணால் கண்ட அந்தத் தெருமக்கள், அதோ ஓடுகிறான்! அவன்தான் கொலைகாரன்! விடாதே, பிடி! என்று துரத்துகிறார்கள். ஓடிய கொலைகாரன், போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டிலே நுழைந்து கொள்கிறான். அவனைத் துரத்தி வந்த மக்களிடம், இன்ஸ்பெக்டர் விபரம் கேட்கிறார்! கொலைகாரன் உங்கள் வீட்டில் ஒளிந்திருக்கிறான் என்று கூச்சலிடுகிறார்கள் மக்கள்! முட்டாள்களே! நீங்கள் ஊரின் அமைதியையும் - காவல்துறையின் கடமை உணர்வையும் களங்கப்படுத்த, கொலையென்றும் - கொலைகாரனென்றும் கூப்பாடு போடுகிறீர்கள்! மரியாதையாகப் போய்விடுங்கள்! என்று இன்ஸ்பெக்டர் கோபாவேசமாகப் பேசுகிறார்!

உடன்பிறப்பே, இதே நிலைதான் இன்று நாட்டில் பல மாநிலங்களில்!

முப்பது பேர் உள்ள புதுவைச் சட்டமன்றத்தில் பதினேழு பேர் ஆதரவு கொண்ட தி.மு.க.வுக்குப் பெரும்பான்மை இல்லை என்று கூறிச் சட்டசபையைக் கலைத்தார்கள்.

முப்பத்திரண்டு பேர் கொண்ட சிக்கிம் சட்டமன்றத்தில் பதினெட்டுப் பேர் தன் பக்கம் இருப்பதாக நிரூபித்துக் காட்டிய பண்டாராவின் கட்சியை ஏற்காமல் அங்கேயும் ஆட்சியைக் கலைத்தார்கள்.

பரூக் அப்துல்லாவின் கோரிக்கையை ஏற்று, சட்டமன்றத்தைக் கூட்டிப் பலப்பரீட்சை பார்ப்பதற்கு முன்வராமல் - பரூக் அப்துல்லாவைக் கவிழ்த்து விட்டு, ஷா என்பவரை முதலமைச்சர் என்றே அறிவித்து - பன்னிரண்டு பேர் கொண்ட ஷாவின் கட்சிக்கு இருபத்தாறு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு அளித்தார்கள்.

தேவைக்கு மேற்பட்ட பெரும்பான்மை என்னிடம் இருக்கிறது - நேரிலே வேண்டுமானாலும் எண்ணிக் கொள்க அல்லது சட்டமன்றத்தை உடனடியாகக் கூட்டித் தெரிந்து கொள்க என்று ராமராவ் அவர்கள் அறிவித்தும்கூட, ஆந்திரத்துக் கவர்னர் ராம்லால்

என்பவர், ராமராவ் அவர்களை டிஸ்மிஸ் செய்துவிட்டு - துரோகி பாஸ்கர ராவை முதல்வராக அறிவிக்கிறார்!

இவைகள் எல்லாம் ஜனநாயகப் படுகொலைகள் அல்லவாம்!

தேச ஒற்றுமை - ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு விரோதமாக எதிர்க்கட்சிகள், ஜனநாயகப் படுகொலையென்று திசை திருப்புகின்றனவாம்! இந்திரா அம்மையார் சொல்கிறார்!

ஊரின் அமைதியையும் - காவல்துறையின் கடமை உணர்வையும் களங்கப் படுத்த கொலை! கொலை! என்று கூச்சலிடுவதா? எனக் கேட்கும் இன்ஸ்பெக்டருக்கும் - பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் குற்றச்சாட்டுக்கும் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை!

இன்ஸ்பெக்டரின் பேச்சைக் கேட்டு அவரைச் சுற்றியிருந்த காவலர்கள், கொலைகாரனைத் துரத்தி வந்த மக்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது போலத்தான் - அந்தக் காவலர்களில் ஒருவராகச் செயல்படும் தமிழக முதலமைச்சர் அவர்கள்; அறப்போர் அடையாள மறியலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே - ஜனநாயகத்துக்கு எதிராகவும் - மக்களுக்கு விரோதமாகவும் செயல்படும் அரசுகளைக் கண்டிப்பது தவறு என்ற நிலையெடுத்து பல மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான தொண்டர்களைக் கைது செய்துள்ளார்.

கொலைகாரனை, இன்ஸ்பெக்டரே மறைத்து வைத்துவிட்டு - அவனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுவதிலேயிருந்து வேலியே பயிரை மேய்ந்த கதையாக அந்தக் கொலை முயற்சிக்கான தூண்டுதலே அவரிடமிருந்துதான் வந்திருக்கிறது என்ற உண்மையை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள மாட்டார்களா?

அதேபோல ஆந்திரத்தில் நடைபெற்றுள்ள ஜனநாயகப் படுகொலையைச் சுட்டிக்காட்டாத ஏடுகள் இல்லை! ஜனநாயகத்தில் பற்றுள்ள அரசியல்வாதிகள், நடுநிலையாளர்கள் அனைவருமே கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர்!

ஆனால் இந்திரா அம்மையார் அவர்களோ, இவற்றை ஜனநாயகப் படுகொலை எனக் கூறுவது தேச விரோதம் என்றும், ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்றும் விமர்சிக்கிறார்!

நான் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் வரும் இன்ஸ்பெக்டராக இந்திரா காந்தி அம்மையாரும் - அவர் ஆணைக்காக நிற்கும் காவலராக எம்.ஜி.ஆர். அவர்களும் தோற்றமளிக்கிறார்களா அல்லவா?

அண்மையில் ஒரு பேட்டியில் காஷ்மீரத்துப் பழம்பெரும் அரசியல்வாதியான சையத் மிர்காசிம் அவர்கள் மிகவும் மனம் நொந்து ஒன்றைக் கூறியிருக்கிறார்.

"I am very sure that soon, I too am going to be labelled a Secessionist by Mrs. Gandhi. Madam Indira Gandhi's logic is simple. "Either you are with me or you are anti-Indian"

என்னைக் கூட இந்திரா காந்தி ஒரு பிரிவினைவாதி என விரைவில் முத்திரை குத்திவிடக்கூடும். இந்திரா காந்தியின் தத்துவம் மிக எளிமையானது. அவர் அணியில் இருக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் இந்தியர்களே அல்லர்.

மிர்காசிம் அவர்கள் வடித்துள்ள கருத்தை மெய்ப்பிப்பதைப் போலத்தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போர்க்கொடி தூக்குகிற யாராக இருந்தாலும் அவர்களைப் பிரிவினைவாதிகள் - தேசத் துரோகிகள் - ஒருமைப்பாட்டுக்குப் பகைவர்கள் - என்று ஏதாவது ஒரு முத்திரையைக் குத்தி ஒழித்துக் கட்ட முனைவது திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் வாடிக்கையாக இருந்து வருகிறது!

ஜனநாயகம் காத்திட எமர்ஜன்சியை எதிர்த்து நின்ற கழக ஆட்சியைக் கலைப்பதற்கு எத்தனை எத்தனை வீண்பழிகளைச் சுமத்தினார்கள்! அதேபோலத்தான் இப்போதும் பேசுகிறார்கள் - குற்றம் சுமத்துகிறார்கள்!

எமர்ஜன்சியை கையில் வைத்துக்கொண்டு ஜனநாயகப் படுகொலை புரிந்தபோது அதனை ஆதரித்து ஆலவட்டம் சுழற்றிய எம்.ஜி.ஆர். அவர்கள், இப்போது எமர்ஜன்சி என்று அறிவிக்காமலே எதிர்க்கட்சிகளை ஒழித்துக்கட்டும் பிரதமர் இந்திரா அம்மையாரின் பக்கம் நிபந்தனையற்ற ஆதரவு தந்து நிற்பதோடு அல்லாமல் - ஜனநாயகப் படுகொலையை எதிர்க்கும் அனைத்துக் கட்சி முற்போக்கு அணியினரை அடக்குமுறை மூலம் சந்திக்கப் புறப்பட்டு விட்டார்!

இந்திரா அரசின் தவறுகளையும் - எம்.ஜி.ஆர். அரசின் தவறுகளையும் வன்மையாகக் கண்டித்து எழுந்துள்ள தமிழக மக்களின் வலிமை வாய்ந்த அணிவகுப்பை, அடக்குமுறைப் பூச்சாண்டி காட்டி எம்.ஜி.ஆர். அவர்களால் ஒடுக்கிவிட முடியாது!

இதனை அமைதி வழிநின்று - அறப்போர்க்களம் சென்று மெய்ப்பித்திட, என் அன்பு உடன்பிறப்பே! எழுக நீ! எழுக நீ! எழுக, எழுகவே!

அன்புள்ள,

மு. க.

25-08-1984

1263. அறப்போர் வெற்றி! ஆனாலும் ஓர் அதிர்ச்சி!

உடன்பிறப்பே,

அனைத்துக்கட்சி முற்போக்கு அணியின் அறிவிப்பின்படி, தமிழகத்தில் நடைபெற்ற ஒருநாள் அடையாள மறியல் அறப்போர் வெற்றி! மகத்தான வெற்றி!

காவல்நிலையங்கள், சிறைக்கோட்டங்கள், காவல்துறை ஆணையர் அலுவலகம் எங்கணும் இடம் போதாமல் திருமண மண்டபங்களிலும், விளையாட்டு அரங்குகளிலும், காவல் நிலையங்களை ஒட்டிய மைதானங்களிலும் கைது செய்யப்பட்ட அனைத்துக்கட்சி முன்னணியினரையும், செயல்வீரர்களையும் வைத்திட வேண்டிய நெருக்கடி அரசுக்கு ஏற்பட்டதை ஆங்காங்குள்ள மக்கள் தெளிவாகவே உணர்ந்துள்ளனர்.

மத்தியில் உள்ள இந்திரா காங்கிரஸ் அரசின் ஜனநாயகப் படுகொலைகள் தொடருவதைக் கண்டிக்கவும், தமிழகத்தில் எம்.ஜி.ஆர். அரசின் மக்கள் விரோத ஊழல் நடவடிக்கைகள் நாள்தோறும் பெருகிக் கொண்டிருப்பதைக் கண்டிக்கவும் - ஆகஸ்டு 25 மறியல் அறப்போரில் இரண்டு லட்சம் பேர் கைதாகிய செய்தி, தமிழ்நாட்டு வரலாற்றில் மிக முக்கியமான திருப்பத்துக்கு அறிகுறியாகும்!

அனைத்துக் கட்சிகளின் முன்னணித் தளபதிகள் - செயல்வீரர்கள் - பாட்டாளி வர்க்கத்தினர் - விவசாயப் பெருங்குடி மக்கள் - மகளிர் அணியினர் - இளைஞர் அணியினர் - மாணவர் அணியினர் - தங்கள் கரங்களில் கொடி தாங்கி - பட்டாளத்து நடைபோடும் பாசறை வீரர்களாக வரிசை வரிசையாக மறியல் போராட்டத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்திடத்

தவறாமல் ஈடுபட்ட நிகழ்ச்சியைக் கண்டும், கேட்டும் பூரித்துப் போனேன்!

வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரமும், விவேகமும், மன உறுதியும் கொண்ட உடன்பிறப்பாக நீ இருக்கும் போது - உன்னைப் போலவே நமது முற்போக்கு அணியிலே ஆற்றல்மிக்கோர் - அடக்குமுறையை ஏற்றிடுவோர் எண்ணற்றோர் இருந்திடும்போது அனைவரும் இணைந்து எடுத்த செயல் சோடையாகுமா? சொத்தையாகுமா?

ஆகஸ்டு 25-ஆம் தேதி காலையிலே அவசர அவசரமாக நிருபர்களை அழைத்து தமிழ்நாடு முழுவதும் மறியலில் கைதானவர்கள் பத்தாயிரத்து முந்நூற்றி எண்பத்தி நான்கு பேர்தான் என்று கோட்டையிலே அறிவித்த அரசின் தலைமைச் செயலாளர் திருவாளர் சொக்கலிங்கம் அவர்களேகூட, மாலையிலே வேறு வழியின்றி - ஆனாலும் மனச்சாட்சியின் கதவை முழுதும் திறந்திட வகையின்றி - மாநில முழுதும் கைதானோர் நாற்பத்தி ஒன்பதாயிரத்து நூற்றி எழுபத்தி ஐந்து பேர் என்று அறிவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருப்பதை எண்ணிப் பார்த்தாயா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாயிரம்பேர் பதினைந்தாயிரம் பேர் என்று எல்லா ஏடுகளிலும் செய்திகள் வருகின்றன! அவைகளையெல்லாம் கூட்டிப் பார்த்தால்கூட அரசின் செயலாளர் அவர்கள் கூறுகிற கணக்கு வேண்டுமென்றே எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுகிற கணக்கு என்பது கட்சிச் சார்பற்ற நடுநிலையாளர்களுக்குக் கூடப் புரியும்!

கைதானோர் விடுதலையாகி விட்டனர் - விடுதலையானாலும் கூட அவர்களிலே இருபதாயிரம் பேர் மீது மட்டும் வழக்குகள் தொடரப்படுமென அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் அச்சுறுத்தியுள்ளார்.

இந்த மிரட்டல் கண்டு யாரும் கவலைப்படப் போவதில்லை - கவலைப்படத் தேவையுமில்லை!

ஐம்பதாயிரம் பேர் மறியலில் கைதானதாக ஒப்புக்கொண்டு இருபதாயிரம் பேர் மீது மட்டும் வழக்குத் தொடருவானேன்?

அரசின் இந்த மிரட்டலை எப்படிச் சந்திப்பது - எத்தகையப் போராட்டத்தின் மூலம் சந்திப்பது என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து பேசி முடிவெடுப்பர்!

நாம் அறிவித்தது மறியல் மட்டுமே! ஆனால் நடந்ததோ முழு அடைப்பு!

முதலில் மாநில அரசு, தனது அலுவலகங்களுக்கு விடுமுறை வழங்கி - பஸ் போக்குவரத்தையும் நிறுத்துவதாக அறிவித்தது!

அடுத்து மத்திய அரசு, ரயில் போக்குவரத்தையும் நிறுத்துவதாக அறிவித்தது!

வன்முறை விளையும் - பொதுச் சொத்து நாசமாகும் என்று ஏதேதோ காரணங்களைச் சொன்னார்கள் எனினும், ஆகஸ்டு 25 - ஆம் நாள் தமிழ்நாட்டில் எல்லா நகரங்களும், ஊர்களும், வீதிகளும், தெருக்களும், வெறிச்சோடிக் கிடந்தன! இது நமது மறியல் போராட்டத்தின் நோக்கத்திற்குக் கிடைத்த மற்றொரு வெற்றிதானே!

மக்கள் சக்தி ஆர்த்தெழுந்துள்ளது! இந்த நிலையில் பழைய மாதிரி முண்டா தட்டும் பேச்சுக்கள் எடுபடமாட்டா என்பதை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் முழுமையாக உணர்ந்து கொண்டு விட்டார் என்றே தோன்றுகிறது!

இல்லாவிட்டால், எதிர்க்கட்சிகளின் போராட்டத்தை மக்கள் சந்திப்பார்கள்! என்பதுதானே அவரது வழக்கமான வீரவசனமாக இருந்திருக்கும்!

உடன்பிறப்பே, இந்திரா அரசின் ஜனநாயகப் படுகொலைச் செயலைக் கண்டித்தும், எம்.ஜி.ஆர். அரசின் மக்கள் விரோத ஊழல் நடவடிக்கைகளை எதிர்த்தும் வெற்றிகரமாக நடைபெற்ற இந்த அறப்போராட்டத்தில் - என்னையும், உன்னையும் அதிர்ச்சி அடையச் செய்யும் அவலச் செய்தியொன்று!

குன்றத்தூரில் அறப்போர்க் களம் புகுந்த ஏகாம்பரம் கழக அடலேறு! உணர்ச்சிக் கொந்தளிப்பால் திடீரெனத் தன்மேனிக்குத் தீயிட்டுக் கொண்டு - எவ்வளவோ அவசர சிகிச்சையளித்தும் பயனில்லாமல் மாண்டுவிட்டான்!

நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் ஆற்றிட வேண்டிய பணி எத்தனையோ இருக்கிறது. இதுபோன்ற உணர்ச்சிக்கு ஆட்பட்டு உயிரைப் போக்கிக் கொள்ளக்கூடாது என ஆயிரம் முறை வேண்டுகோள் விடுத்தும், அதனைக் கேளாமல் ஒரு உடன்பிறப்பு நம்மைவிட்டு இப்படிக் கோரமாகப் பிரிந்து விட்டதை எப்படித்தான் தாங்கிக் கொள்வது?

இந்தித் திணிப்பை எதிர்ப்பதற்காகவும் - இலங்கைத் தமிழருக்காகவும் - என்னைச் சிறையில் இட்டதற்காகவும் - எத்தனை எத்தனை உடன்பிறப்புகள் எரிதழலில் தங்களைக் கருக்கிக்கொண்டு உயிர் நீத்துள்ளனர்! இதோ! மத்திய அரசையும் - மாநில எம்.ஜி.ஆர். அரசையும் கண்டித்து மேலும் ஒரு உயிரா?

தேவையில்லை இனி இந்த வேலை! வேண்டாம்! கூடவே கூடாது! தியாக உள்ளங்கள் போற்றப்பட வேண்டியவை! ஆனால் இத்தகைய தற்கொலை முயற்சிகள் ஏற்க முடியாதவை!

மாபெரும் வெற்றியை வழங்கிய மறியல் அறப்போர் என் உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளத்தை நிரப்புகிற வேளையில் குன்றத்தூர் நிகழ்ச்சி, என்னால் அந்த மகிழ்ச்சியை முழுமையாக அனுபவிக்க முடியாமல் செய்துவிட்டது!

அன்புள்ள,

மு. க.

27-08-1984

1264. இந்திரா காங்கிரசார் சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

வாரணாசி, ஜாம்ஷெட்பூர் ஆகிய இடங்களில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துகள், ஆய்வு எதுவும் நடத்தாமலே பட்டிமன்றமோ - கருத்தரங்கமோ கூட்டாமலே - முரண்பாடான கருத்துகள் என்பதை நாட்டுமக்கள் தெளிவாக உணர்ந்து கொள்வார்கள்.

எதிர்க்கட்சிகளுக்குக் கொள்கைகள் எதுவும் கிடையாது. கொள்கை அடிப்படையில் ஒன்று சேரவில்லை. எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்று கருதுகிறார்கள்.

பிரதமரின் இந்த விமர்சனம், அவரையும், அவரது கட்சியையும் திருப்பித் தாக்கக்கூடிய இருமுனையும் கூர் உள்ள கத்தி என்பதை என்ன காரணத்தினாலோ பிரதமர் மறந்து விட்டார்கள்.

ஜாம்ஷெட்பூரில் பிரதமர் ஆற்றிய உரையில் இதோ, இன்னொரு முக்கியமான பகுதி:-

ஜம்மு-காஷ்மீரிலும் ஆந்திர மாநிலத்திலும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அங்கு ஆளுங்கட்சியிலிருந்து பிரிந்த கோஷ்டிகளுக்கு ஆதரவு தந்தது உண்மைதான்.

இப்போது இந்திரா அம்மையார் பதில் அளிக்க வேண்டி கேள்வி ஒன்று எழுகிறது!

அம்மையார் அவர்களே! எதிர்க்கட்சிகள், கொள்கை அடிப்படையில் ஒன்று சேரவில்லை என்கிறீர்கள். சரி! அப்படியானால் காஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த பனிரெண்டு பேர்களை இருபத்தாறு காங்கிரஸ் உறுப்பினர்கள் தாங்கிப் பிடித்து, அந்த சிறுபான்மைக்

கோஷ்டியை ஆட்சியில் அமர்த்தியது எந்தக் கொள்கையின் அடிப்படையில்?

அம்மையார் அவர்களே! மாநில உணர்வுகள், மாநிலக் கட்சிகள் கூடவே கூடாது என அண்மைக் காலத்தில் முழங்கி வரும் தாங்கள், காஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி என்ற பெயருடன் ஆட்சியில் அமர்ந்துள்ள மீர்ஜாபர் ஷா என்பவருக்கு ஆதரவு தருவதும் - அவரை ஆட்சி நடத்தச் சொல்லி ஆலவட்டம் பிடிப்பதும், என்ன கொள்கை என்பதைச் சற்று விளக்குவீர்களா?

ஆந்திரத்திலே கூட துரோகி பாஸ்கர ராவ் கையில், ராம்லால் என்ற ஆளுநர் - மன்னிக்கவும், ஆடுநர் தூக்கிக் கொடுத்த முதலமைச்சர் பதவிக்கு இன்னமும் தங்களின் காங்கிரஸ் கட்சி முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறதே, அது எந்தக் கொள்கையின் அடிப்படையில்?

தெலுங்கு தேசம் என்ற மாநிலக் கட்சியின் பெயரையே தனது ஆட்சிக் கட்சிக்கும் பாஸ்கர ராவ் சூட்டிக் கொண்டிருக்கும் போது எந்தக் கொள்கை அடிப்படையில் அந்தக் கட்சியுடன் ஒன்று சேர்ந்திருக்கிறீர்கள்?

எதிர்க்கட்சிகள், தங்களுக்கெனத் தனித் தனிக் கொள்கையைத் தனித் தன்மையுடன் வைத்துக் கொண்டு - ஒரு பொதுப் பிரச்சினைக்காக ஒன்று சேரும்போது கொள்கை என்ன ஆயிற்று? என்று குற்றம் சாட்டுகிற அன்புக்குரிய அன்னை இந்திரா அம்மையார் அவர்களே! கேரளத்தில் கருணாகரன் தலைமையில் நடைபெறுகிற இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஆட்சி என்பது அந்த அணியில் இருக்கிற எல்லாக் கட்சிகளின் கொள்கைகளையும் ஒன்றாகப் போட்டு வேக வைத்து வடித்தெடுத்த கஞ்சி வெள்ளமா?

கேரளாவில் எத்தனை கட்சிகள் கூட்டுச் சேர்ந்து அமைச்சரவையிலும் இடம் பெற்று, இந்திரா காங்கிரஸ் தலைமையில் ஆட்சி நடக்கிறது என்பதைத் தாங்கள், தங்கள் வசதிக்காக மறந்து விடலாமா தாயே?

அவ்வளவு தொலைவு போவானேன்? தமிழகத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தஞ்சையில் காங்கிரஸ் வேட்பாளரை நிறுத்தி வைத்துவிட்டு - அதற்குத் தமிழ்நாட்டில் உள்ள ஆளுங்கட்சியின் ஆதரவையும், ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சிகளாக உள்ள சுமார் பத்துப் பனிரெண்டு கட்சிகளின் ஆதரவையும் தேடிப் பெற்றீர்களே! அது எந்தக் கொள்கை அடிப்படையில் என்று விளக்குவீர்களா?

உடன்பிறப்பே, இந்த வினாக்களுக்கெல்லாம் விடை கிடைக்காது பிரதமரிடமிருந்து! காரணம், நமக்கு விடை அளிக்கக்கூடாது என்பதல்ல! விடை அளிக்க முடியாது, அவ்வளவுதான்!

டெல்லியில் ராமராவ் கொண்டு வந்து நடத்திய எம்.எல்.ஏ.க்கள் அணிவகுப்பில் மூன்று பேர் மேலவை உறுப்பினர்கள்! அவர்களுக்கு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடையாது!

பிரதமர் கண்டுபிடித்து வெளியிட்டுள்ள கணக்கு இது!

ஆந்திர சட்டசபையில் மொத்த உறுப்பினர் 295 பேர்!

அதில் 148 பேர், யார் பக்கமிருந்தாலும், அவர்களுக்கே பெரும்பான்மையிருப்பதாக ஜனநாயகக் கணக்கு கூறுகிறது!

பிரதமர் சொல்வது போல ராமராவ் அழைத்து வந்த 162 பேர்களில் மூன்று பேரை மேலவை உறுப்பினர்கள் எனக் கூறிக் கழித்துவிட்டாலும் கூட, 159 பேர் ராமராவ் அவர்களை ஆதரிக்கும் போது அவர்தானே முதலமைச்சராக நீடிக்க வேண்டும்?

வாதத்திற்காகக் கேட்கிறேன்! ராமராவ், டெல்லிக்கு அழைத்து வந்த உறுப்பினர்களைப் பற்றி அவ்வளவு ஆராய்ச்சி செய்து ஒற்றர் மூலமாக மூவர் எம்.எல்.சி.க்கள் எனக் கண்டுபிடிக்கப் பிரதமர் எடுத்துக் கொண்ட அக்கறையை - பாஸ்கர ராவ் வெறும் எழுத்து மூலமே காட்டியக் கணக்கை அவ்வளவு அவசரமாக ஏற்றுக் கொண்டு - ராமராவை டிஸ்மிஸ் செய்வதற்கு முன்பு எடுத்துக் கொண்டு யோசித்திருக்க வேண்டாமா?

இதையெல்லாம் வாதமாக்கினால் ஒரே வரியில் அம்மையார் குற்றம் சாட்டி விடுகிறார்கள், எதிர்க்கட்சிகளுக்குக் கொள்கையில்லையென்று!

உடன்பிறப்பே, உனக்காகக் கூட இந்தக் கடிதம் எழுதவில்லை! உலக அரங்கில் இந்தியாவின் ஜனநாயக நெறி கொடி கட்டிப் பறக்கிறது என எண்ணிக்கொண்டிருக்கும் இந்திரா காங்கிரசில் உள்ள நண்பர்களின் சிந்தனைக்காக இதனை எழுதினேன்!

அன்புள்ள,

மு. க.

28-08-1984

1265. காயம்பட்ட ஒரு காலகட்டம்!

உடன்பிறப்பே,

மரக்கிளையொன்றில் அழகிய புறா ஒன்று அமர்ந்திருந்தது! அதனைத் தனக்கு இரையாக்கிக் கொள்ளச் சமயம் பார்த்தவாறு - புறாவின் மீது பாய்ந்து தனது கால்களால் பற்றிக் கொண்டு போக மரத்திற்கு மேலே வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது ஒரு கழுகு! அந்த வழியாக வந்த வேடன் ஒருவன் புறாவைக் கண்டவுடன் அதனைத் தனது அம்பால் அடித்து வீழ்த்த வில்லை வளைத்துக் குறி வைத்தான்! கழுகின் பயங்கர நகங்களில் சிக்கி, அதன் வயிற்றுக்குள் அந்தப் புறா சென்று விடுமா? அல்லது வேடனின் கூர்மையான அம்பால் தாக்குண்டு அவனுக்கு விருந்தாகுமா?

கழுகு, புறாவின் மீது பாயப் போகிறது வானத்திலிருந்து!

வேடனின் அம்பு பறக்கப் போகிறது வில்லில் இருந்து!

இன்னும் ஒரு இமைப்பொழுதில் அந்தப் புறா, வேடன் கையிலோ அல்லது அந்தக் கழுகின் காலிலோ இருக்கும் உயிரற்ற உடலாக!

ஆனால் அந்த இரண்டு ஆபத்துகளில் எதுவும் நிகழாமல் புறா தப்பித்துக் கொண்டது!

எப்படித் தப்ப முடிந்தது? கீழே வேடனின் வில்லில் இருந்து கிளம்பிடும் அம்பு! மேலே பறந்து தாக்கும் பசி கொண்ட கழுகு!

இந்த அபாயத்திலிருந்து அந்தப் புறா தப்பித்துக் கொண்டு வானவெளியில் சிறகடித்துப் பறந்து சென்றது என்றால் அதிசயம்தானே!

நாணேற்றப்பட்ட அம்பினைப் புறாவை நோக்கி விடுகிற அந்தக்கணத்தில் வேகமாய் ஓடி வந்த வேங்கைப் புலியொன்று அந்த வேடன் மீது பாய்ந்தது! அந்தப் புலி அந்த வேடனின் கணைபட்டுச் சிறு காயத்துடன் தப்பி அவனைத் தேடிக்கொண்டு புதர்களிடையே பதுங்கிப் பதுங்கி வந்து இறுதியாக அவனைக் கண்டு அவன் மீது பாய்ந்தது!

வேங்கைப் புலி பாய்ந்த மாத்திரத்தில் வேடனின் கை வில்லில் இருந்த அம்பு, குறி தவறி மேலே கிளம்பியது! குறி தவறிய அந்தக் கூரம்பு, புறாவை விடுத்து, வானில் வட்டமிட்டுக் கொண்டிருந்த கழுகின் வயிற்றைத் துளைத்து வீழ்த்தியது!

புறாவை இரையாக்கிக் கொள்ளக் குறிபார்த்த கொடிய கழுகும், வேடனும் வீழ்ந்துவிட்ட காரணத்தால் புறா, விர்ரென்று சிறகடித்து விண்ணில் பறந்து சென்றது!

இளம் வயதில் நீ, படித்த அல்லது கேட்ட ஒரு கதையைச் சற்று மாற்றித் தந்துள்ளேன் - அவ்வளவுதான்!

ஏதோ ஒரு அரசியல் உவமைக்காக இந்தக் கதையைத் தேர்ந்தெடுத்து, சற்று திருத்தமுடன் சொல்கிறேன் என்று நீ நினைப்பது எனக்குப் புரியாமல் இல்லை!

கதையில் வரும் கழுகு யார்? வேடன் யார்? அவனை வீழ்த்த வந்த வேங்கை என்பது எதனைக் குறிக்கும்? இவற்றையெல்லாம் உன் யூகத்திற்கு விடுவதற்கு முன் ஒரு வார்த்தை!

புறாவை மட்டும் திராவிடர் இயக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்!

திராவிடர் இயக்கமெனும் வண்ணப்புறாவைக் கொன்று தின்றிட வட்டமிட்ட கழுகு எது என்பதையும் - அம்பு கொண்டு குறி பார்த்த அந்த வேடன் யார் என்பதையும் - யூகித்துத் தெரிந்துகொள்ள முடியாத உடன்பிறப்பா நீ?

இந்த இரண்டையும் பற்றிச் சிந்தித்துப் புரிந்து கொண்டால் - வேடன் மீது பாய்ந்து வீழ்த்திய வேங்கையைப் பற்றி நீ ஆராய்ந்து அறிய தலையைப் பிய்த்துக் கொள்ளவே தேவையில்லை!

திராவிடர் இயக்கம், புறாவாகச் சித்தரிக்கப்படும் பொழுது - இந்தப் பனிரெண்டு ஆண்டு, ஆம்! காயம்பட்ட ஒரு காலகட்டம்! அந்தக் காலகட்டம்தான் இந்தக் கதையில் கடும் புலியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதையும் உனக்குச் சொல்லி விடுகிறேன்!

இனி, உன் வேலை - வேடன் யார்?, கழுகு யார் என்று கண்டுபிடிக்க வேண்டியது!

அன்புள்ள,

மு. க.

29-08-1984

1266. முதுகில் குத்தியவர் யார்? யார்? யார்?

உடன்பிறப்பே,

1972-ஆம் ஆண்டு! சில நினைவுகள்! ஆம், நினைவு அலைகள்!

காங்கிரஸ்காரனாக இருந்த என்னைக் கலைஞர்தான், தன் கொள்கையின் பக்கம் ஈர்த்துக் கொண்டார் என்றும்,

கலைஞர் உருவத்தில் அண்ணாவைக் காண்கிறேன் என்றும், கழக ஆட்சி ஊழல் ஆட்சி என்று காங்கிரஸ்கார்கள் கூறுகிறார்களே, உண்மையா? எனக் கேட்டு - மாநாட்டில் கூடியிருந்த மக்கள் இல்லை! இல்லை! என்று கூறியதும், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று மதுரையில் திட்டவட்டமாகக் கூறியும், கழகத்தின் பொருளாளராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருந்த நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆகஸ்டில் ஒரு பேச்சும் - செப்டம்பரில் வேறுமாதிரியான பேச்சும் பேசி, திடீரெனத் தி.மு.கழகத்தின் முதுகில் குத்தினாரே - நினைவு இருக்கிறதா உனக்கு?

அவரது அந்தத் திடீர் மனமாற்றத்துக்கு வேறு எந்தக் காரணமும் இல்லை! மத்திய அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தை வீழ்த்த வேண்டுமென்றும் - ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்றும் அப்போது தமிழ்நாட்டில் ஒரு பாஸ்கராவை, எம்.ஜி.ஆர். வடிவத்தில் உருவாக்கியது!

சபாநாயகராயிருந்த மதியழகனைக் கைக்குள் போட்டுக் கொண்டு சட்டப் பேரவையில் கழக ஆட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது என்று ஒரு அபாண்டமான பொய்யைக் கூறச் செய்து இன்று ஆந்திர மாநிலத்தில் நடப்பது போன்ற ஒரு அரசியல் ஊஞ்சலாட்டத்தைத்

தமிழகத்தில் ஏற்படுத்தி கழக ஆட்சிக்குப் பதிலாக, காங்கிரசுக்குக் கட்டுப்பட்ட ஒரு பொம்மை ஆட்சியை எம்.ஜி.ஆர். தலைமையில் அறிவித்திட செய்திட்ட முயற்சியைத் தொடக்கத்திலேயே முனை முறியச் செய்துவிட்டோம்!

ஒரு பத்து பனிரெண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அன்றைக்கு எம்.ஜி.ஆர். பக்கம் சென்றனர்!

அந்தச் சிறு எண்ணிக்கையை வைத்துக் கொண்டே - எம்.ஜி.ஆர். அவர்கள், சட்டசபை விதிமுறைகளுக்கு மாறாகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கழக அரசுக்கு எதிராக நிறைவேறியது என்று அறிவிக்கச் சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன! அதற்கு அன்றைய தினம் மத்திய அரசின் அமைச்சர்கள் நேரடியாகத் தமிழகம் வந்து முகாமிட்டு எம்.ஜி.ஆருக்கு ஊக்கம் கொடுத்தனர்.

நூற்று எழுபதுக்கு மேற்பட்ட கழகச் சட்டமன்ற உறுப்பினர் களின் உறுதியானதும், நிலையானதும், கொள்கை அடிப்படை கொண்டதுமான ஆதரவுடன் விளங்கிய கழக அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது என்று சாதிப்பதற்கு வகுக்கப்பட்ட வஞ்சக சூழ்ச்சியின் பிரதான கதாநாயகனாக, ஆம் - மத்திய அரசின் இந்திரா காங்கிரஸ் அரசின் கையாளாக அன்றைக்கு எம்.ஜி.ஆர். விளங்கினார்!

1976-ஆம் ஆண்டு எமர்ஜன்சியை எதிர்த்த காரணத்திற்காக வீண்பழிகள் சுமத்தப்பட்டுக் கழக ஆட்சி, இந்திரா காங்கிரஸ் ஆட்சியினால் கலைக்கப்படும் வரையில் சுமார் நூற்று எழுபது சட்டமன்ற உறுப்பினர்களுடன் - மிகப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருந்தோம்!

1972-இல் எம்.ஜி.ஆரைக் கைப்பாவையாக்கிக் கொண்டு, மத்திய அரசு நமது கழகத்தில் கலகம் விளைவித்து எம்.எல்.ஏ.க்களைப் பிடித்து - ஆட்சியை உடனடியாகக் கவிழ்த்துவிடப் போட்ட திட்டம் பொடிப் பொடியாக்கப்பட்டு, அதற்குப்பிறகு நான்காண்டு காலத்திற்கு மேலாகத் தாக்குப்பிடித்து நின்றோம்!

கழகத்தின் முதுகில் எம்.ஜி.ஆர். குத்துகிறார் என்பதை உணராத சிலர் - அவரை உத்தமர் என்றும், புத்தர் என்றும் நம்பிக்கொண்டு, உள்ளூர்க் கோபதாபங்களின் காரணமாக அவரது அணிக்குச் சென்றனர்!

அப்படிச் சென்றவர்களில் ஒருவர்தான் அருமை நண்பர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களுமாவார்!

எம்.ஜி.ஆர். அவர்களின் சதித் திட்டத்துக்கு வயப்பட்டுவிட்ட சகோதரர் மதியழகன் அவர்களிடம், நிலைமைகளை விளக்கிட நான்தான் வலியுறுத்தி நண்பர் எஸ்.டி.எஸ். அவர்களை அனுப்பி வைத்தேன். மதியைச் சந்தித்துவிட்டு வந்த எஸ்.டி.எஸ்., இனிமேல் மதியழகன் சரியாக வரமாட்டார்! அவர் சதியில் சிக்கிவிட்டார் என்று கூறினார். ஆனாலும் நான் விடாமல் எஸ்.டி.எஸ். அவர்களை மீண்டும் மதியிடம் அனுப்பினேன். ஒருமுறையல்ல, மூன்று முறை அனுப்பி வைத்தேன்! ஆனால் மதியழகன் அவர்கள், எஸ்.டி.எஸ். அவர்களையே இறுதியாக மடக்கி விட்டார்!

எம்.ஜி.ஆர். அவர்களிடம் ஆரம்பக் கட்டத்தில் அப்படிப் போய்ச் சேர்ந்தவர்தான் எஸ்.டி.எஸ்.!

தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, அல்லது தி.மு.க. தேர்தல்களில் எதிர்பார்த்த பெரும்பான்மை இடங்களைப் பெற இயலாத பிறகு, பதவிக்காக எம்.ஜி.ஆர். கட்சிக்கு ஓடியவர்களைப் போலவோ - அல்லது ஆளுங்கட்சியில் ஒட்டிக்கொண்டால்தான் ஆதாயம் - ஆனந்தம் - அதிகாரம் - ஐஸ்வரியம் - என்ற ஆசைகொண்டு இடம் விட்டு இடம் தாவியவர்களைப் போலவோ அல்லாமல் - கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதே எதிர் அணிக்குச் சென்று, அந்த அணிக்கு அரசியல் உருக்கொடுத்து அரும்பணியாற்றியவர் எஸ்.டி.எஸ். என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை!

இன்று அவர் எம்.ஜி.ஆரின் முதுகிலே குத்தி விட்டார் என்று அமைச்சர் வீரப்பன், மதுரையிலே பேசியிருக்கிறார். ஆபிரகாம் லிங்கனை விட, கென்னடியை விட, காந்தியடிகளை விடப் பெருமைக்குரிய தலைவரான எம்.ஜி.ஆர். முதுகில் எஸ்.டி.எஸ். குத்திவிட்டார் என்பது வீரப்பன் உதிர்த்துள்ள உருக்கமிகு ? வாசகம்!

1972 ஆகஸ்டு மாதம் வரையில் கழகத்தையும் என்னையும் போற்றிப் புகழ்ந்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அவர்கள், மத்தியில் உள்ளவர்களின் மிரட்டல்களுக்குப் பயந்து அவர்களின் தூண்டுதலால் என் முதுகிலும் கழகத்தின் முதுகிலும் குத்தினாரே! அதை வீரப்பனைப் போன்றவர்கள், தங்களுக்கு வசதியாக மறந்து விடலாமா?

1972-ல் எம்.ஜி.ஆரின் திருக்கழுக்குன்றம் பேச்சும், சென்னை லாயிட்ஸ் காலனிப் பேச்சும் கழகத்தையும் கழகத்தில் உள்ள பதினெட்டாயிரம் கிளைக்கழகச் செயலாளர்களையும் காட்டிக் கொடுக்கும் பேச்சல்லவா? இயக்கத் தொண்டாற்றி மேனியெங்கும் விழுப்புண்கள் பெற்ற மதுரை முத்து போன்றவர்களையெல்லாம் மாசுபடுத்திடத் திட்டமிட்டுப் பேசிய பேச்சல்லவா?

ஒரே மாதத்தில் எம்.ஜி.ஆருக்கு அந்தத் திடீர் மாற்றம் ஏற்படுவானேன்? மத்திய மேலிடத்தால் தந்த கொடுவாள் கழகத்தின் முதுகில் அவர் குத்துவானேன்? அப்போதே ஆட்சியைக் கலைத்துவிட்டு தி.மு.கழகத்தை அறவே அழித்துவிட மத்திய அரசுக்கு எம்.ஜி.ஆர். எடுபிடியாக மாறியதைத் தவிர வேறென்ன காரணம் இருந்தது?

ஆனால் எஸ்.டி.எஸ். பிரச்சினை அவ்வாறல்ல!

அவரை அ.தி.மு.க.விலிருந்துத் துரத்துவதற்காகக் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவே திட்டமிட்டுக் காரியங்கள் எம்.ஜி.ஆரின் கூடாரத்தில் நடைபெறுகின்றன!

என்னவோ! தி.மு.க.விலிருந்து வந்துவிட்டோம் - திராவிடர் இயக்க உணர்வுகளுக்குச் சேதாரம் வராத அளவுக்கு அ.தி.மு.க.வை இயக்குவோம் என, எஸ்.டி.எஸ். எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தார்!

அவரை வழிமறித்துத் தாக்குவது போலக் கடந்த ஆண்டு தஞ்சை மாவட்ட நிகழ்ச்சியொன்றுக்கு அவர் போனபோது அமைச்சர் வீரப்பனின் அணியினர், மரங்களை வெட்டிப் போட்டுப் பாதையை அடைத்தனர்!

அவருக்கு மாசு கற்பிக்க வீரப்பன் அணியின் மூலமாக எம்.ஜி.ஆர். பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து தீட்டினார்!

அண்ணாவின் கொள்கைகளும், பெரியாரின் குறிக்கோளும் அ.தி.மு.க.வில் குழிதோண்டிப் புதைக்கப்படுவது கண்டு எஸ்.டி.எஸ். மனம் குமுறினார்!

எம்.ஜி.ஆரைப் போல எடுத்த எடுப்பில் பொதுக்கூட்டங்களில் பேசாமல் - முறையாகச் செயற்குழு, பொதுக்குழுக்களில் தனது கருத்துக்களை எடுத்து வைத்து வாதாடினார்!

அப்படி வாதாடிய காரணத்தால் அவருக்கு மட்டுமல்ல - கட்சியின் பெரிய பொறுப்புக்களை வகிப்பவர்களுக்குக் கூட மூக்கறுப்பு ஏற்படக்கூடிய அளவுக்கு எம்.ஜி.ஆரின்

அபிமானத்திற்குரியவர்கள் செயற்குழு பொதுக்குழுக்களில் நடந்து கொண்டார்கள் என்று நாடு முழுதும் செய்தி பரவியது!

அன்று எம்.ஜி.ஆர் - தி.மு.க. ஆட்சியின் மீது ஊழல் புகார் என்ற புழுதியை வாரி இறைத்தார். அது உண்மையாக இருக்குமோ என எண்ணிய காரணத்தால் எம்.ஜி.ஆர். பக்கம் சென்ற எஸ்.டி.எஸ். போன்றவர்கள், இன்று எம்.ஜி.ஆர். அவர்களும் - அவரது நெருங்கிய திருக்கூட்டத்தினரும் லஞ்சாவதாரங்களாக - ஊழல் நாயகர்களாக - காட்சி தருவதைக் கண்டு, உண்மையை உணர்ந்து திடுக்கிட்டார்கள்!

தியேட்டர் மந்திரிகள்
திருவான்மியூர் நில மந்திரிகள்
மரம் வெட்டி மந்திரிகள்
மருத்துவக் கல்லூரி வசூல் மந்திரிகள்
சாராய ஊழல் மந்திரிகள்
சாலைப் போக்குவரத்துத் திருட்டு மந்திரிகள்
வீட்டுவசதி வாரிய வேட்டை மந்திரிகள்
கூட்டுக்கொள்ளை நடத்தும் மந்திரிகள்

இப்படி ஊர் பேசுகிறது! உலகம் பேசுகிறது! ஊழல் மகாபாபங்களுக்கு எங்களையும் துணைசேர்க்கிறீர்களே என்று குமுறினார்கள் நண்பர் எஸ்.டி.எஸ். போன்ற சிலர்! அந்தக் குமுறலும் கொந்தளிப்பும் கோப்புகளில் கையெழுத்திடுவது வரையில் எதிரொலித்தன!

கோடி கோடியாகப் பணம் கொள்ளையடிக்க வசதியான கோப்புகள் செல்லும் இலாகாக்கள் எஸ்.டி.எஸ். இடம் இருந்ததால், அவர் எம்.ஜி.ஆரின் ஊழலுக்குக் குறுக்கே நின்று கொண்டுதானிருப்பார் என்று அந்த இலாகாக்களைப் பறிமுதல் செய்தார் எம்.ஜி.ஆர்.!

திராவிடர் இயக்கத்தையே அழிக்க வந்த குள்ள நரிகளை விட்டு, எஸ்.டி.எஸ். அவர்களின் குரல்வளையைக் குதறுமாறு மறைமுக உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டன!

மேலிட ஆணைப்படி மாவட்ட அமைப்புகளில் எஸ்.டி.எஸ். எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன!

மேலிடத்து உத்தரவின்படி எஸ்.டி.எஸ்.ஸுக்கு கறுப்புக் கொடிகள் காட்டப்பட்டன!

ரயிலடி வரவேற்பில் அவர்மீது தாக்குதலும் நடத்தப்பட்டு விட்டது!

இனிப் பொறுத்திட இயலாது என்ற சூழ்நிலையில்தான் எரிமலையெனப் பொங்கி வழிகிறார் இப்போது எஸ்.டி.எஸ்.!

எஸ்.டி.எஸ்.சின் முதுகிலே குத்திக் கொண்டிருப்பவர்கள், அய்யோ! தலைவரின் முதுகிலே எஸ்.டி.எஸ். குத்திவிட்டார் என ஓலமிடுவது சந்தையில் கழுத்துமணி அறுத்த சண்டாளன், அதோ! திருடன்! திருடன்! என்று சப்தமிட்டுக் கொண்டு ஓடித் தப்பிக்க முயலுவது போல இருக்கிறதல்லவா?

உண்மையில் எஸ்.டி.எஸ்., யார் முதுகிலும் குத்தவில்லை!

அவர் முதுகில்தான் இரண்டாண்டு காலமாகவே எம்.ஜி.ஆரின் தூண்டுதலோடு குத்திக் கொண்டிருக்கிறார்கள்!

வேதனை தாங்காமல் - இப்போது எஸ்.டி.எஸ். வேங்கையாக மாறுகிறார்!

மிதிக்க மிதிக்கப் புழுவும் புலியாகுமென்பார்களே, அதுபோல!

திராவிடர் இயக்கத்தின் முதுகில் குத்தியவர் எம்.ஜி.ஆர்.தான் என்பதை 1972-ஆம் ஆண்டினை ஒருமுறை திரும்பிப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்!

இன்று எம்.ஜி.ஆருடன் இருக்கும் நாவலர் போன்றவர்கள் அன்று எம்.ஜி.ஆரின் செயல் குறித்துப் பேசிய பேச்சுக்கள் தேதி வாரியாக ஏடுகளில் அச்சாகி வெளி வந்துள்ளன. அவைகள் அந்த முதுகில் குத்திய துரோகத்தை உலகுக்குப் புரியவைக்கும்!

பாவம்! சோமசுந்தரம் போன்றவர்கள் - பச்சைப் பாம்பை, பச்சைக் கொடியென நம்பினர்!

இன்று அவர்களின் கண்களுக்கு உண்மை ஒளி கிடைத்திருக்கிறது என்பதைத்தான் சில நாட்களாக வெளிவரும் செய்திகள் மெய்ப்பிக்கின்றன.

அன்புள்ள,

மு. க.

01-09-1984

1267. கொள்கையற்றோர் கூடாரத்திலே!

உடன்பிறப்பே,

அண்டப் புளுகர் - ஆகாசப் புளுகர் - அரசியல் கோமாளிகள் ஆகியோரின் மடமாகிவிட்டது அ.இ.அ.தி.மு.க. என்பது நாடறிந்த உண்மை! இருந்தாலும் கூட சர்க்கஸ் கூடாரத்தில் கோமாளிகள் அடிக்கும் கூத்தைப் பார்த்துச் சில நேரங்களில் வாய்விட்டுச் சிரிக்கிறோம் இல்லையா? அதுபோல அந்தக் கட்சியின் செயற்குழு பொதுக்குழுத் தீர்மானங்களைப் படித்து விட்டும் சிரித்துத் தொலைக்க வேண்டியிருக்கிறது.

இதோ ஒரு தீர்மானம்! காரசாரமான தீர்மானம்! ஆந்திராவில் ஜனநாயகப் படுகொலை என்பது அந்தத் தீர்மானத்திற்கு தினத்தந்தி தந்துள்ள தலைப்பு! அடடா! பதினைந்து நாள் கழித்தாவது ஆந்திராவில் ஜனநாயகப் படுகொலை நடைபெற்றதை எம்.ஜி.ஆர். கட்சியினர் ஒப்புக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்களே யென்று மிகுந்த ஆர்வத்துடன் அதனைப் படித்தேன்!

தீர்மான வாசகம் என்ன தெரியுமா? இதோ -

இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்குக் கூடத் தெரிவிக்காமல் ஆந்திர கவர்னர் ராம்லால், ஆந்திராவில் பெரும்பான்மையுடன் இருந்த அரசை நீக்கியது மிகப்பெரிய ஜனநாயகப் படுகொலையாகும்.

இதுதான் அந்த முக்கியமான தீர்மானத்தின் வாசகமாகும். ஆந்திர கவர்னர் ராம்லால் அவர்கள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்குத் தெரியாமல் ராமராவ் அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டாராம்! இந்திரா காந்திக்கும், ஆந்திராவில் ராமராவ் ஆட்சிக் கவிழ்ப்புக்கும் சம்பந்தமில்லையாம்! ராம்லால் என்ற கவர்னர் மேலிடத்தைக் கலக்காமலே ராமராவ் அவர்களை டிஸ்மிஸ்

செய்துவிட்டாராம்! ஒரு கவர்னர், பிரதமரையோ, மத்திய அரசையோ கலந்து கொள்ளாமல் ஒரு ஆட்சியைக் கவிழ்த்து விட்டாராம் - அதுமட்டுமல்ல, அந்த ராம்லால் என்ற கவர்னரால் முதலமைச்சர் என்று அறிவிக்கப்பட்ட பாஸ்கர ராவ் என்ற துரோகிக்கு ஆந்திர சட்டசபையில் உள்ள காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள், தங்களின் தலைவியான இந்திரா காந்தி அவர்களைக் கேட்காமலே ஆதரவு தந்துவிட்டார்களாம்!

கவர்னர், பிரதமரைக் கலந்து கொள்ளாததும் - ஆந்திரக் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் மேலிடத்தை யோசனை கேட்காததும் உண்மையென்றால் உடனடியாக அன்னை இந்திரா என்ன செய்திருக்க வேண்டும்?

ஜனநாயகக் குழந்தையைக் காப்பாற்ற பாஸ்கர ராவ் அவர்களை டிஸ்மிஸ் செய்திடும் வழிவகைகளைக் கண்டிருக்க வேண்டாமா? கவர்னர் ராம்லால் மீது குற்றம் சுமத்தி அவரையும் டிஸ்மிஸ் செய்திருக்க வேண்டாமா? டெல்லி ஜனாதிபதி மாளிகைக்கு வந்து தனது பெரும்பான்மை பலத்தை நிரூபித்துக் காட்டிய என்.டி.ராமராவ் அவர்களை முதலமைச்சராகத் தொடர்ந்து நீடிக்க அங்கீகரித்திருக்க வேண்டாமா?

இவைகள் எதையும் செய்யாமல் இந்திரா காந்தி அவர்களும் அவரது அமைச்சர் பெருமக்களும் ராமராவ் அவர்களுக்கு எதிரான கருத்துகளையே நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் தொடர்ந்து தெரிவித்து வருகிறார்களே! அதுகூடவா நாட்டோரின் கவனத்திற்கு வரவில்லையென்று எம்.ஜி.ஆரின் கூடாரத்து அரசியல் மேதைகள் ? நம்புகிறார்கள் - பாவம்!

கவர்னர் ராம்லால் புரிந்தது அநியாயம் என்று இந்திரா உணர்ந்திருந்தால் - உடனே தனது கட்சியினர் பாஸ்கர ராவுக்கு அளித்த ஆதரவையும் வாபஸ் பெறுமாறு ஆணையிட்டிருக்கலாமே! ஆந்திரக் கவர்னர் புரிந்த ஜனநாயகப் படுகொலைக்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் துணை நிற்கலாமா?

காஷ்மீரில் நடந்தது போலத்தான் அனைத்தும் இந்திரா காந்தியின் அருளாசியுடன், ஆந்திர மாநிலத்திலும் நடைபெற்றிருக்கிறது!

தனக்கு எதுவுமே தெரியாது, பத்திரிகையில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன் என்று இந்திரா காந்தி அவர்கள்

பாராளுமன்றத்தில் கூறியபோதே உலக நாடுகளில் உள்ள ஏடுகள் அனைத்தும் அதனை இந்த ஆண்டின் தலைசிறந்த சிரிப்பு வெடிச் செய்தி! என வர்ணித்தன.

எல்லோரும் சிரித்து ஓய்ந்தவுடன் இப்போது மீண்டும் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மூலம் மீண்டும் ஒரு சிரிப்பு வெடியைக் கொளுத்திப் போட்டிருக்கிறார்.

இந்திராவுக்குக்கூட தெரியாமல் ஆந்திராவில் ஜனநாயகப் படுகொலை நடத்திய கவர்னர் ராம்லாலைக் கண்டிக்கிறார்களாம்!

இந்தக் கண்டனத்தைக்கூட ராஜ்யசபையில் இருந்த பதினொரு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் லோக்சபாவிலிருந்த மூன்று உறுப்பினர்களும் தெரிவிக்கப் பயந்து சபைக்கே போகாமல் இருந்து விட்டார்களே! ஏன்?

சரி! ராம்லாலுக்குப் பிறகு கவர்னர் பதவியேற்ற பழம்பெரும் காங்கிரஸ்காரர் சர்மா அவர்கள், பிரதமரை டெல்லியில் பேட்டி கண்டு விட்டு ஆந்திராவுக்கு வந்தவுடன் செய்த காரியம் என்ன?

மெஜாரிட்டியை நிரூபிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த பாஸ்கர ராவ் அவர்களின் சொற்படி பதினேழு புதிய அமைச்சர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தாரே, அதுகூட பிரதமருக்குத் தெரியாமல் நடந்த செயல்தானா?

கவர்னராக சர்மா பதவியேற்கிறார் என்ற வைபவத்திற்கு ராஜ்பவனுக்குச் சென்றால் - அங்கே ஒரே மேடையில் இரண்டு கல்யாணம் என்பது போல, கவர்னர் பதவியேற்பு முடிந்ததும் - அப்பொழுதே மற்றொரு திடீர் அறிவிப்பின் வாயிலாகப் புதிய மந்திரிகள் பதினேழு பேருக்கு புதிய கவர்னர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தது, கொலை செய்யப்பட்ட ஜனநாயகத்தின் குடலையும் உருவியது போன்ற காரியமல்லவா?

இந்த ஜனநாயக விரோதச் செயல்களுக்கெல்லாம் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் கருணாகடாட்சம் இருப்பதைப் போலவே, முதலமைச்சர் பதவியிலிருந்து என்.டி.ராமராவ் டிஸ்மிஸ் செய்யப்பட்டதற்கும் இருந்திருக்கிறது என்பதை இந்த நாடே ஒரு குற்றச்சாட்டாகக் கூறும்போது சத்யா ஸ்டுடியோ அரசியல் அறிஞர்கள் மட்டும் - இல்லை! இந்திரா காந்திக்கே தெரியாது எனத்

தீர்மானம் போட்டுத் திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்! அல்ல! அல்ல! யாரையோ திருப்தி செய்ய முனைகிறார்கள்!

இன்னொரு வேடிக்கை! சட்டம் படித்த மேதைகள் நிறைந்த அந்த சத்யா ஸ்டுடியோ சபையில் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தில் மற்றொரு வாசகம்!

ஆந்திர கவர்னர், பிரதமருக்குத் தெரியாமல் செய்த இந்த ஜனநாயகப் படுகொலைக்கு அரசியல் சட்டத்தில் உள்ள 356-வது பிரிவுதான் காரணமாகும்.

இப்படிக் கூறுகிறது எம்.ஜி.ஆர். கட்சியின் தீர்மானம்!

இங்கு எங்கு வந்தது 356-வது பிரிவு?

356-வது பிரிவு என்றால் என்ன? அது எப்போது பயன்படுத்தப்படுகிறது?

சத்யா ஸ்டுடியோவில் அமர்ந்து தீர்மானம் எழுதிய சட்ட மேதைகள் ? அதை ஆராய்ந்து பார்க்கவில்லையா?

ஒரு மாநில கவர்னரின் அறிக்கையின் அடிப்படையிலோ அப்படி ஒரு அறிக்கை இல்லாமலோ ஒரு மாநில ஆட்சியை ஜனாதிபதி கலைத்துவிடலாம் என்பதற்கு அதிகாரம் அளிப்பதுதான் அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவு!

இப்போது ஆந்திராவில் மாநில ஆட்சி கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியா பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது? இல்லையே! நான் இந்தக் கடிதம் எழுதும் செப்டம்பர் இரண்டாம் தேதி வரையில் அப்படியொரு பிரகடனம் வரவில்லையே!

பிறகு எப்படி இப்போது ஆந்திராவில் கவர்னர் நடத்திய ஜனநாயகப் படுகொலைக்கு 356-வது பிரிவுதான் காரணம் என்று கூறுகிறது எம்.ஜி.ஆர். கட்சியின் தீர்மானம்?

பிரதமரின் ஆலோசனைகளைப் பெற்று செயல்பட்ட ஆந்திர கவர்னர் ராம்லால் அரசியல் சட்டத்தில் உள்ள கவர்னருக்கு விசேஷ அதிகாரங்களை வழங்கும் 164-வது பிரிவின்படிதான் நடந்து கொண்டு, என்.டி.ஆர். அவர்களை ஜனநாயக விரோதமாக டிஸ்மிஸ் செய்துவிட்டு, பாஸ்கர ராவை முதலமைச்சராக்கியிருக்கிறார். இதனை சத்யா ஸ்டுடியோவில் கூடிய சட்ட மேதைகள் இனியாவது படித்துப் புரிந்து கொள்வது நல்லது!

உடன்பிறப்பே, இன்னொரு விநோதம் பார்த்தாயா?

அரசியல் சட்டத்தில் உள்ள 356-வது பிரிவை அறவே ரத்து செய்ய வேண்டுமென்றும் அண்மைக்காலமாக அ.இ.அ.தி.மு.க.வினர் கூறி வருகிறார்கள். இப்போது தீர்மானமும் போட்டிருக்கிறார்கள்.

ஜனதா ஆட்சிக்காலத்தில் ராஜ்ய சபையில் 356-வது பிரிவை நீக்க வேண்டுமென்று ஒரு மசோதாவை முரசொலி மாறன் கொண்டு வந்தபோது அந்த மசோதாவை வலியுறுத்திப் பேசி இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் மற்றும் சில உறுப்பினர்களும் வாக்களித்தபோது மாறனின் மசோதாவுக்கு எதிராக வாக்களித்தவர்கள்தான் எம்.ஜி.ஆர். கட்சியினர் என்பதையும் - 1974-இல் தமிழக சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேறிய போது ராஜமன்னார் குழு அறிக்கையைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டுமெனக் கூறிவிட்டு வெளிநடப்பு செய்தவர்கள்தான் எம்.ஜி.ஆர். கட்சியினர் என்பதையும் வரலாறு மறந்துவிடவில்லை!

மாநில ஆட்சிக் கலைப்புகளுக்கு உறுதுணையாகத் தி.மு.க. இருந்து வருகிறது என்றும் சத்யா ஸ்டுடியோ அரிச்சந்திரர்கள் ? குறைகூறித் தீர்மானம் வடித்துள்ளார்கள்.

1976-இல் தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று பிரதமரிடம் மனு எழுதி நேரிலே கொடுத்தவர் எம்.ஜி.ஆர். என்பதும், அந்தச் செய்தி அப்போது ஏடுகளில் எட்டுக்காலம் செய்தியாக வந்ததும் - கழக ஆட்சி கலைக்கப்பட்டதும் அதனை வரவேற்று நீண்ட அறிக்கை கொடுத்தவர் எம்.ஜி.ஆர். என்பதும் மக்களுக்கு நினைவில் இருக்காது என்ற நம்பிக்கையில் செயற்குழு, பொதுக்குழு தீர்மானங்கள் என்ற பெயரால் நகைச்சுவை நாடகம் நடத்தியிருக்கிறார்கள்!

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு 1977-இல் ஜனதா ஆட்சி, மாநில அரசுகள் பலவற்றைக் கலைத்ததையும் - 1980 பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் இந்திரா ஆட்சி மாநில அரசுகள் பலவற்றைக் கலைத்ததையும் மக்கள் தீர்ப்பையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்று சம்பந்தப்பட்டவர்கள் விளக்கமளித்தார்கள்.

அந்தச் செயல்களில் தி.மு.க.வுக்கு எந்தப் பங்குமில்லை! பொறுப்புமில்லை!

தி.மு.க. ஆட்சியைக் கலைக்கக் கோரி எம்.ஜி.ஆர். பிரதமரிடம் மனு கொடுத்ததைப் போல் - எந்த ஆட்சியையும் கலைக்கச் சொல்லி தி.மு.க. யாரிடமும் மனுவும் தரவில்லை! வற்புறுத்தவும் இல்லை!

இந்திராவுக்குத் தெரியாமல் என்.டி.ஆர். ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது என்று கூறுகிற எம்.ஜி.ஆரின் தீர்மானம் எப்படி அபத்தமானதோ, அப்படித்தான் இப்போது அவரது கட்சியும் ஒரு அபத்தம் என்ற முடிவுக்கு மக்கள் வந்து விட்ட பிறகு இனி அவர்கள் என்னதான் கோணங்கிக் கூத்தாடினாலும் எள்ளளவுப் பயனும் இருக்கப்போவதில்லை.

அன்புள்ள,

மு. க.

03-09-1984

1268. அழைக்கின்றார்!
அழைக்கின்றார் அண்ணா!

உடன்பிறப்பே,

அழைக்கின்றார் - அழைக்கின்றார் அண்ணா!

இந்த எழுச்சி கீதம் நமது இசைமுரசு நாகூர் அனிபா அவர்களால் பாடப்படும் பொழுது முழவு ஒலிப்பதைப் போல - போர்க்களத்துச் சங்கநாதம் கிளம்புவது போல இருக்கிறதல்லவா?

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நமது கழக ஏடு ஒன்றில் நமது கழக உடன்பிறப்பு ஒருவர் எழுதிய அந்தப் பாடலை நான்தான் அப்படியே கத்தரித்து எடுத்து நண்பர் அனிபாவிடம் கொடுத்தேன்.

அந்தப் பாடல் ஒலிக்காத கூட்டங்கள் இல்லை நமது கழகத்தில்!

மாநாடுகள் தோறும் அனிபா அவர்களின் எழுச்சி முரசப பாடலாக அது ஒலித்துக் கொண்டிருக்கிறது முப்பது ஆண்டுகளுக்கு மேலாக!

அன்புத் தம்பிகளுக்கும், தங்கைகளுக்கும் அழைப்பு விடுக்கிறார் அண்ணன் என்ற அருங்கருத்தை உள்ளடக்கிய அந்தப் பாடலின் உணர்வை செயல்படுத்த, அண்ணாவின் ஆணை கேட்டு அவர் கொள்கை வழி பிறழாத இலட்சியவாதிகளாக நாம் என்றும் இருப்போம் எனச் சூளுரை மேற்கொள்ள இதோ, மற்றொரு அழைப்பு விடப்படுகிறது. ஆம்! அண்ணா மாவட்ட மாநாட்டுக்கு!

அழைப்பது அண்ணா மாவட்ட மாநாட்டு நிர்வாகிகள் அல்ல!

அண்ணாவே அழைக்கிறார்! காஞ்சிக்கு வா, உடன்பிறப்பே என்று!

நூற்றுக்கணக்கான தடவைகள் அவருடன் காரில் காஞ்சிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

விடிய விடிய வீட்டுத் திண்ணையில் அமர்ந்தவாறு கழகப் பணிகள் குறித்துக் கலந்துரையாடியிருக்கிறார்.

கழக உடன்பிறப்புகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி யொன்றையே வகுத்தளித்து ஒருநாள் முழுவதும் சோலை மிகுந்த ஒரு இடத்தில் அனைவரையும் பல்வேறு குழுக்களாக அமரச் செய்து, பல்வேறு பொருள் குறித்துப் பேசிட வைத்து - அந்த இடத்தையே கருத்துச் சோலையாக மாற்றி அமைத்தார்.

1945-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் திராவிட இசைவிழா நடத்தி, தமிழ் இசைவேந்தர்கள் அனைவரையும் அழைத்து ஒருவார காலத்திற்கு மேலாகக் காஞ்சி நகரையே தமிழ்இசை மழையில் மிதக்க விட்டார். சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு நடந்த அந்தத் தமிழ் இசைப் புரட்சி விழாவில் அண்ணாவுடன் - அன்பர் பொன்னப்பாவுடன் - நண்பர் முல்லை முத்தையாவுடன் அமர்ந்து திருவாவடுதுறை இராசரத்தினப் பெருந்தகையின் நாதசுர இசையைக் கேட்டு மகிழ்ந்த நிகழ்ச்சி இன்னமும் எனக்குப் பசுமையாக நினைவிருக்கிறது!

அந்த அண்ணன், தமிழ் வாழவும், தமிழ்க் குலம் தழைக்கவும், தன்மான உணர்வுடன் நமது இனம் தலைநிமிர்ந்து நடமாடவும் திட்டங்களைத் தீட்டவும் - அதற்கெனக் கலந்துரையாடவும் எத்தனையோ முறை நம்மைக் காஞ்சிக்கு அழைத்ததுண்டு!

இன்றும் அவர்தான் அழைக்கின்றார்! அருமை உடன்பிறப்பே, அன்புத் தம்பி! தங்கைகளே! காஞ்சிக்கு வருக என்று!

அவர் பிறந்தநாளாம் செப்டம்பர் 15-இல் அண்ணா மாவட்ட மாநாடு - காஞ்சிபுரத்தில் தொடங்குகிறது!

இருநாட்கள் - விழாக்கோலம் காண்பதற்கு மட்டுமல்ல, என்றும் எந்தச் சக்தியாலும் - எவர் சூழ்ச்சியாலும் - விழாத தமிழ்ச் சமுதாயம் இதுவென ஆக்கிடுவதற்காக அண்ணா மாவட்ட மாநாட்டுக்கு அழைக்கிறேன் என நான் கூறமாட்டேன்.

நமது உயிரினும் மேலான மூத்த உடன்பிறப்பாம் நமது அண்ணனே அழைக்கிறார் என்ற உணர்வைத்தான் வெளிப்படுத்துகிறேன்!

ஒரு மாவட்ட மாநாடு போல அல்ல! ஏறத்தாழ ஒரு மாநில மாநாடு போலவே செயலாக்கப் பணிகள் அந்த மாவட்டத்து ஆற்றல் மறவர்களால் நடத்தப்படுகின்றன!

உடன்பிறப்பே, நீ இன்றைக்கே காஞ்சிப் பயணத்துக்கு உன்னையும் உன் உற்ற நண்பர்களையும், உறவினர்களையும், குடும்பத்தினரையும் தயார் செய்திடும் பணிகளைக் கவனிக்கத் தொடங்கிடுக!

மாவட்ட மாநாடுதான் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும் - மாநில மாநாடு எனக் கூறத்தக்க அளவுக்கு விரிவான ஏற்பாடுகள்!

பல்லவன் தலைநகரில் பிறந்து, நல்லவராய் - அறிவில் வல்லவராய்த் திகழ்ந்த நமது குலவிளக்கு - குன்றின் மேல் ஒளிவிடும் கொள்கை விளக்கு - அண்ணனின் புகழ்பாட மட்டுமல்ல! அவர் வகுத்தளித்த கொள்கைகளுக்கு வாகை சூட அணி திரளுவோம், காஞ்சித் திருநகரில்!

உடன்பிறப்பே, நமது ஆருயிர் அண்ணனைப்பற்றி எத்தனையோ எழுதியிருக்கிறேன் - உரைநடையாக! கவிதை வரிகளாக! 1969-ஆம் ஆண்டு அவர் மறைந்த போது வானொலியில் நான் பாடிய அந்த உணர்ச்சி வரிகள் இன்னமும் என் காதிலும், உன் காதிலும் ஒலித்துக் கொண்டு தானிருக்கின்றன!

இதோ - 1973-ஆம் ஆண்டு கவியரங்கம் ஒன்றில் நான் எழுதிய கவிதை வரிகள்!

நேற்றுக் காலையிலே நாமெல்லாம் நடந்து சென்று
காற்றுத் தாலாட்டும் அண்ணன் கல்லறையை வணங்கி வந்தோம்!

ஆற்றுப் பெருக்கெனவே ஆயிரம் லட்சமென்று
அண்ணனுக்கு - தமிழ்

ஊற்றுப் பெருக்காலே பண்பாடிக் கண்ணெல்லாம்
குளமாகத் திரும்பி வந்தோம்!

தேற்றும்மொழிக் கரசன், தென்பாங்கின் பெருவேந்தன்

ஏற்றும் விளக்கெல்லாம் ஏழைக்கே ஒளிகாட்ட
வேண்டுமென்று

சேற்றில் தாமரைபோல் கருத்தவிழ்த்த நம் அண்ணன்
என்னைப்

போற்றிப் புகழ்ந்ததெல்லாம் போதுமடா என் தம்பி!

தூற்றித் திரிகின்றார் சிலபேர் நம் கழகத்தை! எண்ணெய் ஊற்றி விஷத் திரியை எரியவிட்ட குற்றமன்றோ- இன்று சோற்றுத் துருத்தியெலாம் சுழற்றுகின்றார் அட்டைக் கத்தி!

கூற்று வந்து என் உயிரைக்கேட்டுப் பெற்ற காலம்வரை
உன் வீட்டுக்

கூடம் வரைதான் அனுமதித்தேன் கூடிக் கெடுப்பவரை!
நீயோ

அடுக்களை வரை அழைத்துச் சென்றாய்... அதன்

பயனைத்தான் அனுபவிக்கிறாய் இன்று!

ஆனது ஆயிற்று தம்பி!... ஆடிக்காற்றில் பஞ்சாகப்
பறந்து போகும் பகையெல்லாம்

அலட்சியச் சிரிப்பாலே எதிர்ப்புகளைத் தூளாக்க... நான்
தந்த

அறிவுரையை மறந்திடாமல் பணியாற்று! அவர்கள்

ஓங்காரக் கூச்சலிடும் கோட்டானாய் அலறட்டும்.

ஆங்காரம் அவசரமெல்லாம் அவர்களுக்கே தீங்காக
முடியட்டும்!

பாங்கான தமிழ்ப் பண்புடனே பொறுமை காட்டி -
என்னை

நீங்காமல் நினைவில் வைத்த தம்பிகளை ஒருங்கு கூட்டி

மாங்குயில்போலக் கூவிடுவீர் நம் கொள்கைகளை -

மறைந்திடுவர் ஆந்தையெல்லாம் தம்குரல் கேட்டுத்
தாமே நாணி!

அண்ணன், இந்த அறிவுரையோடு எச்சரிக்கை வழங்கி நம்மையெல்லாம் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்! அவர்தான், ஆம் - அவரேதான், உடன்பிறப்பே! உன்னையும் என்னையும் காஞ்சித் திருநகர் மாநாட்டுக்கு அழைக்கின்றார்!

அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா! உழைக்கின்ற உடன்பிறப்பே! உதாவதினி ஒரு தாமதம் என உடனே புறப்படுவோம் வா!

அன்புள்ள,

மு. க.

04-09-1984

1269. புதிய உற்சாகம்! புதிய நம்பிக்கை!

உடன்பிறப்பே,

கிழக்கு முகவை மாவட்டத்தில் மூன்று நாள் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்! மாலை நாலு மணிக்கு தொடங்கி இரவு இரண்டு அல்லது மூன்று மணி வரையிலே மக்கள் வெள்ளத்திலே நீச்சல் பயணம்தான்!

உன்னைப் போன்ற கழகக் கண்மணிகள் காட்டிய ஆர்வத்தை என்னவென்று புகழ்வேன்! சென்ற இடமெல்லாம் எங்கெங்குக் காணினும் இருவண்ண இலட்சியக் கொடிகள்! பகுத்தறிவு முழக்கங்களைத் தாங்கிய பதாகைகள்! கழகத்தின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளை விளக்கும் வண்ண வண்ண வரவேற்புத் தோரண வாயில்கள்! ஊரெங்கும் ஒளியுமிழும் உதயசூரியன் சின்னங்கள்!

எளிமை தவழ்ந்திட - அதே நேரத்தில் எழிலும் எழுச்சியும் பொங்கிட - எப்படித்தான் என் உடன்பிறப்புக்கள் பட்டிதொட்டிகளில் கூட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர் என்பதை எண்ணி எண்ணி இன்ப உணர்வில் மூழ்கித் திளைக்கிறேன்!

புதிய உணர்ச்சி! புதிய உற்சாகம்! புதிய நம்பிக்கை! திராவிட இயக்க வளர்ச்சியை மூடக் கிளம்பிய புழுதிக் காற்றைப் புறங்காணும் புயல் காற்றாக எழுந்தது காண் புலிக்கூட்டமெனப் புறப்பட்டது இளைஞர் அணிப் பட்டாளம்! இங்கு - அங்கு எனாதபடி எங்கெங்கும்! அவர்களை அரவணைத்து அன்பைப் பொழிந்து அவர்தம் ஆற்றலைக் கழகத்திற்காகப் பயன்படுத்தும் இயக்கத்தின் மூத்தோர், என் இதயத்தில் மகிழ்ச்சிப் பூமழை பொழிந்தனர்!

உடல்நிலை சரியில்லை - எனக்கல்ல! எனக்குத்தான் உன்னைப் போன்ற உடன்பிறப்புக்களைப் பார்த்ததுமே கடும் நோயும் இறக்கை கட்டிக் கொண்டு பறந்து போய் விடுமே!

மாவட்டச் செயலாளர் தம்பி சத்தியேந்திரனைத்தான் குறிப்பிடுகிறேன்! நல்ல ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று டாக்டர்கள் வலியுறுத்துகிறார்கள் - வற்புறுத்துகிறார்கள்! நானும் எவ்வளவோ சொல்லி விட்டேன்! அந்தக் காரணத்தினாலேயே மாவட்டச் சுற்றுப் பயணத்திற்கு இத்தனை காலம் நாள் குறித்து ஒப்புதல் தராமலே இருந்தேன்! அவர் என்ன சொல்கிறார்? என்னைப் பார்த்தால் அவரது நோய் இருக்குமிடம் தெரியாமல் ஓடிவிடுகிறதாம்! ஆம், பாசமிகுதியால் வெளிப்படும் இதய ஒலி அது! அந்த அன்புத் தம்பியின் விருப்பத்தை நிறைவேற்றாவிட்டால் மலரனைய அவர் மனம் நோகக்கூடுமே என்று அஞ்சிய காரணத்தால் மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக் கொண்டேன்!

கொடியேற்று விழா நிகழ்ச்சிகளுக்கு இரண்டாயிர ரூபாய்!

வரவேற்பு நிகழ்ச்சிகள் என்றால் ஐயாயிர ரூபாய்!

பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் என்றால் பத்தாயிர ரூபாய்க்கு மேல் வழங்கினால்தான்!

எல்லாமே கழகத் தேர்தல் நிதிதான்! இயலாத காரணத்தால் இன்னும் பல நிகழ்ச்சிகளுக்கு இந்தப் பயணத்தில் நேரம் ஒதுக்க முடியவில்லை! என் செய்வது, வயது அறுபது தாண்டிவிட்டதே!

அறுபதானாலும் இருபது வயது இளைஞனாகப் பணியாற்றுகிறேன் என்று உன் போன்ற சில உடன்பிறப்புக்கள் என் தலையில் ஐஸ்கட்டியை வைக்கிறார்கள்! வழுக்கைத் தலையன்றோ! அதனால் அந்த ஐஸ்கட்டி உருகிடாமல் கீழே உருண்டு விடுகிறது!

வறட்சி மிகுந்த பகுதி - வளம் என்பதைப் பாலைவனத்தில் சோலைவனத்தைத் தேடுவது போன்ற நிலையில் உள்ள மாவட்டம் - அங்கே மூன்று நாட்களில் ஒரு லட்சத்து எழுபது ஆயிரம் ரூபாய், தேர்தல் நிதி தரப்படுகிறது என்றால் நமது செயல்வீரர்களின் உழைப்பு மட்டுமல்ல, அந்த மாவட்டத்து மக்களின் அன்பின் பெருக்கிற்கு அடையாளம் இதுவென்றும் நினைத்து மகிழ முடிகிறதல்லவா?

இந்தச் சுற்றுப்பயணத்தில் இன்னொரு ஊக்கமூட்டும் செய்தி! மதுரைப் புறநகர் மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம்,

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் தாவூது, மேற்கு முகவை மாவட்டச் செயலாளர் தங்கப்பாண்டியன், தஞ்சை மாவட்டச் செயலாளர் கோ.சி. மணி, புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பெரியண்ணன், திருச்சி மாவட்டச் செயலாளர் வடிவேலு ஆகியோரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அவர்களுக்குள் ஒரே போட்டி! அண்ணா மாவட்ட மாநாட்டுக்கு அவர்களது மாவட்டங்களில் இருந்து எத்தனை பேருந்துகளில் கழக உடன்பிறப்புகள் வருகிறார்கள் என்ற கணக்கில்தான் அந்தப் போட்டி! பத்து பேருந்து என்பார் ஒருவர்! எங்கள் மாவட்டம் பதினைந்து பேருந்து என்பார் மற்றொருவர்! அப்போது நெல்லையில் இருந்து பொதுக்கூட்டமொன்றுக்கு வந்திருந்த வை. கோபால்சாமி, எங்கள் மாவட்டத்திலிருந்து தனி ரயில் ஒன்றிலேயே வருவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம் என்று துள்ளிக் குதித்துக் கொண்டு சொன்னார். இதை நான் திருச்சியில் அன்பிலிடம் சொன்னபோது எங்கள் மாவட்டம் ஒன்றும் சோடை போய் விடாது! என மார் தட்டினார்!

இன்னும் நான் இந்தச் சுற்றுப்பயண நிகழ்ச்சியில் சந்திக்காத எத்தனையோ மாவட்டச் செயலாளர்கள், காஞ்சி மாநாட்டுக்கு ஆயிரம் ஆயிரம் பேராக அணிவகுக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்று நமது அமைப்புச் செயலாளர்களில் ஒருவரான தென்னரசு கூறினார்! அவர் உண்மையைத்தான் கூறுவார்! உண்மைச் சம்பவங்களை வைத்தே கதை எழுதுகிற பழக்கமுடையவராயிற்றே!

எனவே, இந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளில் நான் சந்தித்த மாவட்டச் செயலாளர்கள், கழகத்தின் முன்னணியினர், செயல் வீரர்கள், என்னிடம் விவரித்த காஞ்சிப் பயணம் பற்றிய செய்திகளை வைத்துப் பார்க்கும் போது காஞ்சி மாநாடு நமது கழகத்தின் மாவட்ட மாநாடாக அல்லாமல் மாநில மாநாடாகவே அமையுமெனத் தோன்றுகிறது!

அண்ணா பிறந்த நாளில் காஞ்சித் தலைநகரில் தொடங்குகிற அண்ணா மாவட்ட மாநாட்டின் ஊர்வலம் - அன்று முற்பகலுடன் நிறைவு பெறும் என்றாலும் மறுநாள் ஞாயிறன்று மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவுற்றதும் - மீண்டும் இந்த மாத முழுதும்

தமிழகமெங்கணும் அந்த ஊர்வலம் பட்டி தொட்டி முதல் பட்டினங்கரைகள் வரையில் தொடர வேண்டும்.

சிற்றூர், பேரூர், நகர்ப்புறங்கள் ஒன்றுவிடாமல் அண்ணா அவர்களின் 75-வது ஆண்டு நிறைவினையொட்டியும் - அய்யா பெரியார் அவர்களின் 105-வது ஆண்டு நிறைவினை யொட்டியும் - அண்ணா உருவாக்கிய நமது கழகத்தின் 35-வது ஆண்டு நிறைவினையொட்டியும் வழக்கம் போல் முப்பெரும் விழா எடுக்கப்பட வேண்டும். வீதிக்கு வீதி - ஏன்? வீட்டுக்கு வீடு நமது நாட்டுக்கு விளக்காம் கழகத்தின் இருவண்ணக் கொடிகள் ஏற்றப்பட வேண்டும்! அண்ணா வழியில் அயராது உழைப்போம் - ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் - இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் - வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் - மாநிலத்தில் சுயாட்சி! மத்தியிலே கூட்டாட்சி! எனும் ஐம்பெரும் முழக்கங்களை அச்சியற்றிக் கழக அமைப்புகள் அனைவரது கண்ணிலும் படுமாறு ஒட்டி வைக்க வேண்டும்! அச்சியற்ற இயலாதோர் சுவர்களில் எழுதி வைக்க வேண்டும்!

மத்தியில் நடைபெறும் ஜனநாயக விரோத ஆட்சியினையும் - தமிழ் மாநிலத்தில் நடைபெறும் மக்கள் விரோத ஆட்சியினையும் கூட்டங்கள் வாயிலாக - துண்டு அறிக்கைகள் வாயிலாக - எல்லாப் பொதுமக்களும் உணர்ந்துகொள்ளும் வண்ணம் பரப்பிட வேண்டும்!

இதுவும் இதுபோன்ற வேலைத் திட்டங்களும் வகுத்தளிக்கும் மாநாடாகத்தான் அண்ணா மாவட்ட மாநாடு நடைபெற இருக்கிறது!

பம்பரமெனச் சுழன்று மாநாட்டுப் பணிகளை ஆற்றுகிறார் மதுராந்தகம் ஆறுமுகம். ஆம் - அண்ணா மாவட்டத்தின் செயலாளர்!

சிட்டெனப் பறந்து காரியமாற்றுகிறார்கள் மாநாட்டுச் செயலாளர்கள் சி.வி.எம்., அகிலன், மாசிலாமணி, மார்க் ஆகியோர்!

நிதிக்குழுத் தலைவர் இராசரத்தினமும், பொருளாளர் வெங்கட்ராமனும் மாநாட்டு மூலம் கழக நிதியும் கணிசமாக வழங்கிட அரும்பாடு படுகிறார்கள்! அதிகத் தொகை வசூலிக்கும் ஒன்றியத்துக்கோ - நகரத்திற்கோ கணையாழிப் பரிசளிக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ளனர்!

மற்றும் மாநாட்டுக் குழுவினர் அனைவருமே ஓய்வின்றி உழைக்கின்றனர்!

தமிழகத் தலைநகராம் சென்னையென்றாலும் கூட - நமது கழகத்திற்குத் தலைநகரம் காஞ்சிபுரம் தானே!

முகவைச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு - அந்த மகிழ்ச்சியில், இந்தக் கடிதத்தை பாண்டியன் விரைவு வண்டியில் இருந்தவாறே உனக்கு எழுதுகிறேன் - என் உற்சாகத்தை மேலும் பெருக்கிட நீ, அண்ணா மாவட்ட மாநாட்டுக்கு வருவாய் என்ற அளவற்ற எதிர்பார்ப்போடு!

அன்புள்ள,

மு. க.

09-09-1984

1270. உண்மை உழைப்பாளியே! ஒன்றுபடுக!

உடன்பிறப்பே,

என்னடா உழைக்கிறேன் உழைக்கிறேன் என்கிறான்! மண்வெட்டி புடிச்சி உழைக்கிறது பெரிய உழைப்பா? ஏரு புடிச்சி வயல் உழுவுறதுதான் ரொம்ப பெரிய உழைப்பா? இதோ என்னைப் பாருடா! நான் உழைக்கிற உழைப்பைப் பாருடா! வாழை இலைக்கு முன்னாடி உட்கார்ந்து வடிச்சி கொட்டுகிற சாப்பாட்டை நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த சாப்பிடுகிறேனே! இது உழைப்பு இல்லியா?

இப்படியொரு கருத்தை வசனமாக்கி நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்கள் ஒரு நாடகத்தில் சீமான் வேடந்தாங்கிப் பேசும்போது அந்த நாடக அரங்கமே கரவொலியால் அதிரும்! சிரித்துச் சிரித்து விலா வலிக்கும்! வயிறு நோகும்!

இப்படியொரு நகைச்சுவைப் பேச்சின் மூலம் உண்மைத் தொழிலாளர்களின் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும் சீமான்களின் ஆணவத்தை அந்த நாடகத்தில் பொடிப் பொடியாக்குவார்!

இதுபோலவும் சீமான்கள் இருப்பார்களோ என இப்போது சிலர் எண்ணிடக்கூடும்!

இருக்கிறார்கள்!

இருக்கிறார்கள்!

எங்கே இருக்கிறார்கள்! அந்தச் சீமான்கள்?

இதோ! சென்னை சத்தியா ஸ்டுடியோவிலும் - பின்னர் தேனாம்பேட்டையிலும் எம்.ஜி.ஆர். கட்சியினர் தொழிலாளர் மாநாடு நடைபெற்ற போது தொடக்கத்தில் நான் குறிப்பிட்டுள்ள அதே சீமானின் வசனம் பேசப்பட்டிருக்கிறது!

என்ன பெரிய தொழிலாளி, விவசாயி என்றெல்லாம் பேசுகிறீர்கள்? எங்கள் புரட்சித் தலைவர் ரிக்ஷா தொழிலாளியாக வேஷம் போட்டு நடிக்கவில்லையா? விவசாயியாக வேஷம் போட்டு டிராக்டர் ஓட்டவில்லையா?

எம்.ஜி.ஆர். கட்சியின் தொழிலாளர் மாநாட்டில் உரையாற்றிய பாட்டாளி மக்களின் பாதுகாவலர்கள் ? இவ்வாறு வினாக்கணைகளை விடுத்த போது மாநாட்டு அரங்கமே ஆரவாரத்தால் பௌர்ணமி காலத்து அலைகடலெனக் கொந்தளித்துக் குதித்ததாம்!

அந்தக் கூட்டத்திலும் சில அப்பாவித் தொழிலாளர்கள் களிப்பும் தெரிவிக்காமல், கரகோஷமும் செய்யாமல் மூக்கின் மீது விரலை வைத்துக்கொண்டு ஒருவரையொருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டார்களாம்! ஒருவேளை அவர்கள் ரசிகர்கள் இல்லையோ, என்னவோ!

என்னப்பா இது! உண்மையானத் தொழிலாளியாக - வண்டி இழுப்பவனாக - ரிக்ஷா ஓட்டுபவனாக - கட்டை வெட்டுபவனாக - கல் உடைப்பவனாக ஒரு நாள் முழுதும் பாடுபட்டால் ஐந்தோ பத்தோதான் கூலியாகக் கிடைக்கிறது நமக்கு! இவர்கள் நம்மைப் போல வேஷம் போட்டு நடிப்பதற்கு வெள்ளையிலே ஒரு லட்சம், கறுப்பிலே ஐந்து லட்சம் என வாங்குகிறார்கள்! அதுவும் ஸ்டுடியோவுக்குப் போக வரக் கார் சவாரி! இடையிடையே களைப்பாற இளநீர், மோர், காபி, கொக்கோ, ஆர்லிக்ஸ், இன்னும் எத்தனையோ வித பானங்கள்! இவர்கள் போல் சினிமாவில் தொழிலாளியாக நடிப்பவர்களும், உண்மையில் தொழிலாளியாக சீரழிபவர்களும் ஒன்றுதான் எனப் பேசுகிறார்கள். அதுக்கு நம்ப ஆட்களும் கைதட்டுகிறார்களே?

இப்படியொரு அப்பாவித் தொழிலாளி, பக்கத்தில் இருந்தவரைப் பார்த்துக் கேட்டாராம்!

சே! வாயை மூடு! யார் காதிலாவது விழுந்தா உதைகிதை கிடைக்கும்! இன்னைக்கு நம்ப தொழிலாளிகளுக்காக எம்.ஜி.ஆர். காட்டப் போற நாடகத்துக்குப் பேர் என்ன தெரியுமா? அஸ்திவாரம் தெரிவதில்லை என்று நாடகத்துக்கு பேரு! அதைப் புரிஞ்சுக்க! ஏன் அஸ்திவாரம் தெரிவதில்லை? இருந்தால் தானே தெரிவதற்கு?

பக்கத்தில் இருந்தவர் மெல்லிய குரலில் இதைச் சொன்னதும் - அப்பாவித் தொழிலாளி மிகுந்த ஆவலுடன்,

நாடகமா? யார் நடிக்கிறாங்க? நடிகை உண்டா?

என்று வாயைப் பிளந்து கொண்டு கேட்டார்.

ஓ! உண்டு! உண்டு! அதாவது அந்த நடிகையும் ஒரு உழைப்பாளிதான்! ஆனால் நம்ப எம்.ஜி.ஆரு, அந்த அம்மா அப்படி உழைக்கிறது சட்டப்படி குற்றம்னு சொல்லி அவுங்களைக் கைது செய்து கெட்ட கேஸ் ஒன்னைப் போட்டுட்டாரு!

அப்படியா? அந்தக் கேஸ் என்ன ஆச்சு?

அது அரங்கேற்றமெல்லாம் ஆச்சு! அப்பறம் எப்படியோ ஒரு வழியா முடிஞ்சு போச்சு!

அவுங்களா - இப்ப நமக்காக நடக்கிற நாடகத்திலே நடிக்கிறாங்க? நம்ப கட்சி புனிதம் என்ன ஆகிறது?

அய்யோவ்! இதப்பாரு! நமக்கிட்டே வராத வரையிலே அவுங்க அரசியல் கட்சிக்காரரா இருந்தாலும், நடிகர் நடிகைகளாக இருந்தாலும் அவுங்கமேல குற்றம் சுமத்திப் பழி கூறுவோம்! வழக்கு போடுவோம்! ஊழல் என்போம்! ஒழுக்கக்கேடு என்போம்! இங்கே வந்துட்டா அதுக்கப்புறம் அவுங்களோட அஸ்திவாரம் தெரிவதேயில்லை அப்பனே!

அந்தத் தொழிலாளிகளின் உரையாடல் கற்பனைதான் என்றாலும் - உடன்பிறப்பே! அந்த மாநாட்டுக்கு வந்தவர்களில் ஒரு சிலராவது இப்படி உள்ளக்குமுறலோடுதான் இருந்திருப்பார்கள்!

முதலாளிகளுக்கு முட்டுக் கொடுத்து மூட்டை மூட்டையாகக் குவிக்க ஒரு முதலமைச்சர்!

தொழிலாளிகளைக் காட்டிக் கொடுத்தும் போதாமல், வீட்டுவசதி வாரியத்திலும் ஊழல் புரிந்து லட்சக்கணக்கில் தொகை சேர்த்துக் கொண்ட ஒரு தொழிலாளர் அமைச்சர்!

இவர்கள், தங்களது கருங்காலிக் கும்பலை வைத்துக் கொண்டு - தமிழகத் தொழிலாளர் வர்க்கம், வருகிற 12-ஆம் தேதி நடத்தப் போகிற வேலை நிறுத்தத்தை உடைக்கப் போகிறார்களாம்!

அறவழியில் உரிமைக்குரல் கொடுக்கவும் - அராஜக ஆட்சியினை எதிர்த்து அமைதி வழியில் கண்டனக் குரல் கொடுக்கவும் - பாட்டாளி வர்க்கத்தின் பதாகை தூக்கி நிற்கும் உண்மை உழைப்பாளியே! நீ ஒன்றுக்கும் அஞ்சாதே!

சமுத்திரங்களின் சங்கமமாம் உனது தொழிலாளர் அணியை - சத்யா ஸ்டுடியோவில் கொண்டு வந்து குவிக்கப்பட்ட அந்தக் கூலிக்கும்பல் எதுவும் செய்து விட முடியாது!

நிமிர்ந்து நில்! நெஞ்சை உயர்த்து! அமைதி வழி நடந்திடு! அறப்போர் புரிந்திடு! ஆணவம் அடியோடு சாயட்டும்!

இந்த வீரவாழ்த்துக்களைத்தான் உழைக்கும் உடன்பிறப்பே! உனக்கு வழங்குகிறேன்!

அன்புள்ள,

மு. க.

10-09-1984

1271. பொய்யெனும் யானைத்தந்தம் பொடியாகும்!

உடன்பிறப்பே,

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பது முதுமொழி! அப்படி எட்டு நாளைக்குக்கூட அல்ல, எட்டு விநாடி நேரங்கூட நிற்காத புளுகுகளை - வேண்டுமென்றே திட்டமிட்டு விஷமத்தனமாகச் சில ஏடுகள் பரப்பி வருகின்றன!

தமிழகத்தில் இந்திரா காங்கிரசுக்கு எதிராகவும் - எம்.ஜி.ஆர். கட்சிக்கு எதிராகவும் உருவாகி வருகிற முற்போக்கு அணியினரிடையே ஏதாவது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி இந்திரா காந்திக்கும், எம்.ஜி.ஆருக்கும் ஓரளவாவது சாதகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று வியூகம் வகுத்துக்கொண்டு அந்த ஏடுகள் செயல்படுகின்றன என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது.

தி.மு.க.வும், அ.இ.அ.தி.மு.க.வும் ஒன்றாக இணையப் போகின்றன - அதனை யொட்டிக் கருணாநிதியும் எம்.ஜி.ஆரும் டெலிபோனில் அடிக்கடி பேசிக் கொள்கிறார்கள் என்பதாக ஒரு செய்தியை ஓர் ஏடு வெளியிட்டது.

இந்திரா காங்கிரசோடு இணைய வேண்டும் அல்லது உடன்பாடு கொள்ள வேண்டும் - தேர்தல் உறவு காண வேண்டும் என்ற ஆசை இன்னமும் தி.மு.க.வுக்கு இருக்கிற காரணத்தினால்தான், டெல்லியில் சரண்சிங் கூட்டிய கூட்டத்திற்குச் சென்ற கருணாநிதி, மறுநாள் டெல்லியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையென்று மற்றொரு ஏடு செய்தி வெளியிட்டது! இத்தனைக்கும் அந்த ஏட்டின் ஆசிரியர் நமது முற்போக்கு அணியில் இருக்கிற ஜனதா கட்சியின் உறுப்பினர்!

முரசொலி மாறன் அடிக்கடி டெல்லிக்குச் சென்று இந்திரா காங்கிரஸ் உறவுக்காக அலைகிறார் என்று ஒரு ஏடு கோடு கட்டிச் செய்தி வெளியிட்டது!

மாறன் அதனை மறுத்து அறிவித்ததும் - மாறன் அல்ல! மனோகரன்! என்று நாஞ்சிலார் மீது அந்த ஏடு தனது பொய்யை வாரி இறைத்தது! அவர் ஒரு கூட்டத்தில் சூடான பதில் கொடுத்ததும் கொஞ்சநாள் அந்த ஏடு அடங்கிக் கிடந்தது!

மீண்டும் அதே ஏடு, ஒரு தி.மு.க. பிரமுகர், இந்திராவைச் சந்திக்க பிரதமர் வீட்டு வாசலில் இரண்டு மணி நேரம் காத்திருந்ததாகவும், பேட்டி கிடைக்கவில்லையென்றும் அந்த ஏட்டின் அபிமானத்திற்குரிய ஒருவர் சொன்னதாகச் செய்தி வெளியிட்டது!

முரசொலி மாறன், இந்திராவைச் சந்தித்து தேர்தல் உறவு குறித்துப் பேசினார் என்பது ஒரு ஏட்டில் வந்த செய்தி!

அதே தரமுள்ள மற்றொரு ஏட்டில் இந்திரா காந்தி, மாறனை உடனடியாக வந்து தன்னைச் சந்திக்குமாறு அழைத்தார். மாறன் போகவில்லை. பிறகு வேறொரு தி.மு.க. எம்.பி.யை அழைத்து பார்லிமெண்டில் ஒரு தி.மு.க. உறுப்பினர் தன்னைத் தாக்கிப் பேசியதற்காகக் கோபத்தில் பொரிந்து தள்ளிவிட்டாராம் - இதை அந்த எம்.பி. மூலம் கேள்விப்பட்ட கருணாநிதி, கடற்கரையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் டல் அடித்து - மெய்சோர்ந்து - சரியாகக் கூடப் பேசாமல் - சிரமப்பட்டார் என்று செய்தி வெளியிட்டுள்ளது!

உடன்பிறப்பே! திட்டமிட்டு இப்படிப் பொய்ச் செய்திகளைப் பரப்புவதன் வாயிலாக முற்போக்கு அணியில் உள்ள கட்சிகளிடையே சந்தேகத்தை உருவாக்கி - இந்திராவின் கரத்தையும், எம்.ஜி.ஆரின் கரத்தையும் பலப்படுத்த வேண்டுமென்பது மறைமுகமான திட்டம்!

அதன் காரணமாகத்தான் தி.மு.கழகத்தின் மீது இவ்வாறு முன்னுக்குப் பின் முரணாகப் பொய்ப் புழுதி வாரி இறைக்கிறார்கள்.

அந்த ஏடுகளை நடத்துகிறவர்களையும் - அவற்றில் எழுதுகிறவர்களையும் நான் என்றைக்கும் மதிக்கக்கூடியவன்! அவர்களிடம் நட்புணர்வுடன் பழகக் கூடியவன்!

கழகம் கொண்டுள்ள கொள்கைகள் - எடுத்துரைக்கும் எண்ணங்கள் - செயல்முறைத் திட்டங்கள் - இவற்றில் அந்த ஏடு நடத்துவோருக்குக் கருத்து வேறுபாடு இருந்து அவற்றை அவர்கள் கண்டித்து எழுதினாலோ - அல்லது கேலியாக விமர்சித்தாலோ - அதனை ரசித்துப் படிப்பவன்தான் நான்! தேவைப்பட்டால் விளக்கமும் அளிப்பவன்!

ஆனால் அதனை விடுத்து, தமது பேனாமுனைகளைப் பொய்யில் நனைத்து - இல்லாததையும் - நடவாததையும் எழுதிப் புளுகு, புனைசுருட்டு வேலைகளில் அவர்கள் ஈடுபடுவதைக் காணும்போது, அவர்களின் தரம் குறைந்துவிட்டதாக நான் எண்ணவில்லை! அப்படியொரு அவசர முடிவுக்கு நான் வரவும் மாட்டேன்!

தங்களின் அபாரத் திறமையின் வாயிலாகத் தி.மு.கழகத்தைப் பலவீனப்படுத்த முனைகிறார்கள் என்பதுதான் உண்மை!

இந்த அரிய பணிக்கு அன்னை இந்திராவின் தலைமையில் உள்ள காங்கிரசின் அருளாசியும் - எம்.ஜி.ஆரின் பொருளாசியும் ஏராளமாக வழங்கப்படுகிறது என ஒரு அரசியல் கிசுகிசுச் செய்தியை எழுதி வெளியிட எவ்வளவு நேரமாகும்!

உடன்பிறப்பே, ஒன்றை மட்டும் உறுதியாகப் பிரகடனப்படுத்துவோம் உலகத்திற்கு!

ராஜமானிய ஒழிப்பு - வங்கிகள் தேசியமயம் என முற்போக்குத் திட்டங்களைக் கொண்டு வந்த பிரதமர் இந்திராவின் கொள்கைக்கு ஆதரவாகத்தான் நாமும், இரு கம்யூனிஸ்டு கட்சிகளும், அகாலி தளமும், சந்திரசேகர் போன்ற இளந்துருக்கியரும் இந்திராவின் வேட்பாளர் வி.வி. கிரி வெற்றிபெற ஒன்றுபட்டோம்!

ஜனநாயகத்தை வீழ்த்த எமர்ஜன்சி கொண்டு வந்த பிரதமர் இந்திராவை, தமிழகத்தில் ஆளுங்கட்சியாக இருந்து கொண்டே அச்சமின்றி எதிர்த்து ஆட்சியை இழந்து அல்லல்களையும் ஏற்றோம்!

ஜனதா ஆட்சி மத்தியில் கவிழ்ந்த பிறகு - நிலையான ஆட்சி இந்தியாவுக்குத் தேவைப்பட்ட நேரத்தில் இந்திரா காந்தி, தனது எமர்ஜன்சி காலக் கொடுமைகளுக்கு மன்னிப்புக் கேட்டு வெளிப்படையாகப் பேசிய பிறகு, அவர்கள் வலிய வந்து

விடுத்த அழைப்பை ஏற்று 1980-இல் தேர்தல் உடன்பாடு கொண்டோம்!

பெங்களூரில் ஜனதா முதல்வர் நண்பர் ஹெக்டே கூட்டிய மாநாட்டுக்கு, மாநில உரிமைகளைக் கோரும் கருத்தைத் தெரிவிக்க, புதுவையின் தி.மு.க. முதல்வர் சென்றார்! புதுவையில் இந்திரா காங்கிரஸ் கூட்டணியிருக்கிறதே எனக் கவலைப்படாமல் பெங்களூர் மாநாட்டில் கொள்கை அடிப்படையில் கலந்து கொண்டோம்! அதன் விளைவாக புதுவையில் கழகத் தலைமையில் நடைபெற்ற ஆட்சி கலைக்கப்பட்டது!

ஜனநாயகத்திற்காகவே குரல் கொடுக்கும் தி.மு.க., புதுவையிலும் - சிக்கிம் மாநிலத்திலும் - காஷ்மீரிலும் - ஆந்திராவிலும் நடைபெற்றுள்ள ஜனநாயகப் படுகொலைகளை எந்த நிலையிலும் ஆதரிக்காது என்பதும், எந்த தியாகம் செய்தும் எதிர்க்கும் என்பதும் - அதன் கடந்த கால வரலாறு!

எனவே ஜனநாயக விரோத இந்திரா காங்கிரசை எதிர்ப்பதில் ஈட்டி முனையாகவும், மக்கள் விரோத எம்.ஜி.ஆர். கட்சியை எதிர்ப்பதில் போர்வாளாகவும் விளங்குகிற தி.மு.கழகத்தை அந்தப் பேரியக்கம் கொண்டுள்ள - உறுதிப்பாட்டிலிருந்து எவராலும் எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாது!

கழகமெனும் கற்கோட்டையின் இரும்புக் கதவுகளில் முட்டி முட்டி, பொய்யெனும் மதயானைகளின் தந்தங்கள் பொடிப் பொடியாகிப் போகும் என்பது மட்டும் திண்ணம்!

அன்புள்ள,

மு. க.

11-09-1984

1272. வாஞ்சைமிகு சோதரன் அழைக்கிறேன்; வா! வா!

உடன்பிறப்பே,

நாளை, குலோத்துங்கச் சோழன் ஆண்ட தரணி - குலவிளக்கே! உன்னை அழைக்கிறது!

கலிங்கத்துப் பரணியின் வீரகாவியநாயகன் கருணாகரத் தொண்டைமானின் போர்வாள், வான வெளிச்சத்தில் மின்னியதே! அந்தக் காஞ்சித் திருநகரம் - கழகக் கண்மணியே! உன்னை அழைக்கிறது!

சிற்பத் தேர்களைச் செதுக்கி வைத்து இந்தச் செகமுழுதுமுள்ள சுற்றுலாப் பயணிகளை இன்றளவும் ஈர்த்து மயக்குகின்ற மாமல்லையின் படைப்பாளன் மாமல்ல பல்லவன் நரசிம்மன் உலா வந்த கலை மணக்கும் மண்ணாம் காஞ்சியம்பதி! கன்னித் தமிழ்ச்செல்வமே! உன்னை அழைக்கிறது!

வலுவில் நுழைந்த வஞ்சகப் புலிகேசியை வாதாபி வரையில் விரட்டியடித்து, தென்னகத்துப் புகழ்க்கொடியை அந்தச் சாளுக்கிய வேந்தனின் அரண்மனை முகப்பில் ஏற்றித் திரும்பிய பராக்கிரம தளபதி பரஞ்சோதி பவனி வந்த பல்லவ பூமி - பகுத்தறிவுப் பெட்டகமே! உன்னை அழைக்கிறது!

தமிழின் இனிமையைப் பருகிக் கொண்டே சாவதில் ஓர் இன்பமெனக் கூறி - அப்படியே சுளைத் தமிழ்ப்பாலைச் சுவைத்தவாறு உயிர் விட்ட நந்திவர்மனின் தமிழ்ப்பற்று! கொடி கட்டிப் பறந்த கொற்றவன் சீமை - கொள்கைக்குன்றமே! உன்னை அழைக்கிறது!

இந்தப் பெருமைமிகு வரலாற்றுப் பூங்காவுக்குள்ளே வந்து புகுந்த நச்சரவுக் கருத்துகளை அடையாளங்காட்டி, அணுகிடாதே

தம்பி அவற்றினை! என எச்சரித்த ஏற்றமிகு தலைவன் நம் அண்ணன் பிறந்த அழகுமிழும் சீர்காஞ்சித் தலைநகரம்! சிங்க இளைஞனே! தங்கத் தமிழ்க்குலமே! உன்னை அழைக்கிறது!

நெற்றி நிறைய நீறுபூசி - வாய் கிழியக் கிழிய பகவத்நாமம் பூஜித்து - ஊரார் முன் நல்லவராய் விளங்கி - உத்தமர்தம் வாழ்க்கைக்குக் கொள்ளி வைக்கும் உன்மத்தன் வேதாசலம் என்ற பாத்திரத்தை வேலைக்காரி வாயிலாக உணர்த்திய பேரறிஞன் தோன்றிய பெருநகரம்! உடன்பிறப்பே! உன்னை அழைக்கிறது!

மயக்குமொழிக்காரி - ஜாலக்காரி - சிங்காரி - ஒய்யாரி - அவள் மடி மீது வீழ்ந்து, அவள் காலடியில் வீரத்தைக் காணிக்கையாக்கி, மானமெனும் ஒரு பொருளை அவள் மஞ்சத்தில் பறி கொடுத்து, மக்கிப்போன மாவீரர்களின் சோக முடிவுகளை எடுத்துக்காட்டி, ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதங்களை நூல் வடிவில் தந்த தீர்க்கதரிசியாம் நமது அண்ணனை ஈன்றெடுத்த காஞ்சியெனும் அறிவுக்களஞ்சியம்! அடலேறே! ஆண்மைச் சிங்கத்தின் கூட்டமே! உன்னை அழைக்கிறது!

அன்றந்தத் தென்னிலங்கை ஆண்ட பெருவேந்தன் இராவணனை நினைக்குங்கால் தோள்கள் எலாம் பூரிக்குதடா! எனப் பாடிய பாரதிதாசப் பாவேந்தனின் கருத்தை மேலும் வலிமையாக்கி நீதிதேவனை மயக்க வைத்த இராவணன் பாத்திரமேற்று நடித்த அண்ணனின் திருஉருவை என்றுமே மறந்திட முடியாமல் நிலைக்க வைத்த மங்காப்புகழ் காஞ்சி மாநகரம்! மறத்தோள் மாவீரா! தீர மகளிர் அணியே! உன்னை அழைக்கிறது!

களம் பல கண்டு - பகைப்புலம் வென்ற போதிலும் - அறிவு, ஆற்றல், வீரம், விவேகம் அனைத்தையும் காகபட்டர் காலடியில் அடமானம் வைத்தால்தான் ஆட்சியில் அமர முடியும் என்ற அவலநிலை மாவீரன் சிவாஜிக்கு ஏற்பட்ட கதையை, சந்திரமோகன் எனும் சரித்திரமாகத் தந்த நமது சகாப்தத் தலைவனை நாட்டுக்கு வழங்கிய ஈடற்ற காஞ்சி! இளைய தலைமுறையே! இலக்கியச் செல்வமே! உன்னை அழைக்கிறது!

உனக்கும் தோழா!

ஊர் வாழ நீ வாழ்ந்து ஓய்வின்றிப் பணியாற்றும் என் உற்ற உடன்பிறப்பே!

இருநாள் மாநாடுதானே - மறுநாள் போனால் என்ன என்று இருந்திடாதே!

முதல்நாள் செப்டம்பர் 15! அதை மறந்திடாதே! அண்ணாவுக்கு எழுபத்து ஐந்து நிறையும் நாள்!

அன்று நமது கூட்டம் நிறைந்திட வேண்டாமோ! அவர் பிறந்த காஞ்சி வீதிகளில்!

இவ்வளவு சொன்னால் போதாதா உனக்கு?

ஊர்வலத்தில் எங்கிருக்கிறாய்? எப்படிப் பீடு நடை போட்டு வருகிறாய்? இந்த வினாக்குறியாக என் விழிமாறி உன்னைத் தேடும் வழக்கம் போல!

வந்திருந்தேன் அண்ணா என்று சொல்லித் தப்பிக்க முடியாது!

அதனால் அன்பு உடன்பிறப்பே! என் ஆருயிரே! கழகத்தின் ஒளிக்கதிரே! காஞ்சியில் உன்னை என் கண் தேடும், கண்டிப்பாக! எனவே, வா! வா! வா!

வா! வாஞ்சைமிகு சோதரன் அழைக்கிறேன்!
வா! வா! வா!

அன்புள்ள,

மு. க.

14-09-1984

1273. அவர்களுக்கு அப்படியொரு அலர்ஜி!

உடன்பிறப்பே,

ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ் அவர்கள் இந்திரா காந்தியுடன் சமரசம் செய்து கொண்டார் என்பது போலச் சில ஏடுகளில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டன. அந்தச் செய்திகளில் உண்மையில்லையென்று என்.டி. ராமராவ் மறுத்துவிட்டார்.

அப்படியே ஒருவேளை என்.டி. ராமராவ் எதிர்க்கட்சிகளின் உறவை அறுத்துக் கொண்டு, இந்திரா எதிர்ப்பைக் குறைத்துக் கொண்டால், அது தவறில்லை என்று நியாயவாதங்களை எடுத்துரைத்து நண்பர் சோ அவர்கள் தலையங்கமொன்றே தீட்டியுள்ளார்.

தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் எதிர்க்கட்சிகளை நம்புவதை விட இந்திரா எதிர்ப்பைக் குறைத்துக் கொண்டாலே போதும், மாநில ஆட்சியையாவது நிம்மதியாக நடத்தலாமே என்ற எண்ணம் பரூக் அப்துல்லாவுக்கும், என்.டி. ஆருக்கும் ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பு எதிர்க்கட்சிகளே யென்று ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் 1-5-84லேயே குறிப்பிட்டுள்ளேன் - அந்த நிலை இப்பொழுது ஏற்பட்டால் என்.டி. ராமராவை நொந்து கொண்டு என்ன பயன்?

இவ்வாறு நண்பர் சோ எழுதியுள்ளார். எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக அவர் அப்படி எழுதியிருக்கலாம் - ஏனென்றால், எதிர்க்கட்சிகளின் அணிக்குள் அபஸ்வரம் ஒலிக்கக்கூடாது என்பதில் நண்பர் சோ அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பவர். அந்த நல்லெண்ணத்தில்தானே அவர் தமிழ்நாட்டில் உருவாகி வரும் முற்போக்கு அணியில் ஜனதா கட்சியும் இருப்பதை மறந்துவிட்டு, தி.மு.க. பற்றியும், இரு

கம்யூனிஸ்டு கட்சிகளைப் பற்றியும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் பற்றியும், லோக்தளக் கட்சி பற்றியும் எடுத்தேன்! கவிழ்த்தேன்! என்று விமர்சனங்களைச் செய்து வருகிறார். கேலிச் சித்திரங்கள் - கிண்டல் கட்டுரைகள் வரைந்து வருகிறார்.

அவர் எந்த அடிப்படையில் எழுதினாலும் - ஒன்றை அவர் மறந்துவிடக் கூடாது!

1975-ஆம் ஆண்டு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்திய காலம் வரையில் தி.மு.கழக ஆட்சியின் மீது எந்த விசாரணைக் கமிஷனும் போடப்படவில்லை! நெருக்கடி நிலையைத் தி.மு.கழகம் எதிர்த்தது. தீர்மானம் நிறைவேற்றியது. தேசத் தலைவர்களை விடுதலை செய்யச் சொல்லி வற்புறுத்தியது. இந்தியாவில் ஒரு தீவு தமிழ்நாடு என்று இந்திரா காந்தி கோபத்துடன் கூறுகிற அளவுக்கு நெருக்கடி நிலையை எதிர்த்ததுடன், இந்திய நாட்டுத் தலைவர்கள் சிலருக்கு தமிழகத்தில் புகலிடம் கொடுத்தது. கேரளம் போன்ற மாநிலங்களில் ஆட்சிக்காலம் நீட்டிப்புத் தரப்பட்டபோது - தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது, நெருக்கடியை எதிர்த்தமைக்காக!

மொரார்ஜி, சாந்திபூஷண், அசோக்மேத்தா, ஜகஜீவன்ராம் போன்றவர்களின் மொழியில் சொல்ல வேண்டுமேயானால் அரசியல் உள்நோக்கத்துடன் தி.மு.க. மீது சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது!

1977-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.க.வும் ஜனதாவும் தேர்தல்உடன்பாடு கொண்டு போட்டியிட்டன இந்திரா காங்கிரசை எதிர்த்து!

மத்திய சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் முதலில் அறிவிக்கப்பட்ட தி.மு.க. வேட்பாளர் முரசொலி மாறனை ஒரு வாரத்திற்குப் பிறகு வாபஸ் பெற்றுக்கொண்டு, ஜனதா வேட்பாளர் பா. ராமச்சந்திரனுக்கு அந்தத் தொகுதி விட்டுத் தரப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தலில் பா. ராமச்சந்திரன், குமரி ஆனந்தன், தண்டாயுதபாணி, ஏ.வி.பி. ஆசைத்தம்பி ஆகிய நால்வருமே வெற்றி பெற்றனர்.

அடுத்து உடனடியாகச் சட்டமன்றத் தேர்தல் வந்தது. ஜனதா கட்சி, தி.மு.க.வுடன் தேர்தல் உடன்பாடு கொள்ளாமல் தனித்து

நின்று போட்டியிட்டது. கழகம் நாற்பத்தி எட்டு இடங்களில் வெற்றி கண்டது. ஜனதா கட்சி எட்டு இடங்களை மட்டுமே பெற்றது.

தி.மு.கழகம், மாநில அளவில் ஜனதாவுடன் உறவுடன் இருக்கவில்லையென்றாலும், இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பு அணியிலேயே அகில இந்திய அளவில் துணை நின்றது.

அதற்கு உதாரணம் - பின்னர் நடைபெற்ற சிக்மகளூர் இடைத்தேர்தலில் இந்திரா காந்தியை எதிர்த்து நின்ற வேட்பாளர் வீரேந்திர பட்டீலைத்தான் தி.மு.க. ஆதரித்தது. நானே அந்தத் தொகுதிக்குத் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றிருந்தேன்.

இந்திரா காந்தி, பாராளுமன்ற உறுப்பினரானதும் - அவரை ஒரு தீர்மானம் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேற்றியபோது அது ஜனநாயக விரோத செயல் என்று தி.மு.கழகம் ஜனதா அரசைக் கண்டிக்கத் தவறவில்லை.

இரண்டு ஆண்டு கால ஜனதா ஆட்சியில் - இணைந்திருந்த கட்சிகள் எல்லாம் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன! அவர்களாகவே ஆட்சியைக் கவிழ்த்துக் கொண்டனர்! ஆளுங்கட்சி அந்தஸ்துக்கு மக்களால் உயர்த்தப்பட்ட எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமையில்லை!

சோவின் பாஷைப்படி, தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக அந்தக் கட்சிகள் இருந்தன!

அந்தச் சூழலில்தான் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஒரு நிலையான ஆட்சி தேவை என்ற கருத்து வலுப்பெற்றது.

இந்திரா காந்தி அவர்களும், நெருக்கடி காலப் பிரகடனம் செய்தமைக்கும் - நெருக்கடி காலக் கொடுமைகளுக்கும் வெளிப்படையாக வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

அதன் பிறகே - தி.மு.கழகம், இந்திரா காங்கிரசுடன் 1980-இல் தேர்தல் உடன்பாட்டுக்கு ஒப்புதல் அளித்தது.

நண்பர் சோ அவர்கள், இப்போது என்.டி. ராமராவ் அவர்களுக்காக எடுத்து வைக்கிற நியாயவாதம் - அப்போது தி.மு.கழகம் எடுத்த நிலைக்குப் பொருந்துகிறதா இல்லையா என்பதை - நண்பர் சோ அவர்களின் மனச்சாட்சிக்கே விட்டுவிடுகிறேன்.

இந்திரா காங்கிரசுடன் தி.மு.கழகம் உறவு கொண்டு பாண்டிச்சேரியில் கூட்டணி ஆட்சி நடத்தியபோதுதான் - மாநில உரிமைகளைப் பற்றி விவாதிக்க ஜனதா கட்சி முதல்வர் ஹெக்டே அவர்கள், பெங்களூர் மாநாட்டுக்கு புதுவை முதல்வரை அழைத்தார். ஜனநாயகம், மாநில சுயாட்சி போன்ற கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் தி.மு.கழகம், அந்த மாநாட்டில் கலந்து கொள்ளத் தயக்கம் காட்டவில்லை! அதன் காரணமாகவே, புதுவையில் காங்கிரஸ் கட்சி தி.மு.க. ஆட்சிக்குத் தந்து வந்த தனது ஆதரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டது!

தி.மு.க.வுக்கு ஜனதா, மார்க்சிஸ்டு, முஸ்லிம் லீக் தந்த உடனடி ஆதரவின் காரணமாக சட்டமன்றத்தில் பெரும்பான்மை இருந்தும் கழக ஆட்சி கலைக்கப்பட்டது.

அந்த ஜனநாயகப் படுகொலையைத் தொடர்ந்து - சிக்கிம் மாநிலத்தில் ஜனநாயகப் படுகொலை! பிறகு காஷ்மீர்! பின்னர் ஆந்திரா!

ஜனதா முதல்வர் கூட்டிய பெங்களூர் மாநாட்டுக்கு அழைப்பு வந்தது - தி.மு.க. முதல்வர் கலந்து கொண்டார். இந்திரா காங்கிரசுடன் உறவு இருக்கும் போதே!

ஐதராபாத் மாநாட்டுக்கு அழைப்பு வரவில்லை. தி.மு.க. கலந்து கொள்ளவில்லை!

காஷ்மீர் மாநாட்டுக்கு அழைப்பு வந்தது. தி.மு.க. கலந்து கொண்டு மாநில சுயாட்சிக் கருத்துக்கு வலிவூட்டியது!

கல்கத்தா மாநாட்டுக்கு அழைப்பு வந்தது. தி.மு.க. கலந்து கொண்டு எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தியது!

இந்திரா காந்தி அவர்கள் 1980-இல் வழங்கிய நிலையான ஆட்சி என்ற வாக்குறுதி பல மாநிலங்களில் காப்பாற்றப்படவில்லை!

ஜனநாயகப் படுகொலைகள் தொடர்கதைகளாகி விட்டிருக்கின்றன!

மேலும் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்ல அதிபர் ஆட்சி முறைகளைப் பற்றி இந்திரா காங்கிரசார் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்!

இந்த நிலையில் மத்தியிலும் - மாநிலத்திலும் உள்ள இந்திரா

காங்கிரஸ், எம்.ஜி.ஆர். ஆட்சிகளின் கோணல்களையும், ஜனநாயக, மக்கள் விரோதப் போக்குகளையும் எதிர்த்து தமிழகத்தில் ஒரு முற்போக்கு அணி உருவாகியிருக்கிறது. அதில் தி.மு.க. அங்கம் பெற்றுள்ளது.

இந்த அணிக்குள் ஒரு குழப்பத்தை உருவாக்கும் முயற்சி பணபலம் படைத்த ஆளுங்கட்சியினரால் நடத்தப்படுகிறது!

அதற்கு முக்கிய ஆயுதமாக சோ பயன்படுத்தப்படுகிறாரோ என்ற சந்தேகம் எழுவது இயல்புதான்!

ஏனெனில் அவரது எழுத்துகள் அப்படித்தான் எண்ணிடச் செய்கின்றன!

இந்திரா காங்கிரசுடன் எந்த உடன்பாடும் இனி இல்லை! என்று திட்டவட்டமாகக் கூறி, எதிர்க்கட்சி அணியில் முக்கிய இடம் வகிக்கும் நமது கழகத்தைத் தொடர்ந்து வன்மையாகத் தாக்கிடும் நண்பர் சோ அவர்கள், ஒருவேளை என்.டி. ராமராவ் அவர்கள் இந்திரா எதிர்ப்பைக் குறைத்துக் கொண்டால், அதற்கு அவரை நொந்து கொண்டு பயனில்லை - அதற்கு எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மைதான் பொறுப்பு என்று எவ்வளவு லாவகமாக வாதாடுகிறார் பார்த்தாயா?

திராவிடர் இயக்கமென்றால், அதிலும் தி.மு.க. என்றால் சோ போன்ற நண்பர்களுக்கு அப்படி ஒரு அலர்ஜி!

அன்புள்ள,

மு. க.

02-10-1984

1274. ஒன்றா? இரண்டா? எடுத்துச்சொல்ல!

உடன்பிறப்பே,

ஒன்றா இரண்டா இந்த ஆட்சியில் ஊழல்கள்! ஒன்றைக் குறிப்பிட்டால் அடுத்தொன்று வருகிறது! அதனை விவரிப்பதற்குள் பிறிதொன்று பாய்கிறது! இப்படி அலை எழுவது போல அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே ஊழல்கள் எழுந்த வண்ணமுள்ளன!

எதைப் பேச - எதைவிட! என்று தெரியாமல் பேச்சாளர்கள் திணறுகிறார்கள்!

அடுக்கடுக்காக - ஒன்று, நூறு, ஆயிரமென அணிவகுத்து வரும் எம்.ஜி.ஆர். ஆட்சியின் ஊழல்களைத் தொகுத்தெழுத முடியாமல் எழுத்தாளர்கள் களைப்புற்றுப் போகிறார்கள்!

வாங்காத கப்பலுக்கு எப்படி கமிஷன் வாங்க முடியும்? என்று இன்றைக்கும் எம்.ஜி.ஆர். கேட்கிறார்! அப்படிக் கமிஷன் பேசப்பட்டு, அதற்காக நடந்த கடிதப் போக்குவரத்துக்களை ஆதாரங்களாகச் சட்டமன்றத்தில் எடுத்து வைத்த பிறகுதான் அந்த மாபெரும் கப்பல் பேர ஊழல் தடுத்து நிறுத்தப்பட்டது! அந்த ஊழலை நடத்த நடைபெற்ற பேரங்களுக்கான ஆதாரங்கள் இன்றைக்கும் உயிரோடு இருக்கின்றன! சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலும் பதிவாகியிருக்கின்றன!

சாராய சாம்ராஜ்ய ஊழல், நமக்குத் தெரிந்தவைகளையெல்லாம் நாட்டு மக்கள் முன்னால் அறிவித்து விட்டோம்! அதற்காக என் மீது போட்ட வழக்கை - சில மாதங்களுக்கு முன்பு எம்.ஜி.ஆர். வாபஸ் வாங்கிக் கொண்டார் எந்த நிபந்தனையுமில்லாமல்! சாராய சாம்ராஜ்ய ஊழல் குறித்து நாம் சொன்னதைவிட, எஸ்.டி.எஸ். மேலும் அதிகமான விபரங்களைச் சொல்லி எம்.ஜி.ஆரை அடையாளம் காட்டி வருகிறார்!

பஸ் முதலாளிகளிடம் வாங்கிய லஞ்சம், விற்பனை வரிச் சலுகையில் நடைபெற்ற ஊழல் இப்படி நண்பர் எஸ்.டி.எஸ். அவர்களால் எடுத்து வைக்கப்படும் எத்தனையோ விவகாரங்கள்!

ஒரு முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த கோபிநாத் என்பவர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர் பெற்றிருக்க வேண்டிய மதிப்பெண்களைப் பெறாத நிலையிலும், அமைச்சர் அரங்கநாயகத்தின் உதவியாளர் என்பதால், முறைகேடாக சட்டக் கல்லூரியில் திணிக்கப்பட்ட தில்லுமுல்லுத்தனத்தை உயர்நீதிமன்றமே சுட்டிக்காட்டியுள்ளது இந்த வாரம்!

இந்தப் பெரிய ஊழல்கள் - லஞ்சலாவண்யங்கள் - முறைகேடுகள் அனைத்தும் இவ்வாறிருக்க, அரசுக்குச் சொந்தமான நிலங்களை எம்.ஜி.ஆர். கட்சியினர் எப்படியெல்லாம் ஆக்கிரமித்து ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கின்றனர் என்பதற்குச் சைதாப்பேட்டை விவகாரத்திலேயிருந்து எத்தனையோ ஆதாரங்களை எடுத்துக் காட்டியிருக்கிறோம். சைதையில் அண்ணா மூலிகைப் பண்ணை என்ற பெயரால் அண்ணா சாலையிலேயே ஒரு இடத்தை எம்.ஜி.ஆர். தயவைப் பெற்ற ஒருவர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார். அதுகுறித்துச் சட்டமன்றத்திலேயே உறுப்பினர் புருஷோத்தமன், பல முறை ஆதாரங்கள் காட்டியும் அரசாங்கம் அசைந்து கொடுப்பதாயில்லை. எதன் பேரிலோ மழை பொழிவது என்பார்களே, அதைப் போல ஆகிவிட்டது!

இதோ இப்போது கிடைத்துள்ள ஆதாரபூர்வமான ஒரு தகவல்!

திருமதி சாயர்பாய் என்பவர் அதிகமான நிலம் வைத்திருக்கிறார் என்ற அடிப்படையில் 83 ஏக்கர் 55 சதுர அடி நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தி அந்த விபரத்தை 9-11-83 ஆம் தேதியிட்ட அரசாங்க கெஜட்டில் விளம்பரப்படுத்தியுள்ளது.

அதன் விபரமானது சைட் நம்பர் 4147/2 பிளாக் 90 மைலாப்பூர்

அப்படிக் கையகப்படுத்தப்பட்ட அரசு நிலத்தை தமிழ்நாடு அரசின் கீழ் உள்ள வாரியங்கள் பயன்படுத்திக் கொள்ளத் தேவைப்படுகிறதா எனக் கேட்டுக் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. அந்தக் கடிதம் கிடைக்கப் பெற்ற அரசின் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டர், சீனியர் ரீஜனல் மானேஜருக்கு 23-2-84-இல் ஒரு கடிதம் எழுதி,

உடனடியாக அந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு, அங்கே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுன் கிடங்கு கட்டுவதற்கு வசதிப்படுமா என பதில் எழுதும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

உடனடியாக அந்த இடம் பார்வையிடப்பட்டு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கோடவுன் கட்டுவதற்கு ஏற்ற இடம்தான் என்று பொறியாளர்களின் முடிவின்படி பரிந்துரையும் செய்யப்படுகிறது.

ஆனால் 20-6-84 அன்று சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனின் மானேஜிங் டைரக்டர், சீனியர் ரீஜனல் மானேஜருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.

அந்தக் கடிதப்படி அந்த இடத்தை எடுத்துக் கொள்வதற்கான திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

23-2-84-இல் இடத்தைப் பார்த்து விபரம் எழுதுமாறு கோரப்படுகிறது மானேஜிங் டைரக்டரால்!

28-5-84-இல் அந்த இடம் கோடவுன் கட்டத் தகுதியான இடமென மானேஜிங் டைரக்டருக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது, சீனியர் ரீஜனல் மானேஜரால்!

இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை!

20-6-84-இல் அந்த இடத்தை எடுத்துக்கொள்ளும் திட்டம் கைவிடப்பட்டதாக சீனியர் ரீஜனல் மானேஜருக்கு அறிவிக்கப்படுகிறது.

இடையில் என்ன நடந்தது? எம்.ஜி.ஆர். ஆட்சியில் என்ன நடக்குமோ? அதுவே நடந்திருக்கிறது!

எம்.ஜி.ஆர். கட்சியைச் சேர்ந்த எம்.கே. பாலன் என்பவர் அந்த நிலத்தில் ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார். முதல் மாடி வேலை முடிந்து, இப்போது இரண்டாவது மாடி வேலை தொடங்கப்பட்டுள்ளது.

வீட்டின் முன்னால் அந்தப் பிரமுகர் பெயரும் எம்.ஜி.ஆர். கட்சியின் பெயரும் பெரிதாக எழுதி வைக்கப்பட்டுள்ளது.

அந்த நிலப்பரப்பில் இருந்து இதுவரையில் 35 கிரவுண்டு நிலத்தை பல லட்ச ரூபாய்களுக்கு அவருக்கு வேண்டிய நண்பர்களுக்கு விற்பனை செய்திருக்கிறார் என்றும் தெரிய வருகிறது.

அந்தப் பெரும்புள்ளிதான் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகளை அணுகி அந்த இடத்தை கார்ப்பரேஷன் எடுக்கும் திட்டத்தைக் கைவிடும்படி செய்திருக்கிறார் எனக் கருத வேண்டியுள்ளது.

அரசாங்கம் கையகப்படுத்திய நிலம்! அரசுக்குச் சொந்தமான அவ்வளவு பெரிய நிலத்தை, அரசுச் சார்புடைய சிவில் சப்ளை கார்ப்பரேஷன் பயன்படுத்த திட்டமிட்டு, திடீரென அந்தத் திட்டத்தைக் கைவிட்டது ஏன்?

அரசு கையகப்படுத்தி, தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டுள்ள ஒரு நிலத்தில் தனியார் ஒருவர் எப்படி மாடி வீடு கட்ட முடிந்தது?

ஊழல்! ஊழல்! ஊழலன்றி வேறென்ன?

ஒன்றா? இரண்டா? எடுத்துச் சொல்ல! இப்படி ஓராயிரம் உள்ளதே! என்ன செய்ய?

அன்புள்ள,

மு. க.

06-10-1984

1275. இந்தி எதிர்ப்பு - நீறுபூத்த நெருப்பு!

உடன்பிறப்பே,

இந்தி மொழியைக் கற்க வேண்டுமென்று இந்தியா முழுவதிலும் உள்ள மக்கள் விரும்புகின்றனர். ஆனால் தென்னிந்தியாவில் உள்ள சிலர் அரசியல் ஆதாயத்திற்காக இந்தி மொழியைப் பழிக்கின்றனர்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் சில நாட்களுக்கு முன்பு பேசி, அந்தப் பேச்சு ஏடுகளில் வெளிவந்த பிறகு இந்தி பக்தர்களுக்கு அதிகமாகவே துணிச்சல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஓரிரு நாட்களுக்கு முன்பு சென்னை தொலைக்காட்சியில் பழைய சுதந்திரப் போராட்ட வீரர் எனப்படுகிற ஒருவரின் பேட்டியை ஒலி - ஒளி பரப்பியபோது இந்தி எதிர்ப்பு என்பது ஒரு அயோக்கியத்தனம் என்று கடுமையான ஒரு தாக்குதலை அவர் நடத்தியுள்ளார்!

தமிழ் வாழ்க! கட்டாய இந்தி ஒழிக! என்று 1937-1938-ஆம் ஆண்டுகளில் தமிழகம் முழக்கம் செய்த போது - தாளமுத்து, நடராசன் என்ற இரண்டு வீர இளைஞர்கள் தமிழ் காக்கச் சிறை சென்று பிணங்களாக வெளியிலே வீசப்பட்டபோது - ஆயிரக் கணக்கானோர் இந்தியை எதிர்த்து சிறைக்கோட்டம் சென்ற போது - இந்தி பரவுக! என்று தலைப்பிட்டு, ஆயிரக்கணக்கில் துண்டு அறிக்கைகளை தமிழ்நாடு முழுதும் பரப்பியவர்கள்தான் காங்கிரஸ்காரர்கள் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது.

இந்திக்கு தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்!
எல்லோரும் வாருங்கள் தமிழர்களே!
ஓடி வந்த இந்திப் பெண்ணே! கேள்!

நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!
செந்தமிழ்க்கே ஒரு தீமை வந்த பின்னும்
இந்தத் தேகம் இருந்தொரு லாபம் உண்டோ?

இப்படிப் போர்ப் பரணி பாடி தமிழகத்துத் தடந்தோள் வீரர்கள் களம் புகுந்து, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை! என நெஞ்சுயர்த்தித் தியாக வேள்வியில் குதித்த காலத்தில்தான் பதினான்கு வயது மாணவனான நானும், பெரியார், அண்ணா, அழகிரி ஆகியோரின் போர் முரசு ஒலி கேட்டுத் தமிழ்க்கொடியேந்தி, என்னைத் தமிழ் இன மக்களுக்காக ஒப்படைத்துக் கொண்டேன்!

இந்தி ஆதிக்கத்தின் மீதும், இந்தியைத் திணித்தே தீருவோம் என ஆர்ப்பரிப்போர் மீதும் அன்றைக்கு எனது இளம் உள்ளத்தில் எழுந்த வெறுப்பு இன்னமும் எள் முனையளவும் குறைந்து போய்விடவில்லை!

என்னைப் போலவேதான் - அன்றெழுந்த தமிழ் இளைஞர் பட்டாளம், அன்னைத் தமிழ் காத்திட, அருந்தமிழர் உரிமை காத்திட - அணுப்பொழுதும் அயராமல் அன்று முதல் இன்று வரை இந்தி ஆதிக்கத்திற்கு இந்த மண்ணில் இடமில்லையென முழங்கிக் கொண்டு - அந்தக் குறிக்கோளுக்காக இன்னுயிர் தந்திடவும் தயாராக அணிவகுத்து நிற்கிறது!

கடந்த கால இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாறுகளில் தியாகப் பூக்களாக மலர்ந்தவர்கள் எத்தனை பேர்!

1964-1965-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மொழிப்புரட்சியில் தமிழகம் தணற்காடாக மாறியதை மறந்திட இயலுமோ?

வீதிகளில் தமிழர்கள் பிணங்களாக வீழ்த்தப்பட்ட போதும் - காராக்கிரகங்களின் கொடுவாய்க்குள் பல்லாயிரவர் தள்ளப்பட்டபோதும் - பாளையங்கோட்டைகள் பயமுறுத்திய போதும் - அஞ்சாது நின்று வெஞ்சமர் புரிந்த அரிமா இளைஞர்கள் - மாணவச் செம்மல்கள் - அடடா! அந்த வரலாறே தமிழகத்தின் தனிப்பெரும் வரலாறு!

பட்டுப்போகட்டும் எம் வாழ்வு! பசுந்தளிர் கிளம்பட்டும் தமிழ்க்குல வாழ்வில்! எனச் சூளுரைத்து எட்டுத் தமிழர்கள்

தீக்குளித்து மாய்ந்ததும், ஓய்ந்தது இந்தி ஆதிக்கம் என்ற வெற்றி முழக்கத்தைத் தமிழ் நிலம் கேட்கத்தானே!

உடன்பிறப்பே, அப்போது உன் போன்ற உடன்பிறப்புக்களில் பலர் மிகவும் இளஞ்சிறார்கள்! பலர் பிறந்திருக்கவே மாட்டார்கள்!

பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருந்த சிலரோ தமிழ், வாழினும் வீழினும் நமக்கென்ன? என்று இந்தி எதிர்ப்பு என ஒரு போராட்டம் நடப்பது குறித்துக் கவலைப்பட்டுக் கொள்ளாதிருந்தனர். பாவம்! அவர்கள் எப்போதும் அப்படித் தானிருப்பர்!

ஆனால் உடன்பிறப்பே! அன்று இளங்கொழுந்தாயிருந்து இன்று தமிழ் உரிமைக்காகவும், தமிழர் உரிமைக்காகவும் போராடும் நெஞ்சுரம் பெற்றுத் திகழ்கிறவர்களாயினும், அன்று பிறவாமலேயிருந்து, இன்று இளஞாயிறுகளாய் ஒளிவிட்டுக் கொண்டிருப்போராயினும் தமிழகத்தில் நாற்பத்தைந்து ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிற மொழிப் போராட்டத்தையும் - அந்தப் போரில் ஈடுபட்டு அடக்குமுறைகளை ஏற்றவர்களின் தீர வரலாற்றையும் - இன்னுயிர் வழங்கியவர்களின் தியாக காவியத்தையும் உணர்ந்துகொள்ள வேண்டிய காலக்கட்டம் உருவாகி விட்டது.

1937-1938-இல் கட்டாய இந்தியை அறிமுகப்படுத்திய ராஜாஜி அவர்களே, 1964-1965ஆம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்பு வீரராக வீறுகொண்டெழுந்தார் என்றால் இந்தி ஆதிக்கத்தால் தமிழ்நாட்டு மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகி விடுவர் என்று எடுத்துச் சொன்ன உண்மையை அவர் உணர்ந்த காரணத்தினால்தான்!

இந்தியே பொதுமொழியானால் - இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோர் இந்தியாவின் முதற் குடிமக்களாகவும், தமிழர் போன்றோர் இரண்டாந்தரக் குடிமக்களாகவும் ஆகிடுவர் என்பதற்கு எத்தனையோ ஆதாரபூர்வமான வாதங்களை எடுத்து வைத்துள்ளோம்!

மொழிப் பிரச்சினை குறித்துக் கழகத்தின் முடிவான நிலையென்ன என்பதற்கு அண்ணா எழுதிய கருத்தோவியங்களும் - கழகத் தீர்மானங்களும் - அவற்றுக்குரிய விளக்கங்களும் ஏராளம் உண்டு!

அவற்றையெல்லாம் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டிய நேரம் இது!

ஏனெனில், 1979 செப்டம்பர் திங்கள் 30ஆம் நான் சென்னைக் கடற்கரையில் அண்ணா பிறந்த நாள் கூட்டத்தில் கலந்து கொண்டபோது என்ன பேசினார் திருமதி இந்திரா காந்தி!

இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டும் என்று அந்தக் கூட்டத்தில் நான் வலியுறுத்திப் பேசினேன்.

அதற்குப் பதில் அளித்த இந்திரா காந்தி அம்மையார், என் தந்தை அளித்த உறுதிமொழியைக் காப்பாற்றுவேன் என்று வாக்குறுதி அளித்தார்.

அப்போது அம்மையார் பிரதமராக இருந்து பேசவில்லை!

ஆனால் இப்போது பிரதமராகப் பேசுகிறார். தென்னிந்தியாவில் உள்ள சிலர் அரசியல் ஆதாயத்திற்காக இந்தி மொழியைப் பழிக்கின்றனர். இந்தி மொழியைக் கற்க இந்தியா முழுவதுமுள்ள மக்கள் விரும்புகின்றனர் என்பதாக!

இது பிரதமரால் வடக்கே பேசப்பட்ட கருத்து!

தெற்கே வரும்போது வேறுவிதமாகப் பேசுவார்! அது வாடிக்கை!

அதுவும் தேர்தல் நேரமென்றால் தேன் குழைத்துப் பேசுவார்! அது நமது அனுபவம்!

உடன்பிறப்பே, தமிழகத்தில் உள்ள இந்திப் பிரச்சார சபாவின் விழாவுக்கு 1967க்குப் பிறகு பதினேழு ஆண்டுகள் கழித்து முதல் தடவையாக தமிழக முதல்வர் வாழ்த்து அனுப்பியதைப் பாராட்டி இந்திப் பிரச்சார சபாவின் விழாவில் புகழ்ந்திருக்கிறார்கள் அல்லவா! அப்படியொரு ஏணியைப் பிடித்துக் கொண்டு இந்தி ஆதிக்கம் தமிழர் தலையில் ஏறிவிடலாமெனக் கருதியிருக்கிறது போலும்!

அதைத்தான் பிரதமரின் பேச்சும், அதைத் தொடர்ந்து சென்னை தொலைக் காட்சியில் இந்தி எதிர்ப்பு அயோக்கியத்தனம் என வர்ணிக்கப்பட்ட செய்தியும் சுட்டிக் காட்டுகின்றன!

எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

இளைஞர்கள், மாணவர்கள் - இந்தி எதிர்ப்புப் போராட்ட சரித்திரத்தை உணர வேண்டும்! உணரும்படி செய்ய வேண்டும்!

இந்தி ஆதிக்க ஆபத்தை இளைய தலைமுறைக்குத் தெளிவுபடுத்த வேண்டும்!

இந்தி எதிர்ப்பு - நீறுபூத்த நெருப்பு! அதனைச் சாம்பல் துண்டு எனக் கருதி அலட்சியப்படுத்தினால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்பதை இந்தியை நேரடியாகவோ - மறைமுகமாகவோ திணிக்க முனைபவர்களுக்கு வெளிப்படையாகவே பிரகடனப் படுத்துகிறேன்.

அன்புள்ள,

மு. க.

08-10-1984

1276. எதிர்க்கட்சிகள் என்ன செய்யப் போகின்றன?

உடன்பிறப்பே,

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரம் சூடு பிடித்துள்ள நிலையில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் அதிபர் ரீகனும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் வால்டர் மண்டேலும் டெலிவிஷன் வாயிலாக எடுத்து வைத்த வாதங்கள் ஏடுகளில் வெளியாகியுள்ளன. அந்த முதலாளித்துவ நாட்டில் யார் அதிபராக வந்தாலும் - அடித்தளத்திற்கு ஏற்பத்தான் கட்டிடம் எழும்பும் என்பது கடந்த கால வரலாறு! அண்டபகிரண்டமும் தனது ஆதிக்கக் கால்களை ஊன்ற வேண்டுமென்பதிலே அதிபர்களாக வருபவர்களுக்குள்ளே போட்டியிருப்பதைத்தான் அந்த நாட்டுத் தேர்தல்கள் எடுத்துக்காட்டி வருகின்றன! ஆனால் ஒன்று! தேர்தல், முறைப்படி உரிய காலத்தில் - எந்தத் தனிப்பட்ட மனிதரின் விருப்பத்தையும் அனுசரிக்காமல் குறித்த நேரத்தில் சட்டப்படி வந்துவிடுகிறது!

பெரிய ஜனநாயக நாடு எனக் கூறப்படும் இந்தியத் திருநாட்டில் தேர்தல் என்பது வந்தால்தான் நிச்சயம் என்பது போல புலி வருகிறது! என்ற பாலர் பாடத்துக் கதையாக அல்லவா போய் விட்டது!

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடக்குமென்றால் அந்தக் குறிப்பிட்ட கால எல்லையைக் கடக்காமல் நடந்தே தீரும் என்ற நம்பிக்கை வாக்காளர்களுக்கு இருக்கிறதா, இந்தியாவில்? இல்லை! இல்லவே இல்லை!

நிர்ணயிக்கப்பட்டுள்ள காலத்திற்கு முன்னதாகத் தேர்தலை நடத்துவதற்கு ஆட்சியில் இருப்போர் முன்வருவது என்பது வேறு விவகாரம்!

இங்கிலாந்தில் தாட்ச்சர் அதுபோல முன்கூட்டியே தேர்தலை நடத்தினார்.

ஏன்? இந்தியாவில் கூட 1971ஆம் ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் முன்கூட்டியே தேர்தலை சந்தித்தார்.

ஆனால் அவரே, நாடாளுமன்றத் தேர்தலை நெருக்கடி நிலையின் போது ஓராண்டு காலம் தள்ளிப் போட்டு 1977-இல்தான் நடத்திட முன் வந்தார். அதற்கு வசதியாக நாடாளுமன்றத்தில் தனக்கிருந்த பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

எனவே நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப் படாமல், தனக்குச் சாதகமற்ற நேரமென்றால் தள்ளிப்போட்டுவிடலாம் என்ற நிலையெடுக்காமல் தேர்தலைச் சந்திப்பதுதான் ஜனநாயகத்தை மதிக்கிற செயலாகும்.

அரசியல் சட்டப்படி தேர்தல் காலத் தேதிகள் குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக - ஆரூடக்காரர்கள், அருள்வாக்குச் சாமியார்கள் ஜோதிடம் பார்த்துச் சொன்ன பிறகுதான் தேர்தல் தேதிகள் குறிப்பிடுவது என்பது கேலிக்கூத்தாகும்.

இது, பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்பது மட்டுமல்ல! எழுபது கோடி மக்கள், தங்களின் எதிர்கால ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் குறித்து யாரோ இரண்டொரு சாமியார்கள் முடிவெடுப்பது என்கிற ஜனநாயக விரோதச் செயலுமாகும்.

எதிர்க்கட்சிகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை என்று நேற்றுகூட பிரதமர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்!

நாள்தோறும் அவர்கள் இதையே விடாமல் உச்சரித்துக் கொண்டிருப்பதிலிருந்தே, அவர்கள் எதிர்க்கட்சிகளைப் பற்றிக் கவலைப்படுகிறாரா, இல்லையா? என்பது நாட்டு மக்களுக்குத் தெளிவாகவே புரிகிறது!

வானொலியில், தொலைக்காட்சியில் கட்சிப் பிரச்சாரம் செய்து கொள்ள அதிகாரபூர்வமான வசதி! எதிர்க்கட்சிகளுக்கு இருட்டடிப்பு! அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அதிகார துஷ்பிரயோகம்!

இப்படியொரு வாய்ப்பினை உருவாக்கிக் கொண்டுள்ளவர்கள், எதிர்க்கட்சிகளை எடுத்தெறிந்து பேசுவது வாடிக்கைதான்!

இதைவிட சர்வ வல்லமையுடன் திகழ்ந்த இந்திரா காந்தியைத்தான் 1977-ஆம் ஆண்டில் எதிர்க்கட்சிகளின் அணி, தோற்கடித்துக் காட்டியது!

இடையில் அந்த அணியினூடே ஏற்பட்ட ஒற்றுமையின்மை ஒன்றை மட்டுமே நம்பி, இந்திரா காங்கிரஸ் அலட்சிய சிரிப்பு சிரித்துக் கொண்டிருக்கிறது!

தேர்தல் நெருக்கமாக வந்துவிட்டது போலத்தான் தோன்றுகிறது!

பஞ்சாபில் பிரதமர் காட்டுகிற பவ்யம்!

ஆந்திரப் பிரச்சினையில் அம்மையார் இறுதியாக அடங்கிப் போன அதிசயம்!

இலங்கைத் தமிழர்களுக்காக அவர் வெளியிடுகிற வருத்தங்கள்!

இவையனைத்தும் தேர்தல் வரலாம் என அறிவிக்கும் சூசகங்கள்!

எனவே எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு - ஒற்றுமை காத்து - உளமாற உடன்பாடு கொண்டு - நல்ல முடிவுக்கு வர வேண்டிய கட்டாயம் வந்து விட்டது!

இதைத்தான் அண்மைக்காலத்து நிகழ்ச்சிகள் வலியுறுத்துகின்றன.

அன்புள்ள,

மு. க.

10-10-1984

1277. இலங்கைத் தமிழ் அகதிகளின் அவதி!

உடன்பிறப்பே,

இலங்கையில் தமிழர்கள் கொடுமைக்கும், கோரக் கொலைக்கும், மானபங்கத்திற்கும் ஆளாவது மட்டுமல்ல! அங்கிருந்து அகதிகளாக இந்தியாவுக்கு வருகிற தமிழ் மக்களும் இங்கே கேட்பாரற்ற நிலையில் பல கேடுகளுக்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இவற்றைக் குறித்து சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

அவர்களுக்குத் தரப்படும் அரசின் பொருளாதார உதவி போதுமானதல்லவென்றும், அந்த உதவிகளையும் இடைத் தரகர்கள் கொள்ளையடித்து விடுகிறார்கள் என்றும், அவர்களின் உடைமைக்குப் பாதுகாப்பில்லை என்றும், வேலியே பயிரை மேய்வது போல அகதிகளாக வரும் பெண்களின் கற்பைச் சூறையாடும் கொடுமையைச் சில காவல்துறையினரே நடத்துகிறார்கள் என்றும் செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன!

அகதிகளாக அன்னைத் தமிழகம் நாடிவந்த நாங்கள், பிச்சைக்காரர்களாகத் தெருவில் திரிகிறோம் என்பதை உணர்த்தி, அவர்கள் அரசு அலுவலகங்களின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் கூட நடத்தினர்.

இந்த அரசு, அவர்களது வேதனைக் குரலைக் காதிலே போட்டுக் கொள்ளவில்லை.

அவர்கள் படும் துயரம் அரசுக்குத் தெரியாதது போலவும் - அந்தத் தொல்லைகள் குறித்து அவ்வப்போது ஏடுகளில் வந்த செய்திகளை அறியாதது போலவும் - சட்டப்

பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காட்டிய பிறகே தெரிந்து கொண்டதைப் போலவும் அவற்றையெல்லாம் விசாரித்தறிய ஒரு குழு அமைக்கப்படுமென நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்!

குழு எப்போது அமைப்பது? அந்தக் குழு எப்போது கூடுவது? இலங்கையிலிருந்து அகதிகளாக வந்து - இங்கே இரவலர்களாக அலையும் தமிழர்களின் பிரச்சினை எப்போது தீருவது?

அந்த அகதிகள் வாழ்வில் அக்கறை கொண்ட கட்சிகள், கட்சித் தலைவர்கள் எத்தனையோ முறை தீர்மானங்கள் மூலமும் அறிக்கைகள் மூலமும் அரசாங்கத்திற்கு வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருந்தபோதிலும், இப்போதுதான் இந்த அரசாங்கம், குழு போட்டு விசாரிப்பதற்குத் தயாராயிருப்பதாக அறிவித்திருக்கிறது.

தமிழகத்தைத் தவிர வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள், அங்கே மிகவும் சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டு - நாயினும் கீழாய் நடத்தப்பட்டு - நலிந்து மெலிந்து நமது மாநிலத்து வீதிகளிலே திருவோடும் கையுமாக நிற்கின்றனர்! அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று இங்குள்ள கட்சித் தலைவர்கள் அரசுக்கு முறையீடு செய்து கொண்ட போது - அவர்கள் முதலில் சென்ற மாநிலத்திற்கே செல்ல வேண்டியதுதான்! அவர்களைத் தமிழக அரசு பாதுகாக்க இயலாது! என அதிகாரபூர்வமாகத் தெரிவித்ததை இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது!

இலங்கை அகதிகளில் ஒரு பகுதியினரை அந்தமானில் குடியேற்றுவதின் மூலம் ஓரளவுக்குப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். ஆனால் அதற்கு நீண்ட காலமாகவே மத்திய அரசு தடையாக இருந்து வருகிறது.

அந்தத் தீவில் மக்கள் தொகை பெருக்கம் ஏற்பட்டுவிடும். நிலத்தின் தன்மை பாதிக்கப்பட்டு விடும். அங்குள்ள ஆதிவாசிகள் பாதிக்கப்படுவார்கள்.

என்றெல்லாம் மத்திய அரசு காரணம் கூறுவதாக அமைச்சர், சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்.

இலங்கை அகதிகளை அந்தமானில் குடியேற்ற மத்திய அரசு கூறுகிற காரணங்கள் பொருத்தமானவை அல்ல!

நாடாளுமன்றத் தேர்தலில் அந்தமானில் ஒரு இடத்தைப் பிடிப்பதை மனதில் வைத்துக் கொண்டுதான் மத்திய அரசு, தனது மறுப்பினைத் தெரிவித்து வருகிறது.

அந்தமானில் பெரும்பான்மையாக வடக்கத்தியார்கள் வாழ்கிறார்கள். இப்போதுள்ள நிலையில் அங்கே தமிழர்கள் சிறுபான்மையினர். இலங்கை அகதிகளை அங்கே அனுப்புவதன் வாயிலாகத் தமிழர்களின் எண்ணிக்கை உயரக்கூடும்.

அதனால் ஏற்படும் சாதக பாதகங்களைக் கணக்கிட்டுத்தான் மத்திய அரசு, இலங்கை அகதிகளுக்கு அந்தமானில் இடம் தர மறுத்து வருகிறது.

ஆனால் அதனைத் தொடர்ந்து வலியுறுத்த வேண்டியது தமிழக அரசின் கடமை என்ற போதிலும் - அதுவரையில் இங்கே வதங்கி வாடிக் கொண்டிருக்கும் இலங்கை அகதிகளை வாழவைக்கவும், பாதுகாக்கவும் தனக்குள்ள பொறுப்பினைத் தமிழக அரசு தட்டிக் கழித்துவிட முடியாது.

அன்புள்ள,

மு. க.

12-10-1984

1278. நானும் பிரார்த்தனை செய்கிறேன்!

என் இனிய நண்பரே!

உங்களுக்காக - உங்கள் உடல்நலிவு நீங்குவதற்காக பிரார்த்தனை செய்து கொள்ளுமாறு ஆளுநர் அவர்கள் வேண்டு கோள் செய்தி விடுத்துள்ளார்!

பல்வேறு தெய்வங்களின்பால் பக்தி கொண்டோர் நீங்கள் நலம் பெற்று எழ பிரார்த்தனை நடத்துகிறார்கள்!

உங்கள் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ள கட்சித் தோழர்கள் - முன்னணியினர் - ஆலயங்கள் பல சென்று உங்களை மீண்டும் நலமுடன் காண வேண்டுமென பிரார்த்தனை நடத்துகிறார்கள்!

பிள்ளைப்பிராய முதலே அந்த நம்பிக்கையில்லாமல் பெரியார் வழியில், அண்ணா வழியில் வளர்ந்து விட்டவன் நான்! அதனால் நான் உங்களுக்காக தெய்வங்களிடம் கையேந்தி வரம் கேட்டுப் பயனில்லை என்று கருதுகிறவன்! அது என் கொள்கை!

அப்படியொரு கொள்கையிலே உறுதிப்பாடு கொண்டவன் என்பதற்காக உங்களுக்காக மற்றவர்கள் நடத்தும் பிரார்த் தனையைக் குறைகூற மாட்டேன்!

அவர்களது பிரார்த்தனை நம்பிக்கை பலித்து - நீங்கள் பிழைத்தெழுந்து நடமாடுவீர்களேயானால் எனக்கேற்படும் மகிழ்ச்சி - பிரார்த்தனை நடத்துகிறவர்களுக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு எந்த வகையிலும் குறைந்ததாக இருக்காது என்பதை எனக்கு உணவு பரிமாறிய உங்கள் தாயும், உங்களுக்கு உணவு பரிமாறிய என் தாயும் இப்போது உயிரோடிருந்தால் நிச்சயமாக நெஞ்சாரச் சொல்லி நெகிழ்ந்து போவார்கள்!

அந்தத் தாய்கள் நம்மிருவரையும் நேசித்து அன்பு குழைத்து அரவணைத்தது என்பது, ஏதோ அரசியலுக்காக அவிழ்த்து

விடும் கதையோ, கற்பனையோ அல்லவே! மறுக்க முடியாத உண்மைகளாயிற்றே!

மந்திரிகுமாரி படத்தில் நீங்கள்தான் கதாநாயகனாக நடிக்க வேண்டுமென்று நானும், மருதநாட்டு இளவரசி படத்துக்கு நான்தான் கதை வசனம் எழுத வேண்டுமென்றும் நீங்களும் வாதாடி வெற்றிபெற்ற அந்தக் காலம், ஓ! அது, முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய காலம் என்றாலும் அன்பு எனும் பொன்தகட்டில் செதுக்கப்பட்ட அழியாத எழுத்துக்களன்றோ!

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கோவைக்கு அடுத்த ராமநாதபுரமெனும் புறநகரில் நாம் இருவரும் ஒரே வீட்டில் வசித்த அந்த நாட்கள்... இருவரிடையே எழுந்த அரசியல் விவாதங்கள்... நீங்களே பலமுறை பேசியுமிருக்கிறீர்கள் - எழுதியுமிருக்கிறீர்கள் என்னைக் கலைஞர் தன்பக்கம் ஈர்த்து விட்டார் என்று! அந்த நினைவுகள் என் நெஞ்சில் அலைகளாய் மோதுகின்றனவே இப்போது!

அப்போதெல்லாம் அந்தச் சிறிய வீட்டிலிருந்து நீங்களும், நானும், இயக்குநர் காசிலிங்கமும், நண்பர் நம்பியாரும் கோவை நகருக்கு ஒரு குதிரை வண்டியில்தானே போவோம்! ஆம், அதுவும் வாடகை வண்டி! ஒரு ஆளுக்கு இரண்டணா வாடகை!

மதியம் - பெரும்பாலும் கோவைக்குக் குதிரை வண்டிச் சவாரி! கடைத் தெரு முனையில் இருந்த குருசாமி நாடார் மிலிடரி ஓட்டலில் சாப்பாடு! அதற்கிடையே எத்தனை எத்தனை சிரிப்பு வெடிகள்! சிந்தனையைத் தூண்டும் உரையாடல்கள்!

ஒன்றா இரண்டா? இப்படி ஓராயிரம் உண்டே! கலை உலகில் நம்மைப் பிணைத்து வைத்த நட்பின் முத்திரைகளைக் காலம் கரைத்திட முடியுமா? முடியவே முடியாது!

அரசியலில் இன்று நமக்கிடையே மாறுபாடு இல்லை என்று சொன்னால் - அதனை நீங்களும் நானுமே ஏற்றுக்கொள்ள மாட்டோம்! எத்தனையோ மாறுபாடு - எத்தனையோ வேறுபாடு - எப்படியோ முளைத்து விட்டன!

ஆனால் இந்தப் பனிரெண்டு ஆண்டுப் பகையை - நாற்பதாண்டு கால நட்பு, பனிக்கட்டி போல இன்று

கரைத்து விட்டதற்கு அடையாளம், உங்கள் நோய் பற்றிக் கேள்விப்பட்டவுடன் என் கண்கள் அருவிகளானதுதான்!

அந்த அருவியில் கருத்து மாறுபாடுகள் கரைந்து போகவில்லை! ஆனால் கசப்பு உணர்வுகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விட்டன!

மூதறிஞர் ராஜாஜியின் உடல் நிலையைக் கேள்வியுற்று மருத்துவமனைக்கு வந்த பெரியார் அப்படியே ஆடிப்போய் விடவில்லையா?

அந்தப் பெரியார் வளர்த்த குடும்ப பாச உணர்வும், அரசியல் பண்பாடும் பட்டுப் போய்விடுமா என்ன?

அரசியலில் நீங்களும் நானும் முப்பது ஆண்டுகள் இணைந்து இருந்தோம் - அதில் இந்தப் பனிரெண்டு ஆண்டுகளாகப் பிரிந்தும் இருக்கிறோம்!

ஆனால் அந்த 1953ஐ மறக்க முடிகிறதா? கல்லக்குடி போராட்டத்தில் ஆறுமாத சிறைவாசமேற்று திருச்சி சிறையிலிருந்து விடுதலையாகி சென்னை எழும்பூர் ரயிலடியில் நான் வந்திறங்கிய போது மக்கள் வெள்ளத்தில் அமிழ்ந்து போக இருந்தேன்! அன்று என்னைக் காக்கும் கரங்களாக உங்கள் கரங்கள்தானே நீண்டன! என்னை வாரி அணைத்துத் தோளில் தூக்கிக் கொண்டு மக்கள் கடலைக் கடந்தீர்கள்! அப்போது விலைஉயர்ந்த உங்கள் கைக்கெடிகாரம் அந்தக் கூட்டத்தில் போன இடம் தெரியவில்லை!

அம்மவோ! அதையெல்லாம் நினைத்தால் - அதுவும் இந்த நேரத்தில் நினைத்தால், நீங்கள் நலம் பெற வேண்டுமென்பதைத் தவிர என் உள்ளமும் உதடுகளும் வேறு எதனை உச்சரிக்கும்!

அரசியலில் நீங்கள் எடுத்த அந்தத் திடீர் நிலை! அதனால் ஏற்பட்ட திருப்பங்கள்!

அதன் காரணமாக உங்கள் வழி வேறாகிவிட்டது! என் வழியோ எப்போது மிருந்த வழியாக இருக்கிறது!

நான் நடக்கும் வழிதான் நல்வழியென்று வாதம் செய்து மோதிக் கொள்வதிலே கூட ஒரு சுவையுண்டல்லவா நம் இருவருக்கும். அதற்காகவும் நீங்கள் நலமுடன் திகழ வேண்டுமென்று தானே இந்த நண்பனின் இதயம் ஏங்கிக் கொண்டிருக்கும்!

நான் ஆலயங்களுக்குச் சென்றிருக்கிறேன், ஆட்சிப் பொறுப்பின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக! கலைச் சிற்பங்களைக் கண்டு மகிழ்வதற்காக!

பிரார்த்தனைகள் செய்ததுமில்லை! அதற்காகப் பிரகாரங்கள் சுற்றியதுமில்லை! இப்போதும் உங்களுக்காக அந்தத் தெய்வீகப் பிரார்த்தனையில் நான் ஈடுபடவில்லை! என்னைப் பெரியாரும் அண்ணாவும் அப்படி வளர்த்து விட்டார்கள்!

ஆனால் என் இனிய நண்பரே! உங்களுக்காக, நடைபெறுகிற பிரார்த்தனைகள் வெற்றி பெறட்டும்!

பாசமிகுந்த எனது பழைய காலத்துத் தோழரே! நீங்கள் அந்தப் பழைய புன்னகை முகத்தோடு எங்களைக் காண வாருங்கள்!

உங்களைக் காண எங்களுக்கு இப்போது அனுமதியில்லை!

பரவாயில்லை! நீங்கள் நலமெல்லாம் பெற்று எங்களைக் காண வந்தால் போதும்!

பிரார்த்தனை என்பதற்கு துதி என்பது மட்டுமல்ல, வேண்டுகோள் என்றும் ஒரு பொருள் உண்டு!

அந்தப் பொருளில் வேண்டுமானால் நானும் பிரார்த்தனை செய்கிறேன். கருத்து மோதல்களுக்கிடையிலேயும் கனிந்துரையாடிடக் கடுகி எழுந்து வருக! கதிரொளி பட்ட பனிமூட்டமென உங்கள் நோய்மூட்டம் விலகிடுக!

என்றும் உங்களது நண்பன்,

மு. க.

22-10-1984

1279. அ.தி.மு.க. உடன்பிறப்புகளுக்கு!

உடன்பிறப்பே,

எனது இனிய நண்பர் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் உடல்நிலை கேட்டு அதிர்ச்சியுற்று - பதறிப்போய் - தாங்க முடியாத வேதனையின் காரணமாக உணர்ச்சி வசப்பட்டு அ.தி.மு.க. தொண்டர்கள் பத்து பேருக்கு மேற்பட்டோர் தங்களின் மேனிக்குத் தீயிட்டுக் கொண்டும், நஞ்சு அருந்தியும் உயிரைப் போக்கிக் கொண்டார்கள் என்ற செய்தி கேட்டுப் பதைத்துப் போகிறேன். மேலும் பலர் அந்த முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்ற செய்திகளும் இதயத்தில் வேல்களைப் பாய்ச்சுகின்றன.

தங்களின் தலைவனுக்கு வந்துற்ற நோய் எத்துணை இன்னலை அவருக்குத் தருகிறது என்பதை எண்ணிடும்போது உள்ளம் எரிமலையாகிற காரணத்தால் துடித்துப் போகிற அந்த உடன்பிறப்புக்கள், உயிரோடிருந்து அந்த வேதனையை சகித்துக் கொள்ள முடியாமல் உயிரைப் போக்கிக் கொள்வதன் மூலம் தங்களுக்குத் தாங்களே அமைதியைத் தேடிக் கொள்கிறார்கள் என்பதை உணர முடிகிறது!

1964-1965-ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற மொழிப் புரட்சியை யொட்டி கீழப்பாழூர் சின்னச்சாமி தொடங்கி மொத்தம் எட்டுத் தமிழர்கள், தீக்குளித்தும், நஞ்சருந்தியும் தங்கள் உயிரைப் போக்கிக் கொண்டபோது அவர்களின் உணர்வு மதிக்கத்தக்கது என்றாலும் அவர்கள் மேற்கொள்கிற போராட்ட முறை ஏற்கத்தக்கது அல்ல என்று நமது அண்ணா அவர்கள் கருத்து தெரிவித்து, அந்தச் செயல்கள் இனித் தொடரா வண்ணம் ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று விரும்பினார்கள்.

அதற்கடுத்து 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இலங்கைத் தமிழர்களின் படுகொலையைக் கண்டித்து

சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்திற்கு முன்பு மறியல் செய்வதற்காக வீட்டிலிருந்து புறப்படும் போதே நான் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் பதினைந்து நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது - என்னை விடுதலை செய்யுமாறு கோரி பதினாறு பேர் தீக்குளித்து அவர்களில் ஏழு பேர் மாண்டு போயினர். நான் சிறையிலிருப்பதைத் தாங்கிக் கொள்ளாமல் அந்தச் செயலில் ஈடுபட்ட உடன்பிறப்புகளின் உணர்வுக்கு உருகியபோதிலும் - உடனடியாக சிறையிலிருந்தவாறே நானும் - நமது கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும் தீக்குளிப்பதும், தற்கொலை செய்து கொள்வதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முறைகள் அல்ல, தயவு செய்து நிறுத்துங்கள் என்று அறிக்கைகள் விடுத்தோம்!

ஆனாலும் நடந்தது நடந்துவிட்டதே - என்ன செய்ய!

சென்ற ஆண்டு கூட ஆரணிக்கருகே நமது கழக உடன்பிறப்பு ஒருவர், இலங்கைத் தமிழருக்கு விளைந்த கொடுமை கண்டு கொதித்துத் தனக்குத்தானே கொள்ளி வைத்துக் கொண்டார்!

ஆந்திரத்தில் இந்திரா காந்தி நடத்திய ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் நாம் நடத்திய பேரணியின் போது - குன்றத்தூரில் கழக உடன்பிறப்பு ஒருவர் தீக்குளித்த செய்தி நமது நெஞ்சில் செந்தேளாகக் கொட்டிற்று!

மொழிப் போரில் தீக்குளித்து மாண்ட தீரர்களை - அன்றைக்கு இந்தி ஆதிக்கத்துக்கு வக்காலத்து வாங்கியவர்கள், இந்தி எதிர்ப்பாளர்களைச் சுட்டு வீழ்த்திய கட்சிக்காரர்கள் - வறுமையால் தற்கொலை செய்து கொண்டனர் என்றும் - கடன் தொல்லை - குடும்பச் சச்சரவு - அதனால் உயிரை மாய்த்துக் கொண்டனர் என்றும் நெஞ்சில் ஈரமும் இரக்கமுமின்றி இழித்தும் பழித்தும் பேசினர்! மக்கள் மன்றத்திலே மட்டுமல்ல, சட்டமன்றத்திலே கூட அன்றைய ஆளுங்கட்சித் தரப்பிலே அந்தத் தியாகச் சீலர்களின் மீது சேறு வாரி இறைக்கப்பட்டது! அந்தத் தியாகத் தங்கங்களின் தற்கொலைச் செயல் முறையைக் கழகம் ஏற்றுக் கொள்ளாவிடினும், அந்த மாணிக்கங்களின் மீது மாசு கற்பித்த மமதையாளர்களின் போக்கு கண்டு மனம் நெகிழ்ந்தோம்!

அதே போலத்தான் சில நாட்கள் நான் சிறையில் அடைபட்டிருந்ததைத் தாங்கிக் கொள்ள முடியாமல் - என்றோ

ஒருநாள் விடுதலை ஆவேன் எனத் தெரிந்தும் பொறுத்துக் கொள்ள முடியாமல் - எழுவர் தீக்குளித்து இன்னுயிர் நீத்த போதும் அவர்கள் எடுத்த முடிவுக்கு ஏதேதோ இழிதகைக் காரணங்களைக் கூறி ஏடுகளில் செய்திகளைப் பரப்பினர்! எழுதினர் - பேசினர்! எவர்? யார்? அத்தகைய இதயமில்லா மனிதர்களாய் ஏகடியம் செய்தனர் என்பதற்குப் பழைய ஏடுகளே ஆதாரம்!

ஆனால் நானும் சரி, நமது கழகமும் சரி - எந்தவொரு இயக்கத்தில் தன்னலமற்ற தியாகச் சுடர்கள் இருந்தாலும் அவர்களையோ - அவர்களது உணர்வுகளையோ - என்றைக்கும் மதிக்கத் தவறியதில்லை!

இதோ தங்களின் அன்பிற்குரிய தலைவருக்காக - என் இனிய நண்பருக்காக - பத்துக்கு மேற்பட்ட அ.தி.மு.க. உடன்பிறப்புகள், தங்களின் உயிர் மீது பற்றற்றுத் தணல் பாய்ந்த மெழுகாகியிருக்கின்றனர் என்கிற போது... அய்யகோ! அவர்களின் பாசப்பிணைப்பை என்னவென்று புகழ்வது!

தி.மு.கழக உடன்பிறப்புகள் மொழிக்காக ஒரு முறையும் - எனக்காக ஒரு முறையும் தீக்குளித்துச் செத்தபோது, அந்த நாட்களில் விரசமாக விமர்சித்த ஆளுங்கட்சிப் பிரமுகர்களைப் போல விமர்சிக்கும் அரசியல் கீழ்த்தரம் எனக்கும் நமது கழகத்திற்கும் என்றைக்கும் ஏற்படாது! அதுதான் நாம், அதனால்தான் நாம்; நாமாக இருக்கிறோம்!

உடன்பிறப்பே, உன்னை உடன்பிறப்பே என அழைக்கும் உரிமை எனக்கிருப்பது போலவே - அ.தி.மு.க.வின் அடித்தளத் தொண்டர்களை உடன்பிறப்புகளே! என அழைக்கும் உரிமை எனக்கிருப்பதாக நம்புகிறேன்! அந்த நம்பிக்கையைச் சிதைக்கச் சில நல்லவர்கள் ? முனையலாம்! அது குறித்து நான் கவலைப்படவில்லை! எல்லோரும் ஒன்றாக இருந்த அந்தக் காலத்தை மறந்து விடாத நிலையில் அ.தி.மு.க. செயல்வீரர்களை நான் உடன்பிறப்புகளே என விளிப்பதில் ஆச்சரியமுமில்லை! தவறுமில்லை!

எனவே, அந்த உடன்பிறப்புகளைக் கேட்டுக் கொள்கிறேன்!

உடன்பிறப்புகளே! உங்களுக்கு உங்களின் உயிரினும் சிறந்த தலைவன் மீது இருக்கின்ற அன்பின் பெருக்கை அறியாதவனல்ல நான்! அவர் உடல்நலிவுற்றுத் துன்புறும்

செய்தியால் உங்கள் இதயம் எப்படித் துளைக்கப்படும் என்பதை உணர முடியும் என்னால்! பன்னிரண்டு ஆண்டுக் காலம் பகை மூட்டத்துக்கிடையே பிரிந்து நின்ற நானே... பழைய பசுமையான தோழமைக் காலத்தை எண்ணி எண்ணி... துன்பச் சுமை தாங்காது தத்தளிக்கிறேன் என்கிறபோது, எந்தப் பதவியோ - பவிசோ - பரிசோ - எதையுமே நாடாமல் அவரை நெஞ்சிலே குடியமர்த்தி வைத்திருக்கிற உங்களால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்! அந்தத் துடிப்பு, அவர் முதலமைச்சராக இருக்கிறார் என்பதால் பயன் கருதி ஏற்படும் துடிப்பு அல்ல! பற்று பாசத்தால் ஏற்படும் துடிப்பு!

அந்தப் பற்றும் பாசமும் அவர் நீண்ட ஆயுளுடன் நெடுங்காலம் வாழ வேண்டும் என வாழ்த்துவதற்குப் பயன்பட வேண்டுமேயல்லாமல் - உங்களை நீங்களே கருக்கிக் கொள்வதற்குக் காரணமாகி விடக்கூடாது!

அவர் நலம் பெற்று வருகிறார் என்ற நல்ல செய்திகள், அரசின் சார்பில் அறிவிக்கப்படுகின்றன! நான், இந்தக் கடிதம் எழுதும் நேரத்திலும் அமைச்சர் அண்டே அவர்கள் முதலமைச்சர் உடல்நிலையில் மேலும் முன்னேற்றம் என்ற செய்தியைத் தந்துள்ளார்.

அந்தச் செய்திகள் தொடரட்டும்! அவ்வாறு தொடர வேண்டுமெனத் தமிழகமே விழைகிறது!

அதற்கிடையே நீங்கள் நெருப்பிலிட்டுக் கொண்டு மாள்கிறீர்கள் என்ற நெஞ்சைக் குலுக்கும் தகவல்களால் என்னைப் போன்றோர் படுந்துயர் கொஞ்சமல்ல!

உணர்வு மதிக்கத்தக்கது! வணங்கத்தக்கது! ஆனால் உயிரை வலுவில் போக்கிக் கொள்வது ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல!

நீங்கள் சார்ந்திருக்கும் சமுதாயத்திற்காக - நீங்கள் ஆற்ற வேண்டிய கடமை எவ்வளவோ இருக்கிறது!

எந்தவொரு இயக்கத்திற்கும் அந்த இயக்கத்தின் தொண்டனே உயிர்நாடி!

அந்த உயிர்நாடிகள் எந்தவொரு இயக்கத்திலும் அறுந்து போய்விடக் கூடாது!

தொண்டனாகவே இருந்து வளர்ந்தவன் என்ற முறையில் வேண்டுகிறேன்! தொண்டுள்ளம் கொண்ட தியாக உடன்பிறப்புகளே! உங்கள் உயிர்ப்பலியை நிறுத்துங்கள்! உங்கள் தலைவர் - எனது நண்பர் நலம் பெற்று எழுந்துவர - நாமனைவரும் சேர்ந்து வாழ்த்துவோம்!

உடன்பிறப்பே, இந்த வேண்டுகோளைத்தான் உன்னுடன் இணைந்து அ.தி.மு.க. உடன்பிறப்புகளுக்கு விடுக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

27-10-1984

1280. ஐவ்வாது மலையும் - சந்தோஷ அலையும்!

உடன்பிறப்பே,

இதோ இந்தப் புகைப்படத்தைப் பார்த்தாயா? நமது மாநிலத்து நிதியமைச்சர் நாவலர் அவர்கள், மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு வாசமிக்க ஜவ்வாது மாலை அணிவித்து மகிழ்ச்சி பொங்கிட, புகைப்படக்காரருக்கு போஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்தப் பூரிப்பு வழியும் புகைப்படம் தமிழ்நாட்டில் வெளிவரும் நாளேடுகள் பலவற்றில் கடந்த இரண்டு மூன்று நாட்களாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.

திடீரென்று டெல்லியில் உள்ள மத்திய நிதி அமைச்சருக்கு, நமது மாநில நிதியமைச்சர் மாலை அணிவித்து மகிழ வேண்டிய நிகழ்ச்சி என்ன ஏற்பட்டுவிட்டது?

ஏதாவது தமிழகத்திற்குப் புதிய திட்டத்தை அறிவித்து, அதற்காகப் பல கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் அறிவித்து - அந்த நல்ல செய்தி கேட்டுத் தமிழக அரசின் சார்பாக மத்திய நிதி அமைச்சருக்கு நமது மாநில நிதி அமைச்சர் நன்றிப் பெருக்குடன் மாலை அணிவித்துப் போற்றிப் புகழ்பாடுகிறாரா? அப்போது எடுக்கப்பட்ட படமா?

அல்லது, பொதுத்தேர்தல் முடிவுற்று பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார் பிரணாப் என்ற செய்தி கேட்டு, அதற்காக அவரைப் பாராட்டுவதற்கு நாவலர் அவர்கள் மாலை அணிவித்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்துள்ளாரா? அப்போது கிளிக் செய்யப்பட்ட புகைப்படமா?

ஒருவேளை - டெல்லிக்குச் சென்ற நாவலரிடம், பிரணாப் முகர்ஜிக்குப் பிறந்த நாள் விழா என்பதை யாராவது நினைவூட்டி - அதன் காரணமாக அவரை அலுவலகத்தில் சந்தித்து மாலை அணிவித்து அகமிக மகிழ்ந்து இன்ப வெள்ளத்தில் மிதக்கும்போது எடுக்கப்பட்ட நிழற்படமா?

இல்லை, இல்லை, உடன்பிறப்பே - இவை எதுவுமே இல்லை!

முதலமைச்சர் உடல்நலிவுற்றிருப்பதை முன்னிட்டு; தமிழக ஆளுநர் குரானா அவர்கள் முதல்வரின் இலாகாக்கள் அனைத்தையும் கடந்த 25-ஆம் தேதி அன்று நாவலரிடமே ஒப்படைத்து விட்டார் அல்லவா! அந்தக் காரியம் நடைபெற்ற அடுத்த விநாடியே நிதியமைச்சர் நாவலர் அவர்கள் டெல்லிக்குப் புறப்பட்டுவிட்டார்.

அண்ணா உடல்நலிவுற்றிருந்தபோது அவரது இலாகாக்கள் அண்ணாவே கோப்பில் கையெழுத்திட்டு, மூன்று நான்கு அமைச்சர்களிடத்திலே பிரித்துத் தரப்பட்டன.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடு சென்றிருந்த போதுகூட அவரது இலாகாக்களை அவரே பகிர்ந்து இரண்டு மூன்று அமைச்சர்களுக்குத் தற்காலிகமாக அளித்து அவரே கோப்பிலே அந்த ஆணையை இட்டு கையெழுத்துப்போட்டுதான் சென்றார்.

ஆனால் இப்போது மருத்துவமனையில் கடந்த 10-ஆம் தேதியன்றுகூட கோப்புகளை முதல்வர் பார்வையிட்டுக் கையெழுத்திட்டார் எனச் சட்டசபையில் நாவலரே தகவல் தந்துள்ள நிலையிலும் கூட, முதல்வர் - தனது இலாகாக்களை நாவலருக்குத் தற்காலிகமாக ஒப்படைப்பதாக ஒரு கோப்பிலும் எழுதவில்லை. ஆனால் அதற்கு மாறாக ஒன்பதாம் தேதி வாய்மொழியாக அந்த இலாகா மாற்றத்தை முதல்வர் அவர்கள் நாவலரிடம் கூறி விட்டாராம்! இப்படி நாவலரே சொல்கிறார்!

பத்தாம் தேதி பைல் பார்த்துப் பைசல் செய்யக்கூடிய நிலையில் இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒன்பதாம் தேதி வாய்மொழியாகச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன?

டெல்லியின் ஆலோசனைப்படி கவர்னர் இப்படியொரு முடிவை எடுத்து - ஒரு புதிய அதிகாரத்தை கவர்னரின் கையில் தமிழக ஆட்சியாளர்கள் வலுவில் கொண்டு போய் வழங்கியிருக்கிறார்கள்.

முதல்வருக்கோ - நமது நெஞ்சு நெகிழத்தக்க அளவுக்குத் திடீரெனப் பக்கவாத நோயினால் பேசும் சக்தி இழந்துள்ள நிலை! கையெழுத்தும் போட முடியாமல் கையை அசைக்கும் சக்தியையும் இழந்துள்ள நிலை! அதாவது 13ஆம் தேதிக்குப் பிறகு!

இப்படிப்பட்ட ஒரு அசாதாரண சூழலில் மாநிலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய நிர்வாகப் பணிகளுக்காக வேறு என்னதான் செய்ய முடியும் எனக் கேட்பது எனக்குப் புரிகிறது!

சுலபமான ஜனநாயக வழி ஒன்று இருக்கிறதே!

ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி, முதல்வர் உடல் நலம் பெறுகிற வரையில் தற்காலிகமாக அவரது இலாகா பொறுப்புக்களை இந்த அமைச்சர் பகிர்ந்து கொண்டு பார்ப்பதற்குச் சட்டமன்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களின் இந்தக் கூட்டம் கவர்னருக்குப் பரிந்துரை செய்கிறது என்று ஒருவர் பெயரைக் குறிப்பிட்டுத் தீர்மானம் நிறைவேற்றி அதனைக் கவர்னரிடம் கொடுத்து அதன் வாயிலாக ஜனநாயக நெறியையும் காப்பாற்றி - மாநில உரிமையையும் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியுமே! இந்த என் கருத்தும் சிந்திக்கக்கூடிய ஒன்றுதானே!

இப்படி எதுவுமே முறைப்படி சிந்தித்து நடத்தப்படாமல் - முதல்வர் அவர்கள் வாய்மொழியாக ஒன்பதாம் தேதியே சொல்லி விட்டார் என்று ஒரு கற்பனைக் கதையைக் கட்டி, கவர்னர் மூலமாக முதலமைச்சரின் எல்லா இலாகாக்களையும் நாவலர் தன்னகப்படுத்திக் கொண்டது, அவரது ராஜதந்திரத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியல்லவா?

அதற்கு ஆசி வழங்கி, அருள்பாலித்த டெல்லி பேரரசின் பிரதானியர்களில் ஒருவரான பிரணாப் முகர்ஜிக்கு நன்றி தெரிவித்து - மாலை சூட்டி - மகிழ்ச்சிப் பெருக்கில் நாவலர் ஆழ்ந்திருப்பது ஆச்சரியமல்லவே!

உடன்பிறப்பே, எத்தகைய நேரத்தில் தனக்கு கிடைத்த வாய்ப்பு என்பதைக்கூட சிந்தித்திட நாவலருக்கு நேரமில்லை!

கட்சி வேறுபாடுகளை மறந்து, கண்ணீர் மல்கிட தமிழகத்து மக்கள் அனைவரும் முதல்வரின் உடல்நலம் பெற வேண்டுமென வாழ்த்திக் கொண்டிருக்கிற சமயம்!

பதவி - பவிசு - அதிகாரம் - அந்தஸ்து எதையுமே தங்கள் தலைவனிடம் எதிர்பாராமல் அவரிடத்தில் பாசங் கொண்ட அவரது கட்சியின் உடன்பிறப்புகள் அவர் நலம் பெற வேண்டுமென்பதற்காகத் தீக்குளித்துச் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பசி, உறக்கம், ஓய்வு அனைத்தையும் மறந்த தொண்டர்கள் - அவர் உடல்நிலை குறித்து அறிந்திட அலைமோதிக் கொண்டிருக்கிறார்கள்!

இந்தச் சோகம் கப்பிய சூழ்நிலையில்தான் - அதுவும் முதல்வரின் உடல்நிலையில் நெருக்கடியும், சிக்கலும் ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்க்கப்பட்ட நாளில்தான் - முதல்வரின் உடல்நிலை எவ்வாறுள்ளது என்ற முழு உண்மையையும் அறிந்து கொள்ளக்கூடிய இடத்திலே இருக்கிற நாவலர் அவர்கள் டெல்லிக்குச் செல்கிறார்!

இலாகாக்கள் தன்பால் வந்து விட்டன என்ற இனிய செய்தியை வெளியிட்டுவிட்டு - அந்த வாய்ப்பு வழங்கிய வடபுலத்துக்காரர்களுக்கு நன்றி கூறி மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவிக்கிறார்! பிரதமருக்கும், மற்றவர்களுக்கும் மாலை அணிவித்த நிகழ்ச்சிகள் எல்லாம் படமாக வரவில்லை! பிரதமர் அலுவலகத்தில் அடிக்கடி புகைப்படம் எடுக்க அனுமதிப்பதில்லை! பிரணாப் முகர்ஜிக்கும், ஆர். வெங்கட்ராமனுக்கும் ஜவ்வாது மாலைகள் அணிவித்தபோது பிரதமருக்கு அணிவிக்காமல் இருந்திருப்பாரா?

ஆனால் பிரதமர் இங்கே முதல்வரைக் காண வந்தபோது தனக்கு யாரும் மாலை அணிவிப்பதைத் தவிர்த்துவிட்டார்.

எனது சுற்றுப்பயண நிகழ்ச்சிகள் தென்ஆற்காடு மாவட்டத்தில் நடைபெற்ற போது எனக்கு யாரும் மாலை அணிவிக்கக்கூடாது என அறிக்கையே விடுத்தேன்.

தற்காலிகமாக - முதல்வரின் இலாகாக்களை, டெல்லி அரசின் கடைக்கண் பார்வை - கவர்னரின் கருணாகடாட்சம் - இவற்றின் காரணமாகப் பெற்றுக்கொண்டதற்கே இத்தனைப் பேரானந்தமா?

மருத்துவமனையில் முதல்வர் நடத்துவது உயிருக்குப் போராட்டம்!

மேலிடத்தில் உள்ள இவர்களுக்கோ மகிழ்ச்சிக் கொண்டாட்டம்!

உடன்பிறப்பே! இவர்கள் இயல்பு இதுதான் என்பது உனக்கும் எனக்கும் முன்பே தெரியும்!

அ.தி.மு.க.வில் உள்ள உணர்ச்சியுள்ள உடன்பிறப்புகள், இவர்களை அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென்பதற்காக இதனைக் குறிப்பிட்டேன் - அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

01-11-1984

1281. வாழ்க இந்திரா! வீழ்க வன்முறை!

உடன்பிறப்பே,

ஒரு மாத காலமாகவே துயர இருளில் மூழ்கிக் கிடக்கும் நமது உள்ளத்தில் சில நேரங்களில் திடீர் திடீர் என அதிர்ச்சி மின்னல்கள்! ஆம், தமிழக முதலமைச்சர் எனது இனிய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல்நலிவுற்று மருத்துவமனைக்குச் சென்று ஒரு மாதமாகிறதே! இடையிடையே அவர் உடல்நிலை குறித்து எத்தனை எத்தனை திடுக்கிடும் செய்திகள்! மின்னலைப்போல் தாக்கி நம்மை நடுங்க வைத்துக் கொண்டிருக்கின்றன! இந்த சோகத்தைத் தாங்கவே இதயத்தில் வலுக்குறைந்து வரும் நேரத்தில் இடியொன்றே விழுந்துவிட்டதே - இந்திரா காந்தி கொல்லப்பட்டார் என்று!

நண்பர் எம்.ஜி.ஆர். நலம் பெற்று வருகிறார் என நாள்தோறும் அரசின் சார்பில் அறிவிக்கப்படும் செய்தி கேட்டு அகமகிழ்ந்து - பலமுறை ஒத்தி வைக்கப்பட்ட தர்மபுரி மாவட்டச் சுற்றுப்பயணத்தை இந்த முறை நடத்திவிடலாமென்று சென்றிருந்தேன். மூன்று நாள் நிகழ்ச்சிகள் எழுச்சியுடன் நடைபெற்றன. எதிர்பார்த்ததற்கு மேலாக எறும்பெனச் சுறுசுறுப்புக் காட்டி தர்மபுரி மாவட்டக் கழக உடன்பிறப்புகள் தேர்தல் நிதியையும் வாரி வழங்கினர். இரண்டு லட்ச ரூபாய்தான்! ஏழை எளியோர் நடுத்தர வர்க்கத்தினர் இதயமார்ந்த அன்புடன் அளித்தமையால் அது இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு மதிப்பு வாய்ந்ததன்றோ!

அந்த மகிழ்ச்சியில்தான் அக்டோபர் 31-ஆம் நான் காலை சென்னை வந்து சேர்ந்தேன். சுற்றுப் பயண நிகழ்ச்சியொன்றில் விளக்கொளிக்குப் பறந்து வந்த விஷப்பூச்சியொன்று கொட்டிவிட்டதால் உடலில் ஏற்பட்ட ஒவ்வாமை அலர்ஜிக்கு, டாக்டரிடம் சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டு முரசொலி

அலுவலகம் சென்றேன் - அங்கு மாறனிடம் இரண்டு வார்த்தை கூடப் பேசியிருக்க மாட்டேன், நான் இருந்த அறைக்குள் திபுதிபுவெனத் துணைஆசிரியர்கள் - பரபரப்புடன் நுழைந்தனர்!

யு.என்.ஐ. செய்தி நிறுவனத்தின் தகவல்! பிரதமர் இந்திரா சுடப்பட்டு விட்டார் - மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார் - இரும்புத் தடியொன்றினால் ஓங்கி மண்டையில் அடித்தது போலிருந்தது!

அடுத்த செய்தி - நிலைமை கவலைக்கிடம் என்பதாக! நெஞ்சைத் தூக்கி நெருப்பிலே போட்டது போலாயிற்று! நான் மட்டுமல்ல - அலுவலகத்தில் அனைவருமே துடித்தனர்!

ஒன்றல்ல - இரண்டல்ல - பல குண்டுகள் பாய்ந்து விட்டன என்ற செய்தி வந்ததுமே இனி எப்படி அவர்களைப் பிழைக்க வைக்க முடியும் என்ற கவலை என்னைக் காரிருளில் தள்ளியது! கால்கள் தடுமாறிட நடந்து வந்து, காரில் ஏறி வீட்டுக்கு வந்து சுருண்டு கிடந்தேன். டெல்லியில் இருந்து தம்பி மோகன் எம்.பி. தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டார். காலை 11 மணி அளவிலேயே இந்தியாவின் தலைசிறந்த ஒரு அத்தியாயம் முடிந்துவிட்ட செய்தியை மோகன் சொன்னதும் தலை சுற்றியது! ஆம் - ஒரு மாத காலச் சோக இருளில் இருக்கும் நமது தலையில் இடி விழுந்து விட்டது என்று சொன்னேன்! அந்த இடி - இந்திரா காந்தி இறந்து விட்டார் என்ற செய்தியாக விழுந்தது.

வானொலியைத் திருப்பினால் இனிய இசை நிகழ்ச்சிகள் - வழக்கம்போல் உரையாடல்கள் - நாடோடிப் பாடல்கள்!

சென்னையில் நாளேடுகள் அவசர அவசரமாகத் தனி இதழ்களை வெளியிட்டன! அவற்றில் எல்லாம் அன்னை இந்திரா மறைந்து விட்டார் என்ற அவல எழுத்துக்களே கண்ணீர்சிந்தின.

ஏதோ சில நடைமுறைச் சிக்கல்கள் இருந்ததால் மாலை ஆறு மணிக்கே வானொலி செய்தியைத் தர முடிந்தது என்றும், அதன் பிறகே சோக கீதம் இசைக்க முடிந்தது என்றும் சமாதானங்கள் கூறப்பட்டன.

சோககீதம் இசைக்காவிட்டாலும் கூட - பிரதமர் மறைந்துவிட்டார் என்ற செய்தி உறுதியான பிறகு - அந்த ஆறு அல்லது ஏழு மணி நேரம் வேறு பல நிகழ்ச்சிகளை ஒலிபரப்பாமல் வானொலியை மூடியாவது வைத்திருக்கலாமே என்று ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது!

இந்தியாவில் எது ஒழுங்காக நடக்கிறது! இது மட்டும் ஒழுங்காக நடக்கவில்லையென்று வானொலியைக் குறைகூறுவதற்கு!

பிரதமரின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய பணியையே ஒழுங்காக செயல்படுத்தாத காரணத்தினால்தான் இத்தகைய பெரிய இழப்பு! இத்தனை பெரிய சோகம்!

அரசியல்மாச்சரியங்களைக் கத்திமுனையிலும் - துப்பாக்கிமுனையிலும் தீர்த்துக் கொள்ளத் துணிந்த வன்முறையாளர்களின் செயலுக்கு உலகில் எத்தனையோ தலைவர்கள் பலியானதுண்டு!

ஆனால் இந்தியாவில் இப்போது நடந்துள்ளது இழிவு! இழிவு! இழிவு! காவல்துறைக்கே மாபெரும் களங்கம்! களங்கம்! களங்கம்!

உறையில் இருந்த வாளை - உறையே உடைத்து நொறுக்கி விடுவதா?

எதிரியின் கணைகளைத் தடுத்திடக் கையில் பிடித்த கேடயமே கழுத்தை அறுத்திடுவதா?

பாலுக்குப் பூனையைக் காவல் வைப்பதா? என்பது பல்லாண்டு காலத்துக்கு முந்தைய பழமொழி ஆயிற்றே! அதைக்கூட அறியாதவர்களா பாரதப் பிரதமரின் பாதுகாப்புப் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வந்தனர்!

ஒற்றொற்றித் தந்தபொருளையும் மற்றுமோர்

ஒற்றினால் ஒற்றிக் கொளல்

என்பது குறளாயிற்றே! ஒரு ஒற்றன் வாயிலாகத் தெரிந்து கொண்ட தகவல்களுடன் நில்லாமல், அந்த ஒற்றனைக் கண்காணிக்க மற்றுமொரு ஒற்றனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் தந்திரமுரைத்தானே வள்ளுவன் - அதன் பிறகு வளர்ந்துள்ள எத்தனையோ நுட்பங்களிலிருந்தும் கூட பிரதமரின் பாதுகாப்புத்துறையை ஏற்றிருந்த அதிகாரவர்க்கத்தினர் அலட்சியத்தின் உருவங்களாக எப்படி உலவினர் என்பதுதான் விந்தையிலும் விந்தை!

கடந்த காலத்து நிகழ்ச்சிகள் சிலவற்றுக்குப்பிறகு, காவல் துறையினர் எவ்வளவு கண்காணிப்புடன் இருந்திருக்க வேண்டும். அப்படி விழிப்புடனும், விவேகத்துடனும் இருந்திருந்தால் இந்திரா

காந்தியின் உடல் இரத்தத்தில் குளிப்பாட்டப்பட்டு - நெருப்பினால் துடைக்கப்பட்டிருக்குமா?

அம்மையாரின் உடல் வலுவுக்கும் - சுறுசுறுப்புக்கும் - இன்னும் பல ஆண்டுக் காலம் வாழ வேண்டியவர்கள் அல்லவா?

இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் அறிமுகமான கடைசி தேசியத் தலைவர் இந்திரா என்கிற போது - அவர் ஆட்சியில் இருந்தோ அல்லது இல்லாமலோ இந்திய நாட்டு மக்களுக்கு ஆற்றிட வேண்டிய பணிகள் அளவற்றவையன்றோ!

இரண்டு சீக்கியர்களைப் பாதுகாப்புக்கு நியமித்தது கூடத் தவறில்லை! காரணம், எல்லா சீக்கியர்களுமே வன்முறையின் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென விரும்புகிறவர்களல்லர்! இந்தியாவின் குடியரசுத் தலைவராக - அமைதி - பொறுமை - இவற்றின் சின்னமாக விளங்குகிற ஜெயில்சிங் அவர்கள் சீக்கியர்தானே! அமிர்தசரஸ் ஆலயத்தில் தீவிரவாத சீக்கியர்களை அடக்கிடச் சென்ற இராணுவத் தளபதிகளில் பலர் சீக்கியர்கள்தானே!

ஆனால் இந்த இரண்டு கொலைகாரர்களையும் - சரிவரக் கண்காணிக்கத் தவறியதால் பிரதமர் கொல்லப்படவும் - அதன் எதிரொலியாக சீக்கியர் இனத்தின் மீதே ஒரு சாராருக்கு வெறுப்பு ஏற்படவும் - அந்த வெறுப்பைத் தூண்டுகிற சக்திகள் சில செயல்படவும் - அதன் விளைவாக நூற்றுக்கணக்கான பிணங்கள் விழவும், சூறைகள் - கொள்ளைகள் நடைபெறவுமான நாடு காடாகும் நிகழ்ச்சிகள் பரவுகின்றன!

மிருக வெறியையும் வெல்லக்கூடிய இந்தத் தீச்செயல் புரிந்த கொலைகாரர்கள், ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக, அந்த மதத்தில் உள்ள மக்களையெல்லாம் அழிப்பது என எண்ணுவது ஏற்கத்தக்கது அல்ல! அனுமதிக்கத்தக்கதுமல்ல!

இந்திய நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தவரும் - ஈ எறும்புகளுக்குக் கூடத் துன்பம் விளைக்கக்கூடாது என்ற இளகிய இதயம் படைத்தவருமான - உத்தமர் காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றவர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அந்த மதச்சார்புடைய மக்களை அழிக்க யாரும் முற்படவில்லையே!

அந்தக் கடந்த காலத்தை எண்ணிப் பார்த்து - நிகழ்காலத்தில் வன்முறை நெருப்புப் பொறியை மேலும் ஊதிட முனையாமல் அணைத்திட அனைவரும் உறுதிபூண்டிட வேண்டும்.

பிரதமர் இந்திரா மறைவுக்குப் பிறகு சிலமணி நேரங்களில் அவரது மகன் ராஜீவ்காந்தி அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டதில் கடைப்பிடிக்கப்பட்ட முறையும் - காட்டப்பட்ட அவசரமும் பொருத்தமற்றதாகத் தோற்றமளித்தாலும் கூட - இப்போது ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையாக பொறுப்பேற்றுள்ள நிலையில், இந்தியாவில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையை அடக்குவதற்குப் புதிய பிரதமர் உறுதிபூண்டிருப்பதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

பிரதமர் இந்திரா கொலையுண்டதற்குக் கண்டனமும் - அவரது மறைவுக்கு இரங்கலும் தெரிவித்துக்கொண்ட தி.மு.கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு, வன்முறையைத் தடுத்து நிறுத்த உரிய பங்கினைச் செலுத்தும் என்ற கருத்தையும் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த வன்முறையை அடக்குவதில் அரசின் இயந்திரம் முற்றிலும் செயலிழந்து விட்டிருக்கிறது.

என்று இந்து இதழில் திரு. ஜி.கே. ரெட்டி குறிப்பிட்டிருப்பது புறக்கணிக்கப்படக் கூடிய செய்தி அல்ல!

ஆற்றோரத்தில் விளையாட்டுக்காகக்கூட குழந்தையை ஓட விட்டுப் பார்ப்பதில் ஆபத்து இருக்கிறது என்பதை உணர வேண்டியவர்கள் உணரவேண்டும்!

இந்தியா எனும் குழந்தையை - ஆம்! அன்னையை இழந்து தவிக்கும் குழந்தையை - அனைவரும் ஒருங்கிணைந்து பாதுகாப்பு அரணாக நின்று பாதுகாத்திட முன் வர வேண்டும்!

இந்திராவைக் கொன்ற வன்முறை, இந்தியாவையும் கொன்றுவிடாமல் காப்பாற்றுகிற கவசமாக நாம் மாறுவோம்!

கண்ணீர் அணையுடைக்கிறது! அதனூடே கடமையும் நம்மை அழைக்கிறது!

வாழ்க இந்திரா! வீழ்க வன்முறை!

அன்புள்ள,

மு. க.

04-11-1984

1282. பிரித்துப் பார்க்கவில்லை!

உடன்பிறப்பே,

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் மறைவுக்குக் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

அவரைப் படுகொலைக்கு ஆளாக்கிய வன்முறை வெறிச் செயலைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இன்று ஏழாம் தேதியுடன் கழகம் அறிவித்த ஒரு வாரத் துக்கம் முடிவடைகிறது.

நாளை முதல் கழகப் பணிகள் என்றும் போல் தொய்வின்றித் தொடர வேண்டும்.

கட்சித் தலைவியை இழந்துவிட்ட காங்கிரசே தனது கட்சிப் பணிகள் எதனையும் நிறுத்தி வைக்கவில்லை.

தவறென்று கூற மாட்டேன்! அவரவர் கடமைகள் அவரவர்களுக்கு!

இந்திரா காந்தி மறைந்த அன்றைக்கே, இடைக்கால ஏற்பாடு எதுவுமின்றி கடந்தகால மரபுகள் மீறப்பட்டு, குடியரசுத்தலைவர் மூலம் ராஜீவ் காந்தி பிரதமரென அறிவிக்கப்பட்டாகி விட்டது.

இந்திராவின் உடல் எரியூட்டப்படுவதற்கு முன்பே - பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்கள் கூடி, ராஜீவ் காந்தி பிரதமரென அறிவிக்கப்பட்டதை ஒருமனதாக ஒப்புக்கொள்வதாகத் தீர்மானம் நிறைவேற்றி விட்டனர்.

இப்பொழுது ராஜீவ், இந்தியாவின் பிரதமர்!

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அரசியலில் நுழைந்தவர் - இன்று நாடாளும் பிரதமர்!

பிரதமராக ஒருவர் பொறுப்பேற்றுள்ள போது - அவர் யாராக இருந்தாலும் வாழ்த்துக் கூறுவது அரசியல் நாகரிகம்!

அவ்வாறே நானும் வாழ்த்துக் கூறுகிறேன்.

நமது கழகமும் அவருக்கு வாழ்த்துக் கூறுகிறது.

ராஜீவ் காந்தி பிரதமராகி விட்டார். அது பற்றி உங்கள் கருத்து என்ன? என்று என்னைக் கேட்டால் அதற்கு நான் கூறும் பதில் இதுதான்!

ராஜீவ் காந்தியையும், இந்திரா காங்கிரசையும் நான் பிரித்துப் பார்க்கவில்லை.

இதுதான் எனது பதிலாக இருக்கும்!

அப்படியென்றால் அவர் காங்கிரஸ் இயக்கத்தோடு அரசியல் ரீதியாகப் பிரிக்க முடியாத அளவுக்குச் சேர்ந்து வளர்ந்தவர் என்ற பொருளா?

இல்லை! அந்தப் பொருளில் நான் இந்தப் பதிலைச் சொல்லவில்லை.

ராஜீவ் காந்தி, இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரதமர்! இந்தியாவுக்குப் பிரதமராக ஆக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அவரை அப்படி ஆக்கியிருப்பது இந்திரா காங்கிரஸ் கட்சிதான்!

இந்திரா காங்கிரசை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறோமோ - அதே கண்ணோட்டத்தில் தானே அந்தக் கட்சியின் சார்பில் பொறுப்பேற்றுள்ள பிரதமர் ராஜீவையும் பார்க்க முடியும்!

இந்திரா காங்கிரசுக்கு ஜனநாயகம் என்றால் வேப்பங்காய்!

சர்வாதிகாரம் என்றால் சர்க்கரைக் கட்டி!

இதற்கு ஆதாரம் 1975-ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடி நிலை! மிசாக் கொடுமை! சிறைச்சாலைச் சித்திரவதைகள்!

இந்திரா காங்கிரசார் திருந்திக் கொண்டதைப் போல் நடிப்பதில் திறமைசாலிகள் - ஆனால் திருந்தவே மாட்டார்கள்!

இதற்கு ஆதாரம் - 1979-இல் நெருக்கடி காலக் கொடுமைகளுக்காக இந்திரா காந்தி அம்மையார் வெளிப்படையாகக் கேட்ட மன்னிப்பு! தெரிவித்த வருத்தம்!

நிலையான ஆட்சி இல்லாத சூழலில் நாமும் கூட நம்பினோம். நாட்டில் மீண்டும் ஜனநாயகம் பூத்திட இந்திரா காங்கிரஸ் பணியாற்றுமென்று!

கொள்கை அடிப்படையில் பெங்களூரில் முதலமைச்சர் ஹெக்டே கூட்டிய தென் மாநில முதல்வர்கள் மாநாட்டுக்குச் சென்றதையும், அங்கு மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் புதுவை மாநிலத்தில் கழக அரசைக் கவிழ்த்த நிகழ்ச்சி ஜனநாயகப் படுகொலையல்லவா?

மாநில உரிமை - மாநில சுயமரியாதை - இவைகளை வலியுறுத்துவதே குற்றமாம் - இதுதான் இந்திரா காங்கிரசின் ஜனநாயக இலக்கணம்!

தொடர்ந்து சிக்கிம், காஷ்மீர், ஆந்திரா - இவ்வாறு ஜனநாயகப் படுகொலைகள்!

ஏறிய ஏணியை உதைப்பதில் - தோள் கொடுத்தவனின் தலையையே மிதிப்பதில் - இந்திரா காங்கிரசுக்கு நிகர், இந்திரா காங்கிரசேதான்!

நன்றி - அந்தக் கட்சியின் அகராதியில் இல்லாத வார்த்தை!

கூட்டுச் சேர்ந்து கூடவே இருந்து குழிபறிப்பது - அந்தக் கட்சியின் மிகப் பெருங் கொள்கை!

இவையனைத்தும் நமக்குக் கடந்த கால அனுபவங்கள்!

அதனால்தான் சொல்கிறேன்! ராஜீவ் காந்தியையும், இந்திரா காங்கிரசையும் நமது கழகம் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கவில்லை!

அன்புள்ள,

மு. க.

07-11-1984

1283. நெஞ்சில் இருந்ததைக் கொட்டிவிட்டேன்!

உடன்பிறப்பே,

தேர்தலுக்கான ஆயத்தங்களும் - அந்த ஆயத்தங்கள் குறித்த அறிவிப்புகளும் வந்த வண்ணமிருக்கின்றன. அதிபர் ஆட்சி முறையா - அல்லது நாடாளுமன்றத்தின் ஆயுள் நீட்டிப்பா - அல்லது உரிய காலத்தில் தேர்தலா - என்ற கேள்விகளுக்கு மழுப்பலான பதில்களையே பெற முடிந்த நிலைமை மாறி, இப்போது தேர்தல் வந்தே விட்டது என்ற செய்திகள் வரத் தொடங்கிவிட்டன.

நாடாளுமன்றத் தேர்தலுடன் தமிழக சட்டமன்றத் தேர்தலும் இணைந்து வருமா என்பது இன்னமும் உறுதியாக்கப்படவில்லை. ஆனால் இணைந்தே நடத்த வேண்டுமென்பதில், நாவலர் அவர்களும் இன்னும் சில அமைச்சர்களும் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இரண்டு தேர்தலும் சேர்ந்து வந்தாலும் நாம் சந்திக்கத்தான் போகிறோம். அதற்கும் தயாராகவே இருக்கிறோம்.

ஆனால் என் உள்ளத்தில் உறுத்திக்கொண்டிருக்கிற ஒரு உணர்வை என்னால் வெளியிடாமல் இருக்க முடியவில்லை. தர்மபுரி மாவட்ட சுற்றுப் பயண நிகழ்ச்சியின்போது கூட அதனைக் குறிப்பிட்டேன்.

முதலமைச்சர் - எனது இனிய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மிகவும் நலிவுற்று அமெரிக்க நாட்டில் நியூயார்க் மருத்துவமனையில் படுக்கையிலிருக்கிறார் என்கிற போது அவர் தமிழ்நாட்டில் இல்லாத நேரத்தில் - அதுவும் நோயுற்று வெளிநாட்டில் வாடிக் கொண்டிருக்கும் போது - அதனையே முதலீடாக வைத்து அரசியல் ஆதாயம் தேட வேண்டுமென்று ஆளுங்கட்சியில் உள்ள சிலர் முனைவதை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை! எடுத்துச் சொல்லாமலும் இருக்க முடியவில்லை!

உடன்பிறப்பே, சில நாட்களுக்கு முன்பு நானும் பிரார்த்தனை செய்கிறேன் என்ற தலைப்பில் நான் எழுதிய கடிதத்தை உன்னிப்பாக - ஒவ்வொரு வரியாகப் படித்திருப்பாய் என்று நம்புகிறேன்.

அதில்;-

நான் நடக்கும் வழிதான் நல்வழியென்று வாதம் செய்து மோதிக்கொள்வதிலே கூட ஒரு சுவையுண்டல்லவா நம் இருவருக்கும்! அதற்காகவும் நீங்கள் நலமுடன் திகழ வேண்டுமென்றுதானே இந்த நண்பனின் இதயம் ஏங்கிக் கொண்டிருக்கும்!

என்று நான் எழுதியிருந்த அந்த வாசகம், என் கண்ணீரால் எழுதப்பட்டது என்பதை அந்தக் கடிதத்தை எம்.ஜி.ஆர். படிக்கும் நிலையில் இருந்திருந்தால் நிச்சயமாக உணர்ந்து கொண்டிருப்பார்!

1971-இல் நானும் எம்.ஜி.ஆரும் இணைந்து நின்று, ஆம் - நமது இயக்கம் டில்லிக்காரர்களால் பிளவுபடுத்தப்படாமல் ஒரே இயக்கமாக இருந்து தேர்தல் களங் கண்டு தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 184 சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற்றது!

அப்போது நானும் அவரும் ஒருமுனையில்! 1977-இல் அவரும் நானும் எதிர்எதிர் முனைகளில்! ஏன்? எப்படி? யாரால்? இப்போது விளக்க விரும்பவில்லை! 1972-இல் அச்சேறிய ஆதாரங்கள் சாட்சியங்களாக இருக்கின்றன. தேவைப்படும் போது தெரிவிப்பேன்! 1977-இல் அவர் வென்றார்!

1980-இல் நாடாளுமன்றத் தேர்தல் - மீண்டும் களம் கண்டோம். அப்போதும் எதிர்எதிர் முனைகளில்தான்! அவரை வெற்றி கண்டோம்! அதுவும் மிகப் பெரிய வெற்றி!

அடுத்து சட்டமன்றத் தேர்தல் - களத்தில் இருமுனைகளில் நின்றே மோதிக் கொண்டோம்! மீண்டும் அவர் பெரு வெற்றி பெற்றார்!

பின்னர் வந்த இடைத்தேர்தல் - இருமுனைகளில் நின்று மிகக் கடுமையாக மோதிக்கொண்டோம்! அண்ணா நகர், மயிலாடுதுறை, எனும் இரு பெரும் வெற்றிகளைப் பெற்றோம்!

1953 முதல் நானும் அவரும் ஒருமுனையில் நின்று கழகத்தின் சிப்பாய்களாக அண்ணாவின் காலடியில் வெற்றிக் காணிக்கைகளைக் குவித்தோம்! இருவர் மட்டுமல்ல, இயக்கத்தின் முன்னணித் தளபதிகள் - செயல்திறன் கொண்ட ஜீவநாடிகளான அன்பு உடன்பிறப்புகள் - அனைவரும் ஓரணியில் இருந்துதான்!

1972க்குப் பிறகு - இருவரும் இருமுனைகளில்! சட்டமன்றத்தில் அவருக்கு வெற்றி! நாடாளுமன்றத்தில் நமக்கு வெற்றி! மீண்டும் சட்டமன்றத்தில் அவருக்கு வெற்றி! அண்மையில் நடந்த இடைத்தேர்தலில் நமக்கு வெற்றி!

இப்படி வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்தபோதும் - இருவரும் இரு முனைகளில் நின்று, புராண பாஷையில் கூற வேண்டுமானால் அர்ச்சுனனும் கர்ணனும் போல மோதிக் கொண்டோம்! மோதிக்கொள்ள நேரிட்டது! ஆம்! அது தவிர்க்க முடியாததாகி விட்டது!

ஆனால் இப்போது தேர்தல் வந்தால் - நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமென்றால் அது நடந்தே தீர வேண்டும்! தேதியைத் தள்ளி வைக்க முடியாது! முடியுமென்று சொன்னாலும் அது ஜனநாயகமாகாது! அதனால் அந்தத் தேர்தலை சந்தித்தே ஆக வேண்டும் - சகல வலுவுடனும் களத்திற்கு வரப்போகிற இந்திரா காங்கிரசை எதிர்க்கப் போகிறோம்! நாம் எதிர்க்கப் போகிற அணிக்கு ஒரு தலைமை இருக்கிறது! அது திடகாத்திரமாக இருக்கிறது! அந்தத் தலைமையில்தான் தேர்தல் களத்தில் நமக்கு எதிரான அணி நிற்கப் போகிறது! அதாவது நாடாளுமன்றத்திற்கான தேர்தலில் நாம் எதிர்க்கப் போகும் அணிக்குத் தலைமை எது என்பதும் - அது தனக்குரிய வலிமையுடன் களம்புகப் போகிறது என்பதும் தெளிவான விஷயமாகும்!

ஆனால் தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலும் இணைத்து வைக்கப்படுமானால் - அப்போது நமது அணியுடன் மோதப் போகிற எதிர்அணியின் தலைவர் களத்தில் இருக்கமாட்டார் என எண்ணுகிறபோதும் - அவர் நோயுற்ற நிலையில் இருப்பார் என நினைக்கிற போதும் -

மோதிக்கொள்வதிலே கூட ஒரு சுவையுண்டல்லவா நம் இருவருக்கும்! அதற்காகவும் நீங்கள் நலமுடன் திகழ

வேண்டுமென்று தானே இந்த நண்பனின் இதயம் ஏங்கிக் கொண்டிருக்கும்!

என்று நான் கடிதத்தில் குறிப்பிட்ட அந்தக் கருத்து எத்துணை உணர்வுபூர்வமானது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

தேர்தலுக்குள் அவர் உடல்நலம் பெற்று களம் புகுந்து பணிகளையாற்றுவார் என்று நிச்சயிக்க முடியாத நிலையில் - டாக்டர்களும் அத்தகைய உத்திரவாதம் எதுவும் வழங்காத நிலையில் - சட்டமன்றத் தேர்தல் களத்தை இப்போது நினைத்துப் பார்க்கும் போதே ஏதோ ஒரு இனந்தெரியாத வேதனையால் இதயம் கனத்துப் போகிறது.

ஆனால் நாவலரும், அவரைச் சார்ந்தோரும் இப்போதே அந்தத் தேர்தலும் நடைபெற வேண்டும் - அவர் உடல்நலம் பெற்று வந்த பிறகு முறைப்படி ஜூன் மாதத்தில் சட்டமன்றத் தேர்தலை நடத்தக் காத்திருக்கத் தேவையில்லை என்ற முடிவில் அழுத்தமாக இருக்கிறார்கள் என்றே தெரிகிறது!

என்னைப் பொறுத்த வரையில் - சட்டமன்றத் தேர்தலுக்கு எனது இனிய நண்பர் எம்.ஜி.ஆர். உடல்நலம் பெற்று வந்து அவரைத் தேர்தல் களத்தில் சந்திப்பதையே பெருமையாகக் கருதுகிறேன்!

அதற்காக ஜூன் மாதம் வரையில் நாங்கள் பொறுத்திருக்க வேண்டுமா? எங்கள் நிலைமை என்ன ஆவது? அவரது உடல்நலிவை பயன்படுத்தியே நாங்கள் லாபம் பெற எண்ணுகிறோம்!

என்று ஆளுங்கட்சி வட்டாரத்திலே உள்ள முக்கிய பிரமுகர்கள் பிடிவாதமாக இருப்பார்களேயானால் - இப்போதே தேர்தல் இணைந்துதான் வரும்!

நெஞ்சில் இருந்ததைக் கொட்டிவிட்டேன்!

பின்னர் உருவாகும் நிலைமைகளுக்கேற்ப - நமது வியூகங்களையும் வகுக்க வேண்டியதுதானே!

அன்புள்ள,

மு. க.

11-11-1984

1284. "கலகமூட்டிகள்" - எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

கருணாநிதிக்கு, கல்யாணசுந்தரம் கண்டனம் என்று பெருந்தலைப்பிட்டு ஒரு செய்தியை ஆளும் கட்சியை வரிந்து கட்டிக்கொண்டு ஆதரித்து வரும் மாலை ஏடு ஒன்று வெளியிட்டு அதன் மூலமாகக் கூட்டணிக் கட்சிகளின் முகாமில் குடுமிபிடிச் சண்டையை ஏற்படுத்தலாமா என்ற ஆவலுடன் வஞ்சகச் சதிவலையை வழக்கம்போல் விரித்திருக்கிறது.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் காலை 11 மணி அளவில் மரணமடைந்த நிலையில், மாலை 6 மணி வரையில் ஏறத்தாழ ஏழு மணி நேரம் மத்திய ஆட்சி அதிகாரபீடத்தில் ஒரு சூனிய நிலைமை இருந்ததையும், அந்தச் சூனியத்தை நிறைவுசெய்ய உடனடியாக ஒரு இடைக்கால ஏற்பாடு முன்பெல்லாம் செய்யப்பட்டது போல செய்திட யாரும் முன் வராததையும் - ஏழு மணி நேரம் காத்திருந்து அதன் பிறகு கூட இடைக்கால ஏற்பாடு எதுவுமின்றி காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் இரண்டே இரண்டு பேரின் கருத்துக்கு ஏற்ப திரு. ராஜீவ் அவர்களை, குடியரசுத் தலைவர் எதிர்காலப் பிரதமராகவே அறிவித்து விட்டது ஏற்கக்கூடிய முன்மாதிரியாக இல்லையென்றும் இந்திய அரங்கில் ஒரு எண்ண ஓட்டம் நிலவுகிறது. ஆட்சிமன்றக் குழுவைக் கூட்டக்கூடிய அதிகாரம் பெற்ற தலைவரான இந்திரா காந்தி அம்மையாரே இல்லாதபோது ஆட்சிமன்றக் குழு எப்படிக் கூட முடியும்? அதுவும் இரண்டே இரண்டு குழு உறுப்பினர்களின் கருத்துக்கு, ஜனாதிபதி ஜெயில்சிங் அவர்கள் எப்படி செவி சாய்க்க முடியும்? ஆட்சிமன்றக் குழுவுக்கு ஜனாதிபதி கட்டுப்படத் தேவையா?

இவ்வாறு அவசரமாகவும் - அலங்கோலமாகவும் மேற்கொள்ளப்பட்ட மரபு மீறிய முறைகளைத்தான் தி.மு.கழகம்

ஏற்றுக் கொள்ளவில்லையே தவிர ராஜீவ் அவர்கள் பிரதமர் ஆனதற்காகக் கண்டனம் எதுவும் தெரிவிக்கவில்லை!

1980-ஆம் ஆண்டு தேர்தலில் இந்தியநாட்டு வாக்காளப் பெருமக்கள் பெரும்பான்மையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். எனவே ஜனநாயக ரீதியில் பெரும்பான்மை பெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சி, தனது கட்சித் தலைவராக - அதாவது பிரதமராக திருமதி இந்திரா காந்தியை ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுத்தது. அந்தத் தேர்தல் நடைபெற்ற நிகழ்ச்சிக்குக்கூட டெல்லி பாராளுமன்ற மைய மண்டபத்திற்கு நான் அழைக்கப்பட்டு மேடையில் முன்வரிசையில் அமர்ந்திருந்தேன். அந்த நிகழ்ச்சியில் பிரதமர் பதவிக்கென இந்திரா அம்மையார் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர்கள் நன்றி கூறிப் பேசும்பொழுது குறிப்பாக எனக்கும், நமது கழகத்திற்கும், திரு. சென்னா ரெட்டி அவர்களுக்கும் நன்றி கூறினார்கள் என்ற செய்தி அப்போது ஏடுகளில் வெளிவந்துள்ளது.

அம்மையாரைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்த இந்திரா காங்கிரஸ் கட்சியின் அதே நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் இப்போதும் ராஜீவ் காந்தியைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். கருத்து மாறுபாடு இல்லை. அவர்களுக்குள் யாரைப் பிரதமராக்குவது என்பது அவர்கள் கட்சி விவகாரம்! எனவே நமது கழகம் அந்தப் பிரச்சினையில் எந்தக் கருத்தும் கூற விரும்பவில்லை! கூறவும் இல்லை!

இதைத்தான் இரண்டு நாட்களுக்கு முன்பு என்னைச் சந்தித்த நிருபர்களிடம் நான் விளக்கிக் கூறினேன்.

காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி ராஜீவ் காந்தியைப் பிரதமர் என்று அறிவிப்பதற்கு முன்பு குடியரசுத் தலைவர் அக்டோபர் 31 அன்று மாலை, காங்கிரஸ் கட்சியின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள் இரண்டு பேருடைய கருத்தை அடிப்படையாக வைத்து, ராஜீவ் காந்தியைப் பிரதமராக அறிவித்தது ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ள மரபுகளுக்குப் புறம்பானது என்பதுதான் தி.மு.கழகத்தின் கருத்து. பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜீவ் காந்தியைப் பிரதமராகத் தேர்ந்தெடுப்பது அவர்களுடைய கட்சி

விவகாரம். ஆனால் இடைக்கால ஏற்பாட்டுக்காகக் குடியரசுத் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட முறை ஏற்கத்தக்கதல்ல!

இப்படித்தான் நான் விளக்கமளித்தேன். ஆனால் அந்தக் கலகமூட்டும் மாலை ஏட்டில் எனது பேட்டி எப்படி வெளியிடப்பட்டு - அதைத் தொடர்ந்து திரு. கல்யாணசுந்தரம் அவர்களின் கருத்தும் வெளியிடப்பட்டிருக்கிறது தெரியுமா? அது, இதோ:-

அக்டோபர் 31-ஆம் தேதி இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டதும் ராஜீவ் காந்திக்குப் பிரதமராக, ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து வைத்ததை தி.மு.க. தலைவர் கருணாநிதி எதிர்த்து இருந்தார். அவர் காங்கிரஸ் கட்சியின் பிரதமராக இருக்க முடியுமே தவிர, நாட்டின் பிரதமராக இருக்க முடியாது என்று கருணாநிதி கூறியிருந்தார். கூட்டணிக் கட்சியில் உள்ள முதுபெரும் தலைவர் கல்யாணசுந்தரம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அந்த மாலை ஏடு, செய்தி வெளியிட்டுள்ளது!

உடன்பிறப்பே, நிருபர்களுக்கு நான் அளித்த பேட்டியில் உள்ள விளக்கத்தையும் - அந்த மாலை ஏடு செய்துள்ள விஷமத்தையும் எவருமே எளிதில் புரிந்துகொள்ள இயலும்!

அதைப்போலவே திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் - என்ன சொன்னாரோ, யாருக்குச் சொன்னாரோ - அதையும் அந்த ஏட்டில் வெளியிடப்பட்டுள்ளதை நம்பி நான் அதற்கு எந்த பதிலும் கூற விரும்பவில்லை!

ஏனெனில் அந்த மாலை ஏட்டின் நோக்கம்தான் எனக்குப் புரிகிறதே!

கூட்டணிக்குள் குத்துவெட்டு வராதா என எதிர்நோக்கும் குள்ளநரிகளுக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் செயல்படுவதற்கு நான் ஒன்றும் அரசியல் அனுபவ மற்றவனல்லவே!

ராஜீவ் காந்தி, காங்கிரஸ் கட்சிக்குத்தான் பிரதமர் - இந்தியாவுக்கு அல்ல என்று ஜனநாயக இலக்கணமுணர்ந்த என்னைப் போன்றவர்கள் - அதிலும் ஜனநாயகத்தைக் காப்பதற்காக எமர்ஜன்சியை எதிர்த்து நின்ற என்னைப் போன்றவர்கள் எப்படிக் கூறியிருக்க முடியும்?

இந்திய நாட்டு வாக்காளர்கள், தங்களுக்கு ஒரு ஆளுங்கட்சியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தியாவின் பிரதமரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஐந்து ஆண்டு காலத்துக்கு அவர்தான் இந்தியாவின் பிரதமர்! இந்திரா காந்தி அப்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கொல்லப்பட்டு விட்டதால் மிச்சமிருக்கும் ஆட்சிக் காலத்திற்கு - அதாவது தேர்தல் வரையில் அடுத்த பிரதமராக ராஜீவ் காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இ.காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சி, ராஜீவ் காந்தியை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது! அதாவது இந்தியாவுக்கு பிரதமராக!

வர இருக்கிற தேர்தலில் வாக்காளர்கள் அளிக்கும் தீர்ப்பைப் பொறுத்து இந்தியாவின் அடுத்த பிரதமர் யார் என்பது முடிவாகும்!

அதுவரையில் இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்திதான்!

இப்படி ஆளுங் காங்கிரஸ் கட்சியின் ஒருமித்த பெரும்பான்மை ராஜீவ் காந்திக்கு இருந்து, அவர்தான் அடுத்த பிரதமர் என்ற நிலை உருவாகியிருக்கும்போது - இந்திரா காந்தி அம்மையார் மறைந்தவுடன் ஓரிரு நாட்கள் இடைக்கால ஏற்பாடாக நரசிம்மராவையோ - பிரணாப் முகர்ஜியையோ தற்காலிகப் பிரதமராக ஜனாதிபதி நியமித்திருக்கலாம் அல்லவா?

முன்பு நேரு அவர்களும், லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் மறைந்த சமயத்தில் குல்சாரிலால் நந்தா அவர்கள் இடைக்காலப் பிரதமராக நியமிக்கப்பட்ட போது - பிறகு அவரே பிரதமராக நீடிக்க வேண்டுமென்று தகராறு செய்தாரா? இல்லையே!

அதைப்போல இப்போது பிரணாப் முகர்ஜியையோ - நரசிம்மராவையோ இரண்டு மூன்று நாட்களுக்குத் தற்காலிகப் பிரதமராக்கிவிட்டு - இந்திரா அம்மையாரின் உடல் எரியூட்டப்பட்ட பிறகு இ.காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் ராஜீவ் காந்தி முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம் அல்லவா?

அப்படிச் செய்திருந்தால் நாடாளுமன்ற ஆளுங்கட்சியின் முடிவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார் என்ற ஜனநாயக நெறி மேலும் ஒளிபெற்றிருக்கும்!

இப்போது நடந்தது என்ன? ஜனாதிபதி செய்த நியமனத்தை நாடாளுமன்ற ஆளுங்கட்சி ஏற்றுக் கொண்டது என்பது போலத்தான் ஆகியிருக்கிறது!

எனவே, கடைப்பிடிக்கப்பட்ட முறையில் காணப்படும் குறையைத்தான் கழகம் சுட்டிக்காட்டுகிறது!

இதை வைத்துக்கொண்டு - நான் சொன்னதைத் திரித்தும், சொல்லாததைக் கற்பித்தும் - கலகமூட்டிகள் குதர்க்கம் செய்து - கழகத்திற்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்குமிடையே பிளவு ஏற்படுத்த முனைவார்களேயானால் அவர்கள் ஆப்பசைத்த குரங்கின் முடிவையே அடைவர் என்பது மட்டும் நிச்சயம்!

அன்புள்ள,

மு. க.

12-11-1984

1285. உள்ளத்தில் உள்ளதை ஒளிக்காமல்...!

என் இனிய நண்பரே,

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அமெரிக்காவில் புருக்லின் மருத்துவமனையில் இருக்கும் உங்களுக்கு இந்தக் கடிதம் கிடைப்பதற்கு வழியில்லை என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் உங்களைத் தங்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டு எந்தவொரு பதவியோ, லாபமோ பெறாமல் - பெறுவதற்கும் விரும்பாமல் - லாரிகளில் ஏறி வந்து உங்களை வாழ்த்தியும் - வாழ்த்தி விட்டுத் திரும்பச் செல்லும்போது அந்த லாரிகள் சில விபத்துக்குள்ளான காரணத்தால் அடிபட்டு கால் கை ஒடிந்த போதும்கூட அதைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களைக் கண்ட மகிழ்ச்சியில் வலியையே மறந்தும் உங்கள்பால் பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் அ.தி.மு.க. உடன்பிறப்புகள் இந்தக் கடிதத்தைப் படிக்கும் போது, நீங்களே படித்ததாக நான் எண்ணிக் கொள்வேன்.

நான் இப்போது சொல்வதும் எழுதுவதும் அ.தி.மு.க. உடன்பிறப்புகள் பல பேருக்கு நம்ப முடியாததாக இருக்கலாம்.

காரணம், தலைவனுக்கு இப்படியொரு துன்பமா என எண்ணிப் பார்க்கக்கூட அவர்கள் இதயம் இடந்தராது என்பதால் நான் சொல்வதை அவர்களால் நம்ப முடியாது!

ஆனால் உங்கள் நிலை எனக்கு நன்றாகத் தெரியும்போது - அந்த உண்மையை மறைத்துவிட்டு - உங்களை வைத்து அரசியல் விளையாட்டு நடத்துவதற்காக - உங்களைச் சித்ரவதை செய்து கொண்டிருக்கிறார்களே! உங்களைச் சுற்றியிருந்து உல்லாசம் அனுபவித்த சில நண்பர்கள் - அவர்கள் உங்களை படுத்தும்பாட்டை என்னால் சகித்துக்கொள்ள முடியாத நிலையில்தான் இதனை எழுதுகிறேன்.

இன்றைக்கு நான் சொல்வது கேட்டு திகைத்திடும் உங்களது ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகள், எதிர்காலத்தில் நிச்சயமாக இந்தக் கருணாநிதி சொன்னது உண்மைதான் என்பதை உணர்ந்து கொள்ளத்தான் போகிறார்கள். தங்களை உண்மையிலேயே ஏமாற்றிப் பொய்கூறி, புனைந்துரைத்து, போலி நாடகமாடியவர்கள் யார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளும்போது அவர்களது ஆத்திர எரிமலைக்கு முன்னால் அந்த சுயநலப் பதர்கள் பொசுங்கித்தான் போவார்கள்!

ஒரு லட்ச ரூபாய் பெரியார் மாவட்டத்தில் அக்டோபர் 15-ஆம் தேதி நிகழ்ச்சிகளில் தேர்தல் நிதி தருவதாக இருந்ததை ரத்து செய்து விட்டு இரவெல்லாம் விழித்திருந்து தங்களைக் காண்பதற்காக சென்னை அப்போலா மருத்துவமனை நோக்கி ஓடோடி வந்தேன்.

ஆனால்... ஆனால்... உங்களைக் காண எனக்கு அனுமதி மறுத்துவிட்டார்கள். அப்படியொரு போலீஸ் ராஜ்யம்! நாற்பதாண்டு காலம் பழகிய நண்பனாகிய எனக்கு ஏற்பட்ட கதி அது! தொலைவில் நின்றாவது கதவு ஓரத்தில் எட்டிப் பார்த்தாவது பார்த்துவிட்டுப் போகிறேன் என்றேன்! அனுமதி கிடைக்கவில்லை.

நண்பரே!

கழகக் கட்டுப்பாட்டை மீறி என்னதான் பேசியிருந்தாலும் - அவருடன் தனியாகப் பேசி அதன் பிறகு முடிவெடுக்கலாம் என்று செயற்குழு உறுப்பினர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே - அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார் என்று எனக்கும் தெரியாமல் பத்திரிகைகளுக்குக் கையெழுத்திட்டுச் செய்தி அனுப்பிய நாவலர் உங்களைப் பார்க்கவும் முடிந்தது! உங்கள் உடல் நலிவையே தனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகக் கருதிப் பயனடையவும் முடிகிறது! இடைக் காலத்தில் அடைகிற பயன் போதாதென்று தொடர்ந்து பயனடைய உங்கள் வாடியிருக்கும் உடலை வாணிபப் பொருளாக மாற்றிக் கொள்ளவும் முடிகிறது!

ஆனால் - எனக்கு? ஆம் - ஒருவரிடம் ஒருவர் எந்தப் பிரதிபலனும் எதிர்பாராமல் நாற்பதாண்டு காலம் பழகினோமே! அந்த நண்பனுக்கு நீங்கள் உடல் நலிவுற்றுள்ள நிலையில் உங்களைக் காணும் வாய்ப்பு கூட மறுக்கப்பட்டு விட்டது!

1969-இல் நான் முதலமைச்சர் பொறுப்பேற்று - சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் அளித்து முடித்து விட்டு வெளியே புறப்படும் போது என்னை அப்படியே கட்டித் தழுவி என் நெற்றியில் முத்தமிட்டீர்கள்!

இடையில் கழகம் பிளக்கப்பட சில துரோகிகளின் முயற்சி வெற்றி பெற்று - அப்போதும் திராவிடர் இயக்கம் முற்றிலும் அழிந்து விடாமல் - நீங்கள் ஆளுங்கட்சித் தலைவராகவும், நான் எதிர்க்கட்சித் தலைவராகவும் எதிர் எதிரே அமர்ந்திருந்தபோதும் - நாம் கடுமையாக மோதிக் கொண்ட போதும் - நம்முடைய தனிப்பட்ட கனிவான நட்பு, கடுகளவும் குறையாமலேதான் இருந்தது! இன்றும் இருந்து வருகிறது!

ஆனாலும் எனக்குத் தங்களை மருத்துவமனையில் தொலைவில் இருந்து கூடப் பார்க்க அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

பார்த்தால் இன்பெக்ஷன் வந்துவிடும் என்று ஒரு சாக்குச் சொல்லி விட்டார்கள்! இன்பெக்ஷன் எதுவும் வராமல், உற்ற நண்பர்கள் பார்ப்பதற்கு எத்தனையோ தடுப்பு ஏற்பாடுகள் மருத்துவத்துறையில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். மருத்துவமனையில் தங்கள் அறையிலேயே பணியாற்றிய சிப்பந்திகளும் மனிதர்கள்தானே! அவர்களுக்குக் கிடைத்த வாய்ப்புக்கூட எனக்குக் கிட்டவில்லை!

சீட்டு வாங்க மூப்பனார் என் வீட்டு வாசலில் காத்திருந்தார் என்று ஒரு முறை கூட்டத்தில் பேசினீர்கள். அது பத்திரிகைகளில் கூட வந்திருந்தது. ஆனால் அந்த மூப்பனார் அவர்கள் கூட உங்களை வந்து மருத்துவமனையில் நரசிம்மராவுடன் பார்க்க முடிந்தது.

ஆனால் வீட்டுக்கு வரும்போதெல்லாம் எதிர்கொண்டு அழைத்து - விடை பெற்றுக் கொண்டு புறப்படும்போது பின்னாலேயே வந்து வழியனுப்பி வைப்பீர்களே! அந்த நண்பனாகிய எனக்கு உங்களைச் சுற்றியிருந்தோர் உங்களைக் காண அனுமதி மறுத்து விட்டனர்!

உங்களை அமெரிக்கா கொண்டு செல்லும் போது அங்கே எடுக்கப்பட்ட படங்களை இந்து ஏட்டில் கண்டபோது என் கண்கள்

நீர்வீழ்ச்சிகளானதை என் அருகிலிருந்த நண்பர்கள் மட்டுமே அறிவார்கள்!

உங்களை அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றிருப்பதே - உங்கள் உயிரோடு விளையாடுகிற உன்மத்தர்கள் சிலரின் செயல்தான் என்பதை என்னால் உங்கள் கட்சியின் உடன்பிறப்புகளுக்குச் சொல்லாமல் இருக்க முடியவில்லை!

நான் இப்போது சொல்வது உண்மைதான் என்பதை - எதிர்காலத்தில் அந்த உடன்பிறப்புகள் தெரிந்து கொள்ளத்தான் போகிறார்கள். இதைத் திரும்பத் திரும்பச் சொல்வதற்கு காரணம், உங்கள் உடல் இருக்கும் நிலையில் உங்களைச் சித்ரவதை செய்யும் கொடுமை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

உங்கள் மூளையில் ரத்தக்கட்டு ஏற்பட்டதன் விளைவாக நீங்கள் சிந்திக்கும் சக்தியையே இழந்திருக்கிறீர்கள்! அய்யோ! இதனைச் சொல்லவே - நினைக்கவே வேதனையாக இருக்கிறது!

உங்கள் வலது கையும், வலது காலும் அசைவற்று இருக்கின்றன!

சிறுநீரகம் பழுதுபட்டதால் அடிக்கடி ரத்தத்தில் உப்பு அதிகரிக்கிற பேரபாயம் ஏற்படுகிறது. அதனை உடனுக்குடன் டயாலிசிஸ் செய்துதான் சுத்திகரிக்க வேண்டியிருக்கிறது!

ஆபரேஷன் செய்து சிறுநீரகத்தை மாற்றி வைக்கிற முயற்சியினால் உயிருக்கு உடனடி ஆபத்து விளைந்தாலும் விளையுமென்று பிரபல டாக்டர்கள் கருதுகிறார்கள்.

சிந்திக்கும் சக்தியில்லை! பேசும் சக்தியில்லை! வலது கையை அசைக்கும் சக்தியில்லை! பிளட் யூரியா எனும் பேராபத்து தொடர்கிறது!

இந்த நிலையில் நீங்கள் உடல் நலம் பெற்று வரும் வரையில் காத்திருந்து, உரிய காலமான ஜூன் மாதத்தில் சட்டமன்றத் தேர்தலை நடத்தலாம் என்று நான் கருத்து தெரிவித்தேன்.

ஆனால், ஆதாயம் தேடிகளுக்கு என்ன அவசரம் பாருங்கள்!

அரசியல் சட்டத்தையே வளைத்தும், நெளித்தும் உங்களுக்குள்ள உரிமையை மறுத்து விட்டு அவர்களாகவே கூடி

அசெம்பிளியையே கலைத்துவிட்டு அவர்கள் அமைச்சர்களாகத் தொடருகிறார்கள்!

ஆக்டிங் சீப்மினிஸ்டர் என்று அரசியல் சட்டத்திலேயே இல்லை!

அப்படியும் தங்களை அழைக்கச் செய்து ஆசையைத் தீர்த்துக் கொள்கிறார்கள்!

இதோடு உங்களைப் பயன்படுத்தி அதோடு விட்டாலும் பரவாயில்லை! உங்களை ஆண்டிப்பட்டி தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப் போகிறார்களாம்!

அப்படி நீங்கள் ஆண்டிப்பட்டி தொகுதியில் இந்த உடல் நிலையோடு நிற்பதற்கு நீங்களே உண்மையில் விரும்பினால் - அந்தத் தொகுதியில் கழகம் தங்களுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தக் கூடத் தயாராக இல்லை! உங்களுக்கு அந்தத் தொகுதியைக் கழகம் விட்டுக் கொடுப்பதாக நான் பெருமை பேசவில்லை! எதிர்ப்பு என்கிற அந்தத் தொல்லையைக் கூடத் தங்களுக்கு இந்த நிலையில் நான் தருவதற்கு விரும்பமாட்டேன்!

ஆனால் என்னென்ன செய்திகள் வருகின்றன!

வேட்பு மனு தாக்கல் செய்ய உங்களால் கையெழுத்துப் போட முடியாதாம்! அதனால் இடது கை விரலை எழுதுவதற்குப் பயிற்சி தருகிறார்களாம்! உங்களின் கை ரேகை வாங்கப் போகிறார்களாம்!

இந்த ஏழாண்டு கால ஆட்சியில் எத்தனை ஆயிரம் கோப்புகளில் உங்கள் கையெழுத்தை இட்டிருக்கிறீர்கள் - அப்படிப்பட்ட உங்களிடம் கைரேகை பதிய வைக்கிற காரியத்தை நடத்தப் போகிறார்கள் என்றால் இவர்களுக்கு இதயமென ஒன்று இருக்கிறதா?

வேட்பு மனு தாக்கல் செய்யும்போது உறுதிமொழியை அதிகாரி முன்னிலையில் படிக்க வேண்டுமே!

அதற்காக இப்போதே பொய் சொல்லத் தொடங்கிவிட்டார்கள்; நீங்கள் பேச முயற்சிப்பதாக!

நீங்கள் எழுந்து நடமாடினால் - பேசினால், சிந்திக்கும் சக்தி பெற்று செயலாற்றினால் நம் இருவரது தாய்களின் மீதும் - நமது

அண்ணாவின் மீதும் ஆணையாகச் சொல்கிறேன்! அது கேட்டு என்னைப் போல் மகிழ்ச்சி அடைபவர் யாரும் இருக்க முடியாது!

இல்லையா நண்பரே! இதனை நல்லவர்கள் - நம்மை உணர்ந்தவர்கள் - யாராவது மறுக்க முடியுமா?

பன்னிரண்டு ஆண்டுகால பகைமூட்டத்திற்கு இடையிலேதான் இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற திருமண விழா ஒன்றில் நாம் இருவரும் சந்தித்தபோது கட்டித் தழுவிக் கொண்டோம்! அந்த அன்பையும், பாசத்தையும் அணை போட்டுத் தடுக்க அரசியல் காழ்ப்புணர்ச்சிகளால் முடியுமா? முடியவே முடியாது!

எனவே எனக்கிருக்கிற ஆதங்கமெல்லாம் - உடல் நலிந்தும், மெலிந்தும், வதங்கி வாடியிருக்கிற உங்களை உயிர் பிழைத்து வரச் செய்கிற முயற்சிகளில் காட்டுகிற அக்கறையை விட - அவசர அவசரமாக தேர்தலை நடத்தி ஆதாயம் பெறுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்களே - என்பதுதான்!

இன்று மறைக்கப்படுகிற உண்மைகள், நாளைக்கு விசுவரூபம் எடுத்து வெளிப்படும்போது அதன் விளைவுகளை தாங்கிக் கொள்ள யார் பொறுப்பேற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பதுதான் நான் தொடர்ந்து எழுப்பி வருகிற கேள்வி!

உங்கள் மீது உயிரையே வைத்திருக்கும் உங்கள் அன்புத் தொண்டர்களை, இங்குள்ள உங்கள் கட்சியின் மேலிடத்தினர் எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை அம்பலப்படுத்த வேண்டிய அவசியத்திற்கு நான் ஆளாகியிருப்பது எனது கடமை!

இந்தக் கடமை உணர்வை இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒருநாள் அனைவரும் புரிந்து கொள்ளத்தான் போகிறார்கள்.

இந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைக்காது!

கிடைத்தாலும் உங்களால் படிக்க இப்போது இயலாது!

எனினும் என் உள்ளத்தில் உள்ளதை ஒளிக்காமல் உரைத்து விட்டேன்!

என்றும் உங்களது நண்பன்,

மு. க.

18-11-1984

1286. நேரில் கண்டிட... நிலைமையை விளக்கிட...!

உடன்பிறப்பே,

இரண்டொரு நாட்களுக்கு முன்பு என் இனிய நண்பரே! என எம்.ஜி.ஆர். அவர்களை விளித்து நான் எழுதிய கண்ணீர்க் கடிதத்தில்,

அப்படி நீங்கள் ஆண்டிப்பட்டித் தொகுதியில் இந்த உடல்நிலையோடு நிற்பதற்கு நீங்களே உண்மையில் விரும்பினால் - அந்தத் தொகுதியில் கழகம் தங்களுக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தக் கூடத் தயாராக இல்லை! உங்களுக்கு அந்தத் தொகுதியை கழகம் விட்டுக் கொடுப்பதாக நான் பெருமை பேசவில்லை - எதிர்ப்பு என்கிற அந்தத் தொல்லையைக் கூடத் தங்களுக்கு இந்த நிலையில் தருவதற்கு நான் விரும்பமாட்டேன்.

எனக் குறிப்பிட்டிருந்தேன்! இந்தக் கடிதம் கண்டவுடனே அ.தி.மு.க. மேலிடத்து நண்பர்கள் ஒரு சிலர் என் மீது மூர்க்கத்தனமாகப் பாய்ச்சல் நடத்தி அறிக்கைகள் விடுத்துள்ளனர். என் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படக்கூடிய அளவுக்கு அவர்கள் எழுத்தில் எச்சரிக்கைகளும், தூண்டுதல்களும் காணப்படுகின்றன! பரவாயில்லை - எனது பழைய நண்பர்கள்தானே! அவர்களுக்குப் பரவசம் தரக்கூடிய அந்தக் காரியம் நடந்தால் என் இறுதிமூச்சுக்கூட அவர்களை வாழ்த்திக்கொண்டேதான் அடங்கும்!

அந்தக் கடிதத்தில் நான் என்ன எழுதியிருக்கிறேன்!

ஆண்டிப்பட்டி தொகுதியில் இந்த உடல்நிலையோடு நிற்பதற்கு நீங்களே உண்மையில் விரும்பினால்

என்றுதானே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்!

அதற்குப் பொருள் என்ன?

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தலில் நிற்க உண்மையில் விரும்பவில்லை!

அப்படி விரும்பாததற்குக் காரணம், அவருக்குத் தேர்தல் நடப்பதே தெரியாது!

தேர்தல் நடக்கிறது என்று சொன்னாலும் அதைப் புரிந்து கொள்கிற ஆற்றல் அவருக்கு இப்போது இல்லை!

காரணம், அந்த ஆற்றலை அளிக்கக் கூடிய நுண்ணிய திசுக்கள் செல்ஸ் அவரது மூளையின் ஒரு பகுதியில் ஏற்பட்ட ரத்தக்கட்டினால் அழிந்து விட்டன!

ரத்தக்கட்டு ஓரளவு குறைந்தாலும் கூட, முதலில் சேதமாகி விட்ட அந்த திசுக்கள் செல்ஸ் மீண்டும் உயிர்ப்புச் சக்தியைப் பெற இயலாது! இது வரையில் நிலைமை அப்படித்தான்!

அதனால்தான் தேர்தல் நடக்கிறது எனக் கூறக் கூடிய செய்தியை புரிந்து கொள்ளவோ - அதுபற்றி சிந்திக்கவோ - இயலாத சூழ்நிலையில் அவரது பெயரைப் பயன்படுத்திக் கொண்டு இங்குள்ள சில ஆதாயம் தேடிகள், அவர் தேர்தலில் நிற்பதாகக் கூறி - மத்திய அரசின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொய்ச் செய்தியைப் பரப்பி, தமிழ் நாட்டு மக்களை ஏமாற்றுகின்றனர்!

இந்த மோசடிக்கு அமெரிக்காவில் உள்ள இந்திய நாட்டுத் தூதுவரகமும் உறுதுணையாகப் பயன்படுத்தப்படுகிறது!

இப்படியொரு மோசடியினால் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் இந்தியாவின் கீர்த்திக்கு மாபெரும் களங்கம் ஏற்படப் போகிறது என்பதைச் சுட்டிக் காட்டி, எம்.ஜி.ஆர். அவர்களின் உண்மையான உடல்நிலை விபரத்தை மறைக்காமல் அறிவிக்க ஆவன செய்ய வேண்டுமென்றும், இங்குள்ள கவர்னர் குரானா அவர்களும் அரசியல் சட்ட விதிகளின்படி செயல்பட முடியாமல் மத்திய அரசின் ஆணைப்படி காரியமாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதற்கு ஆதாரங்களைத் தந்து அந்த நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்றும், சிந்திக்கவோ, பேசவோ சக்தியற்றுள்ள ஒருவரைத் தங்கள் லாபத்திற்காகப் பயன்படுத்தித்

தேர்தலில் நிற்கிறார் என விளம்பரப்படுத்தும் செயலில் உள்ள எதிர்கால விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டுமென்றும் குடியரசுத் தலைவரிடம் கழக எம்.பி.க்களும், வேறு கட்சி எம்.பி.க்களும் மனு ஒன்றை கொடுத்திருக்கின்றனர். தேர்தல் அதிகாரியிடமும் மனு ஒன்று தரப்பட்டுள்ளது.

என் கடிதத்தையும் - இவ்வாறு மனு கொடுத்த செய்தியையும் - ஒன்றோடொன்று மோதவிட்டு - ஆகா! என்னே கருணாநிதியின் முரண்பாடு! என்றும் சூழ்ச்சி என்றும், வஞ்சகம் என்றும், துரோகம் என்றும், நரிவேலை என்றும் ஏதேதோ சொல்ல நாக்கூசும் அர்ச்சனைகளில் ஆளுங்கட்சி மேலிடத்து நண்பர்கள் இறங்கியுள்ளனர்.

உடன்பிறப்பே, இதில் என்ன முரண்பாடு இருக்கிறது?

எம்.ஜி.ஆர். அவர்களே, உண்மையில் தேர்தலில் போட்டியிட விரும்பினால்

என்றுதான் எழுதினேன்! இப்போதும் சொல்கிறேன், அவர் சுய சிந்தனையுடன் இருந்து அவரே விரும்பி தேர்தல் விதிப்படி ஒரு தொகுதியில் போட்டியிட முன்வந்தால் கழகம் அவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தாது!

ஆனால் நடப்பது என்ன?

சட்டசபையைக் கலைப்பதற்கு அவரிடம் சம்மதம் பெறவில்லை - ஆனால் இரண்டு நாட்கள் கழித்து அவர் தேர்தலில் நிற்பதற்கு மட்டும் எப்படி சம்மதம் பெறப்பட்டது?

எதையும் புரிந்து கொண்டு சிந்திக்கும் சக்தியும், பேசும் சக்தியும் இல்லாத அளவுக்கு உடல் நலம் கெட்டிருக்கும் ஒருவரை ஏன் இப்படிச் சித்ரவதை செய்கிறீர்கள் எனக் கேட்டால் - எனது பழைய நண்பர்கள், எனது பழைய தம்பிகள் - இப்படி என் மீது ஆங்காரமாகப் பாய்வானேன்?

நாலைந்து மாதங்களுக்கு முன்பு சென்னையிலிருந்து மதுரை செல்லும் போது பாண்டியன் எக்ஸ்பிரஸ் வண்டியில் எனது பெட்டிக்கு வந்து என்னிடம் நீண்ட நேரம் உரையாடி - எப்போது அழைத்தாலும் வந்து விடுகிறேன் என்று கட்சித் தாவலுக்கு முறையீடு செய்து கொண்ட அந்தத் தம்பிக்கு - ஏ, அப்பா! இப்போது எவ்வளவு ஆத்திரம் என் மீது!

அமெரிக்காவில் ஒரு மருத்துவமனையில் முதலமைச்சரைப் படுக்கவைத்துவிட்டு, மத்திய அரசு - மாநில அரசு - இவையிரண்டும் சேர்ந்துகொண்டு அமெரிக்க அரசு உடந்தையோ என்னவோ தெரியாது மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பது எனக்கு ஏற்பட்டுள்ள ஐயப்பாடு!

நான் சொல்வது பொய் என்று மறுப்பவர்களைக் கேட்கிறேன் - அவர்கள் இதற்குப் பதில் கூறட்டும்!

நானே என் செலவில் அமெரிக்காவுக்குச் செல்கிறேன். இந்தியாவில் உள்ள இரண்டு பிரபல பத்திரிகை நிருபர்களும் வரட்டும். அவர்களுக்குரிய செலவை ஏற்கக் கழகம் தயாராக இருக்கிறது. நாங்கள் அமெரிக்க மருத்துவமனையில் எனது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை நேரில் காண்பதற்கு மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்று அனுமதி வழங்கட்டும்! நாங்கள் அவரை நேரில் கண்டு திரும்புகிறோம்! அவர் உடல்நிலை குறித்து இதுவரை சொல்லப்பட்ட செய்திகள் உண்மைகளாக இருக்கும் பட்சத்தில் அவற்றை நானும் ஏற்றுக்கொண்டு உடனடியாக அறிக்கை விடுகிறேன். பொதுமக்களின் குழப்பம் தீர்ந்திட அது நல்ல வழியாக இருக்கும். இந்த எனது கருத்துக்கு இங்குள்ள ஆட்சிக் கட்சியினர் ஒப்புதல் அளிக்கிறார்களா? அல்லது ஓநாய் என்றும், நரி என்றும், வஞ்சகன் என்றும் என்மீது வசை புராணம் பாடிக்கொண்டு இருக்கப்போகிறார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புள்ள,

மு. க.

21-11-1984

1287. ராஜீவைப் பற்றி ஒரு வார்த்தை!

உடன்பிறப்பே,

மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் புதல்வர்கள் இருவரையும் நான் நேரடியாகவே அறிவேன். இன்றைய பிரதமர் ராஜீவிடம் எனக்கு அதிகப் பழக்கமில்லை. ஓரிருமுறை சந்தித்த போது சில நிமிடங்களே அவருடன் உரையாடியிருக்கிறேன்.

விபத்தில் காலமாகிவிட்ட சஞ்சயிடம் அதிக அளவில் எனக்குப் பழக்கம் உண்டு. 1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கழகமும் இந்திரா காங்கிரசும் உடன்பாடு கொண்ட போது, டெல்லியில் மாறன் வீட்டில் ஒருநாள் நான் தங்கியிருந்தேன். என்னைச் சந்திக்க சஞ்சய், தனது நண்பர் குலாம்நபி ஆசாத்துடன் இன்றைய மத்திய அமைச்சர் மாறன் வீட்டுக்கு வந்தார். அவரே ஒரு வேனை ஓட்டிக் கொண்டு வந்தார். சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக என்னிடம் உரையாடிக் கொண்டிருந்தார்.

அவரது பேச்சில் - அவரைப் பெற்றெடுத்த தாயின் துணிவும், பாட்டனார் நேருவின் தன்னம்பிக்கை முனைப்பும் கொடி கட்டிப் பறந்ததை என்னால் உணர முடிந்தது.

சென்னையில் ஒரு விழாவில் அவர் கலந்து கொள்ள வந்திருந்தபோதுகூட நீண்ட நேரம் அளவளாவிக் கொண்டிருந்திருக்கிறேன்.

இப்படிப் பலமுறை சந்திப்புகள் நிகழ்ந்ததுண்டு!

ஒவ்வொருமுறை சந்திப்பின்போதும் அந்த இளைஞரிடம் நல்ல அரசியல் தொலைநோக்கு இருந்ததை நான் அறிந்து மகிழ்ந்தது மட்டுமல்ல! மற்றவர்களிடமும் கூறியிருக்கிறேன்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக எதையும் ஒளித்து - மறைத்து - மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறக்கூடாது

என்பதிலும் - தனது கொள்கை எதுவோ அதனை வெளிப்படையாக மக்கள் மன்றத்தில் கூற வேண்டுமென்பதிலும் சஞ்சய் அழுத்தம் திருத்தமான கருத்து கொண்டிருந்தார்.

இளம் வயதில் சாவு அவரைக் கொத்திக் கொண்டு போய்விட்டது!

அவருக்குப் பிறகு விண்ணில் விமானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த ராஜீவ், இந்திய மண்ணின் அரசியல் அரங்கில் நாலு ஆண்டுகளுக்கு முன்பு நுழைந்தார்.

அவர் அடுத்த பிரதமராகத் தயாரிக்கப்பட்டார் என்பதெல்லாம் நாடறிந்த உண்மை! அந்த விமர்சனம் இப்போது தேவையில்லை! நான் சொல்ல வருவது வேறு விஷயம். அதனால் அந்த விமர்சனம் இப்போது தேவையில்லை என்கிறேன்.

ராஜீவ், தனிப்பட்ட முறையில் அமைதியானவர் - வாய்மை நிறைந்தவர் - என்றெல்லாம் என்னிடம் கூறப்பட்டது உண்டு!

அன்னை இந்திரா மறைந்தவுடன், அவர் அவசர அவசரமாகப் பிரதமர் பதவியேற்றுக் கொள்ளக் கையாளப்பட்ட மரபு மீறிய இடைக்கால ஏற்பாடுகள்தான் இன்னும் என்னால் ஒத்துக்கொள்ள முடியாத ஒன்று எனினும் - பின்னர் அவர், அவரது கட்சி எம்.பி.க்களால் ஏகமனதாகப் பிரதமராக ஆக்கப்பட்டதை, அவர்களது கட்சி விவகாரம் என்ற அளவில்தான் நோக்கினேன்! இன்றும் அதே நிலைதான்!

இந்திராகாந்தி அம்மையாரைப்போல அரசியல் வியூகங்கள் வகுப்பதில் வல்லவரா - அவரது இளவல் சஞ்சயைப் போல தியாகங்களுக்குச் சளைக்காதவரா - என்பதெல்லாம் போகப் போகத்தான் தெரியும்!

ஆனால், ஒரு குறையை மட்டும் இப்போது என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை!

தேர்தல் களத்தில் அவரது கட்சியையும், அவருடன் கூட்டு சேர்ந்துள்ள கட்சிகளையும் கழகம் கொள்கை ரீதியாக எதிர்க்கிறது!

அதேசமயம், ஒருவேளை அவர் வெற்றிபெற்று மீண்டும் தொடர்ந்து பிரதமராக வருவதாக இருந்தால் - இப்போது நான்

அவரிடம் காணும் குறையிருக்கிறதே, அந்தக் குறை இந்த நாட்டின் மொத்த சமுதாய ஒழுக்கத்தையே அழுகல் நாற்றமெடுக்கச் செய்துவிடும்!

அன்னையார் கொல்லப்பட்ட அனுதாபத்தை அடிப்படையாக வைத்து தேர்தல் களத்தில் வாகை சூடிட திட்டங்கள் வகுக்கிறார்! சரி, அந்த அனுதாப உணர்வு அனைவருக்கும் இருக்கிறது! அதற்காக அந்த அனுதாப உணர்வைக் கொண்டே நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்க நினைக்கக்கூடாது!

இதாவது ஒரு படுகொலையின் காரணமாக இயற்கையாக எல்லோரிடமும் எழுகின்ற அனுதாபம்!

ஆனால் தமிழ்நாட்டில் நடப்பது என்ன?

இங்கேயும் கட்சிச் சார்பற்ற முறையில் அனைவரும் கவலைகொள்ளும் ஒரு நிலைமை!

ஆனால் அந்த நிலைமை என்ன என்பதை மக்களுக்குத் தெரிவிக்காமலே - ஒரு தேர்தல் உடன்பாட்டுக்காக - உண்மைகளைத் திரை போட்டு மறைக்க அமெரிக்க அரசுடன் கூடிக்கொண்டு, இந்திய நாட்டின் மத்திய அரசு - தனது அதிகாரத்தையே துஷ்பிரயோகம் செய்கிறது என்பதை நினைக்கும்போது!

அமைதி - வாய்மை - இவைகளின் உறைவிடமாகத் திகழக்கூடியவர் எனக் கருதப்பட்ட ராஜீவ் காந்தியா இப்படி நடந்து கொள்கிறார் என்று வியப்படையாமல் இருக்க முடியவில்லை!

பொற்கோயிலில் ராணுவம் நுழைந்ததால் மனம் புண்பட்டுப் போனதாகச் சொல்லப்படும் ஜனாதிபதி ஜெயில் சிங் அவர்கள் கூட, தமிழகத்தில் மிக உயரமாக எழுப்பப்படும் பொய்க் கோயிலுக்கு பூசாரி வேலை பார்க்க முன் வந்து விட்டார் என்பதை நம்பத்தான் முடியவில்லை!

கண்ணியமிக்க அதிகாரி என மத்திய அரசியல் புகழ் பெற்றவர் இப்போது தமிழகத்தின் கவர்னர்! அவருமா அண்டப்புளுகுகளுக்கு அரணாக நிற்கிறார் என எண்ணுகிற போது - சட்டங்கள் மெல்லச் சாகின்றன! என்றே சொல்லத் தோன்றுகிறது.

பிரதமராக வர வேண்டுமோ இல்லையோ - அதில் எனக்கு மாறுபட்ட கருத்து இருந்தாலும் இந்திய அரசியலில் ஒரு நல்ல இளைஞர், வாய்மையான உள்ளத்துடன் அடியெடுத்து வைத்துள்ளார் என நான் எண்ணி மகிழ்ந்ததற்கு மாறாகக் காரியங்கள் நடைபெறுகின்றன!

ஒரு நீண்ட எதிர் காலப் பயணத்திற்கு முதல் அடி எடுத்து வைக்கும் போதே, ராஜீவைப் போன்ற ஒரு இளைஞர் - மக்களை திசை திருப்பும் அரசியல் மோசடி வித்தைகளில் வித்தகர் எனப் பெயர் வாங்குவது - அவருக்கும் நல்லதல்ல! நாட்டுக்கும் நல்லதல்ல!

அன்புள்ள,

மு. க.

22-11-1984

1288. வீரத்தின் உருவே! விரைந்து பணியாற்று!

உடன்பிறப்பே,

நமது முற்போக்குக் கூட்டணி தேர்தல் களத்தில் பீடுநடை போட்டுப் பெருமித நோக்குடன் செயல்புரியத் தொடங்கிவிட்டது!

தேர்தல் உடன்பாட்டுக்காகக் கட்சிகளின் தலைமை மேற்கொண்ட முடிவை நடைமுறைப்படுத்துவதே அந்தந்தக் கட்சிச் செயல்வீரர்கள், முன்னோடிகளின் பணியாக இருக்க வேண்டும்!

உடன்பாட்டுக் கூட்டணி என்றாலே ஒரு சில தொகுதிகளை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும்.

விட்டுக் கொடுத்து தேர்தல் கூட்டணி அமைத்திடுங்கள்! ஆனால் எங்கள் தொகுதியை மட்டும் இழந்துவிடாதீர்கள்

என்று கூறுவது சரியான வாதமாகாது!

நடைமுறைச் சாத்தியமுமாகாது!

மற்றொரு கட்சிக்கு விட்டுக் கொடுப்பதால் அந்தத் தொகுதியை இழந்துவிட்டோம் என நினைப்பது பெருந்தவறு! விட்டுக் கொடுக்கப்பட்ட தொகுதியில் நிற்கின்ற வேட்பாளரும் நமது வேட்பாளர்தான் என்ற மனப்பான்மை இருந்திட வேண்டும்!

உன் வீட்டிலிருந்து அவல் கொண்டு வா! என் வீட்டிலிருந்து உமி கொண்டு வருகிறேன்! இரண்டையும் கலந்து ஊதி ஊதித் தின்போம்

என்கிற கதையாக எந்தக் கூட்டணியும் அமைக்க முடியாது!

எனவே முற்போக்கு அணி வேட்பாளர்கள் போட்டியிடுகிற தொகுதிகளில் கழகத்தின் உடன்பிறப்புகள் கடுமையாக உழைத்திடல் வேண்டும்.

எந்தக் காலத்திலும் நாம் தொகுதி உடன்பாடுகளில் தோழமைக் கட்சிகளுக்கு எள்முனை அளவு துரோகமும் செய்தது இல்லை! அதேநிலை நீடிக்க இப்போதும் நமது அரசியல் பண்பாட்டினைக் காத்திட வேண்டுகிறேன்.

கட்டுப்பாட்டை மீறிடுவோர் யாராயினும் அவர்கள் மீது கழகம் நடவடிக்கை எடுக்கத் தவறியதில்லை என்பது அண்ணா காலத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் வரலாறு!

கழகச் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் - எவரும் வேண்டியவர், வேண்டாதவர், உற்றார், உறவினர் என்ற அளவுகோல்கள் கொண்டு தேர்ந்தெடுக்கப்படாமல் ஜனநாயக முறைப்படி கழக அமைப்புக்களுக்குத் தலைவணங்கி ஆழமாகச் சிந்தித்து அல்லும்பகலும் விவாதித்து அறிவிக்கப்பட்டவர்கள் தான்!

இந்தத் தேர்வு முறையில் நாங்கள் ஏதேனும் சிறு தவறு செய்திருந்தால் என் நெஞ்சில் வேண்டுமானாலும் குத்துங்கள், கழகத்தின் முதுகில் குத்தாதீர்கள் என்று நான் தேர்தல் சிறப்பு மாநாட்டில் விடுத்த வேண்டுகோளை உன் போன்ற பாசமுள்ள உடன்பிறப்புகள் எத்துணை உருக்கமுடன் இதயத்தில் பதிய வைத்துக்கொண்டு நமது அணியின் வெற்றிக்குப் பாடுபடுவார்கள் என்பதை நான் அறிவேன்!

இதற்கிடையே ஒன்று! அ.தி.மு.க. மேலிடத்தார் ஆலோசனைப்படி நம் மீது நரகல் நடைத் தாக்குதலை அந்தக் கட்சி ஏடுகளும் - எழுத்தாளர்களும் தொடங்கியிருப்பதைக் காண்கிறேன்!

அந்த ஏச்சும் பேச்சும் உனக்கு எரிச்சலை ஏற்படுத்தலாகாது!

உன்னால் தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட என்னை அந்தக் கட்சியிலே சிலர் ஆபாசமாகத் தாக்குகிறார்களே என்பதற்காக - அமெரிக்க மருத்துவமனையில் நோயுற்றிருக்கும் அவர்களின் தலைவராம் எனது இனிய நண்பர் எம்.ஜி.ஆர். குறித்து அதே பாணியில் பேசிட விரும்பாதே! அது அரசியல் பண்பாடுமல்ல! மனிதாபிமானச் செயலுமல்ல!

ஆனால் அவரை வைத்து - அவரது உடல்நிலையை வைத்து - அரசியல் சூதாட்டம் நடத்தும் ஆதாயம் தேடிகள் அனுதினமும்

அவிழ்த்து விடும் பொய்களைப் பொடியாக்க நேர்மையான முறையில் வாதமிடு! அதில் தவறில்லை!

அவரால் பேச முடியவில்லை என்றும், இனியும் பேசுவார் என உத்திரவாதம் அளிக்க முடியாதென்றும் அவருக்கு சிகிச்சை அளிக்கும் அமெரிக்க டாக்டர் இரண்டு நாட்களுக்கு முன்புதான் அறிவிக்கிறார்.

ஆனால் அவர் வேட்பு மனு தாக்கல் செய்யும்போது எடுக்க வேண்டிய உறுதிமொழியை வாய் மூலம் எடுத்துக் கொண்டார் என்று அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரி அறிவிக்கிறார். அதை அங்கீகரிப்பதாக இங்குள்ள தேர்தல் அதிகாரியும் கூறுகிறார்.

இந்தியாவின் கௌரவம் அமெரிக்காவில் எப்படி விலை கூறப்படுகிறது என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு வேறு இருக்க முடியுமா?

ஏன் இந்தப் பொய்? அதுவும் இந்திய நாட்டு அதிகாரிகளே சொல்லுகிறார்கள் என்றால் என்ன கைமாறு கருதி? அல்லது எவ்வளவு கை மாறியது!

அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலை அருமை நண்பர் எம்.ஜி.ஆரின் ஒப்புதலைப் பெற்றது என்று கூறினார்கள்!

அது உண்மையென்றால் அவர்கள் கட்சிக்குள்ளேயே இத்தனை எதிர்ப்புகள் ஏன்?

எனவே அவர்களுக்கே தெரிகிறது, எம்.ஜி.ஆரின் உடல் நிலை பற்றிய உண்மை என்பது தானே விளக்கமாகிறது!

இப்படி அர்த்தமுள்ள வாதங்களை அடுக்கிடுக! அட்டியில்லை எனக்கு!

ஆனால் அதற்கு மாறாக என்னைத் தரக்குறைவாகத் திட்டுகிறார்கள் என்பதற்காக நீயும் சரி, நமது உடன்பிறப்புகளும் சரி - தரக்குறைவான வார்த்தைகளைப் பதில் கணைகளாகத் தொடுக்க வேண்டாம்!

களம் அமைந்து விட்டது! ஜனநாயகம் காத்திடும் போர் ஆரம்பமாகி விட்டது!

கடமை

கண்ணியம்

கட்டுப்பாடு

என நமது முரசுகள் அதிரட்டும்! விண்முட்ட நமது வெற்றிக் கொடி உயரட்டும்! வீரத்தின் திருஉருவே! விரைந்து பணியாற்று!

அன்புள்ள,

மு. க.

01-12-1984

1289. அந்தோ! அப்பாவித் தமிழர்கள்!

உடன்பிறப்பே,

இலங்கையில் படுகொலைக் காதை தொடர்ந்த வண்ணமிருக்கிறது. விமானப்படை ஹெலிகாப்டர்களில் சென்று தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் சிங்கள ராணுவத்தினர் குண்டுமாரி பொழிகின்றனர். தமிழர்களின் பிணங்கள் குவிகின்றன. கால், கை சிதறித் துண்டம் துண்டங்களாகத் தமிழ் இனமக்களின் பிணங்கள் இறைந்து கிடக்கின்றன. தீவிரவாதிகளை வேட்டையாடுகிறோம் என்ற பெயரால், தமிழ்க்குல விவசாயிகள் மீது போர் தொடுக்கப்பட்டு விண்ணிலிருந்தவாறு குண்டுகளை வீசி அவர்கள் வாழும் கிராமங்களையே அழித்திருக்கின்றனர் சண்டாளர்கள்!

நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் சாவு என்று இங்குள்ள ஏடுகள் கணக்குச் சொன்னாலும் கூட அந்தச் சாவு எண்ணிக்கை ஆயிரத்தையும் கடந்திருக்குமென்றே தோன்றுகிறது.

மாலையிலிருந்து மறுநாள் காலை வரையில் குண்டுகள் வீசப்பட்டன. நெடுங்கேணி போன்ற பகுதிகள், காட்டுப் பகுதிகளானபடியால் கொல்லப்பட்ட தமிழர்களின் முழு விவரம் இன்னமும் கிடைக்கவில்லையென்று செய்தி நிறுவனம் கூறுகிறது.

படைபலம் கொண்டு இலங்கைத் தமிழர் உரிமைகளை நசுக்கிடவும் - உயிர்களைக் கசக்கி எறிந்திடவும் இரண்டாண்டு காலமாகவே சிங்கள அரசு சினங்கொண்டு அலைகிறது என்பதை நமது தி.மு.கழகமும், நம்மையொத்த உணர்வு கொண்ட தமிழ்நாட்டுக் கட்சிகளும் எடுத்துக்காட்டி - மத்திய அரசு அதற்கான உடனடி நடவடிக்கை எடுத்து இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திட வேண்டுமெனக் குரல் கொடுத்தோம்!

நடவடிக்கையா? அது முட்டாள்தனம் என முழங்கினர் வெங்கட்டராமன்கள்!

இங்குள்ள தமிழக ஆட்சியாளரும் நமது குரலைக் கேலி செய்தனர்!

கறுப்புக்கொடி பேரணி நடத்தினோம்!

ஒரு கோடி கையெழுத்து இயக்கம் நடத்தி ஐ.நா. மன்றத்துக்கு அனுப்பினோம்!

ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டோம்!

நெடும்பயணம் நடைபெற்றது!

இலங்கைத் தூதரகத்தின் முன்னால் மறியல் செய்யப் புறப்பட்டோம்!

சிறைப்பட்டோம்! அதனைக் கண்டித்து பதினாறு பேர் தீக்குளித்து ஏழு பேர் மாண்டு போயினர்!

சட்டமன்ற பதவிகளைத் தூக்கி எறிந்தோம்!

நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் மத்திய அரசைக் கண்டித்து குரல் எழுப்பிப் பலமுறை வெளிநடப்புச் செய்து நமது எதிர்ப்புக் குரலின் ஆழமான உணர்வை வெளிப்படுத்தினோம்!

வட்டமேஜை மாநாடு - பேச்சுவார்த்தை எனக் காலம் கடத்தாதீர்கள்! அந்த இடைக்காலத்தில் இலங்கை அரசு தனது பலத்தைப் பெருக்கிக் கொண்டு அங்குள்ள தமிழர்களை அழித்துவிடுமென எச்சரித்தோம்!

கேளாக்காது மத்திய அரசுக்கு! கேலிப்பேச்சு இங்கே மாநில அரசுக்கு!

இன்று நிலைமை என்ன? அந்நிய நாட்டு உதவிகளை அமோகமாகக் குவித்துக் கொண்டு இந்தியாவையே மிரட்டுகிறது இலங்கை என்ற சுண்டைக்காய்த் தீவு!

விமான மூலம் குண்டுகளைப் பொழிந்து தமிழர் கிராமங்களை எரிக்கிறது! அவற்றில் தமிழர் உடல்களும் எரிந்து கருகுகின்றன!

இதற்குப் பிறகும் இந்திய அரசு என்ன சொல்லுகிறது?

இலங்கையில் அப்பாவிகள் பலர் உயிர் இழந்திருப்பது கண்டு இந்திய அரசு, ஆழ்ந்த வருத்தமும் வேதனையும் அடைந்திருக்கிறது!

இதுதான் இந்தியாவின் பதில்! ஆம், அப்பாவி மக்கள்தான்! இலங்கையில் மட்டுமல்ல - இந்த உலகெங்குமுள்ள தமிழர்கள், அப்பாவி மக்கள்தான்!

அதனால்தான் இந்தக் கதி தமிழர்களுக்கு!

என்ன செய்வது! இந்த அப்பாவிகள், பங்களாதேஷில் பிறக்கவில்லையே!

அப்படிப் பிறந்திருந்தால் இந்திய அரசின் இரத்தம் கொதித்திருக்கும்!

இந்த நேரத்தில் ஏ, அப்பாவித் தமிழா! உன்னோடு சேர்ந்து நானும் அழுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்! என்றுதானே என்னால் கூற முடிகிறது!

அன்புள்ள,

மு. க.

03-12-1984

1290. இடையில் மூன்றே வாரங்கள்!
எழுக இன்றே!

உடன்பிறப்பே,

டிசம்பர் 2-ஆம் நாள் கழகத்தின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. சிற்றூர், பேரூர், நகர்ப்புறங்களில் வாழுகிற ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், பல்வேறு தொழில்களில் பாடுபடும் பாட்டாளி வர்க்கத்தினர், விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரது பிரச்சினைகளையும் மையமாக வைத்து அவற்றைத் தீர்த்து வைத்து வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும் - நீண்டகால வளர்ச்சித் திட்டங்களை வகுத்து நிறைவேற்றுவதிலும் கழகம் பெரிதும் அக்கறையும் ஆர்வமும் காட்டும் என்பது தேர்தல் அறிக்கையிலிருந்து தெளிவாகும் உண்மையாகும். நேரமின்மை காரணமாக ஒன்றிரண்டு விட்டுப் போயிருந்தாலும் அவற்றைக் குறிப்பிட்டுக் காட்டினால் அவற்றைச் செயல்படுத்திடக் கழகம் தயங்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையை வெளியிட்டவுடனே சென்னை மாவட்டத்தில் முதல் கட்ட தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினேன். ஏழு தொகுதிகளில் தேர்தல் பணிமனைகள் திறப்பு விழா என்றுதான் நிகழ்ச்சிகள் குறுகிய கால அளவில் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆனால் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு மாபெரும் பொதுக்கூட்டமாக அமைந்தது உற்சாகமூட்டக்கூடியதாக இருந்தது! அதிலே எனக்கு ஒரு மகிழ்ச்சியும் உண்டு - அதே நேரத்தில் ஒரு அச்சமும் உண்டு!

மகத்தான பொதுக்கூட்டங்கள் - மக்களின் எழுச்சி ஆரவாரம் - இவற்றைக் கண்டவுடன் கழக உடன்பிறப்புகள் சிலருக்கு ஒரு மதமதப்பு ஏற்பட்டு விடுமே என்ற அச்சம்தான் அது!

வெற்றி பெற்று விட்டோம் என்று இப்போதே வீரமுழக்கமிடுவோரும் உண்டு!

வெற்றி பெற்றிட இன்னும் வேகமாகப் பணியாற்றுவோம் என்று உறுதி பூண்டு உழைத்தால்தான் வெற்றி கிட்டுமே தவிர, வெற்றி பெற்று விட்டோம் என்று மதமதப்பில் பணியாற்றாமல் ஓய்வு கொண்டிருந்தால் பயனில்லை!

மக்களின் ஆர்வம் பெருவெள்ளமாக பெருக்கெடுக்கிறது! உண்மைதான்! நான் மறுக்கவில்லை! அந்த வெள்ளத்தை வகைப்படுத்தி - வாய்க்கால்கள் மூலம் வயல்களுக்குக் கொண்டு வந்து சேர்த்தால்தானே - நல்ல விளைச்சல் கிடைக்கும்.

தெருக்களில் - திடல்களில் - பொதுக்கூட்டங்களில் - ஊர்வலங்களில் திரளுகின்ற வாக்காளப் பெருமக்கள், வாக்குச் சாவடிகளுக்குச் செல்வதில் அக்கறை காட்ட வேண்டுமல்லவா? கழகத்திற்கும், நமது முற்போக்கு அணியின் கட்சிகளுக்கும் அவர்கள் வாக்களிக்க வேண்டுமல்லவா? அவர்களுக்கு அந்த அக்கறையை ஏற்படுத்த வேண்டுமல்லவா?

அதனால்தான்! வெள்ளம் - வாய்க்கால் - வயல் - விளைச்சல் என்ற உவமைகளைச் சொல்லுகிறேன். நமது உடன்பிறப்புகள் அந்தச் செயலில் சோடை போய் விடக்கூடாதென்று!

நான் கேட்டுக் கொண்டுள்ளபடி குழுக்கள் அமைக்கப்பட்டு தேர்தல் பணிகள் ஒருங்கிணைந்த உணர்வோடு நடைபெறத் தொடங்கியிருக்குமென நம்புகிறேன்.

இடையில் இருப்பது இரண்டு மூன்று வாரங்கள்தான்!

எல்லா மாவட்டங்களும் வந்து உன்னையும், வாக்காளப் பெருமக்களையும் சந்திக்க நிகழ்ச்சி நிரல் வகுத்துள்ளேன் என்றாலும் - எல்லா ஊர்களுக்கும், எல்லா தொகுதிகளுக்கும் வந்திட இடையிலே இருக்கும் காலம் போதாது என்பதை நீயும் அறிவாய்!

ஏற்கனவே ஆறு மாத காலமாக பட்டி தொட்டிகளுக்கெல்லாம் வந்து கழகக் கொடிகளை ஏற்றி கொள்கை விளக்கம் தந்து தேர்தல் நிதியும் பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

அதனால் அழைத்த இடங்களுக்கெல்லாம் நான் வரவில்லையே என்று நமது உடன்பிறப்புகளுக்குக் கோபம் வரக்கூடாது!

உழைத்திட என் உடல்நிலை இடம் கொடுத்தாலும், தேர்தல் நாள் மிக அருகாமையில் இருப்பதால் நேரம் போதவில்லை என்பதை நீயே அறிவாய்!

பேராசிரியரும், நாஞ்சிலாரும் தங்கள் தொகுதி பணிகளையும் ஆற்றிக் கொண்டு, வெளி மாவட்ட தொகுதிகளுக்கும் ஓரளவு நிகழ்ச்சிகளுக்கு வருகை தருவார்கள்!

தலைமைக் கழக சொற்பொழிவாளர்கள் எல்லாத் தொகுதிகளிலும் கடமையாற்றுவார்கள்.

கழகப் பொருளாளர் சாதிக், தலைமைக் கழகத்திலிருந்து பொறுப்புகளைக் கவனித்திட வேண்டிய கடமையிருக்கிறது!

மாநில அளவில் சுற்றிச் சுழன்று கொள்கை விளக்கம் அளிக்கக்கூடிய முன்னணியினர் சிலர் வேட்பாளர்களாக ஆகியிருந்தாலும், அவர்களுக்கு அருகாமையில் உள்ள தொகுதிகளிலும், மாவட்டங்களிலும் கூட்டங்களுக்குச் சென்றிடுவர் என நம்புகின்றேன்! அவ்வாறு விரும்புகிறேன்!

இயக்குநர் தம்பி ராஜேந்தர் மாநில முழுதும் - இயன்ற அளவுக்கு வேன் மூலம் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட இருக்கிறார். அவரை மிகவும் கசக்கிப் பிழியாமல் அளவோடு பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன்.

நான் அடிக்கடி குறிப்பிட்டுக் காட்டியதற்கு ஏற்ப, கழகப் பிரச்சார முறையில் கடுகளவு தரக்குறைவும் தலை காட்டக் கூடாது!

வாதங்களை எடுத்து அடுக்கி வாக்காளப் பெருமக்களை விழிப்புறச் செய்திட வேண்டும்!

ஏழாண்டு கால வேதனை - ஊழல் - நிர்வாகச் சீர்கேடு - இவற்றினை ஆதாரங்களுடன் மக்களுக்கு விளக்கலாம்!

நமது தேர்தல் அறிக்கையினை முழுதும் படித்து - அந்த அறிக்கையின் அடிப்படையில் தேர்தல் பிரச்சாரத்தை நடத்தினாலே,

தமிழ் மக்களுக்குப் போதுமானதும் தெளிவானதுமான விளக்கம் கிடைக்கும்!

உடன்பிறப்பே, இடையில் மூன்று வாரங்கள் கூட முழுமையாக இல்லை! முடுக்கி விடுக உன் செயலாற்றலை!

முயலும் ஆமையும் என்ற கதையை நீ அறியாத உடன்பிறப்பல்ல! அதனை உணர்ந்து விழிப்புடன் இரு! வெற்றிகளைக் குவித்திடு!

அன்புள்ள,

மு. க.

04-12-1984

1291. இதோ - என் அன்பு முத்தங்கள்!

உடன்பிறப்பே,

ஒரு மாத காலமாகிறது நான் இரவில் தூங்கி! உனக்கும் அப்படித்தான், உழைத்துக் கொண்டேயிருக்கிறாய்! இன்னும் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டும்!

என்ன கல்மனம் நமது தலைவனுக்கு! இன்னுமா உழைக்க வேண்டும்! இப்போது உழைப்பது போதாதா? என்று கேட்பாய் என்று எனக்குத் தெரியும்.

இதோ என்னைப் பார்! கடந்த இரண்டு, மூன்று தேதிகளில் சென்னையில் பதினான்கு தொகுதிகளிலும் பேசினேன்! அதன் பிறகு நாலாம் தேதி முதல் பதினோராம் தேதி முடிய ஏழு முழு நாட்கள் - உறக்கமில்லை! உணவருந்தவில்லை! ஒவ்வொரு நாளும் இருநூறு முதல் முந்நூறு மைல்கள் பயணம்! விடிய விடியப் பிரச்சாரம்! விடிந்து கூடக் காலை ஒன்பது மணி வரையில் நிகழ்ச்சிகள்! அதன் பிறகு கண்ணயர்தல் என்ற பெயரால் சிறிது நேரம் களைப்பாறுதல்! உடனே கழக வேட்பாளர்கள், தோழமை கட்சியினருடன் கலந்துரையாடல்! மீண்டும் காரில் அல்லது வேனில் ஏறிட வேண்டியது!

இந்த நிலையிலும் இங்கே வா! அங்கே வா! என்று இரக்கமின்றி - ஆனால் ஆர்வத்துடன் அழைத்துத் துளைக்கிறாயே! உன் மனம் மட்டும் என்ன - கல் இல்லையா?

கனிவு கொண்ட இதயங்கள்தான் உன் இதயமும் என் இதயமும்! ஆனால் இந்தத் தேர்தல் முடியும் வரையில் அதனைக் கல்லாக மாற்றிக்கொண்டு தான் நீ என்னையும், நான் உன்னையும் வேலை வாங்க வேண்டியிருக்கிறது!

வெற்றி, நமது காலில் வந்து விழுந்து புரளும் என்று எண்ணிக் கொண்டு மதமதப்பாக இருக்கும் யாராயினும் அவர்கள் எனது உடன்பிறப்புகளாக மாட்டார்கள்!

உழைத்தே உருமாறிப் போன கட்டை இது! அதனால் உன்னையும் உழைக்கச் சொல்வது - இன்னும் கடுமையாக உழைக்கச் சொல்வது எனக்குரிய இயல்பு! உரிமையும்கூட!

ஏழாண்டுக் காலம் இந்தக் கழகம் எப்படியெல்லாம் பழி வாங்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்! எதிர்க்கட்சிகளான நமது அணியினர்க்கு விளைவிக்கப்பட்ட தொல்லைகளை மறந்துவிடாதே! ஏன், இந்த நாட்டுக்கே ஏற்பட்ட தீமைகள் கொஞ்சமா? தலைவன் என்று நீ ஏற்றுக்கொண்டிருக்கிற இந்தத் தொண்டனுக்கு இழைக்கப்பட்ட அவமானங்கள் எத்தனை! எத்தனை! இன்னமும் பார்த்தாயா எவ்வளவு இழிமொழிகளை அள்ளி வீசுகின்றனர்!

இதற்கெல்லாம் நீ அளிக்க வேண்டிய பதிலை - இந்த நாட்டு மக்கள் நலமுடன் வாழ - மான மரியாதையுடன் வாழ - நீ அளிக்க வேண்டிய பதிலை ஜனநாயகக் களத்தில் உன் உழைப்பின் மூலம் தானே அளிக்க முடியும்?

அந்த உழைப்பைத்தான் நானும் பொழிகிறேன்! உன்னிடமும் எதிர்பார்க்கிறேன்!

வெற்றிச்சூரியன் உதிப்பான் என்பதற்கான அறிகுறிகள் தோன்றிவிட்டன! விடிவெள்ளி முளைத்துவிட்டது!

மாற்றார் மிகவும் ஆத்திரப்பட்டு பேசுவதிலிருந்தே நமது வெற்றி உறுதிதான் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

அதனால்தான் வன்முறைகளைத் தூண்டுகின்றனர்! அதற்கு நமது அணியினர் ஈடு கொடுத்து அமைதிக்கு வழிவகுக்க முனைகின்றனர் என்றதும், வேறு வழிகளில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைச் சீர்குலைத்து அந்தக் குழம்பிய குட்டையில் வலைவீசலாமா என்று ஆளும்கட்சியின் மேலிடத்தார் திட்டமிட்டுள்ளனர்!

அனுதாபங் காட்டுவது வேறு - அரசியல் கடமை உணர்வுகள் வேறு என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு தீர்ப்பு வழங்க முன் வந்துவிட்டதை உணர்ந்த ஆளுங்கட்சியினர் சட்டம் ஒழுங்கைக் குலைக்க உச்சகட்ட காட்சிகளுக்குத் திட்டம் தீட்டுகின்றனர்!

அப்படிப்பட்ட செயல்களில் அவர்கள் ஈடுபடுவார்களானால் அப்போதுதான் நீ மிகவும் நிதானமாகவும் - நிலைகுலையாமலும் - மன உறுதியோடும் உனக்கு ஒதுக்கப்பட்ட பணியைப் படபடப்பின்றியும் அதே நேரத்தில் விறுவிறுப்புக் குறையாமலும் ஆற்றிட வேண்டும்.

பரபரப்பான செய்திகள் கிளப்பி விடப்படும்! அப்படித் திட்டம் வகுத்தே கிளப்பி விடப்படும்! அந்தச் செய்திகளால் அவர்களது அணிவகுப்பு, கலகலத்துப் போக வேண்டுமே தவிர உனது அணிவகுப்பில் ஒரு சிறிது பதட்டமும் ஏற்படக்கூடாது!

நீ எந்தத் தொகுதியில், எந்த இடத்தில் இருந்து தேர்தல் பணியாற்றுகிறாயோ - அந்த இடத்தில் இருந்து ஒரு அங்குலமும் நகராமல் நமது அணியின் வெற்றிக்கு ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும்!

பத்தடி தூரத்தில் இடியே விழுந்தால்கூட, பரபரப்பு அடையாமல் அதேசமயம் உன் பணியில் துளியளவு தேக்கமும் இல்லாமல் ஓடியாடி உழைத்துக்கொண்டே இரு!

கடந்த தேர்தலில் இளையான்குடி தொகுதியில் ஒரு ஓட்டு வித்தியாசத்தில்தான் நமது வேட்பாளர் மலைக்கண்ணன் வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது என்பதை எண்ணிப் பார்த்தால் ஒவ்வொரு கணமும் உனது தொய்வில்லாத உழைப்பு தேவை என்பதை உணர முடிகிறதல்லவா?

உன் கவனத்தைத் திருப்பிவிட மாற்றார் தீட்டிடும் திட்டங்கள் கண்டு - பரப்பிடும் செய்திகள் கேட்டு - ஒருவேளை அந்தச் செய்திகள் உண்மையாகவே இருந்தாலும், நீ நிலை குலையாமல் இருந்து நமது அணியின் வெற்றிக்குப் பாடுபடுவதே எதிர்காலத் தமிழகத்தின் உரிமை வாழ்வுக்கு நீ செய்யும் ஒப்பற்ற தியாகமாகும்!

உன் தலைவன், ஆம்! இந்த அடியேன் - வாழ்க்கைத் துணைவி பத்மாவதி மரணப்படுக்கையில் இருந்தபோதும் புதுக்கோட்டை சென்று பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு திரும்பி வந்த நேரத்தில் அந்த அன்புக்கரசியின் உயிரற்ற உடலைக்கண்டு அவள் நெற்றியிலே கடைசி முத்தம் பதித்தவன்!

தாயார் அஞ்சுகத்தம்மைக்கு ஸ்டான்லி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து ஆபத்தான கட்டத்தில் இருந்தபோது, வடசென்னை கூட்டத்திற்குச் சென்று கடமையாற்றியவன்!

தந்தை முத்துவேலர் இறந்த போதும் அருகில் இல்லை - மருத்துவர் மாநாட்டில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தவன்!

கோவை மாவட்டக் கணியூர் கூட்டத்திற்குச் செல்லும் வழியில் திருச்சி திராவிடப்பண்ணை அலுவலகத்தில் ஓய்வெடுத்த போது, அவன்பெற்ற குழந்தை சென்னையில் இறந்து விட்டதாக செய்தி வந்தபோது டெலிபோனில் அனுதாபம் கூறிவிட்டுக் கணியூர் சென்று கழகக் கடமையாற்றியவன்!

அந்தத் தலைவனாம் இந்தத் தொண்டனை நீ உடன்பிறப்பாக அடைந்திருக்கிற காரணத்தால் - எந்தச் சோதனை வந்தாலும் சோர்ந்து போகாமல் கடமையைச் செய்து முடித்திடுக என்றுதான் சொல்வேன்!

கல்மனச் செயல்தான்! அப்படித்தான் தோன்றும்! என் செய்வது! கடமையை ஆற்றி முடித்து விட்டு, அதில் வெற்றி கண்டுவிட்டு அதன் பிறகு நமக்குற்றத் துன்பத்திற்காகக் கவலைப்பட நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டியதுதான் கழகத்திற்காக - நாட்டுக்காக, ஏற்றுத் தீர வேண்டிய தியாகம்!

தியாக பரம்பரையில் வந்த எனது உடன்பிறப்பே! தீக்காடு உன்னைச் சூழ்ந்த போதிலும் தி.மு.கழக இரு வண்ணக் கொடியை ஏந்திப் பிடித்தவாறு இலட்சியத்தில் வெற்றி பெறும் ஒரே உறுதியுடன் களத்தில் நில்! கடமையாற்று! உழைத்திடும் உன் திருவடிகளுக்கு இதோ என் அன்பு முத்தங்கள்!

அன்புள்ள,

மு. க.

14-12-1984

1292. களத்தில் நின்ற கண்மணியே!

உடன்பிறப்பே,

தேர்தல் முடிவுகளைக் கண்டு நீ மிகவும் துடித்துப் போயிருப்பாயே என்பதை நினைத்துத்தான் நான் கவலைப் படுகிறேன்.

ஒரு மாதத்திற்கு மேலாக வீடு வாசல், காடு கழனி, கடை, தொழில் இப்படி எதைப்பற்றியும் கவலைப்படாமல் களத்தில் நின்றாய்...

தன்னலமற்று நீ ஆற்றிய பணிக்குத் தமிழ் மக்கள் தந்த பரிசு இதுதான் என்கிறபோது, அதற்காக யாரை நொந்து கொள்ள முடியும்!

உழைப்புக்கும், தியாகத்திற்கும், உண்மைக்கும் இன்றில்லா விட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் வெற்றி கிடைத்தே தீரும்!

அந்த நம்பிக்கையுடன் பெரியாரும் அண்ணாவும் வகுத்தளித்த திராவிட இயக்க உணர்வுகளை நெஞ்சில் ஆழமாகப் பதிய வைத்தவாறு இறுதி வரை வாழ்வோம்!

இந்தத் தேர்தல் முடிவு குறித்து, தேர்தல் நேரத்தில் நான் சொன்னதையும் எழுதியதையும் விட, வேறு எதையும் நான் புதிதாகத் தமிழ்நாட்டு மக்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

நான் எழுதியவற்றிலும், பேசியவற்றிலும் தெளிவாக்கப்பட்ட உண்மைகளைத் தமிழ் மக்கள் விரைவில் புரிந்து கொள்ளும் காலம் வரும்.

அன்புள்ள,

மு. க.

30-12-1984

1293. வாழ்க உன் திறம்! வெல்க உன் உறுதி!

உடன்பிறப்பே,

ஆயிரக்கணக்கில் உன் போன்ற உடன்பிறப்புகள் அனுப்பியுள்ள பொங்கல் வாழ்த்துகளின் வண்ணங்களிலும், அவற்றில் ஒளிவிடும் எண்ணங்களிலும் மனத்தைப் பறி கொடுத்து மகிழ்கின்றேன். பொங்கல் திருநாளையொட்டி நீ வழங்கிய வாழ்த்து இதழ்களை முந்திக்கொண்டு, கடந்த பதினைந்து நாட்களாக நீ எனக்கு எழுதியுள்ள கடிதங்கள் அனைத்தும், என் இதயத்தோடு இதயமாக சேர்த்து அணைத்துக் கொண்டு ஆறுதல் பெறத்தக்க அளவுக்குத் துணை நின்றன! துணை நிற்கின்றன! என்றைக்கும் துணை நிற்பன!

இத்தனை நாட்கள் ஏன் எங்களுக்குத் தேறுதல் கூறி ஒரு கடிதம் கூட எழுதவில்லையென நீ சினந்து கேட்பாய்! ஆமாம் செல்லமாகத்தான் இருக்கும் அந்தச் சீற்றம்! நானறிவேன் நன்றாக!

நாள்தோறும் உன்னைப் போன்ற கழகக் கண்மணிகள் எழுதிடும் கடிதக் குவியல்களின் நடுவே அமர்ந்து அவற்றைப் படித்து முடிக்கவே நேரம் போதாமலிருந்த எனக்கு, உனக் கொரு கடிதம் எழுதிட இயலாமற் போனது என்பதுதான் உண்மை!

இருபது நாட்கள் இரவு பகல் ஓய்வின்றி, உறக்கமின்றி, உணவின்றி, தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்றேன். மாலையில் தொடங்கி மறுநாள் காலைப் பொழுதிற்குள் நாலு மாவட்டங்களைக் கடந்து ஐந்தாவது மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட நாட்களும் உண்டு!

உழைத்திடுவதில் என்னையும் வென்ற பெருமை உனக்கும், நமது கூட்டணியின் அருமைச் செயல் வீரர்களுக்கும், நமது தம்பிகளாம் இளைஞர் அணித் தங்கங்களுக்கும் உண்டு!

நாடே எதிர்பார்த்தது ஒரு நல்ல தீர்ப்பை! தீர்ப்பு வழங்கியவர்களே திகைக்கிறார்கள்! இப்படியா ஒரு தீர்ப்பு வழங்கிவிட்டோமென்று!

சிந்திக்கச் சொன்ன சாக்ரடீசுக்கு, நஞ்சருந்திச் சாகுமாறு வழங்கப்பட்ட தீர்ப்புக்குக் காரணம் சில வாக்குகள் வித்தியாசம் தானே!

உன்னையே, நீ அறிவாய்! என்று மனித சமுதாயத்தைப் பார்த்து உரக்கக் கூவியவாறு தான் அந்த இலட்சிய மனிதன் சாக்ரடீசின் உயிர் பிரிந்தது! காராக்கிருகத்தில் அவன் உடல் வீழ்ந்தது! ஆனால் காலம், அவனை இன்னமும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

தண்டனை அளிக்கப்பட்ட போது அவன் குற்றவாளி யெனக் கூறிற்று, அந்தப் பெரும்பான்மை!

இன்றோ, இந்த உலகம் - சாக்ரடீசுக்குத் தண்டனை வழங்கியவர்களைத்தான் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்துள்ளது!

கழனியில் நீர் தேக்கி கலப்பை கொண்டு உழுது - பரம்படித்துப் பண்படுத்தி - நெல் கன்றுகளை நட்டு - கதிர் கண்டு மகிழ்ந்து - அறுவடைக்கும் அயராது பாடுபட்டு - களஞ்சியம் கொண்டு சேர்த்த நெல்மணிகளை ஓர் இரவுப் பொழுதில் களவு கொடுத்தது போன்ற உணர்வால் நீ துடிப்பது எனக்குப் புரிகிறது!

கஷ்டப்பட்டோருக்குப் பல நாள் வேலை - கவர்ந்து செல்வோருக்கு ஒருநாள் வேலை!

களஞ்சியத்துத் தானியம்தான் பறிபோயிற்றே தவிர - கழனி, நமது கைவசம்தான் இருக்கிறது!

நமது கரங்களும் வலுவிழந்து விடவில்லை! உழைக்கும் தோள்களும் உரம் இழந்து விடவில்லை!

வியர்வைத்துளிகள் வீண் போனதாக வரலாறு இல்லை! தியாகம், விழலுக்கிறைத்த நீராகிவிட்டதோ என எண்ணிடத் தோன்றும் - ஆனால் மனித சமுதாயத்தின் ஆணிவேருக்கு, அதுதான் ஜீவஊற்றாக அமைந்துள்ளது என்ற உண்மை ஒருநாள் உலகுக்குப் பிரகடனப்படுத்தப்பட்டே ஆக வேண்டும்! அது காலத்தின் கட்டாயம்!

கழக ஆட்சியில் குடகனாறு அணை கட்டினோம்! அந்தப்பகுதி மக்கள் மகிழ்ந்தனர், பாராட்டினர், போற்றினர், புகழ்ந்தனர்!

வரலாறு காணாத பெருவெள்ளம் ஒன்று பாய்ந்தது! அணை முழுதும் அடித்துக்கொண்டு போய்விட்டது எனச் செய்தி வெளியிட்டனர்! ஆனால் உண்மை அதுவல்ல! கட்டு மானம் அசைந்து கொடுக்கவில்லை! அதன் இருபுறமும் இருந்த மண் அணைதான் மழையிலும் வெள்ளத்திலும் புயலிலும் சிக்கிச் சீரழிந்தது! குழுக்கள் போட்டு ஆராய்ந்தனர் நம் மீது குற்றம் சாட்ட!

குழு என்ன சொல்லிற்று? கட்டிய இடமும் சரிதான்! கட்டுமானமும் அழியவில்லை! எனவே, அணை கட்டிய அடிப்படையில் குறையில்லை என்றுதான் அறிக்கை தந்தது!

இன்று தேர்தல் முடிவும் அதைத்தானே தெளிவு படுத்துகிறது! அணை கட்டிய இடம் - அதனை கட்டிய விதம் - குறைபாடுடையதல்ல! ஆயினும், எதிர்பாராத விதத்தில் எழுந்த புயல் - மழை - பெருவெள்ளம் - மண் பகுதியைத்தான் கரைத்துச் சென்று விட்டது! கட்டுமானப் பகுதி அப்படியே தான் இருக்கிறது! நம்முடைய கழகத்தின் அடித்தளமும் அவ்வாறுதான் எந்தச் சிதைவுமின்றித் திகழ்கிறது!

கட்டுமானப் பகுதி காங்கிரீட்டால் ஆனது! எனவே குடகனாறு அணையின் பிரதானப் பகுதி, அந்தக் கடும் வெள்ளத் திலும் கரைந்து போய்விடவில்லை! அன்பு உடன்பிறப்பே, கழகமும் அப்படித்தான் - பாய்ந்து வந்த பரிதாப வெள்ளம், சோகப்புயல் இவற்றால் தேர்தல் முடிவுகள் பாதிக்கப்பட்டு விட்டாலும் அசைக்க முடியாத அளவுக்குக் கட்டுமானப்பகுதி உறுதிமிக்கதாகவே இருக்கிறது!

களஞ்சியத்து நெல் கவரப்பட்டாலும், கழனியிருப்பதால் மீண்டும் உழுது பயிரிடவும், உழைத்திடவும் ஊக்கம் பிறக்கத் தானே செய்யும்!

கட்டுமானப் பகுதி அழுத்தமாக இருப்பதால் அணையைப் பழுது பார்த்துச் சீர்படுத்தி, மீண்டும் பாசனத்துக்குப் பயன் படுத்திக் கொள்ள, முயற்சியும், முனைப்பும் இருந்தால் மட்டும் போதுமல்லவா!

அதுபோல கழகம் இருக்கிறது. அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் சொன்னது போல இந்தக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும், வராவிட்டாலும் தமிழ் காத்திடவும் - தமிழ் மரபு போற்றிடவும் - இலக்கியம், வரலாறு இவற்றைப் பாதுகாத்திடவும் - தமிழ்நாட்டு மக்களின் உரிமைகள், நலன்கள் பறிக்கப்படாமல் தடுத்து நிறுத்திடவும் இன்னும் பல ஆண்டு காலப்பணிக்குத் தயாராகிக் கொள்ள வேண்டும்.

மொழி, கலை, இலக்கியம், கலாச்சாரம், இன உணர்வு இவை மட்டுமின்றி, வாயளவில் சுதந்திரத்தை முழங்கிக் கொண்டு வயிறு காய்ந்து, வறுமையால் தினமும் தேய்ந்து மாய்ந்து வரும் பல கோடி மக்களின் கண்ணீர் துடைக்க, எரிமலையெனப் பொங்கி எழுந்து நிற்கும் இடதுசாரி சக்திகளின் இலட்சக்கணக்கான கரங்களுடன் நமது கரங்களும் இணைந்தே நிற்கும் என்ற சூளுரை ஏற்றுச் சுடர் முகம் தூக்கி வேக நடை போட்டிட வேண்டும்.

சாதி மத பேதச் சண்டையிலே சிக்கித் தவித்து - மூட நம்பிக்கையெனும் முடைநாற்றச் சகதியிலே விழுந்து புரளும் சமுதாயத்தில், பகுத்தறிவு மனம் கமழச் செய்திட, யாரையும் புண்படுத்தும் செயல் விடுத்து - எல்லாப் பிரிவு மக்களின் உள்ளத்தையும் பண்படுத்தும் நமது கழகத்தின் தொண்டினைத் தொடர்ந்திடல் வேண்டும்.

தியாக அத்தியாயங்கள் நிறைந்ததே நமது வரலாற்றுக் காவியம்!

இந்தி ஆதிக்கத்தை வீழ்த்திட - இந்தியப் பேரரசு, மாநிலங்களை அடிமைகளாக நடத்திடும் அளவுக்கு ஆண்டான் உரிமை பெற்றுத் தந்திடும் அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைத்திட - மாநிலங்கள் முழுமையான சுயாட்சி பெற்றுத் திகழ்ந்திட - இங்குள்ள தமிழ் மக்கள் மட்டுமின்றி - இலங்கையிலும் எரி நெருப்பில் தள்ளப்படுகின்ற தமிழ் மக்களும் நிலையான உரிமைகளும், நிரந்தரமான அமைதியும் பெற்றிட, நாம் ஆற்றிட வேண்டிய பணிகள் நிரம்ப உண்டு!

இந்தியாவில் ஜனநாயகத்தைக் காத்திட நெருக்கடி நிலையை எதிர்த்து நெருப்பாற்றில் நீச்சல் அடித்தோமே, அப்போதே கருகிப் போகாத கழகத்துக்குச் சொந்தக்காரர்கள் அல்லவா நாம்!

அந்தச் சோதனையை விடவா, இனியொரு பெரிய சோதனை வந்துவிடப் போகிறது!

அதையே தாங்கிக் கொண்டு - என்னைத் தனிமரமாக ஆக்க நினைத்தோரின் எண்ணம் ஈடேறாமல், என்னையும் தாங்கிப் பிடித்து, இயக்கத்தையும் எழுச்சி குன்றாமல் காத்திட்ட என் தங்கமே! கழகக் கண்மணியே! உயிரனைய உடன்பிறப்பே!

இந்தக் கடிதத்துடன் உனக்கு நான் இணைத்து வழங்கும் பொங்கல் வாழ்த்துகளை ஏற்றுக் கொள்!

நான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்காகவும்-என்னை ஏற்றுக்கொண்டுள்ள உனக்காகவும் உயிர் வாழ்ந்து கொண்டி ருக்கிற இந்த உடன்பிறப்பின் இதயமார்ந்த வாழ்த்துகள், உன்னை என்றும்போல் கூர்மழுங்கா ஈட்டி முனைகளாகவே வைத்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

வாழ்க உன் திறம்! வெல்க உன் உறுதி!

அன்புடன்

மு.க.

14-01-1985

1294. பொதுக்குழு - போராட்ட அறிவிப்பு மாநாடு!

உடன்பிறப்பே,

கடிதத் தொடர்பு கொண்டு உன்னோடு கலந்துரையாடி, எத்தனையோ கிழமைகள் பறந்தோடி விட்டன. ஆயினும் நேரில் சந்தித்தும் - கழக மேடைகள் - கழகத்தினர் இல்லத்து மணவிழா நிகழ்ச்சிகள் - இவற்றில் உன்னோடு அளவளா விடும் வாய்ப்பினை நான் தொடர்ந்து பெற்றுக்கொண்டு தானிருக்கிறேன்.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெற இருக்கும் பொதுக்குழுவில், உன்னைச் சந்தித்து கழகத்தை மேலும் வலிவுடன் கட்டிக் காத்திட நீ வழங்கும் கருத்துகளைக் கேட்டிடும் வாய்ப்பும் வருகிற 23, 24 சனி, ஞாயிறு நாட்களில் எனக்குக் கிட்ட இருக்கிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் பொதுக்குழுவில், கழகத்திற்குக் கிடைத்துள்ள கடந்த கால அனுபவங்களையும், அதனையொட்டி எதிர்காலத்திற்கென வகுக்க இருக்கிற ஆக்கப் பணிகளையும் விரிவாக விவாதித்துத் தக்க முடிவுகள் எடுத்திடும் தருணம் வாய்த்துள்ளது என்றே நம்புகிறேன்.

நடந்து முடிந்த தமிழகத் தேர்தலிலாகட்டும் - அல்லது புதுவைத் தேர்தலிலாகட்டும் - இடங்களை இழந்திருக்கிறோமே தவிர, மக்களின் இதயங்களை இழந்து விட்டோம் என்று யாரும் கூறிட முடியாது!

அப்படி நாமே கூட எண்ணிக் கொண்டால், நமது அணிக்கென வாக்களித்த மக்களின் நம்பிக்கையை நாம் துரும்பாக மதிக்கிறோம் என்றுதான் அவர்கள் பொருள் கொள்வர்!

நூற்றுப் பதினேழு லட்சம் வாக்குகளைப் பெற்ற அணி, தமிழகத்தில் ஆளும் கட்சியாகவும், எதிர்க்கட்சியாகவும் அமர்ந்திருக்கிறது.

எண்பத்துஆறு லட்சம் வாக்குகளைப் பெற்ற அணி, நமது அணி என்பதை எண்ணிடும் போது மக்கள் அறவே நம்மைப் புறக்கணித்து விட்டார்கள் என்று கருதுவது தவறுதானே!

117 லட்சத்துக்கும் 86 லட்சத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசம் 31 லட்சம் தானே!

அதிலே ஒரு பதினாறு லட்சம் வாக்குகள் மாறி விழுந்திருந்தால் நிலைமையே வேறுதானே!

புதுவையில் மட்டுமென்ன! முப்பது தொகுதிகளிலும் மொத்த வித்தியாசம் - அவர்களுக்கும், நமக்கும் ஒன்பதாயிரம் வாக்குகள்தான்!

டிசம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில், புதுவையில் நமது அணிக்கும், அவர்கள் அணிக்கும் அறுபதாயிரம் வாக்கு வித்தியாசம் என்றிருந்த நிலை மாறி - அலை ஓய்கிறது என்பதற்கு அடையாளமாக ஒன்பதாயிரம் வாக்குகள் மட்டுமே இப்போது வித்தியாசம்!

1967இல் ஐம்பது இடங்களைத் தமிழகத்தில் பெற்ற காங்கிரசார், 1971இல் பதினைந்து இடங்களையே பெற்றனர் என்பதையும், இப்போது அறுபதுக்கு மேற்பட்ட இடங்களைப் பெற்றுள்ளனர் என்பதையும் நாடு மறந்துவிடவில்லை!

1980இல் தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர். தலைமையில் களம் புகுந்த அ.தி.மு.க. அணிக்கு இரண்டே இரண்டு இடங்கள்தான்!

அந்தக் கட்சிக்கு அப்போது புதுவை மாநிலத்தில், ஒரு இடம்கூட கிடைக்கவில்லை யென்பது நாடறிந்த உண்மை!

ஜனநாயகத்தில் வெற்றி தோல்விகள் பகலும் இரவும் போல, மாறி மாறி வந்து கொண்டுதானிருக்கும்.

1977இல் இந்திரா காந்தி அம்மையார் தலைமையில், தேர்தல் களத்தில் இறங்கிய காங்கிரஸ் என்ன ஆயிற்று?

அந்த அம்மையாரே தோற்கடிக்கப்படவில்லையா? அவரை ராஜ்நாராயணன் லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி கொள்ளவில்லையா?

மூன்றாண்டுகளில் அந்த நிலை, முழுமையாக மாறிடவில்லையா?

எனவே - புயல், வெள்ளம், தலைக்கு மேலே உயர எழும் பேரலைகள், இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து எண்பத்து ஆறு லட்சம் வாக்காளர்கள் நமது அணியின் பக்கம் இருந்திருக்கிறார்கள். இன்னமும் இருக்கிறார்கள்.

அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் புறக்கணித்து விட முடியாது! புறக்கணிக்கவும் கூடாது!

எங்களை ஆட்சியில் அமர்த்தினால்தான் அரசியலில் இருப்போம் - இல்லையேல் அரசியலை விட்டு ஓடிவிடுவோம் என்று, தேர்தல் நேரங்களில் மக்களைப் பார்த்து கண்ணீர் வடித்து மூக்கைச் சிந்துபவர்களல்ல நாம்!

நம் முன் நிற்கும் கடமைகளில் முதலாவதாக இன்று இருப்பது, இலங்கைத் தமிழர் பிரச்சினை!

நமது இனத்தவர் இலங்கையில் நாள்தோறும் நூற்றுக் கணக்கில் கொல்லப்படுகின்றனர் - விரட்டப்படுகின்றனர் - மானம் அழிக்கப்படுகின்றனர் - அதனை விவரிக்கவே நெஞ்சு நடுங்குகிறது! இலங்கையில் தமிழ் இனமென ஒன்று இருந்தது என்ற அடையாளம் கூடத் தெரியாமல் செய்துவிடச் சிங்களக் காடையர்கள் திட்டம் வகுத்துச் செயல் படுகின்றனர்.

இனியும் இங்குள்ள மத்திய அரசு வேடிக்கை பார்க்கத்தான் போகிறதா?

தமிழக மீனவர்க்கும் உயிர், உடைமைக்கு உத்திரவாத மில்லை!

படைகொண்டு வந்து கொன்று குவிக்கிறான் சிங்கள வெறியன்!

இதற்கு என்னதான் விமோசனம்? இந்தியப் பேரரசு இங்குள்ள தமிழர்க்குப் பதில் சொல்லியாக வேண்டும்!

அதற்குத்தான் கூடுகிறது பொதுக்குழு!

பொதுக்குழுவைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் போராட்ட அறிவிப்பு மாநாடு - இலங்கைத் தமிழர்களைக் காத்திடும் ஒரே நோக்கத்திற்காகவே!

இந்திய அரசைச் செயல்படத் தூண்டும் ஒரே இலட்சியத் துக்காகவே!

இதோ ஒரு கவிஞர் எனக்கு ஒரு பாடல் தீட்டியனுப்பி யிருக்கிறார், பார்! நீறணி பவளக்குன்றன் என்பது அவர் பெயர்!

சங்க காலப் புலவர் போலத் தமிழ் தொடுத்துக் கவிதை புனையும் ஆற்றலுடையவர்;

இலங்கைத் தமிழரைப் பாதுகாத்திட ஏதோ பெயரளவில் போராட்டம் என்பதெல்லாம் போதாது. உறுதியும் உணர்ச்சியுமிக்க பெரும் போராட்டமொன்று தேவை. இல்லையேல், எந்தப் பயனுமில்லையென்று அழுத்தமாகக் கூற வந்தவர், எனக்கும், உனக்கும் தேர்தல் முடிவு குறித்து தேறுதலும், ஆறுதலும் எந்த முறையில் தீட்டியுள்ளார் என்பதையும் சிந்தித்திடுக! இதோ அந்தப் பாடல்:-

கறுப்புச் சின்னம் கண்டனக் கூட்டம்
வெறுவெறும் ஆர்ப்பே! உறுபயன் இலவே!
நெருப்பிற் சூழும் ஈழம் காக்கப்
பொறுப்பிலை போலும் நினக்கே? தேர்தல்
இழப்பில் புலம்பினை கொல்லோ? ஈதொரு
இழப்பா? நகைப்பே! இளையா நகையே!
காலச் சூழலின் காலிடறலே!
ஆர வார அமர்க்களம் வீசி
பேரொடு புகழும் பேணலைக் கூசி
ஈர விழியிடை ஈட்டி பாய்ச்சும்
சோரச் சிங்களக் கொடுமை தீர்க்க
போர்முர சறைக! அறைக! இன்றேல்
கூரிலா வாளின் மழுங்கிச்
சோர்க! தீர்கநின் நேரிய புலமே!

உடன்பிறப்பே! அந்தக்காலத்து மன்னர்கள், புலவர்கள் தம்மைக் குறித்துப் பாடுவதைப் பெரும் பேறாகக் கருதினர்! அதனால்தான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், போர்முனை புகுமுன் சூளுரைத்தான், புலவர் பாடாது வரைக, என் நிலவரை என்று!

இந்தப் புலவரோ, இப்படிப் பாடி என் நெஞ்சையும், உன் நெஞ்சையும் துளைத்திடுகிறார்!

அவர் உணர்வைப் பாராட்டத்தானே வேண்டும்! நமது கடமையை நிறைவேற்றத்தானே வேண்டும்!

அதற்கான அழைப்பைத்தான் நமது பொதுச்செயலாளர் விடுத்துள்ளார்!

பொதுக் குழு

போராட்ட அறிவிப்பு மாநாடு!

அன்புடன்

மு.க.

15-03-1985

1295. கண்ணீர்த் துளிகள் - கண்டனக் கணைகள்!

உடன்பிறப்பே,

இன்று காலையில் எழுந்ததும் புரட்சிக் கவிஞரின் கவிதைப் புத்தகத்தின் மீது சென்றது நெஞ்சம். நான் படித்துப் படித்து, சொல்லிச் சொல்லி சுவைத்திட்ட வரிகள்தான்! இருந்தாலும், அந்தக் கவிதைகளை என்றும் போல் இன்றும் படித்துக் கொண்டிருந்தேன்.

கோழியும் தன் குஞ்சுதனைக்
கொல்ல வரும் வான்பருந்தைச்
சூழ்ந்தெரிக்க அஞ்சாத தொல்புவியில்...

இந்த வரிகளில் பொங்கும் வீரம் - வேகம் - துணிவு - தாய்ப் பாசம் - அடடா! எத்துணை எழுச்சியை ஊட்டுகிறது! பலமுறை படித்து மகிழ்ந்த கவிதைதான் இது! எனினும், சற்றுக் கண்ணை மூடிக்கொண்டு கற்பனை செய்தேன். புரட்சிக் கவிஞர் எத்தகைய காட்சியைத் தன் முன்னே பார்த்துவிட்டு, இந்த எழுத்தோவியம் தீட்டியிருக்க முடியுமென எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். விடையும் பின்வருமாறு கிடைத்தது.

பாவேந்தர் ஒருநாள் வீட்டின் கொல்லைப்புறத்தில் பல் துலக்கிக் கொண்டிருக்கிறார். அப்போதுதான் கூட்டிலிருந்து திறந்து விடப்பட்ட தாய்க் கோழியும், அதன் குஞ்சுகளும் இரை தேடி அந்தக் கொல்லையில் சுதந்திரமாகத் திரிகின்றன. அவற்றின் பரபரப்பை நமது கவியரசர் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருக்கிறார். தாய்க்கோழி, தனக்கும் இரை தேடிக் கொண்டு, தனது குஞ்சுகளுக்கும் இரை கிடைக்கிறதா என்பதை அவ்வப்போது ஆவலுடன் நோக்கிடும் காட்சியை

அவர் கண்டு, பறவைகள் குடும்பத்திலும் பாசம் பெருக் கெடுத்திடுவதை வியந்து போற்றுகிறார். அப்போது மேலே வானத்தில் பருந்தொன்று வட்டமிடுவதையும், அவர் காணத் தவறவில்லை. தாய்க் கோழியும், அதன் குஞ்சுகளும் தரையில் கிடைக்கும் தீனிக்காக அலைகின்றன! வானத்தில் வட்டமிடும் பருந்தோ, அந்தக் குஞ்சுகளையே தன் காலால் பற்றிச்சென்று காலை விருந்தை முடித்துக்கொள்ள நேரம் பார்த்துக் கீழே குறி வைத்துப் பறந்து பாயத் துடித்துக் கொண்டிருக்கிறது.

பாரதிதாசன் மிகுந்த பதட்டத்துடன், வைத்த விழி வாங்காமல் கிணற்றோரம் நிற்கிறார்.

வான்பருந்து, விர் என்று தன்னை ஒரு கணையாக மாற்றிக் கொண்டு கீழ்நோக்கி வருகிறது!

தாயைச் சுற்றிச் சுற்றி இரை தேடிக்கொண்டிருக்கும் அந்தப் பூப்பந்து போன்ற அழகான குஞ்சுகளில் ஒன்றை, அந்தப் பருந்து அடித்துக் கொண்டு போகப் போகிறது!

ஆகா! அதற்குள் அந்தக் குஞ்சுகளைத் தன் இறக்கை களுக்குள் மூடியவாறு, வான்பருந்தை எதிர்த்துக் கிளம்பி விடுகிறது அந்தத் தாய்க்கோழி!

பாய்ந்து பறந்து வந்த வேகத்தில் குஞ்சுகளில் ஒன்றை யேனும் கால்நகத்தால் பற்றிக் கொள்ள முடியாமற் போன வான் பருந்து, ஏமாற்றத்துடன் மீண்டும் விண்ணை நோக்கிக் கிளம்புகிறது.

இந்த அரிய காட்சிதான் நமது அரிமாக் கவிஞரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. உடனே உதயமாயிற்று கவிதை!

கோழியும் தன் குஞ்சுதனைக்
கொல்ல வரும் வான்பருந்தைச்
சூழ்ந்தெரிக்க அஞ்சாத தொல்புவியில்...

என்ற வீரப்பாடல் நமக்குக் கிடைத்தது! தனது குஞ்சுக்கு ஆபத்து என்றதும் தாய்க் கோழிக்கு ஆத்திரம் கொப்பளிக்கிறது! வீரம் பிறக்கிறது! வேகம் கிளம்புகிறது! பருந்தினை எதிர்த்திடத் தனக்கு வலிவுண்டா என்று ஆலோசித்திட நேரமின்றி, விரைந்து செயல்படுகிறது! அதுதானே தாயன்பு!

கோழிக்கே, தன் குஞ்சுதனைக் காப்பாற்ற வேண்டுமென்ற தாயன்பு, வீரமாகப் பெருகிடும்போது - குஞ்சுகளைப் போலச் சிங்களப் பருந்துகளிடம் சிக்கிடும் இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திடும் பாச உணர்வு, இந்தத் தாய்த் தமிழகத்துக்கு ஏற்படுவது தவறா?

தவறு எனில், அந்தக் கோழியினும் கீழானவரோ நமது தாயகத்துத் தமிழர்?

விழிநீரைத் துடைத்துக் கொண்டு, அருகில் இருந்த தினகரன் இதழைப் பிரித்துப் பார்த்தேன்.

மத்திய மந்திரியுடன் கோபால்சாமி மோதல்
என்று பெருந்தலைப்பொன்று காணப்பட்டது!
மோதலா? ஏன்? எதற்காக? எனும் அவாவுடன்
படித்தேன்!

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில், இந்திய அரசு காட்டும் மெத்தனப் போக்கைக் கண்டித்துத் தம்பி கோபால் சாமி மாநிலங்களவையில் முழங்கியிருக்கிறார்.

இலங்கையில் தமிழர்களைக் கோழிக் குஞ்சுகளைப் போலக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்று கதறியிருக்கிறார்.

அதுகேட்டு மத்திய மந்திரி குர்ஷித் ஆலம் என்பவர் குறுக்கிட்டு,

கோழிக்குஞ்சை சாப்பிடுவது சைவமா? அசைவமா?

என்று கேலி பேசியிருக்கிறார்.

எங்கள் இனமக்கள் அங்கே செத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஜோக் அடித்துக் கொண்டிருக்கிறீர்கள்!

என்று தம்பி கோபால்சாமி, தழுதழுத்த குரலில் பதில் அளித்திருக்கிறார்!

உடன்பிறப்பே, பாரதிதாசன் கவிதையும் - பத்திரிகையில் வந்த செய்தியும் என் உள்ளத்தில் எத்தனை உணர்வுகளை எழுப்புகின்றன தெரியுமா?

கோழிக் குஞ்சுகளாக இலங்கையில் தமிழ் இனம்!
வான் பருந்தாக வன்கணார்களாம் சிங்கள இனத்தவர்!
தாய்க் கோழியாக நமது தாய்த் தமிழகம்!

இப்படிக் கருதி கொதிக்கும் வேளையில் தான் - கோழிக்குஞ்சை சாப்பிடுவது சைவமா? அசைவமா? என்று ஏகடியம் பேசுகிறார், இரண்டாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து நம்மை ஆளுகிற டெல்லிக்காரர்

இப்போதாவது புரிகிறதா! நாம் அவசரப்படவில்லை - ஆத்திரப்படவில்லை - மத்திய அரசை வீணாக எதிர்த்திடும் விவேகமற்ற வேகத்தைக் காட்டிடவில்லை. அதற்குமாறாக, மூன்றாண்டு காலப் பொறுமைக்குப் பிறகும் இலங்கைத் தமிழ் இனத்துக்கு விமோசனமில்லையே என்ற வேதனையைத்தான் வெளிப்படுத்துகிறோம்!

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்தான் போர்ப் படையாக மாறும் என்று குறள் அழுத்தமாகச் சுட்டிக் காட்டுகிறது!

அந்தக் கண்ணீர்த்துளிகள் கண்டனக் கணைகளாக மாறி - இந்திய அரசின் அலட்சியத்துக்கு எதிராகப் போர்முனை புகுந்திடத்தான், கழகப் பொதுக் குழுவும் போராட்ட அறிவிப்பு மாநாடும் 23, 24 சனி, ஞாயிறு நாட்களில் சென்னையில் கூடுகிறது!

பாசறை அமைகிறது! என் பாசமுள்ள உடன்பிறப்பே, படைவரிசையில் இடம் பிடிக்க விரைந்தோடி வா!

அன்புடன்

மு.க.

16-03-1985

1296. விழிகளை அருவிகளாக்கும் விகடன் கட்டுரைகள்!

உடன்பிறப்பே,

மார்ச் பத்தாம் நாள் எனத் தேதியிட்ட ஆனந்தவிகடன் இதழில், கதறி வரும் அகதிகளின் கண்ணீர்க் கதை என்ற தலைப்பில் தமிழகத்தில் வந்து குவியும் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களில் சிங்கள வெறியர்களின் தாக்குதலால் செத்தவர்கள் போக மிச்சமிருப்போரிடம் சௌந்தர பாண்டியன், கரிகாலன் எனும் இருவர் உருக்கமிகு உரையாடல் நிகழ்த்தி அது குறித்து விவரித்திருக்கிறார்கள். அவற்றில் சில பகுதிகளை உனக்கு அறிவிக்க விரும்புகிறேன். ஆம்! கண்ணீர்க் கதைகள் தான்! ஆனாலும் கற்பனையல்லவே - உண்மையிலேயே நடந்து கொண்டிருக்கிறதே, நமது உடன்பிறந்தார் வாழும் இலங்கைத் தீவிலே!

இதோ விகடனில் வந்தவை!

கரையில் நின்றவர்களெல்லாம், 'அதோ ஒரு படகு தெரியுது, 'இந்தப் பக்கம் ரெண்டு வருது' என்று பரிதாபமாய்க் கூடியபடி பரபரப்புடன் இருந்தனர். சற்று நேரத்தில் சூரியனை விரட்டும் இருள் வதங்கிய முகத்தில் அப்பியிருக்க, கருவட்டம் படிந்து மிரண்ட விழிகளோடு நிறை மாதக் கர்ப்பிணி பெண்களும், கைக் குழந்தைகளும், பச்சிளம் பாலகர்களுமாய்க் கரையேறித் தள்ளாடி மணலில் விழுந்தனர். ஏற்கனவே வந்து சேர்ந்த தெரிந்த முகங்களைப் பார்த்ததும், பேச வார்த்தைகள் இல்லாமல் வெடித்த குரலில் கதறி அழுததைப் பார்த்தபோது... ஓ... எவ்வளவு கொடூரமானவை! பார்க்கச் சகிக்காமல் அருகில் நின்ற போலீஸ்காரர் பக்கம் திரும்பிய போது, அவர் கண்களிலும் நீர்...! அவர் அதைச் சமாளிக்க ஆகாயத்தை வெறித்தபடி அண்ணாந்திருந்தார். கரையில் நின்ற அதிகாரிகள், படகுகளில் வந்தவர்களைப் பதிவு செய்யும்

'மகாவீர் தர்ம சாலா சத்திரத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தனர்.

ஊரையே ராணுவம் வளைத்துத் தீ வைப்பதையும்... துடிதுடிக்க இளைஞர்களைச் சுட்டு, முச்சந்தியில் டயர்களைப் போட்டுத் தீ வைப்பதையும்... நேரில் பார்த்தவர்கள் இன்னும் அந்த மிரட்சியிலிருந்து விடுபடாமல் அரண்டு போயிருக் கின்றனர்.

பாலஸ்தீனத்திலும், வியட்நாமிலும் நடந்த வெறியாட்டம் தோற்றுப் போகும் அளவுக்கு, இலங்கையில் கொலைவெறி தலைதூக்கி நர்த்தனமாடுவது ஒவ்வொருவரின் நடுங்கிய குரலிலும் எதிரொலித்தது.

எனட்டாவிலிருந்து வந்துள்ள எட்டாம் வகுப்பு படிக்கும் பன்னிரண்டு வயது சிறுமி மஞ்சுவிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அவள் மழலையில் மிரண்டு மிரண்டு சொல்கிறாள்:

நான் இஸ்கூலுக்கு போகும்போது ஜீப்பில் ஆமி ஆர்மி வந்தது. அப்பம்மா, நான் எல்லாம் ஒரு இருக்கில் ஒளிஞ்சு கொண்டம். புத்தகப் பைகளோட வந்து எண்ட பொடியன் களைச் சுட்டார்கள். மாரெல்லாம் ரத்தம். கீழே கிடந்த பொடியன்கள் கால் மேலே ஜீப் ஏறிப்போச்சு. சடசடன்னு சத்தம் கேட்டுச்சு. நான் கண்கள மூடிக்கிட்டன். அப்புறம் நான் வீட்டை விட்டு வெளியேற மாட்டேன். பள்ளிக்கு போறதில்லை. வீட்டில் சாப்பிட எதுவும் இல்லாமல் பட்டினியாகக் கெடப்போம். எப்பவாவது அம்மா சமையல் பண்ணும். அப்ப வெடிச் சத்தம் கேட்கும். புறக்கடை வழியா எல்லாம் காட்டுக்குள் ஓடிப் போய் படுத்துக் கொள்வம். காட்டுக்குள் ஆமி வராது. அங்க டைகர் அங்கிள்ஸ் இருப்பாங்கண்ணு பயம்.

ஒருநாள் அடம்பல்ல தமிழாள்களைச் சுட்டு, பொணங் களை எங்க வீட்டு வழியா லோரிகளில் ஏற்றி வந்தார்கள். லோரிகள் போன பாதை எல்லாம் சொட்டுச் சொட்டா ரத்தம் கிடக்கும். நான் இனி அங்கு போக மாட்டேன். என் புத்தகங்கள், நோட்டெல்லாம் கொண்டு வந்திட்டன். சிங்களப் பிள்ளையள் எங்களப் பார்த்தால், தமிழ்ப் பிள்ளையளெண்டு கதைக்காதுகள்... என்று கைகளை விரித்து மஞ்சு சொல்லிக் கொண்டிருந்த போது, உதடுகளும் விரல்களும் லேசாய் நடுங்கியபடி இருந்தன.

இரண்டு மாத கைக்குழந்தையுடன் அப்போதுதான் படகிலிருந்து இறங்கிய புனிதம் நெடுங்கண்டல்/அடம்பை தலைவிரிகோலமாய், தலையிலும், உடம்பிலும் மணல் துகள் படிய வந்து நின்றார்.

ஐயோ, ஆண்டவனே! நாங்கள் பட்ட கொடுமை சொல்ல ஆயுள் போதாது. எங்களொத்த வயசுக் கொமருகளை, பெண்களை ராணுவம் தூக்கிக் கொண்டு போய்க் கெடுத்து நாசம் பண்ணுகிறது. எங்கள் வீட்டைச் சுற்றி பதினைந்து பேரை இப்படி நாசம் பண்ணினார்கள். என் தோழி, ஒருத்தி அவமானத்தில் செத்துப் போனாள். என் அண்ணனைப் பிடரியில், அடித்து ராணுவம் இழுத்துப் போனது. என்ன ஆச்சோ தெரியலை என்று அவர் சொல்லும்போது வார்த்தைகள் உடைந்து அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

தாழ்பாடு பி. ஐஸ்டீன்திரம் சொல்லும்போது,

எங்கள மீன் பிடிக்க விடமாட்டாங்க. எத்தனை நாளைக்குப் பயந்து கொண்டு கிடப்பம்? தேடுதல் வேட்டை என்று சொல்லி, விடுதலைப் புலிகளைப் பிடிப்பதாகச் சொல்லி, அப்பாவிகளைச் சுட்டுக் கொல்கிறார்கள். கொள்ளையடிப்பதற்கும், கற்பழிப்பதற்கும்தான் இவர்கள் 'தேடுதல் வேட்டை' என்று சொல்லி ஊருக்குள் இறங்குகிறார்கள். மொத்தம் 500 பேர் வரை ஜீப்புகளிலும், ராணுவ வண்டிகளிலும் வருவார்கள். வந்து ஊருக்கு அப்பால் வண்டிகளை நிறுத்திவிட்டு முந்நூறு பேர் ஊரைச் சுற்றி வளைத்துக் கொள்வார்கள். மீதமிருப்பவர்கள் ஊருக்குள் நுழைந்து கொள்ளையடிப்பார்கள். 'பாம்' வைப்பார்கள். யாரும் தப்பி ஓட முடியாது. பிணத்தையும் யாரும் போய்த் தூக்கக்கூடாது... என்றார் விரக்தியுடன்.

டாக்டர் செல்வ மகேந்திரன், விடுதலைப் புலிகளுக்கு மருத்துவம் பார்த்ததாகக் காரணம் சொல்லி, அவரைக் கைது செய்துகொண்டு போய் படாதபாடு படுத்தியுள்ளார்கள். ஐந்தரை அடி நீளம், ஒன்பதடி அகல அறைக்குள் பத்துப் பதினைந்து பேரைப் போட்டு அடைத்து வைப்பார்கள். ரப்பர் பையில் மணலை நிரப்பி முதுகுத் தண்டில் அடித்தார்கள். நெருப்பால் சுட்டார்கள் என்று அவர் கூறினார்!

மண்டபம் அகதிகள் முகாமிலுள்ள வயோதிக மாது ரோசலின். வசந்த காலத்தை அமைதியாகக் கழித்த இந்த அம்மாளுக்கு

முதுமைக் காலத்தில் ஒரு கசந்த வரலாறு - கண்ணீர்க் கதை. மன்னார் மாவட்டத்திலே பேசாலை என்ற பேரூர் பிரேதக் களையுடன் பிரலாபித்துக் கொண்டிருக்கிறது. இங்குப் பல உயிர்களைக் கொய்திருக்கின்றன சிங்கள ராணுவத்தின் குண்டுகள். ஜனவரி 31 ஆம் தேதி வைகறைப் பொழுதிலே இங்கு விட்டக்கண்டல் என்ற கிராமத்தைச் சுற்றிவளைத்து மக்களின் உயிரை சூறையிட்டது சிங்கள ராணுவம். நரையும் திரையுமாக நைந்து போன வயதினிலே, அநாதரவான ரோசலினுக்குத் தஞ்சம் இரு பேரப்பிள்ளைகள் - முகை விரிக்கும் பருவத்து இளமொட்டுகள் - பாடிப் பறக்கின்ற பிராயத்துச் சிட்டுகள் - தீயரின் குண்டுகளுக்குத் தீனியாயினர். பேரப்பிள்ளைகளின் பிணங்களையும் மூதாட்டியின் கைகளில் அளிக்க மறுத்தனர் ராணுவத்தினர். விடுதலைப் புலிகள் அவர்களைக் கொன்றதாக வாக்குமூலம் எழுதித் தரும்படி கிழவியை நிர்ப்பந்தித்தனர். நியாயம் கேட்ட தமிழ் டாக்டரும், அடுத்த குண்டு உனக்கு என்று அச்சுறுத்தப் பட்டார். பேதலித்த மூதாட்டியார் யாருமற்ற அநாதையாகப் பிரமை பிடித்தவர்போல் படகில் ஏறி பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

உடன்பிறப்பே, இந்த நெஞ்சுலுக்கும் செய்திகளைத் தொகுத்துக் கொடுத்துள்ள அவர்கள் இறுதியாக என்ன முடிவுரை எழுதுகிறார்கள் தெரியுமா? விகடன் இதழில்!

இலங்கையில் தமிழ்மகனுக்கு உயிர் வாழ உத்தரவாதம் இல்லை. இந்த உண்மை, படகுப் பயணிகளைத் தாங்கி வரும் பாக் ஜலசந்தியின் அலையோசையிலே பட்டவர்த்தனமாகக் கேட்கிறது.

- கரிகாலன்.

நாளுக்கு நாள், பாரத மாதாவின் பாதத்தினடியில், புரையோடிக் கொண்டிருக்கும் இந்தப் புண், எப்போது எந்த சிகிச்சையால் ஆறும் என்பது எல்லோராலும் கேட்கப்படும் ஒரு கேள்வியாகிவிட்டது. நாட்பட்டுப் புரையோடிவிட்ட புண்ணுக்கு, அறுவை சிகிச்சைதானாம் வைத்தியம். அது எப்போது என்றுதான் எதிர்பார்த்தபடி இருக்கிறார்கள்.

- ஏ.சௌந்தரபாண்டியன்.

உடன்பிறப்பே, இனியும் இந்திய அரசு, வாய்மூடி மௌனியாக இருக்குமேயானால், நமது இனமே இலங்கையில் அழிந்து விடுமன்றோ?

இனம் காத்திடவும் - இந்திய அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்திடவும்தான் நமது போர்க்குரல்!

அதற்குத்தான் பொதுக்குழு கூடுகிறது!

போராட்ட அறிவிப்பு மாநாடு நடைபெறுகிறது!

இத்திங்கள் 23, 24 சனி, ஞாயிறு கிழமைகளில்,
சென்னையில்!

வா! வந்து சீரிய கருத்துகளை வழங்கு!

அன்புடன்

மு.க.

17-03-1985

1297. மலிவாகிப் போனதய்யோ! தமிழன் உயிர்!

உடன்பிறப்பே,

சென்னை தியாகராய நகர்ப் பகுதிச் செயலாளர் பழக்கடை ஜெயராமன், படத் திறப்புவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகக் கழகம் நடத்த இருக்கும் போராட்டம் குறித்தும், அதுபற்றிக் கலந்துரையாடி முடிவெடுக்கப் பொதுக்குழு கூடுவது குறித்தும் விளக்கமளித்துப் பேசியுள்ளேன்.

களமெனில் கலங்காது, அதனைக் கனியிடையேறிய சுவையாகவும் - காய்ச்சுப்பாகிடை ஏறிய ருசியாகவும் கருதுகிற, வீரத்திருமகனின் படத் திறப்பு நிகழ்ச்சியல்லவோ அது!

அதனால்தான், கழகத்தின் களம்புகுகாதை பற்றி, அந்த இடத்தில் பேசினேன்.

சிறைச்சாலை நோக்கிச் சிரித்த முகத்துடன் ஒருமுறை யல்ல - பலமுறை சென்று, அங்கேயும் அரிமா என தோளுயர்த்தி உலவிய அஞ்சாநெஞ்சன் பழக்கடை ஜெயராமனின் படத்தருகே நின்று கொண்டு போர்ப்பரணி பாடிய போது, அந்தத் தளபதியில்லையே என்ற ஏக்கத்தில் என் நா தழுதழுத்தது. சொற்கள், இதழ்க் கதவுகளில் முட்டித் தடுமாறின. இமைகளோ, நனைந்து திணறின. ஆயினும் உடன் பிறப்பே, அந்தச் சோகத்திலே கூட அந்த மறத் தமிழனின் நெஞ்சுறுதியை எண்ணி நான், நிமிர்ந்து நின்று இலங்கைத் தமிழர்க்காக நாம் நடத்த இருக்கும் போராட்டம் குறித்து உரை நிகழ்த்தினேன்.

ரயில் கட்டணம் உயர்ந்து விட்டது! பேருந்துக் கட்டணம் உயர்ந்து விட்டது! டாக்சி, ஆட்டோ கட்டணங்கள் உயரப் போகின்றன! மண்ணெண்ணெய் விலை உயர்ந்து விட்டது! ஏழை எளியோரை வதைக்கிற அளவுக்கு வரிகளும் உயர்ந்து, விலைவாசிகளும் உயர்ந்து விட்டன!

நடந்து முடிந்த கடந்த பொதுத் தேர்தலில், வாக்காளர்கள் வழங்கிய தீர்ப்புக்கு அவர்களுக்குக் கிடைத்த பரிசு இது!

ஆம்! கட்டணங்கள் உயர்ந்து, விலைகள் உயர்ந்து எல்லாமே கிராக்கியாகி விட்டதை எதிர்த்து, ஏழைகளுக்காக மற்ற மாநிலங்களில் நடப்பது போல, இங்கே ஒரு போராட்டம் நடத்த வேண்டாமா? இப்படியொரு கேள்வி நம்முடைய கழகத்தை நோக்கிக் கேட்கப்படலாம்! அலட்சியப்படுத்தக்கூடிய வினா அல்ல!

ஆனால் ஒன்று! கிராக்கியாகிவிட்ட பொருள்களுக்காக வருந்தி, கண்டித்துப் போராடுவது தேவைதான் எனினும் - இலங்கையில் மலிவாகப் போய்விட்ட தமிழன் உயிருக்காகப் போராடுவதுதான் முதல் காரியம் என்று நான் கருதுகிறேன்.

முதலில் இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திட முனைவோம்!

இந்த நேரமும் அயர்ந்து இருந்துவிட்டால் - அடியோடு நமது இனம், இலங்கையில் ஒழிந்தே போய்விடும்!

எனவே இலங்கையில் தமிழ் இனத்தைக் காத்திடும் பிரச்சினை முதலில்!

அதற்கடுத்தே மற்ற பிரச்சினைகள்!

இங்கு பிரச்சினைகளா இல்லை? ஏராளமாக இருக்கின்றன!

அவைகளைப் புறக்கணித்துவிட்டு, நாம் ஒதுங்கி விடவும் முடியாது! ஒதுங்கவும் கூடாது!

1983ஆம் ஆண்டிலேயே நாம் எடுத்த முயற்சிகள் - எடுத்து வைத்த கருத்துகள் ஏற்கப்பட்டிருக்குமேயானால், இலங்கைத் தமிழ் இனம் இந்த அளவுக்கு சீரழிந்திருக்காது!

நமது கருத்துகள் எள்ளி நகையாடப்பட்டன! முட்டாள்தனமானவை என்று விமர்சிக்கப்பட்டன! நாம் நடத்திய இயக்கங்கள் கேலிக்குரியவை என்று பேசப்பட்டன!

ஆனால் இன்று! இந்தப் பிரச்சினையில் நம்மைக் காட்டிலும் வேகமாகப் பேசுவோர் - தீவிரமாகச் சிந்திப்போர் - அன்று நம்மை இகழ்ந்தோர் வரிசையிலேயே இருப்பதைக் காண முடிகிறது!

அதுவும் ஒரு வகையில், வரவேற்கக் கூடியதுதான்!

இன்றுள்ள ஒரே வழி - இலங்கைத் தமிழனைக் காப்பாற்ற மத்திய அரசிடம்தான் இருக்கிறது!

அந்தப் பொறுப்பை நிறைவேற்றிட, இந்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்த முடியும்! வற்புறுத்த முடியும்! ஒரு மாநில அரசினால் எந்த அளவுக்குப் போக முடியும் என்பதை நான் அறியாதவனல்ல!

அதனால்தான் மத்திய அரசு, உடனடியாகத் தனது கடமையைத் தீவிரமாக, விரைவாகச் செயல்படுத்த முனைந்திட வேண்டுமெனக் கழகம் போர்ப்பிரகடனம் செய்கிறது!

இது, மத்திய அரசுடன் மோதிக் கொள்வது அல்ல!

மத்திய அரசின் கவனத்தை, இலங்கைத் தமிழர் பக்கம் திருப்புவதற்காக!

இப்போது மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் போதாது!

புண்ணுக்குப் புனுகு பூசிடும் மருத்துவம்தான், இரண்டரை ஆண்டுக்காலமாக நடைபெறுகிறது!

இந்த முறை மாற்றப்பட வேண்டும்! மேலும் தீவிரமான நடவடிக்கை தேவைப்படுகிறது!

அந்த நடவடிக்கைக்கு மத்திய அரசை வற்புறுத்தவே, கழகத்தின் சார்பில் போராட்ட திட்டம்!

பெரியார் திடலில் பொதுக்குழு! தீரமான முடிவுகள் நிச்சயம் எடுக்கப்படும்!

கடற்கரையில் காந்தியடிகள் சிலையருகே திறந்தவெளி மாநாடு!

எந்தப் போராட்டமாயினும், அது அறவழியில், அமைதி வழியில் நடைபெறும் என்பதற்கு அடையாளமாக!

மீண்டும் கூறுகிறேன். இது யாருடனும் மோதிக்கொள்ள அல்ல! இலங்கைச் சிங்களவர் வெறியாட்டத்திலிருந்து தமிழ் இனத்தைக் காத்திட, மத்திய அரசின் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் - தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே!

மற்றவை, பொதுக்குழுவில் உன்னைச் சந்திக்கும்போது; விரிவாக - விளக்கமாக!

அன்புடன்

மு.க.

21-03-1985

1298. வெற்றித்தோள் எங்கே?
வீரஞ்செய்கின்ற தமிழ் மூச்சு எங்கே?

உடன்பிறப்பே,

திங்களொடும் செம்பரிதி தன்னோடும்
விண்ணோடும்
உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம்
நாங்கள் ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்று
சிறியோர்க்கு ஞாபகம்செய்
முழங்கு சங்கே!

புரட்சிக் கவிஞரின் இந்தச் சங்கநாதத்தை எத்தனை மேடைகளில் முழக்கியிருக்கிறோம் - நமது அண்ணன் எத்தனை எழுத்தோவியங்களில் இதனை இணைத்து நம்மை எரிமலைகளாக ஆக்கி எழுச்சிபெறச் செய்திருக்கிறார்.

சிறியோர்க்கு ஞாபகம்செய் முழங்கு சங்கே!

இந்த வரியில் சிறியோர்க்கு என்பதற்குப் பதிலாக சிங்களவர்க்கு என மாற்றிக் கொண்டு சங்கம் முழங்கிட வேளை வந்துவிட்டது!

கதிரோடு, நிலவோடு, கடலோடு, விண்ணோடு, விண் மீன்களோடு பிறந்த தமிழோடு பிறந்த இனம் தமிழ் இனம் என்று நிமிர்ந்து நின்று பேசும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாம் ஆண்மைச் சிங்கத்தின் கூட்டமென்றல்லவா அறைகூவல்

விடுக்கிறார்! ஆம்! என்று கவிஞர் முழக்கத்துக்கு இலக்கணமாக இந்த இனம் எழுந்திட வேண்டாமோ?

ஈட்டியின் பாய்ச்சல் கண்டு, இமை கொட்டியவன் கோழை எனக் கூறிக் களம் புகுந்துக் குருதிப் புனலாடி, பிறந்த மண்ணுக்காக இறுதி மூச்சினை வழங்கிடும் வீர மரபில் வந்தவரன்றோ நாம்!

ஏறத்தாழ இரண்டரை ஆண்டுக் காலமாக, பல்லாயிரம் தமிழ் மக்கள் - முதியோர், இளையோர், மகளிர், மழலைகள் என்றெல்லாம் வேறுபாடு இல்லாமல் இலங்கைத் தீவிலே படுகொலை செய்யப்படுகிறார்கள்.

இந்தத் தாயகத்துத் தமிழர்களாம் நாமோ பல்வேறு கொள்கை கொண்ட கட்சிகளாகப் பிரிந்து நின்றாலும், இலங்கைத் தமிழரைக் காத்திடும் உணர்விலும் ஒன்றுபட்டுத்தான் நிற்கிறோம்!

இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் எங்கள் இனத்தைக் காத்திடுக! என்று இந்தியப் பேரரசை வலியுறுத்திட இங்குள்ள கட்சிகள் வகுத்துக் கொண்ட போர் முறைகள் வெவ்வேறாயினும் உணர்வு ஒன்றேதான்!

கடைகளையெல்லாம் அடைத்து நமது உணர்வை ஒருநாள் வெளிப்படுத்தினோம்!

அடுத்த நாள் கடைகளைத் திறந்துவிட்ட காரணத்தால், நமது உணர்வலைகள் அத்துடன் ஓய்ந்துவிட்டன என்று அர்த்தமல்ல!

ரயில்கள், பேருந்துகள் ஒருநாள் நிறுத்தப்பட்டு போக்குவரத்தே ஸ்தம்பித்துப் போயிற்று!

மறுநாள் அவைகள் ஓடிய காரணத்தால், நமது உணர்வுகளும் ஓடிவிட்டன என்று பொருள் அல்ல!

நண்பர் நெடுமாறன் தியாகப் பயணம் மேற்கொண்டார் - அந்த நிகழ்ச்சி முடிந்துவிட்ட காரணத்தால் - அத்துடன் அந்த உணர்வுகள் பட்டுப் போய்விட்டன என்று யாரும் கூறிட மாட்டார்!

திராவிடர் கழகத்தினர் தளபதி வீரமணி தலைமையில் சுதந்திர நாளன்று - தமிழகமெங்கும் துக்கநாள் கடைப் பிடித்தனர் - அதற்கடுத்த மறுநாள் இன்ப நாளாகிவிட்டது எனக்கருதிடும் கருத்துக் குருடர் எவரும் இருந்திட மாட்டார்!

இலங்கையின் இருட்டுச் சட்டத்தை தமிழகமெங்கும் கொளுத்தினோம். மறுநாளும் தொடர்ந்து கொளுத்தவில்லை யென்பதற்காக, அந்த உணர்வை ஒதுக்கித் தள்ளி விட்டோம் என எவர்தான் உரைத்திடுவர்!

நண்பர் எம்.ஜி.ஆரும், அவர் தலைமையில் உள்ள ஆளும் கட்சியினரும் ஐந்தாறு மாத காலம் கருப்புச் சட்டையே அணிந்தனர். அவற்றைப் பின்னர் கழற்றிவிட்டு வெள்ளைச் சட்டை அணிந்த காரணத்தால், இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்ந்து விட்டது என அந்தக் கட்சியினர் ஏற்றுக் கொண்டதாக எவரும் கூறிடார்!

இரண்டு கோடித் தமிழர்களின் கையொப்பங்களைப் பெற்று ஐ.நா. மன்றத்துக்கு அனுப்பி வைத்தோம். அதுவும் தமிழ் மக்களின் உணர்வை வெளிப்படுத்திடத்தான்!

அந்த உணர்வின் அடிப்படையில்தான் பேராசிரியரும், நானும்கூடச் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை அடையாள பூர்வமாகத் துறந்தோம் - அப்பதவிகளில் மீண்டும் தேர்ந் தெடுக்கப்பட்டு அமர்ந்திருப்பதால், அந்த உணர்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு விட்டது என மூடரும் கூடப் பேசிடத் துணியார்!

எனவே 1983 ஜூலைத் திங்களில், இலங்கையில் தொடங்கிய இனப்படு கொலையைக் கண்டித்தும் - அது மேலும் தொடரா வண்ணம் அங்குள்ள தமிழர்களைப் பாதுகாத்திட மத்திய அரசு முன் வரவேண்டுமென வற்புறுத்தியும், இங்குள்ள ஆளும் கட்சியினர் அவர்கள் நிலைக்கேற்றவாறும் - எதிர்க் கட்சியினர் அவரவர்களின் நிலைக்கேற்றவாறும் பல்வேறு வகைகளில் - பல்வேறு கட்டங்களில் - அறப்போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த போதிலும், உசிதமெனத்தோன்றிய ஒவ்வொரு முறையிலும் உணர்வுகளை வெளிப்படுத்தி வந்த போதிலும், இன்னமும் இந்தியப் பேரரசு தனது ஆழ்ந்த நித்திரையைக் கலைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை! உண்மையிலேயே உறங்குபவனை எழுப்பி விட முடியும்!

தமிழ் இனம்தானே அழிகிறது. அதனால் என்ன வந்து விட்டது - அழிந்து தொலையட்டுமே - என அக்கறையற்றுக் கிடக்கும் டெல்லி ஆட்சியாளரின் கண்களைத் திறக்க, மீண்டும் களங்கள் அமைவதைத் தவிர, வேறு வழியில்லை!

எட்டாயிரம் கோடி ரூபாயை பட்டாளத்துச் செலவுக்காக ஆண்டுதோறும் ஒதுக்கி அறிவித்திடும் இந்திய அரசின் காதுகளில், இலங்கைத் தமிழ் இனம், சிங்கள மலைப்பாம்பின் வாயில் சிக்கித் தவித்து எழுப்பிடும் அபயக்குரல் விழவில்லை யென்றால், அந்தச் செவிப்பறைக் கிழியுமளவுக்கு நமது போர்க்குரல் சங்கநாதமாக ஒலிக்க வேண்டாமா?

இல்லையேல், ஆண்மைச் சிங்கத்தின் கூட்டமென்று பாவேந்தர் தமிழ் இனம் குறித்துப் பாடியது வெறும் சொற்குப்பை ஆகிவிடாதா?

வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள் - என்றாரே அந்தத் தோள்கள் எங்கே?

வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்
செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சு

என்றாரே; அந்த மூச்சு எங்கே? இதற்கெல்லாம் பதில் அளிக்கத்தான் நமது பாசறையாம் பொதுக்குழு கூடுகிறது! போராட்ட அறிவிப்பு மாநாடு நடைபெறுகிறது!

திட்டங்களைத் தீட்டித் தருவதற்கு என் தியாகத் திருஉருவே! வருக! வருக!

அன்புடன்

மு.க.

22-03-1985

1299. அமையட்டும், அறப்போர் பாசறைகள்!

உடன்பிறப்பே,

சென்னைக் கடற்கரைத் திறந்தவெளி மாநாட்டில், அறிவிக்கப்பட்ட அறப்போராட்டங்களுக்கான ஆயத்தப் பணிகளில், உன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஏப்ரல் 15ஆம் தேதிக்குள்ளாகக் கையெழுத்து இயக்கம் முற்றுப் பெற்றாக வேண்டும். போராட்ட வீரர்களின் பட்டியலும் அதற்குள்ளாக மாவட்டக் கழகச் செயலாளர்களின் கைக்கு வந்தாக வேண்டும்.

இனமானப் போர்வாளாம் புரட்சிக் கவிஞர் பாரதி தாசனின் பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் தேதி அறப்போர் மறியல் தொடங்குகிற காரணத்தால் - ஏப்ரல் 17ஆம் தேதியன்று சென்னையில் மாவட்டக் கழகச் செயலாளர்களின் கூட்டம் நடைபெற இருக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு வருகிற மாவட்டக் கழகச் செயலாளர்கள், தமிழ்ப் பெருமக்களிடம் கையெழுத்துப் பெற்ற பட்டியலையும், அறப்போர் மறியல் போராட்ட வீரர்கள் பட்டியலையும் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தால்தான், பொதுச்செயலாளர் அறிவித்துள்ள தேதி வாரியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் சுற்றுப் போராட்டத்திற்கான ஊர்கள், மறியல் நடைபெறும் மத்திய அரசின் அலுவலகங்கள், மறியலில் கலந்துகொள்ளும் அணியினர் யார் யார் என்பது குறித்த விபரங்களை முன்னரே வெளியிட்டு, அவற்றுக்கான ஏற்பாடுகளைச் செவ்வனே செய்வதற்கு வசதியாக இருக்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும், நான் வருகிற நாட்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. நான் வந்து கலந்து கொண்டு

உரையாற்றுகிற நகரங்கள் அல்லது ஊர்களின் பொதுக் கூட்டங்களே மட்டுமன்றி, நம்முடைய கழகத்தின் தலைவர்கள், முன்னணியினர், சொற்பொழிவாளர்கள் - கலந்து கொள்கிற பொதுக் கூட்டங்களையும் ஆங்காங்கு ஏற்பாடு செய்து, அறப்போராட்டத்திற்கான விளக்கங்களைப் பொது மக்களுக்கு விரிவாகத் தந்திட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

கையெழுத்து இயக்கம் - நமது போராட்டத்தின் முதற் கட்டமாகும்! முதலில் ஐ.நா. மன்றத்திற்கு நம் கழகத்தின் சார்பில் ஒரு கோடிக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் கையெழுத்துக் களைப் பெற்று அனுப்பி வைத்தோம் எனினும் - இப்போது நாம் நடத்துகிற இந்த இயக்கம்; இலங்கையில் சுதந்திரத் தமிழ் ஈழம் அமைவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும், அதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்பதையும் வலியுறுத்துகின்ற ஒன்றாகும்.

நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ, அன்றி அது மாதிரியான நோக்கங்களால் பாதிப்புற்ற மனநோயாளி களோ அல்லர். மாறாக, விடுதலையை முன் வைத்துப் போராடும் ஒரு இயக்கத்தில் அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள்.

கொழும்பு நீதிமன்றத்தில், 1983ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் தலைவன் தங்கதுரை ஆற்றிய வீரஉரையிது!

அந்த வழக்கைத் தொடர்ந்து சிறையிலே இருந்த தங்கதுரை, குட்டிமணி, ஜெகன், மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட விடுதலை இயக்க வீரர்கள் கொட்டடிக்குள்ளே வைத்துக் கொலை செய்யப்பட்டதும், இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளானதும், அந்த விடுதலைப் போராட்டம் இன்றளவும் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருப் பதும் - தமிழினமே இலங்கையில் அறவே அழிக்கப்படவேண்டு மென்ற திட்டத்துடன் சிங்கள அரசு செயல்படுவதும் - உலகறிந்த உண்மைகள்!

1983இல் அமெரிக்க வார இதழ் டைம் இலங்கையில் பிரிவினையென்பது நடைமுறையில் உண்மையாகிவிட்டது என எழுதியது.

அதே கால கட்டத்தில், மற்றொரு அமெரிக்க இதழான நியூஸ்வீக், ஜெயவர்த்தனே தனது நடவடிக்கைகளின் மூலம் இலங்கையில் தனியாக ஒரு தமிழ் நாட்டை உருவாக்குகிறார் எனக் குறிப்பிட்டது.

அந்த ஆண்டு சண்டே ஆங்கில இதழில் இனிமேல் சிங்களவர்களும், தமிழர்களும் ஒன்றாகச் சேர்ந்து வாழ முடியாது என்று அஜிஸ்ராய் என்பவர் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

1983க்குப் பிறகு இலங்கையில் வளர்ந்துவரும் நிலைமை என்ன? மேலும் மோசமாகிவிட்ட சூழல்தான்!

தமிழகம் நோக்கிச் சுமார் ஒரு லட்சம் அகதிகள்!

இலங்கையிலே நாள்தோறும் தமிழ் இனம் சித்ரவதைக்கு ஆளாகும் கோர நிகழ்ச்சிகள்!

இரண்டு ஆண்டுகாலமாக பேச்சுவார்த்தை என்று சொல்லியே காலம் கடத்தி விட்டது இந்திய அரசு!

பார்த்தசாரதி போனார் - திரும்பினார் - மீண்டும் போனார் - வந்தார்!

இப்போது பண்டாரி போனார். இலங்கை பிளவுபடக் கூடாது என்பதில், இந்தியா உறுதியாக இருக்கிறது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார் என்று செய்திகள் வருகின்றன.

இதற்கு என்ன பொருள்? நாள்தோறும் நமது இனத்தார் மண்டைகளைச் சிங்களவர் பிளக்கலாம் என்பதற்கு மறை முகமாக அனுமதி வழங்கிவிட்டு வந்திருக்கிறார் என்பது தானே!

உடன்பிறப்பே, இலங்கையில் தமிழர்களுக்கெனத் தனித் தமிழ்ஈழ நாடு ஒன்று அமைவதைத் தவிர, அங்கே தமிழ் இனத்தின் அழிவைத் தடுத்துக் காப்பாற்ற வேறோர் வழி இல்லவே இல்லை!

அதற்குரிய நடவடிக்கைகளை பங்களாதேஷ் பிரச்சினை யில் மேற்கொண்டது போல, உடனடியாக மேற்கொள்வதுதான் இந்திய அரசின் செயலாக இருந்திட வேண்டும்.

அதனை இந்திய அரசுக்கு உணர்த்துவதே நமது கையெழுத்து இயக்கத்தின் நோக்கம்.

அடியிற் கையொப்பமிடுகிற நாங்கள், இலங்கையில் சுதந்திரத் தமிழ் ஈழநாடு அமைவதை ஆதரிக்கிறோம். அதற்கான உரிய

நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்

இந்த கையெழுத்து இயக்கம், இந்திய அரசின் மூடிக்கிடக்கிற கண்களைத் திறக்கட்டும்!

நமது விளக்கக் கூட்டங்கள், தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை இலங்கையில் தமிழ் ஈழம் அமைப்பதற்குத் திரட்டட்டும்!

நாம் நடத்த இருக்கும் தொடர் மறியல் போராட்டம், இந்திய அரசின் கவனத்தை முழுமையாக இலங்கைப் பிரச்சினையின்மீது திருப்பட்டும்!

நேரில் வருகிறேன் உன்னைக் காண!

மாவட்டந்தோறும் அமையட்டும் நமது அறப்போர்ப் பாசறைகள்!

அன்புடன்

மு.க.

30-03-1985

1300. தமிழ் இனச் சிங்கமே! தயாராகுக!

உடன்பிறப்பே,

போராட்ட விளக்கப் பொதுக்கூட்டங்களில் முதல் கட்டமாகத் திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய ஊர்களில் கலந்து கொண்டு விட்டுச் சென்னை திரும்பினேன். மீண்டும் இந்தத் திங்கள் முழுவதும் விளக்கப் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள் இருக்கின்றன.

நான் சென்று வந்த நான்கு மாவட்டங்களிலும், நமது பாசறை வீரர்களின் எல்லையற்ற ஆர்வத்தையும், அவர்களை வழிநடத்தும் தளநாயகர்களின் உற்சாகத்தையும் எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

இலங்கையில் தமிழ் ஈழம் அமைவதை ஆதரிக்கிறோம் என்பதற்கான கையெழுத்து இயக்கத்தைக் கழக அமைப்புக் களின் நிர்வாகிகளும், கழக அணியினரும், சார்பு மன்றத்தினரும், கழக உடன்பிறப்புகளும் மிகப் பரவலாக நடத்தி வருகின்றனர். அதற்கானக் கையெழுத்துப் பெறும் படிவங்களை அச்சியற்றி, நமது உடன்பிறப்புகள் சுற்றிச் சுழன்று தமிழ்ப் பெருங்குடி மக்களிடம் ஈழத் தமிழகம் அமைந்திட வேண்டிய அவசியத்தை விளக்கிடும் பணியில் ஈடுபட்டிருப்பதை என்னால் பல இடங்களில் காண முடிந்தது.

வருகிற 17ஆம் தேதியன்று சென்னையில் நடைபெற இருக்கிற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில், அந்தக் கையெழுத்து இயக்கப் படிவங்களுடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

அறப்போராட்ட மறியல், புரட்சிக்கவிஞர் பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் தேதி முதல் தொடங்குகிறதல்லவா! அந்த மறியல் போராட்டத்துக்கான வீரர்கள் பட்டியலும் ஆங்காங்கு குவிந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

ஒருநாள் அடையாள மறியல் போராட்டமல்ல. தொடர் மறியல் போராட்டம் - ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு தேதி குறிப்பிடப்பெற்று, அந்த மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களில், எந்தெந்த அணியினர் கலந்து கொள்கின்றனர் என்கின்ற விவரங்கள் எல்லாம் தலைமைக் கழகத்தின் சார்பிலும், மாவட்டக் கழகங்களின் சார்பிலும் அறிவிக்கப்பட இருக்கிறது.

சென்னைக் கடற்கரையில் போராட்ட அறிவிப்பு மாநாட்டின்போதும் சரி, போராட்ட விளக்கப் பொதுக் கூட்டங்களிலும் சரி, தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளவாறே - இந்த அறப்போர் மத்திய அரசாங்கத்தின் மெத்தனத்தைக் கண்டித்தும், உடனடியாக இலங்கைத் தமிழ் இனத்தைக் காத்திட உரிய நடவடிக்கை எடுத்து, அங்கு தமிழர்கள் அமைதியாக வாழ்ந்திட, தமிழ் ஈழம் அமைந்திட வழி வகுக்குமாறு வற்புறுத்தியும் நம்முடைய கழகத்தின் சார்பில் நடத்தப்படுவதாகும்.

இந்த அறப்போருக்குத் தங்களின் ஆதரவு உண்டு என்று அறிவித்துள்ள திராவிடர் கழகத்துக்கும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சிக்கும், நண்பர் எஸ்.டி.எஸ். நடத்தும் கழகத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையே தமிழக அரசின் சார்பில் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், கழகம் உள்ளிட்ட இருபத்து ஐந்துக்கு மேற்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துத் தங்களின் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து, அதன் தொடர்பாக நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் விவாதித்திருக்கிறார்கள்.

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. அவர்களும், மதுரை ஆதீனகர்த்தர் அவர்களும், குமரிஅனந்தன் அவர்களும், அ.தி.மு.க.வின் மேலவை உறுப்பினர் ஜனார்த்தனம் அவர்களும் டெல்லிப்பட்டினத்தில் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தி, பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து மகஜர் ஒன்றையும் விரிவாக எழுதிக் கொடுத்து, விளக்கமும் அளித்துள்ளனர். அப்போது அமைச்சர் மரகதம் அம்மையாரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட இருந்திருக்கின்றனர்.

எனவே இலங்கைப் பிரச்சினையை வைத்து, யாருக்கோ தொல்லை கொடுக்கத் தி.மு.கழகம் போராட்டம் நடத்துகிறது என்ற சிலரது இழிதகைப் பிரச்சாரம் அடிபட்டுப் போய்விட்டது.

அந்தந்தக் கட்சிகளின் நிலைக்கேற்ப - சக்திக்கேற்ப - அதேபோல மாநில அரசு, தனது கடமை உணர்வுக்கேற்ப இந்தப் பிரச்சினையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது போலவே, தி.மு.கழகம் - இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வதற்கு தமிழ் ஈழம் அமைவது ஒன்றே வழி என்ற கருத்தினை அன்று முதல் இன்று வரை வலியுறுத்திப் போராடி வருகிறது.

இந்திய அரசு, கடந்த சில மாதங்களுக்கு முன்பு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காட்டுவதாகத் தெரிந்த அக்கறைகூட இப்போது இல்லையென்பதையும், அண்மைக்காலமாக மத்திய அரசின் நடவடிக்கைகள், தலைகீழாக மாறியிருக்கின்றன என்பதையும் நன்றாகவே புரிந்துகொள்ள முடிகிறது.

இதற்கு மாறாக, இலங்கை அதிபர் பாகிஸ்தான் அதிபரைச் சந்தித்துவிட்டு, இலங்கையைக் கம்யூனிச நாடாக்க முயற்சிகள் நடைபெறுவதாகவும், எங்கெல்லாம் ஆயுதங்கள் கிடைக்குமோ அங்கெல்லாம் ஆயுதங்களைப் பெற்று, இலங்கைத் தமிழர் கிளர்ச்சியை அடக்கப் போவதாகவும், இனிமேல் சமரசப் பேச்சுவார்த்தை எதையும் தமிழர் ஐக்கிய முன்னணியுடன் நடத்தப் போவதில்லையென்றும், இலங்கையில் தீவிரவாதிகளை ஒழிக்கப் பாகிஸ்தானும் ஒப்புக் கொண்டிருப் பதாகவும் அறிக்கை வாயிலாக மிரட்டிப் பார்க்கிறார்.

இந்தத் துணிவும், வீரப்பிரதாபப் பேச்சும் இலங்கை அதிபருக்கு ஏற்பட எது காரணம்?

இந்திய அரசு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காட்டி வரும் அலட்சியப் போக்கு அல்லவா!

எனவேதான் - உடன்பிறப்பே! மத்திய அரசின் உறக்கத்தைக் கலைத்து - அல்லது உறங்குவது போல் நடிக்கும் நிலையை அம்பலப்படுத்தி - இலங்கைத் தமிழ் இனத்தை அழிவிலிருந்து காத்திட, நமது அறப்போர் தொடங்குகிறது!

தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறோம் என்ற கையொப்பப் படிவங்கள் குன்றெனக் குவியட்டும்!

அறப்போர் வீரர் பட்டியல் ஆயிரம் ஆயிரமாகத் தயாராகட்டும்!

விலங்குகளாம் சிங்கள வெறியர் கையில் சிக்கிய தமிழ் இனம் காத்திட, நமது கைகளில் விலங்குகளைத் தாங்குவோம்!

சிறைப்பட்டுச் சீரழிந்து, செத்துமடியும் தமிழ் இனத்தைப் பாதுகாக்க, நாம் நிரப்புவோம் சிறைக் கோட்டங்களை!

இந்திய அரசு, நமது இனம் குறித்துக் கவலைப்பட்டு முறையாகச் செயல்படத் தொடங்கும் என்ற நம்பிக்கையை இழந்துவிட்ட காரணத்தினால்தான் இந்தப் போராட்டம்!

இதனை உலகம் உணரச் செய்திட, நம்மை நாமே அர்ப்பணிக்கும் தியாக வேள்விதான் இந்த அறப்போர்!

தயாராகுக! தமிழ் இனச் சிங்கமே!

அன்புடன்

மு.க.

07-04-1985

1301. நாட்கள் அதிகமில்லை!
நடக்கட்டும் உனது பணி!

உடன்பிறப்பே,

திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, சேலம், தென்ஆற்காடு, வடஆற்காடு, கோவை, பெரியார் ஆகிய மாவட்டங்களில், இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் போராட்ட விளக்கக்கூட்டங்கள், ஒன்றையொன்று வெற்றி கொள்கிற அளவுக்கு எழுச்சியும், உணர்ச்சியும் பேரலைகளாக மோதிட மகத்தான முறையில் நடைபெற்றன. மீண்டும் பத்தொன்பதாம் தேதி முதல் இருபத்திரண்டு முடிய, நெல்லை, குமரி, மதுரை மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டுச் சென்னை திரும்புகிறேன். நமது பொதுச்செயலாளரும் மற்றும் கழக முன்னணியினர், சொற்பொழிவாளர்கள், அனைவருமே அறப்போராட்ட விளக்கக் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆங்காங்கு உருவாகியுள்ள போராட்ட உணர்வினை வியந்து பாராட்டுகின்றனர். குறுகியகால அவகாசத்தில் கையெழுத்து இயக்கத்தின் வாயிலாக ஐம்பது லட்சம் மக்களைச் சந்தித்து அவர்களின் கையொப்பங்களை தமிழ் ஈழம் அமைவதற்கு ஆதரவாகப் பெற்றிருப்பது நம்முடைய கழக உடன் பிறப்புக் களின் உழைக்கும் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு என எண்ணி மகிழ்கிறேன்.

17ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், தலைமைக் கழகச் செயலாளர்களும் கலந்துகொண்டு அறப்போர் குறித்து விவாதித்து எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் ஏடுகளில் வெளிவந்துள்ளன.

ஏப்ரல் 29ஆம் நாள் சென்னையில் பதினான்கு இடங்களில் மறியல் போராட்டம் தொடங்குகிறது! தொடர்ந்து மற்ற

மாவட்டங்களில், இருநூறுக்கு மேற்பட்ட இடங்களில் மறியல் நடைபெறும் நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இனமான உணர்வுடனும், இலங்கையில் தமிழ் ஈழம் அமைய வேண்டுமென்ற குறிக்கோளுடனும், கழகம், களம் புகுந்திடுகிற இந்தக் காலகட்டம், தமிழ் இன வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையாகும், என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நெஞ்சுறுதி கொண்ட இளைஞர் ஏறுகள் கிளம்பிற்றுகாண் தமிழச் சிங்கக் கூட்டமென முழக்கமிட்டு அறப்போர் மறியல் அணிவகுப்புக்குப் பெயர் கொடுக்க நான் முந்தி நீ முந்தி எனப் போட்டியிட்டுக்கொண்டு குவிகின்றனர்!

ஏற்கனவே, பலமுறை கழகத்தின் ஆணை பெற்றுக் களம்கண்டு தியாகத் தழும்பேறிய கழக முன்னணிக் காவலர்களும், தமிழ் இனத்தின் அழிவைத் தடுத்திடத் தடந்தோள் உயர்த்தி மறியல்களம் காணத் துடித்து நிற்கின்றனர்!

ஏப்ரல் 29 மறியல் தொடங்குவதற்கு முன்பே - இந்த மாத முடிவுக்குள் தமிழ் ஈழம் அமைய வேண்டுமென்பதற்காக, ஆதரவுக் கையொப்பங்களைப் பெறும் கையெழுத்து இயக்கத்தை மேலும் தீவிரப்படுத்த வேண்டுமென்று மாவட்டக் கழகச் செயலாளர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள முடிவையும் நீ அறிவாய்!

அதிலும் குறிப்பாக இம்மாதம் 25-26 இரு நாட்களையும், தமிழ்ஈழ ஆதரவு நாள் எனக் கொண்டு பட்டிதொட்டிகள், சிற்றூர், பேரூர், நகரங்கள் எங்கணும் வீதிக்கு வீதி, தெருவுக்குத் தெரு, கடைகண்ணிகள், பேருந்து நிலையங்கள், ரயிலடிகள் அனைத்திலும் கழகத்தின் கண்மணிகள் கையில் கொடியேந்தி தமிழ் ஈழம் இலங்கையில் அமைந்திட ஆதரவு தாரீர் என்ற பதாகைகளை பிடித்தவாறு கையெழுத்து இயக்கத்தை மிக விரிவாக நடத்தவேண்டும்.

மறியல் அறப்போர் தொடங்கும் ஏப்ரல் 29-தன்னேரில்லாக் கவிஞர் - தமிழினக் கவிஞர் - தன்மானக் கவிஞர் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள்!

கையெழுத்து இயக்கத்தைத் தீவிரப்படுத்த இம்மாதம் 25-26 என இரண்டுநாள் குறித்து அந்நாட்களை தமிழ்ஈழ ஆதரவு நாள் எனக் கொண்டாட முடிவெடுத்துள்ளோமே! அந்த நாட்களில் இரண்டாம் நாளான ஏப்ரல் 26ஆம் நாள் - ஈழத்தந்தை செல்வநாயகம் அவர்களின் நினைவுநாள்!

எத்துணைப் பொருத்தம் பார்த்தாயா! இறுதி மூச்சு இருக்கும் வரையில், தமிழ் ஈழம் அமைவது ஒன்றே இலங்கைத் தமிழர்க்கு நல்வாழ்வும், உரிமை வாழ்வும், மானமுள்ள வாழ்வும் தரக்கூடியது என முரசறைந்து கொண்டிருந்த அந்த முதியவர் நினைவு நாளில் தமிழகத்தில் நம்முடைய கழகம் தமிழ்ஈழ ஆதரவு நாளை நடத்துவது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது அல்லவா?

எனவே உடன்பிறப்பே, இன்றே உன் பணி, மேலும் தீவிரமாகத் தொடரட்டும்! கொடிகளை ஏந்து! பதாகைகளைப் பிடி! எறும்பெனச் சுறுசுறுப்புக் காட்டு! தேனீக்கள் எனக் கையெழுத்துகளைச் சேகரித்திடு! வெட்டி வா என்றுரைத் தால் கட்டி வரும் வீரத்திருவுருவே! உன்னைப் போன்ற இளைஞர்கள் இலங்கையில் தமிழ் ஈழம் அமைந்திட விடுதலைப் படைகளில் சேர்ந்து உயிரையே திரணமாக மதித்துக் களத்தில் போராடுகிறார்கள்! அவர்களது கைகளில் துப்பாக்கி! உன் கையில் எழுதுகோலைத்தான் ஏந்திடச் சொல்கிறேன்! இருவண்ணக் கொடியைத்தான் தூக்கிப் பிடித்து உயர்த்தி, நடந்து, நடந்து நாலாதிசையிலும் சென்று கோடிக்கணக்கில் கையெழுத்துகளைக் குவித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்!

இந்தப் பத்து நாட்களிலும் - ஏதோ பகுதிநேரப் பணியாகக் கருதாமல், பசி, உறக்கம், ஓய்வு எதனையும் பாராமல் தமிழக மக்களின் கையொப்பங்களைப் பெற்றிடச் சுற்றிச் சுழன்றிடுமாறு உன்னை வேண்டுகிறேன்!

நீ பெற்றுத் தருகிற கையெழுத்துப் படிவங்கள் - விரைவில் டெல்லியில் உள்ள இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களிடம் அளிக்கப்பட இருக்கின்றன என்பதையும், அதனைத் தொடர்ந்து நானும், நமது பொதுச்செயலாளரும் பிரதமரைச் சந்தித்துத் தமிழ் ஈழம் இலங்கையில் அமைந்திட இந்திய அரசு உதவிட வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்க இருக்கிறோம் என்பதையும் மறந்து விடாதே!

ஒவ்வொரு நாளும் இலங்கையிலிருந்து வருகிற செய்திகள், நெஞ்சை உலுக்குகின்றன! விவரிக்கத் தேவையில்லை உனக்கு! ஒருகாலத்தில் செங்கோலோச்சிய இனம் இன்று சித்ரவதைப்பட்டுச் சீரழிகிறது!

அந்த அழிவைத் தடுத்திட, அந்த இனத்துக்கு அமைத்துத் தருவோம் இலங்கையில் தமிழ் ஈழம் என்ற சூளுரைத்திட -

அதற்கென, நமது மத்திய அரசை வற்புறுத்தி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு செய்திடத்தான் -

கழகம் நடத்துகிறது அறப்போர் மறியல்!
கடமையாற்றிடுவோம்!
கண்ணியம், கடுகளவும் தவறாது
களத்தில் அணிவகுத்திடுவோம்!

கட்டுப்பாடு, எள்முனையளவும் குலையாமல் இந்த அமைதிவழி அறப்போரில்

ஆயிரம் ஆயிரம் பல்லாயிரமெனக் குதித்திடுவோம்!

உடன்பிறப்பே, நாட்கள் அதிகமில்லை - நடக்கட்டும் உனது பணி!

அன்புடன்

மு.க.

19-04-1985

1302. வாழ்வா? சாவா? என்கிற போராட்டம்!

உடன்பிறப்பே,

சில நாட்களாகச் செய்தி ஏடுகளில் சுவாப்போ என்ற ஒரு சொல் பலமாக அடிபடுகிறதல்லவா?

ஆங்கிலத்தில் "SWAPO" என்பதைத்தான் அப்படித் தமிழில் அச்சிடுகிறார்கள்.

"S" என்ற எழுத்து "South" என்பதையும், "W" என்ற எழுத்து "West" என்பதையும், "A" என்ற எழுத்து "African" என்பதையும், "P" என்ற எழுத்து People's என்பதையும், O என்ற எழுத்து Organisation என்பதையும் குறிப்பிடுவதாகும். "South-West African People's Organisation" - அதாவது தென்மேற்கு ஆப்பிரிக்காவின் மக்கள் இயக்கம்.

அந்த இயக்கம் எழுப்பும் விடுதலை முழக்கம்தான் நமீபியா!

பத்து லட்சத்துக்கு மேற்படாத மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதியை தென்னாப்பிரிக்காவிலிருந்தும், சிறுபான்மையான வெள்ளை நிறத்தவர் ஆதிக்கப் பிடியிலிருந்தும் விடுவித்துக் கொண்டு, சுதந்திரமாகத் திகழ்ந்திட வேண்டுமென்ற கோரிக்கையை முன்னிலைப்படுத்தித்தான் சுவாப்போ விடுதலை இயக்கம் நடத்தப்படுகிறது.

அந்த விடுதலை இயக்கத்தை நமது இந்திய அரசு அங்கீகாரம் செய்திருப்பதோடு, ஒரு அதிரடிப் பிரகடனமே செய்துள்ளது. அந்த இயக்கத்தின் பிரதிநிதி ஒருவருக்கு இந்தியாவில் தூதர் அந்தஸ்து வழங்கப்படுமென்றும் பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்து விட்டார்.

அது மட்டுமல்ல, அந்த விடுதலை இயக்கத்தின் குறிக்கோளாக அமைந்துள்ள சுதந்திர நமீபியா அரசின் அஞ்சல் தலையொன்றையும் இந்தியப் பிரதமர் டெல்லிப்பட்டினத்தில் வெளியிட்டுள்ளார்.

நமீபியாவுக்கு ஆதரவாக தென் ஆப்பிரிக்காவை எதிர்த்து இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்றும் - தென் ஆப்பிரிக்காவில் உள்ள ராஜீய உறவுகளை எல்லா நாடுகளும் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்றும் - தென் ஆப்பிரிக்காவின் விமானங்கள் பறக்கக்கூட அணிசேரா நாடுகளில் அனுமதி அளிக்கக்கூடாதென்றும், ராஜீவ் காந்தி முரசு கொட்டியிருக்கிறார்!

அவரது வீர கர்ச்சனையை அப்படியே ஏற்று, எத்தனை நாடுகள் செயல்படப் போகின்றன என்பது இன்னமும் தெரியவில்லை.

எவ்வளவோ தொலைவில் உள்ள தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கத்தின் விடுதலைக் குரலுக்குச் செவி சாய்த்து, வரிந்து கட்டிக் கொண்டு போர்வாள் தூக்கிப் புறப்பட்டுள்ள ராஜீவ் காந்தி அவர்கள், நமது தமிழகத்தின் கடற்கரையிலிருந்து இருபது கல் தொலைவில் நடைபெறுகிற தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றி, இத்தனை அக்கறை எடுத்துக் கொள்ளாதது ஏன் என்று ஏக்கப் பெருமூச்சுடன் கேட்கத் தோன்றுகிறதல்லவா?

இந்த நிலை கண்டு இதயம் எரிமலை ஆகிறதல்லவா?

தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, முஸ்லிம் லீக், காமராஜ் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வார்டு பிளாக், உழவர் உழைப்பாளர் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உடனடியாக இந்திய அரசு, இலங்கை அரசுடன் கொண்டுள்ள ராஜீயத் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று 3.9.84 ஆம் நாள் தீர்மானம் நிறைவேற்றி ஏழு மாதங்கள் உருண்டோடி விட்டன.

அந்தத் தீர்மானத்தைப் பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப் பட்டுக்கொள்ளாத ஒரு மத்திய அரசுதான், இப்போது தென்னாப்பிரிக்காவுடன் ராஜீய உறவுகளைத் துண்டித்துக் கொள்ள மற்ற நாடுகளுக்கும் அறிவுரை வழங்கி - நமீபியா சுதந்திர நாட்டுக்கும் அங்கீகாரம் அளித்துள்ளது.

இப்படிப்பட்ட ஒரு மத்திய அரசைப் பாராட்டு வதற்கும், நன்றி கூறுவதற்கும் நமது மாநில அரசு எப்பாடு படுகிறது என்பதை எண்ணும்போது நமக்கு வேதனையாகத் தானிருக்கிறது.

அமெரிக்காவின் எடுபிடியாக இருந்து கொண்டு - அமெரிக்க முதலாளித்துவத்துக்கு ஆலவட்டம் சுழற்றுகின்ற

இலங்கைச் சிங்கள அரசின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டு, இந்தியாவின் மொத்தப் பாதுகாப்புக்கும் ஊறு தேட முனைகிற அமெரிக்காவின் திட்டத்தைத் தரைமட்டமாக்க வேண்டுமானால், இலங்கையில் தமிழ் ஈழம் அமைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்!

அந்தக் கட்டாயத்தை உணர்ந்துதான் கழகம் களத்தில் இறங்குகிறது!

கழகம், நடத்துகிற இந்தப் போராட்டத்தையும் - தமிழ் ஈழம் அமைய வேண்டுமென்பதில் கழகம் எடுத்துள்ள நிலையையும் யார் எப்படி விமர்சித்தபோதிலும், அதைப்பற்றிக் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், பெரியாரும், அண்ணாவும் ஊட்டி வளர்த்துள்ள இனமான உணர்வு - இனப் பற்று என்ற அடிப் படையில், இறுதிவரையில் இலங்கைத் தமிழ் இனத்தின் பாது காப்புக்காக நமது கழகத்தின் தியாகப் பயணம் நடந்தே தீரும்!

முதலாளித்துவம் ஒழிந்த, ஒரு பாட்டாளி வர்க்க சோஷலிச சுதந்திரத் தமிழ் ஈழத்தை வென்றெடுத்து, அமெரிக்கக் காலனி ஆதிக்கத்திற்கு சம்மட்டியடி கொடுப்பதே தங்களது லட்சியம் என்று கொள்கைப் பிரகடனம் செய்து விட்டு, ஆயுதமேந்திப் போராடுகிறார்கள் விடுதலைப் போராளிகள் என்கிறபோது, ஒரு இடதுசாரி இயக்கம் என்ற முறையில் திராவிட முன்னேற்றக் கழகம், அத்தகைய தமிழ் ஈழம் அமைய வேண்டுமென்று போர்க்கொடி உயர்த்தி நிற்பது புதுமையான ஒன்றல்ல!

அராபத் தலைமையில் நடைபெறுகிற பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை, நாம் ஆதரிக்கிறோம்!

நமீபியா விடுதலை இயக்கத்தை, நாம் ஆதரிக்கிறோம்!

வியட்நாம் மக்கள் நடத்திய விடுதலைப் போராட்டத்தை, ஆதரித்தவர்கள்தான் நாம்!

பங்களாதேஷ் விடுதலைப் போருக்கும், நம்முடைய கழகமும், கழக அரசும் ஆதரவு வழங்கியதை யாரும் மறந்திருக்க முடியாது!

அந்த அடிப்படையில் விடுதலைப் போராட்டம் என்ற நிலையிலும் - அவைகளைவிட ஒரு படி மேலாக, நமது தமிழ்

இனம் நடத்துகிற விடுதலைப் போராட்டம் என்ற நிலையிலும் தமிழ் ஈழம் அமைந்திட நடைபெறும் இந்தப் போராட்டத்தை நாம் ஆதரிக்கிறோம்.

நமீபியா - பாலஸ்தீன் - ஈரான், ஈராக் - இங்கெல்லாம் காட்டும் அக்கறையை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இன்று வரையில் காட்டிட முன்வராத மத்திய அரசை நம்மால் பாராட்டிட முடியவில்லை!

எனவேதான், மத்திய அரசின் அலுவலகங்களின் முன்னால் நமது அறப்போர் மறியல் ஏப்ரல் 29 முதல் தொடங்குகிறது!

தமிழ் ஈழ ஆதரவுக் கையெழுத்து இயக்கமும் தீவிரமாக நடைபெறுகிறது!

இலங்கைத் தமிழருக்கு மட்டுமல்ல! இங்குள்ள தமிழர்களுக்கும் - இது வாழ்வா? சாவா- என்கிற போராட்டம்தான்!

அன்புடன்

மு.க.

26-04-1985

1303. கல்லைப்போடு!
அல்லது கமிட்டியைப் போடு!

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களும், நிதியமைச்சர், மின்துறை அமைச்சர் ஆகியோரும் டெல்லி சென்றிருந்த அதே சமயத்தில் - அதே டெல்லியில் - இலங்கை அகதிகளும் மனித உரிமைகளும் என்ற தலைப்பில் கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் ஒரு கூட்டத்தில் உரையாற்றியிருப்பதை ஏடுகளில் படித்தபோது மனத்துக்கு ஒரு ஆறுதலாக இருந்தது.

அருகில் இருக்கிற இலங்கையில் இதுபோன்ற ஒரு நிலைமை இருக்கும் போது இந்திய அரசு கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பதா? ஈரான், ஈராக் பிரச்சினையில் மிகவும் அவசரமும், அக்கறையும் காட்டுகிற பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கையில் நடக்கும் ரத்தக்களறியைப் பற்றி பதட்டமடையாமல் ஏதுமறியாதவர் போல ஆனந்த நித்திரையில் ஆழ்ந்து கிடப்பது ஏனோ? பாதிக்கப்பட்டவர்கள், ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்களாக இல்லாமல் இருந்திருந்தால், இலங்கையில் இத்தனை அட்டூழியங்கள் நடந்திருக்குமா? ஒரு குறிப்பிட்ட மொழிக்குச் சொந்தக்காரர்கள் என்பதால் இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதா?

பிரதமர் கொலுவீற்றிருக்கும் டெல்லித் தலைநகரிலேயே கர்நாடக முதல்வர் ஹெக்டே அவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு காட்டும் மெத்தனத்தை உணர்வு பூர்வமாகக் கண்டித்து முழக்கமிட்டிருப்பதை எண்ணிடும் போது - பிரச்சினையின் ஆழத்தை அவர் எந்த அளவுக்கு உணர்ந்திருக்கிறார் என்பதும், உணர்ந்த ஒன்றை எதற்கும், யாருக்கும் அஞ்சாமல் எந்த அளவுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதும் நம்மைப் பெருமிதமடையச் செய்கின்றன!

ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதும் - ஆட்சிக்கு ஏதும் ஆபத்து ஏற்படுத்தப்பட்டு விடக்கூடும் என்று எச்சரிக்கப்பட்ட போதும் - ஆட்சியைவிட கொண்ட கொள்கையே பெரிது எனக் கூறி நெருக்கடி காலப் பிரகடனத்தை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றி, பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் நடத்தி ஜனநாயகம் காத்திடும் போராட்டத்தை மத்திய அரசுக்கு எதிராக நடத்திய கழகம், நம்முடைய கழகம் என்று நினைத்திடும் போது, அதே துணிவுடன் அன்றும், இன்றும் நியாயங்களுக்காக வாதாடிச் செயல்படுகிற கர்நாடக முதல்வரின் உணர்வை நாம் பாராட்டாமல் இருக்க முடியுமா?

பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் கருணைக்குத் தவம் கிடக்காமல், இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்காக டெல்லிக் கூட்டத்தில் உரிமைக்குரல் கொடுத்த கர்நாடக முதல்வரைப் போற்றுகிறேன்.

இலங்கையில் சிங்கள அரசின் அராஜக வெறியாட்டம் நாள்தோறும் வளர்ந்து கொண்டு போகிறதே தவிர, ஒரு சிறிதும் குறையக் காணோம்!

அங்குள்ள தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே இலங்கை அரசு கலகமூட்டி, அந்த அமளி பெருகிட உறுதுணையாகவும் இருக்கிறது என்று செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

இந்தக் கலவரத்துக்கு வெளிநாட்டுச் சதியொன்று பின்னணியில் இருப்பதாக, இலங்கை உள்துறை அமைச்சர் தேவநாயகம் என்பவர் அறிவித்துள்ளார்.

ஆனால் இந்தியாவில் - டெல்லியில் உள்ள இலங்கை ஹைகமிஷனர் திலகரத்னே என்பவர், இலங்கையில் இஸ்லாமியருக்கும், தமிழருக்கும் ஏற்பட்டுள்ள மோதலுக்கு இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளே காரணம் என்கிறார்.

இப்படிப்பட்ட பொய்யர்கள் - பொல்லாதவர்கள் - ஹைகமிஷனர்களாக இருக்கும் இலங்கைத் தூதுவராலயங்களை மூட்டை கட்டி இலங்கைக்கே அனுப்பிவிட்டு இந்தியா - இலங்கை, ராஜீய உறவுகளைத் துண்டித்துக் கொள்ளுங்கள் என்று 3.9.84 அன்று நமது தோழமைக் கட்சிகளின் கூட்டத்தில் விடுத்த கோரிக்கையைக் கூட இங்குள்ள மத்திய அரசு, குப்பைக் கூடையிலே போட்டுவிட்டது!

நாடாளுமன்றத்திலே பிரதமர் அறிக்கை தரப் போகிறார் என்று பிரமாதமான முன்னறிவிப்புகள்! பராக் பராக் முழக்கங்கள்!

ஆனால், பிரதமர் நாடாளுமன்றம் வந்தார். இலங்கையில் தமிழர்கள் அழிந்து கொண்டிருப்பதற்காகக் கவலை தெரிவித் தார். தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதாகவும் அறிகிறேன் என்றார். இந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதற்கு தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ள ஒரு விசேஷக் கமிட்டி அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

மறைந்த பேராசிரியர் கல்கி அவர்கள் கூறியதாக எனக்கு நினைவு!

கமிட்டிகளைப் பற்றி அவரது கணிப்பு இது!

ஒரு பிரச்சினையை ஆறப் போட வேண்டுமென்றால் அதன் தலையில் ஒரு கல்லைப் போடு! அல்லது ஒரு கமிட்டியைப் போடு!

கல்கியார் அவர்களின் அந்தக் கணிப்பின்படியே-

இப்போது ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு கமிட்டி அறிவிப்பைச் செய்திருக்கிறார்!

இதில் ஆறுதல் அடைய என்ன இருக்கிறது?

- எந்தப் பிரச்சினைக்காக?
- எந்த நேரத்தில்?
- இது கமிட்டி போட்டு ஆராய்கிற பிரச்சினையா?
- வட்டமேஜை மாநாடு!
- பார்த்தசாரதி தூது!
- பண்டாரி தூது!
- இப்போது விசேஷக்கமிட்டி! ஏமாந்தது போதும்!

எனவே உடன்பிறப்பே, நமது அறப்போராட்டம் தொடங்கட்டும்! தொடரட்டும்!

அன்புடன்

மு.க.

27-04-1985

1304. புகட்டிடுவோம் ஒரு பாடம்!
புறப்படுக தமிழர் கூட்டம்!

மானமரபே! மறக்குல அடலேறே!
மறியல் போர் அழைக்கிறது; வா!வா!வா!
ஈழத்தமிழர் இலங்கையிலே அழிகின்றபோது
ஈனத்தமிழராய் இங்கே வாழ்ந்திடல் தீது!

எள்ளளவு இன உணர்வும் கொண்டிட ஏன் தயக்கம்?-

காலம்

உள்ளளவும் உன் சந்ததி உனைச் சபிக்கும்!

தேள்போலக் கொட்டுகின்றான் தீயவனாம் சிங்களவன்!

வாள்தூக்கி அவன் வால் நறுக்க வந்திடுக புலிப்போத்தே!

கற்புடைத் தமிழச்சி மானமழித்து, நறுக்கின்றான் இரு
துண்டாக!

கற்கண்டுப் பிள்ளைகளை நொறுக்குகின்றான் –
வாயில் போட்டு!

திக்குத் தெரியாமல் தேம்புகின்றார் தென்னிலங்கைத் தமிழ்மாந்தர்!

கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பதாகக்
கூறுகின்றார் டெல்லிக்காரர்!

புழுவும் மிதிபட்டால் புலியாகும் என்பார்கள் – இவரோ,

குழு ஒன்று அமைக்கிறாராம் – குத்துகின்றார் தமிழர்க்குக் காது!

நமீபியாவுக்கு ஒரு நீதி – நாதியற்ற தமிழர்க்கு ஒரு நீதியாம்!

நம்பிக்கெட்டது போதுமடா! இந்திய நாடாளும் துரைத்தனத்தை!

நமதினம் அருகினில் அழிந்திடும் போது
நாம் மட்டும் வாழ்ந்தென்ன பயன் எனக்கேட்டு,
களம்புகு கழகப்படையே! இலங்கைக்

காரிருள் போக்கிடக் கதிர்முகம் தூக்கிடு!
ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்
ஆனது ஆகட்டுமென்று - இந்தப்
பாரினில் தமிழர்க்கோர் நாடு கண்டிட
வீரர்கள் எழுந்தனர்; தமிழ் ஈழத் தரணியில்!
நாமும்
போரினில் குதித்திடுவோம் - தமிழ்இன
வேரினில் வெந்நீர் ஊற்றும்
பொல்லாத சிங்களவர்க்கு - நம்
புறநானூற்று மகிமை கூறி,
புகட்டிடுவோம் ஒரு பாடம்-
புறப்படுக தமிழர் கூட்டம்!
தொடங்கிடுவோம் நாள்தோறும் - மறியல்போர்!
தொடர்ந்து நடத்திடுவோம்! வா! வா! வா!

அன்புடன்

மு.க.

28-04-1985

1305. கண்ணீருக்குக் காலம் பதில் சொல்லும்!

உடன்பிறப்பே,

கழகத்தின் நிர்வாகக் குழுவில் கலந்துரையாடி, செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்ட இரண்டு நாள் கூட்டத்தில் விரிவாக விவாதித்து, கடற்கரையில் நடைபெற்ற திறந்தவெளி மாநாட்டில் அறிவித்ததற்கொப்ப, ஏப்ரல் 29ஆம் நாள் முதல் இலங்கைத் தமிழர் பாதுகாப்புக்காகவும், இலங்கையில் தமிழ் ஈழம் அமைவதற்காகவும் - மத்திய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிற நமது மறியல் அறப்போராட்டம் மாவட்டம் தோறும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும் போது சென்னை, திருச்சி, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில், நான்கு களங்கள் அமைந்து தஞ்சை மாவட்ட அறப்போர் குறித்த செய்திகளை நீ படித்துக் கொண்டிருக்கக் கூடும்.

முதல் நான்கு களங்களில் ஏறத்தாழ பத்தாயிரம் பேர் அளவுக்குக் கைது செய்யப்பட்டனர். ஆனால், சிறைச் சாலைகளில் இடவசதி கருதியும், எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதன் மூலம் ஒரு அற்ப மகிழ்ச்சி அடைவதற்காகவும் தமிழக அரசினர், சுமார் நாலாயிரத்து ஐநூறு பேர்களை மட்டுமே சென்னை, திருச்சி, சேலம் ஆகிய சிறைகளில் அடைத்துள்ளனர். தர்மபுரியில் கைது செய்யப்பட்ட கழகத்தினரும் சேலம் சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் உள்ளிட்டு நாலாயிரத்து ஐநூறாக இருந்த எண்ணிக்கை, சேலம் மாவட்ட மறியல் அறப் போரைத் தொடர்ந்து ஆறாயிரத்து ஐநூறு பேர் என்ற அளவை எட்டியிருக்கிறது!

சேலம் மாவட்டத்தில் மூவாயிரம் பேர் கைதாயினர் எனினும், வழக்குப் பதிவு செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளோர் சுமார் இரண்டாயிரம் பேர்தான்!

இவ்வாறு ஆறாயிரத்து ஐநூறு பேர் - இன்று வரையில் சிறையில் வாடுவதையும், அவர்கள் இலங்கைத் தமிழருக்காக இந்தக் கொளுத்துகின்ற கோடையில் சிறைக் கொட்டடிக்குள் வதங்குவதையும் கூடத் தமிழகத்திலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரிகளில் பிரசுரிக்கக் கூடாதென்றும், அப்படிப் பிரசுரிப்பதால் மத்திய அரசின் மெத்தனப் போக்கைப் பிற மாநிலத்தினரும் - பிற நாட்டினரும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டு விடுமென்றும் மேலிடத்தார் கருதி, அவ்வாறே அதிகாரபூர்வமற்ற ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஒரு ஆங்கில தினசரி இதழின் அலுவலகத்திலிருந்தே எனக்குச் செய்தி கிடைத்தது.

அந்தத் தகவல் உண்மை என்பது போல - ஆங்கில தினசரிகளில் நமது இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்படுகிற செய்திகள் அந்த ஏடுகளில் வெளி வருவதில்லை. ஒருவேளை வந்தாலும், கடலில் தவறி விழுந்த ஒரு கடுகைக் கண்டுபிடிக்கத் தேடியலைகிற முயற்சியை எடுத்துக் கொண்டால்தான் அந்தச் செய்தியை நம்மால் கண்டுபிடிக்க முடியும் என்கிற அளவுக்குத்தான் வெளியிடப்படும்.

பாவம்! ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் விளம்பரத்திற்கான வருமானம் வரும்போது - அதனை இழந்து விடுவதற்கு அந்தப் பத்திரிகை வணிகர்களால் முடியுமா என்ன?

ஆளுங்கட்சியை ஆதரிக்கும் சில தமிழ் ஏடுகளோ - தி.மு.க. போராட்டம் படுதோல்வி! என்று தலைப்பிட்டுச் செய்தி தருவதன் மூலம் யாரையோ மகிழச் செய்வதாகக் கருதிக் கொண்டு, தம்மை அறியாமலே இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேக்குத் துணை போய்க் கொண்டிருக்கின்றன!

ஒரு தமிழ் ஏட்டில் வந்துள்ள செய்தி - தி.மு.க.வினர் மறியல் செய்யவில்லை என்பதாகும். அதாவது மறியல் களத்துக்குச் செல்வதற்கு முன்பே, காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து விடுகிறார்கள் அல்லவா - அதனால் அவர்கள் மறியல் செய்ய முடியாமல் சிறை செல்ல நேரிடுகிறது அல்லவா -

அதை வைத்துக்கொண்டு அந்த ஏடு, கழகத்தினர் மறியலே செய்யவில்லை - அதனால் போராட்டம் பிசுபிசுத்தது! என்று செய்தி வெளியிட்டு தனது மனதுக்கு ஒரு ஆறுதல் தேடிக் கொள்கிறது!

காரிருள்தான் சூரியனை மறைப்பதுண்டோ?
கரைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பொய்மையினால் உண்மைதான் இன்மையாமோ?

என்ற பாவேந்தரின் கவிதை நமது இதயத்தில் பதிந்திருக்கும் போது, இலங்கைத் தமிழ் இனத்துக்குத் தெரிந்தோ, தெரியாமலோ துரோகமிழைக்கும் இந்தப் பத்திரிகையாளர்களின் தயவுக்காக நாம் தவம் கிடக்கவில்லை! என்றைக்கும் இந்தத் தமிழ் இன நல விரோதிகளிடம் நாம் தயவை எதிர்பார்த்ததுமில்லை!

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து 1938ஆம் ஆண்டு முதல் நமது திராவிட இயக்கம் நடத்திய போராட்டத்தைப் பற்றி அந்நாள் இதழ்கள் ஒருவரிச் செய்தி கூடப் போடவில்லைதான்! நமது இயக்க ஏடுகளில் மட்டுமே இந்தி எதிர்ப்புப் போராட்டச் செய்திகள் வந்தன!

ஆனால் இன்று, நிலைமை என்ன? நமது திராவிட இயக்கம் அன்று தொடங்கிய மொழிப் போர் - 1965இல் மொழிப் புரட்சியாக உருவெடுத்து - இன்றைக்கு இந்தி ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழகமே போர்க் கோலம் பூண்டு நிற்கிற காட்சியைக் காண முடிகிறதா இல்லையா?

1938இல் இந்தி எதிர்ப்புப் போரில், இதுவரை ஆயிரத்து நூறு பேர் சிறை புகுந்தனர் என 'விடுதலை' ஏடு செய்தி வெளியிட்ட போது ஆயிரத்து நூறு ஹம்பக் என்று கேலியும் கிண்டலும் செய்து காங்கிரஸ் கட்சி ஏடு ஒன்று, கட்டுரை தீட்டியதைத் தமிழகத்தின் நீண்ட கால மொழிப் போராட்ட வரலாற்றை உணர்ந்தவர்கள் மறந்திருக்க முடியுமா?

எனவே, இப்போதும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் - இருட்டடிப்பு செய்யும் ஏடுகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் - இழித்தும் பழித்தும் திசை திருப்பும் இதழ்களைப் பொருட்படுத்தாமல் - நம்முடைய கழகத்தின் கண்மணிகள் பல்லாயிரவர் பாசறைகளில் இருந்து களம் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

சிறையில், அதுவும் இந்தக் கோடை வெப்பத்தில் எத்தனை சிரமங்கள்! ஆனால் நாம் அனுபவிக்கும் இந்த இன்னல்கள், இலங்கையில் நமது தமிழ் இனம் படுகின்ற அவதிக்கு முன்னால் மிகமிகச் சாதாரணம்தானே!

ஒரு இனம் படுகின்ற வேதனையை அந்த இனத்தவர்களால் - அதுவும் அந்த இனத்திலேயே இன உணர்வு உள்ளவர்களால் மட்டுமே முழுமையாக உணர முடியும்!

அந்த உணர்வின் வெளிப்பாடுதான், இலங்கையில் தமிழ் இன அழிவு கண்டு நம்மைப் போன்றோர்க்கு இயல்பாக எழும் துடிப்பு!

உடன்பிறப்பே, இனம் என்ற சொல்கூட சிலருக்கு எரிச்சலைத் தருகிறது! இன விடுதலை, இன உரிமை என்ற சொற்றொடர்கள் இன்னும் அவர்களுக்கு பெருங்கோபத்தை மூட்டுகிறது!

இதோ ஒரு மாமனிதர் பேசுகிறார்! படித்துப் பார்!

ஐரிஷ் இனத்தின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பது மாத்திரமல்ல. அது அவர்களுக்கான நாடும், உயிர் வாழ்வும் பற்றிய பிரச்சினையாகும். அழிவா அல்லது புரட்சியா என்பதுதான் அவர்களின் முன்னால் உள்ள கேள்வி. எல்லா ஐரிஷ்காரர்களும் ஒன்றை மட்டும் முடிவாக உணர்ந்துவிட்டனர். அதுதான் ஏதேனும் நடப்பதானால் அது உடனடியாக நடக்க வேண்டும். அவர்களுக்குத் தனி நாட்டைப் பிரித்துத் தர ஆங்கிலேயர் ஒப்புக் கொள்ளவேண்டும். வேறு எதுவும் பயனற்றதாகும்.

இந்த உரையை நிகழ்த்தியவர் வேறு யாருமல்ல! 16.12.1867இல் லண்டன் மாநகரத்தில் காரல்மார்க்ஸ் அவர்கள் நிகழ்த்திய உரைதான் இது!

அழிவா? புரட்சியா? என்பதுதான் முன்னால் உள்ள கேள்வி என்கிற போது - ஒருமைப்பாடு எங்கிருந்து எழமுடியும்?

இதைத்தான் இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்காரன் கேட்கிறான்.

அவனுக்காக நாம் கேட்கிறோம் - தனித் தமிழ் நாடு!

இங்கேயல்ல, இலங்கையில் கேட்கிறோம்!

இலண்டனில் இருந்து கொண்டு அன்று காரல் மார்க்ஸ்

ஐரிஷ் இனத்துக்காகத் தனிநாடு கேட்டாரே, அதை மறந்து விட முடிகிறதா?

ஒரு இனம் அழியும்போது இலங்கையின் ஒருமைப்பாடு என்ன வாழ்கிறது?

இந்த வினாவை எழுப்பிக் களத்தில் நின்றும் - காராக்கிருகத்தில் அடைபட்டும் தியாக வேள்வி நடத்துகிற என் அன்பு உடன்பிறப்பே, இன்று நாம் வடிக்கின்ற வியர்வை வீண் போகாது!

நமது கண்ணீருக்குக் காலம் பதில் சொல்லியே ஆக வேண்டும்!

இலங்கைத் தமிழனுக்கு விடிவு காலம் ஏற்படும் வரையில், நமது போராட்டம் ஓயப்போவதில்லை!

இது உறுதி! உறுதி!

அன்புடன்

மு.க.

08-05-1985

1306. அமைச்சர்கள் அங்கலாய்க்கிறார்கள்!

உடன்பிறப்பே,

மத்திய அரசு, இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காட்டி வரும் அலட்சியத்தையும் மெத்தனப் போக்கையும் கண்டித்து, இலங்கையில் தமிழ் ஈழம் அமைந்திட உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துவதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர் மறியல் போராட்டம் நடத்திவருகிறது.

அரசாங்கம் தந்துள்ள கணக்கின்படியே இதுவரையில், பத்தாயிரம் கழகக் கண்மணிகள் சென்னை, திருச்சி, சேலம் ஆகிய சிறைச்சாலைகளில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். இருநூறுக்கு மேற்பட்ட மகளிரும் - அவர்களிலேயே சுமார் இருபதுக்கு மேற்பட்டோர் கைக்குழந்தைகளுடனும் சிறைக்கோட்டங்களில் வாடுகிறார்கள்.

நடந்து முடிந்த விளக்கக் கூட்டங்கள் அனைத்திலும் - இந்தப் போராட்டம் மாநில அரசை எதிர்த்து அல்ல, மத்திய அரசை வலியுறுத்தவே என்று திரும்பத் திரும்ப எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் மாநில அரசின் அமைச்சர்கள் சிலர், நமது போராட்டம் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்தே யாரையோ குளிர்விப்பதற்காக - அல்லது கிடைத்த பதவி நிலைப்பதற்காக - நமது போராட்டத்தைக் கேலி செய்தும், கிண்டல் செய்தும், கண்டித்தும் இழிமொழிகள் கூறி ஏடாகூடப் பேச்சுக்களில் வெகுவேகமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

பாவம், அவர்கள் எதற்காக இப்படிப் படாத பாடுபட்டு நமது போராட்டத்தின் மீது காய்ந்து விழுகிறார்களோ தெரியவில்லை!

தமிழ் ஈழம் கேட்பது தவறு - கூடாது என்று ஒரு அமைச்சர் மேடையில் உள்ள மேஜையைப் பளார்! என்று தட்டி ஆரவாரம் செய்கிறார்!

இன்னொரு அமைச்சரோ, தமிழ் ஈழம் வேண்டாமென்று கூறுகிறவன் தமிழனுக்கே பிறந்தவனில்லை என்று ஆவேசமாக முழக்கமிட்டது மட்டுமல்ல! தமிழ் ஈழ விடுதலையை ஆதரித்து ஒரு மாநாடே கூட்டப் போவதாக அறிக்கை விடுகிறார்.

மற்றொரு அமைச்சர், நாம் நடத்துகிற போராட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் சிறை சென்று கொண்டிருக்கும் தியாக சீலர்களின் நெஞ்சுறுதியையும், தமிழ் இனப்பற்றையும் கொச்சைப்படுத்தி - ஜெயவர்த்தனேவுக்குத் தன்னை கையாள் என்று அடையாளம் காட்டிக் கொள்கிறார்.

காலையில் பிடித்து மாலையில் விட்டுவிடுவார்கள் என்று எண்ணிக்கொண்டு மறியல் செய்தார்களாம்! இப்போது மாட்டிக்கொண்டு விழிக்கிறார்களாம்!

எள்ளளவுத் தியாகமும் செய்யாமல் - கடுகளவு அடக்குமுறையையும் காணாமல் - துரோக வேலையில் பெற்ற பயிற்சி ஒன்றின் காரணமாகவே, எல்லாக் கட்சி ஆட்சியிலும் அமைச்சராக இருக்கும் வாய்ப்புப் பெற்றுள்ள இந்தக் குடிலர் கூறுகிறார்! காலையில் பிடித்து மாலையில் விட்டுவிடுவார்கள் என்று மறியலுக்குப் போனவர்கள் நினைத்து ஏமாந்ததாக!

அவரது வாதமே சரியென்று வைத்துக் கொண்டால்கூட, காலையில் பிடித்து மாலையில் விட்டுவிடுவார்கள் என்று முதல் நாள் சென்னை மறியலில் ஈடுபட்டவர்கள் எண்ணியதாகவே இருக்கட்டும்!

சென்னையில் யாரும் அப்படி விடப்படவில்லையென்று தெரிந்த பிறகும், திருச்சியில் அடுத்த நாள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் சிறை புகுந்தனரே! அது எப்படி?

சென்னையிலும் விடவில்லை - திருச்சியிலும் விடவில்லை என்று தெரிந்த பிறகும், நான்கு நாள் கழித்து தர்மபுரி மாவட்டத்தில் அமைந்த களத்தில் சுமார் ஆயிரம் பேர் சிறை புகுந்தனரே! அதற்கு என்ன காரணம்?

தர்மபுரியில் கைதானோர் விடப்படவில்லை எனத் தெரிந்தும், சேலத்தில் சுமார் இரண்டாயிரம் பேர் மறியலில் ஈடுபட்டு கைதானது எதற்காக?

சென்னை முதல் சேலம் வரை நடைபெற்ற அறப்போரில், எட்டு நாட்களாக ஆறாயிரத்துக்கு மேற்பட்டோர் கொட்டடிகளில் கிடக்கிறார்கள் எனத் தெரிந்தும், தஞ்சைத் தரணியில் ஐயாயிரம் பேருக்கு மேற்பட்டோர் சிறை புகுந்துள்ளனரே! அது ஏன்?

இன உணர்வு!

இனஉணர்வு!

அந்த உணர்வு மங்காத காரணத்தினால்தான் பல்லாயிரக் கணக்கான மானமிகு தமிழர்கள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், அந்த உணர்வற்றுப் போன சில ஜீவன்கள் அமைச்சர் என்ற அந்தஸ்தில் ஏறிக் கொண்டிருக்கிற காரணத்தினாலேயே, இப்படியெல்லாம் உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறது!

சுயநலக் குட்டையில் ஊறிய மட்டையாக விளங்கும் ஒரு நபர், அமைச்சர் பதவிக்கு ஆலாய்ப் பறந்து, அலைமோதித் திரிந்து அடிதொழுது அய்யனே! மெய்யனே! எனப் போற்றி இறுதியாக, அந்த எலும்புத் துண்டை சுவைக்கும் வேகத்தில் என் மீதும், கழகத்தின் மீதும் விழுந்து பிராண்டியுள்ளதையும் ஏடுகளில் நீ படித்திருப்பாய்!

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இங்குள்ள எல்லாத் தமிழர்களுக்கும் அக்கறையுண்டு என்பதைக் காட்டுகின்ற முறையிலேதான், ஒவ்வொரு கட்சியினரும் ஒவ்வொரு அணுகுமுறையை மேற்கொண்டாலும் கூட - நாம் எந்தவொரு கட்சியையும் குறைகூறாமல், விமர்சிக்காமல் நமது வழியில் நாம் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசை வலியுறுத்தி!

ஆனால் நம் மீது புழுதிவாரி தூற்றப்படும் போது, அந்தக் காரியத்தில் ஈடுபடுவோர்க்குச் சில நேரங்களில் பதில் அளிக்க வேண்டிய கட்டாயம் நமக்கும் ஏற்படுகிறதல்லவா?

ஈழ விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென இலங்கை அமைச்சர் தொண்டைமான் அவர்களே பேசியுள்ளதாக ஏடுகளில் செய்தி வருகிறது! மகிழ்கிறோம்!

தமிழக அரசு காட்டும் தயக்கத்தை எண்ணிப் பெருமூச்சு விட்டவர்களாக டெல்லி நாடாளுமன்றத்தில் உள்ள சில அ.தி.மு.க. உறுப்பினர்கள், மத்திய அரசின் மெத்தனத்தைக் கண்டித்து, தமிழ் ஈழம் மலர வேண்டுமென்று முழக்கமிட்டிருக்கிறார்கள்! பாராட்டுகிறோம்!

முதலமைச்சரின் தூதுக்குழு டெல்லியில் அளித்த மகஜரில் சொல்லப்பட்ட கருத்துகள் போதுமானவை அல்ல என்ற மனக்குமுறலுடன், ஒரு சில தமிழக அமைச்சர்கள் தமிழ் ஈழம் ஒன்றே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியது என அறிக்கைகள் விடுக்கின்றனர், பூரிப்படைகிறோம்!

ஆனால் இதற்கிடையில் ஆளும் கட்சி ஏடுகளும் - சில அவசரக் குடுக்கை அமைச்சர்களும், நமது போராட்டத்தின் மீது நாராச மொழிகளை வீசுவானேன்? நரகல் நடையில் ஏசுவானேன்? பாவம்! அவர்களுக்காகப் பரிதாபப்படுவோமாக!

நமது மறியல் போராட்டம் பற்றி இந்தப் பட்டியலில் வரும் அமைச்சர் ஒருவர் எப்படி வர்ணிக்கிறார் பார்!

ஈரமான தீக்குச்சியால் விளக்கை ஏற்றுகிறார் கருணாநிதி!

இது அமைச்சரின் வர்ணனை, பரவாயில்லை! எப்படியோ ஒரு உண்மையை ஒத்துக் கொண்டார். உடன்பிறப்பே! நீயும் நானும் சேர்ந்து விளக்கினை ஏற்றிட முயற்சிக்கிறோம் என்பதையாவது அவரை அறியாமல் கூறிவிட்டாரே - அதற்காக அவருக்கு நன்றி கூறத்தானே வேண்டும்!

விளக்கு ஏற்றப்பட்டு - அது கொழுந்து விட்டு எரியும்போதுதான் தெரியும். ஈரமான தீக்குச்சியால் கூட இவர்களால் விளக்கு ஏற்ற முடிகிறதே என்று!

ஒருவேளை அமைச்சர் இப்படி எண்ணுகிறாரோ -

என்னவோ!

அதாவது அறப்போர் மறியல் என்பது ஈரமான தீக்குச்சி!

இந்த சாத்வீகப் போராட்டம் எல்லாம் வேண்டாம்-

உடனே தீப்பற்றி எரியக்கூடியத் தீவிரப் போராட்டத்தை நடத்துங்கள் என்று சூசகமாகக் கூறுகிறாரோ என்னவோ!

சூழ்ச்சிக்காரர் அப்படி எண்ணிச் சொன்னாலும்

சொல்லுவார்!

அவர் சூழ்ச்சியில் நாம் சிக்கிடவேண்டாம்!

அந்த முறையை நாம் என்றும் ஏற்றுக்கொண்டதுமில்லை!

1938இல் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த நாள் தொட்டு நமது இயக்கம் கடைப்பிடிக்கும் முறை அறப்போர் மறியல் முறைதான்!

அதாவது அமைச்சர் பாஷைப்படி, ஈரமான தீக்குச்சி முறைதான்!

அதில் நமது திறமையையும், உறுதியையும் காட்டித் திருவிளக்கை ஏற்றி வைப்போம்!

அந்த விளக்கொளியின் விளக்கமே, தமிழ் ஈழம் என்று ஆக்குவோம்!

அன்புடன்

மு.க.

09-05-1985

1307. வரலாற்றுப் பொன்னேட்டின் வைர எழுத்துகள்!

உடன்பிறப்பே,

மே திங்கள் ஏழாம் நாள் தஞ்சை மாவட்டத்தில் அறப்போராட்டம். இலங்கையில் தமிழ் ஈழம் அமைவதற்கு ஆதரவு திரட்டுவதற்காக!

அந்த ஏழாம் நாள்தான் மயிலாடுதுறையில் அயராது கழகப் பணி ஆற்றி வரும் நண்பர் குருமூர்த்தி அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் விழா!

அன்று அவர் இருக்க வேண்டுமென்று விரும்பிய இடம், குடும்பத்தாரும், குழந்தைகளும் குதூகலத்துடன் பிறந்தநாள் விழா கொண்டாடிடும் தனது இல்லமல்ல!

இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் நமது தமிழ் இனத்தைக் காப்பாற்றுவதற்காகக் கழகம் கண்டுள்ள களத்தில் குதித்துச் சிறைச்சாலையில் - கழக உடன்பிறப்புகளுடன் அறுபதாவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினார் என்று தஞ்சை தரணிக்குச் சென்றிருந்த நீலநாராயணனும், சி.டி.தண்ட பாணியும் உணர்ச்சிப் பெருக்கெடுக்க என்னிடத்திலே சொன்ன போது எப்படிப் பூரித்துப் போனேன் தெரியுமா?

அறுபதை எட்டிப் பிடித்தவர்கள், அதற்கு மேலும் ஐந்தாறு வயதைக் கடந்தவர்கள், மற்றும் வாலிபர்கள், இளைஞர்கள், மகளிர், மட்டுமல்ல! சென்னைச் சிறையில் கைக்குழந்தைகளுடன் கூடத் தாய்மார்கள் பத்து நாட்களுக்கு மேலாக அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

ரிமாண்டில் வைக்கிறோம் - தண்டனை தரப்படும் - என்றெல்லாம் மீசையை முறுக்கிக்காட்டி மிரட்டினாலும்கூட,

அதற்கெல்லாம் மிரண்டுபோகாமல் நெஞ்சுறுதி கொண்டவர் களாகத்தான் கழகத்தின் கண்மணிகள் இந்தக் கொளுத்தும் கோடை வெப்பத்தில் கொட்டடிகளில் இருக்கிறார்கள்.

இதோ! திருச்சி சிறைக்கோட்டத்திலிருந்து ஒரு இளைஞன் எழுதிய மடல்!

அந்த இளைஞன் பெயர் என்ன தெரியுமா?

.....துரை என்பது அந்த இளைஞனின் பெயர்! அண்ணா - அண்ணா - என்று அன்பொழுக அழைத்துப் பழக்கப்பட்டு விட்ட நமக்கு, அந்த முழுப்பெயரையும் எழுதவோ, சொல்லவோ எப்படியோ இருக்கிறதல்லவா?

அண்ணாவின் பெயரைச் சூட்டிக் கொண்டுள்ள அந்த இளைஞனுக்குத் திருமணமாகி சில மாதங்களே ஆகின்றனவாம்! துறையூர் இளைஞர் அணியில் அங்கம் வகிக்கும் இளைஞன்!

சிறையிலிருந்து தனது இளம் மனைவிக்கு என்ன கடிதம் எழுதினேன் தெரியுமா? என்று எனக்கு அந்தத் தம்பி விவரித்துள்ளதைப் படிக்கும் போது என் கண்கள் பனித்தன!

1953இல் கல்லக்குடி போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறையில் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை அனுபவித்த போது நான் கூடக் கடிதம் எழுதியதுண்டு! அதாவது வாலிபமான வயதில்!

தம்பி, தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தின் நகலை நமக்கு அனுப்பியிருக்கிறானே - என்ன எழுதியிருக்கக்கூடுமோ! அதை எப்படிப் படிப்பது என்று இந்த வயதிலும் சற்றுக் கூச்சமாகத்தான் படிக்கத் தொடங்கினேன்.

இளமையின் துடிப்பு, கொடி கட்டிப் பறந்தது! இல்லத்துக்குப் புதிதாக வந்துள்ள இல்லத்தரசிக்காக அல்ல! ஏற்றுக்கொண்டுள்ள இலட்சியத்திற்காக!

நான் கழகத்தைத் தாயாக ஏற்றுக்கொண்டவன். தாயில்லாமல் நானில்லை - முதலில் தாயின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது என் கடமை. இரண்டாவது உன்னைக் காப்பாற்ற வேண்டிய கடமை. சிறையிலிருந்து எப்போது விடுதலை என சிந்திப்பது மடமை.

அந்த இளைஞன், தனது துணைவிக்கு எழுதிய மடலின் இறுதிப் பகுதிதான் இது!

இலங்கையில் தமிழ் ஈழம் அமைவதற்காக, எத்தகைய தியாகத்துக்கும் தயாராக இருக்கிறேன், அண்ணனே! என்று எனக்கும் அந்தத் தம்பி அந்த கடிதத்திலேயே சூளுரை முழங்கியிருப்பதைக் காணும்போது என் உடல் எப்படிப் புல்லரிக்கிறது தெரியுமா?

இப்படி எத்தனையோ ஆயிரக்கணக்கான தியாகத் திலகங்கள் - சென்னை, திருச்சி, சேலம், வேலூர் சிறைச் சாலைகளில் இனமான உணர்வுடன் எழுச்சிகீதம் பாடிக் கொண்டு சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்!

இன்னும் பல்லாயிரவர், ஆங்காங்கு அறப்போர்க்களம் கண்டிட - பாசறைகளில் குவிந்தவண்ணமிருக்கின்றனர்!

அந்த அன்பு உடன்பிறப்புகளாம் எனதருமைக் கழகக் கண்மணிகளுக்கு, என் இதயமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

முன்னாள்தொட்டு இந்நாள் வரையில் கழகப் பாடி வீட்டின் தளநாயகர்களாக இருந்து விழுப்புண் ஏற்றிடும் மூத்தோர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

களம்கண்ட சிங்க ஏறுகளே! தாய்க்குலமே! தம்பியர் பட்டாளமே! தளகர்த்தர்களின் அணியே!

தமிழ் இனத்துக்காக நீங்கள் ஏற்றுள்ள இந்த தியாகம் - வரலாற்றுப் பொன்னேட்டில் வைர எழுத்துகளாகப் பொறிக்கப்படத்தான் போகிறது!

இல்லை - இல்லை - அந்த வரலாற்றுப் பொன்னேட்டின் வைர எழுத்துகளே நீங்கள்தான்!

அன்புடன்

மு.க.

10-05-1985

1308. காஞ்சியில் அமைகிறது களம்!

உடன்பிறப்பே,

இலங்கைத் தமிழினத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், இலங்கையில் தமிழ் ஈழம் அமைவதற்கு ஆதரவாக உடனடியாகச் செயல்பட வேண்டுமென, மத்திய அரசை வலியுறுத்தியும், இரண்டு ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு காட்டி வரும் மெத்தனத்தைக் கண்டித்தும் கழகம் நடத்தி வரும் மறியல் அறப்போராட்டத்தில் காஞ்சியில் அமையும் களத்தில் நான் கலந்து கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கலிங்கப் போர் நடத்தி வெற்றிப் பரணி பாடிய காஞ்சி - வாதாபி வரையில் படைகொண்டு சென்று வாகை சூடிய காஞ்சி - சீனத்து யாத்ரீகர் ஹ்யூவான் சுவாங் போன்ற மேதைகளை வரவேற்று மகிழ்ந்த காஞ்சி - கடல் மல்லையைத் துறைமுகமாகப் பெற்றிருந்த காஞ்சி - கலைமேவிய காஞ்சி - இத்தனை சிறப்பையும் வரலாற்று ஏட்டில் வடித்துள்ள காஞ்சிக்கு, அந்த எழில் நகரம் நமது அண்ணனையும் ஈன்றெடுத்து வழங்கியது என்ற பெருமையும் உண்டல்லவோ!

அதனை எண்ணிடும் போது உள்ளத்தில் பீறிடுகின்ற உணர்ச்சிக்கு ஓர் எல்லைதான் உண்டா?

அரசியல் வித்தகர் - அறிவுக் களஞ்சியம் - முடை நாற்ற மெடுக்கின்ற மூடநம்பிக்கைக் கருத்துகளைத் தூள்தூளாக்கிக் காட்டிய பகுத்தறிவுப் பெட்டகம் - உழைப்போர் பலர், உண்டு கொழுப்போர் சிலரா? எனக் கேட்டு ஊரையடித்து உலையில் போடும் உன்மத்தர்களின் ஆணவத்தை உடைத் தெறிந்த தளநாயகன் - தமிழ் இனப் பெருமையைத் தரணி அறியச் செய்வோம், இனமானத்திற்கு வேட்டு வைக்கும் ஆதிக்கக் காரர்களுக்கு அடிபணிய மாட்டோம் என ஓங்கிக் குரல்

கொடுத்த போர் வாளாய் - தமிழ் இனத்துக்குக் கிடைத்த ஜனநாயகக் காவலன் - அந்த அண்ணன் பிறந்த மண்ணில், இலங்கையில் சீரழியும் நமது இன மக்களின் துயர் துடைப்பதற்காக இருவண்ணக் கொடியேந்தி களம் காணப் போகிறேன் என்பதை நினைக்கும் போதே நெஞ்சு இனிக்கிறது!

உடன்பிறப்பே, இளமைத் துடிப்பு நிறைந்த பதினான்காம் வயது முதல், தமிழ் காக்கும் போரில், தமிழ் இன உரிமை காக்கும் போரில் ஈடுபட்டு இன்று அறுபத்தி இரண்டாவது வயதைத் தொடப்போகும் பருவம் வரையில், எத்தனையோ அறப்போர்க்களங்களில் அணிவகுத்து எத்தனையோ முறை சிறைப்பட்டு விழுப்புண்ணை ஏற்றிருக்கிறேன்! எனக் கொன்றும் குறைந்திடாத - ஏன்? சொல்லப்போனால் என்னையும் மீறிய அளவுக்கு உன்னைப் போன்ற உடன் பிறப்புகள் பலர் செய்துள்ள தியாகத்தின் விளைவே திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் அறியாதவனல்ல!

அந்தத் தியாகத் திலகங்களையெல்லாம் வணங்கி விட்டுத்தான் தென்திசைத் தீபமாம் அண்ணனை வழங்கிய காஞ்சி நோக்கிச் செல்ல இருக்கிறேன்!

அண்ணன் இருந்தபோது இருபத்தைந்து ஆண்டுகள் காஞ்சிக்கும், சென்னைக்கும் வேறுபாடு இல்லாமல் பெரும் பகுதி நாட்களை என்னைப்போன்றோர் காஞ்சியிலேயே கழித்ததுண்டு!

அண்ணன் ஆணையேற்று, நடத்திய கொள்கைப் பிரச்சார நாடகங்களைத் தமிழகம் முழுவதும் நடத்துவதற்கு காஞ்சியில் உள்ள கழக உடன்பிறப்புகளே பெரும்பகுதியினர் என்னுடன் பங்கு கொண்டனர். அந்த இலட்சிய நாடகங்களுக்கான ஒத்திகை கூட காஞ்சியில் 'திராவிட நாடு' அலுவலகத்தில் தான் நடைபெறும்.

அந்த அலுவலகமே இன்று நம்முடைய கழகத்தின் பாசறையாக அண்மையிலே, தலைமைக் கழகத்தால் வாங்கப்பட்டுள்ளது என்பதையும் நீ அறிவாய்!

அந்த இடத்திலிருந்து தான் 16ஆம் தேதியன்று மறியலுக்குப் புறப்படுகிறேன் நமது உடன்பிறப்புகள் பலருடன் என்கிறபோது - 'திராவிட நாடு' அலுவலகத்திலிருந்து அண்ணனிடமே விடைபெற்றுக் களம் செல்வது போன்ற உணர்வு எழுவதில் வியப்பில்லை அல்லவா?

இலங்கைத் தமிழருக்காக 1981ஆம் ஆண்டில் ஒரு பெரும் போராட்டத்தை நடத்தினோம். சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் முன்னால் மறியல் செய்ய நம்முடைய கழக அணியினர் ஒவ்வொரு நாளும் புறப்பட்டனர். புறப்பட்ட இடத்திலேயே அவர்கள் கைது செய்யப்பட்டு பல நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். தூதுவர் அலுவலகத்திற்கும் நமது உடன்பிறப்புகள் கைது செய்யப்பட்ட இடத்திற்கும் சம்பந்தமே கிடையாது! அண்ணா சாலையிலேயே அண்ணா சிலையருகிலேயே கைது செய்யப்பட்டு காராக்கிருகத்தில் அடைக்கப்பட்டனர்!

நானும், நம்முடைய கழக முன்னணியினரும் வீட்டிலிருந்து புறப்படும் பொழுதே கைது செய்யப்பட்டோம்!

இலங்கைத் தூதுவரகத்தின் முன் மறியலா? ஒரு எதிர்க்கட்சி செய்யும் காரியமா இது? இது ஒரு பித்தலாட்டம்! என்று அப்போது நமது முதலமைச்சர் கடுமையாக விமர்சித்தார்.

ஆனால் வேறு சில கட்சியினர், இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் முன்னால் ஒருநாள் முழுதும் உண்ணா விரதமிருக்கவும் - ஆர்ப்பாட்டம் நடத்தவும் அனுமதிக்கப் பட்டனர்!

எப்போதும் இந்த ஆட்சியில் தி.மு.க. என்றாலே ஒரு தனி மரியாதைதான்!

அதேபோலத்தான் இப்போதும், தமிழக அமைச்சரவையிலே உள்ள சில அமைச்சர்கள் தமிழ் ஈழம் அமைவது ஒன்றே இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே வழி என்கின்றனர்!

அதையே தி.மு.கழகம் சொல்லும்போது முதலமைச்சராலும் - வேறு பல அமைச்சர்களாலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நாடாளுமன்ற இரு அவைகளிலே கூட, அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஓரிருவர் மத்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே நேரடி நடவடிக்கையில் இறங்கிட வேண்டுமென வலியுறுத்திப் பேசியுள்ளனர்! தமிழ் ஈழ முழக்கமும் செய்துள்ளனர்.

மாநிலத்தில் ஆளுங்கட்சியாக உள்ளவர்களால் அவ்வளவு தான் முடியும் என்று நாமே அறிவித்து விட்டு நம்மால் முடிந்ததைச் செய்வோமென்று இந்த அறப்போரில் ஈடுபட்டிருக்கிறோம். சென்னையில் முதல்நாள் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்ட போதுகூட, எங்கள் கடமையை நாங்கள் செய்கிறோம்

- அரசின் கடமையை அது செய்கிறது என்றுதான் செய்தியாளர்கள் பேட்டியில் நான் கூறினேன்.

ஆனால் என்ன காரணத்தாலோ - மாநில அரசில் உள்ள பல அமைச்சர்கள், எல்லோருமல்ல நமது போராட்டம் கண்டு எரிந்து விழுகிறார்கள்.

மத்திய அரசைக் கண்டித்து அதன் அலுவலகங்களின் முன்னால்தான் மறியல் என்கிறோம். மத்தியில் உள்ள அமைச்சர்கள் கூட இன்னும் இப்படிச் சீறி விழவில்லை.

ஆத்திரப்பட வேண்டிய இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவையும் முந்திக் கொண்டு, இங்கே தமிழகத்தில் உள்ள சில அமைச்சர்கள் நாம் நடத்தும் அறப்போர் குறித்து மிகமிகக் கொச்சைத்தனமாக நடந்து கொள்வதைக் காணும் போதுதான் வேதனை தாங்க முடியவில்லை!

அவர்களால் முடிந்ததை அவர்கள் செய்கிறார்கள் - நம்மால் முடிந்ததை நாம் செய்கிறோம்!

இலங்கைத் தமிழருக்காக நாம் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கையின் அடிப்படையில் போராட்டம் நடத்துகிறோம்!

மாநில அரசினர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கட்டும். மறுக்கவில்லை! தண்டிக்கட்டும். தடுக்கவில்லை!

அதை விடுத்து இந்த இன உணர்வுப் போராட்டத்தை இழிவுபடுத்திப் பேசுவானேன்?

ஒரு கோடிக்கு மேற்பட்ட கையொப்பங்களைப் பெற்று தி.மு.கழகம், அதனை ஐ.நா. மன்றத்துக்கு அனுப்பி வைத்த போது அன்றைக்குப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள், நியூயார்க் நிருபர்கள் கூட்டத்தில் அந்தச் செயலைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டினார்கள்!

ஆனால் அப்போது நமது முதலமைச்சர், ஒரு முத்தரையர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசியபோது அந்தக் கையெழுத்து இயக்கத்தைக் கேலி செய்தார்!

இப்போதும் அவருக்கு நான் சளைத்தவனல்ல என்பதுபோல், நமது மாநிலத்தின் மின் வெட்டுத் துறை அமைச்சர், தமிழ் ஈழம் அமைவதற்கு ஆதரவளிக்கும் கையெழுத்துகளைக் கழகம் தமிழக

முழுவதும் பரவலாகப் பெறுவது குறித்து சேலத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

இன்று கருணாநிதி ஒரு கோடி கையெழுத்து வாங்குகிறேன் என்கிறார். ஒருத்தரே எத்தனை கையெழுத்து வேண்டுமானாலும் போடலாம். தி.மு.க.வினர் இதெல்லாம் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. மஸ்டர் ரோல் ஊழல் இப்படித்தான் வந்தது.

மின் வெட்டுத் துறை மந்திரியாரின் திருவாசகம் இது! இதனைப் படித்து மகிழக் கூடியவர் ஜெயவர்த்தனேயாகத்தான் இருக்கமுடியும்! இலங்கையில் உள்ள சிங்கள வெறியர் ஏடுகளிலும், இலங்கை அரசின் ஆதரவு ஏடுகளிலும் இந்தச் செய்தியைத்தானே கொட்டை எழுத்துகளில் வெளியிட்டுக் களிப்பார்கள்?

தமிழ் ஈழம் ஆதரவு கையெழுத்துகள் - எல்லாம் மோசடி! தி.மு.க. கையெழுத்து இயக்கத்துக்கு தமிழக அமைச்சர் சவுக்கடி!

இப்படித்தானே இலங்கைத் தமிழரின் எதிரிகள் அவர்தம் ஏடுகளில் எழுதிக் கூத்தாடுவார்கள்!

களத்தில் நிற்கும் கழகத்திற்கு ஆதரவு தர முன்வரா விட்டாலும் - இந்தப் பதவி தேடும் வெளவால்கள் வாயை மூடிக்கொண்டு சும்மாவாவது இருத்தலாகாதா?

என் செய்வது! இப்படிப்பட்டவர்களுக்கிடையிலேதான் இந்த இனத்துக்கு ஆற்ற வேண்டிய பணியை நாம் ஆற்ற வேண்டியிருக்கிறது!

அதில் ஒரு கட்டம்தான் இந்த அறப்போர்!
அதில் ஒரு களம்தான் காஞ்சியில் அமைகிறது!

'தமிழ் ஈழம் மலரும் வரையில் நமது போர்க்குரல் ஓயாது' என ஒலித்தவாறு களம் புகுந்துள்ள கழகக் கண்மணிகளுக்கெல்லாம், என் இதய வாழ்த்துகளைக்கூறி என்னையும் இணைத்துக் கொள்கிறேன் காஞ்சிப் போர்முனையில்!

அன்புடன்

மு.க.

14-05-1985

1309. இந்த மே திங்கள் பதினான்காம் நாள்!

உடன்பிறப்பே,

இன்று மே திங்கள் பதினான்காம் நாள்! இந்த நாளுக்குத் தமிழ் இன வரலாற்றில் ஒரு பெரும் சிறப்பு உண்டு! ஈழத் தந்தை செல்வநாயகம் அவர்கள், இலங்கையில் தமிழ் ஈழம் எனும் தனி நாடு சிங்களவர் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டுமென்று இலங்கைப் பாராளுமன்றத்தில் முழங்கியது 1976ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாளில்தான்!

அந்த எழுச்சிமிகு நாளில் - ஆம், மே பதினான்காம் நாளில் தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு - "Tamil Ealam Supporters Organisation" டெசோ எனப்படும் ஒரு ஏற்றமிகு அமைப்பின் பணிகளைத் தொடங்குகிறோம் என்கிற போது பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. நேற்றைய தினம் 13.5.85 நானும், பேராசிரியர் அவர்களும், தளபதி வீரமணி அவர்களும், காமராஜ் காங்கிரஸ் தலைவர் நண்பர் நெடுமாறன் அவர்களும் கலந்துரையாடி இந்த அமைப்புக்கு வடிவம் கொடுத்து, இன்று 14.5.85 முதல் அமைப்பின் பணிகள் தொடங்கப்படுகின்றன.

டெசோ எனப்படும் தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பின் குறிக்கோள்களை வடித்தெடுத்து அறிவித்திருக்கிறோம்.

1 உரிமை பறிக்கப்பட்டு இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு வரும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்வதற்குத் தமிழ் ஈழத் தனி நாடு அமைப்பது தவிர வேறு தகுந்த வழியில்லை என்ற உண்மையை இந்தியாவின் பிற மாநிலங்களும், உலக நாடுகளும் உணரச் செய்வதற்கும், தக்க ஆதரவு திரட்டுவதற்கும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

2 தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு உதவுதல்.

3 இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ள தமிழர்கள் அனைவருக்கும் உரிய உதவிகள் கிடைக்க ஆவன செய்தல்.

இந்தக் குறிக்கோள்களுடன் உதயமாகியுள்ள இந்த அமைப்பின் பணிகள் இன்று முதல் மலர்கின்றன! தமிழ் ஈழம் மலரும் வரையில் இன்று மேற்கொண்டுள்ள பணிகள் ஓயமாட்டா என்ற உறுதியுடன் அடியெடுத்து வைக்கும் அமைப்பாகும் இது!

காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தந்தை செல்வா அவர்கள், சிங்கள ஆதிக்கத்தின் கோரப் பிடியில் இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து உரிமைகள் பறிக்கப்பட்டு கடைநிலைக் குடி மக்களாக ஆக்கப்படுவதைக் கண்டிக்கும் வகையில், 1972ஆம் ஆண்டு தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

அப்பொழுது அவரும், அவரைப் பின்பற்றியவர்களும் சுயாட்சி என்ற கொள்கையை வலியுறுத்தியதோடு - காங்கேசன் துறை இடைத்தேர்தலில் அந்தக் கொள்கையை மையமாக வைத்துச் சிங்கள அரசின் கட்சியினர் போட்டியிடத் தயாரா என்றும் அறைகூவல் விடுத்தனர்.

பின்னர் மூன்றாண்டுகளுக்குப் பிறகுதான், காங்கேசன் துறை இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அப்போது தந்தை செல்வா அவர்கள் தமிழ் ஈழம் என்ற கொள்கையை முன் வைத்து இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்றார், 1975இல்!

அதன் தொடர்பாகத்தான் 1976 மே திங்கள் 14ஆம் நாள் ஆம் - இதே நாளில் இலங்கைப் பாராளுமன்றத்தில் தனித்தமிழ் ஈழ முழக்கத்தைச் செய்தார்!

ஏற்கனவே இலங்கையை ஆண்ட உரிமை தமிழனுக்கு உண்டு!

இலங்கையில் தமிழர்களையும், சிங்களவர்களையும் ஒருமைப்பாடு என்ற பெயரால் ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வந்து நிறுத்திவிட்டு வெள்ளையன் வெளியேறினான்.

ஒருமைப்பாட்டின் அடிப்படையில் தமிழ் இனத்துக் குரிய உரிமைகள், மொழி, கலாச்சாரப் பாதுகாப்பு அனைத்தும் கிட்டும் என்று முதலில் எதிர்பார்த்ததற்கு மாறாக, சிங்களவர்களின்

மொழி ஆதிக்கமும், இனவெறியும், தமிழர்கள் தங்களுக்கென இருந்த தமிழர் ஆட்சியை மீண்டும் பெறவேண்டுமென்ற துடிப்பைத்தான் நிலைமைகள் உருவாக்கின!

அவர்களது உரிமைக்குரலை அடக்குவதற்கு இலங்கை அரசு, தனது ராணுவத்தைக் கொண்டே அப்பாவித் தமிழ் மக்களைக்கூட நாள்தோறும் கொன்று குவித்து வருகிறது.

தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து கவனித்தால் ஒரு உண்மை தெளிவாகும்.

அவர்கள், தங்களின் இன மக்களின் மீது கொடுந்தாக்குதல் நடத்தும் சிங்கள ராணுவத்தினரைத் தாக்குகிறார்களே தவிர - சிங்களப் பொதுமக்கள் யாருக்கும் இதுவரை சிறு தொல்லையும் கொடுத்ததில்லை.

ஆனால் அதற்கு மாறாக, சிங்கள வெறியர்களும், ராணுவத்தினரும் விடுதலைப் போராளிகள் அல்லாத தமிழ்ப் பெருமக்களையும், அவர்தம் வீடுகளையும், ஊர்களையும் கூட, அழித்திடும் வேலையில் அயராது ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் ஈழம் அமைவது தவிர, அங்குள்ள தமிழர்களின் உரிமைகள் காப்பாற்றப்பட வேறு வழியே இல்லை என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

அந்தக் கருத்துக்கு ஆதரவு தேடவே, டெசோ அமைப்பு உருவாகியுள்ளது!

அந்தக் கருத்துக்கு உடன்பாடுடையவர்கள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்க இருக்கிறார்கள்.

அந்தக் கருத்தை வலியுறுத்தி, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துவதற்காகவே தி.மு.கழகம் இப்போது அறப்போர்க்களத்தில் அணிவகுத்து நிற்கிறது!

இதுவரையில் எட்டு மாவட்டங்களில் பதினேழாயிரம் கழகக் கண்மணிகள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இன்னுமுள்ள ஒன்பது மாவட்டங்களிலும், புதுவையிலும் நடைபெறுகிற அறப்போர் மறியலில் பல்லாயிரக்கணக்கானோர் ஈடுபட இருக்கின்றனர்!

முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் இலங்கையில் தமிழ் ஈழம் அமைவதற்காகவும், அங்கு நடைபெறும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தாது மெத்தனம் காட்டும் மத்திய அரசைக்

கண்டிப்பதற்காகவும் அடக்கு முறையேற்றுச் சிறையில் அடைபடுகிறார்கள் என்பது விளையாட்டான காரியமல்ல!

பொறுப்புள்ள அரசுகள் சிந்தித்து பார்க்க வேண்டிய ஒன்றாகும்!

இதில் மத்திய அரசு மௌனம் சாதிக்கிறது!
மாநில அரசோ கேலி பேசிக் கொண்டிருக்கிறது!

தமிழ் ஈழம் என்ற கோரிக்கை இரு அரசின் ஆளும்கட்சி களுக்கும் ஏற்புடையதல்ல என்று அவைகள் கூறலாம்.

ஆனால், இலங்கையில் நாளும் நடைபெறும் இனப் படுகொலை இப்படியே தொடர்ந்துகொண்டே போவதா?

தமிழ் ஈழக் கோரிக்கையை நாம் வலியுறுத்துகிற போது - இந்தியாவிலும் தனித் தமிழ் நாடு கேட்பது போன்ற உணர்வு ஏற்படுகிறதோ என்று ஐயத்திற்கு ஆட்பட்டு கருத்துகள் அறிவித்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சிகூட, கழகம் நடத்துகிற போராட்டத்தில் தமிழ்நாடு அரசின் அணுகுமுறை கண்டனத்திற்குரியது என்பதை தெளிவாக்கியிருக்கிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் ஏடான தீக்கதிர் தீட்டியுள்ள தலையங்கத்தில் சில பகுதிகள் வருமாறு:-

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக மறியல் போராட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள தி.மு.க.வினர் மீது விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சென்னை நகர போலீஸ் கமிஷனர் மிரட்டியுள்ளார்.

முன்கூட்டியே கைது செய்வது என்ற பெயரில், நடுஇரவில், தி.மு.க. தொண்டர்களது வீடுகளுக்குச் சென்று கைதுசெய்யும் அடாத செயலும் நடைபெறுகிறது.

மணப்பாறை நகரில் தி.மு.க.வினரை கைது செய்து, கையில் விலங்கு மாட்டித் தெருவில் இழுத்துச் சென்றதாகவும் தகவல் வந்துள்ளது.

தி.மு.க.வினர் ஏதோ பெரிய சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டதாக நினைத்து குற்றப் பத்திரிகை ஜோடிக்கப் போவதாகக் கூறுவது இந்த அரசின் வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தையே காட்டுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர்களையும், ஊழியர்களையும் பழி வாங்கும் நோக்குடன் இதற்கு முன்பும் பல நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. அதே பாதையை இப்போது தி.மு.க. போராட்டத்திலும் அ.தி.மு.க. அரசு கடைப்பிடிக்கிறது!

இவ்வாறு மார்க்சிஸ்டு ஏடு தீக்கதிர் தலையங்கம் தீட்டி, மாநில அரசின் பழிவாங்கும் போக்கைக் கண்டித்துள்ளது. அந்தக் கட்சியின் சார்பிலும் கண்டன அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் ஈழம் என்ற கோரிக்கையில் சில கட்சிகளுக்கு கருத்து மாறுபாடுகள் இருப்பினும், இலங்கையில் தமிழர் மீது அந்நாட்டு அரசே நடத்தும் தாக்குதலை யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்!

அந்தக் கருத்தை எதிரொலிக்கும் கழகத்தின் மீது இங்குள்ள மாநில அரசு எடுத்திடும் பழிவாங்கும் நடவடிக்கைகளையும், இழிதகை வசைமாரிகளையும் - உரிமைக்குக் குரல் கொடுக்கும் எந்தக் கட்சியினரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கண்டன முழக்கமாகும். அதேபோல மாநில ஜனதாக் கட்சியும், தனது கண்டனத்தை மாநில அரசுக்கு எதிராக வெளியிட்டுள்ளது.

ஏதோ நமது அணியில் இருந்த கட்சிகளுக்கும் கருத்து மோதல் வந்துவிட்டது எனக் கனவு கண்டு கழகத்தை ஏளனம் செய்த ஆட்சியாளர்களுக்கு இப்போதாவது அடக்குமுறை ஒடுக்குமுறைகளைக் கண்டிக்க நாம் ஓரணியில் நிற்போம் என்பது புலனாகும் என்று கருதுகிறேன்.

தமிழ் ஈழம் இலங்கைத் தமிழர்களால் தவிர்க்க முடியாத ஒன்று!

அவர்கள் வாழ வேறு வழியே இல்லை!
அதற்காக நமது குரல் தொடர்ந்து ஒலிக்கும்!

அதேபோல இங்கே மத்திய அரசு - மாநில அரசு - இவற்றின் மக்கள் விரோதக் கொள்கைகளை ஓரணியில் நின்று எதிர்ப்போம்!

அன்புடன்

மு.க.

15-05-1985

1310. ஜூன் மூன்றாம் நாள்!
ஈழத்தமிழர் உரிமை நாள்!

உடன்பிறப்பே,

முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட உன்னைப் போன்ற உடன் பிறப்புகளோடு, கொளுத்தும் வெயிலில் பகலில் மட்டுமல்ல, இரவிலும் அந்த வெம்மையை கிரகித்து வைத்து அக்கினிப் பிழம்பாய்த் தகிக்கும் குகைகளை நிகர்த்த சிறைக்கூண்டுகளில் இலங்கைத் தமிழ் இனத்தின் அழிவைத் தடுத்திட வேண்டி அடைபட்டுக் கிடந்ததை எண்ணிப் பெருமை அடைகிறேன்.

அரசாங்கமே ஆணையிட்டு நம்மையெல்லாம் விடுதலை செய்திருந்தால் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுக்குக் கோபம் வருமேயென்று பல மைல் தொலைவில் உள்ள நீதிமன்றங்களுக்கு இழுத்துச் சென்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அறப்போர் நடத்துவது கூடத் தண்டனைக் குரியது என்பதை நிலைநாட்டி, நம்மையெல்லாம் தண்டித் ததாக அறிவித்தும், தண்டனைக் காலம் முடிந்து விட்டதால் விடுதலை செய்வதாகக் கூறியும் இங்குள்ள அரசின் தமிழின உணர்வை? வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பரவாயில்லை! பாமர மக்களின் ஏமாளித்தனத்தைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய காலகட்டம் வரையில் இவர்களின் பரிபாலனம் நடக்கட்டும்!

பதினைந்து நாட்கள் உன்னுடன் தொடர்பற்றிருந்த நான், இன்று கூண்டிலிருந்து வெளிவந்ததும் உணர்வுபூர்வமாக சிலவற்றைக் கூற விரும்புகிறேன். விழியில் வழியும் நீரைத் துடைத்துக் கொண்டு!

திருச்சி சிறையில் தஞ்சைத் தரணியின் கழகக் கண்மணிகள் நூற்றுக்கணக்கானோர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப் பட்டதும், காயமுற்று அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்

பட்டதும், எரிநெருப்பில் எனது உடன்பிறப்புகள் நாலாயிரம் பேரையும் கொளுத்திச் சாம்பலாக்கி விடத் திட்டமிட்டு, அவர்கள் தப்பி விட்ட காரணத்தால் அவர்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டிருப்பதும் - என் இதயத்தைப் பிளக்கும் செய்திகள் மட்டுமல்ல. இந்த இனத்திற்கு ஏற்பட்டுள்ள கடுமையான சோதனையைச் சுட்டிக்காட்டும் நிகழ்ச்சிகளாகவும் அல்லவா அமைந்துள்ளன!

நெஞ்சுறுதியுடன் சிறை சென்று, நிலைகுலையாமல் கொடுமைகளை ஏற்றுக் கொண்ட முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட உடன்பிறப்புகளின் கரங்களை எடுத்து என் கண்களில் ஒத்திக் கொள்கிறேன்.

சிறைப்பட்டேன் என்ற செய்தி கேட்டவுடன் காஞ்சி நகரத்தில் நீதிமன்றத்திற்கு முன்பே தன்னைத் தணலால் கருக்கிக் கொண்ட தம்பி வேணுவை நினைக்கிறேன்! ஒரு பாட்டாளி வாலிபன் - எவ்வளவு பாசம் என் மீது! மனைவியையும், மழலையையும் தவிக்க விட்டுவிட்டுப் போய் விட்டானே! அய்யோ! நெஞ்சம் புண்ணாகிறது!

திருச்சியில் பாலு என்ற ஒரு தம்பி! அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று வா.ரா. அவர்களைப் பற்றி அண்ணா எழுதினாரே! அதைப் போல அக்கிரகாரத்தில் பாலுவைப் போன்ற அதிசயத் தியாகிகளும் உண்டு என்பதை அந்த இளைஞன் நிரூபித்து விட்டான். பழுத்த பழங்களான அன்புப் பெற்றோர்களுக்கு ஒரே அருமை மகன். எங்கோ ஒரு மூலையில் இருந்து என் மீது பாசத்தைப் பொழிந்து கொண்டிருந்த இனிய தம்பி என் பொருட்டுத் தீயிட்டுக் கொண்டு கருகியிருக்கிறானே! அவன் இட்ட தீ, அவனை மட்டுமல்ல - இன்னமும் என் உள்ளத்தை சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில் அப்புணு என்றோர் தம்பி! எத்தனை முறை கெஞ்சிக் கெஞ்சிக் கூறி விட்டேன். இப்படியொரு தியாகம் தேவையில்லையென்று! ஆனாலும் கேட்காமல் அரிமா உருவத்தினன் அப்புணுத் தம்பி, தன்னை அக்கினிக்குத் தந்து, இந்த அண்ணன் மீதுள்ள ஆசையை வெளியிட்டிருக்கிறானே! என் நெஞ்சம் வெந்து போகும் செயலைச் செய்திருக்கிறானே!

வலங்கிமான் ரங்கன் தூக்கிட்டுக் கொண்டதும், மதுரை பொன்னையாவும், திருச்சி பாத்திமாவும் அதிர்ச்சியால்

மரணமுற்றதும் - இந்தச் சாமானியன் மீது அவர்கள் வைத்திருந்த சகோதர பாசத்தினால்தானே!

இந்த நேரத்தில் எனக்கு அறுபத்து இரண்டாவது பிறந்த நாள் என்று, சென்னை மாவட்டச் செயலாளர் தம்பி பாலுவும், இலக்கிய அணியின் கவியரசு பொன்னிவளவனும் ஏதேதோ விழா ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

மற்ற மாவட்டங்களிலும் இவ்வாறு முயற்சிகள் நடை பெறுகின்றன.

இலங்கைத் தமிழர்களை இழந்திடும் துக்கத்தோடு, என் பொருட்டு ஆறு பேர் உயிர் விட்ட நிகழ்ச்சியையும் எண்ணி எண்ணி அழுது கொண்டிருக்கிறேன் நான்!

எனவே இந்த ஆண்டு ஜூன் மூன்றாம் நாள் - என் வீட்டில் பிறந்தநாள் நிகழ்ச்சியின் சாயல் கூடத் தெரியக்கூடாது!

வாழ்த்துக் கூற வருகிறேன் என்றோ, மாலை அணிவிக்க வருகிறேன் என்றோ யாரும் வந்து என் மனத்தை நோகச் செய்ய வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டங்கள், நிகழ்ச்சிகள், கொடியேற்றுதல் - கழக அமைப்புகளின் சார்பில் என் பிறந்தநாளுக்காக நடத்திட வேண்டுமென விரும்பினால், ஈழத் தமிழர் உரிமை நாள் என்ற பெயரில் அந்த நாளைக் கொண்டாட வேண்டுகிறேன்.

அதுவே, எனது உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் எனது அறுபத்து இரண்டாவது பிறந்த நாளுக்கு எனக்குத் தரும் பரிசாகும்!

என் உடன்பிறப்புகள் ஆறு பேர், எனக்காக - இந்தச் சாதாரண மனிதனுக்காக, உயிரையே அர்ப்பணித்திருக்கும் போது எனக்குப் பிறந்தநாள் விழாவா?

வேண்டாம்! தயவு செய்து யாரும் என்னைத் தேடி சென்னைக்கு வராதீர்கள்!

இருந்த இடத்தில் இருந்தே அந்நாளை, ஈழத் தமிழர் உரிமை நாள் என எழுச்சியுடன் நடத்திடுங்கள்.

அன்புடன்

மு.க.

01-06-1985

1311. உயிருள்ளவரையில் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருப்பேன்!

இன்று எனக்கு அறுபத்து இரண்டாவது பிறந்த நாள்!

இந்தநாளை ஈழத் தமிழர் உரிமை நாளாகக் கொண்டாடுமாறு கழக உடன்பிறப்புகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

என்னை ஆளாக்கிய பெரியார், அரவணைத்து வளர்த்த அண்ணா - இருவரும் நீங்காத் துயில் கொண்டிருக்கும் இடம் சென்று, அவர்கள் என் நெஞ்சில் பதிய வைத்திருக்கும் குறிக் கோளில் வெற்றி பெறுவதற்காக எத்தகையச் சூழ்நிலையிலும், சோதனையிலும் நிலைகுலையாமல் நிமிர்ந்து நிற்பேன் என்று உறுதி எடுத்துக் கொள்வதும், இந்த எளியோன் பொருட்டு தங்கள் உயிரையும் தருவதற்குத் தயக்கமின்றி, என்னையல்ல - நான் ஏற்றுக்கொண்டிருக்கிற இயக்கக் கொள்கைகளைப் பின்பற்றுகிற உடன்பிறப்புகளில் என்னையும் ஒருவனாக ஆக்கிக் கொள்கிற அளவுக்கு என்னை ஈன்றெடுத்த தாய் தந்தைக்கு நன்றி கலந்த வணக்கம் செலுத்துவது மட்டுமே இந்த ஆண்டு பிறந்த நாளில் நான் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகளாகும்.

இந்திய நாட்டில் உண்மையான கூட்டாட்சித் தத்துவம் மலர்ந்து, சுயாட்சி பெற்ற மாநிலங்கள் அமைந்திட வேண்டு மென்ற குரலுக்கு வலுவேற்றிடவும், பிற மொழி ஆதிக்கத் திலிருந்து தமிழ்மொழிக்கும், தமிழர்களுக்கு விடுதலை வேண்டுமென்ற நீண்டகால முழக்கம் நிறைவேறிடவும், ஏற்றத்தாழ்வற்றதும், மூடநம்பிக்கையற்றதுமான அறிவார்ந்த சமதர்ம சமுதாயம் உருவாகிடவும், மக்களாட்சியின் மாண்பு கள் சிதைக்கப்படாமல் காப்பாற்றப்படவும், அரசியலில் பெருந்தன்மையும், பண்பாடும் போற்றப்படவும், ஈழத் தமிழர் களின் உரிமைப்போராட்டம் வாகை சூடிடவும், இளைய தலை

முறையினர் எழுச்சி நடைபோட்டு முன்னேறிடவும், என் தொண்டு தொடருமென்று இந்தப் பிறந்த நாளில் மீண்டும் ஒருமுறை உறுதி கூறுகிறேன்.

கழிவுப் பொருள்களைத் தனது வேரில் எருவென ஏற்றுக் கொண்டு, கனியும் மலரும் வழங்குகின்ற தருக்களைப் போலவே - கடுமையானதும், இழிவானதுமான எதிர்ப்புகளையும், ஏசல்களையும் ஏற்றுக்கொண்டு, நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணியாற்றுவதே உண்மையான பொதுவாழ்வின் இலக்கணம் என்பதை ஒருக்கணமும் மறவாமல், எனதருமைத் தமிழ் மக்களே! உங்களுக்காக இந்த உயிர் உள்ள வரையில் உழைத்துக் கொண்டிருப்பேன்.

அன்புடன்

மு.கருணாநிதி

03-06-1985

1312. அறிவகம், அன்பகம் பற்றி அறிஞர் அண்ணா!

உடன்பிறப்பே,

1971ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பெருந்தலைவர் காமராஜரும் - மூதறிஞர் ராஜாஜியும் ஓரணியில் நின்று திராவிட முன்னேற்றக் கழகத்தை எப்படியும் ஆட்சிப் பொறுப்பில் இருந்து இறக்கி விடுவதென்று சபதமேற்றுக் கொண்டு களம் புகுந்தனர். பெரியார் அவர்கள் நம்பக்கம் இருப்பதாலேயே - சேலத்தில் நடைபெற்ற திராவிடர் கழகத்தின் ஊர்வலத்து விளைவி னாலேயே, தி.மு.கழகம் தோற்றுவிடுமென்று தமிழகத்து ஏடுகள் பலவும் அறுதியிட்டுத் தலையங்கங்கள் தீட்டி, செய்திகள் வெளியிட்டு கழகத்தின் தோல்விச் செய்தியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

ஆனால் அவர்கள் எண்ணியதற்கு முற்றிலும் மாறாக கழகம், சட்டப்பேரவையில் 184 உறுப்பினர்களைப் பெற்று மாபெரும் வெற்றியை ஈட்டியது!

காமராஜர் தலைமையில் இருந்த காங்கிரஸ் கட்சி 15 இடங்களை மட்டுமே பெற்று சட்டமன்றத்தில் நுழைந்தது.

184 இடங்களைப் பெற்றுவிட்டோம் என்ற ஆணவமோ, மமதையோ அப்போது கழகத்துக்கு ஏற்படவில்லை. எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசும் இறுமாப்பு எள் முனை யளவும் நம்மை எட்டிப் பார்த்திடவில்லை. 1967இல் காங்கிரஸ் தோற்றபோது, கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்று அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் காங்கிரசின் சிறப்பைக் குறிப்பிட்டாரே, அதே போலத்தான் காங்கிரசுக்கும் கழகத்

துக்கும் கடுமையான கருத்து மோதுதல்கள் இருந்த போதுங் கூட, அண்ணா அவர்களின் வழி நின்று, காங்கிரஸ் கட்சியையும் அதன் தலைவர்களையும் அரசியல் பண்பாட்டுடன் மதித்தே நடந்தது, கழக அரசு!

அதற்கு எடுத்துக்காட்டுத்தான், காங்கிரஸ் உறுப்பினர்கள் 15 பேர்களாக ஆகிவிட்டிருந்தும் கூட, அவர்கள் 1967க்கு முன்பு ஆளுங்கட்சியாக இருந்தபோது ஒதுக்கப்பட்ட சட்ட மன்றக்கட்சி அலுவலகத்திலேயே அவர்கள் தொடர்ந்து அலுவலகம் வைத்துக் கொள்ள கழக அரசு ஒப்புதல் அளித்தது.

அந்த அலுவலகத்தில் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் மட்டுமல்லாமல் - அந்தக் கட்சி தொடர்புடைய பல்வேறு கூட்டங்களும் நிகழ்ச்சிகளுங்கூட நடைபெற்றிருக்கின்றன.

15 பேருக்கு அவ்வளவு பெரிய இடமா? என்று கழகத்தினர் யாரும் கேட்கவில்லை! அப்படிக் கேட்கவேண்டும் என்ற அற்பபுத்தி ஆட்சியில் உள்ளவர்களுக்கோ, அல்லது அதிகாரிகளுக்கோ கூட ஏற்படவில்லை.

உடனடியாக காலி செய்க! எனத் தாக்கீது அனுப்பியிருக்கலாம்!

காலி செய்யத் தயங்கினால், இன்ன தேதியில், இத்தனை மணிக்கு பலவந்தமாக வெளியேற்றப்படுவீர்கள் என்று எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியிருக்கலாம்!

அதிகாரிகளையும், அலுவலர்களையும் ஏவிவிட்டு சீல் வைத்திருக்கலாம்!

அலுவலகத்தில் இருந்தவர்களைக் கைது செய்துவிட்டு, இழுத்துப் பூட்டுப் போட்டிருக்கலாம்!

184 இடங்களில் வெற்றி பெற்றவர்களாயிற்றே!

அதனால் அந்த அதிகாரவெறி பிடித்து அப்போது ஆடியிருக்கலாம் அல்லவா?

ஆனால், உடன்பிறப்பே! கழக ஆட்சியில் இப்படிப்பட்ட கேவலமான செயலை நினைத்துக் கூடப்பார்க்கவில்லை!

இன்று என்ன நடக்கிறது பார்த்தாயா?

அகில இந்திய அளவில் வளர்ந்துள்ள கட்சிகளாகவும், தேர்தலில் தனிச்சின்னம் ஒதுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாகவும் விளங்குகின்ற ஜனதா, மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு அலுவலக அறைகளே தர முடியாதாம்! சீல் வைத்துப் பூட்டி அந்த அறைகளில் இருந்த பொருள்களை வெளியே தூக்கி எறிந்துவிட்டார்கள்!

அண்ணாவுக்குப் பிறகு யாரைக் கட்சித் தலைவனாக ஏற்றுக் கொண்டிருந்தார்களோ - யாரை முதலமைச்சராக ஏற்றுக்கொண்டு அமைச்சர்களாக பொறுப்பேற்றிருந்தார்களோ - அந்தக் கருணாநிதியின் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சிக்கு இப்போதுள்ள இடம் பொருத்தமானதல்ல. சிறியதோர் அறைக்குச் சென்றிடுக என்று அன்று அமைச்சர்களாக இருந்தவர்களும், கழகப் பொறுப்புகளில் இருந்தவர்களும் இன்றைக்கு ஏறியிருக்கிற கோபுரம் நிரந்தரமானது என எண்ணிக்கொண்டு, நம்மைப்பார்த்து, போ வெளியே! என்று கூறியது மட்டுமல்ல - போலீசாரைவிட்டு என்னையும், பேராசிரியரையும் வெளியே இழுத்துவிட்டு - தங்களது நன்றி உணர்வையும், அரசியல் நாகரிகத்தையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

எங்களையெல்லாம் கைது செய்து போலீஸ் வேனிலே ஏற்றிக் கமிஷனர் அலுவலகத்திற்குக் கொண்டு சென்றதும், மேலிடத்திலிருந்து ஒரு உத்தரவு வந்ததாம்!

தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகம் என்ற பெயர்ப் பலகையை உடைத்தெறியுங்கள் என்பதுதான் அந்த உத்தரவு!

1962ஆம் ஆண்டு அண்ணா அவர்களால் அந்த அலுவலக முகப்பில் திறந்து வைக்கப்பட்ட அந்தப் பலகையை மேலிடத்து உத்தரவின்படி, அதிகாரிகள் சுக்கல் சுக்கலாக உடைத்து நொறுக்கி அதன்மீது பூட்ஸ் காலுடன் ஏறி நின்று கெக்கலி கொட்டினார்களாம்!

நமது சட்டமன்றக் கட்சி கூட்டுவதற்கு இடமில்லாமற் போய்விடவில்லை! அதுபோலத்தான் ஜனதா, மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, முஸ்லிம் லீக் கட்சிகளுக்கு சொந்தத்தில் பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன!

ஆனால் இது, சட்டமன்றக் கட்சிகளின் உரிமைப் பிரச்சினை! அதற்காகத்தான் குரல் கொடுக்கிறோமே தவிர, யாரும் இப்போது நடுத்தெருவில் நின்று கொண்டிருக்க வில்லை.

கட்சிப் பணிகளைக் கிளைக்கழகத்திலிருந்து பல்வேறு அமைப்புகளுடன் தொடர்புகொண்டு ஆற்றிட, ராயபுரத்தில் கழகத்திற்கு 'அறிவகம்' என்ற அலுவலகம் இருக்கிறது.

தற்காலிகமாக சட்டமன்றக் கட்சி நடவடிக்கைகள் குறித்துக் கலந்துபேசிட, தேனாம்பேட்டையில் அண்ணா சாலையில் 'அன்பகம்' என்ற அலுவலகம் இருக்கிறது!

சட்டமன்றக் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே வருவதில்லை.

தொகுதி குறைபாடுகளைக் கூறவும், நாட்டு நிலைகளை எடுத்துரைக்கவும் ஏராளமான பொதுமக்களும் வருவதுண்டு!

அந்த வசதிகளை அன்பகத்தில் முழுமையாகப் பெற முடியாவிட்டாலும் தற்காலிகமாக நமது பணிகள் இப்போது அங்கே நடைபெறுகின்றன!

1964ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் நாள் மாலை அன்பகம் கட்டிடத்தை திறந்து வைத்து அண்ணா அவர்கள் ஆற்றிய உரையை இந்த நேரத்தில் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது.

இந்த அழகிய கட்டிடம், நமது கழக வளர்ச்சியின் ஓர் அத்தியாயமாகும்.

முதலில், வடசென்னையில் நாம் வாங்கிய கட்டிடத்துக்கு 'அறிவகம்' என்று பெயர் சூட்டினோம்.

அந்த 'அறிவகம்' அரசியல் உலகில் நன்கு அறிமுகம் ஆகி, எல்லா மக்களாலும் மதிக்கத்தக்க வளர்ச்சியை தி.மு.கழகத்திற்குப் பெற்றுத் தந்திருக்கிறது.

நம்முடைய வளர்ச்சியின் பலனாக - கழக அலுவலகம் சென்னையின் ஒரு பகுதியில் மட்டும் இருந்தால் போதாது என்று கருதி - 'நன்கு வளர்ச்சி பெற்றுள்ள தென்சென்னைப் பகுதியிலும் ஒரு கட்டிடம் தேவை' என்று நினைத்ததால், அதை வாங்கியிருக்கிறோம். தம்பி கருணாநிதியைப் பொருளாளராகப் பெற்ற அன்றே, இதைப்போன்ற சொத்துகளை யெல்லாம் கழகத்துக்கு அவர் சேர்ப்பார் என்று நம்பியது வீண்போகவில்லை.

நான் மருத்துவமனையில் இருந்தபோது இந்தக் கட்டிடம் வாங்கப்பட்டது.

பரோலில் விடுதலைப் பெற்று வந்து மீண்டும் சிறைக்குப் போவதற்கு முன் இந்தக் கட்டிடத்தைப் பார்த்து விட்டுத்தான் சென்றேன்.

சிறையிலிருந்து விடுதலை பெற்றுவரும்போது இந்தத் திறப்பு விழா நடைபெறுகிறது.

இதற்குப் பெயர் சூட்டுமாறு நண்பர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலில் நாம் வாங்கிய கட்டிடத்திற்கு 'அறிவகம்' என்று பெயர் சூட்டினோம்.

அறிவிலிருந்துதான் மற்ற எல்லா முயற்சிகளும் பிறக்கும்.

அறிவுத் துணைக்கொண்டு நாம் கழகத்தைத் துவக்கினோம் என்பதை ஊருக்கும், உலகுக்கும் அறிவிக்க 'அறிவகம்' என்று பெயரிட்டோம்.

சிலருக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கலாம். 'அறிவகத்தில் உள்ளவர்களுக்குதான் அறிவு உண்டா?' என்று.

அங்கு வருவோருக்கெல்லாம் அறிவு வரும்.

வேறு எதையும் நம்பாது, அறிவை மட்டுமே நம்பி கழகத்தைத் துவக்கியதால் அதற்கு 'அறிவகம்' என்று பெயர் வைத்தோம்.

இந்தக் கட்டிடத்திற்கு 'அன்பகம்' என்று பெயர் சூட்டுகிறேன்.

அறிவிலிருந்து பிறப்பது அன்பு.

'அறிவிலிருந்து அன்பு மட்டுமா பிறக்கும்? அதிகாரம் பிறக்காதா? அகம்பாவம் பிறக்காதா?' என்று கேட்கலாம்.

வேறு எது பிறந்தாலும் அன்பு பிறப்பதுதான் இயல்பு.

பெரும்பாலான மிருகங்களுக்கும், மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

'பெரும்பாலான மிருகங்களுக்கு' என்று ஏன் குறிப்பிட்டேன் என்றால், சில மிருகங்களுக்கு அன்பு பிறப்பு இயல்பு.

அன்பகம் திறப்பு விழாவில் அண்ணா நிகழ்த்திய உரையை ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தாயா?

அறிவிலிருந்து அன்பு, சில மிருகங்களுக்குக் கூடப் பிறக்கிறது என்று அண்ணா கூறுவதிலேயிருந்து அந்த அன்பு சில மனிதர்களுக்குப் பிறப்பதில்லை என்பதை எவ்வளவு லாவகமாக எடுத்துக் காட்டியிருக்கிறார்!

அறிவிலிருந்து அன்புக்குப் பதிலாக அதிகாரம் பிறக்கும் - அகம்பாவம் பிறக்கும் என்பதற்கு உதாரண புருடர் களாகத்தானே இன்றைக்கு ஊராள்வோர் திகழ்கிறார்கள்?

உடன்பிறப்பே, நீ கேட்பாய் - அறிவு என ஒன்று இருந்தால்தானே அதிலிருந்து பிறப்பது, அன்பா? அதிகாரமா? அகம்பாவமா? என்பது தெரியும் என்று!

அறிவு இருக்கிறதோ, இல்லையோ இங்குள்ள ஆட்சி யாளர்களுக்கு அதிகார போதையும், அகம்பாவ மமதையும் தலைக்கேறி நிற்கிறது என்பதை எளிதில் உணர முடிகிறது!

அதனால்தான் அரசியல் கட்சிகளை சுயேட்சைகள் என்கிறார்கள்!

அரசு தலைமைச் செயலகத்தையே அந்தப்புரமாக்கிக் கொள்கிறார்கள்!

இட்லர்
இடிஅமீன்
லூயிமன்னன்
எகிப்து நாட்டு பரூக்

இவர்களின் ராஜபோக வாழ்வும், அதிகார ஆர்ப்பாட்டமும் கள்ளி முளைத்த பள்ளத்தாக்குகளில், கண்ணுக் கெட்டாத தொலைவில் வீழ்ந்துவிட்ட வரலாறுகளை இவர்கள் படிக்காததைப்போல நடிக்கிறார்கள்!

ஒன்று மட்டும் உறுதி! அந்தச் சோக வரலாற்றின் சொந்தக் காரர்களாக இவர்களும் ஆவதற்கான நாள் வெகு தூரத்தில் இல்லை!

அறிவிலிருந்து அன்பு பிறக்கவேண்டுமென்றார் அண்ணா!

அகம்பாவம்தான் பிறக்குமென்று செயலில் காட்டுகிறார்கள் ஆட்சியாளர்கள்!

அதன் விளைவையும் அன்பகத்திலிருந்தவாறு பொறுத் திருந்து பார்ப்போம்!

அன்புடன்

மு.க.

07-06-1985

1313. நற்பணி - ஓர் அருந்திருப்பணி!

உடன்பிறப்பே,

சென்னை மாநகர் அண்ணா சாலையில் தி.மு.க. அறக் கட்டளையின் பெயரால் அண்ணா அறிவாலயம் அமைத்து, அதற்கென வாங்கப்பட்டுள்ள இடத்தில் ஆதரவற்ற சிறார் களுக்கென உணவு, உறைவிடம், கல்வி ஆகியவற்றை வழங்கவும், இலவசக் கண்ணொளி வழங்கும் நிலையம் ஒன்றை ஏற்படுத் தவும், மணவிழாக்கூடம் ஒன்றை உருவாக்கவும், நூல் நிலையம், படிப்பகம், இலக்கிய வரலாறு அறிவியல் ஆய்வுகளை நடத்துகின்ற நிறுவனம் ஆகியவற்றை ஏற்படுத்தவும் பணிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பணிகள் முறைப்படி ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டு ஓராண்டுக் காலத்திற்குள் அண்ணா அறிவாலயம் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கிறேன் என்றாலும், இரும்பு, சிமெண்டு போன்ற முக்கியமான பொருள்களின் விலை உயர்ந்துள்ள நிலையில், ஏற்கனவே திட்டமிட்டதற்கு மாறாக, இரட்டிப்புச் செலவு ஏற்படும் என்பதை சிந்திக்கும்போது பெருந் திகைப்புக்கு ஆளாகியுள்ளேன்.

தி.மு.க. அறக்கட்டளைக்கென வங்கியிலிருந்த தொகை போதாமல், மேலும் வங்கி மூலமாகக் கடனும் பெற்றுக் கட்டிடப் பணிகள் வேகமாக நிறைவேறி வருகின்ற எனினும், திட்டமிட்டபடி அண்ணா அறிவாலயம் முழுமை பெற்று அறக்கட்டளைப் பணிகளைத் தொடர வேண்டுமானால் மேலும் பல லட்ச ரூபாய் தேவைப்படுகின்றது.

கட்டிடப் பணிகள் முடிக்கப்படவும், வங்கிக் கடன் வட்டியுடன் அடைக்கப்படவும் - தேவைப்படுகிற தொகை ஒரு கோடி ரூபாயைத் தாண்டும் என்றே தோன்றுகிறது.

உடன்பிறப்பே, அந்தத் தொகையை உன்னிடமிருந்துதான் எதிர்பார்க்கிறேன்.

எப்படிக் கேட்பது என்று பலமுறை யோசித்த பிறகுதான் - வேறு வழியில்லை என்ற நிலையில் எப்போதும்போல் உன்னிடமே கைநீட்டுகிறேன்.

கொடியேற்றுவிழா, திருமண நிகழ்ச்சி, பொதுக்கூட்டம், இப்படி எல்லாம் கழக விழாக்களிலும் தி.மு.கழக வளர்ச்சி நிதியும், தேர்தல் நிதியும் பெறுவதில் நான் மிகக் கண்டிப்பாக இருந்து உன்னைப் போன்ற உடன்பிறப்புகளைக் கசக்கிப் பிழிந்திருக்கிறேன்.

நினைத்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது! உன்னையே திரும்பத்திரும்ப தொல்லைக்கு ஆளாக்க வேண்டியிருக் கிறதேயென்று!

இருப்பினும் என் இனிய உடன்பிறப்பே, உன்னைத் தவிர வேறு யாரிடத்தில் நான் உரிமையுடன் அணுகமுடியும்? அப்படி அணுகிப் பழக்கமில்லாதவன் என்பதை நீ அறிந்துதானே இருக்கிறாய்!

என் வாழ்நாளின் குறிக்கோள்களிலே ஒன்று! தி.மு.க. அறக்கட்டளை வாயிலாக ஏழை எளியோர்க்கு இயன்றதைச் செய்திடல் - அண்ணா அறிவாலயம் எதிர்காலத்தில் திராவிட இயக்கப் பூஞ்சோலையாக விளங்குதல் - நமது கலை, பண்பாடு, வரலாறு, இலக்கியம் இவை குறித்த ஆய்வுகளேயன்றி - வளர்ந்துவரும் அறிவுயுகத்திற்கு ஏற்றவாறு தமிழ்ச் சமுதாயத்தைப் பக்குவப் படுத்துதல் - இவற்றுக்கான முழுமையான முயற்சிகளை என் கண் மூடுவதற்கு முன்பாக நிறைவேற்றி முடித்துவிட வேண்டுமென்பதுதான்!

தி.மு.க. அறக்கட்டளைக்கு அண்ணா அறிவாலயம் உருவாக்குவதற்காக பெரியதோர் இடம் வாங்கப்பட்டு பத்து ஆண்டுக் காலத்திற்கு மேலாகிவிட்டது என்றாலும் - பல்வேறு இடையூறுகள் இன்னல்கள், சோதனைகள், வேதனைகள் இவைகளின் காரணமாக, கட்டிடங்கள் எழுப்புகிற பணி தாமதமாகி வந்ததை உன்போன்ற உடன்பிறப்புகள் உணர்ந்தே இருக்கின்றீர்கள்.

இப்போது மிகப் பலமான அடித்தளம் அமைக்கப்பட்டு, கட்டிடப் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

திறமைமிக்க பொறியாளர் ஒருவரின் மேற்பார்வையிலும், அனுபவமிக்க ஒப்பந்தக்காரர்களின் செயல்திறனிலும் அண்ணா அறிவாலயம் அழகுற அமைந்து, அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றிடும் காலம் விரையில் வருமென்றே நம்புகிறேன்.

என் நம்பிக்கை வீணாகாமல் காத்திட வேண்டிய பொறுப்பு உனக்கு உண்டல்லவா!

அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க மாட்டாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

உன்போன்ற ஒவ்வொரு உடன்பிறப்பும் உடனடியாக, பத்து ரூபாய்க்குக் குறையாமல் தி.மு.க. அறக்கட்டளை நிதியினை அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பத்து ரூபாய்க்கும் அதிகமாக அனுப்பினால் பெற்றுக் கொள்ள மாட்டாயா? என்று கேட்கக் கூடிய உடன்பிறப்பு நீ என்பதை நான் அறிவேன்.

மு. கருணாநிதி - தலைவர் - தி.மு.க. அறக்கட்டளை - அன்பகம், தேனாம்பேட்டை - சென்னை-600 018.

என்ற முகவரிக்கு நீ அனுப்பி வைக்கும் தொகை, முரசொலி வாயிலாக வெளியிடப்படும்.

மணியார்டர் வாயிலாகவும், அல்லது டிராப்டாகவும் நிதியினை அனுப்புமாறு வேண்டுகிறேன்.

தனிப்பட்ட முறையில் உன் போன்ற உடன்பிறப்புகளே யன்றி கழகத்தின் பல்வேறு அமைப்புகள், அணிகள், சார்பு மன்றங்கள் பெருந்தொகை வசூலித்து குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பியும், அல்லது நேரிலோ வழங்கியும் அதற்கான ரசீதுகளையும் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அமைப்புகளோ, சார்புமன்றங்களோ, அணிகளோ அறக்கட்டளை நிதி வசூலிப்பதெனில் முறைப்படி தலைமைக் கழகத்தில் அனுமதி பெற்று நன்கொடைச் சீட்டுகளில் தலைமைக் கழக முத்திரை பெற்று அந்தப் பணியில் ஈடுபட வேண்டும். ஏற்கனவே நாம் கடைப்பிடித்து வரும் வழக்கப்படி!

ஆயிரம் இரண்டாயிரம் என்று ஒரு சிலர்தான் நிதி வழங்க முடியும்!

அதைவிட அதிகமாக வழங்கக்கூடியவர்கள் மிகச் சிலரே இருப்பர்!

அந்தச் சிலரும் - மிகச் சிலரும் ஆண்டாண்டு காலத்திற்கு அழியாமல் நிலைத்து நிற்கப்போகும் அறக்கட்டளைப் பணிக்கும், அண்ணா அறிவாலயத்திற்கும் பயனுள்ள உதவியளித்திட முந்திக் கொண்டு முன்வரவேண்டுமென விரும்புகிறேன்.

என் உடன்பிறப்புகள், தங்களுக்கிருக்கும் கஷ்டத்திற் கிடையே எப்பாடு பட்டாவது பத்து ரூபாய்க்குக் குறையாத நிதியை - சிறுதுளி பெருவெள்ளமெனக் குவித்திட உடனடியாக முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இருப்பதற்கு இடமில்லாதவர்கள் என்று தவறாகக் கருதி, இருந்த இடத்திலிருந்து அதிகார பலத்தைக்காட்டி, பலவந்தமாகக் கைது செய்து, சீல் வைத்துப் பூட்டிச் சிரித்து மகிழ்கின்றார்கள் சிலர்!

அன்பகம், அறிவகம் - எனும் நல்லகத்துக்குச் சொந்தக் காரர்கள் நாம்!

அந்த இரு இடங்களும் நமது கழகத்தின் பணிகளுக்காக!

அண்ணா அறிவாலயமோ, அறக்கட்டளையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக!

அப்பணி ஓர் அருந்திருப்பணி! அந்த நற்பணிக்குத் துணை நிற்கத்தான் உனக்கு இந்த மடல் எழுதுகிறேன்!

நிதி வழங்கும் பணியை நீ உடன் தொடங்குவாய் என எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

அன்புடன்

மு.க.

10-06-1985

1314. விஷ வியாபாரம்!

உடன்பிறப்பே,

அதிகாரத்தில் இருக்கிறோம் என்ற ஆணவம், பாம்பின் விஷம்போல உச்சந்தலை வரையில் ஏறிவிட்ட காரணத்தால், வாய்த் துடுக்குடன் பேசுகின்ற சில மனிதர்களின் கூற்றுக்கு நான் பதில் சொல்ல விரும்புவதில்லை. அவர்களுக்குக் கிடைத்துள்ள அந்தப் பதவி, அவர்களை அவ்வாறு பேசவைக்கிறது - பரவாயில்லை - என்று அலட்சியப்படுத்தி விடுவதுண்டு!

ஆனால் உண்மைக்கு முற்றிலும் மாறாக, என்னைப் பற்றியோ கழகத்தைப்பற்றியோ, மக்களிடத்தில் தவறான கருத்து உருவாகிட, வேண்டுமென்றே திட்டமிட்டு விஷமப் பிரச்சாரம் செய்யப்படும்போது - அப்படிச் செய்கிறவரும் ஒரு அமைச்சராக இருக்கிறபோது - அதற்குப் பதில் அளித்து விளக்கம் தரவேண்டியது எனது தவிர்க்க முடியாத கடமையாகிறது!

இவருக்கெல்லாம் போய் நீ பதில் எழுதிக் கொண்டிருக்க வேண்டுமா? என்று நீ என்னைச் சினந்து கொள்வாய் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் ஒரு அப்பட்டமான பழியை, பொறுப்பிலே உள்ள ஒரு அமைச்சர் - பொறுப்பற்ற முறையில் என் மீதும், கழகத்தின் மீதும் சுமத்தும் போது, அவர் எந்த அளவுக்கு பொய்யின் சொரூபமாகத் தோற்றமளிக்கிறார் - அல்ல! அல்ல! பொய்யின் வடிவமாகவே ஆகிவிட்டார் - அது கூடச் சரியில்லை! பொய் நெஞ்சராக இருக்கிறார் என்பதை மீண்டும் ஒரு முறை நாட்டுக்கு உணர்த்த வேண்டியிருக்கிறதல்லவா?

அரக்கோணம் கூட்டுறவு வங்கியின் பொன்விழா இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்றிருக்கிறது. அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் கலந்து கொண்டிருக்கிறார். நாடாளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் திருவாளர் ஜீவரத்தினம் கலந்து கொண்டிருக்கிறார்.

அந்த விழா ஒரு அரசு விழாவாக நடைபெற்றிருக்கிறது. கூட்டுறவுத் துறை விழா என்றால் அரசு சார்புடைய விழாதானே! கூட்டுறவு அமைச்சருடன், அறநிலையத் துறை அமைச்சரும் பங்கேற்று விழாவைச் சிறப்பித்திருக்கிறார்.

இத்தகையப் பொது விழாக்களில் எதிர்க்கட்சிகளையும், எதிர்க்கட்சித் தலைவர்களையும் விமர்சிப்பது என்பது அ.தி.மு.க. ஆட்சி ஆரம்பமான காலந்தொட்டு வாடிக்கையாகி விட்ட ஒரு விவகாரம்!

அந்த விழாவில் அமைச்சர் வீரப்பன் பேசியதாக ஏடுகளில் வந்துள்ள செய்தி இது:-

கனடாவில் இருந்து புறப்பட்ட ஜம்போ ஜெட் விமானத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்த்து 329 உயிர்களைக் குடித்த பயங்கர சீக்கிய தீவிரவாதிகளைவிடக் கருணாநிதி கொடியவர்! ஏனென்றால், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை, திருப்பிக் கட்டாதே என்று விவசாயிகளுக்குக் கூறுகிறார்.

அடடா! எப்படிப்பட்ட வர்ணனை என்னைப் பற்றி! அதுவும் என்னை விமர்சிக்க - ஒப்பிட்டுக் காட்ட - கனடா வரையிலே சென்று அந்த சீக்கிய தீவிரவாதிகளைப் பிடித்து, அவர்களைக்கூட நல்லவர்களாக்கி, அவர்களைவிடக் கருணாநிதி கொடியவன் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறியிருக்கிறார் அமைச்சர்!

உடன்பிறப்பே, நீ அவரது பேச்சைப் படித்ததும் ஆத்திரம் கொண்டு பதிலுக்குப் பதில் வீரப்பன் அவர்களே! எங்கள் தலைவரைப் பற்றியா இப்படி ஒரு பழி சுமத்தினீர்? ஆரண்யத்துச் சந்தன மரங்களையும், ஆலயத்து உண்டியல் களையும் கொள்ளையடித்து, சுற்றுலா வாரியத்தையும் சுற்றத் தார் வாரியமாக்கிக் கொண்டிருக்கும் உம்மைப் பார்த்து சம்பல் பள்ளத்தாக்குக் கொள்ளைக்காரனைவிடக் கொடியவர் என்று எங்களுக்குக் கூறத்தெரியாதா? எனச் சீறியெழுந்து மேடைகளில் முழங்கத் தொடங்குவாய் என்பது எனக்குத் தெரியும்!

அந்த முறை தேவையில்லை என்பதற்காகவும் - அதைச் சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்லவேண்டிய இடத்தில் சொல்லிக்கொள்ளலாம் என்பதற்காகவும் - பதிலுக்கு பதில் என்ற படபடப்புக் கொள்வதற்குப் பதிலாக,

விவசாயிகள் கூட்டுறவுக் கடன் விவகாரத்தில் நமது கருத்து என்ன என்பதை நாட்டுக்கு விளக்கிடும் பணியைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டும்.

அமைச்சர் வீரப்பன் பழி கூறுவதைப்போல, கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காதே! என்று நான் என்றைக்கும் எந்த இடத்திலும் கூறியதில்லை! கழகமும் அப்படியொரு தீர்மானம் நிறை வேற்றியதில்லை! அனைத்துக் கட்சியினர் கூட்டத்திலும் கடனைத் திருப்பிக் கொடுக்காதே! என்று விவசாயிகளுக்குக் கூறவில்லை!

இதோ, ஜப்திக் கொடுமையைக் கண்டித்து ஜூன் 23இல் திருவாரூரில் நடைபெற்ற அனைத்துக்கட்சி விவசாயிகள் பேரணிப் பொதுக்கூட்டத்தில் நான் ஆற்றிய உரையில் ஒரு பகுதி; முரசொலியில் வெளிவந்துள்ளது:-

இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் கருத்து, கடனையே திருப்பி கட்டக் கூடாது என்பதல்ல. அதைச் சொல்ல நாங்கள் யாரும் வரவில்லை. நாங்களும் ஆட்சியில் இருந்தவர்கள்தான். வழங்கப்பட்ட கடன்கள் திரும்பக் கட்டப்பட்டால்தான் மறுபடியும் கடன்களைத் திருப்பிக் கொடுக்கவும், அரசாங்கம் நடைபெறவும் முடியும்.

அதே நேரத்தில் பல சூழ்நிலைகளை, விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கின்ற இன்னல்களை, இடையூறுகளை உணர்ந்து பார்த்து, மழையால் - வெள்ளத்தால் - புயலால் - விலைவாசி ஏற்றத்தால் ஏற்பட்டிருக்கின்ற நிலைகள் - அவர்களுடைய உற்பத்திப் பொருளுக்கு விலை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதால் - உற்பத்தி செய்யும் பொருள்களின் விலை குறையும் அதே நேரத்தில் அவர்கள் உற்பத்திக்காக வாங்கக் கூடிய பொருள்களின் விலை ஏற - அதன் காரணமாக அல்லாடுகின்ற தன்மை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் மறந்து விடக் கூடாது.

அறவே கடனைக் கட்டாதே என்று கூடச் சொல்லவில்லை நாங்கள்.

ஆனால் எம்.ஜி.ஆர். தான் சொன்னார். தனக்கு வாக்களித்தால் - தான் ஆட்சிக்கு வந்தால் அனைத்துக் கடனையும் ரத்து செய்வேன் என்று சொன்னார்.

அதற்குப் பிறகு கடந்த ஆண்டு விடுதலை நாளில் உரை யாற்றும் போது - அவருடைய உரை வானொலியிலும் ஒலி பரப்பப்பட்ட போது தெளிவாக - திட்டவட்டமாகத் தெரிவித் தார். வாங்கப்பட்ட கடன்களுக்கு வட்டியோ, அபராத வட்டியோ நிச்சயமாக வசூலிக்கப்பட மாட்டாது என்று சொன்னார்.

அவர் தந்த வாக்குறுதியில் இன்றைக்கு இந்த அரசு உறுதியாக நிற்கிறதா? என்ற இந்தக் கேள்விக்குறியைத்தான் நான் இங்கே பெருந்திரளாக குழுமியிருக்கிற உங்களுடைய இதயங்களின் முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன்.

கரூருக்கு அடுத்த புகளூரில் ரங்கசாமி என்ற விவசாயி, இந்த மாதம் 11.6.85 அன்று இரண்டாயிரம் ரூபாய் அவருடைய கடனில் ஒரு தவணைக்காகக் கட்டியிருக்கிறார். அவருடைய மொத்தக் கடனே ஆயிரத்து பதினேழு ரூபாய்தான். இதில் வட்டியும், அபராத வட்டியும் சேர்த்த காரணத்தால் ஐயாயிரம் ரூபாயாக ஆகியிருக்கிறது. இதில் இந்த மாதம் 11ஆம் தேதி இரண்டாயிரம் கட்டி விட்டார். அப்படிக் கட்டப்பட்ட பில் நம்பர் 859731. இந்த பில்படி இரண்டாயிரம் ரூபாய் கட்டிவிட்டார்.

பிறகு 18ஆம் தேதி அவர் புகளூரிலிருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலே உள்ள தன்னுடைய தோட்டத்திற்கு வேலை பார்க்கப் போய்விட்டார்.

அந்த நேரத்தில் அதிகாரிகள் வீடு புகுந்தார்கள்.

இரண்டாயிரம் ரூபாய் பணம் கட்டியிருந்தும்கூட, அவருடைய இல்லத்திலே அதிகாரிகள் நுழைந்தார்கள்.

அந்த வீட்டில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்கள், வேட்டி, டெரிகாட்டன் சட்டை, ரொக்கப் பணமாக ஆயிரம் ரூபாய் அனைத்தையும் ஜப்தி செய்துகொண்டு போனார்கள்.

ஆக, கொடுக்க வேண்டிய கடனுக்காக ஜப்தி என்று இல்லை.

ஜப்தி என்ற ஒன்றைச் செய்தே ஆகவேண்டும் என்ற நிலைமையில்தான் இன்றைக்கு தமிழக அரசு இந்த கொடுமையான வழிகளிலே ஈடுபடுகிறது. இது நாட்டு மக்களுக்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

விவசாயிகளுடைய பிரச்சினைதானே, நமக்கென்ன என்று வணிகர்கள் சும்மாயிருந்து விடமுடியாது. நடுத்தர மக்கள் சும்மா

இருந்துவிட முடியாது. விவசாயிகள் பிரச்சினை தானே நமக்கென்ன என்று அரசாங்க அலுவலர்கள் சும்மாயிருந்துவிடக் கூடாது. ஆசிரியப் பெருமக்கள் சும்மா இருந்துவிடக் கூடாது.

ஏன் என்றால், விவசாயிகள் கழனியிலே கால் வைத்தால்தான் நம்முடைய வீட்டுப் பானையிலே சோறு பொங்கும், அதை யாரும் மறந்து விடக்கூடாது.

எனவேதான் இது விவசாயிகள் பிரச்சினை மட்டுமன்று. எல்லா மக்களுடைய பிரச்சினையுமாகும்.

அந்த விவசாயி வயிறு எரிய எரிய - அவனுடைய குடும்பத்திலே உள்ள பெண்கள் கேவலப்படுத்தப்படுகின்ற அளவுக்கு - நகையில்லையா, தாலியைக் கொடு என்று கேட்கிற கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்ற அளவிற்கு - ஒன்று மில்லையா, இதோ உன்னுடைய அழகான பெண் இருக்கிறாளே என்று சொல்லக் கூடிய அளவிற்கு நாடிமுத்து என்ற காங்கிரஸ்காரர் வீட்டில் சென்று அங்கே அடிதடி நடைபெற்று, வெட்டு, குத்துகள் விழுகின்ற அளவிற்கு இன்றைக்கு ஜப்தி கொடுமைகள் தஞ்சை மாவட்டத்திலும், நான் முதலில் குறிப்பிட்ட கரூர் பகுதியிலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதனை ஒரு கட்டத்தில் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த முயற்சி.

இதுதான் நான் திருவாரூரில் பேசியது! அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அனைத்துக் கட்சியினரில் கடனைத் திருப்பிக் கொடுக்காதே! என்று யாரும் கூறவில்லை!

அரசே! அளித்த வாக்குறுதிக்கு மாறாக ஜப்தி செய்யாதே! என்றுதான் அந்தக் கூட்டம் முழங்கியது!

ஜப்திக் கொடுமைகளைத் தடுத்திடத்தான் அனைத்துக் கட்சிக் குழுக்களே தவிர, கடனைத் திருப்பிச் செலுத்து கிறவர்களைத் தடுப்பதற்காக அல்ல!

ஆனால் அமைச்சர் வீரப்பன், வேண்டுமென்றே திட்ட மிட்டு - அரசாங்கத்தின் ஜப்திக் கொடுமைகளை மறைக்கவும், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். கொடுத்த வாக்குறுதிகளை மீறி விட்ட எம்.ஜி.ஆர். அரசின் பித்தலாட்டத்திற்கு மூடி போடவும்,

விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடாது!

என்று நான் கூறியதாக ஒரு அபாண்டத்தை அவிழ்த்து விடுகிறார்!

ஒருவேளை, இப்படிச் சொல்லி விவசாயிகள் உள்ளத்தில் கடனைத் திருப்பிக் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தை அவரே தூண்டிவிடத் திட்டமிடுகிறாரோ, என்னவோ!

வீரப்பன் நடத்தும் இந்த விஷ வியாபாரம், அவருக்கே நல்லதல்ல!

ஏனெனில், நாம் விற்பதை நாமே கொஞ்சம் அருந்திப் பார்ப்போமே! என்ற ஆவல் அந்த வியாபாரிக்கு வந்துவிடக் கூடுமல்லவா?

குறிப்பு:- எம்.ஜி.ஆரின் தோழமைக் கட்சியான இந்திரா காங்கிரசும், ஜப்தியை எதிர்த்துக் குரல் கொடுக்கிறது என்பது நினைவுக்குரிய ஒன்றாகும்.

அன்புடன்

மு.க.

29-06-1985

1315. இதைவிட வேறென்ன எழுத முடியும்?

உடன்பிறப்பே,

என் கடிதம் கண்ட இருபது நாட்களுக்குள் தொண்ணூறாயிர ரூபாய்க்கும் சற்று அதிகமாக, தி.மு.க. அறக்கட்டளையின் அண்ணா அறிவாலய நிதிக்கு நீயும், உன்போன்ற உடன்பிறப்புகளும் வாரி வழங்கியிருக்கிறீர்கள்.

நிதி வரவு எவ்வளவு என்பது ஒவ்வொரு நாளும் முரசொலியில் மொத்தம் கட்டிக் கூட்டிப் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பணவிடைத்தாள்கள் மணியார்டர் மூலமாகவும், அன்பகத்துக்கு நேரில் வந்தும், நிகழ்ச்சிகளிலும், அறக்கட்டளை நிதியினை நீ அளித்திடும்போது அடடா! எத்தனை ஆர்வம்! எவ்வளவு பூரிப்பு! உன் முகத்தில்! அகத்தில்!

ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாகத் தேவைப்படுகிற மிகப்பெரிய முயற்சி அண்ணா அறிவாலயம் எழுப்புகிற பணி என்கிறபோது இருபது நாட்களில் ஒரு லட்சத்தைக் கூட எட்டிப் பிடிக்க முடியாத நிலையுள்ளதே என்று எனக்கோர் பெருமூச்சு வெளிப்படினும், நாளொன்றுக்குச் சராசரி ஐயாயிரம் ரூபாய் வீதம் அறக்கட்டளை நிதி கிடைத்திருப்பது - நம்முடைய கழகத்தின் உடன்பிறப்புகள், என்னதான் இடி விழுந்ததெனச் சோதனைகள் எதிர்த்தாலும், புயலே போலும் வேதனைகள் சூழ்ந்தாலும், அசையாது நிற்கும் வலிமை வாய்ந்த கொள்கைக் குன்றங்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்ற நிலையாகும்.

இந்த ஐயாயிர ரூபாய் நாளொன்றுக்குச் சராசரி என்பதை வைத்துக் கணக்கிட்டால் ஓராண்டில் பதினெட்டு லட்ச ரூபாய் கழகத்தின் அறக்கட்டளைக்குக் கிடைக்கும். ஒரு கோடி ரூபாய் அண்ணா அறிவாலயத் திட்டம் எங்கே? அதற்கு வங்கியில் பெறுகின்ற ஐம்பது லட்ச ரூபாய்க்கு வட்டி எவ்வளவு? அசலைத் திருப்பிக் கொடுப்பது எவ்வாறு?

இந்த இக்கட்டான நிலையை உன்னைத் தவிர, நான் யாரிடத்தில் மனம் விட்டுச் சொல்ல முடியும்?

அண்ணா காலத்திலும் சரி, அதற்குப் பிறகும் சரி, பெருநகரங்களில், நகரங்களில், பேரூர்களில், சிற்றூர்களில் நம்முடைய கழகத்திற்கென சொந்தத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்கள், கட்டிடம் கட்டுவதற்கென வாங்கப்பட்டுள்ள மனைகள் ஏராளமிருக்கின்றன என்பதனை நீ அறிவாய்!

அவையனைத்துமே கழகத்தின் சொத்துகள்! கழகத்தின் சொத்துப் பாதுகாப்புக் குழு, அடிக்கடி கூடி அவற்றைப் பற்றிய விபரங்கள் சேகரித்து, அவற்றின் பராமரிப்புகளைக் கண்காணித்து வருகின்றது!

கழக அமைப்புகளின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அந்தக் கழகக் கட்டிடங்கள் பயன்படும் போது எவ்வளவு பெருமிதமாக இருக்கிறது!

அண்ணா அறிவாலய இடமும், அதில் எழ இருக்கின்ற கட்டிடங்களும் நம்முடைய கழகத்தின் அறக்கட்டளையால் நிர்வகிக்கப்படுகின்றன!

அங்கே ஆற்றப்பட இருக்கின்ற நற்பணிகள், நோக்கங்கள், குறிக்கோள் இவையனைத்தையும் விரிவாக ஜூன் பத்தாம் தேதிக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன்.

சில தினங்களுக்கு முன்பு கூடக் காஞ்சிமாநகரில் நமது அண்ணன் நடத்திய திராவிட நாடு இதழின் அலுவலகத்தை மூன்று லட்ச ரூபாய்க்குக் கழகம் வாங்கியிருக்கிறது! சற்று விலை அதிகம்தான்! மிகப் பழைய கட்டிடம்! பழுது பார்க்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும் நாம் பழகிய கட்டிடம் அல்லவா? அண்ணா குடும்பத்தினருக்குத்தானே அந்தப் பணம் செல்கிறது என்பதற்காகவும், தாழ்ந்த தமிழகத்தைத் தட்டி யெழுப்பிட இன உணர்வுப் பாசறையாக - மூடநம்பிக்கையை வேரறுக்கும் பகுத்தறிவுப் பாடிவீடாக இருந்த திராவிட நாடு அலுவலகம் என்பதற்காகவும், அண்ணாவின் அன்புப் பேத்தி, அருமைச் செல்வி கண்மணியின் திருமண விழா நேரத்தில், அந்தக் காஞ்சியம்பதிக் கட்டிடத்தை விலையைப் பற்றிக் கவலைப்படாமல் தலைமைக் கழகம் வாங்கியுள்ளது!

நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் வியர்வைத் துளிகளைக் கழக வளர்ச்சி நிதியாக, தேர்தல் நிதியாக, அள்ளித் தந்த பணத்தில் நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு மிச்சமாக எவ்வளவு இருக்கும் என்று உன்னால் யூகிக்க முடியாதா என்ன?

இம்மாதக் கடைசியில் சென்னையில் நடைபெற இருக்கும் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில் அந்த வரவு செலவுக் கணக்கு களையெல்லாம் நமது பொருளாளர் வழங்க இருக்கிறார். அதற் கான தணிக்கைக் குழுவினர் பணிகளும் தொடங்கப்பட்டு விட்டன!

கல்தூக்கியும், மண்வெட்டியும், கலப்பை கொண்டு உழுதும், ஆட்டோ ரிக்ஷா அல்லது சைக்கிள் ரிக்ஷா ஓட்டியும், ஆலைகளில் உழைப்பைத் தந்தும், அலுவலகங்களில் பாடுபட்டும், இப்படி எத்தனையோ கடமைகளை ஆற்றிடும் கழகத்துக் கண்மணிகள் காலை முதல் மாலை வரை பாடுபட்டுக் கையில் கிடைத்த கசங்கிய நோட்டுகளில் ஒன்றிரண்டை என் கையில் திணித்து கழக நிதியாக வைத்துக் கொள் என்று சொன்னபோதெல்லாம் என் கண்களில் ஆனந்த அருவியன்றோ பெருகிடும்!

அந்த உடன்பிறப்புகளைப் பார்த்துத்தான், இப்போதும் கையேந்துகிறேன். எதிர்காலத்தில் அண்ணாவின் பெயரேந்திப் பெரும்புகழ் ஏந்தி நிற்கப் போகும் அந்த அறிவாலயத்தை முழுமையாக உருவாக்கிடுவதற்காக!

சென்ற கடிதத்தில் என் கண் மூடுவதற்குள்! என்று நான் குறிப்பிட்டிருந்த எழுத்துகள் உன் போன்றோர் இதயத்தை ஈட்டிகளாகக் குத்திவிட்டன என நூற்றுக்கணக்கான மடல்களை என் மீது பாயவிட்டீர்கள்!

அறுபது நிறைவதற்குள்ளாக அண்ணாவையே இழந்து விட்ட அபாக்கியசாலிகளன்றோ நாம்!

அவருக்கு மேல் இரண்டு வயது. ஆம், அறுபத்தி இரண்டு எனக்கு, இப்போது! போதாதா இது?

எனினும் இயற்கை, இன்னும் எவ்வளவு காலம் விட்டு வைக்கிறதோ - அவ்வளவு காலமும் உன் துணையோடு

நாட்டுக்கும், மொழிக்கும், நமது இனத்துக்கும், ஓய்வின்றி உழைத்திடுவேன் என்பது மட்டும் உறுதி!

அத்தகைய ஒரு உழைப்பாளியின் ஆசைதான் - ஊழியனின் ஆவல்தான் - அவன் கனவு கண்டு கொண்டிருக்கின்ற இந்த அண்ணா அறிவாலயம்!

நாள் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் சராசரி என்பதை இன்னும் ஓரிரு மடங்கு நீ உயர்த்திட முயற்சியெடுத்தால் - முனைந்து செயல்பட்டால், கழக அறக்கட்டளையின் குறிக்கோள் விரைவில் நிறைவேறத் தொடங்கும்!

இதைவிட நான் வேறென்ன எழுத முடியும் உனக்கு?

அன்புடன்

மு.க.

02-07-1985

1316. பூடான் பேச்சு வார்த்தையும், பொறுப்புள்ளோர் செயலும்!

உடன்பிறப்பே,

மனத்திற்குச் சற்று ஆறுதல் அளிக்கும் செய்திகள் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து சில நாட்களுக்கு முன்பு வந்தன!

தமிழ் ஈழ விடுதலை கோரும் போராளிகளும், சிங்கள ராணுவத்தினரும் - போர் நிறுத்தம் செய்து கொள்வதென்றும், சிங்கள ராணுவத்தினர், விடுதலைப் போராளிகளை மட்டு மின்றி அப்பாவித் தமிழ் மக்களை நாள் தோறும் கொன்று குவித்தும், அவர்களது கிராமங்களைச் சூறையாடியும், அங்கெல்லாம் சிங்களவர்களை குடியேற்றியும் நடத்தி வருகிற நாசகாரியங்கள் உடனடியாக நிறுத்தப்படுமென்றும், அதனைத் தொடர்ந்து பூட்டானில் உள்ள திம்பு என்ற இடத்தில் இம்மாதத் தொடக்கத்தில் பேச்சுவார்த்தை நடைபெறு மென்றும் செய்திகள் வந்தபோது, அவற்றை வரவேற்றுக் கழகத்தின் சார்பில் நான் அறிக்கை விடுத்ததோடு, கடந்த காலத்தில் வட்டமேஜை மாநாடு என்ற பெயரால் ஜெயவர்த் தனே ஆடிய நாடகத்தைப் போல் இதுவும் ஆகிவிடாமல், நமது தரப்பினர் எச்சரிக்கையுடன் இருந்திட வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

நமது தரப்பினர் என்ற சொற்றொடரை நான் எந்தப் பொருளில் - எந்த அடிப்படையில் பயன்படுத்துகிறேன் என்பது முக்கியமான கவனத்துக்குரியது!

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் டி.யு.எல்.எஃப். தமிழ் ஈழப் போராளிகளின் இயக்கத்தினர் - இவர்கள் மட்டுமின்றி, தமிழ் ஈழ மக்கள், எதிர்காலத்தில் அமைதியாகவும் உரிமைகளுடனும் வாழ்வதற்குத் தமிழ் ஈழம் என்ற ஒன்றைத்

தவிர, வேறு மார்க்கமில்லையென்ற தெளிவான கருத்தைக் கொண்டுள்ள - தமிழ்நாட்டில் உள்ள நம்முடைய கழகத்தைப் போன்ற கருத்துக் கொண்ட தமிழ் இயக்கத்தினர், எப்படியும் இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர வேண்டுமெனக் கருதுகிற வேறு பல அரசியல் கட்சியினர், தமிழக மக்களின் உணர்வு களுக்கும், கொந்தளிப்பை அடக்குவதற்கும் ஏதாவது ஒரு வழிகாண வேண்டுமென்று கருதினாலும் கூட, மிகவும் மெத்தனமாகச் செயல்படுகின்ற இந்திய அரசினர் - இத்தனை பேரையும் சேர்த்துத்தான் நமது தரப்பினர் என்று குறிப்பிடுகிறேன்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு இவ்வளவு காலதாமத மாகவாவது இந்திய அரசு ஏற்பாடுகளைச் செய்தது, செய்கிறது என்கிறபோது, அந்த முயற்சியை நான் குறை கூறவில்லை!

எனவேதான் போர் நிறுத்தத்தை வரவேற்று, பேச்சுவார்த்தை என்பது இலங்கை அரசு கடைப்பிடிக்கும் சூதுத் திட்டமாக இருத்தலாகாது என்பதை வலியுறுத்தி, நமது தரப்பினர் எச்சரிக்கையுடன் அணுக வேண்டுமென்று நான் விடுத்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருந்தேன்.

போர் நிறுத்தம் என்பதற்கு ஒப்புக்கொண்ட விடுதலைப் போராளிகளின் இயக்கங்கள் ஒன்றுபட்டு, அதனை வெறும் வார்த்தையளவில் இல்லாது செயல் அளவிலும் இதுவரையில் செய்து காட்டி வருகின்றன!

போர் நிறுத்தம் என்ற செய்தி வந்த சில நாட்களாக, விடுதலைப் போராளிகள் இலங்கையில் எந்தவொரு சிங்கள ராணுவத்துச் சிப்பாயியையோ அல்லது அதிகாரியையோ தாக்கினர் என்ற செய்தி வரவில்லை.

ஆனால் அதற்கு நேர் மாறாக, போர் நிறுத்தம் என்று போலி நாடகம் நடத்திக் கொண்டே, இலங்கையில் பல பகுதிகளில் சிங்கள ராணுவத்தினர் தங்களது பழைய கொடுமை யான கொலை வெறிச் சேட்டைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்பதற்கான ஆதாரப்பூர்வமான விபரங்களை, ஈழ தேசிய விடுதலை முன்னணியில் உள்ள நான்கு அமைப்புகளின் சார்பாக விடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் விவரித்துள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் டெலோ, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எல்டிடிஇ, ஈழப் புரட்சிகர அமைப்பு ஈரோஸ், ஈழ மக்கள்

புரட்சிகர விடுதலை முன்னணி இ.பி.ஆர்.எல்.எப். ஆகிய நான்கு அமைப்புகளும் சேர்ந்து விடுத்துள்ள கூட்டறிக்கையில்,

நாங்கள் போர் நிறுத்த உடன்பாட்டின் உணர்வை மதித்து, எல்லாப் போர் நடவடிக்கைகளையும் நிறுத்தி வைத்திருக் கிறோம். ஆனால் இலங்கை ராணுவத்தினரோ, தமிழ் மக்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றனர். திரிகோணமலைப் பகுதியில் தமிழர் வீடுகள் சூறையாடப்படுகின்றன. தமிழர்கள் அடித்து நொறுக்கப்படுகின்றனர். தமிழ்ப் பெண்கள் கற்பழிக் கப்படுகிறார்கள். தீ வைத்து எரிக்கப்பட்ட கிளிவெட்டி, மல்லிகைத் தீவு, மூன்றாம் காலனி போன்ற கிராமங்களில் தமிழர்கள் மீண்டும் குடியமர முயன்ற போது, அவர்கள் மீது சிங்கள ராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தி விரட்டி யிருக்கிறார்கள். வல்வட்டித் துறை, தொண்டமனாறு, பருத்தித் துறை, தாழையடி ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் மீன் பிடிக்கப் போன போது அவர்களைக் கடற்படையினர் சுற்றி வளைத்துப் பிடித்து முள்கம்பிகள் கொண்டு அடித்துள்ளனர். படகுகளைச் சுட்டு விரட்டியிருக்கின்றனர். மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, அக்கரைப்பட்டு ஆகிய இடங்களில் சாலைத் தடுப்புகள், சோதனை வேட்டைகள் ஆகிய கொடிய முறைகள் மூலம் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது!

இவை மட்டுமன்றி அந்த அறிக்கையில், மேலும் சில முக்கியமான தகவல்களும் தரப்பட்டுள்ளன.

போர் நிறுத்தம் தொடரவும், அந்த இடைக்காலத்தில் பேச்சுவார்த்தை தொடங்கவும், நம்பிக்கையூட்டக் கூடிய வகையில், சிங்கள ராணுவப் படைகள், அவற்றின் முகாம் களுக்குத் திருப்பி அழைக்கப்பட்டுச் சகலவிதமான ராணுவக் கெடுபிடிகளும் நிறுத்தப்பட வேண்டுமென்றும், தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் கைவிடப்பட வேண்டு மென்றும், அவசரகாலச் சட்டங்களும், ஊரடங்குச் சட்டங் களும் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும், கடற்கண் காணிப்பு வளையங்கள், தடைப்பிரதேச பிரகடனங்கள் விலக்கப்பட்டு மீனவர்கள் கடலில் தொழில் புரிய அனுமதிக்கப் பட வேண்டுமென்றும், அரசியல் காரணமாகக் கைது செய்யப்

பட்டிருப்போர் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டு மென்றும் - இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட பிறகே பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சூழ்நிலை அமையும் என்பதையும் திட்டவட்டமாக அந்தக் கூட்டறிக்கை கூறுகிறது!

இந்த நிபந்தனைகள் குறித்து மௌனம் சாதித்துக் கொண்டே, இலங்கையின் சிங்கள அரசு, பேச்சுவார்த்தை! பேச்சுவார்த்தை! என்று கூவிக் கொண்டிருப்பதும், அதற்கு உடன்படுவதும் அறிவுடைமையாகாது என்ற கருத்தைத்தான் இந்த நான்கு இயக்கத்தினரின் கூட்டறிக்கை தெளிவுபடுத்து கிறது.

இதற்கிடையே ஜூன் முப்பதாம் தேதியிட்ட இந்து ஏட்டில் திரு.ஜி.கே.ரெட்டி குறிப்பிட்டிருப்பதும் கவனத்துக்குரிய ஒன்றாகும்.

"This is seen as a deliberate attempt on the part of the Sri Lankan President, Mr. J.R.Jayewardene to downgrade these talks to a non-political level by asking his brother to head the delegation."

அதாவது, இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனே அவர்கள், அரசியல் ரீதியாக இல்லாமல் தனது சகோதரர் எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனாவை இந்தப் பேச்சுவார்த்தைக் கான தூதுக்குழுவின் தலைவராக பூட்டானுக்கு அனுப்புவது என்பது இந்தப் பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தைக் குறைத்துத் தரம் தாழ்த்துகிற ஒரு வெளிப்படையான முயற்சியாகும் என்று எடுத்துக் காட்டுகிற ஜி.கே.ரெட்டி அவர்கள் அதே கட்டுரையில், இதுகுறித்து டெல்லியும் மனநிறைவு அடையவில்லை என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்.

There is regret in Delhi that contrary to the earlier expectation, the Sri Lankan delegations is not going to be led by a Cabinet Minister, but only a legal expert, Mr.H.W. Jayewardene the President's brother and close confident who is not competent to discuss the political aspects of the Tamil problem.

அதாவது, இலங்கையின் பேச்சுவார்த்தைக் குழு ஒரு அமைச்சர் தலைமையில் வருமென்று எதிர்பார்த்ததற்கு மாறாக, இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவின் சகோதரரும்

நம்பிக்கைக்குரியவருமான ஒரு சட்ட நிபுணர் எச்.டபிள்யூ. ஜெயவர்த்தனே என்பவரின் தலைமையில் வருவதானது டெல்லிக்கு வருத்தம் தரக்கூடியதாக அமைந்துள்ளது. மேலும் அவர் தமிழர் பிரச்சினை பற்றி அரசியல் ரீதியாக விவாதிப்பதற்கு ஏற்றவருமல்ல!

இவ்வாறு டெல்லியின் மனோநிலையை ஜி.கே.ரெட்டி அவர்கள் படம் பிடித்துக் காட்டியிருப்பதிலேயிருந்து, இந்தப் பேச்சுவார்த்தையினால் கடுகளவுப் பயன் ஏற்படா விட்டாலும், மலையளவுத் தீங்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலே நமது தரப்பினர் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமல்லவா?

இதன் காரணமாகத்தான் போராளிகளின் நான்கு அமைப்புகளின் கூட்டறிக்கை, தக்க தருணத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்று கருத வேண்டியிருக்கிறது.

அவர்களது கூட்டறிக்கையில் எடுத்துக் கூறப்படுகிற நிலைமைகளை இந்திய அரசு சிந்தித்து, அதுகுறித்து இலங்கை அரசை வற்புறுத்தி நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்குப் பதிலாக, விடுதலைப் போராளிகளின் இயக்கத் தலைவர்களைப் பூட்டான் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு வற்புறுத்துவது என்பதும், அதற்கான நெருக்கடிகளைத் தோற்றுவிக்க முனைவதும், அந்தப் போராளிகளை மட்டுமன்றி - இலங்கைத் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக மிக்க கவலையுடன் குரல் கொடுத்து வருகிற தமிழ்நாட்டு மக்களையும் அதிருப்தி கொள்ளச் செய்கிற செயலாகி விடும்.

எனவே, இந்திய அரசு, இலங்கை அரசின் மோசடிக் கூத்தினை அறிந்தும் அறியாதது போல நடந்து கொண்டு, தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தைப் புண்படுத்த முனையாது என்று நம்புகிறோம்!

அப்படி முனையக்கூடாது என்று வற்புறுத்திக் கூறுகிறோம்.

அன்புடன்

மு.க.

03-07-1985

1317. தூங்கம்மா தூங்கு!

மலரே! மலரே!
இளமலரே! இனியமலரே!
ஈழத்துப் பொன் மலரே!
இன்பத் தமிழ் நன் மலரே!
நறு மலரே!
உன் மார்பகத்தில் என்ன?
நான்கு கரும்புள்ளிகள்!
மகரந்தம் பருக வந்த
வண்டுகள்,
மொய்த்திருக்கும் காட்சியோ?
அய்யோ! இல்லையாமே - சிங்களவர்
குண்டுகள்,
துளைத்த கொடுமையாமே!
உன்னைப் போல் எத்தனை மலர்கள்!
ஓ! நூற்றுக்கணக்கில் - சிங்களக்
கூற்றுவர்களால் கொடிகளோடு
கசக்கி எறியப்பட்டிருக்கின்றன!
தமிழ் ஈழத் தோட்டத்தில் புகுந்து
தங்க மலரே! உனைப் போன்ற
மாணிக்கப் பூக்களை, அந்த
மந்திக் கூட்டம் பறித்துப் பாழ்படுத்தும் போது
அந்தத் தோட்டத்தின்
வேலியோரத்தில் நின்று
வேடிக்கை பார்க்கிறோம் நாங்கள் என்று
வெதும்புகிறாயா நீ?
எங்கள் விழிகளைப் பார்!
வேதனைக் கண்ணீர் வடிகிறது!
காவலர்களே கண்ணீர் பொழிந்து - கொண்டிருந்தால்

எங்கள் உயிரைக் களவாடும் காடையர்க்கு,
நல்ல வேட்டைதானே என்று
மெல்லிதழ் முல்லையே! நீ கேட்பது
பொல்லாக் காதுகளில் விழத்தான் செய்கிறது!
என் செய்வோம்!
அழுவதற்குக் கண்களும்
அவலச் செய்தி கேட்பதற்குக் காதுகளும்
அதிர்ச்சி கொள்ள இதயங்களும்தான்
எங்களிடம் சுதந்திரமாய் இயங்குகின்றன!
மாடுகளையும், மந்திகளையும் விரட்டியடித்து
மலர்களே! உங்களைக் காத்திட முடியாமல்,
எங்கள் கைகளும் கால்களும்
தங்கச் சங்கிலிகள் கொண்டு
கட்டப்பட்டிருக்கின்றனவே!
நாங்கள் என்ன செய்வோம்!
சாவுத் தொட்டிலில் - சாகாத
நித்திரை கொண்டிருக்கும்
சித்திர மலரே!
தாய்த் தமிழகம்
பாடுகிறது உனக்குத் தாலாட்டு!
இதோ அது:-
தும்பை மலரே!
தூங்கம்மா, தூங்கு!
நாங்களும் தூங்குகிறோம்,
நன்றாகக் குறட்டை விட்டு!

மு.கருணாநிதி

06-07-1985

1318. பத்திரிகையாளர் கூட்டத்தில் பிரதமர்!

உடன்பிறப்பே,

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள், முதல் தடவையாக, தேசியப் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு முக்கால் மணி நேரம் பல்வேறு பிரச்சினைகள் குறித்த கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ளார்.

பஞ்சாபில் ஒரு அமைதியான நிலை ஏற்படுவதற்காக, மத்திய அரசு, அடக்குமுறைப் போக்குகளைத் தளர்த்துவதை விட்டுக் கொடுக்கும் செயல் என அவர் குறிப்பிட்டிருப்பதோடு, அக்டோபர் 6ஆம் தேதிக்குள் அங்கு தேர்தல் நடைபெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு ஆட்சி அமைய வேண்டுமென்று விரும்புவதாகவும் கூறியிருக்கிறார். அதன் தொடர்பாக கருத்தறிவித்த அவர், அக்டோபர் 6 ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்துவதென்பது சிரமமாக இருக்குமென்று தெரிவித்திருக்கிறார்.

பஞ்சாப் மாநிலம், தொடர்ந்து குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழே இருப்பதென்பது ஒரு ஜனநாயக நாட்டில் பெருங்குறையாகவே கருதப்படும். எனவே, பிரச்சினைகளை விரைவாகவும், நியாய உணர்வோடும் தீர்த்து வைத்திட மத்திய அரசு முன்வர வேண்டும் என்பதோடு, விரைவில் அந்த மாநிலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு ஆட்சி அமைவதற்கும் வழி வகுக்கப்பட வேண்டும்.

பஞ்சாபில் எப்படியாவது காங்கிரஸ் ஆட்சிதான் ஏற்பட்டாக வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு அதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கும், பிரச்சாரங்களை முடுக்கிவிடுவதற்கும், மத்திய அரசு முயற்சிகளை மேற் கொள்ளாமல், பஞ்சாப் மாநில மக்கள், அவர்களின் விருப்பம் போல் வாக்களிப்பதற்கானச் சூழ்நிலைகளை உருவாக்கிட வேண்டும்!

இல்லையேல் தேர்தல் களமே, மீண்டும் ஒரு போர்க்களமாகி விடக்கூடும்!

பிந்தரன்வாலே போன்ற தீவிரவாதிகளைத் தொடக்க காலத்தில் வளர்த்து விட்ட குற்றத்தை இந்திரா காங்கிரஸ்தான் செய்தது என்பதும், மாநில சுயாட்சி உரிமைகளுக்காக வாதாடி மக்களின் செல்வாக்கைப் பெற்ற அகாலிதளக் கட்சித் தலைவர்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்பட்ட பிந்தரன் வாலேதான், இவ்வளவு பெரிய பிரச்சினைக்குக் காரணகர்த் தாவாகி விட்டார் என்பதும் - அதனால் எழுந்த புயலில் அமிர்தசரஸ் பொற்கோயில் படுகொலையும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரையே இழக்க வேண்டிய பெருங் கொடுமைக்கு இந்த நாடு உள்ளாகிய நிலைமையும், அதைத் தொடர்ந்து டெல்லிப் பட்டினத்தில் அப்பாவி சீக்கிய மக்கள் கொலைவெறிக்கு ஆளான நிகழ்ச்சியும், இன்னமும் சீக்கிய பயங்கரவாதிகளின் செயலால்தான் முன்னூறுக்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்த இந்திய விமானம் கடலுக்குள் மூழ்கடிக்கப்படுகிற அளவுக்கு விபரீதக் காரியங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதும், நாட்டில் அமைதியும், உரிமையும் கொண்ட நல்வாழ்வு நிலைத்திட வேண்டும் என்று கருதுகிறவர்களுக்கு உண்மை யிலேயே பெரும் மனத்துயர் ஏற்படுத்துகிற அதிர்ச்சிக்குரிய செய்திகளாகும்.

வன்முறைகள் கலையப்பட்டு, அமைதியான ஒரு சூழ்நிலை பஞ்சாப் மாநிலத்தில் உருவாக்கிட இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கொண்டிருப்பதாக, அவரே பத்திரிகையாளர் கூட்டத்தில் குறிப்பிட்டுள்ள விட்டுக் கொடுக்கும் போக்கு பயன் தருமென்றும், பயனைத் தர வேண்டுமென்றும், கட்சிக் கண்ணோட்டமின்றி அந்தப் போக்கு, தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுமேயானால் நிச்சயம் பயன் கிடைத்தே தீருமென்றும் நம்புவதோடு - அதற்கென மத்திய அரசு அக்கறை கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கை களை மேற்கொண்டால் வரவேற்றுப் பாராட்டவும் தயங்க மாட்டோம்.

பஞ்சாப் பிரச்சினையன்னியில் வேறு பலவற்றுக்கு ராஜீவ் காந்தி அவர்கள் அளித்துள்ள விடைகளும், விளக்கங் களும் - எதிர்காலத்தில் அவை செயல் வடிவம் பெறுவதைப் பொறுத்தே, பாராட்டுக்குரியவைகளாகவோ அல்லது வரவேற்புக்குரியவைகளாகவோ அமைய முடியும்!

அவற்றுக்கிடையே, தேசியப் பத்திரிகையாளர்களின் முதல் கூட்டத்திலேயே ராஜீவ் காந்தி அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு கருத்தை, அது வெளிப்பட்டுள்ள முதல்கட்டத்திலேயே மறுத்திட வேண்டிய கடமை, ஜனநாயகத்தில் பற்றுக் கொண்ட அனைவருக்கும் இருக்கிறது!

அதிலும் ஜனநாயகத்தைக் காப்பதற்காகவே 1975 ஆம் ஆண்டின் இறுதியில் குரல் கொடுத்து அதன் காரணமாகவே ஆட்சியை விட்டு அகற்றப்பட்டு, அவதூறு மழையினைப் பொழிந்த போதும் - மிசா அடக்கு முறையை ஏவிய போதும் - சமாளித்துக் கொண்டு, வேதனைகள், சோதனைகளை ஏற்றுக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நமக்கு, அந்தக் கடமை நிறையவே இருக்கிறது!

இனியொரு முறை எமர்ஜன்சி நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்த மாட்டேன் என்று இந்திரா காந்தி அவர் களாலேயே அறிவிக்கப்படுகிற அளவுக்கு, அவ்வளவு கொடு மையும் - எதேச்சாதிகாரமும் - ஜனநாயகத்திற்காக வாதாடு கிறவர்களை எல்லா வகையிலும் இழிவுபடுத்தி அழிக்க முற்படுகிற அநீதியும் நிறைந்த எமர்ஜன்சி நெருக்கடி நிலையை, இன்றைய இளம் பிரதமர் ராஜீவ் காந்தி நியாயப் படுத்தியிருப் பதோடு, தேவைப்பட்டால் - தானும் கொண்டு வருவேன், என்று தேசியப் பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவித்திருப்பது எள் முனையளவும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்!

இந்தியா, தன்னை ஜனநாயக நாடு என்று பிரகடனப் படுத்திக் கொண்டு அதே நேரத்தில் வானொலி, டி.வி. போன்ற பெரும் பிரச்சார சாதனங்களை சுயேச்சையாக இயங்கும் நிறுவனங்களாக ஏன் அனுமதிக்கவில்லை? என்ற கருத்தமைந்த ஒரு கேள்வி, அந்தப் பத்திரிகையாளர் கூட்டத்தில் எழுந்த போது, இந்தியா - அதற்கு ஏற்ப வளர்ச்சி அடையவில்லை! என்று பிரதமர் பதில் அளித்துள்ளார். இந்திய மக்கள் இன்னும் வளர்ச்சி அடையவில்லையா? அல்லது காங்கிரஸ் கட்சி வளர்ச்சி அடையவில்லையா? என்று பத்திரிகையாளர் மடக்கியபோது, இது விவாத மேடையல்ல! என்று கூறி நழுவி விட்ட பிரதமர் அவர்கள் - வானொலி, டி.வி. ஆகிய பிரச்சார சாதனங்கள், சுயேச்சையாக செயல்படும் நிறுவனங்களாகச் செயல்பட சுயஅதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்றும் திட்டவட்டமாகப் பதில் அளித்துள்ளார்.

மீண்டும் எமர்ஜன்சி என்றால், வானொலி, டி.வி. - இவைகளின் ஒத்துழைப்பு மத்திய அரசுக்குப் பெரிதும் தேவையல்லவா?

1975இல் எமர்ஜன்சி வந்தபோது இந்திரா காங்கிரசுக்கு ஆதரவாகவும், தி.மு.க. மீதும், எமர்ஜன்சியை எதிர்த்த ஜே.பி. போன்ற தலைவர்கள் மீதும், பழைய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் போன்ற கட்சிகள் மீதும் அவதூறுகளை அள்ளி வீசிட வானொலியும், டி.வி.யும் புரிந்த தொண்டு சாதாரணமானதா?

அந்த ஆயுதத்தை மீண்டும் எமர்ஜன்சியைப் பற்றிச் சிந்திக்கிற ஒரு அரசு, பழைய எமர்ஜன்சியை நியாயப்படுத்துகிற ஒரு அரசு, விட்டு விடுமா என்ன?

எமர்ஜன்சி இல்லாத இந்தக் காலத்திலேயே வானொலியும், தொலைக்காட்சியும் - ஆளுங்கட்சியின் விளம்பரச் சாதனங் களாகத்தான் முழுமையாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன!

வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள் - சுய அதிகாரம் பெற்று எல்லா தரப்பு செய்திகளுக்கும் முக்கியத்துவம் அளித்து - ஆளும்கட்சிகளின் பிரச்சார பீரங்கிகளாக இல்லாமல் - ஒரு ஜனநாயக ஒளியை நாட்டில் வழங்க முன்வருவீர்களா? என்று கேட்கிற போது, மீண்டும் எமர்ஜன்சி என்ற பதில் கிடைத்திருப்பது வியப்புக்குரியது! வேதனைக்குரியது!

பழைய 1975ஆம் ஆண்டு எமர்ஜன்சிக்கு நியாயம் கற்பிக்கிற ராஜீவ்காந்தி அவர்கள், 1977 தேர்தல் முடிவினை மறந்துவிடக் கூடாது என்று நினைவூட்டவும் நாடு கடமைப்பட்டுள்ளது!

ஜனதா ஆட்சியாளரின் ஒற்றுமையின்மையினால், பிறகு நிலைமை மாறிப் போயிருக்கலாம். அது வேறு விஷயம்!

'எமர்ஜன்சி'யை இன்னொரு முறை, இந்திய நாடு அனுமதிக்காது - இளம் பிரதமர் அவர்கள் அதுகுறித்துக் கொண்டுள்ள தவறான கருத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதே நல்லது!

அன்புடன்

மு.க.

09-07-1985

1319. பட்டிமன்றமல்ல; உண்மையின் படப்பிடிப்பு!

உடன்பிறப்பே,

நாவலர் அவர்களுக்கு 66வது பிறந்தநாள் வாழ்த்துக் கடிதத்தை எழுதி அனுப்பிவிட்டுத்தான், உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

பிறந்த நாள் வாழ்த்து அனுப்பியது பற்றிக் குறிப்பிடக் காரணம் உண்டு!

சட்டப் பேரவையில் நாவலர் அவர்கள், காவல்துறை மானியத்தில் பதில் அளித்து உரையாற்றியதைப் பற்றிக் கேள்விப்பட்டேன். சில ஏடுகளில் படித்தும் பார்த்தேன்.

அது குறித்து சில கருத்துகளைக் கூறும்போது, அவரது பிறந்தநாள் கொண்டாடப்படும் வேளை இது என்பதையும் மனதில் பதியவைத்துக் கொண்டால்தானே, இந்த வேளையில் அவர் எள் முனையளவு வருத்தம்கூடப் படக்கூடாத அளவுக்கு எழுத்துக்களையும், சொற்களையும் எண்ணி எழுதிட முடியும்!

அதற்காகத்தான் இந்தப் பீடிகை! இந்தக் கடித வாயிலாகவும் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துகளை கூறுகிறேன்!

கழக அரசில் நாவலர் அவர்கள் கல்வித்துறைக்கும் அமைச்சராக இருந்தார். இப்போது எம்.ஜி.ஆர். அரசில் நிதித்துறை அமைச்சராக இருந்தாலும் கூட, எம்.ஜி.ஆர். அவர்களிடமுள்ள காவல்துறை மானிய விவாதத்திற்கு நாவலர் அவர்களே பதில் அளித்துப் பேசியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் காவல்துறை மானிய விவாதமென்றால் நாட்கள் இழுத்துக் கொண்டே போகும்!

முதலமைச்சருக்குத் திடீர் எனத் தலைவலி என அறிவித்து விவாதங்களுக்குப் பதில் கூறுவதை மறுநாள் - அதற்கு மறுநாள் என்று ஒத்திவைத்துவிடுவார்கள்.

முதல்வர் பதில் கூறுவது என்ற பெயரால் - இலாகாக்களில் இருந்து எழுதி அனுப்பப்பட்ட விபரமான நீண்ட குறிப்புகளைப் படிப்பதே பேருரை என ஆளுங்கட்சி ஏடுகள் பாராட்டிப் புகழ, எட்டு மணி நேரம், ஒன்பது மணி நேரம் என காவல்துறை மானியத்துக்குப் பதில் அளிக்கப்படுகிற நிலைமையெல்லாம் இருந்தது.

அப்படிப்பட்ட சங்கடங்கள் எவற்றையும் உறுப்பினர்களுக்குத் தராமல் நாவலர் அவர்கள், குறுகியதாகவும் இல்லாமல், மிக நெடியதாகவும் இல்லாமல் தேவைப்படுகிற அளவுக்குத் தனது பதிலுரையை அமைத்துக் கொண்டு எடுத்து வைக்கப்பட்ட வாதங்களுக்கு விளக்கமளித்திருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எனக்கு டாக்டர் பட்டம் கொடுத்த போது தி.மு.க. - அ.தி.மு.க. என்று கட்சி பிரியவில்லை என்பது நாவலருக்கும் தெரியும்! நாட்டுக்கும் தெரியும்!

மாற்றுக்கட்சியைச் சேர்ந்த சில மாணவர்கள், அந்த நிகழ்ச்சிக்குச் செல்லும் வழியில் என் காரை மறித்ததும் - அதனால் சில அசம்பாவிதங்கள் நடந்ததும் - நிகழ்ச்சிகள் முடிவுற்று நான் திரும்பிய பிறகு அங்கு ஏற்பட்ட கலவரத்தை அடக்கப் போலீசார் தடியடி நடத்தியதும் அப்போது நடைபெற்ற சம்பவங்கள்!

மறுநாள் காலையில் ஒரு மாணவர் குளத்தில் மிதந்த செய்தி வந்தபோது - முதலில் அவர் யாரென அடையாளம் காட்டப்பட முடியாத நிலையிருந்தது! பரவையிலேயே, நீரில் மூழ்கி இறந்த அந்த மாணவரின் படங்கள் காட்டப்பட்டு அடையாளம் கண்டுபிடிப்பதில் இருந்த கஷ்டங்கள் விளக்கப்பட்டன! எனினும் நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, நீதி விசாரணை நடைபெற்று அந்த மாணவர் பெயர் உதயகுமார் என்றும், அவர் குளத்தில் விழுந்து இறந்ததற்கும் காவலர்கள் நடவடிக்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும் நீதி விசாரணை அறிக்கை தெளிவாகக் கூறியுள்ளது.

திருச்சியில் பஸ் தொழிலாளர்களுக்கும், கிளைவ் விடுதி மாணவர்களுக்கும் நடந்த கலவரத்தில், உடனே நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, அந்த விசாரணையில் போலீஸ் அதிகாரிகள் அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்றுள்ள எம்.ஜி.ஆர். தன்னால் நியமிக்கப்பட்ட பால் கமிஷன் அறிக்கைக்கு, இந்த அரசே மறுப்பு அறிக்கை தயாரித்துப் பேரவையில் வைத்ததைப் போலக் கழக அரசில் மறுப்பு அறிக்கை வைத்திடவில்லை!

நெல்லையில் நடைபெற்ற மாணவர், போலீசார் மோதலில் கூட, நீதி விசாரணை நடைபெற்று அந்த போலீஸ் அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது!

அப்போதெல்லாம் நாவலர் அவர்கள்தான் கல்வி அமைச்சர்! காவல்துறை அமைச்சராக நான் இருந்தாலும்கூட, இதுபோன்ற நிகழ்ச்சிகள் அனைத்திலும் முக்கியமான அமைச்சர்கள் அனைவருடனும் கலந்து பேசித்தான் முடிவுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன!

இப்போது அந்த அமைச்சர்கள் அ.இ.அ.தி.மு.க.வில் இருக்கிறார்கள்.

காவல்துறை மானிய விவாதத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சி, கிளைவ் விடுதி நிகழ்ச்சி, நெல்லை மாணவர் நிகழ்ச்சி என்றெல்லாம் ஆளுங்கட்சியினர் திரும்பத் திரும்பப் பேசி தி.மு.க. ஆட்சியைக் குற்றம் சாட்டிடும்போது - கழகத்திலிருந்து அங்குச் சென்றுள்ள மற்ற அமைச்சர்களுக்கு இல்லாவிட்டாலும், காவல்துறை மானிய விவாதத்துக்கு பதில் சொன்ன நாவலர் அவர்களுக்கு - அப்போது கழக ஆட்சியில் எடுத்த உடனடி நடவடிக்கைகள் குறித்தும், விசாரணைக் கமிஷன் அறிக்கைகள் மதிக்கப்பட்டது குறித்தும் விளக்கிடும் பொறுப்பு இருக்கிறது அல்லவா?

ஆனால், அந்தப் பொறுப்பை அவர் தட்டிக் கழித்தது ஏனோ?

இந்த ஆண்டு காவல்துறை மானிய விவாதமே, காமராசர் மாவட்டத்தில் உள்ள கல்லங்குளம் என்ற கிராமத்தில் போலீசாரால் சுட்டு வீழ்த்தப்பட்ட இரண்டு பிணங்களுடனேதான்

தொடங்கியிருக்கிறது! அப்படிச் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் தாய்க்குலம்!

இந்த ஆட்சியில்தான் வாகைக்குளம் என்ற கிராமத்தில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் - அவர்களில் இருவர் பெண்கள்! தண்ணீர் பிரச்சினைக்காக, அந்த தாய்மார்கள் நடத்திய அமைதியான மறியலுக்கு அவர்களுக்குக் கிடைத்த பரிசு துப்பாக்கி ரவைகள்!

இவைகள் ஒன்றிரண்டு உதாரணங்கள்!

எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் உண்டு, இந்த ஆட்சியில் போலீசார் எப்படியெல்லாம் பொதுமக்கள் மீதும், தொழிலாளர் மீதும், எதிர்க்கட்சியினர் மீதும் தூண்டி விடப்படுகிறார்கள் என்பதற்கு!

அதேபோல ஆளுங்கட்சியினரால் எத்தனை போலீஸ் அதிகாரிகள் அவமானப் படுத்தப்பட்டார்கள், எத்தனை காவல்நிலையங்களில் புகுந்து ஆளுங்கட்சியினர் ஆக்ரமிப்பு நடத்தினார்கள் என்பதற்கும் நூற்றுக்கணக்கான சான்றுகள் உண்டு!

காவல்துறைக்கு ஆள் எடுப்பதாகக்கூறி எவ்வளவு பெரிய மோசடி நடந்தது!

சப்-இன்ஸ்பெக்டர் தேர்வுக்கு விண்ணப்பம் போடச் சொல்லி விட்டு, அதிலேயும் மோசடி நடந்து - தங்களது சர்டிபிகேட்டுகள் திரும்பக் கிடைத்தால் போதுமென அவர்கள் அலையாய் அலையவில்லையா?

எதிர் தரப்பிலிருந்து இவை போன்ற பல்வேறு குறைபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டன!

கழகச் சார்பில் நாஞ்சிலார் ஆதாரங்களை எடுத்துவைத்துக் காவல்துறையை எவ்வாறு கடமையுணர்ச்சியுடன் செயல்படவைக்க வேண்டுமென எடுத்துரைத்துள்ளார்.

ரகுமான்கான், புள்ளி விபரங்களை அள்ளித் தந்து உரை நிகழ்த்தியுள்ளார்.

நாவலரோ, ரகுமான்கான் அடுக்கிக் காட்டிய குறைபாடுகளையும், குற்றச் சாட்டுகளையும் குறித்துப் பதில் அளிக்கும் போது,

ரகுமான்கான்

என்ற பெயருக்குத் தனது சொல்வன்மையினால் பொருள் விளக்கம்தந்து, ரகுமான்கான் பொய்க் குற்றச்சாட்டுகளைத் தேடிச் செல்கிறார் என்று வேடிக்கையாகப் பேசியிருக்கிறார்!

அவர், ரகுமான்கான் பெயரைப் பதம்பிரித்துக் குறிப்பிட்ட திறமையைப் பாராட்ட வேண்டியதுதான்!

ரகு என்றால் ராமன்! மான் என்றால் ராமன் தேடிச் சென்ற பொய்மான்! கான் என்றால் காடு! அதாவது காட்டில், ராமன், பொய்மானை தேடிச் சென்றது போல ரகுமான்கான், உண்மையற்ற குற்றச்சாட்டுகளைக் கூறுகிறார் என்று நாவலர் அவர்கள் சொல்லாடல் நிகழ்த்தியுள்ளார்.

சொல்லாடலுக்குப் பாராட்டு! ஆனால், நாவலர் அவர்கள் ராமாயணக் கதையைச் சரியாகச் சொல்லவில்லையே!

மாரீசன் எனும் அரக்கன், இராவணன் தூண்டுதலால் மாயமானாக உருவெடுத்துத் தனது கவர்ச்சியைக் காட்டி, சீதையின் ஆசையைக் கிளறுகிறான். சீதாபிராட்டி அந்த அழகிய மான்குட்டியைத் தனக்குப் பிடித்துத் தர வேண்டுமென அடம் பிடிக்கிறாள்! பெண்ணே! கவர்ச்சியான மான் என்று கருதி ஏமாறாதே! அது மாயமான்! என்று ஆடவனான ராமன் கூறுகிறான்! ஆனால் தாய்க்குலமான சீதையோ, கணவன் பேச்சைக் கூடக் கேட்காமல் அந்தக் கவர்ச்சி வேடம் பூண்ட மாரீச மானிடம் மனதைப் பறி கொடுக்கிறாள். தாய்க்குலத்தின் பேச்சைத் தட்ட முடியாமல் உண்மையை சீதைக்குச் செயல் மூலம்தான் உணர்த்திட வேண்டுமென்று தனக்குள் எண்ணிக்கொண்டு, அந்தப் போலிமானைத் துரத்திச் சென்று தனது அம்பினால் வீழ்த்தி - அது மானல்ல! மான் வடிவில் வந்த மாரீசன்! என்பதை தெளிவுபடுத்துகிறான்!

போலியாக - பொய்மையாக - நடைபெறுகிற ஒரு மோசடி ஆட்சியை அடையாளம் காட்டுவதற்காகத் தி.மு.கழகத்தின் ரகு - கவர்ச்சிக் கோலம் பூண்டு மாயை புரிகின்ற, மான் வேட்டையில் ஈடுபட்டு கான் ஆகிவிட்ட - அதாவது காடாகிவிட்ட நாட்டை - உண்மையில் நாடாக்க முயலுகிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா - நாவலர் கூறிய ராமாயணத்தின்படி!

மானல்ல! மாரீசன் என்று ராமாயணத்தில் தெளிவுபடுத்தியது போலத்தான் - இப்போது நடப்பது ஆட்சியல்ல! மக்களை ஏமாற்றும் காட்சியென்று தி.மு.க. தெளிவுபடுத்திட முனைகிறது! ரகுமான்கான் என்ற பெயரைப் பகுத்துப் பின்வருமாறும் பொருள் கொள்ளலாம்!

ரகு - என்றால் சூரியன்!

மான் - என்றால் சிங்கம்!

கான் - என்றால் மலர்!

இவ்வாறும் ந.சி. கந்தையா பிள்ளை அவர்கள் தொகுத்துள்ள செந்தமிழ் அகராதியில் பொருள்கள் கூறப்பட்டுள்ளன!

இலக்கிய மணம் வீசும் மலராகவும், இனமானம் காத்திடும் சிங்கமாகவும், இன்பத் தமிழகத்தைக் கப்பியுள்ள இருள்போக்கும் சூரியனாகவும் - கழகம் விளங்குகிறது என்பதைக் குறிக்கும் பெயராகவும் அதனைக் கொள்ளலாம் அன்றோ!

நாவலர் பிறந்தநாள் விழாவில், நான் அவருடன் நடத்தும் பட்டிமன்றமல்ல இது!

உண்மையின் படப்பிடிப்பு! அது அவர் உள்ளத்துக்குத் தெரியும்!

அன்புடன்

மு.க.

12-07-1985

1320. தேரா மன்னா! செப்புவது உடையேன்!

உடன்பிறப்பே,

பாண்டியன் அவைக்குப் பத்தினி கண்ணகி, காவியுகு நீரும், கையிற் தனிச் சிலம்புமாய் நுழைந்து நீதி கேட்க வந்தபோது - பாண்டியனை நோக்கி அவள் கொடுத்த முதல் குரல், தேரா மன்னா! செப்புவது உடையேன்! என்பதுதான்!

அதாவது, ஆராய்ச்சியற்ற மன்னனே! நின்பால் கூற வேண்டிய குறை ஒன்றுண்டு எனக்கு! எனப் பொருள் அதற்கு!

தெரிந்து தவறிழைக்காமல், தெரியாமல் அவசரத்தில் தவறிழைத்துவிட்ட அந்தப் பாண்டியன் தனது நடுநிலை கெட்டது என்பதற்காக அதிர்ச்சியுற்றான்! உயிர்விட்டான்! நீதிமான், நெறியுடையான், அந்தப் பாண்டியன் என்பதால், அவன் நீதி தவறிக் கோவலனைக் கொன்று கண்ணகி, மாதவி எனும் இரு கற்புக்கரசிகளையும் கைம்பெண்களாக்கிய கொடுமைகூட மறந்து போகிறது. அந்தப் பாண்டியன், தன்னுயிரையே தந்து, தனக்குத் தானே தண்டனையை நிறைவேற்றிக் கொண்டதால்!

நாமும் இப்போது ஒரு பாண்டியனைப் பார்க்கிறோம்!

யானோ அரசன்? யானோ அரசன்? என்று சிலப்பதிகாரப் பாண்டியன், கதறுகிறான். தனது செங்கோல் வளைந்ததை எண்ணி!

ஆனால் இந்தப் பாண்டியனோ, யானே எல்லாம்! யானே எல்லாம்! என்று சினந்தெழுகின்றார். சீறுகின்றார், சிறுத்தையெனப் பாய்கின்றார்!

அடடா! இவர் அளிக்கும் தீர்ப்புகளில் தான் என்னே நடுநிலை! என்னே நடுநிலை!

எழுத்தாளர் ஒருவர், இங்கிதம் தெரியாமல் ஏதோ எழுதி விட்ட குற்றத்துக்காக - எப்போதோ செய்த குற்றத்துக்காகச் சிறையிலே போடு! எனச் செந்தீ விழிகளில் பறக்க ஆணை பிறப்பிக்கும் பாண்டியனையும் பார்க்கிறோம்! மிகச் சரி!

ஆனால் அமைச்சராக இருந்த ஒருவர், எதிர்தரப்புத் தலைவர் ஒருவரைக் குறித்து அவையிலேயே பச்சைப் புளுகு மூட்டையொன்றை அவிழ்த்துவிட்டு, அதனை நிரூபிக்கிறேன் என்று மார்தட்டிப் போர்க்குரல் கொடுத்து, இறுதியாகப் போலிப் பத்திரம் தயாரித்துக் காட்டி, போலிக் கையெழுத்துமிட்டுத் தன்னையொரு மோசடி மனிதன் என்று நிரூபித்துக் கொண்ட பிறகும், பாண்டியனின் நியாயத் தராசில் ? நீதியின் எடைக் கற்கள் ஏறி நிற்கவேயில்லை! அடடாவோ! என்னே இந்தப் பாண்டியனின் நீதிவழுவா நெறிமுறை!

வியக்கிறோம்! வியக்கிறோம்! விழி பிதுங்கிட வியக்கிறோம்!

மற்றோர் அமைச்சர் அவை நடுவே நின்று, வெளியில் இருக்கும் ஒருவரைக் குறித்து, மதுக்கடை பற்றிய குற்றச்சாட்டு ஒன்றைக் கூறிக் கொக்கரிக்கிறார்!

அவர் அப்படிக் கூறியது உண்மையல்ல என்று மறுக்கப்படுகிறது!

ஆமாம்! அது உண்மையல்லதான்! அமைச்சர் தவறாகத்தான் கூறிவிட்டார்! அது அம்பலத்துக்கு வந்த பிறகாவது அமைச்சர் ஒரு வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று ஆணையிட்டாரா பாண்டியன்?

தாமதமாக மறுப்பதால் ஏற்க முடியாது என்று தட்டிக் கழித்து விட்டார் நியாயத்தை!

ஆனால் ஏடொன்றில் வந்த செய்தியினைப் படித்து விட்டு, அவையில் உள்ள சிலரைப் பற்றி இப்படிச் செய்தி வந்துள்ளது. அது உண்மையோ அல்லவோ என்று எனக்குத் தெரியாது எனக் கூறியது, குற்றமென்று குன்றின் மீது ஏறிநின்று கூறுகின்றார் இந்தப் பாண்டியன்!

நெஞ்சாரப் பொய் சொல்லி - நிரூபிக்க முடியாமல் தவித்த அமைச்சர்களுக்கு ஒரு நீதி!

செய்தி கண்டேன்! உண்மையோ பொய்யோ நானறியேன்! எனச் சொன்ன எதிர் தரப்பாருக்கு ஒரு நீதி!

நல்லதம்பிகளைப் பற்றி நாராச நடையில் புளுகலாம். அதற்கு அனுமதி! அதை ஆதாரத்துடன் மறுத்தாலும், வருத்தம் தெரிவிக்க முடியாதென்கிற நிலைமை! மந்திரியென்கின்ற காரணத்தால், அங்கே மண்டியிடுகின்றன நீதி!

ஆனால், உண்மையோ பொய்யோ நானறியேன்! என உரைப்பது பெருங்குற்றமெனத் தாண்டிக் குதிக்கிறது, அதே நீதி!

எங்கள் சமூகத்தினர்க்கு அதாவது முஸ்லிம்கள், அரிஜனங்களுக்கு நடுவர் பதவி வழங்க வேண்டுமென அவையில் இருவர் கூற - அது கேட்டுப் பாண்டியன் பதறிப்போய், சமூகத்தின் பெயரால் நடுவர் பதவி கேட்கக் கூடாதென அறிவுரை முழங்கிட, அது வந்தது எல்லா ஏடுகளிலும்!

சில நாள் சென்ற பிறகு அதே பாண்டியன், தனது சமூகக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு - நமது சமூகத்திற்கு நடுவர் பதவி கிடைத்திடப் பாடுபடுவோம் என்று கர்ச்சனை செய்ததையும் ஏடுகள் வெளியிட்டபோதுதான் - முரண்பாடுகளின் மொத்த உருவமே இந்தப் பாண்டியன்தான் என்ற உண்மை ஊருக்கே தெரிந்தது!

தேரா மன்னா! என வெகுண்டெழுந்து கண்ணகி விளித்தபோது, உன்னையும் கொலை செய்வேன் கோவலனைப் போல! என அந்தப் பாண்டியன் கொடுஞ்சொல் கூறவில்லை!

நீதிக்குத் தலைவணங்கினான். அதனால், நீதிக்கு உயிர் தந்த நெடுஞ்செழியப் பாண்டியன் ஆனான்!

நீடு வாழ்கிறான்! பண்பாளன் என்ற பெயரோடு!

பாண்டியரெல்லாம் பாண்டியராவாரோ? பகர்வாய் உடன்பிறப்பே!

அன்புடன்

மு.க.

18-07-1985

1321. இந்த நாள்; நம் இதயத்தைப் பிழியும் நாள்

ஜூலை 25- வெந்த புண்ணில் வேல் சொருகப்பட்ட நாள்!

வீரவணக்க நாள்!

இலங்கையில் வெளிக்கடைச் சிறைக்கோட்டத்தில் தமிழ் விடுதலைப் போராளிகளின் தானைத்தலைவன் தங்கதுரையும், தளபதிகள் குட்டிமணி, ஜெகன் மற்றும் ஐம்பதுக்கு மேற்பட்ட விடுதலைப் போராளிகளும் கொடுமையாகக் கொல்லப்பட்ட நாள்!

1980ஆம் ஆண்டு சிறைப்பட்ட அந்த விடுதலை வீரர்களை 1983 ஜூலை 25ஆம் நாள் சிங்களவெறியர்களும், சிங்கள அதிகாரிகளும் கூட்டுச் சேர்ந்து கொன்றுகுவித்த அந்த நாள் முதல் இந்த நாள் வரை இலங்கையில் தமிழ் இனத்தை நாளும் அழித்தொழிக்கும் அக்கிரமம் தொடர்ந்து நடந்து கொண்டேதான் இருக்கிறது!

இலங்கைத் தமிழ் இனம் அமைதியானதும் - உரிமை கொண்டதும் - சுதந்திரக்காற்றைச் சுவாசிப்பதுமான புதுவாழ்வு பெற்றிடத் தம் வாழ்வை அர்ப்பணித்த தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் அவர்களைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான நமது தமிழ்சாதி மக்களின் புதைகுழிகள் இருக்குமிடம் நோக்கி, நமது கண்ணீர்ப் பூக்களால் மலர்வளையம் கட்டி வைத்து வீரவணக்கம் செலுத்துவோம்!

வேதனையை வெளியிடும் நாள்தான்; விழிநீர் பெருக்கிடும் நாள்தான்; "வீறுகொண்டு எழுக தமிழா!" என முழங்கிடும் நாள் தான்; இந்த நாள் - ஜூலை 25ஆம் நாள்!

அன்புடன்

மு.க.

24-07-1985

1322. தும்பை விட்டது ஏன்? வாலைப் பிடிப்பது ஏன்?

உடன்பிறப்பே,

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடுகள், தொழிற்கல்வித் துறையிலும், வேலை வாய்ப்புத் துறையிலும் பறி போகக்கூடிய அளவுக்கு 1950ஆம் ஆண்டில் அல்லாடி போன்ற வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களில் தீர்ப்பு பெற்ற காரணத்தால் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் திராவிடர் கழகத்தின் சார்பிலும், தி.மு.கழகத்தின் சார்பிலும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இருந்து செயல்பட்டுப் போர்க் குரல் கொடுத்து, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்களும், கே.டி.கோசல்ராம், ஆர்.வி.சாமிநாதன் போன்ற காங்கிரஸ் இயக்க முன்னோடிகளும் அந்தக் குரலுக்கு ஆதரவாக இருந்து, இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள், இந்திய அரசியல் சட்டத்திலேயே முதல் திருத்தமாக கல்வி ரீதியாகவும், சமூகரீதியாகவும் என்ற வாசகங்களோடு இடஒதுக்கீட்டுக்கான வழிவகையை ஓரளவு நாம் மனநிறைவு கொள்ளத்தக்க நிலையில் செய்து கொடுத்தார்.

பெரியாரும், அண்ணாவும் அன்றைக்கு போர்க்கொடி உயர்த்தாமல் இருந்திருந்தால் - தகுதி, திறமை, பொருளாதார அடிப்படை என்ற மாயாஜால மாடுகள், இடஒதுக்கீடு என்ற உரிமைப் பயிரை வேலி தாண்டி வந்து மேய்ந்து, துவைத்து, துவம்சம் செய்துவிட்டுப் போயிருக்கும்!

அதன் தொடர்பாகத்தான் தமிழகத்தில் சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் SOCIALLY AND EDUCATIONALLY தொழிற்கல்வி நிலையங்களில் சேருதல், வேலை வாய்ப்புகளைப் பெறுதல் ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25% இருபத்தைந்து சதவிகிதமும், தாழ்த்தப்பட்ட

மக்களுக்கு 16% பதினாறு சதவிகிதமும் இடஒதுக்கீடு என்ற நடைமுறை உருவாகியது!

இந்த நடைமுறைக்குப் பழுதுவராமல் காமராஜர் ஆட்சிக் காலத்திலும், பக்தவத்சலனார் ஆட்சிக் காலத்திலும், அண்ணா ஆட்சிக் காலத்திலும் பாதுகாக்கப்பட்டன.

அண்ணாவுக்குப் பிறகு கழக ஆட்சித் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றிருந்த போது - பிற்படுத்தப்பட்ட மக்களுக்கென ஒரு தனித் துறை உருவாக்கியதோடு - பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனும், தாழ்த்தப்பட்ட மக்கள் நலனும் மேலும் அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டுமென்பதற்காக - இரு துறைகளும் ஒன்றாக இணைந்திருக்கக் கூடாது என்பதோடு, இரு துறைகளையும் தனித்தனி அமைச்சர்கள் பொறுப்பேற்றுச் செயல்படுத்த வேண்டுமென்ற நிலையில் பிற்படுத்தப்பட்டோர் துறைக்கென அமைச்சர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். பிற்படுத்தப்பட்டோர் நல்வாழ்வு பெருகுவதற்கான வழிமுறைகளை வகுக்குமாறு ஒரு கமிஷனும் அமைக்கப்பட்டது.

அதன் தொடர்பாக, 25% இருபத்திஐந்து சதவிகிதம் என்றிருந்த பிற்படுத்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டை 31% முப்பத்துஒன்று சதவிகிதம் என உயர்த்தியும், 16% பதினாறு சதவிகிதம் என இருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டை 18% பதினெட்டு சதவிகிதம் என உயர்த்தியும், மீதமுள்ள 51% ஐம்பத்திஒன்று சதவிகிதத்தில் எல்லாப் பிரிவு மக்களும் போட்டியிடக் கூடிய பொதுத் தொகுப்பென ஆக்கியும் கழக ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் தாழ்த்தப்பட்டுள்ள, பிற்படுத்தப்பட்டுள்ள மக்கள் அல்லது வகுப்பினர் என்ற சமுதாயக் கண்ணோட்டத்துடன் வழங்கப்பட்ட இந்த இடஒதுக்கீடுகளுக்கு நண்பர் எம்.ஜி.ஆர். எதிரி என்பதை அவர் முதலமைச்சராவதற்கு முன்பே அ.தி.மு.க. தலைவராக அமெரிக்கா சென்றிருந்த போது நிருபர்கள் பேட்டியொன்றில் தெளிவாகக் கூறித் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டார்.

எனினும், யானை தன் தலையில், தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வது போலத் தமிழ்நாட்டு மக்கள் - குறிப்பாகத்

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள், அவரையே தங்களுக்கு முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்!

அதன் விளைவாக - சமூக அடிப்படையில், கல்வி அடிப்படையில் இடஒதுக்கீடு என்பதைமாற்றி, ஆண்டொன்றுக்கு ஒன்பதாயிர ரூபாய்க்கு மேல் சம்பாதிப்பவன் முன்னேறிய வகுப்பு என்றும், ஒன்பதாயிரத்துக்குக் குறைந்த வருமானமுடையவனே பின்தங்கிய வகுப்பு என்றும், பொருளாதார அடிப்படை என்ற ஒரு நச்சுப்பாம்பை, பெரியார், அண்ணா இருவரது கருத்துகளுக்கு மாறாக படமெடுத்து ஆடவிட்டார்!

அந்த நச்சுப் பாம்பின் தலையை நசுக்கியே தீருவதென்ற முடிவுடன் தி.மு.கழகம், திராவிடர் கழகம், மற்றும் முஸ்லிம் லீக், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சியில் உள்ள பெரும்பாலான முன்னோடிகள் தமிழகமெங்கும் எம்.ஜி.ஆரின் ஒன்பதாயிர ரூபாய் உச்சவரம்பு ஆணையை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த வரலாற்றை யாரும் மறந்திருக்க முடியாது!

பெரியாரின் நிழலிலும், அண்ணாவின் நிழலிலும் வளர்ந்தவர்கள் - தங்களைத் திராவிட இயக்கத்தினர் என மார் தட்டிக் கொண்டவர்கள் - திராவிட இயக்கத்தினாலேயே பலன்பெற்றவர்கள் - தங்களுக்குக் கிடைத்த அமைச்சர் பதவிகள் பறிபோகக்கூடாது என்பதற்காக, தி.மு.க.வும், திராவிடர் கழகமும் முன்னின்று நடத்திய அந்தக் கிளர்ச்சியைக் கேவலமாக விமர்சித்தனர்! பெரியார், அண்ணா இருவரின் இடஒதுக்கீட்டுக் கருத்துகள் இந்தக் காலத்துக்கு ஒவ்வாது என கட்டுரைகள் தீட்டினர்!

அவர்களது இழிமொழிகளைப் பொருட்படுத்தாமல் தமிழகம் கொந்தளித்த காரணத்தால் - எம்.ஜி.ஆர். தனது உச்சவரம்பு ஆணையை மாற்றிக் கொண்டார்! ஒன்பதாயிரம் ரூபாய் என்ற பொருளாதார அளவுகோலை வீசியெறிந்தார்!

பிற்படுத்தப்பட்டோருக்கு 31% முப்பத்தியோரு சதவிகிதம் என்றிருந்ததை 50% ஐம்பது சதவிகிதம் என அறிவித்தார்!

1980 பாராளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியினால், எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலை மனத்தில் வைத்துக் கொண்டு இப்படியொரு ஆணையை அவர் திடீரென பிறப்பித்தாரே தவிர,

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு என்பது அவர்களுக்கு சமுதாய அடிப்படையில் உள்ள உரிமை என்பதையோ - சமூகநீதி என்பதையோ அவர் இதயபூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை - அவரது தொடர் நடவடிக்கைகள் தெளிவாகவே காட்டின!

50% ஐம்பது சதவிகித இடஒதுக்கீட்டை எதிர்த்துச் சிலர் உச்சநீதி மன்றம் சென்றனர். அந்த வழக்கின் விளைவாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தருவது என்ற பெயரால் தமிழக அரசு அம்பாசங்கர் கமிஷனை அமைத்தது.

அம்பாசங்கர் சுயேச்சையாக செயல்பட முடியாதபடி - எம்.ஜி.ஆர். அவர்கள் வெளிப்படையாகவே நடந்து கொண்டார்.

உதாரணமாக, அம்பாசங்கர் கமிஷன் அமைத்த ஒருவார காலத்திற்குள்ளாக - அதாவது 17.12.84 அன்று சென்னையில் நடந்த பாரதியார் விழாவில் கலந்துகொண்ட முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.,

1 தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுத்து மற்றவர்களுடன் போட்டியிடச் செய்யலாமே ஒழிய, தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனி ஒதுக்கீடு கூடாதென்று எங்கள் அமைச்சரவை விரும்புகிறது.

2 வருமான வரி செலுத்த வேண்டாதவர்களை பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகக் கருதி, அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கும் ஒரு திட்டம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்த இரண்டு கருத்துகளும் முதலமைச்சரின் வாயால் வந்த பிறகு - அம்பாசங்கர் என்ன செய்வார்? எப்படிச் செயல்படுவார்? என்னதான் அவர் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காகக் கழக அரசு அவரை மிக உயர்ந்த பொறுப்பில் அமர்த்தியது என்றாலும் - தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவர்க்கோர் குணமுண்டு என்ற நாமக்கல்லார் பாடலுக்கேற்ப - அம்பாசங்கர் அவர்கள், எம்.ஜி.ஆரின் மனதைப் புரிந்து கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பாதகமான அறிக்கையொன்றைத் தயாரித்து முடித்தார்.

அந்தக் குழுவில் நமது அன்பிலும் மற்றும் அ.தி.மு.க. நண்பர்களும் கூட இருந்தார்கள்.

எம்.ஜி.ஆர். உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு ஆட்பட்டிருந்த காரணத்தால், அ.தி.மு.க. நண்பர்களும் கூடத் தங்கள் கருத்துகளை சுயேச்சையாகத் தெரிவிக்கும் வாய்ப்பினைப் பெற்று, அம்பாசங்கர் அறிக்கையை ஆதரிக்க மறுத்து மறுப்பு குறிப்பு எழுதிவிட்டார்கள்.

அம்பாசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலனில் அக்கறையின்றி வழங்கியுள்ள அறிக்கையைத் தூக்கிப் போட்டுவிட்டு, வேறொருவரைக் கொண்டு ஒரு புதிய கமிஷன் அமைக்க வேண்டுமென்பதை நூற்றி இரண்டு நாட்களுக்கு முன்பே 11.4.85 சட்டமன்ற மேலவையில் நான் வலியுறுத்தியபோது, அதற்கு ஓரளவு இணக்கமான பதிலை நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அளித்தார்.

பதில் அளிக்கப்பட்டதே தவிர, அதற்கேற்பப் பரபரப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை!

நானும், பேராசிரியரும், தளபதி வீரமணியும், நண்பர் லத்தீப்பும், நண்பர் நெடுமாறனும் மற்ற தலைவர்களும் இடஒதுக்கீடு குறித்து திராவிடர் கழக மாநாட்டில் எழுப்பிய குரலையும், நாடும், நாடாள்பவர்களும் அறிவார்கள்!

புதிய குழு அமைப்பது குறித்தும், இப்போதுள்ள இடஒதுக்கீடு முறை மேலும் இரண்டு ஆண்டு நீடிக்க வேண்டுமென்று கோரியும் - மிகத் தாமதமாகவும், மிகமிக நிதானமாகவும், வேண்டா வெறுப்புடனும் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்துக்குச் செய்திருந்த முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்று செய்தி வந்துள்ளது.

உச்சநீதி மன்றம் இந்த முறையீட்டைத் தள்ளுபடி செய்துவிட்ட போதிலும், இப்போதுள்ள நிலைமை இடஒதுக்கீட்டில் நீடிப்பதற்கேற்ற வகையில் அரசு, புதிய ஆணை பிறப்பிக்குமென்று சட்ட அமைச்சர் நண்பர் பொன்னையன் அவர்கள் அறிவித்திருப்பது சற்று ஆறுதலாக இருக்கிறது!

தும்பை விட்டு, வாலைப்பிடிக்க ஓடுவது!

என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது!

தும்பை விட்டதற்கு என்ன காரணம்? தூய்மையான இருதய சுத்தியோடு எம்.ஜி.ஆர். அவர்கள் இடஒதுக்கீடு உரிமையை அணுகவில்லை என்பதுதான்!

நீதிமன்றத்தின் மீது பழியை போட்டு விட்டு, பிற்படுத் தப்பட்ட மக்களை ஏமாற்றுகிற நாடகத்தை எம்.ஜி.ஆர். நடத்தினார் என்பது தான் உண்மை!

அதனால்தான் ஆதாரங்களுடன் கடந்த கால குறிப்புகளை நினைவுபடுத்தினேன்!

ஏமாறுகிறவர்கள் இருக்கிற வரையில் ஏமாற்றுபவர்களுக்குக் கொண்டாட்டம்தானே!

அதன் விளைவுதானே! பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் இன்னமும் பின்னணியிலேயே இருப்பது!

அன்புடன்

மு.க.

25-07-1985

1323. மந்திரி, மிஸ்டர் மானஸ்தருக்கு ஒரு எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

கழகத்தின் பொதுக்குழு கூடி, சட்டதிட்டங்களில் அமைப்புகளின் நிர்வாக வசதிக்காகவும், கிளைக் கழகங்கள் முதல் தலைமைக் கழகம் வரையில் உள்ள ஜனநாயக வழித் தொடர்பு மேலும் செம்மைப்படுகிற வகையிலும் பல்வேறு திருத்தங்களைச் செய்து ஒரே மனதாக ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல், நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் விளக்கவுரையாற்றி, பத்தொன்பது தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு, 1982 முதல் 85ஆம் ஆண்டு முடிய கழகத்தின் வரவு, செலவு கணக்குளைத் தணிக்கைக் குழுவினர் பரிசீலித்து அதற்கான அறிக்கையும் பொதுக்குழுவில் படிக்கப்பட்டு, அது குறித்த விளக்கங்களும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களாலும், பொருளாளர் சாதிக் அவர்களாலும் வழங்கப்பட்டு, கழக உறுப்பினர் சேர்ப்பதற்காக அச்சியற்றப்பட்டுள்ள விண்ணப்பத்தாள்கள் போதவில்லை என்கிற அளவுக்கு அவற்றினை பொதுக்குழு உறுப்பினர்கள் பெற்றுச் சென்றிருக்கிறார்கள் என்ற அளவில் - நடைபெற்று முடிந்துள்ள பொதுக்குழுவின் சிறப்புகளை நாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடும் வேளையில்-

எங்கிருந்தோ ஒரு குரல் - எரிச்சலைக் கக்கும் குரல் - இழிமொழிகளைக் கணையாக்கிக் கொண்டு எழும் குரல் - பொய்யும் புனைச் சுருட்டும் கொண்ட குரல் - நாகரிகமற்ற குரல் - நாத்தழும்பேறிய காரணத்தால் தடித்த வார்த்தைகளைக் கலந்து கொட்டும் குரல் - நரகல் நடைப்பேச்சில் பழகி விட்ட குரல் - நாராசக் குரல்-

ஆகா! பொதுக்குழுவில் மோதல்! மோதல்!

என்று ஆரம்பித்து, அதன் தொடர்பாகக் கழிவறையில் மேலும் மேலும் நாவை தோய்த்துக் கொண்டு ஏதேதோ உளறிக் கொட்டியிருக்கிறது அந்தக் குரல்!

ஏற்கனவே பெரியாரையும், அண்ணாவையும் நம்பி, அவர்களது பேச்சைக் கேட்டு முப்பது நாற்பது ஆண்டுக் காலமாக முட்டாள்களாக இருந்து விட்டோம் என்று ஒரு விழாவில் வேதனைப்பட்ட குரல்தான் அது!

விடுதலை இதழ் தந்த ஆழ்வார் என்ற பட்டத்தைத் தாங்கி நிற்கும் குரல்தான் அந்தக் குரல்!

ஆலயங்களில் காண்பேன் புனிதம் என்றும், ஆண்டவனே சரணம் என்றும் வேஷம் கட்டிக் கொண்டு, திருச்செந்தூர் சுப்பிரமணிய சம்காரங்களுக்குத் திரையிட்டு மறைத்து பால் கமிஷன் அறிக்கைக்கே பதில் அறிக்கை வைத்த குரல்தான் அந்தக் குரல்!

அன்னம் என ஒரு பறவை இருந்தது - இப்போது இல்லை. அன்றில் என ஒரு பறவை இருந்தது - இப்போது இல்லை. யாளி என ஒரு மிருகம் இருந்ததாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன - ஆனால் இப்போது இல்லை என்று சொல்வது போல,

தமிழகக் காடுகளில் சந்தன மரம் என்று ஒரு மரம் இருந்தது. அது தமிழகத்தில் இப்போது இல்லை என்று எதிர்காலத்தில் ஆய்வு செய்து எழுதப்படுகிற அளவுக்கு, அவற்றை அழித்துப் பேழைகளை நிரப்பிக் கொள்கிற கொள்ளைக்காரக் குரல்தான் அந்தக் குரல்!

தன் கட்சிக்குள் நடக்கிற மோதல் - மோசடி - ஒருவரையொருவர் தாக்கித் தரக்குறைவாகவும் - ஏகவசனத்திலும் - எழுதி விடுத்த அறிக்கைகள், பேசிய பேச்சுக்கள் - குழாயடிகளில் பொழியும் சொற்களைக் கூட மிஞ்சி நின்ற வர்ணனைகள் - தமிழக ஏடுகளில் மட்டுமின்றி இந்தியா முழுமையும் உள்ள ஏடுகளில் வெளிவந்து இவர்களை அடையாளம் காட்டியதை நாடு மறந்துவிடவில்லை! ஆனால் பாபம்! இவர் மறந்துவிட்டார்!

கோட்டான் பழிக்கிறது, கோகிலத்தைப் பார்த்து!

குரங்கு, கேலி புரிகிறது! குழந்தையின் புன்னகை, இஞ்சி தின்னது போல் இருக்கிறது என்று!

காண்டாமிருகம், கண் சிமிட்டி ஏளனம் புரிகிறது! கலைமானைப் பார்க்க கண்றாவியாக இருக்கிறது என்று!

எருமை, ஏகடியம் செய்கிறது! எழிலார் பசுவுக்கு முகத்தில் களையே இல்லையென்று!

கடுமையான உவமைகள்தான் உடன்பிறப்பே!

என் செய்வது! கஷாயம் கொடுத்து குணப்படுத்தும் நோயல்ல - காட்டிலாகா அமைச்சருக்கு வந்துள்ள நோய்!

குற்றாலத்திலும் - குணசீலத்திலும் - கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் தீராத நோய்களைக் குணப்படுத்தக் கையாளுகிற முறைகளை நீ அறிந்திருக்கிறாய் அல்லவா?

அப்படியொரு கடுமையான முறை தேவைப்படுகிறது!

அதிலும் குணமடையும் என்று இவரைப் பொறுத்தவரையில், என்னால் உத்திரவாதமளிக்க முடியாது!

சீக்கிய பயங்கரவாதியை விடக் கொடுமையானவன் என்று என்னை விமர்சித்தார்!

சட்ட மேலவையில் ஒரு விதவையைப் போல் அமர்ந்திருக்கிறேன் எனக் கேலி பேசினார்!

இப்போது கருணாநிதியிடம் மானம் இருக்கிறதா? என்று கேட்கிறார்!

தேவைப்படுகிறது போலும் அவருக்கு! அதனால் என்னிடம் இருக்கிறதா என்று கேட்கிறார்!

அது பரிசளிக்கக் கூடிய பொருளும் அல்ல - பரிவர்த்தனை செய்து கொள்ளக் கூடியதுமல்ல!

ஏன் அப்படிக் கேட்கிறார் தெரியுமா?

இதோ சென்னை அயனாவரத்தில் அவர் பேசிய பேச்சு! தி.மு.க.வுக்குள் மோதல் நடக்கிறது என்ற தலைப்பில் தினத்தந்தி 29.7.85 இதழில் வெளியாகியிருக்கிறது!

கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது, காஞ்சிப் பெரியவரைப் பார்க்க விடிவதற்கு முன்பு முக்காடு போட்டுக் கொண்டு போனார். கருணாநிதிக்கு 1971இல் தேர்தல் ஏஜண்டாக

இருந்த மாத்ருபூதம் என்பவர்தான் அழைத்துக் கொண்டு போனார். காஞ்சிப் பெரியவர் கருணாநிதியைப் பார்க்க முடியாது என மறுத்தாரா இல்லையா? விடிந்துவிட்டால் வேஷம் கலைந்து விடுமென்று கருணாநிதி திரும்பி வந்தாரா இல்லையா? இதைப் பற்றி நான் மூன்றாண்டுகளாக கேட்கிறேன். கருணாநிதியிடம் மானம் இருந்தால் உடனே பதில் சொல்லட்டும்!

இப்படியொரு கருத்தைத்தான் காரசாரமாக அயனாவரத்தில் வெளியிட்டுள்ளார் அமைச்சர்!

உடன்பிறப்பே, ஏதோ, தான் திருடி! பிறரைத் திருடி- என்பதுபோலச் சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதற்காக, மூன்றாண்டுகளாக நான் அவரது பொய்க்கூற்றை அலட்சியப்படுத்தி வந்தேன் என்பதை அவரது வாசகத்திலிருந்து நீ புரிந்து கொள்ளலாம்!

மானம் இருக்கிறதா? என்றல்லவா கேட்கிறாய்?

இருக்கிறவன், இல்லாதவருக்கு பதில் சொல்லாமல் இருப்பது முறையன்று என்பதால் சொல்லத்தானே வேண்டியிருக்கிறது!

பன்றியைக் கண்டு விலகிப் போவது வீரத்துக்கு இழுக்கல்ல என்பார் நமது அண்ணா!

அது, தன் பாதையில் போகாமல் மேலேயே வந்து விழுந்தால், காலால் ஒரு உதை கொடுத்து அதனைத் தள்ளிட வேண்டிய நிலை தவிர்க்க முடியாமல் ஏற்பட்டு விடுகிறதல்லவா?

இவர் என்னைப் புண்படுத்த முயலுகிறார் என்பதை விடக் காஞ்சிப் பெரிய சங்கராச்சாரியார் அவர்களைத்தான், உண்மையிலேயே புண்படுத்துகிறார்.

என்னைப் போன்ற ஒரு பாப ஆத்மா பெரியவாளைச் சந்திக்கத் துடித்து இரவெல்லாம் காத்திருக்கும் போது, அந்தப் பாபியை ரட்சித்து அருள்பாலிப்பதுதான் தெய்வீகம் பொருந்தியவர்களுக்கு லட்சணம் என்று அறிவுரை கூறி, அதன்படி நடப்பதாகச் சொல்லப்படுகிற காஞ்சிப் பெரியவர் அவர்கள், என்னைச் சந்திக்க மறுத்து விட்டார் என்பது உண்மையானால், அவர் கொண்டுள்ளதாகக் கூறப்படும் கொள்கைக்கே அது முரண் அல்லவா?

விடிய விடியக் காத்திருந்தேனாம்! இந்த வீரப்பன்தான் விளக்கு தூக்கிக் கொண்டு என் அருகிலே நின்று கொண்டிருந் தாராம்!

அண்ணா, குன்றக்குடி அடிகளாரிடம் மரியாதை கொண்டிருந்தாராம் - அதனால் சங்கராச்சாரியாரை தரிசிப்பது தவறில்லை என்கிறார் அமைச்சராகிவிட்டவர்!

அண்ணாவும் சரி, பெரியாரும் சரி, நானும் சரி, பேராசிரியரும் சரி, தளபதி வீரமணியும் சரி - குன்றக்குடி அடிகளாரிடமும், மதுரை அடிகளாரிடமும் குடி கொண்டுள்ள தமிழ் உணர்வுக்காக - தமிழ் இன உணர்வுக்காக - அவர்களிடம் பழகினோம், இன்னமும் பழகிக் கொண்டிருக்கிறோம்!

தெய்வீக மகிமை அவர்களிடம் இருக்கிறது. அதனைக் கொண்டு நாம் அருள் பெறலாம் என்பதற்காக அல்ல!

காஞ்சிப் பெரியவர் அவர்களைக் கூட, யாரும் மதிக்கமாட்டோம் என்றோ, மதிக்கக்கூடாது என்றோ கூறிடவில்லை!

அவரிடம் அன்பு காட்டுவதற்கும், அருளாசி பெறுவதற்கு மிடையே உள்ள வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்திருப்பவர்கள் நாம்!

எந்த வழக்கறிஞர் திரு. மாத்ருபூதம் என்னை அழைத்துச் சென்றதாக அமைச்சர் சொல்கிறாரோ, அந்த மாத்ருபூதம் அவர்களே அமைச்சரின் பொய்யை மறுத்திருக்கிறார்.

காஞ்சிப் பெரியவர் அவர்கள், எத்தனையோ முறை கோபாலபுரத்தில் என் வீட்டிற்கு எதிரேயுள்ள கிருஷ்ணன் கோயிலுக்கு வந்திருக்கிறார்!

என் வீட்டு வழியாகக் கூடப் பல்லக்கில் வைத்து அவரை அந்தக் கோயிலுக்குக் கோபாலபுரத்தில் உள்ள பெரியவர்கள் அழைத்துப் போயிருக்கிறார்கள்!

ஆம்! அதுவும் நான் ஆட்சியில் இருந்த அந்த நேரங்களில்!

அவர் அப்படி அந்த ஆலயத்துக்கு வந்ததை நான் வெறுக்கவுமில்லை - அவரைப் பார்க்கவேண்டுமென்று விரும்பியதும் இல்லை!

விரும்பியிருந்தால், என் வீட்டிலிருந்து பத்தடி தூரம் நடந்தால் போதும், கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்று அவரைத் தரிசித்திருக்க முடியும்!

நான் பெரியாரின் தொண்டனாக இருந்து, பெரியாரின் தொண்டனாகவே வாழ்ந்து, பெரியாரின் தொண்டனாகவே இறுதிமூச்சினை விடப் போகிறவன்!

அண்ணாவின் தம்பியாக இருந்து, அண்ணாவின் தம்பியாகவே வாழ்ந்து, அண்ணாவின் தம்பியாகவே இந்த மண்ணுடன் கலக்க இருப்பவன்!

இடையில் பதவிகளுக்காகவோ - அல்லது வந்த பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவோ - நான் கொண்ட கொள்கையிலிருந்து இம்மியளவும் நழுவிட மாட்டேன்!

மானம் இருக்கிறதா? அமைச்சர் கேட்கிறார் என்னைப் பார்த்து!

மானமுள்ளவர் அவர் - ஆமாம்! முதலமைச்சர் அமெரிக்காவில் இருந்தபோது, இங்கே போலீஸ் அதிகாரி திரு.மோகன்தாஸ் அவர்களை ஒரு சாதாரண இலாகாவுக்கு மாற்றி அனுப்பினார் இந்த மானஸ்தர்!

எம்.ஜி.ஆர். அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும் அவரிட்ட முதல் உத்தரவே, அந்த அதிகாரியை மீண்டும் பழைய பொறுப்பில் அமர்த்தியதுதான்.

இந்தக் கதை அப்போது ஊர் சிரித்தது!

கூண்டு வேன் தயார் செய்து கொண்டு விமான நிலையத்துக்கு மகிழ்ச்சியோடு சென்ற இந்தக் கனவுலக முதலமைச்சர், எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலமுடன் நடந்து வந்தது கண்டு முகத்தில் பூசப்பட்ட கரியைத் துடைக்க முடியாமல் திண்டாடினார்! திகைத்தார்! திட்டங்கள் தவிடு பொடியாயிற்றே என்று தவித்தார்!

இதுவும் நாடறிந்த ரகசியம்! எல்லாம் காலத்தில் வெளிவரும், தேவைப்படும் போது!

இந்த மானஸ்தர் குறித்த எத்தனையோ ஊழல்கள் - அதுவும் அண்மையில் திட்டமிட்டுள்ள சுற்றுலாத்துறை ஊழல் உட்பட அனைத்துமே தக்க ஆதாரங்களுடன், தக்க நேரத்தில் நாட்டுமக்களுக்கு விளக்கப்படத்தான் இருக்கின்றன!

அதற்கிடையே இவர், அயனாவரத்தில் பேசியதுபோல கருணாநிதியின் மகன் - மருமகன் - குடும்பம் - என்றெல்லாம் தொடர்ந்து பேசுவாரேயானால்,

வெள்ளாடே கூட வேங்கையாக மாறும் எனக் கூறப்படுகிற இந்தக் காலத்தில், வேங்கை, எப்படி மாறும் என்பதை வெள்ளாடு வேங்கையாகிறது என்ற தலைப்பில், மகளின் பெயரால், மருமகன் பெயரால் படம் எடுத்த, படம் எடுத்துக் கொண்டிருக்கிற அமைச்சருக்கு விளக்கத் தேவையில்லை!

இறுதியாக ஒரு எச்சரிக்கை!

யாகாவாராயினும் நாகாக்க!

என் அன்பு உடன்பிறப்பே! இப்போது அவருக்கு இதற்கு மேல் கூறத் தேவையில்லை எனக் கருதுகிறேன்!

அன்புடன்

மு.க.

30-07-1985

1324. கழகக்காளை தாழை கருணாநிதி மறைவு தலைவர் கலைஞர் கண்ணீர் மலர்கள்!

தாழை! தம்பி தாழை! தஞ்சைத் தரணி தந்த தங்கமே! எங்களையெல்லாம் பிரிந்து போய் விட்டாயா?

தமிழ் இனத்தின் இளஞ்சுடராய் - தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து கிளம்பிய தகத்தகாய சூரியனாய் ஒளிவிட்டுக் கொண்டிருந்த உடன்பிறப்பே, இலட்சியம் இலட்சியம் என்றே துடித்துக் கொண்டிருந்த இருதயத்தின் கடைசித் துடிப்பை நிறுத்திக்கொண்டு எங்களைத் துயரக் கடலில் தூக்கி எறிந்து விட்டாயே தம்பி!

கடந்த ஆண்டு உன்னைத் தாக்கிய சிறுநீரக நோய்க்கு சண்டிகார் வரையிலே சென்று சிகிச்சை அளித்துக் காப்பாற்றினோமே - முற்றிலும் நலம் பெற்றுவிட்டாய் என மகிழ்ச்சியில் திளைத்திருந்தோமோ

எவ்வளவோ சொல்லியும் தடுத்தும்- கெஞ்சியும் கேட்காமல் இலங்கைத் தமிழர் போராட்டத்திற்காகத் தஞ்சை மாவட்டம் சென்று பாசறை அமைவதைப் பார்த்துவிட்டே வருவேன் என்று புறப்பட்டாய்

புறப்பாட்டே! அதனால் உன்னைக் "காமாலை" நோய் தொத்திக் கொண்டு; உன்னைத் தன்னுடன் அழைத்துக்கொண்டே போய் விடுமென யாருமே எதிர்பார்க்கவில்லையே!

கடமைக்கோர் எடுத்துக்காட்டாய்- கண்ணியத்தின் உறைவிடமாய் - கட்டுப்பாட்டின் இலக்கணமாய்த் திகழ்ந்து உன் தூய நடவடிக்கைகளால்- துல்லியமான பொது வாழ்க்கையினால் கழகத்தவர் நெஞ்சத்திலே நீங்கா இடம் பெற்றும் தமிழ் மக்களின் அன்புக்குப் பாத்திரமானாய்! -தஞ்சைச் சீமையின் கண்மணியாக,

நிலைபெற்றாய்! இப்படியொரு தம்பி எனக்குத் திருவாரூரிலே உண்டு - அவனுக்குப் பேசும் திறன் உண்டு - உழைக்கின்ற மனப்பக்குவம் உண்டு - கொள்கையிலே தொய்வில்லாத பற்றும் பாசமும் உண்டு - அந்த அன்புத் தம்பிக்கு "மு. கருணாநிதி" என்று என் பெயரே உண்டு; என்பதை எண்ணியெண்ணிப் பூரித்துப் போவேனே!

எனக்குப் போட்டியாக இருப்பதாக எவரேனும் எண்ணுவரோ என்று கருதி- என்னை விட்டுப் பிரிந்து விட்டாயா: இந்த இளம் வயதில்

உனைப் போல எத்தனை கருணாநிதிகள் தேவைப் படுகிறார்கள் நாட்டுக்கு என்பதை ஏன் தம்பி மறந்தாய்?

'தாழை' என அடைமொழி - உன் பெயருக்கு முன்னால் அமைந்தபோது - நான் நினைத்தவாறு தாழையின் மலராகவே தஞ்சை நிலத்தில் மணம் பரப்பினாய்!

அந்த மணம் இப்போது நின்றுவிட்டதே! -

புன்னகை மறைந்துவிட்டதே! உழைப்பின் உருவம் மீளா உறக்கம் கொண்டு விட்டதே!

நீ என் மீது பொழிந்த பாசம், மறக்கக் கூடியதா?

சட்டமன்ற உறுப்பினராக - நாடாளுமன்ற உறுப்பினராக - மக்களுக்காற்றிய பணி சாதாரணமானதா?

போட்டியிட்ட வேட்பாளர்களையெல்லாம் வேண்டிக் கேட்டுக்கொண்டு தாழ்த்தப்பட்ட சமூதாயத்திலேயிருந்து ஒரு மாவட்டச் செயலாளர் வர வேண்டும். அதுவும் தம்பி தாழை கருணாநிதி வர வேண்டுமெனப் பத்தாண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டக் கழகச் செயலாளராக உன்னைத் தேர்ந்தெடுத்தபோது, உன் கழுத்து கொள்ளாமல் மாலை அணிவித்தேனே; அதற்குள் உன் காலடியில் மலர் வளையம் வைக்கும் நிலையா எனக்கு!

நீ எங்களை விட்டுப் போய் விடவில்லை! போக மாட்டாய் போகவிடமாட்டோம்!

மண்ணுக்குள் விதையாக மறைகிறாய்! கொள்கைப் பயிராகத் தழைத்துக் குலுங்கிக்கொண்டிருப்பாய்!

தம்பி; தாழை! எந்தச் சமாதானமும் என்னை வேதனையிலிருந்து விடுவிக்கவில்லை!

என் செய்வேன்!

எப்படித் தாங்கிக் கொள்வேன்!

மு. கருணாநிதி

1-8-1985

1325. காஷ்மீரில் தொடங்கி ..... வரையில்!

உடன்பிறப்பே,

ஒருநாள் காலை ... பனிமூட்டம் சரியாகக் கலையாத அந்த நேரத்தில், காஷ்மீரத்து முதலமைச்சர் பரூக்அப்துல்லா, சுறுசுறுப்புக்காகத் தேநீர் அருந்திக் கொண்டிருக்கும்போது - பெரும்பான்மை பலத்துடன் இருந்த அவரது அமைச்சரவை கவிழ்ந்து விட்டது என்ற செய்தி வந்தது!

எப்படிக் கவிழ முடியும் எனது அமைச்சரவை? என்று ஆச்சரியத்துடன் வினா எழுப்பினார் அந்த நெடிதுயர்ந்த வாலிபர்!

நெருக்கடி நிலைப் பிரகடனத்தை எதிர்த்து, ஜெயப்பிரகாஷ் போன்ற தலைவர்களை விடுதலை செய்து, பத்திரிகைத் தணிக்கைகளை விலக்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியதோடு, அதனைத் தொடர்ந்து வலியுறுத்திய காரணத்திற்காக நூற்று எழுபதுக்கு மேற்பட்ட சட்டமன்றக் கழக உறுப்பினர்களின் பெரும்பான்மை பெற்றிருந்த தமிழ்நாட்டு ஆட்சியையே கவிழ்த்துவிட்டுக் கவர்னர் ஆட்சியைப் பிரகடனப்படுத்திய டெல்லிக்காரர்களுக்கு, காஷ்மீரில் பரூக் அப்துல்லா ஆட்சியைக் கவிழ்ப்பது ஒன்றும் பெரிய காரியமாக இல்லை!

காரணம், அப்துல்லாவுக்குத் தெரியாமலே இரவோடு இரவாக அவரது கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களை கவர்னர் மாளிகைக்குக் கடத்திச் சென்று, ஜி.எம். ஷாவின் ஆதரவாளர்களாக அவர்களையெல்லாம் மாற்றி, பரூக் அப்துல்லாவின் பலத்தைக் குறைத்துவிட்டார்கள்!

சட்டமன்றத்தைக் கூட்டுங்கள். என் பலத்தை நிரூபிக்கிறேன் என்று பாரூக் அப்துல்லா முழக்கமிட்டார்!

அப்படிப்பட்ட ஜனநாயக விரோத ? காரியங்களைச் செய்யமுடியாதென்றும் - கவர்னர் ஜக்மோகனே எதேச்சையாக அதனை தீர்மானிப்பார் என்றும் - இத்தகைய ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு ? மாறாகச் சட்டமன்றம் கூட்டி பலத்தைப் பரிசோதிப்பது பச்சை சர்வாதிகாரம் என்று டெல்லி கூறிவிட்டது!

ஜி.எம். ஷா முதலமைச்சராக அறிவிக்கப்பட்டார்!

பரூக் அப்துல்லாவின் கட்சி உண்மையான தேசிய மாநாட்டுக் கட்சி அல்லவென்றும், ஷாவின் கட்சியே உண்மையான தேசிய மாநாட்டுக் கட்சி என்றும், துதிகள், தோத்திரங்கள் பாடப்பட்டன!

ஜி.எம். ஷா அவர்கள் முதலமைச்சராயிற்றே!

அதனால் அவர் கட்சிதானே உண்மையான தேசிய மாநாட்டுக் கட்சியாக இருக்க முடியும்!

அப்படிச் சொல்லித் துதிபாடினால்தானே - ஆட்சிக்கு யார் வந்தாலும் தனது ஆதாயங்கள் பாதிக்கப்படாமல், பளபளப்பாக வாழமுடியும் பணத்துக்கும், பதவிக்கும் விலைபோகிற சில பச்சோந்திகளால்!

காஷ்மீரில் அதுபோன்று காரியவாதிகள் கொள்கைகளைப் பனிமூட்டத்தின் குளிரில் நடுங்கி விறைத்துப் போக விட்டுவிட்டு, தாங்கள் மட்டும் பதவிக் கம்பளியை உடல் முழுதும் போர்த்திக் கொண்டு புதிய முதலமைச்சர் ஷாவுக்கு ஜே போடத் தொடங்கினார்கள்!

பரூக்கிடமிருந்து ஷாவிடம் தாவி விட்டவர்களைக் கொண்டு மட்டும் ஷாவின் ஆட்சியைக் காஷ்மீரில் உருவாக்க முடியவில்லை!

கட்சித்தாவல் என்பதை நரக லோகம் சம்பவிக்கக்கூடிய பாபம் என்று பல காலமாகவே உபதேசித்து வரக்கூடிய காங்கிரஸ் கட்சி, ஷாவுக்கு ஆதரவாகக் கட்சித் தாவியவர்களுக்குத் தனது ஆதரவை வெளிப்படையாக அறிவித்தது!

அதாவது, காஷ்மீரில் காங்கிரஸ் ஆட்சியை எப்படியாவது அமைக்க வேண்டும் என்பதற்கு முதற்கட்டமாக ஜி.எம். ஷாவுக்கு முட்டுக்கொடுப்பதுபோலக் கொடுத்து, பிறகு அவர் தோளிலேயே ஏறி, அவரது ஆட்சியின் கழுத்தை முறித்துவிட்டு காஷ்மீரில்

காங்கிரஸ் ஆட்சி என்று பனிமலையில் ஏறி நின்று பறை சாற்றுவது! படகு வீடுகளில் ஓடியாடி உல்லாச கீதம் பாடுவது! இப்படியொரு திட்டத்தின் தொடக்கமே ஷாவின் அமைச்சரவைக்குக் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தருவதுபோல் நடித்த நாடகம்!

அந்த அற்புத நாடகத்தின் ஒரு காட்சி முடிந்து விட்டது!

இதோ அடுத்த காட்சி ஆரம்பமாகி விட்டது!

ஷாவின் அமைச்சரவையில் உள்ள சுமார் பத்து பேர் இந்திரா காங்கிரசில் சேரக்கூடும் என்று - அடுத்த காட்சியில் உள்ள பார்க் சீனில் செய்தி படிக்கப்படுகிறது!

மாநில அரசுக்கு நிர்வாகத் திறன் போதாது. பிரிவினை சக்திகள், வகுப்புவாத சக்திகளின் கைகள் ஓங்கியிருக்கின்றன.

என்பதாக - இதனால் சகலமான பேருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் - என்கிற பழையகாலத்து முரசறைவோன் பாணியிலே பிரதமர் ராஜீவ் காந்தி பேசியுள்ளதையும், அந்த பார்க் சீனில் ஒலிபரப்புகிறார்கள்!

இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைப்பதற்கு முன்பு, டான்னிங் சீன் அடிக்கப்பட்டு, ஜி.எம். ஷாவின் அமைச்சரவை கவிழ்ந்தது என்ற இடி மின்னல் காட்சிகள் காட்டப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

பதவியிழந்த பரூக்அப்துல்லா, ஷாவின் அரசை டிஸ்மிஸ் செய்துவிட்டு, காஷ்மீரில் பொதுத்தேர்தல் வேண்டுமென்று கடுமையான குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்!

பிறகு பிரதமரை அடிக்கடி சந்தித்தார்!
அதன் விளைவுகள் என்னவென்று தெரியவில்லை!

பரூக்கின் கட்சியினர், நாடாளுமன்றத்தில் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாகவே நடந்து கொள்கின்றனர் என்று செய்திகள் வந்தன!

முழு விவரம் தெரியாமல், நாம், ஒரு முடிவுக்கு வரக்கூடாதல்லவா?

இப்போது வருகிற செய்திகளைப் பார்க்கும் போது, பரூக்கின் கோரிக்கையும் நிறைவேறாமல் - ஷாவின் அமைச்சரவையும் நிலைக்காமல் -

பூனைகளுக்கு அப்பத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதாகச் சொல்லிய புத்திசாலிக் குரங்கு, எல்லாவற்றையும் தானே தின்று ஏப்பம் விட்டகதையாக - காஷ்மீர் கதை, தற்காலிகமாக நிறைவுறும் எனத் தெரிகிறது!

ஆட்சி மாற்றம் பற்றி பட்ஜெட் கூட்டத்திற்கு முன்பே முடிவு எடுக்கப்படுமென்று இந்திரா காங்கிரஸ் வட்டாரத்தில் பலமான பேச்சு பரவலாக நடைபெறுகிறதாம்!

பாவம், ஜி.எம். ஷா! பதவிக்காகத் தனது தோளில் காங்கிரசை ஏற்றிக் கொண்டார்!

அவர் தோளில் உட்கார்ந்து கொண்டு, அவரது தலையில் மிளகாய் அரைக்கும் வேலையை மிகத்திறமையாகச் செய்கிறது இந்திரா காங்கிரஸ்!

காஷ்மீரில் ஆரம்பமாகியுள்ள இந்த ஜனநாயகம் - ???

காஷ்மீரிலிருந்து ..... வரையில் பரவாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

அன்புடன்

மு.க.

04-08-1985

1326. டோஸ் நம்பர் ஒன்!

உடன்பிறப்பே,

ஊழலற்ற அரசு - உத்தமர் அரசு - நெறிமிகுந்த அரசு - நேர்மையான அரசு - இதுவே எங்கள் லட்சியம் என்று முழங்கியவாறு எம்.ஜி.ஆர். அவர்கள் வாக்காளர்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்ததையும் - இப்போது உலகத்திலேயே ஊழல் மலிந்ததும், நேர்மையற்றதும், நீதிக்கு மதிப்பளிக்காததும், நிர்வாகத் தவறுகள் நிறைந்ததுமான ஒரு ஆட்சி தமிழ்நாட்டில்தான் எம்.ஜி.ஆர். தலைமையில் நடைபெறுகிறது என்பதையும் ஆயிரம் ஆதாரங்களுடன் சொல்ல முடியும்!

தெரிய வருகிறது - கேள்விப்பட்டேன் - என்றில்லாமல் நேருக்கு நேராக, சட்டமன்றத்திலேயே சான்றுகளுடன் கழகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நாளதுவரையில், நாணயமான பதிலைச் சொல்ல முடியாத நிலையில் தான் அமைச்சர்கள் சிலரும், ஆளுங்கட்சியில் இருந்து கொண்டு அகப்பட்டதைச் சுருட்டுகிறவர்களும் நாத்தழும்பேறி நம்மை நாராச நடையில் வசைபாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தக் குற்றச்சாட்டுகளை - ஊழல்களை - நிர்வாகக் கோளாறுகளை - மீண்டும் ஒருமுறை வரிசைப்படுத்தி தொடர்ச்சியாக எழுதுவதற்கு முன்னால் - அற்ப விஷயம்! வீட்டு வாடகைப் பிரச்சினையில் எம்.ஜி.ஆர். எவ்வளவு ஊழல் செய்தார் என்ற ஆரம்பத்தை நினைவுபடுத்திவிட்டு - அடுத்தாற்போல் ஒவ்வொன்றாக விளக்குகிறேன், நேரம் கிடைக்கும்போதெல்லாம்!

அண்ணா முதல்வராக இருந்தபோதும், அவருக்குப் பிறகு நான் அந்தப் பொறுப்பேற்றிருந்த போதும் சொந்த வீடு இருப்பதால் அரசாங்க வீட்டுக்குக் குடியேறுவதில்லை யென்றும், சொந்த வீட்டுக்கும் அரசாங்கத்திலிருந்து நிர்ணயிக்கப்படுகிற வாடகை வாங்குவதில்லையென்றும், வீட்டு வாடகைப்படி என்ற பெயரால் தரப்படும் இருநூறு ரூபாய் மட்டும்

வாங்குவதென்றும் முடிவெடுத்து அவ்வாறே நடைமுறைப்படுத்தி வந்தோம்.

1977இல் முதலமைச்சராக எம்.ஜி.ஆர். அவர்களும், அதனையே பின்பற்றுவதாக அறிவித்து வீட்டு வாடகைப்படி இருநூறு ரூபாய் மட்டும் வாங்கிக் கொண்டார். ஆற்காடு முதலி தெருவில் உள்ள வீட்டுக்கு!

இரண்டு ஆண்டுகள் கழித்து, ஆற்காடு முதலி தெருவில் உள்ள வீடு, தனது சொந்த வீடு இல்லையென்றும் எம்.ஜி.ஆர். பிக்சர்சுக்குச் சொந்தமென்றும் கூறி, அதற்கு அரசாங்க வாடகையாக மாதம் ஆயிரத்து எண்ணூறு ரூபாய் என அறிவித்து, 1977 முதல் ரெட்ராஸ்பெக்ட் எபக்ட் இரண்டு ஆண்டுகளுக்கு கணக்கிட்டுச் சுமார் நாற்பத்தி ஐயாயிரம் ரூபாய் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டதே, அந்தச் சாதாரண வீட்டு வாடகை விவகாரத்திலேயே இந்த ஆட்சியின் ஊழல் ஆரம்பமாகி விட்டது என்று கூறலாம்!

பிறகு எரிசாராயம் - கப்பல் பேரம் - சாராய பாட்டில் - ராபின்மெயின் - என்றெல்லாம் எண்ணிலடங்கா ஊழல்கள்! கோடி கோடியாகக் கொள்ளைகள்! விரிக்கிற் பெருகும்! விரிவஞ்சி விடுத்துள்ளேன்! விபரங்கள், அவ்வப்போது ஆதாரங்களுடன் தொடரும்!

இதோ சமீப காலமாக தமிழ் நாட்டில் உள்ள ஒரு அறநெறி அமைச்சர், தன்னைத் தக்கார் எனத் தம்பட்டமடித்துக் கொண்டு, நம்மையெல்லாம் தகவிலர் என இழித்துப் பேசிக் கொண்டிருக்கிறாரே! அவரது அறநெறி பிறழா ? ஆட்சி நிர்வாகத்திற்கு இதோ ஒரு ஆதார பூர்வமான எடுத்துக்காட்டு!

அண்ணா எழுதினாரே, கம்பரசம் டோஸ் நம்பர் ஒன்று, இரண்டு என்ற தலைப்பில் தொடர்ச்சியாக!

அதைப் போல வீரப்பர் விவகாரம் இது டோஸ் நம்பர் 1 என்று தொடங்கலாம்!

சுற்றுலாத் துறைக்கும் நண்பர் வீரப்பன் அவர்கள் அமைச்சர் என்பதை நினைவில் வைத்துக் கொள்க!

அந்த சுற்றுலாத்துறையில் துணை இயக்குநர் பதவிகள் இரண்டு இடங்கள் காலியாயின!

பதவி உயர்வு புரோமோஷன் மூலம் அந்த இடங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அந்தத் துறையில் ஒன்பதாவது இடத்தில் எஸ். துரைராஜ் என்பவர் இருந்தார்!

ஆமாம் ஒன்பதாம் மடத்து ராஜா! அந்தத் துரைராஜா! இரண்டு ஆண்டுக்கு முன்புவரையில் ஒரு டிரில் மாஸ்டராக இருந்தவர்

பதவி உயர்வு எனும் புரோமோஷன் முறையைக் கையாளாமல், விளம்பரம் செய்து தேர்வு செய்தல் என்ற முறையைக் கையாண்டு, அந்தத் துரைராஜ் என்பவரை துணை இயக்குநர் பதவியில் தூக்கி உட்கார வைக்க ஒரு முயற்சி நடக்கிறது!

இந்த முயற்சிக்குப் பூர்வபீடிகையாக இதோ ஒரு கதை!

சுற்றுலாத்துறையில் சென்னையில் DRIVE-IN-RESTAURANT திறந்தவெளிச் சிற்றுண்டி விடுதியொன்றும், முட்டுக்காடு படகுத் துறையொன்றும் இயங்கி வருகின்றன!

டிரைவ் இன் ரெஸ்டாரண்ட் எனப்படும் திறந்தவெளிச் சிற்றுண்டி விடுதி மானேஜராக பி. ரங்கசாமி என்பவர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

திரு. கிருபாகரன் ஐ.ஏ.எஸ். என்ற அதிகாரி சுற்றுலாத் துறையின் மானேஜிங் டைரக்டராவார்!

இவர் கடந்த ஜனவரி மாதம் 30.1.85 அன்று சுற்றுலாத் துறையின் சென்னைத் திறந்தவெளி சிற்றுண்டி விடுதி மானேஜர் ரங்கசாமிக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்! அந்தக் கடிதத்தில்;

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் கூட்டத்திற்கு, மிகக் குறுகிய கால அறிவிப்பு இருந்தாலும்கூட, இனிமையான சிற்றுண்டியும், அருமையான காப்பியும் தயாரித்து அனுப்பி வைத்தமைக்காக தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றுலாத்துறை பொருட்காட்சி குறித்த விவாதத்தில் கலந்து கொண்ட அனைவரும், நீங்கள் அனுப்பிய சிற்றுண்டியின் சிறப்பை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

என்று பாராட்டி வாழ்த்தி எழுதிய அதே அதிகாரி கிருபாகரன் அவர்கள், 30.7.85 அன்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலிருந்து ஒரு ஆணையை அனுப்புகிறார். அவசரம் என்ற தலைப்பிட்டு!

அந்த ஆணையின் முதல் பகுதி இதோ:-

சென்னைத் திறந்தவெளி சிற்றுண்டி விடுதியின் விற்பனை நிலவரம் திருப்திகரமாக இல்லை. விடுதியின் தூய்மை குறித்தும், சிற்றுண்டி வகைகள் தரக்குறைவாக இருப்பது குறித்தும், பரிமாறுதலில் உள்ள தாமதம் குறித்தும் அடிக்கடி புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன!

ஆறு மாதங்களுக்கு முன்பு அற்புதம் - அபாரம் என்று பாராட்டிய அதே அதிகாரி, திடீரென்று அந்த சிற்றுண்டி விடுதியின் மீது சீறிப் பாய்கிறார்! என்ன காரணம் தெரியுமா?

அந்த காரணத்தை ஆணையின் அடுத்த பகுதியைப் படித்தால் புரிந்து கொள்ளலாம்!

சுற்றுலாப் பொருட்காட்சியின் தனி அதிகாரியான துரைராஜ் அவர்கள், திறந்த வெளிச் சிற்றுண்டி விடுதியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். அவர் ஓட்டல் பிரிவின் கமர்சியல் மானேஜர் பொறுப்புகளுடன் அந்த விடுதியை நடத்துவார்.

துரைராஜுக்கு வழங்கப்படும் அதிகாரத்திற்கான ஆணை, இத்துடன் முடியவில்லை! மேலும் தொடர்கிறது பார்!

முட்டுக்காடு படகுத் துறைத் திட்டத்தை என்.ஆர்.ஐ. திட்டத்தில் இணைத்து, நில ஆர்ஜிதம் போன்ற நடவடிக்கைகள் எடுத்து விரைவான செயல்களில் ஈடுபட வேண்டியுள்ளது. இந்தச் சூழ்நிலை காரணமாக, அதே துரைராஜ் அவர்கள் - முட்டுக்காடு படகுத் துறை நிர்வாகப் பொறுப்புகளையும் ஏற்றுக் கவனிப்பார். போக்குவரத்து கமர்ஷியல் மானேஜருக்குரிய அத்தனை பொறுப்புகளையும் இவரே ஏற்று, நிலஆர்ஜிதம் போன்ற முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்! இவருக்குத் துணையாகச் சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் உள்ள வரவேற்பாளரான பாலசந்திரன் என்பவர், பணியாற்றுவார். போக்குவரத்து மற்றும் செலவுகளுக்கு இவர்கள்

தகுதியுடையவர்களாகிறார்கள். இந்த ஆணை 1.8.85 முதல் நடைமுறைக்கு வருகிறது. ஆணை எண் 10154-ஏ.2-85-தேதி 30.7.85

உடன்பிறப்பே, இப்படியொரு ஆணையின் மூலம் துரைராஜ் என்பவர் தூக்கி நிறுத்தப்படுவதற்கும் - சென்னையில் ஒரு பதவியும், முட்டுக்காட்டில் ஒரு பதவியும் ஏக காலத்தில் தரப்படுவதற்கும் - ஆறுமாதத்திற்கு முன்பு அதிருசியாக இருந்த சிற்றுண்டிகள் திடீரென வெறுப்புக்கு உள்ளாவதற்கும் - என்ன காரணம் தெரியுமா?

சென்னையில் கமர்ஷியல் மேனேஜர் ஓட்டல் என்ற பொறுப்பும், முட்டுக்காட்டில் கமர்சியல் மேனேஜர் போக்குவரத்து என்ற பொறுப்பும் - பொருட்காட்சி தனி அதிகாரியாக இதுவரை இருந்தவருக்கு இந்த அரசில் ஒரே நேரத்தில் உடனடியாகக் கிடைக்கிறதென்றால், காரணம் இல்லாமல் இருக்குமா?

இவையும் போதாதென்று, இவரை டிப்டி டைரக்டராக ஆக்குவதற்கு எட்டு பேரை பின்னுக்குத் தள்ளி - விளம்பர மூலம் தேர்ந்தெடுக்கவும் ஒரு முயற்சி நடக்கிறது!

இந்தத் துரைராஜ் யார் தெரியுமா?

ஆட்சியின் நிர்வாகத் துறையில் NEPOTISM உறவினர்க்கு உதவுதல் எனும் போக்கினைக் கடைப்பிடித்து, அதற்காக நிர்வாக விதிமுறைகளையெல்லாம் மீறியுள்ள இச்செயல் புரிந்துள்ள சுற்றுலாத் துறைக்கும் அமைச்சர் திரு. வீரப்பன்தான்!

அவரது சகோதரியின் மகன் தான் இந்த துரைராஜ்!

இது வீரப்பன் விவகாரம், டோஸ் நம்பர் ஒன்!

அன்புடன்

மு.க.

06-08-1985

1327. குமாஸ்தா, கோபிக்கக் கூடாது!

உடன்பிறப்பே,

இன்று தினமணி 7.8.85 சென்னைப் பதிப்பு முதல் பக்கத்தில் - முதல்வருடன் பேச்சு பற்றி, கருணாநிதி கருத்து! கவர்னர் ஆட்சேபம் என்ற தலைப்பிட்டு பின்வருமாறு செய்தி தொடருகிறது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்டதாகச் சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளைப் பார்த்து தாம் ஆச்சரியமும், வேதனையும் அடைந்ததாக கவர்னர் குரானா அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். டோக்கியோவிலிருந்த முதலமைச்சருடன் நடத்திய தொலைபேசி பேச்சுவார்த்தை பற்றி ராஜ்பவனிலிருந்து கவர்னர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். எம்.ஜி.ஆருடன் பேசியதுபற்றி, கவர்னர் தன் அறிக்கையில் கூறியிருப்பது உண்மையல்ல என்று கருணாநிதி சில பத்திரிகைகளில் கருத்து தெரிவித்திருந்தார். இவ்வாறு கருணாநிதி தெரிவித்திருப்பது பற்றியே கவர்னர் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார். எம்.ஜி.ஆருடன் என்ன பேசப்பட்டதோ அந்தத் தகவல்களே ராஜ்பவன் செய்திக் குறிப்பில் தரப்பட்டது என்று மீண்டும் உறுதியாகக் கூறுவதாக, கவர்னர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தினமணியில் முதல் பக்கத்தில், முக்கியமான இடத்தில் பிரசுரிக்கப்பட்ட கவர்னரின் அறிக்கையை எழுத்து விடாமல் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கைக்கு அடிப்படை காரணம் என்ன?

5.8.85 சென்னைப் பதிப்பு முரசொலியில் கரிகாலன் பதில்கள் என்ற தலைப்பில் திருவண்ணாமலை டாக்டர் பாஷா ஷெரீப் என்பவர் கேட்டிருந்த கேள்விக்கு நான் பதில் அளித்திருந்தேன்.

கேள்வி :-

பேசுவதில் தமிழக முதல்வருக்கு சிரமம் உள்ளதாக டாக்டர் நரேந்திரன் கூறுகிறார். ஆனால் தம்முடன் மிகத் தெளிவாகவும், உற்சாகமாகவும் முதல்வர் தொலைபேசியில் பேசியதாக தலைமைச் செயலாளர் டி.வி.அந்தோணி சொல்கிறாரே?

பதில் :-

ஆமாம்! அரசுத் தலைமைச் செயலாளர் அந்தோணியுடன் ஜப்பானில் இருந்து முதலமைச்சர் அவர்கள் காவேரிப் பிரச்சினை குறித்துப் பேசியிருக்கிறார்! பஞ்சாயத்துத் தேர்தல் குறித்துப் பேசியிருக்கிறார்! சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் திட்டம் குறித்துப் பேசியிருக்கிறார்! என் செய்வது? கவர்னர் மாளிகையில் இருந்தே இப்படிப்பட்ட பொய்ச் செய்திகள் வரும் போது தலைமைச் செயலாளர் மட்டும் அவர்களுக்கு மட்டமா என்ன?

முரசொலியில் வெளியான இந்தக் கேள்வி பதிலுக்குத் தான் கவர்னர் அவர்கள், ஆச்சரியமும், வேதனையும் கொண்டு உடனடியாகத் தனது மறுப்பை வெளியிட்டிருக்கிறார்.

எம்.ஜி.ஆருடன் என்ன பேசப்பட்டதோ அந்தத் தகவல்களே ராஜ்பவன் செய்திக் குறிப்பில் தரப்பட்டது

என்பதாக அந்த அறிக்கையில் கவர்னர் குறிப்பிட்டுள்ளார். எம்.ஜி.ஆர். என்ன பேசினார் என்று இன்று வந்துள்ள கவர்னர் அறிக்கையில் குறிப்பு எதுவுமில்லை!

ஆனால், இதோ தினத்தந்தி 1.8.85 சென்னைப் பதிப்பில் வெளிவந்துள்ள தகவல்!

ஜப்பான் டாக்டர் கானு எம்.ஜி.ஆர். உடல் நிலையை பரிசோதனை செய்து திருப்தி அடைந்திருக்கிறார். சென்னையில் இருந்து கவர்னர் குரானா இன்று காலை ஜப்பானில் எம்.ஜி.ஆர். இருக்கும் ஆஸ்பத்திரிக்கு தொடர்பு கொண்டு டெலிபோனில் பேசினார். அவருடன் எம்.ஜி.ஆர்., பேசினார். நான் நன்றாக இருக்கிறேன், வைத்திய பரிசோதனைகள் தொடர்ந்து நடக்கின்றன என்று எம்.ஜி.ஆர். கவர்னரிடம் தெரிவித்தார். உங்களை விரைவில் சென்னையில் சந்திக்க எல்லோரும் ஆர்வமாக இருக்கிறோம் என்று கவர்னர் கூறினார். என் உடல் நிலை மிக நன்றாக இருப்பதை உணருகிறேன், விரைவில் சென்னை திரும்புவேன் என்று எம்.ஜி.ஆர். பதில் அளித்தார்.

எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலம் பெற வேண்டுமென்று வாழ்த்தியவன் என்பது மட்டுமல்ல. அவர் உடல் நலம் பெற்று சென்னை திரும்பியவுடன், அவரைச் சந்திக்க விரும்பி அவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிய கடிதத்தில் கூட விரைவில் நன்றாகப் பேசுகிற ஆற்றலையும் பெற வேண்டுமென்ற எனது ஆசையையும் தெரிவித்தவன் என்ற முறையில் கவர்னர் பெருமான் அவர்களின் மறுப்பு அறிக்கைக்கு நான் விளக்கமளிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் இன்று காலை ஏழு மணிக்கு ஜப்பானில் உள்ள முதலமைச்சர் எம்.ஜி.ஆருடன் டெலிபோனில் பேசினேன். அவர் இங்குள்ள நிலைமைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். சென்னை நகரக் குடிநீர் பிரச்சினை குறித்தும், அதற்காக நிலத்தடி நீர் நிபுணர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகக்ள் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார். காவிரியில் பாசனத்திற்கு நீர் விடும் பிரச்சினையில் மிகுந்த கவலையைத் தெரிவித்தார். முதலமைச்சர் என்னுடன் பேசும் போது அவருடைய குரல் தெளிவாக இருந்தது. நல்ல உரத்த குரலில் பேசினார். உடல்நிலை நன்றாக இருப்பதாகத் தெரிவிக்கும்படி சொன்னார்.

இவ்வாறு 30.7.85 சென்னை பதிப்பு தினத்தந்தி முதல் பக்கத்தில் அரசாங்க தலைமைச் செயலாளர் டி.வி. அந்தோணி அறிக்கை வெளிவந்திருக்கிறது!

முதலமைச்சருக்குப் பேசுவதில் சிரமம் இருக்கிறது என்று டாக்டர்கள் கூறுவது மட்டுமல்ல. சென்னையில் அவரை நேரில் சந்தித்த மத்திய அமைச்சர் ஒருவர் நிருபர்களிடத்திலேயே ஒளிவுமறை இன்றி, அவரால் பேச முடியவில்லை என்று கூறியிருக்கிறார். அது மட்டுமல்ல, முதல்வரைச் சந்தித்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரமுகர்கள் பலர் என்னைச் சந்திக்கும்போது - முதல்வரால் எதையும் ஜாடையாக உணர்த்த முடிகிறதே தவிர, பேச இயலவில்லை என்றும், குறிப்பாக ஓரிரு வார்த்தைகளை மட்டுமே அதுவும் தெளிவில்லாத நிலையில் உச்சரிக்க முடிகிறது என்றும் வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சென்னைத் துறைமுக விழாவில் கூட, அவர் பேசப் போகிறார் என அறிவிக்கப்பட்டு - ஆனால் அவர், அப்புறம் வந்து பேசுறேன் என்று தெளிவற்ற வாசகத்தை மட்டுமே சொல்லி விட்டு மேடையை விட்டு அவசரமாக இறங்கிவிட்டார்.

பிரமாதமான விளம்பரத்துடன் நடத்தப்பட்ட அண்ணா பவளவிழா, சிகிச்சை நிதியளிப்பு விழா, தீக்குளித்தோர் குடும்ப நிதியளிப்பு விழா - ஆகியவை இணைந்த அந்த முக்கியமான விழாவில் கூட அவர் ஒலிபெருக்கியின் முன்னால் வந்து நின்று ஓரிரு வார்த்தைகள் கூட கூறவில்லை!

உண்மைகள் இவ்வாறு இருக்க, அரசுத் தலைமைச் செயலாளர் டி.வி. அந்தோணி, ஜப்பானில் இருந்து எம்.ஜி.ஆர். தன்னுடன் தெளிவாகப் பேசினார். அவர் குரல் தெளிவாக இருந்தது. நல்ல உரத்த குரலில் பேசினார் என்றெல்லாம் அறிக்கைகள் விடுவது சரிதானா? தேவைதானா? என்பதே எனது கேள்வி!

அவ்வளவு தெளிவாக, உரத்த குரலில் ஜப்பானில் இருந்து டெலிபோனில் பேசக்கூடியவர், சட்டசபையில் ஒரு ஐந்து நிமிஷம்கூட ஏன் பேசவில்லை என்ற பிரச்சினை எழுவது நியாயம்தானே!

சென்னையில் இருந்தபோது அதே தெளிவான - உரத்த குரலைப் பயன்படுத்தி, கர்நாடக முதல்வருடன் காவிரிப் பிரச்சினை குறித்து ஓரிரு நிமிடம் டெலிபோனில் பேசி, அவசரத்துக்குத் தண்ணீர் கேட்க ஏன் அக்கறை காட்டவில்லை?

இந்தக் கேள்வியும் அலட்சியப் படுத்தக்கூடியதல்லவே!

தலைமைச் செயலாளர் பாணியிலேயே கவர்னர் மாளிகையின் தகவலும் பத்திரிகையில் வந்ததால் தான், நான் எனது கருத்தை கரிகாலன் பதில்கள் மூலமாகத் தெரிவிக்க நேரிட்டது!

பேச இயலாத - அல்லது பேசுவதற்கு சிரமப்படுகிறார் - இந்த நிலையில் கூட அவர் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார். அவர் நன்கு பேச வேண்டுமென விழைகிறோம். ஜப்பானில் இருந்தோ அல்லது அமெரிக்காவில் இருந்தோ எம்.ஜி.ஆர். திரும்பி வந்தவுடனோ அல்லது கூடிய விரைவிலோ அவர் நன்றாகப் பேசும் திறனைப் பெற்றால் அதற்காக மகிழ்ச்சி அடைபவர்களில் நானும் ஒருவனாக இருப்பேன்!

இதற்கிடையே அவர் டெலிபோனில் தெளிவாகப் பேசியது போல, எதற்காகத் தவறான செய்திகளைப் பரப்ப வேண்டும் என்பதே இப்போது எழுகிற வினா!

அப்படி செய்திகளைப் பரப்ப வேண்டிய அவசியம் என்ன வந்தது?

விரைவில் எம்.ஜி.ஆர். பேசவேண்டுமென வாழ்த்துகிறோம்! ஆனால் இப்போது தெளிவாகப் பேசுகிறார் என்று தேவையில்லாமல் பொய் கூறுவதையும், பொய் கூறியதையும் ஏற்க இயலாதவர்களாக இருக்கிறோம்!

தனது உடல் நலம் பற்றி கவர்னருடன் எம்.ஜி.ஆர். இவ்வளவு தெளிவாக வாசகங்களைப் பயன்படுத்திப் பேசியது உண்மையானால் - கவர்னர் மாளிகையில், கவர்னர் முன்னிலையில் - முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டபோது எதற்காக அவ்வளவு ரகசியமாக அந்த நிகழ்ச்சி நடந்தது!

மேதகு கவர்னர் விளக்குவாரா?

முதல்வராகப் பதவிப் பிரமாணம் எடுத்த நிகழ்ச்சியை - தொலைக்காட்சி டி.வி. நிலையத்தார் எதற்காக மௌனப் படமாக எடுத்தார்கள்?

டி.வி. நிலையத்தின் ஒலிபெருக்கிக் கருவியை, கவர்னர் மாளிகைக்குள் அனுமதிக்க முடியாது என மறுத்தது ஏன்?

பிரதமராக ராஜீவ் காந்தி பதவியேற்றபோது, தொலைக்காட்சி ஒலிபெருக்கிகள் அனுமதிக்கப்பட்டன!

கர்நாடகத்தில் ஹெக்டே முதல்வராகப் பதவியேற்ற போது தொலைக்காட்சி ஒலிபெருக்கிகள் அனுமதிக்கப்பட்டன!

புதுவையில், பாரூக், முதல்வராகப் பொறுப்பேற்றபோது பதவிப்பிரமாண நிகழ்ச்சியில் தொலைக்காட்சியின் ஒலிபெருக்கிகள் அனுமதிக்கப்பட்டன!

அவர்கள் எடுத்துக்கொண்ட பதவிப்பிரமாணங்கள் ஒலிபரப்பப்பட்டன!

ஆனால் எம்.ஜி.ஆர். முதல்வராகப் பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டபோது மட்டும், தொலைக்காட்சியின் ஒலிபெருக்கி அனுமதிக்கப்படாததற்கும், பதவிப்பிரமாண நிகழ்ச்சி ஒலிபரப்பப்படாமல் மௌனக்காட்சியாகக் காட்டப்பட்டதற்கும் மேதகு கவர்னர் பெருமான் அவர்கள் தரப்போகிற விளக்கம் என்ன?

கவர்னரின் மறுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ள தினமணி சென்னைப் பதிப்பு 7.8.85 இதழில், இரண்டாம் பக்கத்தில் இலங்கை குறித்த ஒரு கட்டுரையில் பின்வரும் ஒரு பகுதி காணப்படுகிறது.

ஜெர்மனியில் இட்லருக்குக் கோயபல்ஸ் என்று ஒரு விளம்பர மந்திரி இருந்தார். அவருடைய பிரச்சாரத்தில் இரண்டு அம்சங்கள் இருந்தன.

1 நிஜம்போல புளுகுவது, முழுப் பொய்யாக இருந்தால் எளிதில் பதில் சொல்ல முடியும், ஆகையால் பாதி உண்மையைச் சொல்லி மர்மமான உண்மையை மறைப்பது ஒரு தந்திரம்!

2 ஒரே பொய்யைத் திரும்பத் திரும்ப சொன்னால் அதை உண்மையென்று சிலர் நம்பிவிடுவதுண்டு!

தினமணியில் குமாஸ்தாவின் கட்டுரையில் இலங்கைப் பிரச்சினைக்காக, இந்தப் பழைய வரலாற்றுக் குறிப்பு எடுத்துக்காட்டப்பட்டிருந்தாலும்கூட - இன்றைய தமிழகத்து நிகழ்ச்சிகளுக்கும் ஒத்துவருகிற காரணத்தால், தினமணியின் முதல் பக்கத்துச் செய்தியோடும் - தலைமைச் செயலாளர் டி.வி. அந்தோணியின் அறிக்கைகளோடும் - அந்தக் கோயபல்ஸ் கதையை இணைத்துக் கொண்டேன் அவ்வளவுதான்!

குமாஸ்தா, அதற்காகக் கோபித்துக் கொள்ளக் கூடாது!

அன்புடன்

மு.க.

08-08-1985

1328. உன்னை நம்பித்தான் கூறியுள்ளேன்!

உடன்பிறப்பே,

தி.மு.க. அறக்கட்டளையின் பொது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகச் சென்னை அண்ணா சாலையில் உருவாகிக் கொண்டிருக்கும் அண்ணா அறிவாலயத்தின் பல்வேறு கட்டிட அமைப்புகளின் பணிகள் எப்போது முடிவுறும் என்றும், செயல்படத் தொடங்கும் விழா எப்போது இருக்குமென்றும், எவ்வளவு ரூபாய்த் திட்டமென்றும் செய்தியாளர்கள் என்னைச் சந்திக்கும் போதெல்லாம் கேட்டவண்ணமிருக்கிறார்கள்.

நாளுக்குநாள் இரும்பு விலையும், சிமெண்ட் விலையும், கட்டிடப் பொருள்களின் விலையும் ஏறிக்கொண்டேயிருக்கும் நிலையில், அறிவாலயத்தின் ஓரளவு முழுமையாகக் காண்பதற்கே இரண்டு கோடி ரூபாய் செலவாகக்கூடும் எனப் பொறியாளர்களும், கட்டிடக்கலை வல்லுநர்களும் தெரிவிக்கிறார்கள்.

கழக அறக்கட்டளையின் பணமாக வங்கியிலே இருந்த தொகை ஏறத்தாழ இருபது லட்சத்துக்கு மேல் அடித்தளம் அமைப்பதற்கும், தரைப்பகுதியிலிருந்து கட்டிடம் தொடங்குவதற்குமே செலவாகியிருக்கிறது. மேலும், வங்கியிலிருந்து ஐம்பது லட்ச ரூபாய் அளவுக்கு கடனாகப் பெறும் முயற்சியில் வெற்றி பெற்று அதனைக் கொண்டுதான், முதல் தளம் இரண்டாவது தளமெனப் பணிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன!

இது அறிவாலயத்தின் முகப்புக் கட்டிடத்துக்கு மட்டும் செலவாகிற விபரம்!

ஐம்பது லட்சத்துக்கு வட்டிகட்ட வேண்டும் - முதலைத் திருப்பித் தரவேண்டும்!

ஏதோ ஒரு முரட்டுத் துணிச்சலில் உன்னை நம்பிக் காரியத்தில் இறங்கிவிட்டோம்!

நீயும், மற்ற உடன்பிறப்புகளும் இதுவரை அனுப்பியுள்ளதும், வழங்கியுள்ளதுமான தொகை நாலு லட்சத்தை எட்டவே இன்னும் சில நாட்கள் ஆகும் என்பதை முரசொலியில் வெளிவரும் நிதி வசூல் விபரத்தைப் பார்த்தாலே புரிந்துகொள்ளலாம்!

ஓரளவு வசதி படைத்த நம்முடைய கழகத்தினர் சிலர், ஆயிரக்கணக்கில் அண்ணா அறிவாலய நிதி அளித்துள்ளனர்.

நடுத்தர நிலையில் உள்ளோர் நூற்றுக்கணக்கில் வழங்கியுள்ளனர்.

வசதியற்ற உடன்பிறப்புகள், தங்களின் ஒரு நாள் இருநாள் வயிற்றுப்பாட்டைக் கூடப் பொருட்படுத்தாமல், பத்து இருபது என்று பணவிடைத்தாள்கள் வாயிலாக அனுப்புகிறார்கள்.

வியர்வைத் துளிகளால் அழுக்கேறிக் கசங்கிப்போன ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் நோட்டுகளாக, பத்து ரூபாயை என் கரங்களில் பல உடன்பிறப்புகள் பல்வேறு நிகழ்ச்சிகளில் வழங்கும்போது என் இதயம் பெருமிதத்தால் விம்முகிறது! என் கண்களில் ஆனந்தப் பெருவெள்ளம் அலைமோதுகிறது! குளமாகிடும் விழிகளுடன் அந்த உடன்பிறப்புகளை வாழ்த்துகிறேன்!

எத்துணை நம்பிக்கையுடன், ஆர்வத்துடன், அந்தக் காசுகளைத் தருகிறார்கள் என எண்ணி எண்ணிப் பூரித்துப் போகிறேன்!

கட்சியினால் பலன் ஒன்றும் பெறாதவர்கள்!

கத்திக்குத்து, வெட்டுக்காயம், கல்லடி, அடக்குமுறை, சிறைவாசம், உண்ணாமல் உறங்காமல் உழைத்து உழைத்து உருக்குலைதல் போன்ற பயன்களை ? மட்டுமே அந்தப் பாசமிகு உடன்பிறப்புகள் அறிவார்கள்!

அவர்களும் தருகிறார்கள் அண்ணா அறிவாலயத்துக்கு நிதி என்கிறபோது - யாரும் தவறாகக் கருதக்கூடாது ஆயிரம் நூறு என்ற கணக்கில் கொடுக்கிற கழக உடன்பிறப்புகள் தருகிற பணத்தைப் பெறும்போது எழுகிற மகிழ்ச்சியை விடப் பலமடங்கு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது!

பொதுத் தேர்தலில் வேட்பாளராக நின்ற ஒருவர்!

அறிவாலய நிதியாக மிகச்சிறு தொகையொன்றை இருபது ரூபாய் என்னிடம் வழங்கிட வந்தார்!

நான் அவரைப் பார்த்துக் கேட்டேன். உமக்குத் தேர்தலில் போட்டியிட அனுமதித்த கழகம், தலைமையிலிருந்து டிராப்ட் மூலம் அனுப்பித் தந்த தொகை எவ்வளவு? அதுபோக ஆங்காங்குள்ள கழக அமைப்புகள் செலவிட்ட தொகையின் கணக்கு என்ன? தலைமையிலிருந்து அச்சிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட சுவரொட்டியின் மதிப்பு என்ன? பதாகை பேனர்களின் பெறுமானம் எவ்வளவு? - இந்தக் கேள்விக்கெல்லாம் விவரமாக அவர் விடையளித்தார்!

இவ்வளவும் தலைமையிலிருந்தும், கழக அமைப்புகளில் இருந்தும் பெற்றுக்கொண்டு - செயல் வீரர்களின் கடின உழைப்பையும் பெற்றுக்கொண்ட நீங்கள், வெற்றி பெற்றிருக்கலாம், அல்லது பெறாமலும் போயிருக்கலாம் - ஆனால் உமக்காகப் பாடுபட்ட - பணம் வழங்கிய கழகத்தின் அரும்பணியொன்றுக்கு, ஒரு ஐநூறோ ஆயிரமோ நிதியாக அளிக்கும் கடமை உணர்வு கூடவா பட்டுப்போய்விட்டது எனக் கேட்டேன்!

அவர் தந்த இரண்டு பத்து ரூபாய் நோட்டுகளையும் அவரிடமே திருப்பித் தந்தேன்!

நிறுத்தப்பட்ட வேட்பாளர்களின் குடும்ப நிலை - வசதி - வாய்ப்பு - இவற்றையெல்லாம், உடன்பிறப்பே! நீயும் நானும் நன்றாக அறிவோம்!

கோடீஸ்வரர்கள் - குபேரர்கள் - மிட்டாமிராசுகள் - ஆலை அதிபர்கள் - அல்ல! அல்ல! அல்லவே அல்ல!

மிகப்பலர் சாதாரணமானவர்கள் - சாமான்யர்கள்!

இருப்பினும் அவர்கள் முயன்றால், ஒரு ஐநூறோ ஆயிரமோ, இந்தக் கழகத்திற்கு நன்றிக் கடனாகவாவது செலுத்த முடியாதா?

இதனை எண்ணும்போது இதயம் சற்று கனக்கத்தான் செய்கிறது!

இந்தக் கடிதம் கண்டபிறகாவது கடமையாற்ற முன்வருகிறார்களா என்று பார்ப்போம்!

கழகக் கண்மணிகள் நிதி வழங்கும் விரைவைப் பொறுத்திருக்கிறது, அண்ணா அறிவாலயம் முழுமை பெற்றுப் பணிகளைத் தொடங்குவது எனச் செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறேன்!

என் நம்பிக்கையைக் குலைக்க மாட்டாய் என்று உன்னை நம்பித்தான் அப்படிக் கூறியிருக்கிறேன். பிறகு, உன் இஷ்டம்!

அன்புடன்

மு.க.

09-08-1985

1329. சட்டம், ஒழுங்கு, நீதி, நியாயம் எங்கே?

உடன்பிறப்பே,

தமிழ் நாட்டில் இப்போது சட்டம், ஒழுங்கு என்று ஏதாவது இருக்கிறதா?

அல்லது ஜனநாயகம் என்ற பெயரில் ஒரு வெறிபிடித்த சர்வாதிகார ஆட்சி நடக்கிறதா?

நீதி நியாயம் என்று ஏதாவது செயல்படுகிறதா?

அல்லது உம் என்றால் சிறைவாசம், ஏன்? என்றால் வனவாசம் என்ற ஜார் மன்னன் பாணியில் தமிழகம் நடை போட்டுக் கொண்டிருக்கிறதா?

சட்ட சபையைக் குறித்து ஒரு பத்திரிகை ஆசிரியர், ஏதோ விமர்சித்தார் பால்ராஜ் அவரது பெயர்!

அவர் பத்திகைப் பெயரோ - அவரது பெயரோ - கடந்த ஆண்டு நூற்றுக்கு ஒருவருக்குக் கூடத் தெரிந்திருக்காது!

ஆனால் இப்போதோ, நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு அவர் பெயர் தெரியும் என்கிற அளவுக்கு இந்த அரசு விளம்பரம் தந்து விட்டிருக்கிறது!

ஒரு சின்ன விவகாரத்தைக் குரங்குப் புண்ணாக்கி - சட்டமன்றம், நீதிமன்றம் மோதல் என்கிற அளவுக்கு நிலைமையை மோசமாக்கிய முழுப்பொறுப்பும் பேரவையின் தலைவர், முன்னவர், ஆகியோரையும், இந்த அரசையுமே சாரும்!

பால்ராஜ் விவகாரம், கடந்த சட்டசபையில் உரிமைப் பிரச்சினையாக எழுந்து திரு.ராஜாராம் அவர்கள் சபாநாயகராக இருந்தபோது, பால்ராஜுக்கு ஒரு வாரம் தண்டனையென்று முடிவெடுக்கப்பட்டது உரிமைக் குழுவில்!

பிறகு எத்தனையோ அரசியல் அலைகள்! இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் படுகொலை! முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மரணத்தின் வாய்க்குள்ளே சென்று மீண்டு வந்த நிகழ்ச்சி! பொதுத் தேர்தல்! தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி!

இவ்வளவு பேரலைகளும் அடித்து ஓய்ந்து, பெருவெற்றியினை அ.தி.மு.க.வினர் பெற்ற பிறகும் - ரத்தத்தின் ரத்தமாகக் கலந்துவிட்ட சேடிஸ்ட் சுபாவத்தை - பழிவாங்கும் குரூரச் செயலை - அவர்களால் பிரிந்திருக்க முடியவில்லை! புதிய சட்டசபையில் பால்ராஜை இரண்டு வாரம் சிறையில் தள்ள உத்தரவிட்டனர்!

கெடு நினைப்பின் உச்ச கட்டமாக ஜனதா, கம்யூனிஸ்டு கட்சிகள் சட்டமன்ற அலுவலகங்களுக்கு சீல் வைத்துப் பூட்டி, உள்ளே இருந்து பொருட்களைத் தூக்கி வெளியே எறிந்தனர்!

நம்முடைய மனத்தில் நீங்காத வடுவாக - நமது சட்டமன்ற அலுவலகத்திலேயிருந்து நம்மைப் பலவந்தமாகக் கடத்திக் கைது செய்து, அலுவலகத்திற்கும் சீல் வைத்து, தி.மு.க. சட்டமன்ற அலுவலகம் என்ற பலகையையும் உடைத்து நொறுக்கி அதிகாரிகளின் பூட்ஸ் கால்களால் ஒதுக்கித் தள்ளச் செய்தனர்!

மாற்றுக் கருத்து - அல்லது எதிர்க் கருத்து கூறுவோர் யாராயினும், அவர்களைக் காது கூசுகின்ற சொற்களால் அர்ச்சனை செய்வது என்பது அமைச்சர்களின் அன்றாடப் பணியாகி விட்டிருக்கிறது!

ஊழலோ ஊர் நாறுகிறது! ஜப்பான், அமெரிக்கா, ஹாங்காங் என்று உலகத்தின் பல நாடுகளிலும் தமிழக அரசின் ஊழல், குடலைப் புரட்டுகிற அளவுக்கு நாறுகிறது!

ஊதாரிச் செலவுகளோ, மக்களின் வரிப்பணத்திலிருந்தும், மக்களையும், அரசு ஊழியர்களையும் வாட்டி வதைத்து வசூலிக்கும் தொகையிலிருந்தும் அமைச்சர்கள் மற்றும் ஆளும்கட்சிப் பிரதானியர் வாழ்வில் கொடிகட்டிப் பறக்கின்றன!

இவைகளைப் பற்றியெல்லாம் யாராவது வாய் திறந்தால் - முணுமுணுத்தால் கூட - அவர்கள் மீது பாயவிட பயங்கரமான சட்டங்கள்!

அந்தச் சட்டங்கள் காட்டுகிற பாரபட்சமோ அந்தோ! அநியாயம்! அக்கிரமம்!

தனிப்பட்ட குடும்பத் தகராறுகளினால் பாதிக்கப் பட்டோர் - அவர்கள் கையில் கோட்டையிலிருப்போர் குடுமி இருக்கிற காரணத்தினால் - தங்களுக்கு வேண்டாதவர்களை எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்று காவல் துறையின் முக்கியமான கேந்திரங்களைத் தங்கள் காலடியில் போட்டுக் கொண்டு, சட்டத்தை இஷ்டப்படி வளைக்கிற நிலைமை, இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது!

ஒரு குற்றத்தை ஒருவன் செய்ததாக ஒப்புக்கொண்டால் கூட, அதனை நிரூபிக்கும் வகையில் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு, விஸ்தாரமான விசாரணை நடைபெற்றுத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்ற - நீதிமன்ற நியதிகள் எல்லாம் கூட, இன்றைய தினம் புழுதிக் காற்றில் பறக்கின்றன! விசாரணை நடைபெற்றால் பல விகாரமான விவகாரங்கள் வெளியே வரும் என்பதற்காக - இப்படியொரு நாட்டுப் பஞ்சாயத்து நாடகம், நீதியின் பெயரால் அரங்கேறுகிற கொடுமையைக் காண்கிறோம்!

எத்தர்கள், இழிதகைச் செயல்புரிவோர் யாராயினும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே!

ஆனால் அவற்றுக்கும் வழக்கு, விசாரணை, சாட்சியங்கள் என்றெல்லாம் நீதித்துறையில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் காணாமற்போக வேண்டிய காரணம் என்ன?

இலங்கைத் தமிழ்மக்களின் பாதுகாப்புக்காகக் கழகம் போராட்டம் நடத்தி முப்பதாயிரம் பேர் சிறை சென்றபோது - சில ஏடுகள் கேலியாக விமர்சனம் செய்தன! அந்தக் கருத்து மோதல்கள் அனுமதிக்கப்பட்டவை! வரவேற்கிறோம்! பதில் சொல்லுகிறோம்!

ஆனால், அந்தப் போராட்டம் குறித்து என்னைப் பற்றி மிக இழிவான சுவரொட்டிகள் - நெல்லை தமிழர்கள் என்ற பெயரால் அச்சடித்துப் பெயர் போடாமல் சென்னை நகரில் ஒட்டப்பட்டிருந்தன!

குறிப்பாக என் வீடு, அலுவலகம், இவற்றைச் சுற்றி ஏராளமாக ஒட்டப்பட்டிருந்தன!

காவல்துறையினர் அதைக் கண்டு கொள்ளவேயில்லை! நானும் கவலைப்படவில்லை!

இப்போது பாதிக்கப்பட்ட பெண்கள் என்ற பெயரால் நண்பர் சோ அவர்களை இழிவுபடுத்தும் நோக்குடன் - அவர் மீது பழி போட்டு இந்த அரசின் இயல்பான சேடிஸ்ட் மனப்பான்மையை செயல்படுத்தும் குறிக்கோளுடனும் சுவரொட்டிகள், சென்னை மாநகரில் ஒட்டப்பட்டிருக்கின்றன!

என்னை இழிவுபடுத்தி சுவரொட்டி வெளியிட்ட அதே நெல்லைத் தமிழர் எனும் ஆடவர் தான், பாதிக்கப்பட்ட பெண் என்று மாறிக் கொண்டிருக்கிறார் என்பது காவல் துறையினர்க்குத் தெரியும்!

தெரிந்து என்ன செய்வது? மேலிடமே ஈடுபட்டுள்ள காரியத்தில், இந்த வேலிகளும் சேர்ந்து பயிரை மேய வேண்டியது தானே! அதுதான் இன்றைக்கு நடக்கிறது!

பால்ராஜை கைது செய்து சிறையில் போடு என்றது சபாநாயகரின் ஆணை!

கைது செய்திட இடைக்காலத் தடை என அறிவித்தது நீதிபதியின் தீர்ப்பு!

இக்கட்டான சூழல்! இழுபறியான நிலைமை!

போலீசார் தலையிட்டால்தானே பொல்லாப்பு என்பதற்காக - ஏவுகணைகள் சில பால்ராஜ் மீது பாய்ந்தன! பாயவிடப்பட்டன!

பால்ராஜ், கடத்தப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது!

ஒருவேளை இப்போது ஏற்பட்டுள்ள பரபரப்பில் - கடத்தல்கார ஏவுகணைகள், இந்தக் கடிதம் வெளிவருவதற்கு முன்பு - பால்ராஜை விடுவித்தாலும் விடுவிக்கலாம்!

ஆனால், இந்தச் சுதந்திர நாட்டில் ஒரு குடிமகனின் உரிமைகளுக்கு உத்திரவாதமில்லை - அதுவும், சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய துறையினர்க்குத் தெரியாமலே கூட அல்ல, தெரிந்தே - இன்னும் சொல்லப்போனால் அவர்களின் ஒத்துழைப்புடனே - அந்த உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்றால், அய்யகோ - அதற்கு நீதியும்கூட துணை போகிற அளவுக்குப் பேரம் பேசிச் சோரம் போகிறதென்றால்-

நாம் வாழ்வது தமிழ்நாடா? அல்லது தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் எனும் நிலைபெற்று விட்ட காடா? என்ற கேள்வி எழத்தானே செய்கிறது!

இப்படியொரு காட்டாட்சி எல்லாத் துறையிலும் பரவுவதை, தமிழ்நாட்டு மக்கள் நீண்ட காலம் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்! தடுத்து நிறுத்தியே தீர்வார்கள்!

அன்புடன்

மு.க.

10-08-1985

1330. ஒழுகிடும் குடிசை! ஓட்டை ஜமக்காளம்!

உடன்பிறப்பே,

நமது இளம் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்தியாவில் - ராஜஸ்தான் மாநிலத்தில் - ஜுனபத்ராசர் எனும் கிராமத்தில் ஒரு ஏழைக் கிழவியின் குடிசையிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார்!

இந்தச் சிறிய வீட்டில் கிழவியும், அவளுடன் அவள் பெற்ற மக்களும், பேரன் பேத்திகளும் எப்படியிருக்க முடிகிறது எனக் கேட்டு மூக்கின் மேல் விரல் வைத்துக் கொண்டு விழிகளில் வியப்பை விரிய விட்டார்!

இந்தச் சதுப்பு நிலம் போன்ற தரையில் எப்படிப் படுத்துறங்குவீர்கள் என்று இதயம் விம்மிடக் கேட்டார்!

இதோ இந்த ஒரே ஜமக்காளத்தில் தான் எல்லோரும் படுத்துக் கொள்வோம் என்றாள் அந்தப் பொக்கைவாய்ப் பாட்டி, பொத்தல் ஜமக்காளம் ஒன்றைக் காட்டி!

குளிர் அடித்தால் உடம்பு நடுங்குமே, அப்போது என்ன செய்வீர்கள்? என்று உள்ளம் உருக, ஊனும் உருக ஆவலுடன் விசாரித்தார் அலகாபாத் பண்டிதரின் பேரன்!

தரையில் விரித்திருக்கும் இதே ஜமுக்காளத்தை எடுத்து ஒட்டுமொத்தமாக எல்லோரும் போர்த்திக் கொள்வோம் என்று அந்தப் பழுத்த பழம் பதில் சொல்லிற்று பிரதமருக்கு!

அக்கணமே அன்னை இந்திராவின் அருமைச் செல்வன், அந்தப் போர்வையை விரித்துத் தன்னையும், தனது துணைவியார் சோனியாவையும் சேர்த்துப் போர்த்திக் கொண்டார்.

இப்படி ஏடுகளில் செய்தி கண்டிருப்பாய்!

எழுபது கோடி மக்கள் வாழும் இந்தியாவில் ஒரே ஒரு ஏழையின் சிறியவீடு - அங்கே அழுக்கேறிக் கிழிந்த ஒரு ஜமக்காளம் - அதுதான் அந்த வீட்டில் உள்ளவர்களுக்குப் படுக்கை, போர்வை எல்லாமே - என்கிற இந்தநிலை - கோமளத்தாமரை போன்ற முகம் படைத்த ஒரு பெண்ணின் பட்டுப் போன்ற கன்னக்கதுப்பில் குறுமறுவொன்று எழுந்து நிற்பது போலவன்றோ நமது பிரதமருக்குத் தோன்றியிருக்கிறது!

இந்திய மாதாவின் உடலெங்கும் சீழும், ரணமும், செந்நீரும் ஒழுகுகின்ற சிரங்குகள், பாதாதி கேசம் வரை பரவியிருப்பதும் - அங்கொன்றும் இங்கொன்றுமாக அந்த உடலின் சில பகுதிகள் மட்டுமே பளபளப்பாகத் தோற்றமளிப்பதும் ராஜீவ் காந்தி அவர்களுக்குத் தெரியாதா என்ன?

ராஜஸ்தானிலே மட்டுமா? காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் - அந்தச் சிறிய குடிசையின் கிழவி எடுத்துக் காட்டினாளே, ஜமக்காளம் - அந்தக் கந்தல் போர்வைகூட இல்லாமல் கையது கொண்டு மெய்யது பொத்திக் கூனிக் குறுகி, நாய்களுடன் - பன்றிகளுடன் - சாக்கடையோரத்து நடைபாதைகளில் தங்கள் கட்டைகளைச் சாய்த்திருக்கும் மனிதயந்திரங்கள் எத்தனை லட்சம் என்பதை அறியாதவரா ராஜீவ் காந்தி!

ஆனாலும் அந்தக் கிழவியின் குடிசையைக் கண்டு, இவ்வளவு சிறிய வீட்டில் எப்படி வசிக்க முடிகிறது எனக் கேட்கிறார்!

அதுகூட இல்லாமல் இந்தியஜனப் புழுக்கள் சேற்றிலும், சகதியிலும் நெளிந்து கொண்டிருக்கின்றனவே! அறியாரா ஆசிய ஜோதியின் வழிவழி வந்த வாரிசு?

வாடைக்காற்றில் வாடிய மயிலுக்குப் போர்வை வழங்கினான் பேகன் எனும் வள்ளல் என்று தமிழ் இலக்கியம் பேசும்!

இன்று இந்தியாவில் மனிதர்களுக்கே போர்வை இல்லை! ஒரு போர்வைக்குள் ஒரு குடும்பமே குளிருக்காக முடங்கிக் கொள்கிறது!

பரந்த பாரத தேசத்தில் அந்த ஒரு கிழவியின் குடும்பம் மட்டுமே - சிறிய வீட்டில், கிழிந்த அழுக்கு போர்வையுடன் சுகஜீவனம் ? நடத்துவதாகக் கருதிப் பிரதமர் ராஜீவ், தன்னை ஏமாற்றிக் கொண்டிருக்க மாட்டார் என நம்புவோமாக!

ராஜஸ்தான் மாநில சுற்றுப் பயணம் முடிந்து - ஓய்வெடுத்துக் கொண்டபோது எத்தனை எத்தனை கேள்விகள் அவர் உள்ளத்தைத் துளைத்திருக்கக்கூடும்!

வெள்ளைக்காரன் வெளியேறி முப்பத்து எட்டு ஆண்டுகள் ஆனபிறகும் - ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தேசியக் கொடி பட்டொளி வீசிப்பறக்கிறதே தவிர - அந்தக் கொடியின் நிழலில் கோடி கோடி மக்கள் உடுத்த கோவணமுமின்றி நாணிக் குறுகி நிற்பது ஏன்?

வறுமையே வெளியேறு! என்று அன்னையும், அன்னையைப் பெற்ற பாட்டனாரும் எழுப்பிய முழக்கம் ஆகாயத்தையே அளாவி, அப்போது விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்த என் காதுகளைக் கூடச் செவிடுபடச் செய்ததே! அதற்குப் பிறகும் ராஜஸ்தான் கிராமத்தில் ஒழுகுகிற குடிசை! உடல் நடுங்குகிற கிழவி! ஓட்டை ஜமக்காளம்! அங்குமட்டுமா? அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் இந்த நிலைமைதானே! வறுமையை வெளியேற்றிய லட்சணமா இது!

மாநில அரசுகளுக்கு அதிக உரிமைகளைக் கொடுத்து அவற்றைச் சுயாட்சி கொண்ட மாநிலங்களாக ஆக்கி விட்டால் மத்திய அரசு பலவீனப்பட்டுவிடும். எனவே மக்களின் முன்னேற்றத்திற்கு, மத்தியில் அதிகாரங்கள் மலை போல் குவிந்திருப்பதே மேல் என்று எண்ணிப் பேசிச் செயல்பட்டார்களே, முப்பத்துஎட்டு ஆண்டுகளாக - அந்தப்பலம் பொருந்திய மத்திய அரசின் சாதனை! கூரையில்லா குடிசை! தூய்மையில்லா ஜமக்காளம்! அய்யோ! அதுகூட இல்லாமல் நடுத்தெரு நாராயணர்கள்! நாராயணிகள்! இவைகள்தானா?

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் எனும் ஏற்றமிகு நிலையை உருவாக்குவோம் எனப் பாரதிரப் பாரதியின் பாட்டு இசைக்கப் பட்டதே! ஓட்டுப் போடும் ஒருநாள் தவிர பிறநாள் எல்லாம், ஓட்டாண்டிகளாய்த்தானே ஒரு பெரிய ஜன சமுத்திரம் அலை மோதிக் கொண்டிருக்கிறது!

மன்னர்களும் இல்லாமல் இல்லை! அவர்களுக்கு மகுடங்கள் இல்லையே தவிர, மகிமைகள் அப்படியே தானிருக்கின்றன! எழுபது கோடி மக்களில் ஏழாயிரம் குறுநில மன்னர்கள் - எழுநூறு

வேந்தர்கள் - எழுபது சக்கரவர்த்திகள்! பெயர்கள் வேண்டுமானால் பிர்லா, டாடா, பஜாஜ் என்றும், மிட்டா மிராசு என்றும், ஆலை அதிபர்கள், சாராய சாம்ராஜ்யாதிபதிகள் என்றும் இருக்கலாம் - எல்லாரும் இந்நாட்டு மன்னர் - என்ற பாரதியின் பாடலுக்கு இதுதானோ நடைமுறைப் பதவுரை?

ஓய்வெடுத்த பிரதமரின் நெஞ்சத்தில் இந்தக் கேள்விகள் அடுக்கடுக்காகக் குவிந்திருக்கும்! உறக்கம் கூட வந்திருக்காது!

அதற்குள் அடுத்த நிகழ்ச்சிக்குத் தயாராக வேண்டுமென்று அவரது செயலர் அறிவித்திருப்பார்!

புகைப் படக்காரர்கள், தொலைக்காட்சி ஒலி, ஒளிப் பதிவாளர்கள், செய்தியாளர்கள் - அனைவருமே மற்றொரு கிராமத்தை முற்றுகையிட்டிருப்பார்கள்!

அங்கே ஒரு சப்பாணிக் குழந்தை! தலைவாரிக் கொள்ளும் சீப்புப்போல அந்த மழலையின் விலா எலும்புகள் வெளியே தெரிகின்றன!

அந்த மூக்கொழுகும் வைரத்தை வளைந்து போன இடுப்பில் சுமந்து கொண்டு வறுமைக் கோட்டுக்கு கீழே தலையால் நடந்து செல்லும் காரைக்காலம்மை ஒருத்தி!

பிரதமர் அந்த அதிசயத்தைப் பார்த்து அசைவற்று நிற்கிறார் ஒரு விநாடி!

கிளிக்! கிளிக்! புகைப்படக் கருவிகள் ஒலிக்கின்றன!

டெலிவிஷன் ஒளி பரவுகிறது! அதைப்பார்த்து அந்தத் தாய், அடடா, சொர்க்கலோகப் பிரகாசம் இதுதானா? என்று மெய்மறந்து போகிறாள்!

இப்படி அடுத்த காட்சிக்கான ஏற்பாடுகள் தயாராகக் கூடும்!

முப்பத்துஎட்டு ஆண்டுக் காலத்தில், சுதந்திரத்தின் முழுப்பயனை இந்தியாவைப் போல் வேறு எந்த நாடும் அடைந்திருக்க முடியாது!

என்ன சிரிக்கிறாய்? நாள் தோறும் வானொலியைக் கேள்! டெலிவிஷனைப் பார்! நாடு எப்படி வளர்ந்திருக்கிறது என்பது புரியும்!

வானொலி, டெலிவிஷனை விட்டு விட்டு, வம்புக்காக - நேரடியாகப் போய் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள இந்தியாவைப் பார்க்காதே!

அப்படிப் பார்ப்பது, பாபம்! தேசத் துரோகக் குற்றமாகக் கூடக் கருதப்படலாம்!

அன்புடன்

மு.க.

11-08-1985

1331. செப்டம்பர் 15 - சென்னைக்கு அழைக்கிறேன்!

உடன்பிறப்பே,

உலகெங்கும் பரவிக் கிடக்கிற தமிழ் இனத்தின் பாதுகாப்புக்காகக் குரல் கொடுக்கிற கழகம் - அந்தக் கழகத்தின் நிறுவனர் நமது நெஞ்சத்தில் நிரந்தர சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கின்ற அறிஞர் அண்ணா - அந்த அண்ணன் தலைவராக ஏற்றுக் கொண்ட தன்மானச்சிங்கம் வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் - பிறந்தநாள் விழாக்களை இணைத்து முப்பெரும் விழா கொண்டாடுவது என்பது பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கழகம் மேற்கொண்டுள்ள ஒரு பெரும் சிறப்பாகும்!

சென்னையில் இரண்டொரு முறையும், மாவட்டங்களின் தலைநகரங்களில் சுற்றோட்ட முறையிலும் கொண்டாடப் பட்ட முப்பெரும் விழா, இந்த ஆண்டு - தலைநகரம் சென்னையில் செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் ஞாயிறன்று மகத்தான அளவில் கொண்டாடப்பட இருக்கிறது!

பொதுக்குழுவினால் சென்னை மாவட்டத்துக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த அரிய வாய்ப்பை சென்னை மாநகரச் செயல் வீரர்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவற மாட்டார்கள்!

பார்! பார்! சென்னையென்றால் சென்னைதான்! இங்கு நாங்கள் நடத்தும் முப்பெரும் விழா எனில், அதன் சிறப்பே தனிதான்!

என்று மார்தட்டிக் கொள்ள இப்போதே சென்னை மாவட்டச் செயலாளரும், மாவட்ட நிர்வாகிகளும் பணிகளை மேற்கொண்டு பம்பரமெனச் சுழலத் தொடங்கி விட்டனர்!

சென்னைக்கு மட்டுமே இந்தப் பெருமை சொந்தமாக இருக்கக் கூடாது என்றுதான் மற்ற மாவட்டங்களும் சென்னை விழாவில் பங்குபெற வேண்டுமென பொதுக்குழு முடிவெடுத்து - அதனைத் தொடர்ந்து மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும் கலந்துரையாடல் நடைபெற்றிருக்கிறது!

இதோ இந்த வரவேற்புப் பதாகை எங்கள் மாவட்டத்தினுடையது!

அதோ வருகிறதே அலங்கார வண்டி! அந்த வண்டியை எங்கள் மாவட்டத்திலே தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறோம்!

இரு வண்ணச் சீருடை அணிந்து பட்டாளத்துச் சிப்பாய் நடை போட்டு வருகிறதே! அந்தத் தொண்டர் அணி எங்கிருந்து வருகிறது தெரியுமா? அது எங்கள் மாவட்டத்திலிருந்து!

ஈட்டியின் முனையாக ஆயிரமாயிரம் இளந் தம்பிகள் அணி வகுத்து வருகிறார்களே! இதனைக் காணக் கண் கோடி வேண்டுமெனக் களிப்புடன் வாழ்த்துகிறதே! மக்கள் கடல்! இந்த இளைஞர் அணி எங்கள் மாவட்டத்துத் தயாரிப்பு!

அதோ மகளிர் அணி - அடுத்துத் தொழிலாளர் அணி - இலக்கிய அணி - ஏர்கொண்ட தோளும், நேர்கொண்ட பார்வையும் கொண்டு எழுச்சி நடைபோடும் விவசாயிகள் அணி - இவை ஒவ்வொன்றும் எங்கள் மாவட்டத்தின் சிறப்பாகுமென உணர்க!

இவ்வாறு ஒவ்வொரு மாவட்டக் கழகத்தினரும் சென்னை முப்பெரும் விழாவின் எழுச்சிக்குத் தமது செயல் மூலம் பெருமை சேர்த்து, சென்னை மாவட்டக் கழகத்துக்கு மட்டும் ஏகபோகப் புகழும், பாராட்டும் குவிந்திடாமல் பார்த்துக் கொள்ளப் போட்டி போடப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்!

எனினும், இன்னும் இடையில் முப்பது நாட்களுக்கு மேல் இருக்கிறதே! அதற்குள் ஏன் பரபரப்பு என்று எந்தவொரு உடன்பிறப்பும் எண்ணி, நிதானமாக மெத்தனமாக இருந்து விடக் கூடாதல்லவா?

அதனால் தான் முன் கூட்டியே இந்தக் கடிதம் எழுதுகிறேன்!

ஏதோ ஒரு விழாக் கோலம் காண உன்னை அழைக்கிறேன் என எண்ணிட மாட்டாய்! என்றைக்குமே இந்தக் கழகத் தலைமை உன்னை அப்படி அழைத்ததில்லை!

முகில் கூடுகிறது, மயில் ஆடுகிறது என்றால் - விழிக்கு விருந்தூட்டும் காட்சி தான்! மழை பொழியும் என்பதற்கு அறிகுறி அது என்பது தானே உழவனுக்கு உவகையூட்டும் செய்தி!

அது போலத்தான் உடன்பிறப்பே! அண்ணனுக்கும், அய்யாவுக்கும், கழகத்துக்கும் விழா எடுக்கிறோமெனில் - அந்தப் பெயர்களைச் சொல்லி ஆடிப்பாடி மகிழ்ந்து ஆர்ப்பாட்டம் புரிவதல்ல!

இனமான உணர்வு எங்கணும் பரவிடத் திட்டங்களை வகுத்திட -

பகுத்தறிவுப் பாசறையாகத் தமிழகம் விளங்கிடத் தொடர்ந்து பணியாற்றிட -

சமத்துவம் - சமதர்மம் எனும் இலட்சியங்கள் பலரது உதட்டளவு உச்சரிப்புகளாக இருப்பதை நடைமுறைக்குக் கொண்டு வர சூளுரை மேற்கொண்டிட -

எழுபது ஆண்டுக்காலமாக எத்தனையோ எதிர்ப்புப் புயல் - எரிச்சல் வெள்ளம் - இவற்றுக்கிடையே ஈடுகொடுத்து வளர்ந்துவரும் திராவிட இயக்க உணர்வினை அறவே அழித்து விட முனையும் வஞ்சகச் சூதுத் திட்டங்களைப் பொடிப் பொடியாக்கிடும் வலிமையினைப் பெருக்கிக் கொள்ள -

கடந்த காலத்தை மறந்து - எதிர்காலச் சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படாது - நிகழ்காலத்து நித்திய மகிழ்ச்சிக்காக - ஏற்றுக்கொண்ட கொள்கைகளைக் காற்றிலே பறக்கவிடும் இழிச் செயலுடையோரால், கல்லடியும் சொல்லடியும் பட்டு வளர்த்த உணர்வுகள் பட்டுப்போகாமல் பாதுகாத்திட ஆணையிட்டுச் சபதமேற்க -

உடன்பிறப்பே! உன்னை அழைக்கிறேனேயல்லாமல் விழா மகிழ்ச்சியில் திளைத்திட அல்ல!

இந்த முப்பது நாள் இடைவெளியில் எத்தனை எத்தனை அரசியல் நிகழ்ச்சிகள் புது வடிவம் எடுக்குமோ?

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் திம்பு காணும் முடிவு எவ்வாறு அமையுமோ? அதன் விளைவுகள் எப்படி உருப்பெறுமோ?

ஒவ்வொரு நாளும் என்று கூட அல்ல! ஒவ்வொரு மணித்துளியும் இந்தத் தமிழ்நாடு - ஜனநாயகம் பறிக்கப்படுகிற சர்வாதிகாரக் காடாக மாறிவருகிறது!

மக்கள், மக்களாட்சியில் பீதி கொண்டு வாழும் நிலைமை - அச்சுறுத்தலால் அடிமைப் படுத்தப்படும் நிலைமை - நீடிக்கிறது! நீடித்துக்கொண்டே போகிறது!

நீதியின் தொண்டைக்குழி, வறண்டு போய்க் கிடக்கிறது!

சட்டம் ஒழுங்கு இவையெல்லாம், கால் கைகள் சும்பிப்போய் எழுந்து நடமாட முடியாத, பரிதாப ரூபங்களாக ஆகிவிட்டிருக்கின்றன!

இந்தச் சூழலில்தான் - நமது கொள்கை காத்திட - மொழிகாத்திட - நாடு காத்திட - நமக்குற்ற கடமைகளை ஆற்றிட, சென்னை முப்பெரு விழாவிலே நாம் சூளுரைத்து, சுடர்முகம் தூக்கி நமது இலட்சியப் பயணத்தை மேலும் தீவிரமாகத் தொடரப் போகிறோம்!

அதற்குத்தான் அழைக்கிறேன்,

கழகக் கண்மணியே உன்னை!


இப்போதே சென்னைப் பயணத்துக்குத்

தயாராகிக் கொள்க!

அன்புடன்

மு.க.

13-08-1985



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022